தியான ஆலயம்



சாமுவேல் பவுல்



தியான ஆலயம்

இதில்
நம்முடைய இரட்சகராகிய
இயேசுகிறிஸ்துவின் பாடுகளின்பேரில்
பல தியானங்கள்
அடங்கியிருக்கின்றன

சாமுவேல் பவுல் ஐயர்

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
சென்னை

Published by
THE CHRISTIAN LITERATURE SOCIETY
POST BOX NO. 501, PARK TOWN, MADRAS - 3

THIĀNA ĀLAYAM
By REV. SAMUEL PAUL

© CLS

Second Edition 1955
Third Edition 1996

Printed at THE C.L.S. PRESS, Madras—7. L 5821

பதிப்புரை

சாமுவேல் பவுல் ஐயரின் 152 ஆம் பிறப்பாண்டு ஜூன் 15 ஆம் தேதி நிறைவுறுவதை ஒட்டி அவருடைய சில நூல்களை மீண்டும் வெளிக்கொணரும் திட்டத்தின்படி இந்நூல் வெளியிடப்படுகின்றது.

மூன்று நான்கு தலைமுறையினர் வாசித்துப் பயனடைந்து வந்திருக்கும் இந்நூல் உங்களுக்கும் நலம் பயப்பதாக அமைய ஆண்டவர் அருள்புரிவாராக.

அருள்திரு. டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ்
பொதுச் செயலாளர்
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
சென்னை

ஜூன் 11, 1996
சென்னை

முகவுரை

இவ்வுலகத்தில் சஞ்சலமில்லாதவர் எவருமில்லை. அரசன் முதல் ஆண்டி வரையும் ஐயோ, ஐயோ என்று புலம்புகிறதுண்டு. இந்த சஞ்சலத்துக்கெல்லாம் பாவமே காரணம். இந்தச் சஞ்சலங்கள் தணியவும், மனத்தில் ஆறுதல்கள் பெருகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளைத் தவிர வேறே மருந்து இல்லை. இந்த மருந்தைப் பிரயோகிக்கிற பாவிகள், எப்போதும் பாவமன்னிப்பையும், மன ஆறுதலையும் பெற்று சந்தோஷமாக வாழுகிறார்கள்.

இந்த வாழ்வு என் உடன் சகோதரரான தமிழ்க் கிறிஸ்தவர்களுக்குக் கிடைக்கும்படி தேவனுடைய கிருபையை முன்னிட்டு, இந்தப் பிரபந்தத்தை எழுதத் துணிந்தேன்.

இதில் நமது இரட்சகரின் பாடுகளைப்பற்றிய வரலாறுகள் அனைத்தையும் ஒரு தேவாலயம்போல பாவித்து, அவைகளை **மண்டபம், பிராகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம்** என்று பிரித்துக் காட்டியிருக்கிறேன். இயேசு சுவாமியின் பாடுகளைத் தியானிக்கப் புகுதல், ஒரு பரிசுத்த பர்வதத்தின்மேல் ஏறுவதுபோல் அல்லது பரிசுத்த ஆலயத்துக்குள் பிரவேசிப்பதுபோல் அவ்வளவு மகத்துவம் பொருந்தியதென்பதை யார்தான் ஆட்சேபிக்கக்கூடும்?

இந்தத் தியானங்களில் நமது நேசரின் பாடுகளையடுத்த விஷயங்களெல்லாம், பக்திவிநயமாயும், மன எழுப்புதலுக்கேற்றதாயும் அமையும்படி என்னாலான மட்டும், தேவ ஆவியை முன்னிட்டு முயன்றிருக்கிறேன். இந்தப் புஸ்தகத்தை வாசிக்கிறவர்கள், இரட்சகராகிய இயேசுவில் முன்னிலும் அதிகமாய் அன்புகூரவும், அந்த அன்பினால் தங்கள் பாவங்களை விட்டுவிடவும் ஏவப்பட வேண்டுமென்பதே என் நோக்கமாயிருக்கிறது. இதை வியாதிகாலத்திலும், உபவாச நாட்களிலும், மரணப்படுக்கைகளிலும் மற்றும் துன்பகாலங்களிலும் வாசிக்க

வேண்டிய விசேஷ புஸ்தகமாக்கிக் கொள்வதோடு, தினந்தோறும் அல்லது வெள்ளிக்கிழமைதோறுமாவது இயேசு சுவாமியின் பாடுகளை நமது இருதயம் நினைவுகூரும்படி வாசித்துவர ஒழுங்கு பண்ணிக் கொண்டால் நலமாயிருக்கும். இயேசுவின் பாடுகளைத் தனிமையா யிருந்து தியானிக்க விரும்புகிறவர்கள் இந்தப் புஸ்தகத்தால் அதிக பலன் அடைவார்கள்.

இதை வாசிக்கிறவர்களையும், இதைக் கேட்கிறவர்களையும் பரி சுத்த ஆவியானவர் நடத்தி, அவர்கள் உள்ளத்தில் இயேசு சுவாமியின் அன்பை நிலைநிறுத்துவாராக.

வட திருநெல்வேலி
சாட்சியாபுரம்
அக்டோபர் மீ 1896

இப்படிக்கு
உங்கள் அன்புள்ள
சா.மு. பவுல்

ராவ் சாஹிப் சாமுவேல் பவுல் ஐயரவர்களின் வாழ்க்கைச் சுருக்கம்

கனம் சாமுவேல் பவுல் ஐயரவர்கள் திருநெல்வேலி மாவட்டம் தென்கரையைச் சேர்ந்த பாட்டக்கரை என்னும் கிராமத்தில் 1844ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் தேதி பிறந்தார். இக்கிராமம் மெஞ்ஞானபுரத்திற்கருகில் உள்ளது. நிலவளம், நீர் வளம் பொருந்தி, மாந்தோப்புகள் அடர்ந்த செழிப்பான ஒரு சிற்றூர். இவருடைய தந்தையார் கனம் தானியேல் பவுல் ஐயரவர்கள். சிறந்த பக்தன். வைராக்கிய பிரசங்கி. புகழ்பெற்ற மிஷனெரியாகிய கனம் ஜே. தோமாஸ் ஐயரவர்கள் இவருடைய பிரசங்கங்களைக் கேட்டு எழுப்புதலடைந்து கூறியதாவது: ''பவுல் தானியேல் ஐயர் செய்யும் பிரசங்கங்களைப்போலொத்த பிரசங்கங்கள் லண்டன் பட்டணத்துப் பொறபங்களில் செய்யப்படுமாகில், ஆலயங்களில் இடம் காணுதேபோம். ஒருவேளை இந்தியாவில் எழும்பின குருக்களில் இவர்தான் மகோன்னத பிரசங்கியாயிருக்கலாம்.''

இச் சிறந்த பக்தனின் பதினொரு பிள்ளைகளில் சாமுவேல் பவுல் ஐயர் ஆருவது பிறந்த ஆண் மகன். இவருக்கு முந்தின ஐந்து பேரும் பெண்கள். சாமுவேல் பவுல் ஐயர் இளமையில் தம் தந்தையார் உபதேசியார் அலுவல் பார்த்த கிராமத்தில் மூலாதாரக் கல்வி கற்றுக்கொண்டார். வேத அறிவைப் பெருக்கி வந்தார். மெஞ்ஞானபுரம் கலாசாலையில் கனம் ஜே. தோமாஸ் மிஷனெரியின்கீழ் உயர்தரக் கல்வி கற்ருர். பாளையங்கோட்டையில் கனம் சார்ஜென்ற் மிஷனெரியின்கீழ் வேத சாஸ்திரக் கல்வி பெற்ருர். பின்னர் சென்னப்பட்டணத்தில் கனம் சத்தியநாதன் ஐயரவர்களின்கீழ் உபதேசியாராகச் சிறந்த பணியாற்றினுர். திருநெல்வேலி அத்தியட்சாதீன குருவாகிய கனம் பரமானந்தம் சிமியோன் ஐயரவர்களின் குமாரத்தியை 1868ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 6ஆம் தேதி அன்பினகரம் என்னும் கிராமத்தில் மணம்புரிந்து மீண்டும் சென்னப்பட்டணத்திற்கே தேவ ஊழியம் செய்யும்படி வந்தார். 1871இல் குருத்துவ ஊழியத்திற்கெனத்

தெரிந்துகொள்ளப்பட்டு, அதற்குரிய பரீட்சைகளில் முதல்தரமாகச் சித்திபெற்று, 1874ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11ஆம் தேதி மகா கனம் ஜெல் அத்தியட்சரவர்களால் திருச்சிராப்பள்ளி எஸ்.பி.ஜி. ஆலயத்தில் குருப்பட்டம் பெற்று, உதகமண்டலம் சி.எம்.எஸ். சபைக்குக் குருவாக நியமிக்கப்பட்டார். அதற்குப் பின்னுள்ள ஊழியத்தை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம்: (1) மலை ஊழியம், (2) நகர ஊழியம், (3) நாட்டுப்புற ஊழியம்.

உதகமண்டலம்: (1) மலை ஊழியம் (1874-1883). உதகமண்டலத்துத் தமிழ்ச் சபையில் ஒன்பது வருடங்கள் அதிக ஊக்கத்தோடும் பிரயாசத்தோடும் உழைத்துக் கடைசியாக மரணத் துக்கேதுவான வியாதிநிலையுண்டாகி அநேக நாள் ஆஸ்பத்திரியி லிருந்து சற்று சுகமானபின் நீலகிரி மலை அவருக்கு ஒத்துக்கொள்ளா தென்று வைத்தியர் அபிப்பிராயப்பட்டதால் அவ்விடத்தை விட்டு சென்னப்பட்டணத்துக்கு மாற்றப்பட்டார். நீலகிரியிலிருக்கையில், உவைநாடு சபையை (Wynaad Mission) ஸ்தாபித்துக் கவனித்து வந்தார். 1882ஆம் வருஷம் கள்ளிக்கோட்டையில் சிதறியிருந்த தமிழ்ச் சபை அங்கத்தினரை ஒன்றுசேர்த்து அச்சபையை ஸ்திரப் படுத்தினர். அங்ஙனமே குன்னூரிலும் சர்ச் மிஷன் சபையை ஸ்தாபித்தார். உதகமண்டலத்தில் ஐரோப்பியருடைய வீடுகளில் வேலைசெய்யும் வேலைக்காரருக்குப் பிரசங்கிக்கும்படியாக வேலைக் காரர் மிஷன் (Servants' Mission) என்று ஓர் மிஷன் ஏற்படுத்தி, அதற்கு ஒரு உபதேசியாரை நியமித்து அவருடைய சம்பளம் முழுவதும் மிஷனில் பொறுக்காதபடிக்கு ஒவ்வொரு துரைமார் வீட்டிலும் மாதம் 1 ரூபாய் வீதம் வசூல்செய்து உபதேசியாருடைய சம்பளத்தில் பாதி அவ்விதமாய்க் கிடைக்கும்படி ஒழுங்குசெய்தார். இதர மதஸ்தருக்குக் கிறிஸ்து மார்க்கத்தைப் பிரசங்கிப்பதற்குப் பற்பல முறைகளைக் கையாடி வந்தார். ஹோபார்ட் பாடசாலையில் இரண்டு வாரத்துக்கொரு தடவை தமிழிலாவது இங்கிலீஷிலாவது இதர மதஸ்தருக்கு விசேஷ பிரசங்கம் செய்து பிரசங்கம் முடித்த பின் கேட்கப்பட்ட கேள்விகளுக்குச் சந்தோஷமாய் விடையளிப் பார். வாரந்தோறும் சந்தைக்கூட்டங்களில் புறமதஸ்தருக்கென்று

பிரசங்கம் நடத்துவார். மாதத்துக் கொருமுறை பௌர்ணமி தின இரவில் சதுர்ப் பிரசங்கம் செய்வார். அடிக்கடி சிறைச்சாலைக்குச் சென்று அங்கிருக்கும் கைதிகளுக்குப் பிரசங்கம் செய்வார்.

சென்னையில் குருத்துவ ஊழியம்: (2) நகர ஊழியம் (1883-1887). சென்னப்பட்டணம் டக்கர் கோவிலுக்கு 1883ஆம் வருஷம் நவம்பர் மாதம் முதல் தேதியில் குருவாக நியமிக்கப்பட்டு அதிக உண்மையோடும் ஊக்கத்தோடும் தேவ ஊழியத்தை நடப் பித்தார். இவர் நடத்திவந்த ஆராதனைகளும் பிரசங்கங்களும் அதிக பக்தி விநயமும் எழுப்புதலுமுள்ளவைகளாயிருந்தன. இவர் காலத் தில் தான் பாடகர்கள் நியமிக்கப்பட்டுக் கின்னர வாத்தியத்தோடு ஆராதனைகள் முதல் முதல் நடத்தப்பட்டன. இளைப்பாறும் நேர மெல்லாம் தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு எழுப்புதலும் பிரயோஜனமு மான நூல்களைத் திரளாக எழுதினர். இதனால் தமிழ்ச் சபையோ ரெல்லாம் ஐயருக்கு நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

சாட்சியாபுரம்: (3) கிராம ஊழியம் (1887-1900). இது வட திருநெல்வேலி சபையை விசாரணைசெய்த காலத்தைக் குறிக் கும். வட திருநெல்வேலிக்காகத் தன் ஜீவனைக்கொடுத்த கனம் ராக்லாண்டு ஐயருடைய கல்லறை இந்நாள்வரையும் கிறிஸ்துவின் சுவிசேஷத்து ஞாபகஸ்தம்பமாக விளங்கிநிற்கும் சிவகாசியென் னும் ஊருக்கருகிலுள்ள சாட்சியாபுரம் என்னும் கிராமத்தில் அவர் தம் கிராம ஊழியத்தை ஆரம்பித்தார். சாட்சியாபுரம், வாகைக் குளம் ஆகிய இரண்டு வட்டாரங்களுக்கும் தலைவராக நியமிக்கப் பட்டு மரணபரியந்தம் அங்கேயே தங்கி மிக ஆர்வத்துடன் திருப்பணியாற்றினர். தவச உற்சவத்தை ஏற்படுத்துவதற்கு முதல் முதல் ஆலோசனை சொன்னவர் இவரே. இவருடைய ஏற்பாட்டின் படிதான் தவச உற்சவம் நம் நாட்டில் முதல் முதலாக 1891ஆம் வருடம் ஜூன் மாதம் சாட்சியாபுரத்தில் கொண்டாடப்பட்டது.

இதர தொண்டு: 1890ஆம் வருஷம் முதல் 'நற்போதகம்' என்னும் மாதாந்தர தமிழ் பத்திரிகைக்குப் பத்திராதிபராயிருந்தார். 1894ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 24ஆம் தேதி சென்னை அத்தியட்சரவர்கள் இவரை ஆனரெரி சாப்பிளஞகை (Honorary Chaplain) நியமித்தார். திருநெல்வேலி சபைகளைக் கண்காணித்து வந்த கனம் மோர்ளி (Bishop Morley) அத்தியட்சரவர்களுக்கும் இவர் ஆனரெரி சாப்பிளஞகவிருந்தார்.

ராவ் சாஹிப் பட்டம்: சபையின் வாழ்வை வெகுவாய்க் கருதியிருந்ததுமல்லாமல் இராஜாங்க விஷயமாகவும், பொதுஜன நன்மைக்காகவும் பலவாருகத் தம்மால் கூடியமட்டும் உழைத்து வந்தார். சிரிவிலிப்புத்தூர் தாலூகா போர்டு மெம்பராகவும், திருநெல்வேலி ஜில்லா போர்டு மெம்பராகவும் நியமகம் பெற்று அச்சங்கங்களில் நல்ல ஆலோசனை கொடுத்துவந்தார். பிரஜைகளின் நன்மைக்கென்று இவர் எழுதிய அபரிமிதமான புத்தகங்களை நன்கு மதித்து இந்தியாவின் கவர்னர்-ஜெனரலவர்கள் 1898ஆம் வருஷம் இவருக்கு ''ராவ் சாஹிப்'' (Rao Saheb) என்னும் பட்டம் கொடுத்துக் கனப்படுத்திஞர்கள். இந்தியாவில் இந்தக் கவுரவத்தைப் பெற்றுக்கொண்ட முதலாவது சுதேச குரு இவரே.

இவர் மரிப்பதற்கு முந்தின வருடமாகிய 1899ஆம் வருஷம் மே, ஜூன் மாதங்களில் சிவகாசியில் பெருத்த கலகங்களும் கொள்ளைகளும் உண்டாகி, அனைவரும் கலங்கி நிற்கையில், கலகத்துக்குத் தளகர்த்தஞயிருந்தவஞேடு இவர் சமாதான உடன்படிக்கை செய்து சாட்சியாபுரத்தையும் அதிலிருந்த கிறிஸ்தவர்களையும் தற்காத்தார்.

இறுதிக் காலம்: தமிழ்க் கிறிஸ்தவச் சபையின் உள்ளான ஆவியின் வளர்ச்சியைக் கருதிக் கிறிஸ்துவைப்போல் ஜீவித்தல் (Imago Christi) என்னும் ஓர் அருமையான புத்தகத்தை எழுத எண்ணங்கொண்டு ஆறு மாத காலமாய் அதற்கு வேண்டிய ஆதாரங்களைத் தேடி, ஆழ்ந்த யோசனையுடன் அதை எழுதிக் கொண்டிருக்கும் சமயத்தில் திடீரென்று 1900 வருஷம் மார்ச்சு

மாதம் 4ஆம் தேதி ஞாயிறு காலே ஜுரம் ஆரம்பித்து, கபால வியாதியும் அத்துடன் இருமலும் கலந்து, வைத்தியர்களின் பிரயாசத்துக்கு வியாதி அடங்காமல், மார்ச்சு மாதம் 11ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் ஒரு மணிக்குச் சமாதானத்தோடும் சந்தோஷத்தோடும் தம் பரம இளேப்பாறுதலுக்குட் பிரவேசித்தார். வியாதி ஆரம்பிக்கிற கடைசி நேரம் வரை தம் வேலேயில் மிக ஊக்கமுள்ளவராயிருந்தார். வியாதிப்படுவதற்கு முந்தின தினமாகிய சனிக்கிழமை இரவு சுமார் 12 மணிக்குத் தம் சபையைச் சேர்ந்த சில வியாதியஸ்தரைச் சந்தித்து, அவர்களுக்கு உதவி புரிந்து, அவர்களோடு ஜெபம் செய்தார். இதுவே அவருடைய குருத்தொழிலின் கடைசி ஊழியம்.

மரணப்படுக்கை: அவர் மரிப்பதற்கு முன் செய்த கடைசி ஜெபத்தில் ஆண்டவரே சிறு வயது முதல் என்னே உமது ஊழியத்தில் அமர்த்தி இதுவரையில் என்னில் உம்முடைய நாமம் மகிமைப்படக் கருணேகூர்ந்தீர். இப்போதும் என்னே உமது சமுகத்துக்கழைத்துக்கொள்ளச் சித்தங்கொண்டீர். ஆனல் இன்னும் சில காலமாத்திரம் ஜீவித்திருப்பேனுனல் நான் இயற்றத் துவக்கின இரண்டு புத்தகங்களே (Imago Christi and Imitation of Christ) முடித்துத் தேவரீருடைய சந்நிதி சேர சந்தோஷத்தோடு எதிர்நோக்கியிருப்பேன். ஆயினும் என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது என்ருர். கடைசியாக அருகிலிருந்த தமது உடனூழியனுகிய அருளப்பன் உபாத்தியாயரைப் பார்த்துத் தம் வீட்டைச் சுட்டிக்காட்டி, சகோதரனே, இந்தக் கூரையைப் பார்த்தீரா? என்ன கேவலமாயிருக்கிறது! இது என் வீடல்ல. நான் போகும் மாளிகைக்கு இது ஈடாகாது. இதைப் பார்க்கிலும் மிக அலங்காரமான மாளிகை எனக்கு ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது. அவ்விடத்துக்கு நான் போக வேண்டும்; கோவில் மணியடிக்கிறது; கோவிலுக்கு நான் போகிறேன் என்று சொன்னர். இதுதான் அவருடைய கடைசி வார்த்தை. தம் அருமை மனேவி அவரிடம் வந்து தனக்கு என்ன சொல்லப் போகிறீர்கள் என்று கேட்க, தன் கையை உயர்த்திக் காட்டிக் கண்ணே மூடினர். அதன்பின் அவர்

மனதிலே ஜெபித்து அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணத்தையும், கர்த்தருடைய ஜெபத்தையும் வாய்க்குள் சொல்லி முடித்தார். உடனே அவருடைய ஆவி அகமகிழ்வுடன் ஆகாயப் பிரவேசமாயிற்று. மரித்தபின் அவருடைய முகத்தில் காணப்பட்ட முகமலர்ச்சியும், சந்தோஷமும், அழகும் அனைவரையும் பிரமிக்கச் செய்தன. இவருடைய சரீரம் சாட்சியாபுரம் கோவிலைச் சேர்ந்த கல்லறைத் தோட்டத்தில் அடக்கம்பண்ணப்பட்டிருக்கிறது. பாளையங்கோட்டை அத்தியட்சாலயத்தில் ஒரு ஞாபகார்த்த கல்லும் பதிக்கப்பட்டிருக்கிறது.

அவர் எழுதிய 16 சிறந்த நூல்களில் ''ஆத்தும நேசரின் அங்க மகத்துவ''மும், மொழிபெயர்த்த 26 நூல்களில் ''மோட்சப் பிரயாணம்'' என்னும் புத்தகமும் இன்றுவரை மிக அருமையாக மதிக்கப்பட்டு வருகின்றன. பவுல் ஐயர் மரித்தும் இன்னும் பேசுகிறார் என்று உண்மையாகவே சொல்லலாம்.

பொருள் அட்டவணை

முன் மண்டபம் பக்கம்

1. இயேசு சுவாமியின் பாடுகளைத் தியானிப்பதாலுண்டாகும் லாபங்கள் 1
2. இயேசு சுவாமியின் பாடுகளைத் தியானிக்க வேண்டிய மாதிரி 6
3. இயேசு சுவாமியின் பாடுகள் வணக்கத்துக்கேற்ற ஒரு இரகசியமாயிருக்கிறது 9
4. இயேசு சுவாமியின் பாடுகள் பாவநிவாரண பலியாயிருக்கிறது 15
5. தியான ஆலய மணிநாதம் 18
6. தியான ஆலய புஸ்தகச் சுருள் 22
7. தியான ஆலய விண்ணப்ப வாசல் 28
8. தியான ஆலய எக்காளம் 35

பிராகாரம்

1. இயேசுவின் ஜனனம் 36
2. இயேசுவின் விருத்தசேதனம் 40
3. இயேசு பிசாசால் சோதிக்கப்பட்டது .. 44
4. இயேசு தமது பாடுகளைப்பற்றி அறிவித்தல் .. 50
5. இயேசுவின் அபிஷேகங்கள் 53
6. இயேசு பவனி போகுதல் 60
7. இயேசு எருசலேமைப் பார்த்து அழுதது .. 68
8. இயேசுவை யூதர் பகைத்தது 72
9. இயேசு மரணத்துக்கு ஆயத்தப்பட்டது .. 77
10. பஸ்கா ஆயத்தம் 83
11. யூதாசின் சதியோசனை 88
12. பஸ்காப் பந்தி 93
13. இயேசு சீஷரின் கால்களைக் கழுவுதல் .. 96
14. யூதாசை உணர்த்துதல் 103
15. இராப்போஜன ஸ்தாபகம் 108
16. கெத்செமனேப் பயணம் 114

பரிசுத்த ஸ்தலம்

1.	இயேசு கெத்செமனேக்கு வந்தது	..	..	120
2.	இயேசுவின் வியாகுலம்	..	..	122
3.	கெத்செமனே ஜெபம்	..	..	126
4.	இயேசுவின் இரத்த வேர்வை	..	..	131
5.	இயேசு தம்மை ஒப்புக்கொடுத்தது	..	..	136
6.	யூதாஸ் இயேசுவைக் காட்டிக்கொடுத்தது		..	142
7.	காது அறுபட்டுக் குணமானது	..	..	146
8.	கட்டப்பட்ட இயேசுவின் பிரசங்கம்	..	..	152
9.	இயேசு அன்னமுன் பாடுபட்டது	..	..	156
10.	இயேசு காய்பாவால் விசாரிக்கப்பட்டது		..	162
11.	காய்பாவின் மறு விசாரணை	..	..	168
12.	இயேசு காய்பா வீட்டில் பட்ட பாடுகள்		..	177
13.	பேதுரு மறுதலித்தது	..	..	184
14.	பேதுரு மனந்திரும்பினது	..	..	190
15.	பிலாத்துவின் முதலாம் விசாரணை	..	..	194
16.	இயேசு ஏரோதுவிடம் அனுப்பப்பட்டது.		..	204
17.	இயேசுவுக்கு ஏரோதுவால் வந்த பாடுகள்		..	209
18.	பஸ்கா விடுதலை	..	..	214
19.	பிலாத்துவின் மனைவியின் சிபாரிசு	..	..	219
20.	பிலாத்துவின் பயமுறுத்தல்	..	..	224
21.	பிலாத்து கைகளைக் கழுவினது	..	..	228
22.	பிலாத்து இயேசுவை வாரினால் அடித்தது		..	233
23.	பிலாத்து இயேசுவுக்கு முள்முடி தரிப்பித்தது		..	238
24.	பரியாச இராஜகோலம்	..	..	243
25.	பரியாச இராஜவணக்கம்	..	..	247

மகா பரிசுத்த ஸ்தலம்

1.	இயேசு சிலுவை சுமந்தது	..	..	253
2.	சிரேனே சீமோனைப் பலவந்தம் செய்தது		..	256
3.	எருசலேம் குமாரத்திகளின் புலம்பல்	..	..	260
4.	இயேசு சிலுவையிலறையப்பட்டது	..	..	267
5.	இயேசுவின் வஸ்திரம் பகிரப்பட்டது	..	..	274

6. சிலுவைப் பலகை வாசகம் 278
7. இயேசு சிலுவையில் தொங்கினது .. 283
8. இயேசு சிலுவையில் தூஷிக்கப்பட்டது (1ஆம் வாசகம்) 290
9. குணப்பட்ட கள்ளன் (2ஆம் வாசகம்) 294
10. தாயாருக்கு ஆதரவு செய்தது (3ஆம் வாசகம்) .. 302
11. மூன்று மணி அந்தகாரம் (4ஆம் வாசகம்) .. 308
12. இயேசு தாகமடைந்தது (5ஆம் வாசகம்) .. 313
13. இரட்சண்யத்தின் முடிவு (6ஆம் வாசகம்) .. 317
14. இயேசுவின் மரணம் (7ஆம் வாசகம்) 321
15. இயேசுவின் மரண அதிசயங்கள் 328
16. இயேசுவின் விலா குத்தப்பட்டது 333
17. இயேசுவை அடக்கம் செய்தது 341
18. இயேசுவின் கல்லறை காவல் பண்ணப்பட்டது .. 348

தியான ஆலயம்

முன் மண்டபம்

1. இயேசு சுவாமியின் பாடுகளைத் தியானிப்பதாலுண்டாகும் லாபங்கள்

ஒருவன் பக்தனானாலும் சரி, படுதோஷியானாலும் சரி, அவன் இயேசு சுவாமியின் பாடுகளைத் தியானிக்கக் கடமைப் பட்டவனாயிருக்கிறான். பக்தன் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு, அன்பில் அனல்மூண்டு, தாழ்மையில் சிறந்து, பரிசுத்தத்தில் விருத்தியாகி, தன்னை வெறுத்து, பரலோகத்தை நாடி ஜீவிக்கவேண்டுமானால், அவன் இயேசு சுவாமியின் பாடுகளைத் தியானிக்கவேண்டியது. அப்படியே ஒரு படுதோஷி தன் பாவங்களை உணர்ந்து, மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பி பாவமன்னிப்பையும், இருதய சமாதானத்தையும் கண்டடைய வேண்டுமானால் அவனும் அவருடைய சிலுவைப் பாடுகளையே நோக்க வேண்டியது.

நமது இருதயத்தைப் பரவசப்படுத்தவோ, அதை அனல்மூட்டவோ, அதை உலகத்தைவிட்டுப் பிரிக்கவோ, அதில் ஆறுதலை அளிக்கவோ, இயேசுவின் பாடுகளைப் பற்றிய தியானத்துக்குமிஞ்சினதும், அதற்கு இணையானதுமான வேறொன்றும் இல்லை என்று அறிந்துகொள்ள வேண்டியது. ஆதலால் அப்பாடுகளின் வரலாறுகளை வரிசையாக எழுதி, அவைகளைத் தியானிக்கப்போகிறோம்.

1. இயேசுவின் பாடுகளைத் தியானிப்பதால், பிதாவாகிய தேவன் நமதுமேல் பாராட்டிய அளவில்லாத அன்பை நாம் உணர்ந்துகொள்ளக் கூடியவர்களாகிறோம். "தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்"[1] என்று இயேசு சுவாமி சொல்லியிருக்கி

---

[1] யோவா. 3: 16.

ளுர். பிதாவாகிய தேவன் நமதுமேலுள்ள நேசத்தை வெளிப்படுத்த இதற்குமிஞ்சின வழியாவது முறையாவது இல்லை. அப்படி ஒருவழி உண்டானால், இந்த வழியை விட்டுப்போட்டு அந்த வழியைக் கையாடியிருப்பார்.

2. இயேசுவின் பாடுகளைத் தியானிப்பதால் நமது ஆத்துமாவின் விலை எவ்வளவு அதிகமென்று தெளிவாகத் தெரியும். சாதாரண மனுஷனுக்கு அவனுடைய சரீரமும், அதன் அவயவங்களுமே பெரிதாக இருக்கிறது. தேவனுடைய மனுஷனுக்கோ அவைகளொன்றுமில்லை. அவன் தன் ஆத்துமாவையே உயர்ந்ததாக எண்ணுகிறான். அப்படி அவன் எண்ணவேண்டியது நியாயந்தான். ஒரு மனுஷன் உலக முழுவதையும் சம்பாதித்துக்கொண்டாலும் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தலாகாது. தேவன் அவதாரமானதும், அழுததும், அவமானப்பட்டதும், அடிபட்டதும், இரத்தம் சிந்தினதும், மரித்ததுமான எல்லாம் கூடி நம்முடைய ஆத்துமாவுக்கு இரட்சிப்பை உண்டுபண்ணவே. மனுஷனே, உன் ஆத்துமா அற்பமானதும், எண்ணப்படக்கூடாததுமாயிருந்தால்தேவன் அதினிமித்தம் இவ்வளவு பாடுகளைப் பட்டுத்தரிப்பாரா? மனுஷனே, உன் ஆத்துமாவின் பூர்வோத்தரத்தையும்[1] அதினுடைய மீட்பின் கிரயத்தையும்[2] அதின் கடைசி வாழ்வையும் நீ சற்றே கவனிக்கிறதுண்டானால் அதிக நலமாயிருக்கும்.

3. இயேசுவின் பாடுகளைத் தியானிப்பதால் தேவனுடைய பிசகாத நீதி எவ்வண்ணமென்பதும் நமக்குத் தெரியவருகிறது. இயேசுவின் பாடுகளுக்குமுன் தேவநீதி பல தடவைகளில் வெளிப்பட்டதுபோல பார்க்கிறோம். அவையொன்றும் தேவனுடைய சுயம்பான நீதியல்ல; சொல்லவேண்டுமானால் அவையனைத்தும் தேவனுடைய நீதியின் நிழல்கள் என்னலாம். ஆதிமனுஷர் ஏதேனை விட்டுத் துரத்தப்பட்டது—காயீன் அலைந்து திரிந்தது—சோதோம் முதலிய பட்டணங்கள் அக்கி

---

[1] ஆதி. 2: 7. [2] 1 பேது. 1: 18.

ணிக்கு இரையானது—பார்வோனும் அவன் சேனையும் செங்கடலில் மாண்டது—ஆறுலட்சம் புருஷர் வனாந்தரத்தில் மரித்தது முதலிய இந்தச் சங்கதிகளும், இவை போலொத்த மற்ற வரலாறுகளுமெல்லாம், தேவநீதியின் நிழல்களேயன்றி அதின் சுயமல்ல. சுயமான தேவநீதியை இயேசுவின் பாடுகளில் மாத்திரம் காண்கிறோம். "கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது." "கர்த்தரோ அவரை நொறுக்கச்சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்."[1] இயேசு சுவாமியின்மேல் வந்த ஆக்கினை ஒவ்வொன்றும், அவையனைத்தும் ஏகமாகவும் பாவிகளாகிய நம் ஒவ்வொருவர்பேரிலும் வரவேண்டியது. பிதாவாகிய தேவன் அவையனைத்தையும், நமதுமேலுள்ள அன்பால் தமது குமாரன்பேரில் செலுத்தினார். குமாரனாகிய நமது நேசஇயேசு நமது மேலுள்ள அன்பால் அவை அனைத்தையும் தமதுபேரில் ஏற்றுக்கொண்டார். இவ்விருவருடைய அன்பும், பந்தயம்போட்டு நேசிக்கிறாப்போல நம்மை நேசித்தபடியினாலே, இடையிலிருந்த நமக்கு யோகம் பிறந்தது. நாம் தேவநீதிக்குத் தப்பினோம்! இயேசு சுவாமியால் மீட்கப்பட்டோம்!! எந்த வகையினாலாவது நாம் தப்பிக்கொண்டோமல்லவோ என்று தெம்பு பேசுகிறது நன்றியறிதலான குணமல்ல. நாம் நம்மைத் தப்பவிட்ட நீதியின் பலத்தையும் அதை சகித்த அன்பின் பலத்தையும் கிறிஸ்துவின் பாடுகளின் மூலமாய்த் தியானித்து நம்முடைய நன்றியறிதலை வெளிப்படுத்துகிறது நியாயமாயிருக்கிறது.

4. இயேசுவின் பாடுகளைத் தியானிப்பதால் நமக்குக் கிடைத்திருக்கிற இரட்சண்ய வாழ்வுகள் இவைகளென்பதை நாம் அறிந்துகொள்ளக்கூடும். "நீங்கள் இரட்சிப்பின் ஊற்றுகளிலிருந்து மகிழ்ச்சியோடே தண்ணீர்

---

[1] ஏசா. 53: 5, 6, 10.

மொண்டுகொள்வீர்கள்"[1] என்று ஏசாயா தீர்க்கதரிசனமாக உரைத்தார். இது மெய்யாகவே இருக்கிறது. நம்முடைய இரட்சிப்பின் வாழ்வுகளெல்லாம் இயேசு சுவாமியின் பாடுகளுக்குள்ளே தானிருக்கின்றன. நமக்கும் தேவனுக்குமுள்ள விரோதத்தை நீக்கினதும், நாம் இழந்த பரம சுதந்தரத்தை நமக்குத் திரும்பத் தருவதும் அதுவே; நம்மை நித்திய மரணத்துக்கும் நரகத்துக்கும் தப்புவித்ததும், நம்மை மோட்சவாசலுக்குள் பிரவேசிக்கச் செய்ததும் அதுவே. அவருடைய இரத்தத்தால் கழுவப்படக் கூடாத பாவமுண்டோ? அவரால் மீட்கப்படக்கூடாத பாவியுண்டோ? அவருடைய பாடுகளால் குணமடையக்கூடாத நோய்களுண்டோ? இல்லை. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களுமறக் கழுவி நம்மைச் சுத்திகரிக்கிறது.[2] பாவத்தால் தூரமான நம்மை பிதாவின் தயவுகளுக்குச் சமீபமாக்குகிறது.[3] ஆ, அவர் தினந்தோறும் இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரம் தரித்தவராய்[4] தமது பிதாவின்முன் நின்று நமக்காகப் பரிந்து பேசுகிறார். இப்படிப்பட்ட புண்ணிய புருஷரை நாம் தியானியாமலிருக்கலாமா? அவரைத்தவிர நமது ஆத்தும தியானத்துக்கு ஏற்ற ஆள் வேறுண்டோ? அவருடைய பாடுகளையல்லாமல் நமது தியானத்துக்கேற்ற வேறு விசேஷங்கள் உண்டோ? ஆத்துமாவைத் திருப்திபடுத்தவும், அதை முசிப்பாற்றவும், அதின் முறிவைக் கட்டவும், அதின் அடி காயத்தைக் குணமாக்கவும், அதில் மெய்யான மகிழ்ச்சியை ஸ்தாபிக்கவும், இயேசு சுவாமியின் பாடுகள் மாத்திரம் உதவத் தக்கவைகள் என்று எல்லாப் பரிசுத்தவான்களும் கண்டறிந்திருக்கிறார்கள்.

5. இயேசுவின் பாடுகளைப்பற்றிய தியானம், நமது ஜீவகாலத்திலுண்டாகும் துன்பங்கள், வியாகுலங்கள், நோவுகள் எல்லாவற்றையும் தணித்துவிடுகிறதோடு, அவை யனைத்தையும் இன்பமாக்கிவிடும். துக்க சாகரத்தில் மூழ்கி அவதிப்படும் ஆத்துமாவை இயேசு நோக்கிப்

---

[1] ஏசா. 12: 3. [2] 1 யோவா. 1: 7. [3] எபே. 2: 23. [4] வெளி. 19: 13.

பார்த்து. "கர்த்தர் தமது உக்கிரமான கோபமூண்ட நாளிலே என்னைச் சஞ்சலப்படுத்தினதினால் எனக்குண்டான என் துக்கத்துக்குச் சரியான துக்கமுண்டோ என்று என்னை நோக்கிப்பாருங்கள்"[1] என்று அறிவிக்கிறார். மாராவின் தண்ணீர்க் கசப்பு ஒரு கிளையை வெட்டிப்போட மாறி நல்லதாயிற்றே. நமது ஜீவியத்திலுண்டாகும் எல்லாக் கசப்புகளிலும், இடுக்கண்களிலும், வியாதியிலும், நஷ்டங்களிலும் இயேசுவின் சிலுவைப்பாடுகளின் கிளைகளாகிய தியானங்கள் வரும்போது அவையனைத்தும் இன்பமாகவும் மகிழ்ச்சியாகவும் மாறிப்போகிறது. இதைப் பரீட்சையால் அறிந்துகொள்ளவேண்டியது.

ஜெபம்

பரம பிதாவாகிய தேவனே, தேவரீருடைய குமாரன் மூலமாய் நீர் என்னை நேசிக்கிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். நான் உமது நேசத்துக்கல்ல, உமது கோபத்துக்குப் பாத்திரனாயிருந்தும், அந்தக் கோபத்தையெல்லாம் உமது திருக்குமாரன் பேரில் செலுத்திவிட்டீர். நீர் என்னை நேசிக்க உமது குமாரனை மறந்த காரணமென்ன? தேவரீருடைய அளவில்லாத அன்புதான் அதின் காரணம். பிதாவே, உமது அன்புக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். ஆ, உன்னத அன்பே! உன்முன் பணிகிறேன்.

"தெய்வ சிநேகம் அற்புதம்!
பிதா இரங்கி உலகம்
சீர்ப்பட ஏக மைந்தனை
கொடுத்தார்; இதே மா தயை."

இந்த உமது தயவை அடியான் என்றைக்கும் காத்துக்கொண்டு, தேவரீருடைய சமுகத்தின் வெளிச்சம் எனக்கு நேர்நேராய் கிடைக்கும்பரியந்தம் உம்முடைய தயவுகளால் வாழ்வடையும்படி என் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

---

[1] புல. 1: 12.

2. இயேசு சுவாமியின் பாடுகளைத் தியானிக்கவேண்டிய மாதிரி

இயேசு சுவாமியின் பாடுகளைத் தியானிப்பதால் ஒரு ஆத்துமா வாழ்வடையவேண்டுமானால் அதைத் தியானிக்கவேண்டிய மாதிரியாக தியானிக்கவேண்டும். மரண காட்சியும் மரண தியானங்களும் நமக்கு அடிக்கடி கிடைக்கும். அதே மாதிரியாக இயேசு சுவாமியின் பாடுகளைக் கவனிப்பதும் தியானிப்பதும் ஆத்துமாவுக்கு வாழ்வைத் தரமாட்டாது. அப்படிப்பட்ட தியானத்தால் மனுஷ சுபாவத்துக்குரிய ஒரு பரிதாபமும், இளக்கமும் உண்டாகுமேயன்றி வேறொன்றும் கிடையாது.

இயேசு சுவாமியின் பாடுகளைத் தியானிக்கும்போதெல்லாம், நாம் நமது மனதிலே கேட்கவேண்டிய ஐந்து கேள்விகளுண்டு. அவையாவன:—

1. பாடுபடுகிற இவர் யார்?
2. அவர் என்ன பாடுபடுகிறார்?
3. இவரைப் பாடுபடுத்துகிறவர் யார்?
4. இவர் யாருக்காகப் பாடுபடுகிறார்?
5. என்னவிதமாய்ப் பாடுபடுகிறார்?

என்ற கேள்விகளே. இந்தக் கேள்விகளைப் பொதுவாக மனதில் கிரகித்துக்கொண்டு தியானித்தாலும், மனதில் நல்ல எழுப்புதலுண்டாகும்.

பாடுபடுகிற இவர் யார்?

மகிமையின் இராஜாவாகிய இயேசுகிறிஸ்துதான் பாடுபட்டார். சகல நல்ல குணங்களுக்கும் இராஜாவும், வானத்துக்கும் பூமிக்கும் அதிபதியும், மகா பரிசுத்தரும், ஜீவனுள்ள தேவனுடைய குமாரனுமே பாடுபட்டார். தெய்வத்தில் தெய்வமும், ஜோதியில் ஜோதியும், மெய்த்தேவனில் மெய்த்தேவனுமான இயேசு தேவனே பாடுபட்டார். என் தேவனும், என் மீட்பரும், என் ஆண்டவரும், என் இரட்சிப்பின் தகப்பனுமே பாடுபட்டார்.

என்ன பாடுபட்டார்?

அவர் படாதபாடு ஒன்றும் உலகத்திலில்லை. பசியோ—தாகமோ—அவமானமோ—நிந்தையோ—அடியோ—குட்டோ எல்லாம் பட்டார். பரியாசமோ—பழிப்போ—துக்கமோ—வியாகுலமோ—பெருமூச்சோ—அழுகையோ—குத்தோ—காயமோ எல்லாம் பட்டார். மறுதலிப்போ—புறக்கணிப்போ—விலைகூறப்படுவதோ—விற்பனையாவதோ—சிலுவை சுமப்பதோ—சிலுவையில் தொங்குவதோ—ஆ, சிலுவையில் மரிப்பதோ எல்லாம் பட்டார். ஒரு பாட்டைப் பேர்சொல்லி இதை அவர் படவில்லை என்று சொல்லக்கூடாதபடி எல்லாப் பாடுகளையும் என் மீட்பர் பட்டார்.

இவரைப் பாடுபடுத்தினது யார்?

யூதர் அவரைப் பாடுபடுத்தினார்கள்; அவர் தமது சொந்தத்தில் வந்தார், சொந்தமானவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. நீதியை நிலைநிறுத்தவேண்டிய பிரதான ஆசாரியரும் பரிசேயரும் பிலாத்துவும், நீதியைப் பொய்யால் மாற்றி இரட்சகரைத் துன்பப் படுத்தினார்கள். ஆகவே இராஜாக்கள், நியாயாதிபதிகள், நீதிசாஸ்திரிகள், வேதியர், பொய்யர், உதாசினர், சேவகர் எல்லாரும் ஏகமாய்ச் சேர்ந்து, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்கள். அதுமாத்திரமோ! பூதகணங்களும் அவரைப் பாடுபடுத்தின. இவர்களுடைய தலைவனுக்குச் சாத்தான் அல்லது பெயெல்செபூல் என்ற பேர் வழங்கப்பட்டது. இந்தப் பிசாசுகளால் இயேசுசுவாமிக்குச் சொல்லமுடியாத மனநோவும் வேதனையுமுண்டாயிற்று. இவர்கள் வெளியரங்கமாய் துஷ்டரை ஏவியும் அந்தரங்கமாய் இயேசுவை வியாகுலப்பட பண்ணியும் பாடுபடுத்தின.

இவைமாத்திரமோ! பிதாவாகிய தேவனும் தமது குமாரனைப் பாடுகளுக்குட்படுத்தினார். அவர் தமது குமாரனை, தம்மை மீட்கும்படியாக சிலகாலம் தேவதூதரிலும் சிறியவராக்கி, அடிமையின் ரூபத்தை எடுக்கச் செய்து சிலுவை மரணத்தை அவருக்குக் குறித்து,

அவரைக் கைவிட்டார். ஆகவே இயேசு சுவாமி தேவனுலும், பிசாசுகளாலும், மனுஷராலும் பாடுபடுத்தப்பட்டார். வானலோகமும் — பூலோகமும் — பாதாளலோகமும் ஏகமாக அவரைப் பாடுகளுக்குட்படுத்தின. ஆ, இதெவ்வளவு சங்கடம்! இதைச் சகிப்பது இலேசா? வாசிக்கிறவனே, இயேசுவைப் பாடுபடுத்தினதில் நீயும் ஒருவன். இதை உணர்ந்தாயா? ஒருவேளை நீதான் சிரேஷ்டமானவனுயிருக்கலாம்.

யாருக்காகப் பாடுபடுகிறுர்?

நமக்காக அவர் பாடுபடுகிறுர். நமக்காக என்று பொதுவாகச் சொல்லுவானேன்?

எனக்காகப் பாடுபட்டார்!

என்மேல் அவருடைய ஆத்துமா பிரியங்கொண்டது. நான் சாத்தானுக்கு அடிமைப்பட்டு சங்கடப்பட்டேன். என்னை மீட்டுக்கொள்ளும்படி இயேசு வந்தார். உலகமும் சாத்தானும் என்னை விடுதலையாக்க மனமற்று அவரோடு போர்புரிந்தன. அவர், இவனுக்காக நான் சங்கடப்பட வேண்டியதென்ன என்று போய்விடாமல் எனக்காக வழக்காடி, போராடி அந்தப் போராட்டத்தில் சகல அவமானங்களையும் நிந்தைகளையும் சகித்து இரத்தம் சிந்தி என்னை மீட்டார். தேவகுமாரனுடைய இரத்தம் உலகத்தையும், சாத்தானையும் தூரத்தும் சவுக்குப் போலும், அழித்துப்போடும் வெள்ளம்போலவுமிருந்தன. அவர்

எனக்காகப் பாடுபட்டார்!

நான் இயேசுவின் சத்துருவாயும், துரோகியாயுமிருந்து சாத்தானை என் இருதயத்தில் கிரீடாதிபதியாக்கினேன். அப்படிப்பட்ட சத்துருவாகிய எனக்காக அவர் பாடுபட்டார். ஆ, இதென்ன உன்னத அன்பு. இதெவ்வளவு தயாளமாயிருக்கிறது!

என்னவிதமாய்ப் பாடுபட்டார்?

பூரண பரிசுத்தர் முழுப்பாவிபோல பாடுபட்டார். பாவமறியாதவர் படுதோஷிபோல காணப்பட்டார்.

அவர் வையப்பட்டபோது பதில் வையாமலும், பாடு பட்டபோது பயமுறுத்தாமலும், பொறுமையோடு தமக்கு நேரிட்ட பாடுகளையெல்லாம் சகித்தார். தாம் என்னென்னவிதமாகப் பாடுபடவேண்டுமென்று பிதாவானவர் சித்தங்கொண்டிருந்தாரோ அச்சித்தத்துக்கு இசைந்தவராக எல்லாப் பாடுகளையும் பட்டார்.

ஜெபம்

என் நேச இயேசுவே! உமது பாடுகளைத் தியானிக்கும்படி என் மனதை இழுக்கிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். இந்நேரத்தில் அநேகருடைய மனம் மம்மோன்பேரில், அல்லது கல்வியின்பேரில், அல்லது பிரஸ்தாபத்தின்பேரில் சாடலாம். என்னையோ உமது சிலுவைக் கொறட்டால் இழுத்து, என்னை நோக்கிப் பார்! என் பாடுகளைத் தியானி! என்கிறீர். சந்தோஷம், இரட்சகா, சந்தோஷம். உம்மை எனக்கு நன்றாகக் காட்டியருளும். உமது பாடுகளின் இரகசியங்களில் ஒன்றும், என்மட்டில் 'இரகசியமாயிருக்கவேண்டாம். காபிரியேலும், சம்மனசோர் அனைவோரும் உற்று நோக்கியும் கண்டுபிடியாத இரகசியங்களையும், அன்பின் ஆழங்களையும் எல்லாம் எனக்குக் காட்டியருளும். நான் ஒரு பாவி; பாவியிலும் பிரதான பாவி. என் பாவம் என்னை விட்டு அகலவும், என் ஆவியின் சாவு நீங்கி ஞானஜீவன் என்னில் பலப்படவும், தேவரீர் எனக்குத் தயவுகாட்டியருளும். ஆமென்.

3. இயேசு சுவாமியின் பாடுகள் வணக்கத்துக்கேற்ற ஒரு இரகசியமாயிருக்கிறது

பிரபுவாகிய மேசியா சங்கரிக்கப்படுவார் என்று தானியேல் தீர்க்கதரிசி முன்னறிவித்தார்.[1] மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பாவங்களைத் தொலைக்கிறதற்கும், அக்கிரமத்தை நிவிர்த்திபண்ணுகிறதற்கும் நித்திய நீதியை வருவிக்கிறதற்குமாக வருகிற பிரபுவாகிய

---

[1] தானி. 9: 25, 26.

மேசியாவின் ஜீவகால முடிவு இவ்வண்ணமாகவா இருக்க வேண்டியது! அப்படியானால் ஏதோ பரம இரகசியம் அவ்விஷயத்தில் அடங்கியிருக்கிறதல்லவா?

பரிசுத்தவான்களின் இராஜாவும், ஜாதிகளின் வாஞ்சையும், தாவீதின் குமாரனும், மேசியாவும், தேவனுடைய ஒரேபேறான குமாரனும், தெய்வத்தில் தெய்வமுமானவருக்கு இவ்வித முடிவு வரவேண்டியதானால் இதிலொரு இரகசியமிருக்கிறதல்லவா? அவருடைய அரிய போதனைகளும், பரம குணங்களும், அற்புத கிரியைகளும், பரிசுத்தமாதிரியும் முள்முடியோடும், ஈனமான குருசோடும், உமிழ்நீரோடும் முடியவேண்டியதானால் அதிலொரு இரகசியமிருக்கிறதல்லவா? ஆ, பரிசுத்த பிதாவே, சர்வவல்ல தேவனே, தேவரீருடைய வழிகள் ஆராய்ந்து முடியாதவைகள்; உம்முடைய நியாயத்தீர்ப்புகள் மகா ஆழமானவைகள். சாதாரணமாக இவரிலும் தாழ்வுள்ள லோக பக்தர் தங்கள் மரணத்துக்கு முன்னும், பின்னும் தேவர்கள் வரிசையில் சேர்க்கப்பட்டு வணங்கப்படுகிறார்கள். பரிசுத்தவான்களின் இராஜாவாகிய இவரோ தமது ஜீவகாலத்திலும், இப்பொழுதும் புறக்கணிக்கப்பட்டவராக இருக்கிறார். இதின் இரகசியமும் ஆழமாகவேயிருக்கிறது. "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற"[1] இரக்ஷண்ய இராஜா தமது மனுடவதாரகாலத்திலும் அதுமுதல் இதுவரையும் அசட்டைப்பண்ணப்படுகிறதும், மனுஷரில் ஈனமானவராக மதிக்கப்படுவதும் என்ன காரணம்? பரம துஷ்டரும் பஞ்சமா பாதகரும் இந்தப் புண்ணிய புருஷனை அவமதிக்கிறதும், அவரை விசுவாசிக்க மாட்டோமென்று சாதிக்கிறதுமெல்லாம் ஏது காரணம்? அவரில் அடங்கிய இரக்ஷண்ய இரகசியமேதவிர வேறொன்றுமல்ல. அவர் அன்றைக்கும் இன்றைக்கும் என்றைக்கும் இரக்ஷண்ய இராஜாவாக இருக்கிறாரென்பதை இது நிச்சயப்படுத்துகிறதல்லவா? இயேசு முன்

---

[1] எபி. 7: 26.

காலத்தில் அல்ல, இக்காலத்தில் அல்லது இதற்குப் பின்னுள்ள ஒருகாலத்தில் அவதாரமெடுத்தாலும் அவருக்கு நேரிட்ட பாடுகள் அவமானங்களனைத்தும் வந்தேயிருக்கும். இயேசு மாம்சத்தின்படி அநேக ஆண்டுகளுக்கு முன்னே வந்து பாடுபட்டு முடித்திருந்தாலும், அவர் இன்றைக்கும் பாடுபடுகிறவரைப்போலவே இருக்கிறார். அவிசுவாசிகளால் அவருக்கு விரோதமாக எழுதப்படுகிறதும் பேசப்படுகிறதுமான தூஷணங்கள் நிந்தைகளாகிய இவையெல்லாமென்ன? அவரை விசுவாசிக்கிறதினிமித்தம் உண்டாகிற அமளிகுமளிகளெல்லாம் என்ன? அவருடைய உபதேசம் செல்லாதபடி உண்டாகிற தடைகள் எல்லாம் என்ன? அவர் வேண்டாம், அவரை அகற்றும், சிலுவையில் அறையும் என்று இன்றைக்கும் கூக்குரலிடுகிறதுபோலதானே. இதினால் இயேசு சுவாமியின் பாடுகளில் நமது வணக்கத்துக்கேதுவான ஒரு இரகசியமிருக்கிறதென்பது ருசுவாகிறது.

மனுஷனுடைய இரக்ஷண்யத்தைப்பற்றிய இந்த ஆழ்ந்த இரகசியம் காலாகாலத்தில் மனுபுத்திரருக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதைக் காண்கிறோம். தீர்க்கதரிசனங்களும் முன் குறிப்புகளுமெல்லாம், மேசியா சாகவேண்டியவரென்றே விளம்பின. இயேசு சுவாமி மரண வரலாற்றை உணர்த்தும் தீர்க்கதரிசனங்கள் இனி நடக்கப்போகிறதேயல்ல, இதற்குமுன் நடந்த ஒரு ஆச்சரியமான மரணத்தின் நுட்ப வரலாற்றைக் கூறுவது போல அவ்வளவு திட்டமாய்க் கூறுகின்றன. மேசியாவின் மரணவரலாறே மற்ற வரலாறுகளைவிட அதிக விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கிறதைக் காண்கிறோம். மேசியாவின் மரணத்தைப்பற்றி ஏசாயா சொல்வதெல்லாம், தான் கூடவேயிருந்து பார்த்த ஒரு மரணவரலாறு போலிருக்கிறதல்லவா? “அவருக்கு அழகுமில்லை; சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கில்லாதிருந்தது. அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரைவிட்டு, நம்

முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாதே போனோம். அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு, வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம், நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டுமிருந்தார்; ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை. துன்மார்க்கரோடு அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்த போது ஐசுவரியவானோடே இருந்தார். அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" (ஏசா. 53 அதி.) என்று சொல்லியிருப்பது நடக்கப்போகிற ஒரு தீர்க்கதரிசனம் போல அல்ல, நடந்த ஒரு சரித்திரம்போலிருக்கிறதல்லவா?

தாவீது மேசியாவின் பாடுகளைப்பற்றிப் பேசும் போதும் விவரமாகவே சொல்லுகிறார். சத்துருக்கள் அவருக்கு விரோதமாக கூட்டம்கூடி கட்டுப்பாடு செய்வார்கள் என்றும்,[1] அவருடைய வஸ்திரம் பங்கிடப்பட்டு, உடை சீட்டுப்போடப்படும் என்றும்,[2] அவருடைய எலும்புகளையெல்லாம் எண்ணலாம் என்றும், அவர் ஒரு மனுஷனாக மதிக்கப்படாமல் ஒரு புழுப்போல அவமதிக்கப்படுவார் என்றும் சொல்லியிருக்கிறார். இந்த எல்லா வாசகங்களாலும் மேசியாவானவர் தமது மட்டற்ற பரிசுத்தத்தோடு பாவியாக எண்ணப்படுவார் என்றும், தமது சர்வ வல்லபத்தோடு பலவீனராக விளங்குவாரென்றும், தமது தெய்வீகத்தோடு மனுஷீகத்தையுடையவரா யிருப்பாரென்றும்; தமது நித்தியத்துவத்துடன் நீசமரணத்தையும் அடையவேண்டியவரென்றும் காண்பிக்கிறதல்லவா? ஒன்றொடொன்று பொருந்தக்கூடாததும், ஒன்றுக்கொன்று எதிரிடையுமான இந்த லட்சணங்கள் ஒருவரில் ஒன்றுகூடி விளங்க

---

[1] சங். 71: 10. [2] சங். 22: 18; 17: 6.

வேண்டுமானால், அப்படி ஒன்றுகூடுதல் ஒரு இரகசிய மாயும், ஒன்றுகூடி விளங்குதல் ஒரு இரகசிய ஆச்சரிய மாயும் இருக்கிறதல்லவா? தேவனிமித்தம் இவை இப்படி ஒன்றுகூடவேண்டிய அவசியமில்லை. நமது நிமித்தமோ இப்படி ஒன்றுகூடாவிட்டால் இரக்ஷண்யம் முடியாது. இந்த இரகசியத்தில் இறங்கி, அதைத் தியானிக்கும் ஆத்துமா மகிழ்ச்சியடையாமலிராது.

தீர்க்கதரிசனங்கள் மாத்திரமோ, முன்னடையாளங் களும் அப்படியே மேசியாவின் பாடுகளை விளக்கிக் காட்டின. ஈசாக்கு விறகுக்கட்டின்மேல் கட்டப்பட் டிருந்தது, இயேசு சிலுவையில் அறையப்படுவதையும், அவன் கழுத்து கத்தியின்கீழிருந்து இயேசு தேவநீதியின் தண்டனைக்குள்ளிருப்பதையும் குறிப்பித்தது. யோசேப்பு விற்கப்பட்டதும், இரண்டு கைதிகளோடு சிறையிலிருந்ததும், தேவசுதன் விற்கப்படுவதையும், இரண்டு திருடருடன் சிலுவையில் மீட்பின் கைதியா வதையும் குறிப்பித்தது. அப்படியே பஸ்கா ஆடு, வெண் கல சர்ப்பம், பாவநிவர்த்தியின் சிறந்தநாளின் சடங்கு ஆகிய இவையனைத்தும், பாவம் போக்கும் பலியாக சிலுவையில் மாண்ட இயேசுவின் மரணத்தைக் குறிப் பிக்கின்றன. இப்படிப்பட்ட முன் அடையாளங்களால் குறிப்பிக்கப்படுகிற மரணம் சாதாரண மரணமாயிராமல் ஒரு ஆழ்ந்த இரகசியமடங்கிய மரணமாயிருக்கிற தல்லவா?

வணக்கத்துக்குப் பாத்திரமான இந்த மரண இரகசியம் யூதருக்கு இடறலாயும் புறஜாதிகளுக்குப் பைத்தியமாயுமிருக்கிறது. விசுவாசிகளுக்கோ சிலுவை யிலாவது சிலுவையில் மாண்டவரைப்பற்றியாவது யாதொரு இடறலிருக்கிறதில்லை. மற்றவர்களுக்கு இடறலாயிருப்பது, விசுவாசி இடறலற்று பரலோகத் துக்குப் பறந்துபோக உதவிசெய்யும் செட்டைகள் போலிருக்கின்றன.

நமது இரட்சகர் தமது சிலுவை மரணத்தால் பிசா சின் இராஜ்யத்தை அதமாக்கிவிட்டார்—மரணத்தை

ஜீவனாக மாற்றிவிட்டார்—பாதாளத்தின் அதிகாரத்தை அடக்கிவிட்டார்—இப்பிரபஞ்சத்தின் தலைவனை மேற்கொண்டார்—நம்முடைய சிறைச்சாலையை இடித்துவிட்டார்—நமக்கு விரோதமாகப் பண்ணப்பட்ட தீர்ப்பை மாற்றிப்போட்டார். இவ்வளவும் அவருடைய மரணத்தால் நமக்குண்டானதால் அந்த மரணம் வணக்கத்துக்கடுத்த இரகசியமல்லவா?

இன்னும் அதிலிருக்கிற இரகசிய மகத்துவத்தைப் பார்ப்போம். இயேசு சுவாமியின் சிலுவைப்பாடுகள் இவ்வுலகத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டவுடனே, விக்கிராராதனைகள் தாழ்ந்தன—விக்கிரக பீடங்கள் பாழாயின—விக்கிரக ஆலயங்கள் இடிபட்டன—சிலைகள் மிதியுண்டன—தேவஸ்தானங்களிலிருந்து பிறந்த கள்ளச் சந்நதங்கள் ஒழிந்தன—அவபக்திக்கேதுவான எல்லா இரகசியங்களும் வெளியாகி நகைக்கப்பட்டன—உலகத்தாரின் ஜீவியபோங்கே மாறுதலையடைந்தது—அக்கிரம இரகசியங்களின் மத்தியிலே மெய்த் தேவபக்தி வளர்ந்தன—மனுஷ சுபாவங்கள் வாழ்வுக்கேதுவான மாறுதலையடைந்தன—படுதோஷிகள் பலர் பரிசுத்தவான்களானார்கள். இயேசு சுவாமியின் பாடுகளால் இவ்வளவு மாறுதலுண்டாகியிருக்கிறபோது, அவனுள் அளவிடக்கூடாததும் வணக்கத்துக்குத் தகுதியுமான ஒரு இரகசியமிருக்கிறதல்லவா?

மனுஷர் தேவ தயவையும், நித்திய ஜீவனையும் பெற்றுக்கொள்ள இந்தப் பாடுகளையே நாடிவரவேண்டியது. அப்போஸ்தலர் உலகமெங்குமோடி இளைப்படையாமல் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க ஏவினதும், துன்பங்களையும் உபத்திரவங்களையும் சகிக்கப்பண்ணினதும், சாவை ஜீவன்போல எண்ணி அதற்குள் பிரவேசிக்கப் பண்ணினதும், இயேசு சுவாமியின் சிலுவைப் பாடுகளின் இரகசிய பலமேயன்றி வேறல்ல. இவ்வளவு இரகசிய மடங்கிய சுரங்கத்தில் நாம் பிரவேசித்து, பரிசுத்த ஆவியின் சகாயத்தால் அதின் பொக்கிஷத்தைப் பெற்றுக்கொள்ளுவோமாக.

ஜெபம்

ஜீவனுள்ளதேவனுடைய திருக்குமாரனாகிய இயேசுவே, உமது சிலுவைப்பாடுகளுள் என் ஆத்துமவாழ்வுக்குரிய பொக்கிஷங்களனைத்தையும் புதைத்துவைத்திருக்கிறீர் என்று காண்கிறேன். அவையனைத்தையும் நான் தோண்டி எனதாக்கிக்கொள்ள அருள்தாரும். நான் ஒரு நீசன், நான் பஞ்சமாபாதகன், ஞான ஐசுவரியம் ஒன்றும் என்னில் இல்லை என்பதை நீர் அறிந்திருக்கிறீர்; உமது தரித்திரத்தினாலே நான் ஐசுவரியவானாகும்படி நீர் என் னிமித்தம் தரித்திரரானீரே.

தாழ்ந்தீர் நீர், உயர்ந்தேன் நான்
இதென்ன அதிசயம்
இது அன்பின் ஆழமாம்.

ஆ சுவாமி! இந்த ஆழத்துக்குள் அடியானை இறக்கிவிடும். ஓ, ரட்சகா! இந்த இரகசிய புதையல்களை அடியான் கண்டு பிடிக்க அருள்தாரும். காணும்படி மாத்திரமல்ல, அந்த வாழ்வுகளைச் சேர்த்து, என் ஆத்துமாவின் மடியில் கட்டி சிலுவையால் சீமானாகும்படி அனுக்கிரகஞ்செய்யும். என் தாழ்வை நினைத்து ஒரு தூதனையனுப்பினால் போதும் என்று உத்தரவாகவேண்டாம். இரட்சகா, நீரே உம்மு டைய கல்வாரிக்கோலமாய் என் மனமலைமேல் நின்று, அந்த இரகசியமனைத்தையும் வெளிப்படுத்தியருளும். மற்றப்படி நான் கண்டும் காணாதவனாயும் கேட்டும் உண ராதவனாயுமிருப்பேன். உமது சிலுவை இரகசியங்களி னிமித்தம் இதைக் கடாட்சம்பண்ணியருளும். ஆமென்.

4. இயேசு சுவாமியின் பாடுகள் பாவநிவாரண பலியாயிருக்கிறது

பூலோகம் பாவத்தால் கெடுக்கப்பட்டுப்போனதால், அக்கேட்டை நிவிர்த்தித்து ஆதிவாழ்வை அதற்கு உண் டாக்கும்படியாகவும், பிதாவாகிய தேவனுடைய நீதியை, திருப்தி செய்யும்படியாகவும் ஒரு பலி அவசியமாயிருந் தது. ஆதிமுதல் சட்டமில்லாமலும், சட்டத்தோடும்

செலுத்தப்பட்ட எல்லா வகையான பலிகளும், பாவ நிவாரணத்துக்கு அவசியமாயிருந்த நிச்சய பலிக்கு நிழலாகமாத்திர மிருந்தன. அந்த பலியோ நிச்சய தேவ நீதியைத் திருப்திப்படுத்தவும், பாவிகள் ஒவ்வொருவரையும் மீட்கவும்தக்கதான "நிறைவும், பூரணமும் போந்ததுமான" நரபலியாயிருக்கவேண்டியது. மனுஷமீட்புக்குமாடாடுகளின் இரத்தமல்ல, ஒரு மனுஷ இரத்தம்தான் அவசியம். பாவத்தின் சம்பளம் மரணம்; ஆதலால் ஒவ்வொரு மனுஷனுடைய ஒவ்வொரு பாவத்துக்கும் நிவிர்த்தியுண்டாக ஒவ்வொருவனும் சாகவேண்டியது நியாயமாகும். அப்படியானால் ஒரு மனுஷன் பிழைத்திருக்க அவனுடைய ஒவ்வொரு பாவத்திற்கு ஒவ்வொரு மனுஷஜீவன் பலியானாலும் எல்லா மனுமக்களும் சாவுக்குள்ளாவார்கள். ஏனெனில் ஒரு மனுஷனுடைய பாவங்களின் தொகையும், அவைகளுக்கு வரவேண்டிய தண்டனைகளும், எல்லா மனுஷருடைய தொகையிலும், அவர்கள் பலியாகும் சாவிலும் அதிகமாகவேயிருக்கும். அதுவன்றி அப்படி பலியாகச் சாகும் ஒவ்வொரு மனுஷஜீவனும் பாவமுள்ளதாகையால் அது அந்த ஒரே மனுஷனுடைய பாவத்தை முதலாய் நிவிர்த்தி செய்யவுமாட்டாது; தேவனுடைய நீதியை திருப்திபடுத்தவுமாட்டாது. பாவமுள்ள பலி பாவ நிவாரணத்தை யுண்டாக்கவுமாட்டாது. ஆகவே மனுமக்கள் அனைவரும் பலியானாலும், அவர்கள் தங்களைப் பலியாக ஒப்புக்கொடுப்பதால் ஒரு மனுஷனுக்கு மீட்பை யுண்டாக்கிக்கொள்ளமாட்டார்கள். அப்படியானால் மனுமக்கள் அனைவருக்கும் மீட்பு எப்படிக் கிட்டும்? அவர்கள் பாவம் எப்படி நிவிர்த்தியாகும்?

இவ்வண்ணம் மனுப்புத்திரர் தங்களைத் தாங்களே கெடுத்து, தங்கள் கேட்டை நிவிர்த்திக்க சக்தியற்றவர்களாயும் தமது நீதியைச் சரிப்படுத்தக் கூடாதவர்களாயுமிருந்ததைப் பிதாவாகிய தேவன் கண்டு பரிதாபமானார். தேவனுடைய பரிதாபம் அவருடைய பரிசுத்தமுள்ள நீதிக்குத் திருப்தியாகமாட்டாது. காரியமிப்படியிருக்கையில் நித்திய வார்த்தையும், தேவனுடைய குமாரனு

மாகிய இயேசுகிறிஸ்து, பிதாவே உமது நீதியைத் திருப்திசெய்யவும், மனுமக்களுக்குப் பாவ நிவிர்த்தியை யுண்டாக்கவுமாக எனக்கொரு சரீரத்தை ஆயத்தப் படுத்தி என்னை அனுப்பும். நான் உமது நீதியின் தண்டாயுதத்தைத் தாங்கி, உமது சிட்சைக்குட்பட்டு, நீர் குறிப்பிக்கும் பாவமில்லாத பரிசுத்த இரத்தத்தை மீட்கும் கிரயமாகச் செலுத்தி, இவ்வண்ணம் உமக்குத் திருப்தியையும் மனுமக்களுக்கு மீட்பையும் உண்டு பண்ணுகிறேன் என்று ஆலோசனைபண்ணி, தேவனு யிருந்தவர் மனுஷனுனார். தேவதூதரால் வணக்கத்தைப் பெற்ற அவர் சற்றுக்காலம் தேவதூதரிலும் சிறியவராக் கப்பட்டார். அந்தப் புண்ணியநாதர் தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபத்தை எடுத்து, மனுஷனுகி சிலுவையின் மரணம்வரையும் தம்மைத் தாழ்த்தினுர்.[1] மொத்தமாகச் சொன்னுல் நமக்குப் பாவநிவாரண பலியானுர்.

இதில் நாம் யாரை அதிகமாய் நேசிக்கிறது? பிதாவையா? குமாரனையா? அவ்விருவருடைய அன்பில், இது முதல், இது இரண்டாவது என்று பிரிக்கக்கூடாத வண்ணமாயிருக்கிறது. ஆதலால் நாம் எப்போதும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய்ப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரிக்கவும் வணங்கவும் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம்.

ஆ, உன்னத பலியே! பரலோக ஆடே! பாவத்தை அறியாத பரிசுத்த இரட்சகா! தேவரீர் மனுமக்கள் எல்லாருடைய வணக்கத்துக்கும், ஸ்தோத்திரத்துக்கும் நேசத்துக்கும் பாத்திரராயிருக்கிறீர். தேவரீர் நேசியாத மனுஷ ஜன்மம் ஒருவனுமில்லை. நீர் உமது ஒரே பரிசுத்த பலியால் உலகமனைத்தையும் மீட்டுக்கொண்டீர். நீர் என்னையும் உலகமனைத்தையும் மீட்கும்படி சர்வாங்க தகனபலியானீர். நீர் உமது சரீரத்திலும், ஆத்துமாவிலும், மனதிலும் பாடுபட்டீர். ஒவ்வொரு பாவியும் உம்மைப் பார்த்து,

---

[1] பிலி. 2: 5–8.

நீர் என்னில் அன்புகூர்ந்து
எனக்காக உம்மை ஒப்புக்கொடுத்தீர்[1]
என்று சொல்லவேண்டியது நியாயமாயிருக்கிறது.

ஜெபம்

பிதாவாகிய தேவனே, நீர் என் மீட்பினிமித்தம் உமது குமாரனை அனுப்பச் சம்மதித்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தி உம்மை வணங்குகிறேன். பாவிகளாகிய எங்களை நீர் நேசித்த நேசம் தேவதூதரை ஆச்சரியத்தால் நிரப்புகிறதோடு பிசாசுக்களை வெட்கத்தால் மூடுகிறது.

பிதாவே, நீர் உமது குமாரன் பட்டபாடுகளை உற்றுப் பாரும். மனதில் வியாகுலம்—ஆவியில் கலக்கம்—வாயில் பெருமூச்சு—கண்ணில் கண்ணீர்—காதில் தூஷணம்—முகத்தில் உமிழ்நீர்—முதுகில் மிலாரடி—சிரசில் முள் முடி—விலாவில் படுகாயம்—நாவில் வறட்சி—கைகாலில் ஆணிகள்—இவ்வளவாக உமது குமாரனை நீர் தாழ்த்தும் படி சித்தம்கொண்டது என்பேரில் நீர் வைத்த நேசம் தான். இந்த எல்லாப் பாடுகளினிமித்தமும் என் பாவங்களை மன்னித்தருளும். என் ஆத்துமாவின் நோயை மாற்றி என்னைக் குணமாக்கியருளும். உம்முடைய பரிசுத்த ஆவியைக்கொண்டு இந்தப் பாடுகளனைத்தையும் என் இருதயத்தில் எழுதி, என்னை நேசித்த உம்மையும் என்னை மீட்டுக்கொண்ட உமது குமாரனையும் நான் ஜீவகாலமெல்லாம் நேசித்து நடக்கும்படி இயேசுகிறிஸ்துவினிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

5. தியான ஆலய மணிநாதம்

ஸ்தோத்திரத்துக்குப் பாத்திரரான இயேசு சுவாமியின் பாடுகளைத் தியானிக்கும்படி ஆசைகொள்ளும் ஆத்துமாவே! உன்னைப்போல பாக்கியவான் ஒருவனுமில்லை—கிரீடமணிந்த அரசன் கத்திமுனையிலிருக்கிறான்—விருதுபெற்றவீரன் மாயையைத்தொடர்ந்து திரிகிறான்—

[1] கலா. 2: 20.

உலகஞானி தேவன் எழுதிவைத்திருக்கும் பைத்தியக்காரர் அட்டவணையிலிருக்கிறான்—நீயோ தேவனுடைய பார்வையில் பிரியமாயிருக்கிறாய். உன் கண் ஜீவவிருட்சத்தின் கனியை நோக்குகிறது—உன் காது கொல்கதா சரித்திரத்துக்குச் சாய்கிறது—உன் மனம் ஜீவனுள்ள இரட்சகர்மேல் தாகமாயிருக்கிறது—இது நல்லதுதான்—இப்படிப்பட்ட ஆத்துமாவின்பேரில் தேவன் பிரியம் வைக்கிறார்.

உன் ஆத்துமா வாஞ்சிக்கும் வாழ்வை நீ இயேசுவிலன்றி வேறெங்கும் பெற்றுக்கொள்ளமாட்டாய். வேறு இடங்களிலிருந்து எவ்வளவு வாழ்வுகள் வந்தபோதிலும் அது வாழ்வு அல்ல; அவையனைத்தும் மாயையும் ஆவியை அரிக்கிறதுமாயிருக்கின்றன. இயேசு சுவாமியில் மாத்திரம் உனக்கு ஆறுதலும் வாழ்வுமிருக்கின்றது. அவர் உன்னைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிற ஆத்துமாவே, நீ என்னிடத்தில் வா; நான் உனக்கு ஆறுதலை அளிப்பேன் என்கிறார். நீ கூப்பிடாத இடங்களுக்கும், ஆட்களிடத்திலும் போவானேன்? அன்போடு அழைக்கிறவரை அசட்டைசெய்யாதே.

ஆத்துமாவே! உன்பேரில் நான் சொல்லக்கூடிய சில குறைகளுண்டு:—நீ பெத்லகேமுக்குப் போனால் சத்திரத்தையல்ல, ஆகாயத்தில் பறந்து சம்மனசானோரோடு கூடி பாடும்படி ஆசைப்படுகிறாய். கானான் வனங்களுக்கு உன் மீட்பரைத் தேடிப்போனால் அவருடைய ஞான உபதேசங்களைக் கேட்கப் பிந்துகிறாய், அவர் வைக்கும் பந்திக்கோ முந்துகிறாய். அவரோடு வனத்தில் போய் சாத்தானோடு போராடவேண்டி, ஞான சாஸ்திரத்தைக் கற்றுக்கொள்ள விருப்பம்கொள்ளாமல், தாபோர மலையின் ஜோதி என்னையும் கவிந்துகொள்ளாதா என்று ஆசைப்படுகிறாய். நீ உன் மீட்பரோடு கல்வாரி மலையில் ஏற மனமற்று, அவர் பரமேறும் மலைக்கு ஓடுகிறாய். இது நல்ல வழக்கமல்ல, நீ நாடவேண்டிய விசேஷ ஸ்தானம் கல்வாரி மலைதான். மற்ற இடங்களில் ஆள்கூட்டம்

அதிகமுண்டு. கல்வாரியில் கூட்டமெல்லாம் கலைந்து, இயேசு வானத்துக்கும் பூமிக்கும் மத்தியில் தனிமையாய்த்தொங்குகிறார். அவரோடு இரண்டு பாவிகள்மாத்திரமிருக்கிறார்கள். நீயும் ஒரு பாவிதானே—நீ அந்த இரண்டு பாவிகளிலும் யோக்கியனல்லவே—பாவிக்கேற்ற இடம் எருசலேம் தேவாலயமுமல்ல—யூதேயாவின் வனமுமல்ல—தாபோருமல்ல—அவனுக் கேற்ற இடம் கல்வாரி மலைதான். கல்வாரிமலை நாதனால் உன் கலி தீரவேண்டுமேயன்றி மற்றப்படி நீங்காது.

நீ கல்வாரிக்குப் போ—இயேசுவோடு தனித்துப்பேச அதுதான் நல்ல இடம்—அவர் உன்னோடு தனித்துப் பேசிக்கொள்ள ஆசைப்படுகிறார். அங்கே உன் அங்கலாய்ப்பு அனைத்தையும் நீ கொட்டலாம்—உன் கண்ணீர்த் துருத்தியை ஊற்றலாம்—உன் புலம்பலையும் ஒப்பாரியையும் கீதம்போல பாடலாம்—உன் பெருமூச்சை அவருடைய பெருமூச்சோடும், உன் வியாகுலத்தை அவருடைய வியாகுலத்தோடும், உன் பலியை அவருடைய பலியோடும் கலந்து பிதாவாகிய தேவனுக்குச் செலுத்தவும் அதுதான் நல்ல பலிபீடம்போலிருக்கிறது. இப்படியே நீ உன் ஜீவகாலமெல்லாம் கல்வாரியில் உன் ஆத்துமாவைக் குடியேற்றி, அங்கிருந்தே உன் ஆவி தன்னைத் தந்த தேவனிடத்தில் சேரக்கூடுமானால், அது தேவதூதனைக ஜீவிப்பதிலும் மேலான ஜீவியம் என்று சொல்லலாம். அந்த மலையில் ஜீவிக்கிற ஒவ்வொரு பாவியும் வானத்தின் அருளாகிய பனியாலும் ஆவியின் வரப்பிரசாதம் என்னும் மழையாலும் நிரப்பப்படுகிறான். அவனுக்கு அந்த மலையின்மேல் சேனைகளின் கர்த்தரால் ஜீவ மன்னா பெய்கிறது; ஜீவ தண்ணீர் அருளப்படுகிறது. அவன் இரட்சண்ய வாழ்வுகளாகிய நிணத்தையும், கொழுப்பையும் உண்டு, பாவமன்னிப்பின் ஆனந்தக் கூத்தாடுகிறான். அவனுடைய கிரியைகளாகிய வஸ்திரத்தின் வாசனை வெள்ளப்போளம், லவங்கம், காசியாவு இவைகளின் வாசனை போலிருக்கிறது. அவன் கல்வாரியில் மறுபடியும் பிறந்து பரிசுத்தவான் என்னும் புதிய நாமத்தையும் தரித்துக்கொள்ளுகிறான்.

பாவ ஆத்துமாவே, இந்த வாழ்வனைத்தும் அற்பமானவைகளோ? அல்ல, அல்ல. சம்மனசோர் இவ்வாழ்வுகளை ஆவலோடு விரும்பியும் அவர்களுக்கு இவைகள் அருளப்படுகிறதில்லை. ஆதலால் நீ நேற்றும் முந்தின நாட்களிலு மிருந்ததுபோல நிர்விசாரமாயிருக்கவேண்டாம். என்னோடுகூட தியான ஆலயத்துக்குள் பிரவேசிப்பாயாக. அந்த ஆலயத்திலே கிடைக்கும் பிரசாதங்களையெல்லாம் அநுபவித்து வாழுவோமாக.

கர்த்தருமாய், ஜீவனைக் கொடுக்கிறவருமாய், பிதாவிலிருந்தும்குமாரனிலிருந்தும் புறப்படுகிறவருமாய், பிதாவோடும் குமாரனோடும் தொழுது தோத்திரிக்கப்படுகிறவருமாய், தீர்க்கதரிசிகளால் உரைத்தவருமாயிருக்கிற பரிசுத்த ஆவியானவர் நமக்குத் துணைசெய்வாராக.

ஜெபம்

பரிசுத்தமுள்ள பிதாவே! நான் பாவநோய்கொண்ட ஒரு ஏழையாயிருக்கிறேன். என்னை நீர் கண்ணோக்கவும் என் விண்ணப்பத்துக்குச் செவிகொடுக்கவும், என் விண்ணப்பத்தின்படி செய்யவும் நான் பாத்திரன் அல்ல. ஆனால் என் மூச்சொடுங்கும் அந்தக் கடைசி இக்கட்டுமட்டும் நான் உம்மிடத்தில் அல்லாமல் வேறிடத்திற்குப் போகமாட்டேன். என் பாவங்களெல்லாம் உமக்குத் தெரியுமே. என் பாவ நிவிர்த்திக்காக தேவரீர் உமது திருக்குமாரனாகிய இயேசு சுவாமியைத் தந்தீரே. அவர் எனக்காகப் பட்ட அகோர கஸ்திகளையும் சொல்லமுடியாத பாடுகளையும், பிராயச்சித்தப் பலியையும் தியானித்து, அந்தத் தியானத்தால் உம்மையும், அவரையும் நேசிக்க ஏவப்பட்டு, உமக்குப் பிரியமாய் நடந்து என் ஜீவகாலத்தைக் கழிக்க வாஞ்சைப்படுகிறேன். பிதாவே, இந்த நல்ல வேலையில் என் ஆவியையும், சிந்தையையும் நடத்தி, என் சரீரமானது என் ஆவியின் உணர்ச்சிகளுக்கும் தீர்மானங்களுக்கும் இசைந்தாற்போல் நடந்துகொள்ளுகிறதால் எல்லாம் கூடி உம்மை மகிமைப்படுத்தும்படி என் இரட்சகராகிய உமது குமாரன்நிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

வேறு

பாவியின் மரணத்தை விரும்பாமல் அவன் மனந்திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிற பிதாவே, என் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் பாடுகளை நான் தியானிப்பதால் ஆவிக்குரிய சாவு மாறி ஞானஜீவனடையும்படி உமது பரிசுத்த ஆவியால் என்னை உயிர்ப்பிக்க வேண்டுமென்று என் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் பாடுகளினிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

6. தியான ஆலய புஸ்தகச் சுருள்

கவனிப்பு.—இயேசு சுவாமியின் பாடுகள் சம்பந்தமாய்ப் பழைய ஏற்பாட்டிலடங்கிய வேதவாக்கியங்களை இவ்விடத்தில் காட்டுகிறோம். இதை அவரவர் யுக்தம்போல வாசித்துப் பிரயோசனப்படுத்திக் கொள்ளலாம்.

ஆதியாகமம் 3: 15.

"உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன், அவர் உன் தலையை நசுக்குவார்; நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்."

சங்கீதம் 22: 1–21.

என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? எனக்கு உதவிசெய்யாமலும், நான் கதறிச்சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்?

என் தேவனே, நான் பகலிலே கூப்பிடுகிறேன், உத்தரவுகொடீர்; இரவிலே கூப்பிடுகிறேன், எனக்கு அமைதலில்லை.

இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர்.

எங்கள் பிதாக்கள் உம்மிடத்தில் நம்பிக்கை வைத்தார்கள்; நம்பின அவர்களை நீர் விடுவித்தீர்.

உம்மை நோக்கிக் கூப்பிட்டுத் தப்பினார்கள்; உம்மை நம்பி வெட்கப்பட்டுப் போகாதிருந்தார்கள்.

நானோ ஒரு புழு, மனுஷனல்ல; மனுஷரால் நிந்திக்கப்பட்டும், ஜனங்களால் அவமதிக்கப்பட்டும் இருக்கிறேன்.

என்னைப் பார்க்கிறவர்களெல்லாரும் என்னைப் பரியாசம் பண்ணி, உதட்டைப் பிதுக்கி, தலையைத் துலுக்கி:

கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவனை விடுவிக்கட்டும்; இவன்மேல் பிரியமாயிருக்கிறாரே, இப்பொழுது இவனை மீட்டுவிடட்டும் என்கிறார்கள்.

நீரே என்னைக் கர்ப்பத்திலிருந்து எடுத்தவர்; என் தாயின் முலைப்பாலை நான் உண்கையில் என்னை உம்முடைய பேரில் நம்பிக்கையாயிருக்கப்பண்ணினீர்.

கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டபோதே உமது சார்பில் விழுந்தேன்; நான் என் தாயின் வயிற்றில் இருந்தது முதல் நீர் என் தேவனாயிருக்கிறீர்.

என்னை விட்டுத் தூரமாகாதேயும்; ஆபத்துகிட்டியிருக்கிறது, சகாயரும் இல்லை.

அநேகம் காளைகள் என்னைச் சூழ்ந்திருக்கிறது; பாசான் தேசத்துப் பலத்த எருதுகள் என்னை வளைந்து கொண்டது.

பீறி கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல், என்மேல் தங்கள் வாயைத் திறக்கிறார்கள்.

தண்ணீரைப்போல ஊற்றுண்டேன்; என் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது, என் இருதயம் மெழுகு போலாகி, என் குடல்களின் நடுவே உருகிற்று.

என் பெலன் ஓட்டைப்போல் காய்ந்தது; என் நாவு மேல்வாயோடே ஒட்டிக்கொண்டது; என்னை மரணத் தூளிலே போடுகிறீர்.

நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது; பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்துகொண்டது; என் கைகளையும் என் கால்களையும் உருவக்குத்தினார்கள்.

என் எலும்புகளையெல்லாம் நான் எண்ணலாம்; அவர்கள் என்னை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்பேரில் சீட்டுப்போடுகிறார்கள்.

ஆனாலும் கர்த்தாவே, நீர் எனக்குத் தூரமாகாதேயும்; என் பெலனே, எனக்குச் சகாயம்பண்ணத் தீவிரித்துக்கொள்ளும்.

என் ஆத்துமாவைப் பட்டயத்திற்கும், எனக்கு அருமையானதை நாய்களின் துஷ்டத்தனத்திற்கும் தப்புவியும்.

என்னைச் சிங்கத்தின் வாயிலிருந்து இரட்சியும்; நான் காண்டாமிருகத்தின் கொம்புகளில் இருக்கும்போது எனக்குச் செவிகொடுத்தருளினீர்.

சங்கீதம் 31: 12, 13.

செத்தவனைப்போல எல்லாராலும் முழுவதும் மறக்கப்பட்டேன்; உடைந்த பாத்திரத்தைப்போலானேன். அநேகர் சொல்லும் அவதூறைக் கேட்டேன்; எனக்கு விரோதமாக அவர்கள் ஏகமாய் ஆலோசனைபண்ணுகிறதினால் திகில் என்னைச் சூழ்ந்துகொண்டது; என் பிராணனை வாங்கத் தேடுகிறார்கள்.

சங்கீதம் 89: 38–45.

நீர் அபிஷேகம்பண்ணுவித்தவன்மேல் உக்கிரமானீர். உமது அடியானுடன் நீர் பண்ணின உடன்படிக்கையை ஒழித்துவிட்டு, அவன் கிரீடத்தைத் தரையிலே தள்ளி அவமானப்படுத்தினீர். அவன் மதில்களையெல்லாம் தகர்த்துப்போட்டு, அவன் அரணான ஸ்தலங்களைப் பாழாக்கினீர். வழிநடக்கிற யாவரும் அவனைக் கொள்ளையிடுகிறார்கள்; தன் அயலாருக்கு நிந்தையானான். அவன் சத்துருக்களின் வலதுகையை நீர் உயர்த்தி, அவன் விரோதிகள் யாவரும் சந்தோஷிக்கும்படி செய்தீர். அவன் பட்டயத்தின் கருக்கை மழுக்கிப்போட்டு, அவனை யுத்தத்தில் நிற்காதபடி செய்தீர். அவன் மகிமையை அற்றுப்போகப்பண்ணி, அவன் சிங்காசனத்தைத் தரையிலே தள்ளினீர். அவன் வாலிப நாட்களைக் குறுக்கி, அவனை வெட்கத்தால் மூடினீர்.

சங்கீதம் 41: 9.

என் பிராணசிநேகிதனும், நான் நம்பினவனும், என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும், என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்.

சகரியா 11: 12, 13.

எனக்குக் கூலியாக முப்பது வெள்ளிக்காசை நிறுத் தார்கள். இதுவே நான் அவர்களால் மதிக்கப்பட்ட மேன்மையான மதிப்பு.

தானியேல் 9: 26.

அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார்; ஆனாலும் தமக்காக அல்ல.

சகரியா 13: 6, 7.

உன் கைகளில் இருக்கிற இந்த வடுக்கள் ஏதென்று கேட்டால், என் சிநேகிதரின் வீட்டிலே காயப்பட்டதி னால் உண்டானவைகள் என்பான். பட்டயமே, என் மேய்ப்பன்மேலும் என் தோழனாகிய புருஷன்மேலும் எழும்பு என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; மேய்ப்பனை வெட்டு, அப்பொழுது ஆடுகள் சிதறிப் போகும்.

உபாகமம் 21: 23.

மரத்திலே தூக்கிப்போடப்பட்டவன் தேவனால் சபிக் கப்பட்டவன்.

எண்ணாகமம் 21: 9.

மோசே ஒரு வெண்கலச் சர்ப்பத்தை உண்டாக்கி, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவைத்தான்; சர்ப்பம் ஒருவனைக் கடித்தபோது, அவன் அந்த வெண்கலச் சர்ப் பத்தை நோக்கிப் பார்த்துப் பிழைப்பான்.

ஏசாயா 50: 6.

அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடைமயி ரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக் கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ் நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை.

ஏசாயா 52: 14.

மனுஷனைப்பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரரைப்பார்க்கிலும் அவருடைய ரூபமும், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே, அவரைக் கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள்.

ஏசாயா 53: 2–12.

இளங்கிளையைப்போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார்; அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது. அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரை விட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம்.

மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு, வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.

இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார்; அவருடைய ஆயுசை என்னுபவன் யார்? ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார்; என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்.

துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை. கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்த நாளாயிருப்பார்; கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும். அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்; என் தாசனாகிய நீதிபரர் தம்மைப்பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார். அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம், அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார்.

சகரியா 13: 1.

அந்நாளிலே பாவத்தையும் அழுக்கையும் நீக்க, தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும்.

சங்கீதம் 40: 6–8.

பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பாமல், என் செவிகளைத் திறந்தீர்; சர்வாங்க தகனபலியையும் பாவநிவாரண பலியையும் நீர் கேட்கவில்லை. அப்பொழுது நான்: இதோ, வருகிறேன், புஸ்தகச் சுருளில் என்னைக்

குறித்து எழுதியிருக்கிறது; என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்.

ஏசாயா 6; 8.

யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன்.

ஏசாயா 49: 6.

நீர் பூமியின் கடைசிபரியந்தமும் என்னுடைய இரட்சிப்பாயிருக்கும்படி, உம்மை ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைப்பேன்.

சகரியா 12: 10.

அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறுனவனுக்காகப் புலம்புகிறது போல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங் கசந்து துக்கிப்பார்கள்.

7. தியான ஆலய விண்ணப்ப வாசல்

பொது விண்ணப்பம்

பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே! உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய இராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூலோகத்திலேயும் செய்யப்படுவதாக. அன்றன்று எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றம் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்தருளும். ஆமென்.

எல்லா இருதயங்களையும் எல்லா விருப்பங்களையும் எல்லா இரகசியங்களையும் அறிந்திருக்கிற சர்வ வல்லமை

யுள்ள தேவனே! நான் தேவரீரிடத்தில் பரிபூரணமாய் அன்புகூரவும் உமது பரிசுத்த நாமத்தை உத்தமமாய் மகிமைப்படுத்தவும் எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தம் உமது பரிசுத்த ஆவியின் ஏவுதலால் என் இருதயத்தின் தியானங்களை நடத்தி என்னைச் சந்தோஷப்படுத்தியருளும். ஆமென்.

ஆயத்த விண்ணப்பம்

வணக்கத்துக்குப் பாத்திரரான என் இரட்சகா, உமது பாடுகளே என் தஞ்சமென்று சாஷ்டாங்கமாய் விழுகிற அடியானை நோக்கிப்பாரும். உம்முடைய பாடுகளால் நீர் சம்பாதித்த புண்ணியங்களை எல்லாம் அடியேனுடைய சிரசின்மேல் பொழிந்தருளும். நான் தேவரீருடைய பாடுகளின் பாதையிலே நடக்கும்போது என் இருதயம் நொறுங்குண்டு, நான் பாவத்துக்காக மெய் மனஸ்தாபப்பட்டு, மனம் மாறி பரிசுத்த வழியில் திரும்பும்படி, உமது பரிசுத்த ஆவியால் என்னை ஆண்டுகொண்டருளும், சுவாமி. ஆமென்.

இயேசுவின் மனுஷவதாரம்

இயேசுவே, தேவரீர் மகிமையின் இராஜா; நீரே பிதாவினுடைய நித்திய சுதன்; நீர் என்னை இரட்சிக்க ஏற்பட்டு அவதாரமெடுத்தபொழுது, கன்னிமரியம்மாளின் கர்ப்பத்தை அருவருக்கவில்லையே; என் பாவ இருதயத்தில் தேவரீர் தயவாக எழுந்தருளியாகி, உம்மைப்பற்றிய தியானத்தால் என் மனதையும், உடலையும் மாற்றி, நான் புதிய மனுஷனாகிய அவதாரமாகும்படி உமது மனுஷவதாரத்தை முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

இயேசுவின் விருத்தசேதனம்

ஸ்தோத்திரத்துக்குப் பாத்திரரான இயேசுவே, தேவரீர் பிறந்த எட்டாம் நாளில் விருத்தசேதனம் பெற்று, நியாயப்பிரமாணத்துக்குக் கீழடங்கினீரே; நான் உம்முடைய ஆவியால் உலகத்துக்கும் மாம்சத்துக்குமுரிய துர் இச்சைகள் எல்லாவற்றையும் களைந்து, உமது

பரிசுத்த பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி மெய்யான விருத்தசேதனத்தை அருளிச்செய்யும் சுவாமி. ஆமென்.

இயேசுவின் சோதனை

பரிசுத்தவான்களின் இராஜாவே! தேவரீர் ஏன்னிமித்தம் இரவும் பகலும் நாற்பதுநாள் உபவாசித்ததுமல்லாமல், சாத்தானால் சோதிக்கப்படவும் தாழ்ந்து கொண்டீரே. தினந்தோறும் என்னைப் பின்தொடர்ந்து சோதித்து என் ஆத்துமாவைக் கெடுத்துப்போடுகிற சாத்தானை, நான் தேவரீருடைய சகாயத்தால் துரத்தவும், உம்முடைய சிலுவைப் பாடுகளைக்கொண்டு அவனைக் கொன்றுபோடவும், என் ஆவியை உமது பலத்தால் இடைக்கட்டியருளும் சுவாமி. ஆமென்.

இயேசுவின் மரணாக்கினை

இயேசுவே, தேவரீர் உம்முடைய அகோரமான பாடுகளாலும், விலைமதிக்கப்படாத இரத்தத்தினாலும் நீர் என்னை மீட்டுக்கொண்டீர். ஆதலால் உம்மை வணங்கி ஸ்தோத்திரிக்கிறேன்; ஆ! குற்றமற்ற நேசரே, பாவமற்ற பரிசுத்தரே! தேவரீர்பேரில் அநியாயமான மரணாக்கினை கூறப்பட்டபோது, மட்டில்லாத மவுனத்தோடு அதை ஒப்புக்கொண்டீரே. உம்மை மரணாக்கினைக்குட்படுத்தின பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும், அமளிகளுமெல்லாம் என்னுடைய பாவங்களால்தானுண்டானது. அவ்வித பாவங்களை நான் களைந்து உமக்காக மரணாக்கினை வந்தாலும் ஏற்றுக்கொள்ளத்தக்க அன்பை வெளிப்படுத்தும்படி தேவரீருடைய மரணாக்கினையினிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

இயேசு சிலுவை சுமந்தது

இயேசுவே, தேவரீர் உம்முடைய அகோரமான பாடுகளாலும், விலைமதிக்கப்படாத இரத்தத்தினாலும், நீர் என்னை மீட்டுக்கொண்டீர். ஆதலால் உம்மை வணங்கி ஸ்தோத்திரிக்கிறேன்.

அநாதி நேசரே, என் பத்தாவே, எனக்காக நீர் சுமந்த சிலுவையிலே என் பாவ மூட்டைகளையும் சேர்த்துக் கட்டிக்கொண்டீர்! இது மகாதயவுதான். நானும் நீர் தரும் சிலுவையைச் சுமக்க நல்மனது தாரும். நீர் எனக்காகச் சுமக்கும் பாரத்தை நான் கண்டு மேனெகிழ்ச்சி கொள்ளாமல் உமக்காகச் சுமக்கவேண்டிய கவலைகளையும் வேலைகளையும் என் மனதில் பாரமான சுமையாகக் கட்டியருளும். ஆமென்.

இயேசு சிலுவையில் அறையப்பட்டது

இயேசுவே, தேவரீர் உம்முடைய அகோரமான பாடுகளாலும் விலைமதிக்கப்படாத இரத்தத்தினாலும் நீர் என்னை மீட்டுக்கொண்டீர். ஆதலால் உம்மை வணங்கி ஸ்தோத்திரிக்கிறேன்.

ஆ இயேசுவே, இவ்வண்ணம் உமது நேசத்தை வெளிப்படுத்தச் சித்தம்கொண்டீரே. என் ஆசைகள், விருப்பங்கள், முயற்சிகள் எல்லாம் தேவரீருடைய பரிசுத்தபயத்திலும்பாசத்திலும், கீழ்ப்படிதலிலும்நிலைத்திருக்கும்படி ஆணியடித்தருளும். உம்மை ஊடுருவின ஆணியனைத்தும் என் பாவங்களின் வலுது மாறுதலேயன்றி மற்றொன்றல்ல என்று உணருகிறேன். உமக்கு விரோதமான எல்லா எண்ணங்களையும் இப்படியே நான் சிலுவையிலறைந்து உமக்குள் ஜீவிக்கும்படி நீர் சிலுவையிலறையப்பட்டதினிமித்தம் கிருபை செய்தருளும். ஆமென்.

இயேசு சிலுவையில் தொங்கினது

இயேசுவே, தேவரீர் உம்முடைய அகோரமான பாடுகளாலும், விலைமதிக்கப்படாத இரத்தத்தினாலும், நீர் என்னை மீட்டுக்கொண்டீர். ஆதலால் உம்மை வணங்கி ஸ்தோத்திரிக்கிறேன்.

ஆ, தேவசுதனே, லோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டியே, இவ்வண்ணம் உமது நேசத்தை ஆகாயத்திலிருந்து காட்டச் சித்தங்கொண்டது எவ்வளவு தயவு! உம்முடைய சிலுவைப்பாடுகள் என் ஆத்துமாவின் தின தியானமாயிருக்கும்படி தேவ

நீர் தினந்தோறும் இவ்விதம் அடிக்கப்பட்ட ஆட்டுக் குட்டியானவரின் வண்ணமாக எனக்குமுன் தொங்கியருளும். உம்முடைய சாவில் என் ஜீவனும், உமது சிலுவையில் நான் பரலோகமேறும் படிகளுமிருக்கின்றன. நான் உமது சிலுவையில் புத்திரனாகி, அதைச் சுமந்து, அதை மதித்து, அதைப் பிரஸ்தாபித்து, அதினால் ஜெயம்பெற்று வாழும்படி தேவரீர் வரம் தரவேண்டுமென்று உம்முடைய சிலுவை மரணத்தினிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

இயேசு சிலுவையில் மரித்தது

இயேசுவே, தேவரீர் உம்முடைய அகோரமான பாடுகளாலும் விலைமதிக்கப்படாத இரத்தத்தினாலும் என்னை மீட்டுக்கொண்டீர்; ஆதலால் உம்மை வணங்கி ஸ்தோத்திரிக்கிறேன்.

என் மீட்பரே, தேவரீர் உம்முடைய ஜீவனுக்கு மிஞ்சி என்னை நேசித்தீர். நான் உம்மைப் பற்றும் விசுவாசத்தோடும் பாசத்தோடும் ஜீவித்து எனக்காக ஜீவன் விட்டவர் கரத்தில் என் ஜீவனை ஒப்புவிக்கும்படி உமது மரணத்தினிமித்தம் கிருபை செய்தருளும். ஆமென்.

லித்தனி

"தேவரீருடைய பரிசுத்த மனுஷவதாரத்தினிமித்தமும், உமது பரிசுத்த பிறப்பு விருத்தசேதனத்தினிமித்தமும், உமது ஞானஸ்நானம், உபவாசம் சோதனையினிமித்தமும்;

என்னை இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே.

தேவரீருடைய மனவேதனை இரத்தவேர்வையினிமித்தமும், உமது சிலுவைப்பாடுகளினிமித்தமும், உமது அருமையான மரணத்தினிமித்தமும், நீர் அடக்கம் பண்ணப்பட்டதினிமித்தமும்;

என்னை இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே.

தேவரீருடைய ஜீவியத்தினிமித்தமும், எல்லா மனுபுத்திரருடைய பாவங்களுக்காகவும் நீர் செலுத்தின

உம்முடைய அருமையான பலியினிமித்தமும், காணிக்கையினிமித்தமும், பரிகாரத்தினிமித்தமும்;

என்னை இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே.

தேவரீருடைய ஜெபங்களினிமித்தமும், விண்ணப்பங்களினிமித்தமும், உம்முடைய உத்தம அழுகையினிமித்தமும், கண்ணீர்களினிமித்தமும், காணமற்போனவர்களும் ஆதரவற்றவர்களுமான பாவிகளாகிய எங்களுக்காக நீர் சிலுவையின்மேல் உயர்த்தப்பட்டதினிமித்தமும்;

ஆத்துமாக்களின் வைத்தியரே, என் பாவநோயைக் குணமாக்கியருளும்.

பேருமூச்சுகள்

லோகரட்சகா, உமது சிலுவையினாலும் அருமையான உமது இரத்தத்தினாலும் எங்களை மீட்டுக்கொண்ட கர்த்தாவே, என்னை இரட்சித்து, எனக்குச் சகாயம் செய்தருளும். ஆமென்.

எனக்காக சிலுவையில் ஆணியடிக்கப்பட்ட இயேசுவே, என் சித்தத்தையும் மனசையும் உமது சிலுவையோடு சேர்த்து ஆணியடித்தருளும். ஆமென்.

நேச இயேசுவே, உம்மைப்பற்றிய பூரண சிநேகத்தை எனக்குத் தந்து, உமக்காக உமக்குள் நான் சாகும்படி கிருபைசெய்யும். ஆமென்.

எனக்காக சிலுவை சுமந்த இயேசுவே! உமக்காக நான் சுமக்கவேண்டிய சிலுவையை என்மேல் ஏற்றியருளும். அந்தச் சிலுவையை ஏந்தும்படி இதோ என் முதுகு குனிகிறது! ஆமென்.

ஆணிகளால் அசையாமல் தொங்கும் இயேசுவே, உமதுமேலுள்ள என் விசுவாசமும் அன்பும் அசையாதிருக்கும்படி அனுக்கிரகம் செய்யும்! ஆமென்.

ஞானப்பேழையே, தங்க இடமற்று, தாபரிக்க ஊர் அற்று பறந்துவரும் என் ஆத்துமாவுக்கு தேவரீருடைய திருவிலாவில் இடம் தாரும் ஐயா! ஆமென்.

பாவத்தால் நாவறண்டு மயங்கும் அடியேனுடைய ஆத்துமாவுக்கு கல்வாரிவெள்ளம் ஊற்றும் ஐயா! ஆமென்.

எல்லாப் பாடுகளையும் சகித்த பொறுமை நாதா! எனக்கு உம்முடைய பொறுமையில் ஒரு பங்கு தந்தருளும் சுவாமி. ஆமென்.

"தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்." ஆமென்.

பிரதான பாவியாகிய எனக்கு தேவரீருடைய சிலுவைப்பாடுகளின் வாழ்வனைத்தும் கிட்டும்படி இரக்கம் கிடைப்பதாக. ஆமென்.

ஜெபம்

என் இரட்சண்ய நேசரே! தேவரீருடைய சிலுவைக்கு முன்பாக, கண்தட்டி விழியாமல் என் ஆவியினாலே நோக்கிக்கொண்டு நிற்கிறேன். தேவரீருடைய இரத்தத்தை என்மேல் தெளித்து,

"என் இரத்தத்தால் சுத்தமானாய்"

என்று திருவுளம் பற்றியருளும். ஆமென்.

என் இராஜாவே, என் நேசரே, என் உயிரே, என் செல்வமே, என் ஆனந்தமே, தேவரீருடைய பாடுகளைக் குறித்து எழுதியிருக்கிற தியானங்களை அடியேன் பக்தியுள்ள மனசோடும், பரவசமாக்கப்பட்ட இருதயத்தோடும் வாசித்து, விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு, அன்பில் வேரூன்றி, பரிசுத்த குணங்களில் பெருகிப் பூரணப்படும்படி கிருபைசெய்யும். நான் தேவரீருடைய சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றைக் குறித்தும் மேன்மைபாராட்டாதிருப்பேனாக. ஆமென்.

இந்தத் தியானபோஜனம், எனக்குள்ளிருக்கும் பழைய ஆதாமை ஓட்டிவிட, அல்லது சாகப்பண்ணத் தக்கதாகவும் நான் பாவத்துக்கு விரோதமாக இரத்தம் சிந்தப்படுமட்டும் போராடத்தக்கதாகவும் வெற்றியடையத்தக்கதாகவும் என்னைப் பலப்படுத்துவதாக. ஆமென்.

இதோ, தேவரீருடைய சிலுவையின் அடியில் உட்காருகிறேன். உமது பாடுகளின் இரகசியமனைத்தையும் எனக்குக் காண்பித்து, அதின் பலன்களால் என்னை முடிசூட்டியருளும். ஆமென். ஆமென்!

8. தியான ஆலய எக்காளம்

எரேமியாவின் புலம்பல் 1: 12.

"வழியில் நடந்துபோகிற சகல ஜனங்களே, இதைக்குறித்து உங்களுக்குக் கவையில்லையா? கர்த்தர் தமது உக்கிரமான கோபமூண்ட நாளிலே என்னைச் சஞ்சலப்படுத்தினதினால் எனக்கு உண்டான என் துக்கத்துக்குச் சரியான துக்கம் உண்டோ என்று என்னை நோக்கிப் பாருங்கள்."

ஏசாயா 45: 22.

"பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள், அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்."

பரி. யோவான் 1: 29.

"இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி."

பிராகாரம்

1. இயேசுவின் ஜனனம்

வேதம்

“தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக் கொள்ளுகிறபடியே மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்” (1 தீமோ. 3: 16).

“நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத் தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்துக்குக் கீழான வருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்” (கலா. 4: 4, 5).

“பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்” (1 தீமோ. 1: 15).

“மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைப்பண்ணும்படிக்கும் அவர் மாம்சத்தையும் இரத்தத்தையுமுடையவரானார்” (எபி. 2: 14, 15).

“ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்” (யோவா. 1: 1, 14).

போதனை

தேவன் மனுஷனானார் என்ற வாசகத்தை, அச்சத்தோடுதான் சொல்லவேண்டும். ஏனெனில் தேவன் மனுஷன் ஆகவில்லையானால் அப்படிச் சொல்வது தேவ தூஷணமாகும். தேவன் மனுஷனானார் என்ற தொனியைக் கேட்டவுடனே, எந்த மனுஷனும், தேவன் மனுஷனாவாரா? தேவன் மனுஷனாகவேண்டுமா? தேவன் மனுஷ

ஞுரா? என்றிப்படி பல கேள்விகளைக் கேட்கத் துணிவது இயல்பு. இப்படிப்பட்ட கேள்விகளை மனதில் கேட்டுக்கொண்டேயிருக்கும்போது, தேவமகத்துவ தியானத்தால் மேற்கொள்ளப்பட்டு தேவன் மனுஷனாக மாட்டார். அப்படியவர் மனுஷனானதில்லை என்ற விபரீத கோட்பாட்டை மனதில் ஸ்தாபித்துக்கொள்ளலாம்.

இந்த இரகசிய சத்தியத்தை உணர்ந்து விசுவாசிக்க விரும்புகிற ஒரு மனுஷன், தேவனை நோக்கிப் பாராமல், மனுஷனை நோக்கிப் பார்க்கிறான். அப்படி நோக்கிப் பார்க்கும்போது மனுஷனுடைய பாவநிலைமையும், அவனுடைய இயலாமையும், அந்த இயலாமையை நிவிர்த்தி செய்ய இவ்வையகத்தில் யாதொரு வழியும், யாதொரு ஆளும் இல்லையென்று கண்டு ஐயோ நிர்ப்பாக்கியமான மனுஷன் நான்,

"எங்கே ஓடுவேன், பாதகன் நானே
தீமை எங்கும் என்னை மூட
ஆதரிக்க யாரால் கூடும்?"

என்று புலம்புகிறான். அச்சமயத்தில் "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்"; "ஆதித் திருவார்த்தை, அற்புத பாலகனாகப் பிறந்தார்" என்ற சத்தம் கேட்கிறான். உடனே அவன், இதை நான் விசுவாசிப்பேனாக; இந்த இரகசியமென்னவென்று நான் கேள்வி கேளாதிருப்பேனாக; கேள்விகேட்டு இரட்சண்யத்தை இழந்துபோகிறதைவிட, கேள்வி கேளாமல் இந்த இரகசியத்தைத் தேவதாபக்தியுடன் அங்கிகரிப்பேனாக என்று சொல்லி அடங்கிவிடுகிறான். இதுதான் இரட்சிப்புக்கேற்ற கீழ்ப்படிதலும், பிழைக்கும் புத்தியாயுமிருக்கிறது. வாசிக்கிறவனே, உன் சுபாவமும் இப்படியிருப்பதாக.

தேவன் தமது விஷயமாய் மனுஷனாக அவசரமுமில்லை, அப்படி மனுஷனாகவுமில்லை, நமது விஷயமாகவே மனுஷனானார் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

நாம் புத்திர சுவிகாரத்தை யடைய,
நம்மை நியாயப்பிரமாணத்திலிருந்து மீட்க,

பாவிகளாகிய நம்மை இரட்சிக்க,
நம்முடைய மரண அதிகாரியை அழிக்க,
நம்மை அடிமைத்தனத்திலிருந்து மீட்க,

தேவகிருபையையும் சத்தியத்தையும் போதிக்க, தேவன் மனுஷனானார். நமக்கென்று வந்தார் என்ற நியாயம் நமது விசுவாசத்துக்குப் போதுமானது; அப்படியானாலும் ஒப்புக்கொள்ளமாட்டேன் என்று ஒரு ஆத்துமா சொல்லுமானால் அது தன் இரட்சிப்பை இழந்து போவோம்.

தியானம்

தேவன் மனுஷனானார். ஆத்துமாவே, இதெவ்வளவு தாழ்வு! உன்னதமானவர் தாழ்ந்துபோனார்—பரிசுத்தர், என்னிமித்தம் பாவமானார்—அரூபவஸ்து ரூபமெடுத்தார்—சர்வவல்லபர் பலவீன மனுஷனானார்—சிருஷ்டிகர் சிருஷ்டியானார்—அளவில்லாதவர் அளவுக்குட்பட்டார்—சர்வவியாபி ஒரு கர்ப்பத்துக்குள் அடங்கினார்—நீண்ட ஆயுசுடையவர் ஆயுள் அளவுக்குட்பட்டார். இது அதிசயம்தான், இது இரகசியம்தான்.

தேவன் தமக்காக மனுஷனாகவில்லை—அவர் தமக்காக மனுஷனாகவேண்டியதுமில்லை—ஆத்துமாவே, அவர் எனக்காக என்னைப்போல மனுஷனானார். என்னிலுள்ள பாவம் ஒன்று தவிர மற்றெல்லாவற்றிலும் என்னைப்போலானார். அவர் என்னிமித்தம் தாழ்ந்து மனுஷனானார்.

"தாழ்ந்தார் அவர்
உயர்ந்தேன் நான்
இது உன்னத சிநேகம்தான்
இது அன்பின் ஆழத்தால்."

மனுஷஜாதி பாவம் செய்யுமுன் தூதர் ஜாதி பாவம் செய்தது. அந்தஜாதியை இரட்சிக்கும்படி தேவன் பிரயத்தனம் செய்யவில்லை. மனுஷஜாதி பாவம் செய்தவுடனே அவனை மீட்கும்படி தேவன் மனுஷனானார். தேவன் மனுஷனானதையிட்டு தேவதூதரும் பிசாசுக்களும் பொறாமைப்படலாம். பிசாசு நம்மைக் கெடுத்தான்; தேவன் நம்மை இரட்சித்தார்; தூதர் நமக்கு ஊழியக்காரரானார்கள்.

இதில் ஒரு கட்சியிருக்கிறது. சாத்தான் பந்தயம்போட்டு நம்மைப் பகைத்தான். தேவன் பந்தயம்போட்டு நம்மை நேசித்தார். இந்த நேசம் நமக்கு நன்ருகத் தெரியவரும் பொருட்டு அவர் நமது மாம்சத்தைப் போர்த்து, நமக்காக அவதாரமானுர்.

தேவன் மனுஷாவதாரமானது, அவருடைய பாடுகள் நமக்கு விளம்பரமான முதலாம் படி. தேவன் மனுஷணுகிறது எத்தனே பெரிய அவமானமும் பாடுமாயிருக்கிறது. அரசன் ஆண்டியாகிறதும்—பலவான் பலவீனனுகிறதும்—பணக்காரன் பிச்சையெடுப்பதும்—கல்விமான் பைத்தியக்காரனுய்த் திரிவதும் எவ்வளவு பாடு. ஐயோ அது பரிதாபமல்லவா? தேவன் மனுஷனுகிறது அவற்றிலும் பெரிய பாடு. தேவன் மனுஷனுனதால் அவருடைய அந்தஸ்து எவ்வளவு தாழ்ந்தது என்றும், அவருடைய சகவாசம் எவ்வளவு மாறிற்று என்றும், ஆத்துமாவே, சற்று தியானித்துப்பார்.

இயேசு உலக தோற்றத்துக்குமுன் நம்முடைய இரட்சகராக ஏற்பட்டுக்கொண்டதில் அவருடைய பாடுகள் ஆரம்பித்தபோதிலும், மனுஷாவதாரமானது முதல்தான் அது சகல சிருஷ்டிகளுக்கும் தெரியவந்தது. என் இயேசுவே, தேவரீருடைய மனுஷாவதாரத்தால் உலகத்துக்கு வாழ்வும் பரலோகத்துக்குத் தாழ்வும் நேரிட்டது. உமது பிதா தமது மகனே இழந்தார்—மகன் தமது பிதாவை இழந்தார்—தூதர் தங்கள் அரசனே இழந்தார்கள்—அரசன் தமது பாடகரையும், பவுஞ்சையும் இழந்தார்—பூலோகம் பரலோகமாயிற்று. பாவிகளுக்கு யோகம் பிறந்தது, அவர்கள் மீட்பர் தோன்றினுர். ஆத்துமாவே, இயேசுவின் அவதாரத்தால் பரலோகத்திற்குண்டான தாழ்வைப்பற்றியல்ல, உனக்குண்டான வாழ்வைத் தியானித்து அந்த இரட்சகரைப் போற்றுவாயாக. உன்னே தேவபுத்திரனுக்க அவர் மனுபுத்திரனுனுர். உன்னேப் பிசாசின் அடிமைத்தனத்திலிருந்தும், பாவத்தினின்றும் பாவத்தின் தண்டனேயாகிய மரணத்தினின்றும் மீட்டு இரட்சிக்கும்படி தேவன் இயேசுவானுர்.

ஜெபம்

அன்புள்ள பிதாவே, தேவரீர் எங்களை நேசிக்கும்படி துணிந்தபோது பரிபூரணமாக நேசித்தீர். இயேசுவை உமது சொந்தக்குமாரனென்றும் பாராமல் எங்களுக்காக அவதாரமெடுக்கச் செய்தீர். உம்முடைய ஆழ்ந்த அன்புக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். அவருடைய மனுஷாவதாரத்தினிமித்தம் அடியேனுக்கு புத்திர சுவிகாரத்தையும் மற்றெல்லாப் பரம வாழ்வையும் தந்தருளும். அவர் மனுஷனாகும்படி எத்தனை பரம வாழ்வுகளை வெறுத்தாரென்று காண்கிறேன். நான் தேவனுடைய புத்திரனாகும்படி உலகத்தையும் அதிலுள்ள வாழ்வனைத்தையும் குப்பையென்று தள்ளிப்போட வல்லமை தாரும். உமது குமாரனுடைய மனுஷாவதாரத்தினிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

2. இயேசுவின் விருத்தசேதனம்

வேதம்

"பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ணவேண்டிய எட்டாம் நாளிலே, அது கர்ப்பத்திலே உற்பவிக்கிறதற்கு முன்னே தேவ தூதனால் சொல்லப்பட்டபடியே, அதற்கு இயேசு என்று பேரிட்டார்கள்" (லூக். 2: 21).

போதனை

மனுஷன் பாவம் செய்த காலமுதல், நமதுமேலுள்ள அன்பால் தேவன் நம்மைத் தம்மோடு சம்பந்தப்படுத்திக்கொள்ளும்படி பல உடன்படிக்கைகளை ஸ்தாபித்தார். அவைகளில் சில தற்கால உடன்படிக்கைகளாயிருந்தாலும், ஏழு உடன்படிக்கைகள் நித்திய உடன்படிக்கைகளாயிருந்தன. அவையாவன:—

1. வானவில் உடன்படிக்கை (ஆதி: 9: 6).
2. விருத்தசேதன உடன்படிக்கை (ஆதி. 17: 3).
3. சந்தான உடன்படிக்கை (ஆதி. 17: 9).
4. அப்ப உடன்படிக்கை (லேவி. 24: 8).
5. இராஜ்யபார உடன்படிக்கை (2 சாமு. 23: 5).

6. கிருபையுடன்படிக்கை (ஏசா. 55: 3).

7. பாவநிவாரண உடன்படிக்கை (எபி. 13: 20). இவ்வேழு உடன்படிக்கைகளும், சுவிசேஷ மார்க்கத்தோடு சம்பந்தப்பட்டவைகளானதால், அவை நித்திய உடன்படிக்கைகளாயிருக்கின்றன.

இவைகளில் ஒன்றாகிய விருத்தசேதன உடன்படிக்கையானது, நமது இருதயத்தின் நுனித்தோல் சுன்னத்துப்பண்ணப் படவேண்டும் என்ற ஞானசத்தியத்தை உணர்த்தினது. அதாவது நம்முடைய ஆத்துமாவும் சரீரமும் உலகத்துக்கும் மாமிசத்துக்குமுரிய துர் இச்சைகள் எல்லாவற்றையும் களைந்துவிடவேண்டும் என்று உணர்த்தினது.

ஒரு மனுஷன் தன் அவயவத்தின் ஒரு பாகத்தை மனதார அறுத்தெடுத்துவிடுகிறது எப்படி அவனுக்கு ஒரு பாடுபடுதலாகுமோ, அப்படியே அவன் தனக்குச் சொந்தமான பாவச் சுபாவங்களை களைந்துவிடுகிறது அவன் மனதுக்கு வருத்தமும் பாடுமாயிருக்கிறது. ஆனாலும் அப்படிக் களைந்துவிடாத பட்சத்தில் தேவனோடு உடன்படிக்கைக்குட்பட ஏதுவில்லை.

இதை உணர்த்தும் விருத்தசேதனத்தை இயேசு பெற்றபோது, தேவசுபாவமும், மனுஷசுபாவமும் பொருந்திருந்த அவருடைய திருமேனியில், ஒருபாகம் வெட்டப்பட்டு, இரத்தம் சிந்தினது. அந்த வெட்டும் அதால் விழுந்த இரத்தச் சொட்டுகளும், நமக்கும் தேவனுக்கும் ஒரு புது உடன்படிக்கை உண்டுபண்ணப்படுகிறதில் அச்சாரமாயிருந்தது. ஏனெனில் இயேசு தேவனும் மனுஷனுமாயிருந்தார். இயேசுவின் விருத்தசேதன இரத்தமாகிய அச்சாரத்தால் ஆரம்பிக்கப்பட்ட புதிய உடன்படிக்கையானது, கல்வாரிச் சிலுவையிலிருந்து புரண்ட இரத்தப்பிரளயத்தால் முற்றுப்பெற்றது.

தியானம்

ஆத்துமாவே, உன் மீட்பர் எவ்வளவு இளமையில் உனக்காக இரத்தம் சிந்துகிறாரென்று கவனிப்பாயாக,

உன் கண்களுக்கு அவர் எட்டுநாள் சிசுமாத்திரம். தேவனுடைய கண்ணுக்கோ அவர் நீண்ட ஆயுசுள்ளவர். அந்த மாம்ச விருத்தசேதனத்தில் இயேசு அழுதார், அங்கலாய்த்தார், காயப்பட்டார். ஆ, நீ உன் பாவங்களைக் களைந்துவிடுவதில் எவ்வளவு வருத்தமிருந்தாலும், அதற்காக உன மாம்ச உறுப்புகளில் ஒன்று சிதைவுபட்டு இரத்தம் சிந்தவேண்டியதாயிருந்தாலும், நீ பொறுமையோடு சம்மதிக்கவேண்டுமென்பதை அது உணர்த்துகிறதல்லவா? உன் கையாவது, காலாவது உனக்கு இடறலுண்டுபண்ணினால் அதைத் தறித்தெறிந்துபோடு; உன் கண் உனக்கு இடறலுண்டுபண்ணினால் அதைப் பிடுங்கி எறிந்துபோடு என்று இயேசு பிற்காலத்தில் இரண்டுதடவை போதித்ததை, இந்தச் சிசுப்பிராயத்தில், தாமே திருஷ்டாந்தப்படுத்திக் காட்டுகிறது போலிருக்கிறது. (மத். 5: 29, 30; 18: 8, 9).

ஆத்துமாவே, உன் இயேசு எட்டாம் நாளில் விருத்தசேதனம் பெற்றார். உனக்கு இப்போது வயசென்ன?— இத்தனை வயசாகியும் நீ விருத்தசேதனம் பண்ணப்படாத காரணமென்ன?—நான் யூதனல்ல—நான் மகம்மதியனல்ல என்கிறாயோ?—நான் மாம்ச விருத்தசேதனத்தைப்பற்றி உன்னோடே பேசவில்லை. ஆவிக்குரிய மெய்யான விருத்தசேதனத்தை நீ இத்தனை வயசுடையவனாகியும் பெற்றுக்கொள்ளாமலிருக்கிறாயே; அது ஏன்? உன் மாம்ச இச்சை வரவர வளர்ந்துவருகிறது. உன் கண்களின் இச்சை முற்றிப்போயிற்று.—உன் ஜீவனத்தின் பெருமை பெருகிவிட்டது. அது ஏன் அப்பா! நீ ஆவிக்குரிய விருத்தசேதனத்தைப் பெறுமட்டும் இரட்சண்ய உடன்படிக்கைக்குட்பட்ட புத்திரனாகமாட்டாய். கட்டுக்குட்படாத பிள்ளை காட்டுப்பிள்ளை. என்றென்றைக்கும் நீ காட்டுப்பிள்ளையாய்க் காலம் கழித்தால் கர்த்தருடைய ஆசீர்வாதங்களுக்கெல்லாம் அந்நியனாவாய். எனக்கு விருத்தசேதனம் செய்வார் ஒருவருமில்லை என்கிறாயோ? இது வீண்போக்கு. நான் ஆவிக்குரிய விருத்தசேதனம் பெறவேண்டுமென்று நீயே அடிக்கடி பரிசுத்த ஆவியாகிய ஆசாரியனைக் கூப்பிட்டதுண்டு. அவரும் வந்ததுண்டு.

அவர் இயேசுவின் சிலுவையின்மேல் உன்னைக் கிடத்தி, உன் ஆவியிலுள்ள கள்ளச் சதைகளையெல்லாம் அறுத்து, ஞானவிருத்தசேதனத்தை உனக்குள் செய்யும்படி தமது ஆயுதப்பெட்டியைத் திறந்தவுடனே, ஆ, இவர் என்னைக் குணமாக்கவல்ல கொல்லப்போகிறாரென்று சொல்லி, அவரையும் அவமானமாகப்பேசி, ஓடிப்போனகொழுத்த பாவியல்லவா?—நான் காரியத்தைத் திறந்து சொல்லு கிறதையிட்டு நீ கூச்சப்படவும்வேண்டாம், என்மேல் எரிச்சல் படவும்வேண்டாம். உன் இருதயத்தின் நுனித் தோல் சுன்னத்துப் பண்ணப்படுமட்டும் நீ இஸ்ரவேலன் அல்ல—நீ கிறிஸ்தவனல்ல—நீ உடன்படிக்கைக்குட்பட் டவனுமல்ல.

ஆத்துமாவே, இப்பொழுது நீ செய்யவேண்டிய தென்ன? அதே ஆசாரியனை மறுபடியும் கூப்பிடு. உனக்கு ஆவிக்குரிய விருத்தசேதனத்தைத் தர வேண்டிக்கொள் வாயாக. உன் வயசைக் கவனியாதே. உன் ஆசாரியன் வயசையும் உன் வயசையும் சராசரி பார்த்தால், நீ இன்னும் பிறவாத கர்ப்பப்பாலன்தானே மறுபடியும் பிறவாதவன், நாளையும் வயசையும் சொல்லித் திரிகிறதில் லாபமென்ன?

ஆத்துமாவே! மோசேயின் மனைவியாகிய சிப்போ ராள் தன் மகனை ஒரு கருக்கான கல்லாலே விருத்தசேத னம்பண்ணின வரலாறு தெரியுமே. அவள் தன் குமாரனை விருத்தசேதனம் பண்ணி, அதை அவன் கால்களுக்கு முன்பாக எறிந்து, நீர் என்னுடைய இரத்தசம்பந்த மான புருஷன் என்று சொன்னாள். இதோ, இயேசு தமது விருத்தசேதன இரத்தத்தோடு உன்னைச் சமீபித்து நான் உன்னுடைய இரத்தசம்பந்தமான மாப்பிள்ளை யாயிருக்கிறேன் என்கிறார். அவருடைய ஞான விவாகத் துக்கு இதே மாதிரிப்பெண் வேண்டியது. நீ சுன்னத்தில் லாத பெலிஸ்தனாயிருந்தால் அவருக்கு மணவாட்டியாக முடியாது. ஆதலால் நீயும் ஆவிக்குரிய விருத்தசேதனத் தைப் பெற்றுக்கொண்டு அவரிடம் போய், நான் உம் முடைய இரத்தசம்பந்தமான பெண் என்று சொல்லு.

பரிசுத்த ஆவியாகிய ஆசாரியன் கல்வாரி மலைக்கல்லால் செய்யப்பட்ட கத்தியைக்கொண்டு (இயேசுவின் பாடுகளின் வரலாறு) உன்னை விருத்தசேதனம் செய்வாராக.

ஜெபம்

"துதிக்கப்படத்தக்க உமது திருக்குமாரன் விருத்தசேதனம் பெற்று, மனிதருக்காக நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியும்படிச் செய்தருளின சர்வவல்லமையுள்ள தேவனே! எங்கள் இருதயமும் எங்கள் அவயவங்கள் யாவும் உலகத்துக்கும் மாமிசத்துக்குமுரிய துர் இச்சைகளெல்லாவற்றுக்கும் மரிக்கவும், நாங்கள் எந்தக் காரியங்களிலேயும் உமது திருச்சித்தத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும், ஆவிக்குரிய மெய்யான விருத்தசேதனத்தை அருளிச்செய்யவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்."

3. இயேசு பிசாசால் சோதிக்கப்பட்டது

வேதம்

"இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார்" (மத். 4: 1).

"அவர் வனாந்தரத்திலே நாற்பதுநாளிருந்து, சாத்தானால் சோதிக்கப்பட்டு, அங்கே காட்டுமிருகங்களின் நடுவிலே சஞ்சரித்துக்கொண்டிருந்தார். தேவதூதர்கள் அவருக்கு ஊழியஞ்செய்தார்கள்" (மாற். 1: 13).

"பிசாசானவன் சோதனையெல்லாம் முடித்தபின்பு, சிலகாலம் அவரைவிட்டு விலகிப்போனான்" (லூக். 4: 13).

"நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்" (எபி. 4: 15).

"அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்" (எபி. 2: 18).

போதனை

இயேசுவின் ஜீவியம் முழுவதும், அவருக்குப் பாடாகவே யிருந்தது. அவர் மரியம்மாளுடைய கர்ப்பத்துக்குள் அடங்கியிருந்ததும், பிறந்ததும், சிசு பருவம் கடந்ததும் அவருக்குப் பாடுதான். அவர் எகிப்துக்குப் போனதும், அவருக்காக பாலகர் மாண்டதும் அவருக்குப் பாடுதான். அவர் விருத்தசேதனம் பெற்றதும், தச்சுவேலை செய்ததும், தீட்சை பெற்றதும் பாடுதான். அவருடைய ஜீவியத்தில் இன்னது பாடுகள் இன்னது பாடுகளல்ல என்று பிரிக்க ஏதுவில்லை.

பரிசுத்தமுள்ள இயேசு பாவிகள் நடுவில் சஞ்சரித்ததும், அவர்கள் போஜனத்தை உண்டு, அவர்களுடன் சகவாசம் செய்ததும் பாடுதானே. அவருடைய சந்நியாச ஜீவியம், பசிகள், தாகங்கள், ஆயாசங்கள் இவையனைத்தும் பாடுகள்தானே. மனுஷ இரட்சிப்பைப்பற்றி அவருக்கிருந்த கவலை, பாடுபட அவருக்கிருந்த வாஞ்சை, அவர் கண்ணுற்ற மனுபுத்திரரின் பாவங்கள் இவையெல்லாம் பாடுகள்தானே.

இந்த எல்லாப்பாடுகளோடும் வெளியரங்கமாய் துஷ்டராலும், அந்தரங்கமாய் சாத்தானாலும் உண்டான சோதனை அவருடைய மனதின் பாடுகளை அதிகப்படுத்தின. பரிசேயர் அவரைச் சோதித்தார்கள் (மத். 19: 3), நியாய சாஸ்திரிகள் அவரைச் சோதித்தார்கள் (மத். 22: 35), வந்தவர்களெல்லாரும் அவரைச் சோதித்தார்கள் (மாற். 10: 2).

பிசாசுகளும் அவரைச் சோதித்தன. இது இயேசுசுவாமிக்கு வந்த எல்லாப்பாடுகளிலும் கனத்த பாடாக இருந்தது. மனுஷரில் பலரால் வந்த சோதனைகள், பரியாசப் போங்கையும் பரீட்சைப் போங்காயுமிருந்தன. சாத்தானுடைய சோதனையோ, ஒரு கட்சியாயும் யுத்தமாயுமிருந்தது. இந்தச் சோதனையை அவர் நகட்டி

விட்டால் சாத்தான் பழிப்பான்; மேலும் அவன் அவமானமடையவுமாட்டான். அவனை அவமானப்படுத்தவும், அவனுடைய தந்திரங்கள் தம்மிடத்தில் செல்லாதென்று ரூபிக்கவும் அவர் மனோராசியாக, அவனுடைய சோதனைகளாகிய பாடுகளைப் பட்டார். பரிசுத்தராகிய தம்முன் பிசாசு நிற்பதே அவருக்கு ஒரு பெரிய மனவேதனையாயிற்றே. அவன் சோதிப்பது எவ்வளவு அதிக மனவேதனையான பாடாகவிருக்கும்; என்றாலும், சாஸ்திரம் கூறுகிறபடி "அவர் தாமே சோதிக்கப்பட்டு, பாடுபட்டதினாலே சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்" என்ற சத்தியம் விளங்கும்படி அதற்குட்பட்டார்.

தியானம்

இயேசு சாத்தானால் சோதிக்கப்பட்டார் என்ற சத்தம், தேவனைப் பிசாசு சோதித்ததாம் என்று சொல்லுகிறதற்கு சமம்தானே. தேவனைப் பிசாசு சோதிக்கப்படவேண்டுமானால் அது அவருக்குப் பாடுதானே.

சாத்தான் தேவனுடைய சிருஷ்டிதானே; சிருஷ்டி, சிருஷ்டிகரைச் சோதித்தால் அது பாடுதானே. இந்தச் சாத்தான் யாரால் சாபம் பெற்றானோ, யாரால் சிட்சிக்கப்பட்டானோ, அவரைச் சோதிக்கவேண்டுமானால் அது பாடுதானே. இந்தச் சாத்தான்கள் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு, இதே தேவகுமாரன் முன் சாஷ்டாங்கம் பண்ணிப் பணிந்து வணங்கிப் பாடினதுபோக, இப்போது நேர்நேராக வந்து, சம அந்தஸ்துப் பாராட்டி பல கேள்விகளைக் கேட்பது பாடு அல்லவா?

ஆத்துமாவே, தேவகுமாரன் இட்டவேலையைத் தட்டாமல் செய்துவந்த இந்த ஜீவன்கள், இப்போது தங்களுடைய சொந்தக் குற்றத்தினிமித்தம் தள்ளுண்ட ஸ்திதியிலிருக்கிறபோது, தங்கள் எஜமானையே சோதிக்கத் துணிகிறது, அந்த எஜமானுக்குப் பாடு அல்லவா? இரட்சகா, உம்மைக் கும்பிட்டவனும், உமது வேலையைச் செய்தவனும், உம்முடைய சிருஷ்டியும் உம்மைச் சோதிக்கத்துணிந்தது என்ன அக்கிரமம்! என்ன அநியாயம்!!

தேவரீர் தெய்வத்தில் தெய்வமும், ஜோதியில் ஜோதியும், மெய்த்தேவனில் மெய்த்தேவனுமாயிருக்கிறீர் என்று அந்தச் சாத்தான் அறியவில்லையோ? "இவர் என்னுடைய நேசகுமாரன்" என்ற வான அறிக்கையை இந்தப் பிசாசு கேட்டும், "நீர் தேவனுடைய குமாரனேயானால்" என்று கேட்கிறது மனதில் எவ்வளவு வருத்தத்தை யுண்டாக்கவேண்டியது.

இரட்சகா! இவ்வண்ணம் சாத்தான் உம்மைச் சோதிக்கும்படி துணிந்ததென்ன? ஒருவேளை நீர் மனுஷவதாரமெடுத்தபோது, உமக்குள்ளிருந்த தெய்வத்துவத்தின் அளவு இவ்வளவென்று அறியாமல் அதை அளந்து பார்க்கப் பிரயாசப்பட்டானோ? ஒருவேளை, இந்த இயேசு கன்னிமரியாள் கர்ப்பத்துக்குள் அமைந்தவர்தானே—அவளுடைய பாலால் வளர்ந்தவர்தானே—இவருடைய பரிசுத்தம் பழைய ஆதாமின் பாவமில்லா ஸ்திதிக்கு தாழ்வாகத்தானே இருக்கும்—அவனை மடக்கிப்போட்டோமே—இவர் எம்மாத்திரம் என்று நினைத்தானோ?

இயேசு. இல்லையப்பா—இல்லையப்பா—இந்தச் சாத்தானுக்கு எல்லாம் தெரியும்—ஆதி வாக்குத்தத்தமுதல் இவன் தினந்தோறும் பரலோக பிரயாணம் வந்து அவ்விடத்து நடபடிகளை யெல்லாம் அறிந்தவன்தான்—இவன் தன் சோதனையாகிய பாடுகளால் என்னை வருத்தப்படுத்தவே வந்தான்—இவன் என்னைப் பரியாசம் பண்ணவே வந்தான்—இவனை நான் முதலாவது ஜெயம் கொள்ளாதபட்சத்தில் உன் மீட்புக்குரிய என் வேலையை ஆரம்பிக்கவே கூடாதென்பது பிதாவின் சித்தமாயிருந்தது. நான் தீட்சை பெற்றவுடனே, பரிசுத்த ஆவியானவர் இந்தப் போருக்கு முதலாவது என்னை நடத்தினார். பூதகணமனைத்தும் ஒன்றுகூடத்தக்க ஒரு வனத்துக்குப் போனேன். பலத்தினாலும் பராக்கிரமத்தினாலுமல்ல, என் பலவீனத்தாலும் பசியாலும் பிசாசை மேற்கொள்வேன் என்று நான் நாற்பதுநாள் பசியாயிருந்தேன். என்னுடைய பலவீனம் சாத்தானுடைய பலத்திலும் பல

முள்ளதென்று காட்டினேன்; என்றிப்படி என் ஆத்தும நேசர்: சங்கதியை விளக்கிக் காட்டுகிறார்.

என் ஆத்துமநேசரே, நீரே பராக்கிரமர்—நீர் எனக்காகக் காட்டு மிருகங்களின் நடுவில்—ஒரு வனாந்தரத்தில்—நாற்பது நாள் பசியும் உபவாசமும் அனுபவித்ததுமன்றி, சாத்தானால் பாடுபட்டீர். மனுஷருடைய பாடுகள் ஆரம்பிக்குமுன் ஆவிகளின் பாடுகள் உமக்குண்டானது. "ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ! அவனைத் தூக்கிவிடத் துணையில்லையே'' என்று ஞானியார் சொன்னார். ஆனால் நீர் ஒண்டியாயிருந்தாலும் விழமாட்டீர்—நீர் விழவில்லை. ஏனெனில் நீர் தேவன்.

பிதாவே, இப்படி உமது குமாரனைக் காட்டுமிருகங்களோடு சஞ்சரிக்கப்பண்ணின இரகசியமென்ன? முன்னொருகாலத்தில் அழிம்புசெய்த நேபுகாத்நேச்சாரை வெளியின் மிருகங்களோடே சஞ்சரிக்கச் சபித்தீர். ஆ, பிதாவே! என் மீட்பர் செய்த அழிம்பென்ன?—அவர் காட்டின கர்வமென்ன? உம்முடைய தற்சொரூபமாயிருந்த அவர் அடிமையின் ரூபமெடுத்து மனுஷசாயல் மட்டும் தாழ்ந்தாரே!!

ஆதாமின் மகனே, ஏவாளின் மகளே, அபயமிடாதே—அங்கலாய்க்காதே—உன்னை மீட்கவேண்டுமானால், முதலாவது உன் சத்துருவை மடக்கவேண்டும். ஆகவே என்னுடைய குமாரனுக்கு முதலாவது அந்த வேலையைக் கொடுத்தேன். அவர் தமது உபவாசத்தாலும் பசியாலும் பலவீனமடைந்து அவனை மேற்கொண்டதுபோல் நீயும் எவ்வளவு பலவீனத்திலும் என் குமாரனுடைய பலத்தைக்கொண்டு அவனை எதிர்த்து வரவேண்டும் அப்பா!

பிதாவே, என் பலவீனத்திலும் அவனை எதிர்க்க ஆசைதான். ஆனால் அவன் தன் ஆறு செட்டைகளோடு வந்தவுடனே நான் பிரமித்து மயங்கிவிடுகிறேன். ஏனெனில் இதுவரையும் இரண்டு செட்டையுள்ள பட்சி ஜாதிகளை மாத்திரம் நான் கண்டவன். ஆறு செட்டையுள்ள அழிம்பனைக் கண்டவுடன் பயப்படுகிறேன்.

பயப்படாதே பாவியே, உன் பயமே உன்னை நஷ்டப் படுத்துகிறது—அவன் செட்டையனைத்தையும் தேவ குமாரன் ஒடித்துப்போட்டார்—அதின் இறகுகளையும் பிடுங்கிப்போட்டார். அவன் ஒடிந்த சிறகை ஆட்டி ஆட்டி ஆட்களைப் பயப்படுத்துகிறதுண்டு, அப்போது அப்பாலே போ சாத்தானே என்ற மந்திரவாளை வீசு; பிசாசுக்கு எதிர்த்துநில். அப்பொழுது அவன் உன்னை விட்டு ஓடிப்போவான்.

ஜெபம்

என் சேனுவீரராகிய இயேசுவே, தேவரீரைச் சோதிக்கும்படி அஞ்சாமல் வந்த சாத்தான் என்னை விடமாட்டான் என்பதை நீர் அறிவீர். பாவமில்லாமல் சிருஷ்டிக்கப்பட்ட ஆதி மனுஷனுக்கு, சுயாதீனசித்தம் ஒன்றிருக்கிறதென்று கண்டு, அதைக்கொண்டு அவனைக் கெடுத்து விட்டதையும் நீர் அறிவீரே. அதே சுயாதீன சித்தத்தோடும், பாவத்தோடும் பிறந்த என்னை அவன் எவ்வளவு இலேசாக சோதனைக்குட்படுத்தக் கூடும்! அவன் உமது பரிசுத்த சரீரத்தின் உறுப்புகளாகிய வயிற்றையும், கண்ணையும், காலையும்கொண்டு, அவநம்பிக்கை, இச்சை, பெருமையாகிய பெரியபாவங்களில் விழத்தட்ட சாமர்த்தியம் பண்ணினுனே, என்னை—ஆ, பாவச்சரீர உறுப்புகளுடைய என்னை அவன் கவிழ்த்துப்போடுவது எவ்வளவு இலேசு. இரட்சகா, எனக்குத் துணையாக வாரும்; நான் உம்மை நேசிக்கும்படி ஆசைப்படுகிறதையும், அந்த நேசம் தாழ்வடையும்போது கவலைப்பட்டு முயற்சிசெய்வதையும் தேவரீர் அறிவீர். அவனுேடு நான் அடிக்கடி போராடி அபஜெயமடைந்துபோனதுண்டு. தேவரீருடைய சிலுவையண்டை நான் வரும்படி பயணப்படும் பொழுதெல்லாம் அவன் என் காலை முடக்கிப்போடுகிறுன். உம்மை என் நேசத்தால் கட்டியணைக்க வரும்போது என் கைகளை வெட்டிப்போடுகிறுன். தூரத்திலிருந்து உம்மை ஏறிட்டுப்பார்க்கும்படி என் கண்களைத் திறந்தால், அதைக் குருடாக்கிவிடுகிறுன். மனதிலும் உம்மை நினைக்கவிடாதபடி, அதைப் பலவித இச்சைகளால்

கெடுத்துப்போடுகிறான். சாத்தானை ஜெயித்த இயேசுவே, நீர் வென்றபடி நானும் அவனை வெல்லுகிறதற்கு எனக்காக யுத்தம் செய்தருளும்; விசேஷமாய் என்னை ஆண்டு கொள்ளும் [இவ்விடத்தில் அந்தப் பாவங்களின் பேரைச் சொல்லு.] இந்தப் பாவச் சங்கிலியிலிருந்து என்னை விடுதலையாக்கியருளும். தேவரீருடைய பசியினிமித்தமும், உபவாசத்தினிமித்தமும், சோதனையினிமித்தமும் எனக்குச் சகாயம் செய்தருளும். ஆமென்.

4. இயேசு தமது பாடுகளைப்பற்றி அறிவித்தல்

வேதம்

"சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும் தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு உயர்த்தப்படவேண்டும்" (யோவா. 3: 14, 15).

"இயேசு, தாம் எருசலேமுக்குப் போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு மூன்றாம்நாளில் எழுந்திருக்கவேண்டுமென்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத்தொடங்கினார்" (மத். 16: 21).

"அவர்கள் கலிலேயாவிலே சஞ்சரிக்கும்போது, இயேசு அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக் கொடுக்கப்படுவார். அவர்கள் அவரைக் கொலைசெய்வார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார் என்றார்" (மத். 22: 23).

"இதோ, எருசலேமுக்குப் போகிறோம்; மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக்கொடுக்கப்படுவார்; அவர்கள் அவரை மரணாக்கினைக்குள்ளாகத் தீர்த்து, அவரைப் பரியாசம் பண்ணவும், வாரினால் அடிக்கவும், சிலுவையில் அறையவும் புறஜாதியாரிடத்தில் ஒப்புக்கொடுப்பார்கள் என்றார்' (மத். 20: 18, 19; மாற். 9: 32–34; லூக். 18: 31, 34).

போதனை

இயேசு பல ஞான போதனைகளைச் சொல்ல ஆசைப் பட்டது போல, தமது பாடுகளைப்பற்றிச் சொல்லவும் ஆசைப்பட்டார். அநேக ஆண்டுகளுக்குமுன், தீர்க்க தரிசிகள் அப்பாடுகளை முன்னறிவித்திருந்தாலும், அவை யனைத்தையும் யூதர் மறந்துபோனார்கள். ஆதலால் தாமே அவைகளை நினைப்பூட்டவேண்டியதென்று நினைத்தார். இதைப்பற்றிய முதலாம் அறிவிப்பை நிக்கொதேமிடத் தில் சொன்னார் (யோவா. 3: 14, 15).

அப்பால் யூதேயாவிலுள்ளவர்களுக்குத் தமது சரீரத்தை ஆலயத்துக் கொப்பிட்டு அது இடிக்கப்படும் என்று உணர்த்தினார் (யோவா. 2: 19). கலீலேயாவிலே அதே சத்தியத்தை யோனாவின் அடையாளத்தை வைத் துப் பேசினார் (மத். 12: 39). இப்படி உவமானித்துச் சிலகாலம்சொன்னவர் செசரியாவின் திசைகளில் திரிந்த போது அதைத் தெளிவாகப் பேசினார். அவர் மறுரூப மகிமையிலிருந்து திரும்பிவந்தபோதும் அதை மறந்து போகவில்லை (மத். 17: 9).

ஆகவே இயேசு அநேக தடவைகளில் தமது பாடு களைப்பற்றி முந்தியே அறிவித்துவந்தார். தாம் பாடு படும் இடம், காலம், தம்மைப் பாடுபடுத்துகிறவர்கள், அப்பாடுகளின் விபரம் எல்லாவற்றையும் திறந்து சொன்னார். இவ்வளவும் அவருக்குத் தெரிந்திருந்தது. சத்துருக்கள் இன்னின்ன பாடுகளை அவருக்குச் செய்ய வேண்டுமென்று ஆலோசிக்கு முன்னமே, தாமாக எல்லா வற்றையும் அறிந்திருந்து அறிவித்தார்.

தியானம்

இயேசுவே, தேவரீர் உமது பரிசுத்த ஊழியத்துக் குட்பட்டதுமுதல், உமது அநாதி பூர்வோத்ரத்தைப் பற்றியாவது, உமது மகத்துவங்கள் அதிகாரங்களைப் பற்றியாவது ஒன்றும் பேசாமல் எனக்காக நீர் படப் போகிற பாடுகளைப்பற்றி, அடிக்கடி பேசும்படி ஆசைப் பட்டீர். யூதர் உம்மை இராஜாவாக்க ஆயத்தப்படுகிற போது, நீர் மறைந்துகொள்ளுகிறீர். எனக்காகப் பாடு

படவோ விரைந்துபோகிறீர். உம்முடைய பாடுகளை வாயால் சொல்லிக்கொள்வது உமக்கே ஆனந்தமாயிருக் கிறது! இது என்மேலுள்ள நேச ஆனந்தமல்லவோ!

"இதோ எருசலேமுக்குப் போகிறோம்; அங்கே எனக்கு மரணக்கினைத் தீர்ப்புவரும்—என்னைப் பரியா சம் பண்ணுவார்கள்—வாரினால் அடிப்பார்கள்—சிலுவை யில் அறைவார்கள்" என்கிறீரே. இதை உமக்குச்சொன் னது யார்? ஒரு வேவாள் உமக்குண்டோ? உமது தெய் வீகமே அந்த வேவாள். நீர் இவ்வளவு சம்பவிக்கும் என்று உலகத் தோற்றத்துக்குமுன்னே அறிந்திருக்கிறீர். இரட்சகா, நீர் தேவன், நீர் என்னை இரட்சிக்கும்படி மனுஷனானீரேயன்றி வேறல்ல.

"இதோ எருசலேமுக்குப் போகிறோம்" என்று விளம் பும் இயேசுவே! உமது மனம்போல விரைந்து நடந்து போம். நான் உம்மை நிறுத்தவும்மாட்டேன்—நீர் போகவேண்டாமென்று தடுக்கவும்மாட்டேன்—போம் நேசரே, விரைந்துபோம்—ஆனால் என்னைப் பிந்தவிட்டு நீர் விரைந்து நடந்தால் என் வாழ்வு கெடும். எனக்காகச் சிலுவையை நாடும் நேசரே, என்னையும் சற்றே நாடும். நான் உம்மோடு விரைந்து நடக்க ஆசைப்பட்டும், சாத் தான் என் காலில் சங்கிலி மாட்டியிருக்கிறதையிட்டு என் நடை பிந்துகிறது. உமது நேசக்கயிற்றால் என் இடுப்பில் கட்டி என்னை இழும். அல்லவென்றால், என்னை உமது முதுகின்மேலாவது, தோளின் மேலாவது தூக்கி ஏற்றிக் கொண்டுபோம்.

ஆ, பாவியாகிய என்னை மீட்கவா இப்படி ஓடுகிறீர்? ஆ தெய்வீக இரட்சகா! என்மேலுள்ள நேசம் உம்மைத் துரத்துகிறது! குற்றமில்லாத தேவ ஆடே, கொலைக்களத் துக்கேகும் பரிசுத்த பலியே! என் பாவநிவாரணபலியாக நடவும்! நேசவைத்தியரே, என் பாவநோய் தீருவதற் கேற்ற இரட்சண்ய தைலத்தை ஆயத்தப்படுத்துமையா! பட்சமுள்ள மேய்ப்பரே, உம்முடைய ஆடுகளுக்காக உமது திருச்சீவனைக் கொடுத்தருளும். பரிசுத்த சுதனே, உமது பிதாவின் சித்தத்தைப் பூரணமாக நிறைவேற்றி

யருளும்; பழுதுபட்ட அவருடைய மகிமையைச் சரிப்படுத்தியருளும். இரட்சிப்பின் அதிபதியே, உமது பாடுகளின் இருண்ட பள்ளத்தாக்கைக் கடந்து, நச்சுப்பானத்தைக் குடித்து, செந்நீர்த் தடாகத்தில் ஸ்நானம்பண்ணும். என்னை மீட்கும் இந்த நாளுக்காகக் காத்திருந்தீரே; எனக்காகச் சாகும் நாளை விரும்பினீரே! உமக்கு ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம்!

ஜெபம்

என்னுடைய வணக்கத்துக்குப் பாத்திரரான இயேசுவே! உம்முடைய அன்பின் சமுத்திரக்கரையில் என்னைக் கொண்டுவந்ததற்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். தேவரீர் என்னைமீட்க விரைந்துபோனது, நான் பாவங்களைச் செய்யும்படி விரைந்துபோனதிலும் அதிக விரைவாயிருக்கிறது. வாரடிமேலும், பரியாசத்தின் மேலும், நிந்தையின்மேலும், முட்கிரீடத்தின்மேலும், சிலுவையின்மேலும் சாவின்மேலும் நாடிப்போகும் என் இரட்சகா, நான் உமக்காக இவைபோலொத்த எல்லாக் காரியங்களையும் நாடவும், என் சரீரத்தையும் ஆத்துமாவையும் சமூலமாக உமக்கு ஒப்புவிக்கவும் கிருபைசெய்யும். இந்தத் தியான ஆலயத்துக்குள் நானிருக்கையில் உமது பலிபீடத்தின் அக்கினியால் என்னைத் தொட்டு, உமது தூபபீடத்தின் வாசனையால் என் உள்ளத்தை நிரப்பி, உமது மன்னாவால் என்னைப் போஷித்து, உமது ஷெக்கைனாவால் என்னை மூடி, பாவமன்னிப்பால் என்னை முடிசூட்டியருளும். ஆமென்.

5. இயேசுவின் அபிஷேகங்கள்

வேதம்

“பஸ்காபண்டிகை வர ஆறுநாளைக்குமுன்னே...... இயேசு பெத்தானியாவுக்கு வந்தார். அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு ராத்தல் கொண்டுவந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழு

வதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது...........
அப்பொழுது இயேசு: என்னை அடக்கம்பண்ணும் நாளுக்காக இதை வைத்திருந்தாள் என்றார் (பரி. யோவா. 12: 1–8).

பஸ்காபண்டிகை வர இரண்டுநாளிருக்கையில் "இயேசு பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டில் இருக்கையில், ஒரு ஸ்திரீ விலையேறப் பெற்ற நளதம் என்னும் உத்தம தைலமுள்ள வெள்ளைக் கல் பரணியைக் கொண்டுவந்து, அதை உடைத்து, அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள்.........
இயேசு: நான் அடக்கம்பண்ணப்படுவதற்கு எத்தனமாக என் சரீரத்தில் தைலம்பூச முந்திக்கொண்டாள். இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப் படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்தது சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத். 26: 6–13; மாற்கு 14: 3–9).

போதனை

இயேசுசுவாமியின் பாடுகள் சமீபித்த காலத்தில், அவர் இரண்டுதடவை தைலாபிஷேகம் பெற்றார் (பஸ்காவுக்கு ஆறுநாளுக்கு முன்னும், இரண்டுநாளுக்கு முன்னும், அபிஷேகம் பெற்றார்). ஆறு நாளைக்கு முன், பாதாபிஷேகமும், இரண்டு நாளுக்கு முன் சிரசாபிஷேகமும் பெற்றார். இந்த இரண்டு அபிஷேகங்களும் ஒரே ஊரில் நடந்ததையிட்டு, இவை ஒன்றுதான் என்று சொல்லக்கூடாது. இதுவன்றி இயேசுவின் ஊழிய ஆரம்பத்தில் அவர் இதற்குமுன் ஒருதரம் பாதாபிஷேகம் பெற்றார் என்று பார்க்கிறோம் (லூக். 7: 36–45). ஆகவே நமது இரட்சகர் தமது ஜீவியத்தில் மூன்றுதடவை தைலாபிஷேகம் பெற்றிருக்கிறார்.

இந்த அபிஷேகங்களையல்லாமல், பூமியுண்டாகுமுன்னும் ஆதிமுதற்கொண்டும் அநாதியிலும் அவர் அபிஷேகம் பெற்றிருந்தார் (நீதி. 8: 23). அநாதி அபிஷேகத்தினால் இயேசு தெய்வத்தில் தெய்வமும், மெய்த்தேவனுமா

யிருக்கிறுர் என்றும்; ஆதிமுதற்கொண்டுள்ள அபிஷேகத்தால், இயேசு சிருஷ்டிகராயிருக்கிறுர் என்றும்; பூமியுண்டாகுமுன்னுள்ள அபிஷேகத்தால் மனுப்புத்திரரின் மீட்பராயிருக்கிறுர் என்றும் கருத்துக்கொள்ளலாம். ஆகவே அபிஷேகங்களின்மேல் அபிஷேகம் இயேசுவின் அநாதிமுதல் சிலுவைமட்டும் தொடர்ந்து வந்திருக்கின்றன. இவையன்றி, பரிசுத்த பர்வதமாகிய சீயோனில் இயேசு இராஜாவாக அபிஷேகம் பெற்றதும், தீர்க்கதரிசியாக பரிசுத்த ஆவியினுலும் வல்லமையினுலும் அபிஷேகம் பெற்றதும், தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு மகிழ்ச்சியின் எண்ணெயால் அபிஷேகம் பெற்றதுமுண்டு (சங். 2: 6; லூக். 4: 18; அப். 10: 38; சங். 45: 7). ஆதலால் நமது இரட்சகரை அபிஷேகநாதர் என்று சொல்வது நியாயம்தான். இவர் ஒருவரே அபிஷேகங்களுக்குப் பாத்திரரானபடியால், அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்னும் அர்த்தமுள்ள கிறிஸ்து என்ற மகிமை பொருந்திய நாமத்திற்குப் பாத்திரரானுர்.

தியானம்

இயேசுவே, நீர் என் தேவனுகவும் இராஜாவாகவும், தீர்க்கதரிசியாகவும் என்னுடைய மகா பிரதான ஆசாரியராகவும் அபிஷேகம் பெற்றவருயிருக்கிறீர். நான் உமது தெய்வீகத்தை அலட்சியம் செய்தால் தேவ துரோகியாவேன். உமது இராஜரீகத்தை விரோதித்தால், இராஜ துரோகியாவேன். உமது ஆசாரியத்தை அசட்டை செய்தால் குரு துரோகியாவேன். இப்படிப்பட்ட பாவங்களொன்றும் என்னை மேற்கொள்ளாதபடி உமது பரிசுத்த ஆவியைக்கொண்டு போதிக்கப் பிரார்த்திக்கிறேன்.

நீ பரலோகத்தில் மாத்திரமல்ல பூலோகத்திலும்; தேவனுல் மாத்திரமல்ல மனுஷராலும்; முன்காலங்களில் மாத்திரமல்ல இக்காலத்திலும்; இனிவரும் காலங்களிலும்; மரியாளாலும், மற்றவர்களாலும் மாத்திரமல்ல என்னுலும் அபிஷேகத்திற்குப் பாத்திரராயிருக்கிறீர். உமக்குத் தன் வீட்டில் விருந்து கொடுத்து, உமக்குத் தைலாபிஷேகம் செய்யாத கிறிஸ்தவன் நன்றிகெட்டவனு

யிருக்கிருன். உமக்கு ஒருதரம் தைலம் வார்த்த மரியாள் லாசருவின் சகோதரி என்பது யாவரும் ஒத்துக் கொள்ளுகிற ஒரு அபிப்பிராயம். அது நிஜமானல் தன் சகோதரனுகிய லாசருவை தேவரீர் உயிரோடெழுப்பின தற்கு நன்றியாக அதைச் செய்தாள்; நீர் என்னை உயிரோ டெழுப்பினீரல்லவா? அக்கிரமங்களாலும் பாவங்களா லும் மரித்த என்னை நீர் உயிர்ப்பியாவிட்டால், உம் மண்டை வரும்படியான இவ்வளவு ஜீவன் எனக்கேது? உமது பாதத்தில் உட்கார்ந்திருக்கும் இவ்வளவு ஆசை எனக்கேது? ஆகவே நான் நன்றியறிதலாக ஒரு தைலாபி ஷேகம் செய்யக் கடமைப்பட்டவனல்லவா! மரியாள் மாத்திரமல்ல, பேர் சொல்லப்படாத ஒரு ஸ்திரீயும் உமக்குத் தைலாபிஷேகம் செய்தாள். இது குஷ்டரோகி யாகிய சீமோன் வீட்டில் நடந்ததால், இவள் அவன் மனைவியாயிருக்கலாம்; அல்லது மகளாய், சகோதரியா யிருக்கலாம். சீமோனுடைய குஷ்டரோகம் நீங்கின சந்தோஷத்தை வெளியிட இப்படித் தைலாபிஷேகம் செய்தாளாக்கும். நீர் என் பாவக் குஷ்டத்தை உமது இரத்தத்தால் கழுவி, “இதோ உன்னைக் கழுவினதால் நீ சுத்தமானுய்” என்று சொல்லி என் நோயை நீக்கினவ ரல்லவா? நீர் என்னைத் தொட்டு, “சித்தமுண்டு, சுத்த மாகு” என்று சொல்ல நான் சுத்தமானவனல்லவா?— நான் சுகமான சந்தோஷத்தை ஒரு தைலாபிஷேகத்தால் வெளிப்படுத்துவது நியாயமாயிருக்கிறது.

பூலோகத்தில் உமக்குக் கிடைத்த தைலாபிஷேகங்க ளெல்லாம் ஸ்திரீகளால் கிடைத்திருக்கிறது. இது ஸ்திரீ ஜாதிகளுக்கு கனந்தான். ஆ, கபடமில்லாத நாத்தானு வேலே, இடிமுழக்கத்தின் மக்களே, கேபாவே, வைராக் கிய சீமோனே, அரிமத்தியாவூர் யோசேப்பே உங்களி லொருவராவது என் இயேசு நாதரை இவ்வண்ணம் கனப்படுத்தாத காரணமென்ன? ஆ, நாயினூர் வாலி பனே, கதரேனர் நாட்டில் லேகியோனிலிருந்து குண மான மனுஷனே, ஆ, பத்துக் குஷ்டரோகிகளே, பர்திமே யுவே, உங்களிலொருவராவது இப்படி என் இயேசுவைக்

கனப்படுத்தாத காரணமென்ன? நானும் அவரைக் கனப்படுத்தாத உங்களில் ஒருவனுக இருக்கமாட்டேன்.

நான் வார்க்கும் தைலமென்ன?—அது நளது தைலமா—அல்ல—அல்ல, அது இந்துதேசம் முழுவதுக்கும் பொதுவான தைலம். அந்தத் தைலம் அவ்வளவு உயர்ந்ததா? அதின் விலை முந்நூறு பணத்துக்குத்தானே மதிக்கப்பட்டது. அதின் வாசனை வீட்டை நிரப்பினதேயன்றி இருதயத்தைச் சந்தோஷப்படுத்தவில்லையே. அது சிலருடைய மூக்கை நிரப்பினதேயன்றி மனதைக் கவர்ந்துகொள்ளவில்லை. அந்த வாசனை யூதாசின் பொருளாசையையும், பொறாமையையும் கிளப்பிற்று. அது ஊற்றினவளைச் சந்தோஷப்படுத்தினதேயன்றி, ஊற்றப்பட்டவரைச் சந்தோஷப்படுத்தவில்லை. ஏனெனில் அதே சமயத்தில் இயேசுவின் சிந்தையில் அவருடைய பாடுகளும் மரணமும் ஆளுகை செய்தது. ஆதலால் அவர், இது நல்ல தைலம்—நல்ல மணம்—சந்தோஷம் என்றிப்படி ஒன்றும் சொல்லாமல், "என்னை அடக்கம்பண்ணும் நாளுக்காக வைத்திருந்தாள்" என்றும், "நான் அடக்கம் பண்ணப்படுவதற்கு எத்தனமாக என் சரீரத்தில் தைலம் பூச முந்திக்கொண்டாள்" என்றும் துக்கச்செய்தி சொன்னுர்.

நான் வார்க்கும் தைலமோ எனக்காவது, மற்றவர்களுக்காவது வாசனை யுண்டாக்காமல் என் இரட்சகரை மாத்திரம் மணமாக்கி மகிழ்ச்சியடையப்பண்ணும். என் தைலத்துக்கு, நொறுங்குண்ட இருதய தைலம் என்று பேரிடுகிறேன். மோசேயின் பிரமாணத்தில் குறிக்கப்பட்ட அபிஷேக தைலத்தை வேறொருவரும் செய்யக்கூடாதே (யாத். 32: 22–34). இந்தத் தைலத்தை எந்தப் பாவியும் எந்த வேளையும் செய்யவும், இந்தத் தைலத்தால் என் இரக்ஷாபெருமானை அபிஷேகம் செய்யவும் நான் சம்மதிக்கிறேன்.

நொறுங்குண்ட இருதய தைலமுறை

பாவியே, கல்வாரிமலைக்குத் தியானபிரயாணம்செய்து இயேசு சுவாமியின் சிலுவையின் அடியில், உன் கல்லான

இருதயத்தைக் கிடத்துவாயாக. அதிலுள்ள கள்ளச் சதைகளையெல்லாம் இருபுறமும் கருக்குள்ள கத்தியால் அறுப்பாயாக. அப்பால் உன் மனதை குறுசாணிகளா லும் ஈட்டியாலும் குத்துவாயாக. அப்பால் சிலுவை என்னும் சுத்தியால் அதைச் சதைத்து, நொறுக்கி, முள் முடிக் கிரீடத்தட்டிலே அதை வைத்து, சிலகாலம் அரிமத்தியாவூர் யோசேப்பின் கல்லறையில் அதை அடக்கமாய் வைத்து, இயேசுவின் அன்பின் நெருப்பை உன் அன்பின் நெருப்போடு சேர்த்து, பெருமூச்சால் மூட்டி, சிலுவை விறகுகளை அதின்மேல் அடுக்கி, பரிசுத்த ஆவியைக்கொண்டு ஜெபம்பண்ணு. அந்த ஜெபம் பின் வருவதுபோல இருக்கலாம்:—''இதோ, துர்க்குணத்தில் உருவானேன், என் தாய் என்னைப் பாவத்திலே கர்ப்பம் தரித்தாள்; தேவனே நீர் பலியை விரும்புகிறவரல்ல, விரும்பினால் செலுத்துவேன்; சர்வாங்க தகனபலி உமக்குப் பிரியமானதல்ல; தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான என் இருதயத்தைப் புறக்கணியீர்'' என்று ஓயாமல் அழுதுகொண்டே ஜெபம்பண்ணு. உடனே தேவ அன்பு ஆகிய வானத்து அக்கினி உன் பலி யின்மேல் இறங்கும். இயேசுவின் அன்பு, உன் அன்பு, பிதாவின் அன்பு ஆகிய மூன்றும் ஒன்றுபோல சுவாலிக் கும்போது, உன் நொறுங்குண்ட இருதயம் மெழுகு போல் உருகி, பிதாவுக்குப் பலியாகவும், குமாரனுக்கு அபிஷேக தைலமாகவும், உனக்கு இரட்சிப்பாகவும் இருக் கும். இந்தத் தைலவாசனை பூலோகத்தில் வாசனைபோல் காணப்படாவிட்டாலும், பரலோகமுழுவதையும் தன் பரிமளத்தால் நிரப்பும். இயேசுவே, இந்தப் புதிய தைலத்தை நான் இன்று உமது தலைமேல் வார்த்து உம்மை அபிஷேகம் செய்கிறேன். தலை தாழும் இரட்சகா, தலை தாழும்!

இயேசுவே, நீர் சிலுவை என்னும் மணவறையில் என்னை மணம்புரியும் ஆத்தும மணவாளனாக ஆயத்தப் படுகிறவராய் உம்மை வாசனை ஏற்றுகிறீராக்கும். உமக்கு நேரிடும் எவ்வித நிந்தையும் அவமானமும், இந்த

வாசனையை அழித்துவிடமாட்டாது. இயேசுவே, என்னை உமது ஆத்தும மணவாட்டியாக்கியருளும்.

ஜெபம்

தைலாபிஷேகப் பிரபுவே, தேவரீர் என் தேவனும், என் இராஜாவும், என் தீர்க்கதரிசியும், என் ஆசாரியருமாயிருக்கிறீர். உமக்குப் பயப்படும் பயத்தையும் உம்மை நேசிக்கும் நேசத்தையும் எனக்குத் தாரும். உமக்குக் கீழ்ப்படியவும், உமது உபதேசத்தைப் பின்பற்றி நடக்கவும் எனக்குத் தயவுசெய்யும். என் நித்திய பிரதான ஆசாரியரே, தேவரீர் உம்மையே எனக்குப் பலியாக்கினீரே, இது எவ்வளவு தயவு. நான் என்னைப் பலியாகச் செலுத்தும்படி கிருபை செய்தருளும். இதோ இன்று நான் ஆயத்தம் செய்திருக்கிற நொறுங்குண்ட இருதய தைலத்தை உமது சிரசின்மேல் ஊற்றவருகிறேன். இயேசுவே, உமது தலையைத் தாழ்த்தி அடியேனுடைய அபிஷேகத்தை ஏற்றுக்கொள்ளும். இவ்வுலகத்துக்கு அது அவ்வளவு விலையும் வாசனையுமுள்ளதாயிராவிட்டாலும், தேவரீருக்கும், பரலோகத்துக்கும் அது பிரியமும் வாசனையுமுள்ளதென்று அறிகிறேன்.

ஆதாமின் மகனே, அபிஷேகம்பண்ணு

இரட்சகா, நான் என்னையே சதைத்து என் ஆவி ஆத்துமா சரீரமுழுவதையும் நொறுங்குண்ட இருதய தைலமாக்கி வார்க்கிறேன். ஆபேலின் பலியை ஏற்றுக்கொண்டதுபோல் அடியேனுடைய பலியையும் ஏற்றுக்கொண்டருளும். மரியாள் நளதை அங்கீகரித்த இயேசுவே (இன்றுனுடைய) மகனாகிய என்னுடைய தைலத்தையும் உமது சிரசின்மேல் ஏற்றுக்கொண்டு, உமது அங்கிகளில் ஓட இடங்கொடுத்தருளும். ஆமென்.

இயேசுவின் ஆசீர்வாதம்

மகனே திடனாயிரு, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. என் குமாரனுடைய தைல வாசனை நளது தைல வாசனையிலும் மா உயர்ந்தது. என் ஆவி உன்

னோடும், என் ஆசீர்வாதம் உன் சந்தானத்தோடுமிருப்பதாக.

பாவி. ஆமென்—ஆமென்—ஆமென்.

6. இயேசு பவனி போகுதல்

வேதம்

"இயேசுவானவர் சீஷரில் இரண்டுபேரை அனுப்பி உங்களுக்கு எதிரேயிருக்கிற கிராமத்துக்குப் போங்கள்; அங்கே ஒரு கோவேறுக்கழுதையும், அதனோடே ஒரு குட்டியையும் கட்டியிருக்கக் காண்பீர்கள்; அவைகளை அவிழ்த்து என்னிடத்தில் கொண்டுவாருங்கள். ஒருவன் உங்களுக்கு ஏதாகிலும் சொன்னால்: இவைகள் ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள்; உடனே அவைகளை அனுப்பிவிடுவான் என்று சொல்லி, அவர்களை அனுப்பினார்......சீஷர்கள் போய், இயேசு தங்களுக்குக் கட்டளையிட்டபடியே செய்து, கழுதையையும் குட்டியையும் கொண்டுவந்து, அவைகள்மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்டு, அவரைஏற்றினார்கள். திரளான ஜனங்கள் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்; வேறு சிலர் மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்பினார்கள். முன் நடப்பாரும் பின் நடப்பாருமாகி திரளான ஜனங்கள்: தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள்" (மத். 21: 1–11; மாற். 11: 1–10; லூக். 19: 29–44; யோவா. 12: 12–18).

போதனை

இரட்சகர் எருசலேமுக்குப் பவனிபோன வரலாறு நான்கு சுவிசேஷகராலும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பவனியைப்பற்றிய ஒரு தீர்க்கதரிசனமும் இருந்தது. கிறிஸ்துவுக்கு சுமார் 540 வருஷங்களுக்கு முன்னிருந்த சகரியா தீர்க்கதரிசி இந்தப் பவனியைப் பற்றிச் சொன்னதாவது:—"சீயோன் குமாரத்தியே,

மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின் மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார்" என்பதே (சகரி. 9: 9). இந்தத் தீர்க்கதரிசனமானது, இதினால் குறிக்கப்படும் சீயோனின் அரசன் தேவனும், மனுஷனும், இரட்சகருமாயிருப்பாரென்று வெளிப்படுத்துகிறது. தேவனாக "நீதியுள்ளவரும்" மனுஷனாக "தாழ்மையுள்ளவரும்" மீட்பராக "இரட்சிக்கிறவருமாய்" இருப்பாரென்று குறிப்பிக்கிறது. இந்த மகத்துவ இரகசியங்களை யூதர் அறியாமல், அவரை ஒரு பராக்கிரம புருஷனாக மாத்திரம் எண்ணிவந்தார்கள். விசேஷமாக இந்தப் பவனி வரலாற்றிலடங்கியிருந்த மேசியாவின் தெய்வீக பாகத்தை யூத ரபிமார், தங்கள் சுய இஷ்டம்போல மாற்றி அழித்துப்போட்டார்கள். இரட்சகரோ அச்சத்தியத்தை மறுபடியும் வெளிப்படுத்தச் சித்தங்கொண்டார்.

இந்தப் பவனி வரலாற்றில் இயேசு தமது தெய்வீகத்தின் திரையைச் சற்றே தூக்கி, தம்மை வெளிப்படுத்தும்படி சித்தம்கொண்டது நமக்குச் சந்தோஷமாயிருக்கிறது. அவருடைய ஜீவியமாகிய சூரியன் அடையப்போகும் சமயம் நெருங்குகையில், இந்த ஜோதி விளங்குவது நமது மனதுக்கு அதிக ஆறுதலாக இருக்கிறது. அடுத்த ஊரில் கட்டியிருந்த கோவேறுகழுதையையும், அதின் குட்டியையும், இவர் சுமார் இரண்டு மைலுக்கப்பாலிருந்து கண்டுகொண்டதும்; அதைக் கொண்டுவரும்போது ஆட்சேபமும் கேள்வியுமுண்டானால், "ஆண்டவருக்கு வேண்டும்" என்று சொல்லச் சொன்னதும், அவர் தமது தெய்வீகத்தை இரட்டித்து ருசுப்படுத்துகிறது போலிருக்கிறது. இயேசுவின் ஜீவியத்தில் பலர் அவரை "ஆண்டவர்" என்றும், "ஆண்டவரே" என்றும் அழைத்ததுண்டு. அவர்கள் அப்படிச் சொன்னதெல்லாம் ஒரு மரியாதைப்போங்காக மாத்திரமிருந்தது. இயேசுவோ இதற்குமுன் ஒருதடவை மாத்திரம் "தம்மை ஆண்டவர்"

என்று தாமே சொல்லிக்கொண்டதுண்டு (மத். 12: 8). அது மற்றவர்கள் சொன்ன மரியாதைப் போங்கைப் பின் பற்றியல்ல, தமது தெய்வீகத்தை வெளிப்படுத்தும்படியாகத்தான்.

தியானம்

இரட்சகா! உம்முடைய போக்குவரத்துகளை நான் சுமார் முப்பத்துமூன்று வருஷமாகக் கவனித்ததில், ஒரு நாளாவது நீர் வண்டியேறி, அல்லது வாகனமேறி காலங் கழிக்கவில்லை. எப்போதும் கால்நடையாக நடந்து, நன்மைசெய்கிறவராக எங்கும் சுற்றித்திரிந்தீர். எருசலேமிலிருந்து நீர் ஒருதரம் சமாரியாவின் வழியாக, கலிலேயாவுக்குப் பயணமாயிருந்தபோது, அதிகாலை முதல் மத்தியானம்வரையும் கால்நடையாய் நடந்து பிரயாணத்தினால் இளைப்படைந்துபோனீர் (யோவா. 4: 6). அவ்வளவு இளைப்பை நீர் அடைந்தாலும் ஒரு வாகனம் தேடவில்லை. இன்று நீர் அவசியமில்லாமல் வாகனம்தேடுகிறீர்—வாகனமிருக்கும் இடத்தைக் குறிப்பிக்கிறீர்—வாகனம் வருமட்டும் காத்திருக்கிறீர்—வாகனம் வந்தபின்பு அதின்மேலேறிப் போகிறீர்—இதெல்லாம் எனக்கு ஆச்சரியத்தையுண்டுபண்ணுகிறது. காததூரங்களுக்கு வாகனம் தேடாதவர் இரண்டு மைலுக்குத் தேடுவானேன்?—மலையேற்றத்துக்காகவா?—நீர் ஏறாத மலை காணனிலுண்டோ?—மலைகளும், குன்றுகளும் உமக்கு இராத்தங்கும் இடமல்லோ?

நீர் வாகனம் தேடுவானேன்?—தீர்க்கதரிசனம் நிறைவேறும்படியாகவே. உம்மைப்பற்றி முன் அறிவிக்கப்பட்ட தீர்க்கதரிசனமெல்லாம் திட்டவட்டமாய் நிறைவேறும்படி நீர் உமது ஜீவியத்தை ஒழுங்குப்படுத்திக்கொண்டீர். உம்மைப்பற்றிய தீர்க்கதரிசனங்களெல்லாம் உம்மில் நிறைவேறியும் இன்னும் யூதர் விசுவாசிக்கவில்லையே. அவைகளில் சில நிறைவேறாதபட்சத்தில் மனுஷஜாதியின் விசுவாசத்துக்குக் கலக்கமுண்டாகுமல்லவா? உம்மை இரட்சிப்பின் அதிபதியாக அங்கீகரிப்பதற்கு யாதொரு இடையூறும் நேரிடாதபடி நீர்

நியாயப்பிரமாணங்களையும் தீர்க்கதரிசனங்களையும் உமக்குள் நிறைவேறச்செய்தீர்.

நீர் வாகன மேறிப் போவானேன்?—நாம் ஒரு வேடிக்கை காட்டவேண்டுமென்றோ? நம்மைப்பற்றி ஒரு பெருமையான அல்லது மதிப்பான எண்ணத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்றோ? அல்ல—அல்ல: நான் இரட்சிக்கிறவர் என்பதை மாத்திரம் நீர் மனுஷர் உள்ளத்தில் பலமாக ஸ்தாபிக்கச் சித்தங்கொண்டீர். வேறு உலகநோக்கம் உமக்கிருந்தால் நீர் கோவேறுகழுதையையல்ல, ஒரு குதிரையைச் சம்பாதித்து, அதன்மேல் ஏறிப்போயிருப்பீர்.

நீர் வாகனமேறுவானேன்?—இந்த வாகனமேறுதல் நீர் வானமேறுதலுக்கு முதல்படியாயிருக்கிறது. உன்னதங்களில் வாசம்பண்ணின தேவரீர், தாழ்ந்து பூலோகம் வந்தீர். மறுபடியும் நீர் பரலோகம் போகும் காலம் சமீபித்தபோது, மூன்று படிகளில் ஏறி உமது பிதாவின் சமுகத்தில் சேர்ந்தீர். அம்மூன்றுபடிகளும், முறையே கழுதைப்படி, சிலுவைப்படி, மேகப்படி என்று சொல்லலாம். நீர் முதலாவது கோவேறு கழுதையின்மேலேறி, சிலுவையைச் சேர்ந்து, அப்பால் சிலுவையிலேறி, அதன்பின் மேகமீதேறி உமது பிதாவின் சமுகத்தைத் தரிசித்தீர் அல்லவா!

நீர் வாகனமேறினநாள், பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் விசேஷநாளாயிருந்தது. வானத்திலும் கூட்டம்; பூமியிலும் கூட்டம்;—உமக்கு முன்னும் கூட்டம்,—பின்னும் கூட்டம்,—இருபக்கங்களிலும் கூட்டம். பிதாவாகிய தேவன், நீர் உமது வாகனத்தின் மேலேறும்படி காலெடுத்து வைத்தபோது, "ஆ, என் நேசசுதன் மனுப்புத்திரரை மீட்க ஆடம்பரத்தோடு பவனிபோகிறார்.—நான் மனுஷரை நேசிக்கிற அளவு அவரும் நேசித்தார்.—இவரே மீட்பராகத் தகுந்தவர் என்று அறிக்கையிடுகிறார். தூதர் சேனையும், பரமண்டல அதிகாரங்களனைத்தும், தங்கள் தேவன் மிருகவாகனமேறிப்போகும் கெம்பீரத்தைப் பார்த்து, சந்தோஷம்—சந்தோஷம். இவ்

வளவு கனத்துக்கு இவர் பாத்திரர் தானென்கிறார்கள். ஆனால் இனிமேல் எருசலேமில் அவருக்குச் சம்பவிக்கப் போகிற அழிம்புகளொன்றும், இவர்களுக்கு இப்போது தெரியாது. முன் நடப்பாரும் பின் நடப்பாருமான திரளான ஜனங்கள், தங்கள் மேலங்கிகளையும், வஸ்திரங்களையும் கழற்றி வழியிலே விரித்தும், வாகனத்தின்மேல் மடித்துப்போட்டும் மரியாதை செய்கிறார்கள். இயேசுவே, எங்கள் அலங்காரங்களும் மகிமைகளும் உமக்குக் கீழ்மாத்திரமல்ல, உம்முடைய வானத்தின்கீழு மிருக்க வேண்டியது என்பதை உணர்த்துகிறார்கள் அல்லவா? இலைகள், குருத்தோலைகளைக்கொண்டும் அவருக்கு மரியாதை செய்கிறார்கள். இயேசுவை இராஜாவாக்கிக் கொள்ளும் இருதயங்களில், சகல மகிமைகளும், பெருமைகளும், செழிப்புகளும், பிரஸ்தாபங்களும் தாழ்த்தப் பட்டும் அவருடைய பாதங்களில் சிதறடிக்கப்பட்டும் போம். அவர் அவைகளை மிதித்து, கனவீனப்படுத்தும் படி நாம் ஒப்புக்கொடுக்க வேண்டியது நியாயமல்லவா?

வாகனமேறிப்போகும் இயேசு இரட்சகா! இந்தச் சவாரி உமக்குஎப்படியிருக்கிறது? கேரூபீன்கள் மேலேறி வேகமாய் யாத்திரைசெய்து வழக்கப்பட்ட உமக்கு, இந்த மெதுவான நடை அலுப்பாயிருக்குமல்லவா? காற்றின் செட்டைகளைக் கொண்டுபறந்த நீர்: கழுதையின்மேல் சவாரி செய்தால் சரிப்படுமா? நீர் உமது வாகனத்துக்கு ஒரு மானை அல்லது புலியை அல்லது சிங்கத்தைத் தெரிந்துகொள்ளாமல், இப்படிப்பட்ட ஒரு கழுதையைத் தெரிந்துகொள்ளுவானேன்?

நான் சாந்த இராஜா—என் இராஜ்யம் இவ்வுலகத்தின் தன்மையுள்ளதல்ல—நான் தாழ்வால் உயருவேன் என்பதை இந்த வாகன சவாரியால் வெளிப்படுத்துகிறேன். அதுவுமன்றி என் பிதா எனக்குக் குறித்த வாகனம் இதுதான். இது மனுஷ இருதயங்களில் நான் ஆளுகைசெய்யும் அடையாளமாயிருக்கிறது. நான் சாந்தத்தோடும், அன்போடும், தாழ்மையோடும் மெதுவாக என் அரசாட்சியை ஸ்தாபித்து ஆளுகைசெய்கிற

இரக்ஷண்ய இராஜாவாயிருக்கிறேன். இந்தக் கழுதை மவுனமாய் என்னைச் சுமந்து, மெதுவாக என்னை மலையேறப்பண்ணுகிறது. ஒவ்வொரு பாவியும் இப்படியே என்னைச் சுமந்து போகவேண்டியவனாயிருக்கிறான். மனுஷர் என்னைக் கனப்படுத்தமாட்டோமென்கிறார்கள். இந்தக் கழுதை தன் குட்டியோடு என்னைக் கனப்படுத்துகிறது. இதின்மேல் ஏறிச் சவாரி செய்வதைவிட உன் மேல்—உன் இருதயத்தின்மேல் சவாரிசெய்து, உன் மேலும், உன்னைப்போலொத்த மனுப்புத்திரர் பேரிலும் அரசாட்சிசெய்ய எனக்கு அதிகப் பிரியமுண்டு. அப்படிச் சவாரிசெய்யும்படி உன் இருதயத்தைத் தரமாட்டேன் என்கிறாய். இந்தக் கழுதை அப்படி உன்னைப் போல என்னை விரோதிக்கிறதில்லை.

இரட்சகா! நான் கழுதையிலும் தாழ்ந்த புத்தியுள்ள பாவியாயிருக்கிறேன். ஆ நான், நீர் ஒருகாலத்தில் ஏறிப்போன கழுதையாயாவது இவ்வுலகத்தில் இருந்தேனில்லையே! போனதுபோகட்டும். அன்றையத்தினம் உம்மைச் சுமக்கும் கழுதையாயிருக்கும் பாக்கியம் எனக்குக் கிடையாதேபோனாலும், இதோ இன்றுமுதல் உம்மைச் சுமக்கும் கழுதையாக என்னை ஒப்புக்கொடுக்கிறேன். தேவரீர் என்னை உமது வாகனமாக அங்கீகரித்து, என்மேல் சவாரி செய்தருளும். இதோ குனிகிறேன்—இதோ குனிகிறேன்.

இயேசு.—ஆதாமின் மகனே—ஏவாளின் மகளே—நீ வாழ்க, வாழ்க! என்னைச் சுமக்கும் மனம் உனக்கு வந்தது, உனக்கு வாழ்வுதான். உன்னால் நான் கனமடைவதைவிட என்னால் நீ கனமடைவாய். நீ தேவ வாகனமாகிறது உனக்கு அதிர்ஷ்டம்தான். "பூவால் நாரும் மணம்பெற்றது" என்ற சுலோகம்போல் என்னால் நீ கனம்பெறுவாய்.

பாவி.—இரட்சகா! உமது பேச்சால் காலதாமதமாகிறது. நீர் என்மேல் ஏறிக்கொண்டு, மீதியான பேச்சைப் பேசி சவாரிசெய்யும் ஐயா!—இதோ குனிகிறேன்.

இயேசு.—பாவியே, பொறு—பொறு; இதற்குமுன் சிலதடவை இப்படியே நீ குனிந்து கொடுத்தாய். நானும் ஏறிச் சவாரிசெய்தேன். கொஞ்சத்தூரம் போனபின்பு, பழைய பிலேயாமின் கழுதையைப்போல் நீ படுத்துக்கொண்டாயல்லவா? இனிமேலும் அப்படிச் செய்வாயோ? நீ படுத்தபோது நான் உன்னை அடித்தால் நீ செத்துப்போவாய்; ஆதலால் நானே இறங்கிப் போய் விட்டேன். இனிமேல் அப்படிச் செய்யாமல் உன் ஜீவ காலமெல்லாம் என்னைச் சந்தோஷத்தோடு சுமப்பாயா?

பாவி.—அப்படியே சுமப்பேன், என் இரட்சகா! முன் பாதாளதூதன் என்னை வழிமறித்து நின்றான். நான் பயந்து படுத்தேன். அதால் என் வாழ்வை இழந்தேன். அதை உணர்ந்து மறுபடியும் கெஞ்சு கிறேன். என்னை உமது வாகனமாகப் பிரயோகியும் ஐயா!—இதோ குனிகிறேன்.

இயேசு.—குனிகிறதுமாத்திரம் போதுமா? நான் வெறும் வாகனத்தின்மேல் ஏறவா? அது கூடாது. உன் கிரியைகளாகிய கிளைகளையும் இலைகளையும் வெட்டி எனக்குமுன்னே தெளி. உன் பெருமை, பிரஸ்தாபம், நற்கிரியை ஆகிய பட்டு வஸ்திரங்களையெல்லாம் கழற்றி எனக்கு ஜீனியாகமடித்துப் போடு. அவையெல்லாவற் றின்மேலும் நான் உட்கார்ந்து அவைகளை மிதித்து நடந்துசெல்லவேண்டும். அப்படிச் சம்மதமானால் பின்பு ஏறுகிறேன்.

பாவி.—இரட்சகா! உமது சித்தத்தின்படி எல்லாம் இதோ செய்கிறேன். என் பேர், பிரஸ்தாபம், கிரியை கள் அனைத்தையும் இதோ களைந்து, மடித்து, உமது இருப்பிடமாக என் மனதின்மேல் போடுகிறேன். என் நற்கிரியைகளை உமது பாதங்களின் கீழ் விரிக்கிறேன். ஏறிப் பவனிபோம் என் இராயரே! நீர் ஏறினபின்பு சந்தோஷம் என்னும் குருத்தோலையை எனக்குத் தாரும். நான் அதை ஆட்டி வீசி கீதம்பாடி நடப்பேன்.

இயேசு.—நான் உன் இரக்ஷண்ய இராஜாவாக இன்று உன்மேல் ஜெயமாய் ஏறுகிறேன்; என்னைச் சுமக்கும்

மனமும், நான் சவாரி செய்யும் மனுப்புத்திரனும் பாக்கிய முள்ளவன். இதோ, நீ விரும்பின சந்தோஷ குருத் தோலையப்பா!

பாவி.—ஆ என் இரட்சகர் என்னை வாகனமாக்கின தற்காக அவரை ஸ்தோத்திரிக்கிறேன். நான் அவரைச் சுமக்காமல் அவர் என்னைச் சுமக்கிறதுபோலவே, என் மனதுக்குக் காணப்படுகிறது. ஆகா, நான் அவருக்கல்ல, அவர் எனக்கு வாகனமாகிவிட்டார். இது என்ன மாறு தல், இது என்ன தேறுதல்! அவரிலிருந்து ஒரு பரிமள வாசனை வருகிறது. அது குஷ்டரோகியாகிய சீமோன் வீட்டில் பூசின தைலங் குறிப்பித்த இரக்ஷண்ய வாசனையா யிருக்கிறது. நான் அந்த வாசனையினால் சந்தோஷம் பூண்டு, என் குருத்தோலையை வீசி பழைய யூதர் பாடின கீதத்தைப் பாடுவேனாக:—

தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா!
பரலோகத்திலே சமாதானம்!
உன்னதத்திலே மகிமை!
உன்னதத்திலே ஓசன்னா!

இது பழைய பாட்டு—இது யூதர் பாட்டு—இது என் பாட்டல்ல—என் ஓசன்னாவைப் பாடுவேனாக.

பாவி நேசன் ஓசன்னா!
தேவன் நீர்தான் ஓசன்னா!
என்னை மீட்டீர் ஓசன்னா!
என்மேல் தங்கும் ஓசன்னா!
எறிவாரும் ஓசன்னா!
என்னை ஆளும் ஓசன்னா!
சாந்த நாதா ஓசன்னா!
நீரே மீட்பர் ஓசன்னா!
அந்தி சந்தி ஓசன்னா!
ஆளும், ஆளும் ஓசன்னா!
அல்லேலூயா ஓசன்னா!
எறிவாரும் ஓசன்னா!

ஜெபம்

சொல்லமுடியாத சிலுவைப்பாடுகளைச் சகிக்கும்படி வாகனமேறிப்போகும் இயேசுவே, எனக்காக தேவரீர் இவ்வளவு சந்தோஷத்தோடு உமது பாடுகளை எதிர் பார்க்கிறீரே. நானும் இந்தப் பரிசுத்த மாதிரியைப் பின்பற்றி மனச்சந்தோஷத்தோடு, இவ்வுலகத்தில் நேரிடுகிற சகல உபத்திரவங்களையும் கடந்துபோகக் கிருபை செய்யும், எல்லாவற்றுக்கும் மேலாக தேவரீர் என்னை உமது வாகனமாக அங்கிகரித்து, என் மூலமாய் உமது இராஜ்யபாரத்துக்கடுத்த பல வேலைகளை நடத்தவும், என்னில் தங்கி, என்னை ஆசீர்வதிக்கவும் பிரார்த்திக்கிறேன். என்னை நீர் உமது பரிசுத்தஆவியால் நிரப்பி, நான் இரக்ஷண்ய பூரிப்பால் ஏவப்பட்டு, உம்மை ஸ்துதிக்கவும் உமது நாமத்தைப் பிரஸ்தாபிக்கவும் தயவு செய்தருளும். ஆமென்.

7. இயேசு எருசலேமைப் பார்த்து அழுதது

"அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப் பார்த்து, அதற்காகக் கண்ணீர்விட்டழுது, உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது. உன்னைச் சந்திக்கும் காலத்தை நீ அறியாமற் போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில் போட்டு, உன்னை வளைந்துகொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி, உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப்போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்குச் செய்யும் நாட்கள் உனக்கு வரும் என்றார்" (லூக். 19: 41–44).

போதனை

நமது இரட்சகர் இப்பூலோகத்திலிருக்கையில் மூன்று தடவை அழுதார். லாசருவுக்காக அழுதபோது அந்தக் குடும்பம்மாத்திரம் அவர் மனதிலிருந்தது. எருசலேமுக்காக அழுதபோது யூதஜாதி முழுவதும் அவர் மனதி

லிருந்தது. கெத்செமனேயில் அவர் அழுதபோதோ சர்வலோகமும் அவருடைய மனதிலிருந்தது. இயேசு அழுதார் என்று சொல்வது, தேவன் அழுதார் என்று சொல்வதற்குச் சமம். இயேசு பாவிகளை இரட்சிக்கிறது மாத்திரமல்ல, அழுது—அழுது இரட்சிக்கிறார்.

அடிவாரத்திலிருந்து தேவாலய மலைக்குப்போக மூன்று பாதைகளிருந்தன. அவைகளில் ஒன்று பாவ மலை என்ற பேர் வழங்கப்பட்ட பரும்பின் பக்கமாய்ப் போனது. இரண்டாம் வழி செங்குத்தாய் ஏறி பெத்பகே வழியாக இறங்கும் ஒற்றடிப்பாதையாயிருந்தது. மூன்றும் பாதை ஒலிவமலையின் மத்தியமேட்டுக்கும், "துர் ஆலோசனை மேடு" என்னும் திரட்டுக்கும் இடையில் சுற்றிச்சுற்றிச் சென்ற விஸ்தாரமான பெரும் பாதையாயிருந்தது. திரண்ட கூட்டமாகப்போகும் பயணத்துக்கு இந்த மூன்றும் பாதைதான் வழக்கமான வழியாக இருந்தது. இந்த துர் ஆலோசனை மேட்டில்தான் காய்பாவின் வீடு இருந்ததாம். மலையைச் சுற்றிச்சுற்றிப் போகும் ஒரு முடங்கில், எருசலேமின் தெருக்களும், கட்டடங்களும், ஆலய அலங்காரங்களும் நன்றாகத் தெரியும். அந்த முடங்கில் வந்தபோது இயேசு நகரத்தைப் பார்த்து அதற்காக அழுது கண்ணீர்விட்டார். அதின் தற்கால வாழ்வையும் பிற்காலத் தாழ்வையும் அவர் அறிந்தவரானதால், இரண்டையும் ஒத்துப்பார்த்துக் கண்ணீர்விட்டார். அவருடைய பார்வை, கண்ணீரோடு மாத்திரம் நின்றுபோகவில்லை. அநுதாபத்தோடும், துக்கமான தீர்க்கதரிசனத்தோடும், அவருடைய காட்சி முடிந்தது. அவர் தமது திரு உதடுகளைத் திறந்து, உனக்குக் கிடைத்த இந்த நாளில் உன் சமாதானத்துக் கேற்றவைகளைச் சிந்தித்துக்கொள்ளவில்லை என்று குற்றங்கூறி, சீக்கிரத்தில் ஒரு பெரிய அழிவு உன்னைப் பின்தொடருகிறதென்று முன்னறிவித்தார். இந்தத் தீர்க்கதரிசனமும் இயேசு தேவனால் அனுப்பப்பட்டவர் என்று திட்டமாக உணர்த்துகிறது. ஏனெனில் இத்தீர்க்கதரிசனத்தின்படி கி. பி. 70-ம் வருஷத்தில் எருசலேம் நகரம் அழிக்கப்பட்டது.

தியானம்

இந்தச் சமயம் இயேசு அழவேண்டிய சமயமாயிராமல் ஆனந்தங்கொள்ளவேண்டிய சமயமாயிருக்கிறது. அவர் வாகனத்தின்மேலிருக்கிறார். அவர் முன்னும் பின்னும் சேனைஜனம் வருகிறார்கள். ராஜகோலமும், ஜெயகீதமும் அவருக்குக் கிடைக்கிறது. அவருடைய கண்ணுக்கு முன்னே அலங்காரமான ஒரு நகரத்தின் காட்சி நிற்கிறது. அப்படியிருக்க இயேசு கண்ணீர்விட்டு அழுதார். இது எப்படியாகும்?

இச்சமயத்தில் இயேசுவின் கண் தமக்கு முன்னிருந்த கட்டடங்களுக்குள்ளும், அலங்காரத்துக்குள்ளும் செல்லாமல் தாம் கண்ணோக்கின ஜனங்களின் இருதயங்களுக்குள் சென்றன. அவர் எருசலேமியருடைய இருதயங்களைத் தமது பரிசுத்த இருதயத்தில் படம் பிடித்தார். அப்படிப் படம்பிடிக்கவே, அவர்களுடைய விரோதங்கள், குரோதங்கள், பாவங்கள், படுதோஷங்கள் எல்லாம் அவருக்குத் தெரியவந்தது. தமது பக்கத்தில் நின்று ஓசன்னா பாடும் இந்த வாய்கள் இன்னும் சில நாட்களுக்குள் தம்மைத் தூஷிக்கும் என்பதும்; குருத்தோலைகளைப் பிடித்து ஆட்டும் கைகள் தமக்கு விரோதமாய்க் கத்திகளோடும் தடிகளோடும் சீக்கிரம் புறப்பட்டு வரும் என்பதும், மரக்கிளைகளை முறித்துத் தெளிக்கும் கரங்கள் முள்முடி பின்னி முடிசூட்டும் என்பதும் அவருக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. ஆதலால் அழுதார். அத்தோடு அந்நகரத்துக்கு வரும் தேவதண்டனையும் அழிவும், அவருடைய கண்ணீரை அதிகப்படுத்தினதுமன்றி அவரைப் புலம்பவும் பண்ணிற்று.

எருசலேமுக்காக என் இரட்சகர் அழுததுமாத்திரமோ? எனக்காகவும் அவர் அழுததுண்டு. எருசலேமுக்காக ஒருதடவை அழுதேன், உனக்காக பலதடவை அழுதேன் என்று அவர் சொல்லவும் கூடும். என் பாவ நிலைமையையும், அழுக்கையும் அவர் கண்டவுடனே, அவர் எரிச்சலடையவேண்டியது நியாயமாயிருக்க, அப்படிச் செய்யாமல் எனக்காக அழுகிறார். என் இரட்சகா,

நீர் எனக்காக எத்தனைதரம் அழுதீரோ? நீர் அழுது என் மனந்திரும்புதலை விரும்பினது நிச்சயம். நானோ இன்னும் ஒருநாளும் எனக்காக அழாத கல்நெஞ்சனாயிருக்கிறேன். அழுகிறவர்களைக் கண்டவுடன் அழாதவர்களும் மனமிளகி அழுகிறதுண்டு. என் கண்ணில் கண்ணீர் சுரக்காவிட்டாலும் உம்முடைய கண்ணீரின் வல்லமையால் என் கண்ணும் கசிந்து என் பாவத்தையும் அழிவையும் நினைத்து அழும்படி செய்யும்.

என் இரட்சகா! என்பேரிலுள்ள உமது அன்பு எவ்வளவு என்பதை உமது கண்ணீரால் வெளிப்படுத்துகிறீர். எனக்காக நீர் அழுகிறது மாத்திரமோ, இல்லை—இரத்தம் பொழியவும் சாகவும் போகிறீர் என்பதை நான் அறிவேன். அந்த இரட்சண்ய யாகக்காட்சியை நான் அழுகையோடும் கண்ணீரோடும் கண்டு களிகூருவேனாக.

ஜெபம்

இரக்கமுள்ள இயேசுவே, தேவரீர் உமது கண்ணீராலே எங்கள் கண்ணீர்களை அடக்கிவிடுகிறீர். ஆ, தேவனே உமது கண்ணீர்களினிமித்தம் உம்மைத் துதிக்கிறோம். உமது கண்ணீர் எங்கள் கண்களைக் கசியப்பண்ணுவதாக. தேவரீர் உமது ஆனந்தங்களின் மத்தியில் ஆறுத்துயரமடைந்து அழுதீரே. நானும் இவ்வுலகத்திலுள்ள என்னுடைய சந்தோஷங்களின் மத்தியில் உம்மையும், உமது கண்ணீரையும் என் மனதில் நினைத்து அந்தச் சந்தோஷங்களைப் பரிசுத்தப்படுத்தும்படி கிருபைசெய்யும். உம்மை மறந்துபோனதினிமித்தம் எனக்கு நேரிட இருக்கும் எல்லா நஷ்டங்களையும், துக்கமான முடிவுகளையும் தேவரீர் அறிவீரே. அவையனைத்தையும் தேவரீர் தயவாக மாற்றி எனக்குப் பாவமன்னிப்பின் சந்தோஷத்தையும், மோட்ச சுதந்தரத்தின் மகிழ்ச்சியையும், உமது பரிசுத்த ஆவியைக்கொண்டு தந்தருளும். ஆமென்.

8. இயேசுவை யூதர் பகைத்தது

வேதம்

"இப்பொழுது அவர்கள் என்னையும் என் பிதாவையும் கண்டும் பகைத்துமிருக்கிறார்கள். முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படி இப்படியாயிற்று" (யோவா. 15: 24, 25).

"அப்பொழுது பரிசேயர் வெளியேபோய், அவரைக் கொலை செய்யும்படி அவருக்கு விரோதமாய் ஆலோசனை பண்ணினார்கள்" (மத். 12: 14; மாற். 3: 6; லூக். 6: 11).

"அவர் ஓய்வுநாள் கட்டளையை மீறினதுமல்லாமல் தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்றுஞ் சொல்லித் தம்மை தேவனுக்குச் சமமாக்கினபடியினாலே, யூதர்கள் அவரைக் கொலைசெய்யும்படி அதிகமாய் வகை தேடினார்கள்" (யோவா. 5: 18).

"என்னுடைய வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கவில்லையா? நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்று அவர்களுக்குச் சொல்லி உபதேசித்தார். அதை வேதபாரகரும் பிரதான ஆசாரியரும் கேட்டு, அவரைக் கொலைசெய்ய வகை தேடினார்கள்" (மாற். 11: 17, 18).

"யூதர்கள் இயேசுவைக் கொலைசெய்ய வகை தேடினபடியால், அவர் யூதேயாவிலே சஞ்சரிக்க மனதில்லாமல் கலிலேயாவிலே சஞ்சரித்துவந்தார்" (யோவா. 7: 1).

"பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் ஜனத்தின் மூப்பரும் காய்பா என்னப்பட்ட பிரதான ஆசாரியனுடைய அரமனையிலே கூடிவந்து, இயேசுவைத் தந்திரமாய்ப் பிடித்துக் கொலைசெய்யும்படி ஆலோசனைப் பண்ணினார்கள்" (மத். 26: 3, 4).

"யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள் . . . . அந்நாள் முதல் அவரைக் கொலைசெய்யும்படிக்கு ஆலோசனைபண்ணினார்கள்" (யோவா. 11: 45–53).

போதனை

நமது இரட்சகர் தமது ஜீவகாலம் முழுவதும் பகைக்கப்பட்டார். அவரில் அன்பு வைத்தவர்கள் தொகையிலும், அவரைப் பகைத்தவர்களின் தொகை அதிகமாயிருந்தது. அவர் சிசுவாயிருக்கும்போதே ஏரோது அவரைப் பகைத்துக் கொலைசெய்ய நாடினான்.[1] அவர் லோக குருவாய் வெளிப்பட்ட பின்பு நல்ல போதனையும், அற்புதங்களையும், செய்ததினிமித்தம் பகைக்கப்பட்டார். ஒருதடவை சூம்பின கையுடைய ஒரு மனுஷனைக் குணமாக்கினதை யிட்டுப் பகைத்தார்கள்.[2] வேறொரு தடவையில் அவர் 38 வருஷம் நோயாளியாயிருந்த ஒருவனைக் குணமாக்கினதையிட்டுப் பகைத்தார்கள்.[3] தம்மைப் பகைப்பதைப்பற்றி இயேசு ஒரு தடவை பேசினபோது, "முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று அவர்கள் வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படி ஆயிற்று" என்று சொன்னார்.[4] அவர்கள் தங்கள் பகையை இயேசுவைக் கொலைசெய்வதால் பூரணப்படுத்தப் பார்த்தார்கள். ஆறு வெவ்வேறு தடவைகளில் அவரைக் கொலைசெய்ய யோசனைபண்ணினதாக வாசிக்கிறோம்.[5] என்றாலும் அவருடைய மரணம் பாவநிவாரணபலியாக இருக்கவேண்டியதாகையால் அதற்கென்று குறிக்கப்பட்ட காலமும், மாதிரியும்வந்து சேருமட்டும் தாமதப்பட்டுவந்தது. இயேசுவின் மரணதாமதம் சத்துருக்களின் பகை முற்றுகிறதற்கு அநுகூலமாயிருந்தது.

இரட்சகர் பாடுபட்ட வாரத்தின் செவ்வாயில், அவர் பேரில் தனித்தனியிருந்த பகையனைத்தும் ஒன்றாய்க் கூடின என்று சொல்லவேண்டியது. எப்படியெனில் அன்று சனதரீம் சங்கத்தைச் சேர்ந்த 24 ஆசாரிய வகுப்பின் தலைவரும், யூதப் பிரபுக்களின் தலைவர் 24 பேரும், வேதபாரகர் 22 பேரும் ஆக 70 பேர் வந்து அவரிடத்தில் பல கேள்விகளைக் கேட்டார்கள்.[6] இயேசு

[1] மத். 2: 13. [2] மத். 12: 14. [3] யோவா. 5: 16. [4] யோவா. 15: 25. [5] லூக். 13: 31; மத். 12: 14; யோவா. 5: 18; மாற். 11: 17, 18; யோவா. 11: 45, 53; மத். 26: 3, 4; [6] மத். 21: 20–27; மாற். 11: 20–23; லூக். 20: 1–8.

தமது மாறுத்தரத்தால் அவர்களனைவரையும் வெட்கத்தோடு திரும்பும்படி செய்தார். அப்பால் அவர்கள் தங்கள் கோட்பாட்டின்படி பிரிந்து பல கூட்டமாக வந்து தம்தம் கேள்விகளைக் கேட்டார்கள். ஏரோதியர் பிரிவு, சதுசேயர் பிரிவு, பரிசேயர் பிரிவு, வேதபாரகர் பிரிவு ஆக நாலு வெவ்வேறு பிரிவாக வந்து பல கேள்விகளைக் கேட்டும், அவரைக் குற்றப்படுத்தக் கூடாமற் போயிற்று. ஆகவே அவர்கள் பகை நாலுமடங்காகி பின்பு ஏகமாய்க் கூடி உக்கிரபகையாய் இயேசுவை விரோதித்துத் தங்கள் பகையின் முடிவைக் கொலையால் முடிசூட்டத் தீர்மானித்துக் கொண்டார்கள்.

தியானம்

இரட்சகா, நீர் எவ்வளவு உக்கிரமாய்ப் பகைக்கப்பட்டீர் என்று பார்க்கிறேன். பரமபிதாவானவர் பரலோகத்திலிருந்து உம்மைக்குறித்து,

"இவர் என்னுடைய நேசகுமாரன்"
இவரில் பிரியமாயிருக்கிறேன்"[1]

என்று இரண்டுதடவை கூறினர். அதே காலத்தில் ஆறு வெவ்வேறு தடவைகளில் மனுஷர் கூடி உம்மைப் பகைத்து, உம்மைக் கொலைசெய்ய ஆலோசனைபண்ணினர்கள். நீர் உமது குமாரனைக் காட்டி,

"இவர் என்னுடைய நேசகுமாரன்" என்கிறீர்.
நானே இவர் என்னுடைய பிராணசத்துரு என்கிறேன்.
நீர் "இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்கிறீர்.
நானே இவரில் பகையாயிருக்கிறேன் என்கிறேன்.

இப்படி நீர் இரண்டுதடவை திருப்பிச் சொல்லுகிறீர், நானே பலதடவை உம்மை மடக்கிப் பேசுகிறேன். இப்படி நான் சொல்வதால் அவரைமாத்திரமல்ல உம்மையும் பகைக்கிற பாவியாயிருக்கிறேன். "என்னைப் பகைக்கிறவன் என் பிதாவையும் பகைக்கிறுன்"[2] என்று இயேசு சொல்வது நியாயம்தான்.

---

[1] மத். 3: 17; 17: 6. [2] யோவா. 15: 23.

இரட்சகா, உம்மை நான் பகைக்க முகாந்தரமுண்டா? என்பதையறிய சற்றுநேரம் யோசித்தேன். அப்படிப் பகைக்க ஒரு அற்ப முகாந்தரமாவது, முகாந்தரத்தின் நிழலாவது என் மனதுக்குத் தென்படக்காணோம். என்னை இரட்சித்து மீட்ட நாயனை பகைக்க நியாயம் வருமா?—என்னை உயர்த்தும்படி தாழ்ந்தீரே—உம்மைப் பகைக்கலாமா—என்னை ஐசுவரியவானுக்கும்படி தரித்திரரானீரே—உம்மைப் பகைக்கலாமா?—என் கடனைத் தீர்த்த புண்ணியவான் நீர் அல்லவா—உம்மைப் பகைக்கலாமா?—நீர் எனக்கு நல்ல போதனைகளை அருளிச்செய்த குருவாச்சுதே—உம்மைப் பகைக்கலாமா?—எனக்காக நீர் மரித்த நேசரல்லவா—உம்மைப் பகைக்கலாமா?—பகைக்க நியாய முண்டா?—நான் உம்மைப் பகைக்க யாதொரு நியாயத்தையும் காணேன்; அதற்குப் பதிலாக நானும்மை நேசிக்கும்படியான எண்ணிறந்த நியாயங்கள்மாத்திரம் என் மனதில் வருகின்றன. நீர் என் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்தீர்—என் பாவங்களையெல்லாம் மூடினீர்—என் நோய்களை எல்லாம் குணமாக்கினீர்—என் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டீர்—என்னைக் கிருபைகளாலும், இரக்கங்களாலும் முடிசூட்டினீர்—நன்மையால் என் வாயைத் திருப்தியாக்கினீர்—ஆ, நீர் என் தண்டனையை ஏற்றுக்கொண்டீர்—என் வெட்கத்தைச் சகித்தீர்—என் அவமானம் உமது அவமானமாயும்—என் சாவு உமது சாவாயுமிருக்கும்படி மாற்றிக்கொண்டீர்—என் இரட்சகா, உம்மைப் பகைக்க யாதொரு நியாயமேயில்லை. "முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள்" என்று நீர் சொல்வது சரிதான். என் நேசரே, நான் முகாந்தரங்களுக்கு விரோதமாயும், முகாந்தரமில்லாமலும் உம்மைப் பகைத்த பாவியாயிருக்கிறேன். ஆ நான் மகா துரோகி—நான் குருதுரோகி—நான் நேசதுரோகி—நான் தேவதுரோகி—இப்படிப்பட்ட துரோகத்தை நீர் சாத்தான்களிடத்திலும் கண்டதில்லை என்று உணருகிறேன்.

என் நேசரே, உம்மை நான் பகைக்க யாதொரு முகாந்தரமில்லாதிருந்தும், உம்மை நேசிக்க அநேக

முகாந்தரங்களிருந்தும், உம்மைப் பகைத்துவருகிறேனே! இது ஏன், இதின் காரணமென்ன என்று யோசிக்கும் போது, நீர் என்னைக் காரணமில்லாமல் நேசித்ததுதான் அதின் காரணம் என்று கண்டு, தலை குனிந்து நிற்கிறேன்!

இயேசுவே, நீர் காரணமில்லாமல் என்னை நேசித்தீர்!!
இரட்சகா, நீர் என்னை முகாந்தரமில்லாமல் நேசித்தீர்!!

இது என்ன சிநேகம்—இதென்ன அன்பு?—இது இப்பூலோக அன்பல்ல—பூலோகம் காரணத்தோடு நேசிக்கும்—இது பாதாளலோகத்து அன்புமல்ல—பாதாளத்துக்குள் நேசம் என்னப்பட்டதே இல்லை—பின்னை இந்த அன்பு எங்கேயுள்ளது?

இது பரலோக அன்பு.
இது தேவனுடைய அன்பு.

இவ்வித அன்பால் நீர் உம்மை என் இரட்சகராக மாத்திரமல்ல, என் தேவனாகவும் பிரஸ்தாபிக்கிறீர். ஆ, தேவ இரட்சகா, இதேமாதிரி அன்பு என் மனதுக்குள் அருளப்படும்வரையும், என் அன்பு மாயமுள்ளதாயும், மாம்ச தன்மையுள்ளதாயும், மாறுதலுள்ளதாயுமேயிருக்கும். என் நேசரே, ஆ என் பிராண நேசரே, உம்மைப் பூரணமாய் நேசிக்கும்படி எனக்கு அதிக ஆசையுண்டாகிறது; என் ஆசை தீரும்படி, உம்முடைய அன்பை என் இருதயத்தில் ஊற்றியருளும்.

ஜெபம்

இந்நாள்மட்டும் என்னால் பகைக்கப்பட்ட இயேசுவே; என் பாவங்களால் அடிக்கடி அவமானப்பட்ட இரட்சகா! என் அக்கிரமங்களால் பலதடவை குத்துண்ட மீட்பரே, என் இருதயத்தின் கேட்டை உணருகிறேன். உம்மை இம்மட்டும் நான் பகைத்த பாவியாயும், உமது பரிசுத்த ஆவியைத் தூரத்தி அடித்த துரோகியாயும், உமது பிதாவை விரோதித்த சண்டாளனாயுமிருக்கிறேன். நீர் என் ஆத்துமாவுக்கும் சரீரத்துக்கும் வேண்டிய எல்லா நன்மைகளையும் செய்துவந்தும் நான் உம்மைப் பகைத்தே

வந்தேன். இப்படிப் பகைக்கும் சுபாவம் இன்றோடு தொலையவும் உம்மை நேசிக்கும் மனம் எனக்குள் உண்டாகவும் தயவுசெய்தருளும். நீர் என்னை நேசிக்க என் பாவங்கள் காரணமாயிருந்தது. நான் உம்மை நேசிக்க தேவரீருடைய பாடுகள் காரணமாயிருக்கும்படி அந்தப் பாடுகளில் விளங்கிய அன்பை எனக்குக் காட்டியருளும். அதோடு உம்மை முகாந்தரமில்லாமல் பகைக்கிற எல்லாப்பாவிகளும் தங்கள் மனதை மாற்றி முகாந்தரத்தோடு உம்மை நேசிக்கும்படி உமது அன்பின் கயிறுகளால் அவர்களையும் இழுத்தருளும். உமது மட்டில்லாத அன்பின்கீழ் உமதுமேலுள்ள என் பகைகள், விரோதங்கள், அசட்டைகள் யாவற்றையும் புதைக்கிறேன். இனி அந்த அழிம்பான சுபாவங்கள் மாறி உம்முடைய பேரிலுள்ள நேசம் என்னில் விளங்கும்படி அனுக்கிரகம் செய்தருளும். ஆமென்.

9. இயேசு மரணத்துக்கு ஆயத்தப்பட்டது

வேதம்

இயேசு, தாம் எருசலேமுக்குப் போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத்தொடங்கினார்" (மத். 16: 21).

"அவர்கள் கலிலேயாவிலே சஞ்சரிக்கும்போது, இயேசு அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார். அவர்கள் அவரைக் கொலைசெய்வார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார் என்றார். அவர்கள் மிகுந்த துக்கமடைந்தார்கள்" (மத். 17: 22).

"இதோ, எருசலேமுக்குப் போகிறோம்; மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக்கொடுக்கப்படுவார்; அவர்கள் அவரை மரணாக்கினைக்குள்ளாகத் தீர்த்து, அவரைப் பரியாசம் பண்ணவும், வாரினால் அடிக்கவும், சிலுவையில் அறையவும்

புறஜாதியாரிடத்தில் ஒப்புக்கொடுப்பார்கள்; ஆகிலும் மூன்றும் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார்" (மத். 20: 18, 19).

"இரண்டு நாளைக்குப்பின்பு பஸ்காபண்டிகை வருமென்று அறிவீர்கள்; அப்பொழுது, மனுஷகுமாரன் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக்கொடுக்கப்படுவார் என்றார்" (மத். 26: 1–3).

போதனை

இயேசுவுக்கு அவருடைய பாடுகளின்பேரில் இருந்த வாஞ்சை அவ்வளவு வேறொன்றின்பேரிலு மிருக்கவில்லை. "நான் முழுகவேண்டிய ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்"[1] என்று ஒருதரம் சொன்னார். முதலாம் வாக்குத்தத்தம் ஏதேனில் கொடுக்கப்பட்ட நிமிஷமுதல், அவர் தம்மை நமக்காகப் பாடுபட ஒப்புக்கொடுத்துவிட்டார். ஆகவே அவரை உலகத்தோற்றத்துக்குமுன் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் என்று பரி. யோவான் சொல்வது சரிதான்.[2] பரி. பேதுரு சொல்லுகிறபடி "அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து, தமது மூலமாக தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற நமக்காக இந்தக் கடைசிக் காலத்தில் வெளிப்பட்டார்.[3] சூரியனைக்கொண்டும், சந்திரனைக்கொண்டும் காலங்களைக் கணக்கிட்டு வருஷங்களைக் கழித்துப்போடும் மனுஷஜாதிக்கு இது தாமதம்போலிருந்தாலும், சூரியனில்லாத லோகத்திலிருந்து, தமது ஜோதியையே தமக்குச் சூரியனாகவும், தமது நித்தியத்தையே நாளாகவும் எண்ணி வருகிறவருக்கு இது ஓரேநாள் போலவேயிருக்கிறது. கிறிஸ்துவானவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறாரல்லவா.[4]

மனுஷர் கணக்கின்படி அவர் பாடுபடவேண்டிய நாள் நெருங்கினது. அதற்கு இரண்டுநாளுக்கு முன், இயேசு மறுபடியும் தமது பாடுகளைப்பற்றித் தமது சீஷருடன்

---

[1] லூக். 12: 50. [2] வெளி. 13—8. [3] 1 பேது. 1: 20. [4] எபி. 13: 8.

பேசி, அது சம்பவிக்கும் நாளையும் குறிப்பித்தார். "இரண்டுநாளைக்குப் பின்பு பஸ்காபண்டிகை வருமென்று அறிவீர்கள். அப்பொழுது மனுஷகுமாரன் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக்கொடுக்கப்படுவார்" என்று சொன்னார்.[1] இந்த வாசகம், பாடுபட்ட வாரத்தின் புதன் அதிகாலையில் சொல்லப்பட்டிருக்க வேண்டியது. செவ்வாய் முழுவதும் இயேசுவுக்கு அதிகமான போதக வேலையிருந்தது. அன்று சாயரட்சையில் அவர் தமது சீஷரை ஒலிவமலைக்குக் கூட்டிப்போய் எருசலேமின் அழிவையும், உலகத்தின் கடைசி வரலாறுகளையும், நியாயத்தீர்ப்பையும்பற்றி அவர்களுக்கு விவரித்தார். இந்த வரலாறுகள் சீஷர் மனதைக் கலக்கத்தில் வைத்தது என்று சொல்லவேண்டியது. இந்தச் செவ்வாய் இரவு முதல் வியாழன் பகல் வரையும் இயேசு யாதொன்றும் பேசாமலும் செய்யாமலும் தனிவாசமாயிருந்து, பரிசுத்த தியானங்களில் தமது வேளைகளைக் கழித்தார். வேறுவிதமாகச் சொன்னால், தாம் அநுபவித்து நிறைவேற்றப்போகிற பாடுகளுக்குத் தம்மை ஆயத்தப் படுத்திக்கொண்டார்.

தியானம்

என் இரட்சகர் மரணத்துக்கு ஆயத்தமாக காத்திருக்கிறார். ஜெபத்தோடும், அமைதலோடும் அந்த வேளை எப்போது வரும் என்று வாஞ்சிக்கிறார். தம்முடைய மரணம் நெருங்கியிருக்கிறதென்பது அவர் ஒருவருக்கே தெரிந்திருந்தது. பிரதான ஆசாரியர் முதலியவர்கள் அவரைக் கொலைசெய்ய ஆலோசனை பண்ணினபோதிலும், இது அதற்கேற்ற காலமல்லவென்று அந்த யோசனையை நிறுத்தியிருந்தார்கள்.[2] அவர்கள் அப்படி நிறுத்தினாலும் கடைசியில் அது நிறைவேறுகிற காரியமென்று இயேசு நன்றாக அறிந்து அதற்கென்று தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ளுகிறார். ஜனங்களுக்குள்ளே கலகமுண்டாகாதபடி பண்டிகையிலே இயேசுவைக் கொலைசெய்யக் கூடா

[1] மத். 26: 2. [2] மத். 26: 5.

தென்பது யூத பிரதான ஆசாரியருடைய தீர்மானமா யிருந்தது. ஆனால் நம்முடைய மகா பிரதான ஆசாரியரோ, இதே பண்டிகையில், இவ்வளவு ஜனங்களின் கண்கள் காணச் சாகவேண்டுமென்று தீர்மானித்திருந்தார். யூத பஸ்கா நாளில் பூலோக பஸ்கா பலியாகி, பூர்வ எகிப்திய விடுதலையின் ஞாபகத்தை பாவ விடுதலையின் ஞாபகத்தின மாக மாற்றும்படி சித்தங்கொண்டார்.

இயேசுவே, இப்படி உம்முடைய பாடுகளைத் தேவரீர் அடிக்கடி சொல்லுவதின் இரகசியமென்ன? என் உலக சிந்தையை அகற்றிப்போடவும், தேவரீருடைய மரணம் தற்செயலாக வாராமல் தேவ தீர்மானத்தால் வந்தது என்று நான் அறிந்துகொள்ளவும், உமக்குண்டாகிற பாடுகளை நான் காத்திருந்து கவனித்துத் தியானிக்கவும், நீர் கட்டாயமாயல்ல, மன உற்சாகமாய் மரணமடைகிறீர் என்று நானும் உலகமும் அறிந்துகொள்ளும்படிக்கும் இப்படி அறிவிக்கிறீர் என்று உணருகிறேன்.

என் இரட்சகா, தேவரீர் மகா பக்திவிநயத்தோடு உமது மரணத்துக்கு ஆயத்தப்படுகிறீர். இந்த மரண ஆயத்த மறைவை, அவிசுவாசி நோக்கிப்பார்த்து, நகைத்து, கைதட்டி, ஆகா, ஜெயமடைந்தேன். முப்பத்து மூன்று வருஷமாய் என் கண்ணியில் படாத இயேசு இன்று அகப்பட்டார். கடந்த இரண்டுமூன்று தினங்களில் அற்பசொற்பமாயுண்டான விரோதம் முற்று பெற்றதை இவர் அறிந்து தலைமறைவாகக் குகைக்குள் பதுங்குகிறார். அவர் வெட்கப்பட்டு, மனம் சோர்ந்து பதுங்கிப் போனார் என்று சொல்லுகிறான். ஆ பதிதனே, பதிதனின் புத்திரனே! அந்த இரகசியத்தை நீ அறியமாட்டாய். அதைப்பற்றி உன் பாட்டனாகிய பாதாள அப்பொல்லியோனைக் கேள். அவன் இந்த மறைவின் இரகசியத்தை அறிவான்.

அப்பொல்லியோன் சொல்வான்:—அப்பா, பதிதனே, என் பேரனே—அப்படி அழிம்பு பேசாதே—கன்னிமரியாளின் மகன் என்மேல் உன்னிப் பாயும்படி பதிவிருக்கிறாரப்பா—நாசரேத்தூர் தச்சன் குகைக்குள்ளிருந்து

னைக்குச் சவப்பெட்டி செய்கிறாரப்பா என்று சொல்லுகிறான். பதிதன் வாயைப் பராபரனுடைய பிள்ளை அடைக்க இயலாது. பதிதன் வாயைப் பாதாள பூதந்தான் அடைக்கவேண்டும்.

இரட்சகா, உமது பரிசுத்த அமைதலையும், மறைவையும்பற்றி பழித்துப்பேசின பதிதன் தொலைந்தான். உமது பிள்ளையாகிய நான் உமது பக்கத்திலிருந்து இந்த மகத்துவ இரகசியத்தைத் தியானிப்பேனாக:—என் ஆத்துமபோதகரே, உம்மிடத்தில் உபதேசம் கேட்க நேற்று, முந்தாம் நாள் போல் தேவாலயத்துக்குப் போனேன், அங்கே நீர் வரவில்லை. வெகுநேரம் காத்திருந்தேன்; கடைசியாக, உம்மைத்தேடி இங்கே வந்தேன். இதுதானா தேவரீருடைய கடைசித் தங்கல்?—இங்கே சமையல் நடந்த குறிப்பாவது, நீர் சாப்பிட்ட அடையாளமாவது, தூங்கின ஜாடையாவது இல்லையே—நீர் பசியாயும், விழிப்பாயுமிருக்கிறீர். நீர் தலைகுனிந்தவராய் பூலோகத்தின் பாவ அழுக்கை நோக்கிப் பார்க்கிறீர்—என்னுடைய அழுக்குகள் உமது கண்களின் முன் கடந்துபோகும்போது, அதின் நாற்றம் உமது நாசியை வருத்தப்படுத்தி, உமது கண்களைக் கண்ணீரால் நிரப்பி, உமது சுவாசப்பையை இருத்துகிறதால் பெருமூச்சு விடுகிறீர்! சிலதரம் நீர் தலைநிமிர்ந்து பார்க்கிறீர். பரலோக தேவன் உமது தலைக்குமேல் விரித்துக்காட்டும் உமது பாடுகளின் படம் மகா துயரக்காட்சியைக் கொடுக்கிறது. உம்மை முத்தமிடுவதும், காட்டிக்கொடுப்பதும், உம்மைக் கட்டும் கயிறும், அடிக்கும்தடியும், வாரும், அறையும் ஆணியும், உமக்குத் தரிக்கும் அங்கியும், சூடும் முண்முடியும் எல்லாம் படத்தில் எழுதப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறீர். என்னையும், நான் செய்யும் அவமானங்களையும்கூட பிதாவானவர் உமக்குப் படமெழுதிக் காட்டியிருக்கிறார். நீர் இந்தப் படத்தைப்பார்த்து மலையவில்லை—நீர் இடைக்கிடையே முகமலருகிறீர்.—இங்கிருந்து நீர் கடக்கவேண்டிய மரணயோர்தானின் அலைத்திரளைக் காண்கிறீர்—உமது பாடுகளின் சமுத்திர ஆழத்தை உமது அன்பின் கயிற்றால் அளந்து பார்த்து, இவ்வளவு ஆழந்தானா—இவ்வளவு

தூரந்தாரு என்கிறீர்—கெத்செமனே படமும், கொல்கதாவின் படமும் உம்மைக் கலங்கடிக்கக் காணும்; பிதாவே, உமது சித்தத்தின்படி ஆகக்கடவது என்று மாத்திரம் சொல்லி ஒவ்வொரு படத்தையும் சுருட்டி வைக்கிறீர்.

தேவரீர் உமது ஊழியத்தை ஆரம்பிக்க வனத்தில் 40 நாள் உபவாசத்தோடு ஆயத்தப்பட்டீர், இப்போது அந்த ஊழியத்தை முடிக்கும்படி, செவ்வாய் இரவுமுதல் வியாழன் மத்தியானம்வரையுமாக சுமார் 40 மணிநேரம் உபவாசத்தோடு ஆயத்தப்படுகிறீர்.

என் மீட்பரே, நீர் சற்றுநேரம் அமைதலாயிருந்து உம்மைப் பலப்படுத்திக்கொண்டு, எனக்காகப் பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணப் போகிறீர். உள்ளபடி இது உமக்கு அமைதலாயிராமல் ஓயாத வேலைநேரமாயிருக்கிறது. உலகத்தோடு நீர் செய்ய வேண்டிய வேலையும் பேசவேண்டிய பேச்சும் முடிந்தது. நீர் தனிமையாய் உமது பிதாவோடு உட்கார்ந்து எனக்காகப் படப்போகிற பாடுகளில்ஒன்றும் தவறிப்போகாதபடி அவைகளை வரிசைப்படுத்தி ஆயத்தப்படுகிறீர்; அவைகளில் முதலாவதானது பரிசுத்த நற்கருணை ஸ்தாபகமே.

என் இரட்சகா, நீர் சற்றுநேரம் மறைவாயிருப்பதில் வேறொரு இரகசியத்தையும் காண்கிறேன். உம்முடைய சத்துருக்களுக்கு இந்த மறைதலால் நல்ல சமயத்தைக் கொடுக்கிறீர். நீர் முந்தின நாட்கள்போல திரிந்தலைந்தால் உமது சத்துருக்கள் சாவதானமாக உமக்கு விரோதமான ஏற்பாடுகளைச் செய்யும்படி ஒருவேளை தடைகளுண்டாகலாம். அவர்கள் தங்கள் மனம் கொண்டபடி, உமக்கு விரோதமான ஏற்பாடுகளனைத்தையும் செய்யும்படி நீரே இடம் கொடுக்கிறீர். ஆ, இதென்ன அன்பு! ஆ இதென்ன அன்பு!! நான் இம்மட்டும் போதுமென்றிருந்துவிடாமல் தேவரீருடைய பாடுகளின் வழியே சென்று என் கண்ணீரால் உமது காயங்களைக் கழுவும்படி தயவு செய்யும்.

ஜெபம்

ஸ்தோத்திரத்துக்குப் பாத்திரரான என் மீட்பரே, தேவரீர் எனக்காகப் பாடுபடும்படி எவ்வளவாக உம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ளுகிறீர். என் இரட்சிப்பின் வேலை எவ்வளவு விசேஷமானதென்று இதனால் காண்பிக்கிறீர். நேச இரட்சகா, உம்மை நான் அதிகமாய் நேசிக்கும்படி உமது நேசத்தால் என்னை நிரப்பியருளும். பிதாவானவர் உம்முடைய பாடுகள் அனைத்தையும் உமக்கு வெளிப்படுத்தினது போல தேவரீர் அவை அனைத்தையும் எனக்கு வெளிப்படுத்தியருளும். உமக்காக நேரிடும் எல்லாப் பாடுகளையும், துன்பங்களையும் நான் முறுமுறுப்பில்லாமல் சகித்துக் கடைசியாக உம்முடைய ராஜ்யத்துக்குள் பிரவேசிக்க விரும்புகிறேன். இப்பொழுது பரலோகத்தில் வெற்றிவேந்தராய் வீற்றிருக்கும் இயேசுவே, நான் தேவரீருடைய பாடுகளைத் தியானிப்பதால் சகல பாவங்களையும் ஜெயித்து வெற்றிசிறக்கும்படி அநுக்கிரகஞ் செய்தருளும். ஆமென்.

10. பஸ்கா ஆயத்தம்

வேதம்

"பஸ்காவைப் பலியிடும் நாளாகிய புளிப்பில்லாத அப்பஞ் சாப்பிடுகிற முதலாம் நாளிலே, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: நீர் பஸ்காவைப் புசிப்பதற்கு நாங்கள் எங்கே போய் ஆயத்தம்பண்ணச் சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டார்கள். அவர் தம்முடைய சீஷரில் இரண்டுபேரை நோக்கி: நீங்கள் நகரத்துக்குள்ளே போங்கள், அங்கே தண்ணீர்க்குடம் சுமந்து வருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான், அவன் பின்னே போங்கள்; அவன் எந்த வீட்டுக்குள் பிரவேசிக்கிறானோ அந்த வீட்டு எஜமானை நீங்கள் நோக்கி: நான் என் சீஷரோடுகூடப் பஸ்காவைப் புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கே என்று போதகர் கேட்கிறார் என்று சொல்லுங்கள். அவன் கம்பளம் முதலானவைகள் விரித்து ஆயத்தம்பண்ணப்பட்டிருக்

கிற விஸ்தாரமான மேல்வீட்டறையை உங்களுக்குக் காண்பிப்பான்; அங்கே நமக்காக ஆயத்தம்பண்ணுங்கள் என்று சொல்லியனுப்பினார். அப்படியே, அவருடைய சீஷர் புறப்பட்டு நகரத்தில் போய், தங்களுக்கு அவர் சொன்னபடியே கண்டு, பஸ்காவை ஆயத்தம்பண்ணினார்கள்" (மத். 26: 17–19; மாற். 14: 12–16; லூக். 22: 7–13).

போதனை

பஸ்காவென்றால் கடந்துபோகுதல் என்று அர்த்தம். எகிப்தியருடைய தலைச்சன்களைக் கொலைசெய்த சங்கார தூதன் இஸ்ரவேலருடைய வாசல் நிலைகளில் பூசியிருந்த இரத்தத்தைப் பார்த்து கடந்துபோனான். ஆகவே பஸ்கா என்ற பேர் இந்த உற்சவத்துக்கு வழங்கப்பட்டது. இந்த உற்சவத்தில் அடிக்கப்பட்ட ஆடும், சமைக்கப்பட்ட போஜனமும் பஸ்கா என்றே அழைக்கப்பட்டது.

செவ்வாய் இரவுமுதல் வியாழன் விடியும்வரை மறைவாயிருந்த இயேசுவின் திருமுகம் மறுபடியும் காணப்பட்டது. பஸ்காவுக்கு இரண்டுநாள் மாத்திரமிருந்தும், சீஷர் யாதொரு ஆயத்தமும் இதுவரை செய்ததில்லை. இயேசுவோ தம்மைப் பஸ்காவாக்கும்படி செய்யவேண்டிய முறைகளையெல்லாம் தவறாமல் செய்து வந்தார். அவர் தாமே சர்வலோகத்தின் பஸ்கா ஆடாக ஞாயிறு அதிகாலையில் தம்மை வெளிப்படுத்தி எருசலேமின் தெருக்கள் வழியாக, ஓசன்னாக்கள் தொனிக்க, ஒலிவ இலைகள் பறக்க, குருத்தோலைகள் வீச, கும்புகள் கூட விரைந்து நடந்துபோனார். இந்த மகத்துவ இரகசியத்தை சீஷராவது மற்றவர்களாவது அறியவில்லை. சீஷர் அவரைக் கண்டவுடனே, சுவாமி நீர் பஸ்காவைப் புசிக்கும்படி நாங்கள் செய்யவேண்டிய ஏற்பாடென்னவென்று கேட்டார்கள். அவர்கள் தம்தம் பஸ்காவை தங்கள் இனபந்துக்களோடே நடத்திக்கொள்ள ஆலோசித்தார்களாக்கும். இயேசுவோ தாமும் தமது சீஷருமாக இந்தப் பஸ்காவை ஆசரிக்கத்தீர்மானித்து, பேதுரு

யோவான் என்ற இரண்டுபேரையும் குறிப்பிட்டு "நாம் பஸ்காவைப் புசிக்கும்படி" இன்னின்னபடி செய்யுங்கள் என்று கட்டளையிடுகிறார். இயேசு பஸ்கா ஆசரிப்புக்கு இடம் காட்டினது, கோவேறுகழுதையைப்பற்றி அடையாளம் சொல்லி அனுப்பினதுபோலிருக்கிறது. இங்கே கிறிஸ்துவின் தெய்வீகம் விளங்குகிறதல்லவா? சீஷர் அப்படியே போய் பஸ்கா ஆசரிப்புக்குரிய எல்லாக் காரியங்களையும் ஆயத்தப்படுத்தினார்கள்.

தியானம்

யூதருடைய பண்டிகைகள் எல்லாவற்றிலும் பஸ்கா விசேஷமானதாயிருந்தது. அது விசேஷமானதுதான். அது எகிப்தின் அடிமைத்தனம் ஒழிவடைந்ததைக் காட்டினதல்லவா? எகிப்தின் அடிமைத்தனத்திலும் கடினமான அடிமைத்தனம் பாவ அடிமைத்தனமல்லவா? அது முடிவடையும்படி பிதாவாகிய தேவன் சித்தம் கொண்டு தமது குமாரனை எனக்கு பஸ்கா ஆடாகத் தந்தார்.

என் இரட்சகா, தேவரீர் பஸ்காவுக்கு இடம் தேடுகிறீர். நீர் இடம் தேடினது எருசலேமியருக்குத் தெரிந்தது நிச்சயமானால் அநேகர் உமக்குச் சந்தோஷத்தோடு இடம் கொடுக்கலாம். ஆனால் உமக்கேற்ற இடத்தை நீரே தெரிந்துகொண்டீர். அது வேலையாள் வைத்து வேலைவாங்கும் ஒரு பிரபுவின் வீடாயும், நீர் உமது சீஷருடன் சாங்கோபாங்கமாயிருந்து விருந்துண்ண விஸ்தாரமானதாயும், ஒரு மேல்மெத்தையாயும், கம்பளம் முதலானவை விரித்த இடமாயுமிருந்தது. யூதருடைய முறைமையின்படி இப்படிப்பட்ட இடந்தான் பஸ்கா கொண்டாட உதவும். உம்முடைய சொந்த பஸ்கா வேறே—அதை நீர் கொண்டாடும் இடத்தின் தன்மையும் வேறே—கிறிஸ்துமார்க்கத்தின் பஸ்கா நீர்தான். இதைக் கொண்டாடும்படியான இடத்தை நீரே தேடிவருகிறீர். உம்முடைய பஸ்காவைக் கொண்டாட நீர் பாவ இருதயங்களைத் தெரிந்துகொள்ளுகிறீர். நான் நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந் திரும்புகிறதற்கு

அழைக்கவந்தேன்[1] என்று ஒருதடவை சொன்னது நிஜம்தான். நீர் பாவ இருதயத்தின் ஓரமாய் வந்து "இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்—என் சத்தத்தைக் கேட்டுக் கதவைத் திறந்தால் அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடு போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடு போஜனம்பண்ணுவான்" என்று சொல்லிக்கொண்டு திரிகிறீர்.[2] "என் பிரியமே, என் புறாவே, என் உத்தமியே, கதவைத்திற; என் தலை பனியினாலும், என் தலைமயிர் இரவில் பெய்யும் தூறலினாலும் நனைந்திருக்கிறது" என்று புலம்புகிறீர்.[3] நீர் ஏழை இருதயங்களண்டை உமது பொன்னோடும், அவலட்சணமான பாவ இருதயங்களண்டை உமது வெண்வஸ்திரத்தோடும், குருட்டு இருதயங்களண்டை உமது கலிக்கத்தோடும், முரட்டு இருதயங்களண்டை உமது சிட்சையோடும், கடிந்துகொள்ளுதலோடும் வந்து, உம்முடைய பஸ்காவைப் புசிக்கச் சித்தம் கொள்ளுகிறீர்.[4] இது ஒரு பெரிய தயவு.

இப்பொழுதும் என் நேசரே, எப்பொழுதும் இரக்கமாயிருக்கிறதும் மன்னிக்கிறதும் உம்முடைய சுபாவமாயிருக்கிறது. பாவிகளை நேசித்து ஆசீர்வதிப்பது உமக்கே உரியது. அடியான்மேல் கிருபைகூர்ந்து, இன்று என் இருதயத்தில் உமது பஸ்காவை ஆசரிப்பீராக. என் இரட்சகா! என் வீடு மெத்தை வீடல்ல—அது தாழ்ந்த கீழ் அறை—அந்தத் தாழ்ந்த பாவ பள்ளத்திலிருந்து உம்மை நோக்கிக் கெஞ்சுகிறேன். பரலோகத்திலுள்ள பிதாவின் மடியிலிருந்து கன்னிமரியம்மாளின் கர்ப்பமட்டும் இறங்கினீரே; அதுபோல் என் பாவ பள்ளத்திற்குள்ளும் படி இறங்கி வாரும். உமக்கு உன்னதத்தில் ஏறவும் தெரியும், பாதாளத்தில் இறங்கவும் தெரியும்; வாரும் இயேசுவே, எனக்குள் வந்து உமது பஸ்காவை ஆசரியும். என் வீடு சகலவிதமான அழுக்குகளாலும், வீச்சத்தாலும் நிறைந்திருக்கிறது. அதை நீர் உமது

---

[1] மாற். 2: 17. [2] வெளி. 3: 20. [3] உன். 5: 2.
[4] வெளி. 3: 18, 19.

ஆவியை அனுப்பிச் சுத்தம்பண்ணியருளும். வாடையே எழும்பும், தென்றலே வாரும், கந்தப் பிசின்கள் வடிய என் இருதயத்துக்குள் வீசும், என் இரட்சகா என்மேல் மனமகிழ்ச்சி கொள்ளும்படிக்கும், தினந்தோறும் எனக்குள் தம்மைப் பஸ்காவாக ஆசரிக்கவும் வேண்டிய ஆயத்தங்களை யெல்லாம் செய்வீராக.

என் நேச இயேசு இதோ பாவமன்னிப்பின் தட்டோடு என் ஆத்துமாவண்டை வருகிறூர். நான் என் கதவைத் திறப்பேனுக, இயேசுவே வாரும்—வந்து வீற்றிரும்—இரட்சகா, பந்தியமர்ந்து உமது விருந்தை அளியும்—என்னை உடுத்தியருளும்—நான் நிர்வாணன்; என்னைக் கழுவியருளும்—நான் அசுத்தன்; என் கண்ணுக்குக் கலிக்கமிடும்—நான் குருடன்; உமக்குச் சித்தமானுல் என்னைச் சிட்சியும்—நான் இடும்பன்; என்னைப் போஷியும்—நான் பசித்தவன்; எனக்கு உமது இரட்சிப்பின் பாலைத் தாரும்—அதை நான் இதற்குமுன் ருசித்ததில்லை.

ஆத்துமாவே, பழைய பஸ்காவுக்கும், இந்தப் புதிய பஸ்காவுக்கும் பெரிய வித்தியாசமுண்டு. இங்கே கசப்பான கீரையில்லை. எல்லாம் தித்திப்பான பதார்த்தங்களாயிருக்கின்றன. இந்தப் பஸ்காவைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான். இது கர்த்தருடைய பஸ்காவாயிராமல் கர்த்தரே பஸ்காவாயிருக்கிறமேன்மை பொருந்தியது. ஆதலால் பழைய புளித்தமாவோடேயல்ல; துர்க்குணமும் பொல்லாப்பும் என்னும் புளித்தமாவோடுமல்ல, துப்புரவு உண்மை என்னும் பரிசுத்த குணங்களோடே இதை ஆசரிப்பேனுக.

ஜெபம்

இரக்கமுள்ள இயேசுவே, தேவரீர் என் ஞான பஸ்காவாக இருக்கிறீர். உம்மை நான் விசுவாசத்தோடு என் இருதயத்தில் புசிக்கக் கிருபைசெய்யும். நீர் என் உள்ளத்தை நிமிஷம்தோறும் கடந்துபோகும் நிமிஷ பஸ்காவாயிரும். உமது திரு இரத்தம் என் இருதயவாசலில் எப்போதும் பூசப்பட்டு புதிதாய் விளங்க தயவுசெய்யும்.

அந்த இரத்தம் மறையும்நேரத்தில் சாத்தான் உட்பிரவேசிக்கப் பார்க்கிறான். அதற்கு இடமிராதபடி உமது இரத்தத்தால் தினந்தோறும் என்னைப் பூசியருளும். ஆமென்.

11. யூதாசின் சதியோசனை

வேதம்

"பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து என்பவன் பிரதான ஆசாரியரிடத்திற்குப்போய்: நான் அவரை உங்களுக்குக் காட்டிக் கொடுக்கிறேன், நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்றான். அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசைக் கொடுக்க உடன்பட்டார்கள். அதுமுதல் அவன் அவரைக் காட்டிக் கொடுப்பதற்குச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான்" (மத். 26: 14–16; மாற். 14: 10, 11; லூக். 22: 3–6).

போதனை

யூதாஸ் இயேசு சுவாமியைக் காட்டிக்கொடுக்கும்படி துணிந்த விஷயம் ஆச்சரியமாயிருக்கிறது. இதின் காரணம் பணம்தான் என்று சிலரும், பரிமள தைலத்தைப் பற்றிய சம்பாஷணையினாலுண்டான எரிச்சலென்று சிலரும், இயேசு தமது மகிமையைத் துரிதமாய் வெளிப்படுத்தும்படி யூதாஸ்செய்த உபாயம் என்று சிலரும் சொல்லுவார்கள். "யார் வைத்த தீயானாலும் வீடு வெந்தது" என்ற பழமொழிபோல, என்ன நோக்கத்தோடு யூதாஸ் இயேசுவைக் காட்டிக்கொடுத்தாலும், அது மோசமான செய்கையாகவே இருந்தது.

இரட்சகரைக் கொலைசெய்யவேண்டுமென்று பல தடவை ஆலோசனைபண்ணியிருந்த யூதர், தங்கள் நினைவுக்கேற்றகாலம் வாய்க்காததால், சாதாரணத்தில் பார்த்துக்கொள்ளலாமென்று நிறுத்திவைத்தார்கள். என்றாலும் யூதாஸ் பிரதான ஆசாரியர் முதலியவர்களிடத்தில் போய், 'இயேசுவைப்பற்றி நீங்கள் ஆதியில் கொண்ட தீர்மானத்தை நிறுத்துவானேன்? "நான்

அவரை உங்களுக்குக் காட்டிக்கொடுக்கிறேன். நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள்'' என்று கேட்டான். அவர்கள் அவனுக்கு முப்பது ரூபாய் கொடுக்க உடன் பட்டார்கள். அவரைக் காட்டிக்கொடுக்கிறேன் என்று சொல்வதும், அதற்குக் கூலி கேட்பதும் எவ்வளவு பயங் கரமாயிருக்கிறது. பாடுபட்ட வாரத்தின் புதன்கிழமை யில் இயேசு அமைதலாயிருந்து, சர்வலோகத்தையும் மீட்கும் யாகத்தை முடிக்கும் வழியைத் தியானித்துக் கொண்டிருக்கையில் யூதாஸ் இயேசுவை, எப்போது, எவ்விதமாய்க் காட்டிக் கொடுக்கலாமென்று ஆலோசனை செய்தான்.

தியானம்

பன்னிருவரிலொருவன் இயேசுவுக்குத் துரோகி யானது என்ன ஆச்சரியம்! பன்னிருவரில் ஒருவன் துரோகி—பன்னிருவரில் ஒருவன் இயேசுவை மறுதலிக் கிறான்—பன்னிருவரில் ஒருவன் சந்தேகி—பன்னிரு வரில் இருவர் ஆத்திரக்காரரும் அதிகாரப் பிரியருமா யிருந்தார்கள்—இப்படியே பன்னிருவரில் பழுதுள்ளவர் களைக் கழித்துவிட்டால் உத்தமர் எவ்வளவு சொற்பம். இயேசுவுக்குத் துரோகியாக கலிலேயாவிலாவது, யூதேயா, சமாரியாவிலேயாவது ஒரு ஆள் கிடையாதா?—அஞ்ஞான ரோமருக்குள் ஒருவன் அகப்படமாட்டானா? சாத்தான் அவர்களைத் தேடவில்லை—''பன்னிருவரில் ஒருவன்'' இந்த வேலைக்கு. ஆசாரியர் வேதபாரகர் சேனா வீரரைவிட தகுதி என்று தீர்மானம்பண்ணினான்—இயேசுவுக்கு அதிக கனவீனத்தை வருத்துவிக்கவும்—இவ்விஷயத்தில் அவருக்குண்டாகும் விசனத்தை அதிகப் படுத்தவும் அவன் நோக்கம்கொண்டான். காட்டிலுள்ள சிங்கம் ஒருவனைப் பீறிக் கொல்லுவதற்கும், வீட்டில் வளர்த்த கடா மார்பில் குத்தி மாளுவதற்கும் வித்தியாச முண்டல்லவா? ஆ, வளர்த்த கடாவாகிய யூதாசே, நீ உன்னை வளர்த்தவரைப் பீறினாய்! நான் உன்னைவிட யோக்கியனோ! நான் செய்ததை உலகம் அறியுமானால் யூதாசின் பேர் மறக்கப்பட்டு என்பேர்தான் பிரஸ்தாபிக்

கப்படும்! யூதாஸ் சுமார் மூன்று வருஷமாத்திரம் இயேசுவோடிருந்தான்—சாப்பிட்டான்—உபதேசம்கேட்டான்—தூங்கினான்—அவன் தன் ஆயுளில் ஒரேதடவை மாத்திரம் இயேசுவைக் காட்டிக்கொடுத்தான்—அப்படிக் காட்டிக்கொடுத்தபோது, 30 ரூபாயாவது வாங்கினான். அதை நிறுத்தி என் காரியத்தைக் கேள்—நான் .... *வருஷம் இயேசுவோடிருந்தவன்—நான் ஞானஸ்நானம் பெற்றதுமுதல் இதுவரையும் .... வருஷமாக அவருடைய உபதேசத்தைக் கேட்டிருக்கிறேன்—நான் இராப்போஜனப் பந்தியில் .... வருஷமாக இயேசுவோடு சாப்பிட்டிருக்கிறேன். நான் தினந்தோறும் இயேசுவே என்னை இரட்சியும் என்று சொல்லி நித்திரைபோனதுண்டு. இப்படிப்பட்ட நான் இயேசுவை ஒருதடவை மாத்திரமோ—அல்ல, அல்ல. அநேகம்தடவை காட்டிக்கொடுத்திருக்கிறேன்—நான் அவரைப் பலதடவை சில அணுக்களுக்கும் துட்டுகளுக்கும் காட்டிக்கொடுத்ததுண்டு. ஆ, நான் யூதாசிலும் தாழ்ந்தவன். இவ்வுலகத்திலுள்ள தேவ துரோகிகளின் டாப்பில், யூதாசின் பேர் முதலாவதாயிருக்கிறது—ஆனால் மறுலோகத்து டாப்பிலே என் பேர் முதலாவதாக இருந்தாலும் அது நியாயமாயிருக்கும்!

சாத்தான் இந்தப் பன்னிருவரில் தெரிந்துகொண்ட ஆளைப் பார். யூதாசைத் தெரிந்துகொண்டான். யூதா என்றாலும், யூதாஸ் என்றாலும் ஒன்றுதான். அந்தப் பேருக்கு தேவஸ்துதி என்று அர்த்தம். தேவஸ்துதி என்பவனைக்கொண்டே அவரை அவமரியாதை செய்ய வேண்டுமென்று தீர்மானித்தான். ஆதி யூதா தன் சகோதரனை விற்றான் (ஆதி. 37: 26, 27). இந்த யூதாஸ் தன் குருவை விற்றான். இப்படிப் பார்த்தாலும் நான் தப்புகிறதற்கு வழியில்லை. என் பேர் எப்படியிருந்தாலும், நான் என் இரட்சகரை ஸ்தோத்திரிக்க வேண்டியவன். அவர் என் அக்கிரமங்களை யெல்லாம் மன்னித்து, என் நோய்களை யெல்லாம் குணமாக்கி என் பிராணனை

* வாசிக்கிறவனே, காலி இடங்களை நீயே நிரப்பிக்கொள்

அழிவுக்கு விலக்கி மீட்டு என்னைக் கிருபையாலும் இரக்கங்களாலும் முடி சூட்டினவர். நான் ஆவியினால் நிறைந்து, சங்கீதங்களினாலும் கீர்த்தனங்களினாலும் கர்த்தரைப் பாடி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரிக்க வேண்டியவனாயிருக்கிறேன். ஆகவே நானும் யூதாஸ். நான் தேவனுக்கு ஸ்துதியுண்டாக ஜீவிக்கவேண்டியவன். ஆனால் என் ஜீவியம் அப்படிப் பட்டதல்ல. நான் என் மீட்பரைக் கனவீனம் பண்ணிக் காலம் கழிக்கிற பாவியாயிருக்கிறேன்.

இரட்சகா, உம்மைக் காட்டிக்கொடுக்க யூதாஸ் முப்பது ரூபாய்க்குச் சம்மதித்தான். இந்தத் தொகை யூதருக்குள் ஒரு அடிமையின் கிரயமாயிருந்தது. ஒரு மாடு ஒரு அடிமையானவனையாவது ஒரு அடிமைப்பெண்ணையாவது முட்டினால், அதற்குடையவன், அவர்களுடைய எஜமானுக்கு முப்பது சேக்கல் நிறையான வெள்ளியைக் கொடுக்கவேண்டும் (யாத். 21: 3, 2). என் தேவனே, நீர் அடிமையானீர். அடிமையின் ரூபமும், சாயலும், உடலும் நீர் எடுத்ததுமாத்திரமல்ல, அடிமையின் அந்தஸ்தும் விலையுமானீர். “யானை செத்தாலும் ஆயிரம் பொன்” என்றொரு பழமொழியுண்டு. அந்தப் பழமொழி முதலாய் உமக்குச் செல்லாமலிருக்கிறது. தேவன், தேவதூதரானார்—அல்லது சக்கரவர்த்தியானார் என்றாலும் அந்தச் சத்தம் உடலை குலுங்கப்பண்ணவேண்டுமே—தேவன் அடிமையானார் என்பது எவ்வளவு தியானத்துக்கும், ஸ்துதிக்கும் பாத்திரமான வாசகமாயிருக்கிறது. மனுஷனால் தேவன் எவ்வுளவு தாழ்வாக எண்ணப்படுகிறார்.

என் நேச இயேசுவே, என் திவ்யமணவாளரே, நீர் அடிமையின் விலைமாத்திரம் மதிக்கப்பட்டீர் என்பது எனக்குத் துக்கமாயிருந்தபோதிலும், அதில் என் ஆத்துமாவுக்கு ஒரு மகிழ்ச்சியும் வருகிறது, நான் சாத்தானின் அடிமை. என்னை மீட்க நீர் அடிமையானீர். ஆகவே நானும் அடிமை, நீரும் அடிமைதான்; நான்

என்னைக் கெடுக்க என்னை அடிமையாக்கினேன். நீர் என்னை மீட்க அடிமையானீர். நீர் அடிமையாகாத பட்சத்தில் என் அடிமைத்தனம் நீங்காது. நீர் என்னை மீட்குமட்டும் என் விலைதான் உமக்கும் கிடைக்கும். என்னை மீட்டபின்போ, நீர் எல்லா உலகங்களிலும் மேலான கிரயமுடையவராக மதிக்கப்படுவீர். ஏனெனில் நீர் மீட்கும் ஒரு ஆத்துமா இவ்வுலக முழுவதிலுமுள்ள ஐசுவரியங்களெல்லாவற்றிலும் விலையுயர்ந்ததாயிருக்கிறது. உம்மை 30 ரூபாய்க்கு வாங்கின யூதர் சிலகாலம் உம்மைக் கொல்லாமல் வைத்திருந்தால் எத்தனை லட்சம் ரூபாய் பெறுமான நன்மைகளைப் பெற்றிருக்கலாம்!! உம்மை வாங்கின அவர்கள் சிலகாலம் உம்மை வைத்து வேலை வாங்கக்கூடாதா? ஆ, அவர்கள் உம்மைக் கொல்ல வாங்கினார்கள்!

ஜெபம்

அன்புள்ள இரட்சகா, தேவரீர் என்னை மீட்கும்படி இவ்வுலகத்தில் அவதாரமானதுமுதல், என்னை மீட்கும் பிராயச்சித்தத்தை உண்டுபண்ணும்வரையும் சம்பவித்த எல்லா அவமானத்துக்கும், தாழ்வுக்கும் நீர் பின்வாங்கவில்லை. உம்மை விற்க ஆசைப்பட்டவர்கள் விற்கவும், வாங்க ஆசைப்பட்டவர்கள் வாங்கிக்கொள்ளவும் மனதாரச் சம்மதித்தீர். நீர் விற்கப்பட்டதிலும் வாங்கப்பட்டதிலும், நீர் அடிமையாக மாத்திரமல்ல; நீர் ஒரு மிருகமாகமாத்திரம் மதிக்கப்பட்டீர். ஏனெனில் அடிமைகள் இன்னும் உயிரோடிருந்து வேலைசெய்யும்படி வாங்கப்படுவார்கள். நீரோ கொல்லப்படும்படி வாங்கப்பட்ட ஆடாக இருந்தீர். நீர் வாங்கப்பட்ட மறுநாளில் கொலைசெய்யப்பட்டீர். என் ஞான பஸ்கா ஆடே, நீர் கொலைசெய்யப்பட்ட அன்று வாங்கப்பட்ட எந்தப் பஸ்கா ஆடும் முப்பது ரூபாய் விலையுள்ளதாயிருந்திருக்க மாட்டாது. நீரே பஸ்கா ஆடுகளில் விலையுயர்ந்தவர். நான் உம்மை விலை கூறினதையும், வாங்கினதையும், அந்த முப்பது ரூபாயையும் கவனியாமல், இவ்விஷயத்தில் விளங்கிய உமது மட்டில்லாத அன்பை நினைத்து

உம்மை ஸ்தோத்திரித்து, உமக்கு அடிமையாக என்னை விலைகூறுகிறேன். உமது இரட்சிப்பை எனக்குத் தந்து என்னை உமது அடிமையாக அங்கீகரித்தருளும். ஆமென்

12. பஸ்காப் பந்தி

வேதம்

"சாயங்காலமானபோது, பன்னிருவரோடுங்கூட அவர் பந்தியிருந்தார். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனே கூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத். 26: 20; லூக். 22: 15, 16).

போதனை

பஸ்கா ஆடு எப்போதும் சாயந்தரம் மூன்று மணிக்குக் கொல்லப்பட்டு, பொழுது அஸ்தமிக்கிற சமயத்தில் புசிக்கப்படும். ஆபிப் மாதம் 14-ம் தேதியில் பஸ்கா கொண்டாடப்படவேண்டியது. ஆனால் இந்தப் பஸ்கா, அதே தேதியில் புசிக்கப்படாமல், அதற்கு முந்தின நாளில் புசிக்கப்பட்டதாக பரி. யோவான் சுவிசேஷத்திலுள்ள குறிப்புகளால் நாம் தீர்மானிக்கவேண்டியதிருக்கிறது. பஸ்காவை யடுத்த பல முறைமைகள் பிந்தின காலங்களில் மாற்றப்பட்டு ஆசரிக்கப்பட்டதால் இதை ஒரு குற்றமாகச் சொல்லக்கூடாது. அப்படிப்பட்ட வழக்கமிருக்கவில்லை என்று சொன்னாலும், தாம் செலுத்தும் உத்தம பஸ்காபலி சரியான பஸ்காநாளாகிய மறுநாளில் நடக்கப்போகிறபடியால், அதற்கு முந்தின நாளில் அதின் முன்நிழலையும் பின்நிழலையும் காட்டிவிட விரும்பி, பூர்வ பஸ்காவை ஆசரித்ததால் அதின் முன்நிழலையும், பரிசுத்த இராப்போஜனத்தை ஸ்தாபித்ததால் அதின் பின்நிழலையும் காட்டச் சித்தங்கொண்டார் என்றே சொல்லவேண்டியது.

இந்தப் பந்தியில் பன்னிருவருமிருந்தார்கள். யூதாஸ் தன் சதியோசனைகளைப்பற்றிய ஏற்பாடுகளனைத்தையும் முடித்துவிட்டு, பஸ்காவை ஆசரிக்க மற்ற சீஷருடன் கூடிக்கொண்டான். இதற்குமு ஒருதடவையாவது இயேசு தமது சீஷர் அனைவரோடும் பஸ்காவை ஆசரித்த தாக யாதொரு குறிப்புமில்லை. இப்பொழுதும் வழக்கம் போல் சீஷர் தம்தம் இஷ்டப்படி அவரவர் பந்துக்க ளோடு கூடி பஸ்காவை ஆசரிக்க ஆயத்தப்பட்டிருந்தா லும், இயேசு தமது சீஷருடன் இதை விசேஷித்த பிரகாரமாக ஆசரிக்க விரும்பினதால், அவருடைய இஷ்டம்போல் நடந்துகொண்டார்கள். "இந்தப் பஸ்காவை" என்ற வாசகம், தாம் கொண்டாடப்போகும் பஸ்கா சாதாரண யூதபஸ்காவல்ல, விசேஷ பஸ்கா என்று உணர்த்துகிறது. இந்தப் பஸ்கா பந்தியில் இயேசு தமது தாயாரையாவது, மற்ற சிநேகிதரையா வது வரவழைத்துக்கொள்ளவில்லை. இது பரலோக இராஜ்யத்துக்கடுத்த முதலாம் பஸ்காவாயிருந்ததால் அந்த இராஜ்யசம்பந்தமான பன்னிரு சீஷருடன் மாத் திரம் இது ஆசரிக்கப்பட இயேசு சித்தங்கொண்டார்.

தியானம்

என் இரட்சகரே, உமது நேசம் பார்க்கப் பார்க்க உயரமாயும், அளக்க அளக்க நீளமாயும், இறங்க இறங்க ஆழமாயுமிருக்கிறதே! இம்மாதிரி நேசம் இந்த கிரகத் தில் இல்லை. வேறு கிரகங்களிலிருக்குமா?—இருக்கவே மாட்டாது. பரலோகத்தில் மாத்திரமுண்டு—பரலோகத் திலும் உம்மிடத்திலும் உமது பிதாவினிடத்திலும் இந்த நேசமுண்டேயன்றி வேறொருவரிடத்திலுமிராது என் பதைத் திட்டமாக அறிந்திருக்கிறேன்.

நீர் பன்னிருவரோடும்கூட பந்தியிருந்தீர். இது எவ்வளவு நேசம்! உம்மைக் காட்டிக்கொடுக்கும்படி ஒரு புதன் அதிகாலை முதல், வியாழன் மத்தியானம்வரையும ஒழுங்குகள் செய்த யூதாசையும் இந்தப் பந்தியில் வைத் துக்கொண்டீர். இன்று இரவில் உம்மை ஆணையோடு மறுதலிக்கப்போகிற பேதுருவையும் இந்தப் பந்தியில்

வைத்துக்கொண்டீர். இது நேசமல்லவா? தேவரீர் என்னையும், என் பாவங்களோடு ஏற்றுக்கொண்டு ஆசீர்வதிக்க நீர் சித்தங்கொள்ளுகிறீர் என்பதை இது உணர்த்துகிறது. இந்தப் பந்தியில் நீர் உமது தாயாரையும், உமக்கு விருந்துகொடுத்த சகேயு, சீமோன், லாசரு, மார்த்தாள், மரியாள் என்பவர்களையும் நீர் கூப்பிடவில்லை. ஏனெனில் இது யூத பஸ்காவுமல்ல, சாதாரண வனபோஜனமுமல்ல. இது உமது இராஜ்யபாரத்தின் விருந்து. ஆகாஸ்வேர் தன் பிரபுக்களுக்கும் ஊழியக்காரருக்கும் விருந்துபண்ணினன். என் இரட்சிப்பின் பிரபுவும் அதிபதியுமான நீர் உமது இராஜ்யபாரத்துக்கடுத்த இந்த முதலாம் விருந்தை உம்முடைய பன்னிரண்டு பிரபுக்களோடும் ஊழியக்காரரோடும் செய்கிறீர். இந்த விருந்தில் யூதாஸ் என்னமாய் உட்கார்ந்தானே?—நான் அவனிலும் பொல்லாதவனாயிருந்தாலும், இக்காலத்தில் நடக்கும் உமது திருவிருந்தில் உட்காருகிறேனல்லவா? அப்படியிருக்க அவனைப்பற்றிக் கேள்வி கேட்பானேன்?—அவனுக்கும் அந்த விருந்தில் இடம்கொடுத்த உமது தயவை நினைத்து பிரமித்துக்கொண்டிருப்பேனாக.

இந்தப் பஸ்காவிருந்திலும் உமது பாடுகளைக் கலந்துவிடுகிறீர். "நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்கிறதற்கு ஆசையாயிருந்தேன்" என்கிறீர். ஆகவே இது பூர்வ பஸ்காவல்ல; புதிய பஸ்காவாயிருக்கிறது. இந்த பஸ்கா ஆடு நீர்தான். இதின் இரகசியத்தை அறிந்த பரி. பவுல் "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து பலியிடப்பட்டிருக்கிறாரே" என்று சொன்னார்.

இந்தப் புதிய பஸ்காவை என்னோடுகூடப் புசிக்க நீர் எப்போதும் வாஞ்சைப்படுகிறீர். இதை நீரே ஆயத்தப்படுத்துகிறீர்—இதில் பரிமாறப்படும் அப்பமும், மாம்சமும், இரசமும் நீர்தான்—நீர் ஆயத்தப்படுத்தும் போஜனம் எவ்வளவு இன்பமாயிருக்கும். தேவதூதர் இந்தப் பஸ்காவின்மேல் ஆசைப்படுகிறார்கள். ஆகிலும் இதின் வாசனைமுதலாய் அவர்களுக்குக் கிடையாதபடி

அதை இந்தப் பூலோகத்தில் ஆயத்தப்படுத்தி ஸ்தாபித்தீர். இதின் வாசனையும், ருசியும், இதின் பெலனும் எனக்கும் உமக்கும் மாத்திரம் தெரியும்.

ஜெபம்

கிருபை நிறைந்த இயேசுவே! தேவரீர் என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணியிருக்கிறதற்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்.

"இந்தப் போஜனத்தின்மேலே
வாஞ்சையாயிருக்கிறேன்.
உம்மையே இம்மானுவேலே
பக்தியோடு உட்கொள்வேன்.
தேவரீரே
ஜீவ அப்பமானவர்."

இந்தப் பஸ்காபந்தியில் நீர் என்னோடு போஜனம் பண்ண வாஞ்சையாயிருந்தாலும், நான் அடிக்கடி அப்படி வாஞ்சிக்கிறதில்லை. இந்தப் பந்தியின்மேல் வாஞ்சையைத் தாரும். இது வனாந்தரத்திலே பிதாக்கள் புசித்த மன்னாவைப்போலொத்ததல்ல; அவர்கள் மரித்தார்கள். இந்தப் பந்தியில் போஜனம் செய்கிறவனுடைய சரீரமும், ஆத்துமாவும் உயிர்தெழுதலுக்குரிய மகிமையை அடைகிறது. அடியானுக்கும் அந்த மகிமையில் பங்கு கிடைக்கும்படி தயவுசெய்யும். ஆமென்.

13. இயேசு சீஷரின் கால்களைக் கழுவுதல்

வேதம்

அவர்கள் போஜனம் பண்ணிக்கொண்டிருக்கையில், தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து, போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து,

சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்.....அவர்களுடைய கால்களை அவர் கழுவினபின்பு, தம்முடைய வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு, திரும்ப உட்கார்ந்து, அவர்களை நோக்கி: நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா?......ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" (பரி. யோவா. 13: 2–15).

போதனை

நமது இரட்சகர் சீஷருடைய கால்களைக் கழுவின இந்த விஷயத்தால் அவர்கள் பேரிலுள்ள தமது அன்பையும், அவர்களிடத்தில் வெளிப்படவேண்டிய தாழ்மையையும் திருஷ்டாந்தப்படுத்துகிறார். இயேசு இவ்வுலகத்தை விட்டுப் பிதாவினிடத்திற்குப் போகவேண்டியகாலம் சமீபிக்கிறதை அறிந்தவராய், தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே முடிவு பரியந்தம், அவர்களிடத்தில் அன்புவைக்கிறேன் என்று காட்டும்படி இப்படித் தமது சீஷரின் கால்களைக் கழுவுகிறார். இந்த நேசத்தின் மாட்சிமையையும், தாழ்மையின் சிறப்பையும் சரியாய்விளக்கும்படி பரி. யோவான் நான்குகுறிப்புகளைச் சொல்லுகிறார்:

1. இயேசு இவ்வுலகத்தை விடுகிற காலம் வந்ததை அறிந்தார்.
2. தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தார் என்பதையும் அறிந்தார்.
3. தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும் அறிந்தார்.
4. தாம் தேவனிடத்திற்குப் போகிறதையும் அறிந்தார்.

உலகப்பிரகாரமாகப் பேசினால், இந்த நான்கு குறிப்புகளுள்ள ஒரு மனுஷன் ஒருவரையும் நேசிக்கவேண்டியது

மில்லை; தாழ்மைப்படவேண்டியதுமில்லை. இப்படிப் பட்ட ஒருவன், இனி நான் இந்த நீசரை நேசிக்கவேண்டிய தென்ன? ஒரு நீசனைப்போல நடந்துகொள்ள வேண்டிய தென்ன? இவ்வளவு மகிமைகள் என்னைப் பின்செல்லப் போகிறதால் இவர்களை அசட்டைசெய்வதும், தமது கௌரதையைப் பேணிக்கொள்வதும் சரியாயிருக்கும் என்று நினைப்பதும், அப்படி நடந்துகொள்வதும் இயல்பு. இவ்வித இயல்புக்கு விரோதமாக உன்னதநேசத்தையும், உன்னத தாழ்மையையும் நமது இரட்சகர் வெளிப்படுத் துவது, அவரை இவ்வுலகத்தானல்லவென்பதை ரூபிக்கி றது. அவர் தமது நேசத்தையும் தாழ்மையையும் பூதாஸ் மட்டும் இறக்கிவிடுவது, நமது வணக்கத்துக்கும் ஸ்தோத் திரத்துக்கும் பாத்திரமாயிருக்கிறது.

பஸ்கா பந்தியில் முதலாம்தாம் திராட்ச இரசம் பரி மாறப்பட்டபின்பு கால் கழுவுகிற வழக்கமுண்டு. இந்த வழக்கத்தின்படி வீட்டின் அதிகாரி பாத்திரத்தில் தண் ணீர் கொண்டுவந்து கழுவவேண்டியது. இயேசுவே அந்த வீட்டுக்கும், விருந்துக்கும் அதிகாரியானார். இதினிடை யில் அந்த விருந்திலே, நம்மில் எவன் பெரியவன் என்ற கட்சியுண்டாயிற்று. ஏனெனில் "தேவனுடைய இராஜ் யத்திலே இது நிறைவேறுமளவும்" என்று இயேசு பேசினார். இதில் இராஜ்யம் என்ற பதம், சீஷர் நெடு நாளாக ஆசித்த பூலோக அரசாட்சிப்போங்கானதென்று தப்பாக ஆலோசித்து, அதற்குரிய முதலாம் விருந்தாக இதை எண்ணி, இந்த விருந்திலே அவரவருக்குரிய அந் தஸ்து ஒழுங்கைத் தீர்மானித்து ஸ்தாபித்து மாமூலாக்கிக் கொள்ள விரும்பினார்கள். இயேசுவோ தாம் சொன்ன இராஜ்யம் இவ்வுலகத்தின் தன்மையுள்ளதல்லவென்றும், அதற்காக வாதுபண்ணுகிறதில் லாபமில்லையென்றும், அந்த இராஜ்யத்தின் தலைவராகிய அவர்கள் பூரண நேசத் தாலும், தாழ்மையாலும் தங்களை அலங்கரித்துக்கொள்ள வேண்டுமென்றும் இந்தத் திருஷ்டாந்தத்தால் உணர்த்திக் காட்டினார்.

தியானம்

ஆத்துமாவே! உன் இரட்சகரின் நேசத்தைப் பார்ப்பாயாக. அவர் என்னை முடிவுபரியந்தம் நேசிக்கிறார். என் நேசம் மாறுகிறது, அவர் நேசம் வளருகிறது. என் நேசம் குறைகிறது, அவர் நேசம் பெருகுகிறது. நான் நேசித்து மறக்கிறேன், அவர் முடிவுபரியந்தம் நேசிக்கிறார். நான் அவரை விற்கும்படி விலைகூறினாலும், காட்டிக் கொடுக்கும்படி ஒழுங்குபண்ணினாலும்; மறுதலிக்கக்கூடிய மனதுடையவனாயிருந்தாலும், அவர் என்னை முடிவுபரியந்தம் நேசிக்கிறார். இயேசுவே, நீர் என்னை நேசிக்கிற தேவன். நானோ உம்மை நேசியாத பாவியாக மாத்திரமல்ல, பகைக்கிற பாவியாயுமிருக்கிறேன். நீர் என்னை நேசிக்கிறதையும் நான் உம்மைப் பகைக்கிறதையும் பார்த்து, தேவதூதர் முறுமுறுக்கிறார்கள். மனுமக்கள் ஆச்சரியப்படுகிறார்கள். பூதகணங்கள் வெட்கப்படுகிறார்கள். என் மீட்பரே, நீர் கட்சிபோட்டு, வேண்டுமென்று என்னை நேசிக்கிறீர். நேசிக்க நியாயமில்லாவிட்டாலும், பகைக்க நியாயமிருந்தபோதிலும், நீர் நேசிக்கிறீர்.

> நான் உன்னை நேசிக்கவே நேசிப்பேன்.
> நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பேன்.
> நான் உன்னை இரட்சிக்கவே இரட்சிப்பேன்

என்று சொல்லிச் சொல்லி நேசிக்கிறீர். இந்த நேசப் பித்தம் நல்லதா—இவ்வளவு நேசம் அவசரமா—ஒரு பாவியை மீட்க தேவனுக்கு ஆசைவந்தால், தமது சர்வ வல்லமையின் ஒரு பொறியைக்கொண்டு அதை நிறைவேற்றக்கூடாதா—மனுஷனுடைய இரட்சிப்புக்கென்று தேவன் இவ்வளவுதூரம் தாழ்வது தெய்வ கௌரதையைக் கெடுத்துப்போடுகிறதல்லவா என்று சாத்தானின் மக்கள் சிலதரம் பேசிக்கொள்ளுகிறார்கள். பாதாளத்தின் பேச்சு எப்படியுமிருக்கட்டும், இப்படிப் பேசுவதற்கும் பொறாமைதான் காரணம்.

உலகத்திலுள்ள மற்றப் பாவிகள் விஷயத்தில் எப்படியோ? என் விஷயத்தைப் பார்த்தால் என் இயேசு

நேசப்பித்தம் கொண்டாலன்றி எனக்கு மீட்பிராது. இவ்வளவு நேசமில்லாவிட்டால் நான் மீட்கப்படமாட்டேன். என்பேரில் தேவனுடைய சர்வவல்லமையின் ஒரு சிறிய பொறி வருகிறதுண்டானால் அது என்னைப் பட்சித்துப்போடும்; பட்சித்தபின்பு மீட்புக்கு வழியில்லை. இந்த நேசத்தால் தேவ கவுரதைக்கு எவ்வளவேனும் தாழ்ச்சியில்லை. அதற்குப் பதிலாக என்பேரில் விளங்கிய மட்டற்ற அன்பினால், மற்றவகையாய் தேவ மகத்துவம் விளங்குகிறதைவிட பதினாயிரம்பங்கு அதிகமாய் விளங்கிப் பிரகாசிக்கிறது. பரலோகமேறிப் பல தெருக்களையும் சுற்றி நடந்து,

தேவனுடைய சர்வவல்லமையால் பாவமன்னிப்பை
சம்பாதித்தவர்களுண்டோ?

என்று விசாரி. அப்படிப்பட்டவர்கள் இங்கே இல்லை. தேவனுடைய சர்வவல்லமை விளங்கினவர்களை நரகத்தில் போய்ப் பார்க்கலாம் என்பார்கள். அப்படிக் கேட்பதை நிறுத்தி,

தேவ அன்பினால் பாவமன்னிப்படைந்தவர்கள் யார்?

என்று கேட்டுப்பார். ஒவ்வொரு ஆத்துமாவும் தன் தன் குரலை உயர்த்தித் தன்தன்னைச் சுட்டிக்காட்டி,

நான் அப்படியே மீட்கப்பட்டேன்
நானும் அப்படியே மீட்கப்பட்டேன்
நீயும் அப்படியே மீட்கப்படுகிறாய்

என்று அந்த லோகத்தை விட்டுத் திரும்பும்வரையும் சொல்லிக்கொண்டேயிருப்பார்கள்.

ஆ, உன்னத நேசமே! உன்முன் பணிகிறேன்.
ஆ, தேவ நேசமே! உன்முன் குனிகிறேன்.

ஆ என் தேவனே, என் இரட்சகா, தேவரீருடைய அன்பின் சமுத்திரம் பொங்கி, அதின் அலைகள் எழும்பவே வானக் கப்பலாகிய நீர் பள்ளத்தில் தாழ்ந்து, தண்ணீரை மொண்டு உமது சீஷரின் கால்களைக் கழுவுகிறீர். நீர் போஜனத்தை விட்டெழுந்து, உமது மேலங்கியைக் கழற்றிவைத்து, ஒரு துண்டை உமது அரையிலே கட்டிக்

கொண்டு, சீஷருடைய கால்களைக் கழுவவும் துடைக்கவும் தொடங்குகிறீர். உம்முடைய அன்பு ஜுவாலித்தபோது தாழ்மையாற் பிரகாசிக்கிறது. உமது அன்பு பொங்கின போது அதின் திரட்சியால் தாழ்மை என்னும் அலை மடிந்து விழுகிறது. நீர் ஒவ்வொரு சீஷனுடைய கால்களையும் கழுவினீர். யூதாசின் காலையும் கழுவினீர். அது இரத்தம் சிந்தத் தீவிரித்திருந்தது. அழிவும் இடுக்கணும் அவன் கால்களிலிருந்தது. அது சமாதானத்தின் வழியை அறியாதிருந்தது. அவ்வித வியாதியைத் தீர்க்கும்படி அவன் காலையும் கழுவினீர். நீர் அவனைக் கழுவும்போது அவன் தன் மனத்தால் அந்தப் பரிசுத்த தீர்த்தத்தை அலட்சியம் செய்தான். ஆதலால் அவன் சுத்தமாக்கப் படவில்லை. நீர் சீஷரின் கால்களைக் கழுவினபோது பேதுரு வாயால் ஆட்சேபித்தான், யூதாசோ மனத்தால் ஆட்சேபித்தான். ஆதலால் கழுவுதல் யூதாசில் யாதொரு மாறுதலையுண்டாக்கவில்லை. பரி. பேதுரு உம்மிடத்தில் ஆட்சேபித்து,

நீர் என் கால்களைக் கழுவலாமா என்று கேட்டார். அதற்குத் தேவரீர் "நானுன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை" என்று சொன்னீர். அதே சமயத்தில் "உம்மிடத்தில் எனக்குப் பங்கு வேண்டாம்; என் பங்கு யூதரிடத்திலும், பிரதான ஆசாரியரிடத்திலுமிருக்கிறது" என்று யூதாசின் மனது சொன்னது.

என் இரட்சகா, இந்த வரலாற்றில் உமது பாடுகளின் நிழலையும் காண்கிறேன். நீர் போஜனத்தை விட்டு எழுந்ததும், வஸ்திரங்களைக் களைந்ததும், ஒரு துண்டுத் துணியை உமது அரையிலே கட்டினதும், தண்ணீர் மொண்டதும், சீஷருடைய கால்களைக் கழுவும்படி குனிந்ததும், கழுவித்துடைத்ததும் எல்லாம் நீர் கொல்கொதா மலைமேல் ஆகாயத்தில் தோன்றுவதையும் வஸ்திரங்கள் களையப்பட்டவராய் ஒரு சிறிய துணியோடு காணப்படுவதையும், உமது திருவிலாவின் இரட்சண்ய அருவியைக்கொண்டு சகல பாவிகளின் இருதயங்களையும் நான் கழுவுகிறவரும், துடைக்கிறவருமாயிருக்கிறேன்

என்பதையும் இதின் மூலமாய் நிழலாட்டமாகக் காட்டுகிறீர் என்று என் ஆத்துமா உணர்ந்துகொள்ளுகிறது.

இந்தக் காட்சியைக்கண்ட என் கண்ணே, இனி உனக்குமேட்டிமையான பார்வை தகுமா?—என் கையே, இனி நீ கர்வமாக ஆடலாமோ?—என் முதுகே, இனி நீ எடுப்பாய் நிமிர்ந்து திரியலாமோ?—என் மனமே, உன்னில் ஆணவமாவது, அதின் நிழலாவது தோன்ற நியாயமுண்டோ?—என் உடலே, உன்னை நீ பட்டுகளாலும், சரிகைகளாலும் அலங்காரப்படுத்தலாமோ?—என் பெருமையனைத்தையும் இந்தப் பள்ளத்திலே புதைப்பேனாக—என் ஆணவமனைத்தையும் இந்தக் கன்மலைக் கெபிக்குள் அடக்கிவிடுவேனாக—நேபுகாத்நேச்சார், பெல்ஷாத்சார், ஏரோது முதலியவர்களுக்கு இந்தக் கெபி தெரியவில்லை. நானோ அதைக் கண்டுபிடித்திருக்கிறேன். என் இளவயதின் பெருமை, வாலிபத்தின் கர்வம், முதிர் வயதின் ஆணவம், என் கல்விப்பெருமை, செல்வச் செருக்கு அனைத்தையும் வண்டியில் ஏற்றி இந்தப் பரிசுத்த தாழ்மை என்னும் பள்ளத்துக்குள் புதைப்பேனாக.

என் நேசரே, நீர் இவ்வண்ணமாக உமது தாழ்மையை வெளிப்படுத்தின சமயத்தில் மகத்துவம்பொருந்திய உமது பிதாவானவர் மனமகிழ்ந்தார். ஏனெனில் உம்முடைய தாழ்மை என்னை அதிகமாய் உயர்த்திவிட்டது. தேவன் தாழ்மையில் கனத்தபோது இவ்வுலகம் பரலோக மட்டும் உயர்த்தப்பட்டுப் பிதாவின் கிருபைகளுக்குச் சமீபமாயிற்று. அதைக் கண்ட தேவதூதர், பூலோகத்தை உயர்த்தும்படி தேவகுமாரன் செய்யும் உபாயத்தைப் பாருங்கள்—பாருங்கள் என்று மெதுவாகப் பேசிக்கொள்ளுகிறதாக என் ஆவி உணர்ந்துகொள்ளுகிறது. இந்தத் தாழ்மை நான் படித்துக்கொள்ளவேண்டிய ஒரு பாடமாயிருக்கிறது. நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன். என்னிடத்தில் வந்து கற்றுக்கொள்ளுங்கள் என்று நீர் இதின்மூலமாக அறிவிக்கிறீர். இந்தப் பள்ளிக்கூடத்தில் என்னையும் ஒரு மாணாக்கனாக ஏற்றுக்கொள்ளும்,—தாழ்மைப் பிரபுவே!

ஜெபம்

தெய்வத்தில் தெய்வமும், ஜோதியில் ஜோதியுமான என் இரட்சகா! தேவரீருடைய பரிசுத்த தாழ்மையை நான் கண்ணோக்கி அதிசயப்படுகிறேன். இது சுத்த தாழ்மையாகமாத்திரமல்ல, அன்புகலந்த தாழ்மையாயு மிருக்கிறது. இது தரித்திரம் கலந்த தாழ்மையாயிரா மல், தெய்வீகம் பொருந்திய தாழ்மையாயு மிருக்கிறது. இவ்வித தாழ்மையை இப்பூலோகத்திலுள்ள எந்தப் பரி சுத்தவான்களிடத்திலும் நான் காணவில்லை. இதின் நிழல்முதலாய் எங்களிடத்தில் இல்லை. நீர் அன்பின் சொரூபியாய் மாத்திரமல்ல, தாழ்மையின் சொரூபியாயு மிருக்கிறீர். நானே அகந்தையுள்ளவன்—என்னிடத்தில் அன்பு இல்லை. இந்த வரங்களும் பாடங்களும் எனக்கு வரும்படி என்னைச் சிலகாலம் உமது தாழ்மை என்னும் குகைக்குள் அடைத்து வைத்தருளும். நான் சகல பெருமைகளையும் களைந்து, இந்தத் தாழ்மையென்னும் அங்கியோடு வெளிப்படும்வரையும், என்னை உமது பள்ளிக் கூடத்தில் வைத்துக்கொள்ளும். உன்னத தாழ்மையே, உம்முன் பணிகிறேன். அநாதி நேசமே, உம்மை வணங்கு கிறேன்.

14. யூதாசை உணர்த்துதல்

வேதம்

"வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, என்னுடனே அப்பம் புசிக்கிறவன் என்மேல் தன் குதிகாலைத் தூக்கி னான் என்றார். இயேசு ஆவியிலே கலங்கி: உங்களில் ஒரு வன் என்னைக் காட்டிக்கொடுப்பானென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சாட்சி யாகச் சொன்னார். அப்பொழுது யாரைக்குறித்துப் பேசு கிறாரோ என்று சீஷர்கள் ஐயப்பட்டு, ஒருவரையொருவர் நோக்கிப் பார்த்தார்கள். அந்தச் சமயத்தில் அவருடைய சீஷரில் இயேசுவுக்கு அன்பானவனாயிருந்த ஒருவன் இயேசுவின் மார்பிலே சாய்ந்துகொண்டிருந்தான். யாரைக்குறித்துச் சொல்லுகிறார் என்று விசாரிக்கும்படி சீமோன் பேதுரு அவனுக்குச் சைகை காட்டினான். அப்

பொழுது அவன் இயேசுவின் மார்பிலே சாய்ந்துகொண்டு: ஆண்டவரே, அவன் யார் என்றான். இயேசு பிரதியுத்தரமாக: நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன்தான் என்று சொல்லி, துணிக்கையைத் தோய்த்து, சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்குக் கொடுத்தார். அந்தத் துணிக்கையை அவன் வாங்கின பின்பு, சாத்தான் அவனுக்குள் புகுந்தான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் என்றார்......அவன் அந்தத் துணிக்கையை வாங்கினவுடனே புறப்பட்டுப்போனான்; அப்பொழுது இராக்காலமாயிருந்தது" (மத். 26: 21–25; மாற். 14: 18–21; லூக். 22: 21–23; யோவா. 13: 18–30).

போதனை

இரட்சகர் யூதாஸ்காரியோத்தை உணர்த்தின வரலாறு நான்கு சுவிசேஷங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. யூதாசின் வழிகள் தேவனுக்கு ஏற்காதவைகளென்பதை இயேசு பூரணமாய் வெளிப்படுத்தினார். (1) என்னுடனே அப்பம் புசிக்கிறவன் என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான் என்று சொன்னார். (2) ஆவியிலே கலங்கி உங்களிலொருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று சொன்னார். (3) என்னுடனேகூட தாலத்திலே கையிடுகிறவனே என்னைக் காட்டிக் கொடுப்பான் என்று சொன்னார். (4) என்னைக் காட்டிக் கொடுக்கிறவனுக்கு ஐயோ; அவன் பிறவாதிருந்தால் நலமாயிருக்கும் என்று சொன்னார். (5) துணிக்கையைத் தோய்த்து யூதாசின் கையில் கொடுத்து, இவன்தான் என்று காட்டினார். (6) நானோ, என்று யூதாஸ் நேராகக் கேட்டபோது நீ சொன்னபடிதான் என்று உறுதிப்படுத்தினார். (7) கடைசியாக நீ செய்கிறதைச் சீக்கிரம் செய்யென்று சொல்லி அவனைப் பந்தியிலிருந்து அனுப்பிவிட்டார். ஆகவே ஏழுதடவை யூதாசின் பாவம் அவனுக்கு உணர்த்துவிக்கப்பட்டது. அவன் மனம் திரும்பவில்லை. அவன் இருதயம் சாத்தானால் அவ்வளவு பல

மாய் ஆளப்பட்டது. அவன் தன்னைப் பொல்லாப்புச் செய்ய விற்றுப்போட்டான்.

தியானம்

ஆத்துமாவை விற்கிற வியாபாரத்தில் யூதாஸ் சமர்த்தனாயிருக்கிறான். முதலாவது அவன் தன்னைப் பொல்லாப்புக்கு விற்று அதற்கப்பால் தன் தேவனை விற்றான். தன்னைச் சாத்தானுக்கு விற்று, அப்பால் இயேசுவை பிரதான ஆசாரியருக்கு விற்றான். தன்னை விலையின்றி விற்றான். இயேசுவுக்கோ விலைவாங்கினான். இவனைவிட சமர்த்தனான வியாபாரிகளை இப்பொழுது ஒவ்வொரு சபையிலும் பார்க்கலாம். ஒவ்வொரு சபைக்கும் போவானேன்? இதை வாசிக்கிற நான்; பழைய யூதாசிலும் தாழ்ந்தவனல்லவே? நான் என்னை உலகத்துக்கும், மாம்சத்துக்கும், பிசாசுக்கும் விற்றுப்போட்டவனல்லவா? என் ஆவிக்கு இப்பொழுது சொந்தமான ஆசைகளாவது, அவயவங்களாவது இல்லை. அவையனைத்தும் என் மாம்ச இச்சைகளுக்கு அடிமைகளாயிருக்கின்றன அல்லவா?

யூதாசை உணர்த்தின தேவன் இப்போது என்னையும் உணர்த்துகிறார். என் வழிகள் தாறுமாறானதென்றும், நான் வேண்டுமென்று அவரை நிந்தித்துத் துரோகம் செய்கிறது நல்லதல்ல வென்றும் அடிக்கடி என்னை எச்சரிக்கிறார். யூதாசு ஏழுதரம் எச்சரிக்கப்பட்டான். நானோ ஏழெழுபதுதடவை எச்சரிக்கப்பட்டும் இன்னும் மனந்திரும்பாமல் என் பொல்லாப்பில் நிலைத்திருக்கிறேன். ஆ, நான் நன்றிகெட்ட பாவி. யூதாசும், அவனுடைய துரோகமும் அவனோடு முடிந்ததென்று உலகம் எண்ணுகிறது. அதிலும் பலமான துரோகமும், இருதயக் கடினமும் என்னிடத்திலிருப்பதை உலகம் அறியாமலிருக்கிறது.

யூதாசுக்குள் சாத்தான் புகுந்தானும். யூதாஸ் முதலாவது சாத்தானுக்குள் புகுந்தான். அப்பால் சாத்தான் யூதாசுக்குள் புகுந்தான். மனுஷன் சாத்தானுக்குள்ளும், சாத்தான் மனுஷனுக்குள்ளும் புகுந்து விளையாடுகிறதை நமது கண்ணால் காணக்கூடுமானால்

அதிக வேடிக்கையாயிருக்குமல்லவா? ஆம், அந்த வேடிக்கையை இங்கே பார்க்கிறோமே. சாத்தானுக்குள் யூதாஸ் புகுந்ததால் இயேசு அவமானப்பட்டுச் சாக நேரிட்டது. யூதாசுக்குள் சாத்தான் புகுந்ததால் அவன் துரோகியாகி, நான்றுகொண்டு சாக நேரிட்டது. ஆகவே சாத்தானுக்குள் மனுஷன் புகுந்தாலும், மனுஷனுக்குள் சாத்தான் புகுந்தாலும் நஷ்டம்தான். யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான். அவன் ஒருவன் எவ்வளவு கேட்டை உண்டுபண்ணினான், எனக்குள் எத்தனை சாத்தானுண்டு என்று எண்ணிப்பார்ப்பேனாக. மகதலேனாளுக்குள் ஏழுபிசாசுகளும், வேறொருவனுக்குள் லேகியோன் பிசாசுகளுமிருந்தன. ஆறாயிரம்பேர் அடங்கிய ரோமைச்சேனை லேகியோன் என்று அழைக்கப்பட்டது. ஆகவே கதரேனர் நாட்டிலிருந்த அந்த ஏழைப் பாவிக்குள் ஆறாயிரம் பிசாசுகளிருந்தன. மனுஷனுடைய எலும்புகள், நரம்புகள், தசைகள் எல்லாம் கூடி (1760) ஆயிரத்து எழுநூற்று அறுபதாம். அப்படியானால் அவனுடைய ஒவ்வொரு தசை, எலும்பு, நரம்புகளிலும் மூன்று பிசாசு ஆண்டிருக்கிறது. என் ஆத்துமஸ்திதியும் இப்படியிருக்கிறதென்கலாம். என் எலும்புகளும், நரம்புகளும், தசைகளும் பிசாசால் ஆளப்படுகின்றன. அந்தப் பிசாசுகள் என் மூளைக்குள்ளும் இரத்தத்துக்குள்ளும் என் கண்ணின் நயனத்துக்குள்ளும் ஓடி விளையாடுகிறார்கள். என்னைவிட நிர்ப்பாக்கியனுண்டோ? என்னைவிட நீசனுண்டோ? ஆ, நான் பழைய யூதாசைவிட ஆறாயிரம் பங்கு அதிகமாய்க் கெட்டவன் என்று உணர்ந்துகொள்ளுகிறேன்.

இயேசுவால் ஏழு பிசாசும், ஆறாயிரம் பிசாசும் துரத்தப்பட்டது. ஆனால் யூதாசைப் பிடித்த ஒரு சாத்தான் போகாத காரணமென்ன? இந்த ஒரு பிசாசு அந்த ஏழு, அல்லது ஆறாயிரம் பிசாசுகளைவிடப் பலவானோ? அல்ல, அல்ல. அந்த மகதலேனாளும், கதரேனர் நாட்டுக் கல்லறைக் காத்தானும் இயேசுவைக் கண்டவுடனே தங்கள் இருதயத்தைத் திறந்து தங்களிலுள்ள பேய்களை ஓட்டும்படி அவர் பாதத்தில் விழுந்தார்கள். இந்த

யூதாஸ் தனக்குள் புகுந்த பிசாசை இயேசு துரத்தி விடாதபடி தன் கதவை நன்றாகப் பூட்டிக்கொண்டான். அப்படியிருந்தும் அவர் மிகுந்த அன்போடு ஏழுதடவை அவனைத் தட்டி உணர்த்தினார். அவன் அசையவில்லை. ஒருவனை நரகத்தின் மத்தியில் சேர்க்க ஒரு பிசாசு போதுமப்பா! ஆனால் ஒருவனுக்குள் ஆறுயிரம் பிசாசு குடியிருந்தாலும், அவன் தன் இருதயத்தை இயேசுவுக்குத் திறந்து, சாஸ்டாங்கம் செய்து,

"உள்ளேவாரும் மீட்பரே
இது உம்முடையதே,
பாவமான யாவையும்
நீக்கி என்னை ரட்சியும்"

என்று கெஞ்சுகிறதுண்டானால், உடனே இயேசு தமது சவுக்கை வீசி, பிசாசுக்களே, நீங்கள் பேசாமல் இவனை விட்டுப் புறப்பட்டு ஓடுங்கள் என்பார். அவைகள் எத்தனை ஆயிரமாயிருந்தாலும், அரவம் தெரியாமல் ஓடிப்போய்விடும். அப்படி அரவம் தெரியாமல் போய்விடுவதால், அதிகப் பிசாசு அவனைப் பிடிக்கவில்லை என்பதுபோல் வெளிக்குத் தோன்றும். உள்ளபடியோ அவன் அநேக லேகியோன் பிசாசுகளிலிருந்து விடுதலையாக்கப்பட்டவனாயிருக்கலாம்.

ஜெபம்

இயேசுவே, எப்பொழுதும் இரக்கமாயிருப்பதும், பாவிகளை மனந்திரும்ப அழைப்பதும் உமது வேலையாயிருக்கிறது. உமக்குத் துரோகம் நினைத்த யூதாசை நீர் ஏழுதடவை உணர்த்தியிருக்கிறீர். இது எவ்வளவு தயவு! அவன் நான்றுகொண்டு சாகாமலிருந்தால் இன்னும் பலதடவை அவனை உணர்த்தியிருப்பீர். கர்த்தாவே, என் கிரியைகளையும் குணங்களையும் நீர் அறிந்திருக்கிறீரே. என்னையும் யூதாசையும் நீர் ஒத்துப்பார்க்கும்போது அவன் என்னிலும் கொஞ்சப்பாவியாகிறான். இதை நானே ஒத்துக்கொள்ளுகிறேன். நான் தேவரீருடைய எச்சரிப்புகளை மதித்து, என் பாவ வழிகளை விட்டு ஓய்ந்து உமக்குப் பிரியமாய் நடந்துவர தயவுசெய்யும்.

இப்பொழுதே என்னிலுள்ள லேகியோன் பேய்களை ஓட்டியருளும். என் இருதயம் உமக்குச் சொந்தமான வீடாயிருக்கும்படி அதை உமக்கு ஒப்புவிக்கிறேன். தேவரீருடைய சிலுவைப் பாடுகளினிமித்தம் அதை அங்கீகரித்தருளும். ஆமென்.

15. இராப்போஜன ஸ்தாபகம்

வேதம்

“அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப்புசியுங்கள், இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்” (மத். 26: 26–30; மாற். 14: 22–26; லூக். 22: 19–20; 1 கொரி. 11; 23-25).

போதனை

இயேசு தமது ஜீவியம் முடிவடையப்போகிறதை நன்றாயறிந்திருந்தார். அதைப்பற்றி அடிக்கடி இதற்கு முன் சொல்லியிருந்தார். ஆனால் வெளியரங்கமாக அப்படிப்பட்ட அடையாளம் ஒன்றும் காணப்படவில்லை. தம்முடைய ஜீவகாலத்தின் முடிவு சாதாரண மரணமாயிராமல் பிராயச்சித்த மரணமாயிருக்கிறது என்பதை உலகமுடியும் வரையுமுள்ள மனுமக்கள் யாவரும் அறிந்துகொள்ளும்படியாக அவர் இந்தப் பரிசுத்த நியமத்தை ஏற்படுத்தி வைத்திருக்கிறார். இவ்வுலகத்திலிருந்து மறைந்த வீரர், முடிமன்னர், பிரபுக்கள் அனைவருடைய பேரும் பிரஸ்தாபமும், காலத்தால் விழுங்கப்பட்டுப் போயின. தம்முடைய மரணம் அப்படி மறந்துபோகப் படத்தக்க தல்லவென்றும், உலகம் தம்மை எப்போதும்

நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறதென்றும், இந்த நியமத்தால் வெளிப்படுத்துகிறார்.

பரி. இராப்போஜனத்தைப்பற்றிய வரலாறு: முதல் மூன்று சுவிசேஷகராலும், பரி. பவுலாலும் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளில் பலவகையான வாசகப் போக்கைப் பார்க்கிறோம். பரி. மத்தேயுவும், மாற்கும் ஏறக்குறைய ஒரேவிதமான வாசகத்தையும், பரி. லூக்காவும் பவுலும் ஏறக்குறைய ஒரேபோக்கான வாசகத்தையும் எழுதுகிறார்கள். ஆனால் பரி. லூக்கா உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என் சரீரம் என்றும், பரி. பவுல் உங்களுக்காகப் பிட்கப்படுகிற என் சரீரமென்றும் சொன்னதாக எழுகிறார்கள். இந்த நாலு வரலாறுகளையும் அமைத்து இராப்போஜன ஸ்தாபக வாசகத்தைக் காட்டினால் பின் வருமாறு இருக்கிறது.

போஜனம்பண்ணுகையில் இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து (ஸ்தோத்திரம் செய்து) அதைப் பிட்டு, சீஷருக்குக்கொடுத்து, நீங்கள் வாங்கிப் புசியுங்கள். இது உங்களுக்காகப் பிட்கப்படுகிறதும், கொடுக்கப்படுகிறதுமான என்னுடைய சரீரமாயிருக்கிறது. என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி அவர்களுக்குக் கொடுத்து, நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள். இது பாவமன்னிப்புண்டாகும்படி உங்களுக்காகவும் அநேகருக்காகவும் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது என்றார். [பின்னும் அவர்] இந்தப் பாத்திரம் என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது. இதைப் பானம் பண்ணும்பொழுதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.

இந்த அப்பமும் திராட்ச இரசமும் அப்பட்டமான முதல் வஸ்துக்களாயிராமல் அநேகபிரயத்தனங்களுக்குப் பின்பு நமது சரீரத்துக்கு ஆகாரவஸ்துக்களாகின்றன. வானத்துக் கோதுமையும், திராட்சக் குலையுமாகிய

இயேசு கெத்செமனே செக்கிலும், கொல்கதாவின் ஆலையிலும் ஆட்டப்பட்டுப் பிழியப்பட்டு, தேவநீதி என்னும் அக்கினியால் வெந்து, நமக்கு ஆகாரமாகவும் பானமாகவும் தம்மைக் கையளிக்கிறதை அது திருஷ்டாந்தப்படுத்துகிறது.

தியானம்

என் நேசர், இவ்வுலகத்தை விட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான சமயம் வருகிறதென்று அறிந்து தமது பிள்ளைகளிடத்தில் அதிக அன்பைக் காட்டினார். தாம் இல்லாமலிருக்கும்போது அவர்கள் ஆவிக்கு உண்டாகும் பசியும் தாகமும் இன்னமாதிரியிருக்கும் என்று உணர்ந்தார். இந்த வனாந்தரமான லோகத்தில் அவர்களைப் பசியும் பட்டினியும், ஆத்துமா தொய்ந்ததாகவும் விட்டுவிட்டால் தங்கள் ஜீவகால பாதையில் சோர்ந்துபோவார்கள், அல்லது பாதாளலோகத்து பாஷாண போஜனங்களைத் தின்று மாண்டுபோவார்கள் என்று கண்டார். இந்த அழுகையின் பள்ளத்தாக்கில் ஆவிக்கு அடிக்கடி பசியும் தாகமும் உண்டாகும் என்பது அவருக்குத் தெரியும். ஆகவே அவர் ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தினார். மூன்றுநாள் உபதேசம் கேட்டவர்களைப் பசியோடு அனுப்பப் பிரியப்படாத நமது மீட்பர், நித்திய ஜீவகாலமுழுவதும் அவருக்கு மனையாட்டியாகக் கையளித்த என்னைப் பசியிலும் தாகத்திலும் வருந்த வைப்பாரா! அப்படி அவர் என் ஆத்தும பசிதாகங்களுக்கு ஏதாவதொரு வழிசெய்யாமல் பரலோகம் போய்விட்டால், என் சத்துருக்களாகிய பிசாசும், மாம்சமும், உலகமும் என் ஞானமணவாளரைப் பழுதுகூற மாட்டார்களா? அவர் என்னுடைய வாழ்வை விரும்பியும், என் சத்துருக்களின் பழிப்புக்கு இடமில்லாமலும், அவர்களுக்கெதிரே எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தினார். அவர் என்னை விட்டுப்பிரிய மனமுமில்லை; நான் அவரை விட்டுப்பிரிய மனமுமுண்டாகக் கூடாதென்று நினைத்து, பரி. இராப்போஜனம் என்னும் ஒரு திருவிருந்தை ஸ்தாபித்து தமது சரீரத்தையும் இரத்தத்

தையும் எனக்குப் போஜனபானமாக நியமித்தார். தமக்கு நேரிடப்போகிற முடிவு, தாம் என்மேல் வைத்த நேசத்திற்கு முடிவாகமாட்டாது. அந்த நேசம் நித்திய நேசமும், அநாதி சிநேகமுமாயிருக்கிறது என்பதை இந்தப் புந்தியால் உணர்த்துகிறார். இது இயேசுவின் அன்பை விளக்கும் சாக்கிரமெந்தாயும், அவருடைய மரணத்தை விளக்கும் நித்திய நியமமாயுமிருக்கிறது. போஜனமானது அதைப் புசிக்கிறவனுடைய உடலோடு சேர்ந்துபோகிறது. இயேசுவும், தம்மை பரி. இராப் போஜனத்திலே புசிக்கிற விசுவாசிகளனைவரும் தம்மைப் போலாகிவிடச் சித்தமாயிருக்கிறார். வெவ்வேறான மெழுகுவர்த்திகள் நெருப்பினால் உருக்கப்பட்டு ஒன்றோடொன்று பொருத்தப்பட்டு ஒரே வர்த்தியாக்கப்படலாம் அல்லவா? இந்தத் திருவிருந்தின் மூலமாய் நம்முடைய பாவமுள்ள சரீரம், இயேசுவின் பரிசுத்தமுள்ள சரீரத்தோடு அன்பின் அக்கினியால் இளகி, அவர் நமக்குள்ளும், நாம் அவருக்குள்ளும் வாசமாகி, இவ்வண்ணம் ஏக சரீரம்போல் விளங்கவேண்டுமென்று விரும்புகிறார்.

இந்தப் பரிசுத்த நியமத்தால் இயேசு, என் மீட்பர் என்பதைவிட என் இரட்சிப்பின் தாயார் என்று வெளியாகிறது. தாயானவள் தன் அமுதால் தன் பாலகனைப் போஷிக்கிறாள். இயேசு தமது திருச்சரீரத்தாலும் இரத்தத்தாலும் என்னைப் போஷிக்கும் தாயாயிருக்கிறார். ஒவ்வொரு பாலனும் தன் தாயின் பலத்தைத் தான் குடிக்கும் பாலால் உண்டு தன்னைப் பலப்படுத்தி ஜீவித்து வளருகிறது. நான் என் இரட்சண்ய மாதாவாகிய இயேசுவின் பலத்தையும், குணத்தையும், சுபாவத்தையும் இந்த நற்கருணை என்னும் வாய்க்காலால் பெற்று என் ஜீவகாலத்தைக் கழிப்பேனாக.

தேவன் மனுஷனுக்குப் போஜனமாகிறது என்ன அதிசயம்! இவ்வுலகத்திலுள்ள எந்தப் போஜனமும் அவ்வளவு பலமுள்ளதல்ல; ஏனெனில் இவ்வுலக வஸ்துக்களைப் புசிக்கிற சகல ஜீவன்களும், நோவுக்கும் சாவுக்கும் இனமாயிருக்கிறது. நோவை அகற்றி சாவை அழிக்கும்

போஜனம், இவ்வுலகத்தில் இல்லவே இல்லை. அப்படிப்பட்ட ஒரே ஒரு போஜனம் பரலோகத்தில் மாத்திரமுண்டு. அந்தப் போஜனம் கர்த்தராகிய இயேசுதான். "நானே வானத்திலிருந்து இறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே" என்று இரட்சகர் சொல்லுகிறார் (யோவா. 6: 51). இவ்வுலக போஜனங்களில் கழிவுகளுண்டு, இந்தப் பரமபோஜனத்தில் கழிவேயில்லை. இது நித்தியஜீவன் வரையும் ஒருவனுடைய பசியை ஆற்றி அவன் தாகத்தைத் தீர்க்கிறது. இது சாவுக்கேதுவான நம்முடைய சரீரத்தை மகிமையுள்ள உயிர்த்தெழுதலுக்கேற்ற உடலாக்குகிறது (யோவா. 6: 54). இப்படிப்பட்ட மேலான போஜனத்தை இயேசு எனக்குத் தந்தது எவ்வளவு தயவு! ஆ எவ்வளவு தயவு!

இந்தப் போஜனத்தின் ருசியும், மணமும், இதிலுள்ள பலனும், வாழ்வுகளும் இன்னதென்பதை தேவதூதர் முதலாய் அறியார்கள். நீசமனுஷனாகிய நான் இந்த விருந்தை அருந்தும்போதெல்லாம், காபிரியேலும், மற்றச் சம்மனசோரும், பாவிக்குக் கிடைத்த வாழ்வைப் பாருங்கள்; ஆதாமின் மகனுக்கும், ஏவாளின் மகளுக்கும் வந்த அதிர்ஷ்டத்தைப் பாருங்கள் என்று மெதுவாகப் பேசிக்கொள்ளுகிறது என் ஆவிக்குக் கேட்கிறது.

என் நேசர் இந்த விருந்தை, தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியில் நியமித்தார். உலகத்தால் என்ன பாடுகளும் எவ்வளவு அவமானங்களும் நேரிட்டாலும், ஆ உலகம் என்னைச் சிலுவையிலறைந்து கொன்றாலும் நான் உலகத்தைப் பகையேன்—உலகத்தை நேசிக்கிறேன்—உனக்கு விருந்தளிக்கிறேன்—என்று சொல்லுகிறதுபோலிருக்கிறது. ஆ, நேச இயேசுவே, உமக்கு ஸ்தோத்திரம். நீர் உமது பரிசுத்த நடக்கையையும், உபதேசங்களையும் என் ஆஸ்தியாகவும், உமது பாடுகளின் பலன்களை என் மீட்பாகவும் தந்ததோடு உம்முடைய சரீரத்தையும் இரத்தத்தையும் எனக்கு விருந்து கொடுக்

கிறீர். ஆகவே நீர் உம்முடையதில் எனக்குத் தராமல் நிறுத்திக்கொண்டதும், மறைத்துக்கொண்டதும் ஒன்று மில்லை. நீர் உமது ஐசுவரியத்திலிருந்து எனக்குக் கொஞ்சம் தராமல் உம்மையே சமூலமாய்த் தந்து என்னை ஆசீர்வதிக்கிறீர். இப்படிச் செய்த மனுப்புத்தி ரன் ஒருவனுமில்லை.

உம்மை நினைவுகூரும்படி இந்த விருந்தை நியமித்தீர். என் மறதியின் சுபாவமும், நான் மருளவிழும் சுபாவ மும் உமக்குத் தெரியும். அப்படியொன்றும் நேரிடாத படி இதை உமக்கு ஞாபக நியமமாக இவ்வுலகம் ஆசரித்து வரவேண்டுமென்று நீர் விரும்புகிறீர். உம்மை மறவாதபடிக்கு இந்த ஏற்பாட்டை ஸ்தாபித்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். நீர் என்னால் நினைவுகூரப்படப் பாத்திரராயிருக்கிறீர். உம்மைத் தவிர இந்தப் பூமியில் எனக்கு வேறே விருப்பமில்லை. என் மீட்பரே, நான் உம்மை மறந்தால் என் வலது கை தன் தொழிலை மறப்பதாக! இந்த நியமம் ஆசரிக்கப்படும் பொழுதெல்லாம் "மறக்கப்படாத நித்திய உடன் படிக்கையினால் நாம் கர்த்தரைச் சேர்ந்துகொள்வோம் வாருங்கள்" என்ற எக்காளச்சத்தம் தொனிக்கிறது. இதை ஆசரியாமல் அசட்டைபண்ணுகிற உம்முடைய பிள்ளைகளை நீர் பார்த்து "என்னை மறந்துபோனாப்" என்று சொல்லுகிறீர் (எசே. 22: 12).

ஜெபம்

இரக்கமுள்ள இயேசுவே! தேவரீர் உமது அடியாரின் பலவீனங்களை அறிந்து அது நிவிர்த்தியாகும்படியான ஒரு பரமவிருந்தை எங்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறீர். அது ஏழுநாள் விருந்தாகவாவது, வருஷாந்தர விருந்தாக வாவது இராமல் தின நித்திய விருந்தாயிருக்கிறது. இந்த விருந்தினால் நீர் என்னை உம்மோடு அந்நியோந்நிய மாக்கி உம்மைக்கொண்டு என்னைப் போஷிக்கிறீர். உம் மைப் புசித்து உம்மால் பலனடையாதவன் சாத்தானை வெல்லான்—உலகத்தை ஜெயிக்கான்—மாம்சத்தை மடக் கான்—என்றென்றைக்கும் உயிரோடிரான். இந்த வான

போஜனத்தால் அடியானைத் திருப்தியாக்கும். இதினால் அடியானைப் பலப்படுத்தும். என் பலவீனத்தை நீர் அறிவீரே. ஆ, தேவாட்டுக்குட்டியே நான் உம்மைப் புசித்து அதின் பெலனால் சீயோன்மலைச் சார்புகளில் துள்ளித்திரியக் கிருபைசெய்யும். ஆ, யூதகோத்திரச் சிங்கமே நானும்மைப் புசித்த பலத்தால் பாதாள லோகத்துக் கெர்ச்சிக்கிற சிங்கத்தைப் பீறிப்போட வரம் தாரும். ஆமென்.

16. கெத்செமனேப் பயணம்

வேதம்

அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படுமென்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என் நிமித்தம் இடறலடைவீர்கள். ஆகிலும் நான் உயிர்த்தெழுந்தபின்பு, உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன் என்றார். பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன் என்றான். இயேசு அவனை நோக்கி: இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்குப் பேதுரு: நான் உம்மோடு மரிக்கவேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன் என்றான்; சீஷர்கள் எல்லாரும் அப்படியே சொன்னார்கள்'' (மத். 26: 30–35; மாற். 14: 26–31; லூக். 22: 39; யோவான் 15, 16, 17 அதிகாரங்கள்).

போதனை

நமது இரட்சகர் பரிசுத்தநற்கருணையை ஸ்தாபித்ததுமுதல், கெத்செமனேயில் சேரும்வரையும் அநேக பிரயோசனமான வேலைகளைச் செய்தாரென்று பார்க்கிறோம். (1) அவர் ஸ்தோத்திரப் பாட்டைப் பாடினார்.

(2) ஒரு வாசஸ்தலத்தைப்பற்றிப் பேசினார். (3) திராட்சச்செடி உபமானத்தால் சீஷரைத் தம்மோடு ஐக்கியப்படுத்தினார். (4) நேசத்துக்கு ஏவினார். (5) துன்பம் சகிக்கப் போதித்தார். (6) பரிசுத்த ஆவியை வாக்களித்தார். (7) பேதுருவின் மறுதலிப்பை உணர்த்தினார். (8) கடைசிவிசையாகத் தமது சீஷரோடு ஜெபித்தார். இவைகளின் நுட்ப வரலாறுகள் மேலே காட்டிய ஒத்துவாக்கியங்களை வாசிப்பதால் தெரியவரும்.

பஸ்கா ஏற்பாட்டின்படி, அவர்கள் மறுநாள் அதிகாலைவரையும் அந்த வீட்டிலிருந்து வெளியேறக்கூடாது; இயேசு அந்த ஒழுங்கை லட்சியம்பண்ணவில்லை. அவர் தம்மை நம்முடைய பஸ்காவாக்கும்படி என்னென்ன ஒழுங்குகளிருந்தனவோ அந்த ஒழுங்குகள் தவறிப் போகாதபடி, கிரமமாய் நடந்துகொண்டார். இவ்விடத்தில் குறிக்கப்படுகிற ஸ்தோத்திரப் பாட்டு, சங்கீதம் 115 முதல் 118 வரையுமுள்ள வாசகங்கள்தான். இதுதான் இயேசு இவ்வுலகத்திலிருக்கையில் பாடினதாக வருகிற குறிப்பு. பஸ்காவைப் புசித்த பலம் அவரைப் பாட ஏவினது. தாவீது இராஜன் இந்தப்பாட்டைக் கட்டினது முதல் இதுவரையும் அது அநேகரால் பாடப்பட்டபோதிலும், இன்றுதான் அதின் மகிமை அதிகமாக விளங்கிற்று; ஏனெனில் மனுஷ கவிஞன் கட்டின பாட்டை தேவன் பாடுகிறது விசேஷமல்லவா?

தியானம்

நமது இரட்சகர் நமக்காகப் பாடுகளைப்படப் புறப்பட்டபோது பாடிக்கொண்டே புறப்படுகிறார். குமாரன் பாடும் குரலை இன்றுதான் பிதாவானவர் கேட்டார். அது கேருபீன்களின் கின்னரத்தொனியிலும், சேராபீன்களின் வீணைகளிலும் அவருக்கு இன்பமாயிருந்தது. அந்த ஸ்தோத்திரப் பாட்டில், "மரணக்கட்டுகள் என்னைச் சுற்றிக்கொண்டது, பாதாள இடுக்கண்கள் என்னைப் பிடித்தது; இக்கட்டையும் சஞ்சலத்தையும் அடைந்தேன்; எல்லா ஜாதிகளும், என்னை வளைந்துக்கொள்ளுகிறார்கள், தேனீக்களைப்போல என்னை வளைந்துகொள்ளு

கிருர்கள்" என்ற வாசகங்களை நமது இரட்சகர் அதின் சுத்தக் கருத்தோடு பாடினுர். இப்படிப் பாடிக்கொண்டு எனக்காகப் பாடுபடப்போகிற இவர் யார்? இவர் என் நேசர்—இவர் என் மீட்பர். என்னை மீட்கும் நாள் சமீபித்துவிட்டதை அவர் அறிந்து பாடுகிருர். பாடும் நேசரே—பாடும்—நானும் உமது கீதத்தோடு கீதமாய்ப் பாடுவேனுக:—

"வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே;
மூலைக்குத் தலைக்கல்லாயிற்று."

"கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர்;
அவர் கிருபை என்றுமுள்ளது."

இரட்சகா, நீர் பாடி முடியவே உம்மை வெட்டிக் கொள்ளுகிறீர். "மேய்ப்பனை வெட்டுவேன்" என்று சொல்லப்பட்ட சகரியாவின் வாசகம் உம்மைப்பற்றியே கூறப்பட்டதென்று உணர்த்தி, இவ்வண்ணம் சகரியா வின் கத்தியால் உம்மைக் காயப்படுத்திக்கொள்ளுகிறீர். உமது பாடுகளைப்பற்றிப் பேசுவதும், அதை நினைவு கூர்ந்துகொள்ளுகிறதும் உமக்கொரு இன்பமாயிருந்திருக் கிறதே. அதின் காரணமென்ன? அவைகளை நினைக்க, நினைக்க அவைகளைப்பற்றிப் பேசப் பேச உன்மேலுள்ள என் அன்பு வளர்ந்து சுவாலிக்கிறது அப்பா! என்மே லுள்ள அன்பை வளர்க்க உமது பாடுகள் எண்ணெய்போ லிருக்கிறதாக்கும்! ஆ இதென்ன நேசம். இந்த நேசத்தை நான் மதிப்பேனுக—இந்த நேசரை நான் வணங்குவே னுக.

இயேசுவே, உமது மனம் ஒலிவமலைமேலிருந்தது. என்னைப்போலொத்தவர்கள் அந்த நிலாவெளிச்சத்தில் புறப்பட்டால் அங்குமிங்கும் நடமாடி, பலரும் பஸ்கா வைப் புசிக்கும் வேடிக்கையைப் பார்த்து மனமகிழுவேன். என் நேசரே! உமது கவனமெல்லாம் உம்மைப் பஸ்கா வாகப் பலியிடுவதிலேயிருந்தது. நீர் முதலாவது உம் மைத் தூபமாகவும், அப்பால் பலியாகவும் உமது பிதா வானவருக்கு ஒப்புக்கொடுக்கும்படி இரண்டு வெவ்வேறு ஸ்தாபனங்களைத் தெரிந்துகொண்டீர். உமது தூபப்

பீடம் ஒலிவமலையிலேயும், உமது பலிப்பீடம் கொல்கதா மலையிலேயுமிருந்தன. உம்மைத் தூபமாகப் புகைக்கும்படி நீர் ஒலிவமலைக்குப் போனீர். உம்முடைய பெரிய பாட்டனாகிய தாவீது, துக்கத்தால் தன் முகத்தை மூடி, வெற்றுக்காலால் நடந்து அழுதுகொண்டு இந்த மலையின் மேலேறினான் (2 சாமு. 15: 30). நீர் சர்வலோகத்தின் பாவங்களால் துக்கங்கொண்டவராய் இதே மலைக்கு ஏகிப்போகிறீர்.

இங்கே ஒலிவமரங்கள் செழிப்பாயும், அடர்த்தியாயுமிருந்தன. இதற்குள்ளே ஒளித்துக்கொள்ளப்போகிறீரோ! அல்ல—அல்ல. இந்த மரங்களின் மத்தியில் ஜீவவிருட்சமாகிய நீர் நின்று, உம்முடைய ஜீவவாசனையைத் தூபமாகப் புகைக்கப்போகிறீர். இந்தப் புகையின் வாசனை, உமது சீஷரைத் தூங்கப்பண்ணும்—தேவதூதரை இறங்கிவரப்பண்ணும்—பாதாள தூதரை ஏறிவரப்பண்ணும். அதின் வரலாற்றை நான் பின்னால் தியானிப்பேன்.

நீர் உமது தூபப்பீடத்திலிருந்து புகையும்படி இந்த ஒலிவத்தோப்பைத் தெரிந்துகொண்டதிலும் ஒரு ஞானமிருக்கிறது என்று யோசிக்கிறேன். ஒலிவமரம் மனுஷருக்கு ஒப்பிடப்பட்டுப் பேசப்படுகிறது.* ஆகவே சகல மனுப்புத்திரரின் மத்தியிலும் நீர் உமது தூபப்பீடத்தை ஸ்தாபித்து, இரட்சண்ய தூபமாகப் புகையப்போகிறீராக்கும். ஒலிவக் கன்றுகளாகிய உமது பிள்ளைகள் அனைவரையும் உமது ஜெபதூப வாசனையால் மணமாக்கப் போகிறீராக்கும். காட்டொலிவக் கன்றுகளாகிய மனுமக்களனைவரையும் நல்ல ஒலிவமாகிய உம்மோடு ஒட்டவைத்து உமது சாரத்தை எங்களில் ஊட்டி வளர்க்கப் போகிறீராக்கும். ஏகும் இயேசுவே, ஏகிப்போம் ஐயா! நீர் எங்கே போனாலும், என்னசெய்தாலும் அவையெல்லாம் என்னுடைய வாழ்வுக்கேதுவானதுதான்.

இரட்சகா, நீர் போகும் போக்கிலும் உமது பாடுகளை நினைப்பூட்ட மறக்கவில்லை. என்மேலுள்ள நேசம் பொங்கி

---

* எரே. 11: 16; சங். 128: 3; ரோ. 11: 17.

வழிந்தோடும்போது அதிலிருந்துண்டாகும் தொனி, உமது பாடுகளின் வரலாருக இருக்கிறது. இதென்ன புதுமை—இது உம்மில் எப்போதும் விளங்கின அற்புதம் என்பேன். இந்த அன்பின் அற்புதத்தை நான் பக்தியோடு தியானிப்பேளுக. என் மீட்பரே, உமது பாடுகளை அடிக்கடிச் சொல்வதில் உமக்கு ஒரு மகிழ்ச்சியுமிருந்தது. ஏனெனில் அப்பாடுகள் மரணத்தால் இழிவுபடாமல், உயிர்த்தெழுதலால் சிறப்படைகிறதாயிருந்தது. நீர் உமது பாடுகளைச் சொல்லும்போதே, உமது உயிர்த்தெழுதலையும் சேர்த்துச் சொல்லுகிறீர். இப்படி நீர் அடிக்கடிச் சொல்லியிருக்கிறீர்.* உம்முடைய உயிர்த்தெழுதலின் நினைவு உமது பாடுகளுக்குப் பலளுகவும், உமது நோவுக்கு மருந்தாகவும், உமது காயங்களுக்கு எண்ணெயாகவும், உமது சாவுக்கு மாற்ருகவுமிருந்தது.

இந்தக் கெத்செமனேப் பயணத்தில் நீர் தேவன் என்றும் வெளியாகிறது. சீஷர் உம்மைவிட்டு ஓடிப்போவதையும், பேதுரு மறுதலிப்பதையும்பற்றி நீர் எப்படிச் சொன்னீரோ அப்படியே நடந்தது. இதில் பேதுருவின் இடறலைப்பற்றி நீர் சொல்லாமலிருந்தால், ஒருவேளை அவன் மனஸ்தாபப்படாமல் மரித்தாலும் மரிக்கலாம். அவன் மறுதலிக்கிறபோது அவனைக் குத்தி உணர்த்தும்படி ஒரு முள்ளை முன்னறவே அவன் நெஞ்சில் வைத்துவைக்கச் சித்தம்கொண்டது அவன்மேலுள்ள பெரிய தயவுதான்.

ஜெபம்

என் மீட்பரும் என் தேவனுமாகிய இயேசுவே, தேவரீருடைய பாடுகளின் சமுத்திரத்தண்டையில் என்னை இழுத்துக்கொண்டு உமது அன்பின் குளிர்ந்த காற்றை என்மேல் வீசப்பண்ணுகிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். நான் அதில் ஆழத்தில் இறங்க இறங்க தேவரீருடைய கரம் என்னைத் தாங்குவதாக. உமது நேச வெள்ளங்கள் என்மேல் தன் அலைகளை வீசி என்னைக் கழுவுவதாக. உமது அன்பின் வெள்ளத்தில்

---

* மத். 17: 9; 17: 23; 16: 21; மாற். 8: 31; 14: 18.

என் மனம் ஒரு மிடறு குடிக்கும்படி இடம்தாரும். தேவரீருடன் நான் வழிநடந்து, இந்த நேசபானத்தைக் குடித்துக் குடித்துக் களையாறி என் ஆவியில் மகிழ்ச்சி கொள்ளும்படி உமது அன்பினிமித்தம் அநுக்கிரகித் தருளும். ஆமென்.

வேறு

இரக்கமுள்ள இயேசுவே, தேவரீர் ஒலிவமலைக்குப் போகிற வழியில் பேதுருவின் மறுதலிப்பை உணர்த்தி அவனுடைய மனந்திரும்புதலுக்கு அவனை ஆயத்தப் படுத்தினீரே; அடியேனுடைய பல விழுதல்களை அறி வீரே. நான் தடுமாறி விழுகிறவனாகவே இம்மட்டும் காலம் கழிக்கிறேன். என்னுடைய பழைய விழுதல்கள் எல்லாவற்றையும் தயவாக மன்னித்து, இனி நான் உம்மைவிட்டு மருள விழாதபடி உமது பரிசுத்த ஆவி யைக்கொண்டு உணர்த்தி, கைதூக்கி இரட்சிக்கவேண்டு மென்று உமது மட்டில்லாத அன்பினிமித்தமும், மாசில் லாத தயவினிமித்தமும் வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

பரிசுத்த ஸ்தலம்

1. இயேசு கெத்செமனேக்கு வந்தது

வேதம்

"இயேசு அவர்களோடே கெத்செமனே என்னப்பட்ட இடத்திற்கு வந்து, சீஷர்களை நோக்கி: நான் அங்கேபோய் ஜெபம்பண்ணுமளவும் நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள் என்று சொல்லி; பேதுருவையும் செபெதேயுவின் குமாரர் இருவரையும் கூட்டிக்கொண்டு போனார்" (மத். 26: 36, 37; யோவா. 18: 1, 2).

போதனை

கெத்செமனே தோட்டம், எருசலேமுக்கு அரை மைலுக்குக் கிழக்கேயிருந்தது. இதன் ஓரத்தில் கீதரோன் என்னும் ஒரு ஓடை ஓடினது. இந்த ஓடையில் மழைகாலம்மாத்திரம் தண்ணீர் ஓடும். இதையடுத்த பள்ளத்தில் எருசலேமின் குப்பைகளெல்லாம் கொட்டப்பட்டிருந்தன. அந்தக் குப்பைகளை மிதித்து நடந்து இயேசு கெத்செமனே சேர்ந்தார். அவர் சர்வலோகத்தின் பாவங்களையும் தமது சிந்தையில் சுமந்துபோனார் என்பதை இது உணர்த்துகிறது. கீதரோன் என்றால் கறுப்பாகிறது என்று அர்த்தம். நகரத்தின் சாக்கடை ஜலம் அதின் வழியாகப் போனதையிட்டு, அந்தக் கால்வாய் கீதரோன் என்று அழைக்கப்பட்டிருக்கலாம். ஆதாமின் காலமுதல் அழுகி ஓடும் பாவச்சாக்கடையை இயேசு கடந்துபோகிறார் என்று சொன்னாலும் குற்றமில்லை.

தியானம்

கெத்செமனே என்றால் எண்ணெயின் பள்ளத்தாக்கு என்று அர்த்தமாகும். பாவக் கீதரோன் என்னும் கறுப்பாற்றில் குளித்துக் குடித்துக் கறுப்பாகிவிட்ட பாவிகளின் நரகநிறம் மாறி புதியநிற முண்டாகும்படி, அதினோரத்தில் ஒரு தைலத்தை ஆயத்தம்செய்ய இயேசு

கெத்செமனேக்குப் போனார். நான் ஒரு கறுத்த பாவி, நான் நரகப் புகையை யுண்டு கறுத்துப்போனேன். நான் நரகத்தின் மத்தியிலோடும் கறுப்பாற்றில் குளித்துக் குடித்துக் காலங்கழித்தவன். என் மீட்பர் என் மேல் பிரியம்கொண்டார். என்னைத் தம்முடன் மோட்சத்தில் சேர்க்கத் தீர்மானித்தார். என்னை அவர் மோட்சத்தில் சேர்க்கத்தக்க நிறம் என்னில் இல்லாதிருந்தது. என் நிறத்தை மாற்றும்படி அவர் அந்த கறுப்பாற்றின் பக்கத்தில் ஒரு தைல ஆற்றை உண்டுபண்ணினார். ஜீவ விருட்சமாகிய தம்மிலிருந்தே அந்த தைலத்தை வழிந்தோடச் செய்தார். நான் அதைத் தினம்தோறும் குடித்தேன்; அதைத் தேய்த்து ஸ்நானம் செய்தேன். இப்போது என் மாமிசம் மாறி நான் பரமசாயலை அடைந்து கொண்டிருக்கிறேன். அல்லேலூயா! ஆ எத்தியோப்பியப் பாவிகளே, ஆ கீதரோன் ஆற்றுக் குடிகளே, இதோ உங்கள் அருகிலிருக்கும் கெத்செமனேக்குள் வாருங்கள். இந்த எண்ணெய்த் தெப்பத்தில் முழுகுங்கள். பெதஸ்தாக்குளத்தில் தேவதூதன் கலக்கும்போது முதலாவது விழுந்தவனுக்குத்தானே சுகம் கிடைத்தது. இதில் எப்போது விழுந்தாலும் சரி சுகந்தான். ஏனெனில் என் இயேசு இக்குளத்தைத் தமது காருண்யம் என்னும் கரத்தால் எப்போதும் கலக்கிக்கொண்டே நிற்கிறார்.

இந்தத் தோட்டத்திலோரமாக ஆசா, எசேக்கியா, யோசியா என்னும் அரசர் இஸ்ரவேலரின் விக்கிரகங்களைச் சுட்டெரித்தார்கள். இயேசு இந்த இடத்தில் ஒருவகைப் பாவத்தைமாத்திரமல்ல சர்வலோக, சதா கால, சர்வபாவங்களையும் தமது வியாகுல அக்கினியால் அதமாக்குகிறார். இதை வாசிக்கிறவனே, உன்னுடைய பாவ அழுக்குகளெல்லாம் இந்தக் கெத்செமனேயின் சோலைக்குள் அடங்கிப்போகும்படி பிரயாசப்படுவாயாக.

என் இயேசுவே! தேவரீர் இரட்சண்ய எண்ணெய் இறக்கப் போகிறேன் என்று சொல்வதற்குப் பதிலாக ஜெபம் செய்யப்போகிறதாகச் சொல்லுகிறீர்! நீர் மூன்று

சீஷரைக் கூடக் கூட்டிப்போகிறீர். என்னையும் கூட்டிப் போம் ரட்சகா! நீர் உமது ஜெபத்தால் தைலமிறக்கு கிறதை நான் கண்டு, அந்தத் தைல மகத்துவத்தை அநேகருக்குச் சொல்ல விரும்புகிறேன். வா—கீதரோன் பாவியே கூடவா—என் இரட்சண்ய எண்ணெயால் உன்னை அபிஷேகம்பண்ணி அனுப்புவேன் என்கிறார்.

ஜெபம்

இரக்கமுள்ள இயேசுவே, என் பாவங்களின் நிவிர்த் திக்காகப் பாடுபடும்படி எழுந்தருளியாகிறீர். இப்படி நீர் மனோற்சாகமாக என்னை நேசித்து எனக்காக உம்மை ஒப்புக்கொடுக்கிறதினிமித்தம் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். நான் உம்மோடு ஆவியிலே கெத்செம னேக்கு வந்து உம்முடைய வியாகுலங்கள், பெருமூச்சு கள், கண்ணீர்கள் எல்லாவற்றையும் பக்திவிநயத்தோடு தியானித்து ஆராய்வதால் உம்முடைய பாடுகளுக்கு உடந்தையாகும்படிக் கிருபைசெய்யும். இந்தப் பரிசுத்த தியானங்களை என் மாமிச இச்சைகளாவது, பிசாசாவது கெடுத்துப்போடாதபடி உமது ஆவியினாலும், வசனத்தி னாலும் என்னைக் காத்தருள வேண்டுமென்று தாழ்மை யாய் வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

2. இயேசுவின் வியாகுலம்

வேதம்

“இயேசு திகிலடையவும், வியாகுலப்படவும் தொடங் கினார். அப்பொழுது, அவர்: என் ஆத்துமா மரணத் துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள் என்றார்” (மத். 26: 37, 38; மாற். 14: 33, 34).

போதனை

பதினொரு சீஷரோடும் கெத்செமனேக்குப் புறப்பட்ட இயேசு எட்டுப்பேரை அத்தோட்டத்தின் வாசலில் நிறுத்திவிட்டு, பேதுரு, யோவான், யாக்கோபு என்னும் மூன்று சீஷரோடு தோட்டத்துக்குள் போனார். அங்கே

போனபின்பு அம்மூவரையும் ஓரிடத்தில் நிறுத்திவிட்டு திகில் அடையவும் வியாகுலப்படவும் தொடங்கினுர். தான் எதிர்பாராத காட்சி அல்லது செய்தி வருங்காலத்தில் திகிலுண்டாகிறதுண்டு. அக்காட்சி அல்லது செய்தி பயங்கரமானதாயிருக்குமானுல்மாத்திரம் இப்படித் திகிலுண்டாகும்.

இப்படி இயேசு திடீரென்று திகிலடையவும் வியாகுலப்படவும் சீஷர் கண்ணுக்கு யாதொரு காட்சியும் தோன்றவுமில்லை, செய்தி வரவுமில்லை. ஆனுல் அவர்களை அறியாமல், இயேசுவின் கண்ணுக்குத் தோன்றின சில காட்சிகளிருந்தன. அது அந்தத் தோட்டத்துக்குள் அல்ல, வெகுதூரமான இடத்திலிருந்து காணப்பட்டது. அக்காட்சியையும், அங்கே ஆலோசிக்கப்பட்டதையும் இயேசு அறிந்தார். அவருடைய காது அந்தத் தூர் ஆலோசனைகளையெல்லாம் கேட்டன; ஆகவே அவர் திகிலடையவும் வியாகுலப்படவும் தொடங்கினுர்.

தியானம்

ஒருநாளும் பயப்படாத இயேசு இன்று பயப்படுவானேன், திகிலடைவானேன்? கொந்தளிக்கிற கடலின் மேல் திகிலடையாமல் நடந்தவருக்கு இந்தச் சோலைக்குள் திகிலேன்! இங்கே துஷ்டமிருகங்களால் அவர் சூழப்பட்டாரோ? இல்லை—இல்லை. பின்னை திகிலடைவானேன்?

இயேசு வானத்தைப் பார்த்தார். உடனே திகில் வந்தது. பட்டப்பகல்போல விளங்கின அந்தச் சந்திர இரவில் பிதாவாகிய தேவன் தமக்குக் குறித்திருக்கிற பாடுகளின் படத்தைப் பார்த்தார். இம்மட்டும் அவற்றின் பேர்களை அறிந்தவர், இப்போது அவை ஒவ்வொன்றும் நிறைவேற்றப்படும் மாதிரியைக் கண்டார். ஆகவே திகில் அவரைப் பிடித்தது.

இயேசு பாதாளத்தைப் பார்த்தார்; உடனே திகில் வந்தது. பூதகணங்களில் ஒன்றும் பாதாளத்தில் தங்காமல் கெத்செமனேயில் கூடவேண்டுமென்று பறைசாற்றப்பட்டதை அவருடைய காது கேட்டது. அவையனைத்தும்

தன் தன் அக்கினி அஸ்திரங்களோடு பாதாள வாசலை விட்டேறி இன்றையத்தினம் தேவ குமாரனை அதமாக்கி, அவருடைய இராஜ்யத்தைக் கைப்பற்றுவோமாக என்று ஆரவாரித்தார்கள். அது திகிலை யுண்டாக்கிற்று.

இயேசு பூமியைப் பார்த்தார். வியாகுலம் அவரைப் பிடித்தது. சற்றுநேரத்துக்கு முன் அவரோடுகூட இருந்து சாப்பிட்ட யூதாஸ் எருசலேமின் தெருக்களில் ஆள் திரட்டுவதையும், கத்திகள், தடிகள், கயிறுகள் சம்பாதிப்பதையும், அவனோடு பிரதான ஆசாரியர் வேதபாரகர் முதலியவர்கள் செய்யும் ஒழுங்குகளையும் ஆவியிலே அறிந்து வியாகுலப்பட்டார்.

இவற்றோடு ஆதாமின் காலமுதல் உலக முடிவுவரையுமுள்ள சர்வலோகத்தாரின் பாவங்களும் மலையிலிருந்து உருண்டுவருவதுபோல் பரலோகத்திலிருந்து மூட்டை மூட்டையாய் உருண்டு அவருடைய மனதில் மோதின. அவை ஒவ்வொன்றும் அவரைத் தாக்கும்போது, உலகத்தின் பாவங்களைச் சுமந்துதீர்க்கும் தேவாட்டுக்குட்டியே, என்னைச் சுமந்து நிவிர்த்தியாக்கும் என்று வீம்பாகப் பேசினது. அவையனைத்தையும் அவர் பார்க்கவே திகிலடைந்தார்.

கடைசியாக, இதை வாசிக்கிறவனே, உன்னுடைய பாவ மூட்டையும் உருண்டுவந்தது. ஆ அதின் கனத்தையும் பருமனையும் நிறுக்கவும் அளக்கவும் ஆயுதங்களாவது கருவிகளாவது இல்லையப்பா—ஐயோ அதின் நாற்றத்தை மாற்ற இவ்வுலகத்தில் வாசனைகளில்லையப்பா! அதைப் பிரித்துப் பார்த்தாலோ, அதற்குள்ளில்லாத பாவம் ஒன்றுமில்லையப்பா! பாதாள லோகத்திற்குள் இல்லாத பாவங்களில் அநேகம் உன் பாவமூட்டைக்குள்ளிருந்ததப்பா! நீயோ சாமானியமான பாவியல்ல. வானத்து வாழ்வுகளில் அநேகத்தை நீ அடைந்தவன். தேவனுடைய தயவு மற்றவர்களைவிட உன்மேல் அதிகமாக நிழலிட்டதுண்டு. தூதரின் ஊழியத்தை நீ விசேஷித்துப் பெற்றவன். இவ்வுலகத்தில் உன்னைப்பற்றி பெரிய

பேருண்டு. இப்படிப்பட்ட உன்னுடைய பாவ மூட்டையின் தன்மையோ பயங்கரப்படத்தக்கதாயிருக்கிறது. இவ்வளவு கிருபைகளைப் பெற்றும் இத்தனை பாவங்களா? இவ்வளவு நாற்றமா என்ற சிந்தை உன் இரட்சகரைக் கடந்துபோகவே அவர் திகிலடைந்து வியாகுலப்படுகிறார்.

இயேசு திகிலடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார். அவர்தாமே தம்மைத் திகிலுக்கும் வியாகுலத்துக்கும் ஒப்புக்கொடுத்தார். இப்படி ஒப்புக்கொடுத்தது ஒரு பெரிய பாடு. பாவம்செய்யாத ஒருவர், பிறர் பாவங்களைப் பார்த்து, இவ்வண்ணம் திகிலடைவது அவருடைய பரிசுத்தத்தை வெளிப்படுத்துகிறது. நான் திகிலடைவேனாக, நான் வியாகுலப்படுவேனாக என்று சொல்லிக்கொண்டு திகிலடைகிறார்—வியாகுலப்படுகிறார். இவையொன்றையும் அவர் லட்சியம்பண்ணாமல் தமது சர்வவல்லபத்தால் அழித்து, இதோ பாவநிவாரணத்தை யுண்டுபண்ணினேன் என்று சொல்ல அவருக்குப் பலமுண்டு. ஆனால் அது பிராயச்சித்த முறையல்ல. மனந்திரும்பி மன்னிப்பை யடையவேண்டிய ஒரு பாவி: தன் பாவத்துக்கு எப்படித் திகிலடைந்து மனநோவடைய வேண்டுமோ, அதேவண்ணமாக இயேசு திகிலடைந்து வியாகுலப்பட்டார்.

ஆ, என் இயேசுவின் திகிலையும், வியாகுலத்தையும் நான் கண்ணோக்கும்போது அதிசயப்படுகிறேன். நான் என் பாவங்களைத் துணிந்து செய்தேன். நான் ஓரோர் புதிய பாவங்களைச் செய்தபோது சிலநேரம், அல்லது சிலநாள் துக்கப்பட்டதுண்டு. ஆனால் காலம் செல்லச் செல்ல பயமும், திகிலும், வெட்கமும், வியாகுலமுமில்லாமல் அவைகளைச் செய்ததுண்டு. அநேக பாவங்களை நியாயம் சொல்லிக்கொண்டு செய்ததுண்டு. இவ்வண்ணம் நான் என் பாவங்களுக்காக, திகிலடையவும் வியாகுலப்படவுமில்லை. ஆதலால் இயேசு என்னிமித்தம் திகிலடைந்து, எனக்குப் பதிலாக வியாகுலமடைந்தார்.

எனக்காகத் திகிலடைந்த இயேசுவே! என் வியாகுல புருஷரே! பரிசுத்தமுள்ளவரும், பாவங்களுக்கு விலகின

வருமான தேவரீர் என்னிமித்தம் இப்படிப் பாடுபடு
றதை நான் கண்டும் இன்னும் திகில் என்னைப் பிடிக்க
வில்லையே—வியாகுலம் என்னை மூடவில்லையே. ஆ, நான்
கல்நெஞ்சன்—நான் துணிந்த பாவி—நான் பஞ்சமா
பாவி. இப்படி அசையாத பாவி நான் ஒருவன்தான்.
தேவரீருடைய திகில் என்னைப் பிடிக்கும்படி உமது இரட்
சண்ய மின்சாரத்தை அனுப்பும். உம்மைச் சூழ்ந்த
வியாகுல இருள் என் மனமலையை மூடுவதாக!!

ஜெபம்

இரக்கமுள்ள இயேசுவே, தேவரீர் என்னிமித்தம்
கெத்செமனேக் காவில் திகிலடைந்து வியாகுலப்பட்டீர்.
அதற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். அதே
திகில் என்னைப் பிடிக்கும்படி என் பாவங்களின் அட்ட
வணையை எனக்குக் காட்டியருளும். நான் திகிலடையு
யட்டும் என் மனச்சாட்சி என்னைக் குத்தும்படி கிருபை
செய்யும். நான் மறந்துபோன பாவங்களனைத்தையும்
இன்று செய்த புதிய பாவம் போல் எனக்கு உணர்த்தி,
உமது பரிசுத்த ஆவியால் என் உள்ளத்தைக் கலக்கியரு
ளும். தேவரீருடைய வியாகுலத்தை நான் பின்பற்றி,
பாவமன்னிப்பின் மகிழ்ச்சியை என் இருதயம் காணுமட்
டும் என்னுடைய எல்லாப் பாவங்களுக்காகவும் வியா
குலப்பட்டுக் கொண்டேயிருக்கக் கிருபை செய்தருளும்.
ஆமென்.

3. கெத்செமனே ஜெபம்

வேதம்

"அவர் சற்று அப்புறம்போய், முகங்குப்புற விழுந்து:
என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்
கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்
தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கட
வது என்று ஜெபம் பண்ணினார்......அவர் மறுபடியும்
இரண்டாந்தரம் போய்: என் பிதாவே, இந்தப் பாத்திரத்
தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னைவிட்டு
நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்
கடவது என்று ஜெபம்பண்ணினார்...அவர் மறுபடியும்

அவர்களை விட்டுப்போய், மூன்றாந்தரம் அந்த வார்த்தைகளையே சொல்லி ஜெபம்பண்ணினார்" (மத். 26: 39-46; மாற். 14: 35-42; லூக். 22: 41, 42).

போதனை

இயேசு தமது மனுஷாவதார காலமுழுவதிலும், துக்கம் நிறைந்தவரும் பாடனுபவித்தவருமாயிருந்தாலும், அவருடைய ஜீவியத்தின் கடைசிநாளில் அவையனைத்தும் ஒன்றின்பின்னொன்றாகத் தொடர்ந்து முடிவடைந்தன. அவருடைய முடிவான பாடுகளில், கெத்செமனேயின் ஜெபத்தால் அவர் அடைந்த பாடு முதலாவதாயிருக்கிறது. வெளிப் பேருக்கும் பார்வைக்கும் இது ஜெபம்போலிருந்தாலும், இது சொல்லமுடியாத திகிலோடும், வியாகுலத்தோடும் மனதில் அநுபவித்த பாடாக இருந்தது.

இயேசு தம்மைச் சீஷரிலிருந்து பிரித்து, தனிமைப் படுத்திக்கொண்டு, இந்தப் பாட்டை அநுபவித்தார். இந்த வரலாற்றை எழுதும் சுவிசேஷகர்: இயேசு "முழங்கால் படியிட்டார்," "தரையிலே விழுந்தார்," "முகங்குப்புற விழுந்தார்" என்ற மூன்று வெவ்வேறு வார்த்தைகளை வழங்குகிறார்கள். இந்த மூன்று முறையையும் அவர் கையாடியிருக்கவேண்டும். இயேசு தமது பிதாவை நோக்கி, "பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று ஜெபித்தார். பரி. மாற்கு "இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப்போடும்" என்று ஜெபித்ததாகச் சொல்லுகிறார். இதனால் அவர் மனவெறுப்போடும், பாடுபட மனமில்லாமலும் பாடு பட்டார் என்று நினைக்கக்கூடாது. இது நமது இரட்சகரின் பாடுகளின் அகோரத்தையும் கசப்பையும் காட்டுகிறதேயன்றி வேறல்ல. மேலும் அந்தகாரத்தின் அதிகாரம் இந்நேரத்தில் இயேசுவைச் சூழ்ந்துகொண்டிருந்தது. (முன் வனத்தில் மடக்காத இயேசுவை இப்போது மடக்கிப் போடவேண்டுமென்று பிசாசுகள் பிரயத்தனப் பட்டன. இந்தப் பிசாசுக்களின் துன்பத்தை அவர் சகிக்க

மனமற்றிருந்தார். தேவனும், மனுஷனும் வரும் எல்லாத் தண்டனைகளுக்கும் பாடுகளுக்கும் அவர் மனோ வாஞ்சையாகச் சம்மதித்தபோதிலும், பிசாசு இச்சமயத்தில் தம்மைப் பின்தொடருவதையிட்டு அவருக்குப் பிரியமிருக்கவில்லை. இவ்வுலகத்தின் அதிபதி வருகிறான். அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை என்று அவர் சற்றுநேரத்துக்குமுன் சொல்லியிருந்தார். அப்படியிருந்தும் அவன் வந்தான். பிதாவானவர் கொடுத்த பாத்திரத்தைவிட இந்தப் பிசாசுக்களின் அமளிகளாகிய பாத்திரம் அதிக வெறுப்பைக் கொடுத்தது. பிதாவே, மனுஷராலும் உம்மாலும் எனக்கு நேரிடும் எல்லாப் பாடுகளையும் சகிப்பேன். இந்தப் பேய்களின் பாத்திரத்திற்கும் எனக்கும் சம்பந்தமில்லையே. இதை என்னிடத்திலிருந்து எடுத்துப்போடும் என்று கேட்கிறார். அப்படி அவசரமில்லாத இந்த அவமானத்தையும் நான் சகிக்க உமக்குச் சித்தமானால், அப்படியே ஆகக்கடவது என்று சொல்லுகிறார். இயேசு முதலாந்தரம் ஜெபத்தியானத்திலிருந்து திரும்பி வர ஒருமணி நேரம் சென்றது. அதேமாதிரி மூன்று தடவை அவர் ஜெபம் செய்தார். ஆகவே இந்தத் தோட்டத்தில் இயேசு மூன்றுமணி நேரம் தமது மனதிலே பாடுபட்டு உத்தரித்தார் என்றெண்ண இடமிருக்கிறது. இந்த மூன்றுமணிநேரத்திலும் அவர் வெளியிட்ட வார்த்தைகள் அதிகமாயிருந்தாலும், நமக்கு இறங்கிவந்திருக்கிற வாசகம் இந்த ஒன்றுதான், மற்றதெல்லாம் தமக்கும் பிதாவுக்கும் மாத்திரம் தெரிந்ததாயிருந்தது. ஒருவேளை இவ்வார்த்தைகள், தூங்கின சீஷர் விழிக்கத்தக்கதாக, அவ்வளவு பலமாகத் தொனித்திருக்கலாம்.

தியானம்

என் நேச இயேசுவே, நீர் இவ்வளவு பணிவாக முழங்காற்படியிட்டு நிற்பானேன்? உமக்கு வந்த ஆபத்து என்ன? ஆ என்னை மீட்கும் நாள் வந்தது. என் பாவங்கள் உமது கால்களில் மோதி உம்மை முழங்காலில் நிறுத்துகின்றன. தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்க வேண்டிய நீர் உமது பிதாவுக்கு முன் முழங்காலில் நிற்

கிறீர். என் நைதி நிலைமையில் இன்று நீர் இருக்கிறீர். என் பாவம் உமது தோளின்மேல் ஏறவே, அதின் பாரம் பொறுக்கமாட்டாமல், உமது கழுத்தும் முதுகும் வளைந்ததோடு, உமது காலும் முழங்கால் படியிடுகிறது. உமது பிதா நீட்டும் பாடுகளின் பானத்தை மரியாதையோடு வாங்கிக் குடிக்க முழங்கால் படியிடுகிறீர். என் பாவம் இன்னும் உமதுமேல் ஏறுகின்றன; முழங்காலில் நின்ற நீர் முகங்குப்புற விழுகிறீர். உன் பாவத்தை ஏற்றும்படி என் சிரசிலும், தோளிலும் இடமில்லை. நான் முகங்குப்புறப் படுக்கிறேன்.—என் முதுகின்மேல் உன் பாவ மூட்டைகளை ஏற்று என்று நீர் சொல்லுகிறீராக்கும்.

இரட்சகா! பிதாவானவர் நீட்டும் ஒவ்வொரு பாத்திரத்தையும் நீர் மனோவாஞ்சையோடு குடிக்கிறீர். இப்போது அவர் என்னுடைய பாவங்களினிமித்தம் நீர் குடிக்கவேண்டிய பானத்தைக் கலக்கித் தருகிறார். உம்முடைய பானபாத்திரங்கள் எல்லாவற்றிலும் இது அதிக அருவருப்பாக இருக்கிறது! ஆ என் மீட்பரே, என்னை மீட்கும்படி இதையும் குடித்தீர். மற்றப்படி நான் இரட்சிப்புக்குத் தூரமாயிருப்பேன். என் சம்பந்தமான பானத்தைக் குடிக்கவே உமது பெலன் உம்மைவிட்டுப் போகிறது! சாவு உமது மூச்சில் வீசுகிறது, உமது கண்விழி குன்றுகிறது, நீர் உமது பரிசுத்த முகத்தைத் தரையிலே தாழ்த்துகிறீர்.—நீர் செத்தவனைப்போலக் கிடக்கிறீர்.—ஐயோ, இன்றுதான் என் பாவத்தின் கசப்பு எனக்குத் தெரிகிறது. தேவ குமாரனைத் தலைநிமிர்த்தக் கூடாதபடி தாழ்த்திவிட்டது என் பாவம்தான். அவருக்குள் பெருமூச்சையும், அங்கலாய்ப்பையும் உண்டாக்கினது என் பாவம்தான். தேவகோபம் அதிகமாக என் இயேசுவைப் பட்சித்தது என் பாவத்துக்காகத்தான். என் பாவ ஆக்கினையின் பாத்திரம் எவ்வளவு கசப்பும், எவ்வளவு நஞ்சுமாயிருந்தபோதிலும்,

பிதாவே, என்னுடைய சித்தத்தின்படியல்ல;

பிதாவே, உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது என்று சொல்லி, அதை அதின் எல்லா வண்டலோடும் குடித்தார். இயேசுவே உமது கசப்புக்கு நல்ல தித்திப்

பைச் சம்பாதித்துக்கொண்டீர். உமது வெட்டுக்கு நல்ல பற்றுக்கிடைத்தது. இந்த மருந்தால் நீர் உமக்குண்டாகப்போகிற எல்லா வேதனைகளையும் இலேசாக்கிக் கொண்டீர். இவ்வுலகத்தில் எனக்கு என்ன உபத்திரவங்கள் நேரிட்டாலும், அவையனைத்தையும் இதே மருந்தைக்கொண்டு மாற்றிக்கொள்ளும்படி எனக்கு உணர்த்துகிறதுபோலிருக்கிறது. நீர் உமது ஜீவகாலமுழுவதையும்,

"உமது சித்தத்தின்படி ஆகக்கடவது"

என்னும் உப்பால்சாரமேற்றி பலியிட்டீர். நானும் இப்படியே என் ஜீவகாலத்தைப் பின்னிடுவேனாக.

இயேசு முகங்குப்புறத் தரையிலே கிடக்கிறதைப் பார்த்து நான் பிரலாபித்து, ஐயோ என் மீட்பர் மாண்டு போனாரோ! என் தேவன் சோர்ந்து விழுந்தாரே என்று அலறுகிறேன். அப்போது ஒரு தூதன் என்னண்டை பறந்துவந்து, ஆதாமின் மகனே, ஏவாளின் மகளே, கலங்காதே. பாதாள சிங்கம் கெர்ச்சித்து வருகிறான், அவன்மேல் பாய்ந்து அவனைப் பீறிப்போட, யூதக்கோத்திரச் சிங்கம் பதிவிருக்கிறார் அப்பா. பழைய பாம்பாகிய வல்லசர்ப்பம் தன் தலையைத் தூக்கிப் படமெடுக்கிறது. அதின் தலையை நசுக்கும்படி நகருகிறார் அப்பா! என்கிறான். பதிவிருக்கும் சிங்கமே! பதிவிருந்து பிசாசை விழுங்கிப்போடும். நகரும் மீட்பரே! நகர்ந்துபோய், பாதாள வல்லசர்ப்பத்தின் தலையை நசுக்கிப்போடும்.

பாதாளத்தின் சிங்கத்தை
பீறிப்போடும் யேசுவே
வல்லசர்ப்பத் தலையை
நசுக்குவீர் யேசுவே.

ஜெபம்

என் ஆத்தும நேசரே! என் ஆத்தும மீட்பரே! தேவரீர் கெத்செமனேத் தோட்டத்தில் பட்ட அவஸ்தைகளையும்பாடுகளையும் இப்பொழுது நினைவுகூருகிறேன். எனக்காக நீர் திகிலோடும், வியாகுலத்தோடும் முழங்கால் படியிட்டீர், சாஷ்டாங்கமாய் விழுந்தீர். உமது முகம்

பூமியின் தூசியால் அழுக்கானது. நீர் என் பாவத்தை உமது மனத்தின்மேல் சுமந்து, அதற்கு வரவேண்டிய தண்டனையனைத்தையும் சிந்தையில் உத்தரித்தீர். நான் இந்த எல்லா வரலாறுகளாலும் பாவ உணர்ச்சிக்கு ஏவப்பட்டு, வியாகுலத்தோடும் திகிலோடும் முழங்காலூன்றி, முகங் குப்புறவிழுந்து, தூளிலும் சாம்பலிலுமிருந்து மனஸ்தாபப்படவும், உமது பாடுகளின் புண்ணியத்தால் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளவும், உமது பரிசுத்த ஆவியால் என்னை நடத்தியருளும். ஆமென்.

4. இயேசுவின் இரத்த வேர்வை

வேதம்

"அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான். அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது. அவர் பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல் செய்தார்" (லூக். 22: 43, 44; எபி. 5: 7).

போதனை

இயேசுவின் ஜனன சரித்திரத்தில், தூதர் சேவையைப் பற்றி அடிக்கடி வாசிக்கிறோம். என்றாலும் இரட்சகருக்கு தேவதூதரின் உதவி கிடைத்ததற்கு, இதுதான் முதலாம் குறிப்பு என்று அறிந்துகொள்ளவேண்டியது. இயேசுவின் வியாகுலமும், திகிலும், அவர் செய்த விண்ணப்பமும், ஒருவரும் அறியாத வண்ணமாக அவரைப் பலவீனப்படுத்திவிட்டது. முதலாவது முழங்காலில் நின்று ஜெபித்த இயேசு: பெலவீனப்பட்டதால், தரையிலே முகங்குப்புற விழுந்தார். அவர் ஊக்கத்தோடும், பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் ஜெபம்செய்தார். அது மனுஷபார்வைக்கு வெறும் ஜெபமாயிருந்தாலும், உள்ளபடி பலியாக இருந்தது. அவர் தமது மனத்தை வியாகுலத்தாலும், மனோதத்துவங்களைத் திகிலாலும் காயப்படுத்தி, தமக்கிருந்த எல்லா ஊக்கத்தோடும் ஜெபித்

தார். அவர் தமது சத்தக் கருவியை முறுக்கி, பலத்த சத்தமிட்டார். தமது கண்ணீர்த் துருத்தியைக் கிழித்து, அழுகையோடு விண்ணப்பம் செய்தார். இந்த வேளையில் கர்த்தர் அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார். அவர் தம்முடைய ஆத்துமாவைக் குற்றநிவாரண பலியாய் ஒப்புக்கொடுக்கும்படியாக இரத்தவேர்வை வேர்த்து அதை மரணத்திலூற்றினார்.

தியானம்

என் இரட்சகா, உம்முடைய கெத்செமனே சஞ்சாரம் எவ்வளவு துயரமாயிருக்கிறது. உம்மை நான் மறுரூபமலையிலிருந்து பார்த்ததற்கும் இதற்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது. நீர் அசட்டைபண்ணப்பட்டவரும் மனுஷரில் ஈனமானவரும் வியாகுலம் நிறைந்தவருமாயிருக்கிறீர். நீர் மூன்றுதடவையும் போய் ஜெபம் செய்ததில் களைத்துப்போனீர். எனக்கு நீர் ஜெபம் செய்ததுபோலமாத்திரம் காணப்பட்டது; ஆனால் தியானத்தில் என்னை ஆழ்த்தும்போது நான் கண் தெளிவிக்கப்பட்ட புருஷனாகிறேன். உமது ஆவியானவர் இது ஜெபமல்ல பலி என்று போதிக்கிறார்; இது மெய்யாகவே பலிதான். இது ஆபிரகாம் தன் குமாரனை பலி செலுத்தினதிலும் விசேஷமானதாயிருக்கிறது.

இயேசு முழங்கால் படியிடவே, பிதாவானவர் பரலோகத்திலிருந்து எழுந்தருளியாகி, தமது குமாரனைப் பாடுகளுக்குட்படுத்துகிறார். அவர் தேவனைப்பற்றிய தமது நியாயப்பிரமாண மடங்கிய முதலாம் கல்லைக் கீழே வைத்து, அதின்மேல் தமது குமாரனைக் கிடத்தி, அவர் மேல் மனுஷரைப்பற்றிய இரண்டாம் கல்லை ஏற்றுகிறார். இந்த இரண்டாம் கல் அதிகப் பளுவானதால் தேவகுமாரன் நசுங்குகிறார். ஏனெனில் எல்லா மனுஷரும் இந்தக் கற்பனைகளனைத்தையும் மீறி, அதற்குரிய தண்டனைகளால் இந்தக் கல்லை அதிகப் பாரமாக்கிவிட்டார்கள். இந்தப் பாரத்தின்மேல் சர்வலோகத்தின் பாவமூட்டைகளும் ஏற்றப்பட்டு, இரட்சகரை அதிகமாய் நசுக்குகிறது. கடைசியாக என்னுடைய பாவமூட்டைகள் சுமத்

தப்படவே, அவர் பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் அழுகிறார். அவர் எனக்காக அதிக லக்கத்தோடும் வியாகுலத்தோடும் ஜெபம் செய்தார். அப்பொழுது அவர் தேகம் கசிந்தது—என் மீட்பின் இரத்தம், சொட்டுச் சொட்டாகத் தரையிலே விழுந்தது. அந்த இரத்தச் சொட்டுகளைக் கண்டவுடன் நான் மகிழ்ந்தேன். என் மீட்பரும் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியானார்.

அதுமாத்திரமோ, தேவனே தமது குமாரனை நொறுக்கச் சித்தமாகி இறங்கிவந்து, தமது நீதியின் தண்டாயுதத்தால் அவரை வேதனைகளுக் குட்படுத்துகிறாரென்பதை பெயெல்செபூல் கண்டு, ஆணவம்கொண்டு, என் இரட்சகராகிய பரிசுத்த ஆட்டுக்குட்டியைப் பீறினான். அதினால் அவர் சோர்ந்து தரையிலே விழுந்தார்!

இம்மட்டுமாத்திரமல்ல அப்பா, ஏதேனின் வல்லசர்ப்பம், கெத்செமனேக்குள் நகர்ந்துவந்து, அந்த இருண்ட இரவில் முழங்காலில் நின்ற அவருடைய குதிங்காலைக் கொத்தினான். அந்தக் கொத்துக்காயத்தின் வழியாக என் பாவவிஷம் ஏறிற்று. என் பாவவிஷம் ஏறவே அவர் தரையிலே விழுந்தார். அது பின்னும் அவர் சிரசில் ஏறவே, அவர் முகங்குப்புறப் படுத்து, பிணம்போல கிடந்தார். இந்த என் பாவவிஷமும், சர்வலோகத்தின் பாவவிஷமும் அவருக்குள் செல்லவே, அவருடைய திருமேனியின் மயிர்த்துவாரங்கள், தங்கள் வாயை விரிவாகத்திறந்தன. என் மீட்பரின் பரிசுத்த இரத்தம் சொட்டுச் சொட்டாகத் தரையிலே விழுந்தது. அவர் களைத்துக் கிடந்தார்.

என் இரட்சகா! இந்த ஆயாசம் உமக்கேன்! இந்தக் களை உமக்கேது! நீர் சுமார் மூன்றுமணி நேரத்துக்கு முன் பஸ்காவைப் புசித்து பலமாய் எழுந்து பாடினீரே. எல்லாருடைய சத்தத்திலும் உமது சத்தம் பலமாகக் கேட்டதே! நீர் அதன்பின் உமது சரீரத்தையும், இரத்தத்தையும் உமது பிள்ளைகளுக்குப் போஜனமும் பானமுமாகக் கொடுத்தீர். அதில் மீந்ததை உமது

பிதாவின் நீதிக்குக் கையளித்தீர். கடைசியாக உள்ள மீதியையும் இரத்த வேர்வையாக வேர்த்து, சொட்டுச் சொட்டாகச் சிந்தி, களைத்துப்போனீர். என் னிமித்தம் நீர் உமது இரத்தத்தையும் சத்தத்தையும், வியாகுலத்தையும் கண்ணீரையும் பலியாகச் செலுத்தி, உமது பிதாவின் சமுகமாகிய பீடத்தண்டை பிணம் போல கிடக்கிறீர். ஆதாமின் சாபத்தால் தீட்டுப்பட்ட பூமி, உமது திரு இரத்தத்தால் பரிசுத்தமாக்கப்படு கிறது.

என் மீட்பரைக் கைதூக்கி நிமிர்த்தும்படி வானத்தி லிருந்து ஒரு தூதன் தோன்றினன். ஆ, தூதரே—பிரதான தூதரே! உங்கள் தேவனும் என் தேவனுமான வரை இந்த அவஸ்தையில் தூக்கும்படி நீங்கள் அனைவரும் வரக்கூடாதா? ஆ என் மீட்பரைப் பலப்படுத்தும்படி ஒரே ஒரு தூதன்தானு! ஒரே ஒரு தூதன்தானு! நீங்கள் அனைவரும் வந்தால் நான் செய்யவேண்டிய ஊழியங்க ளுக்குத் தடையாயிருக்கும். நீங்கள் நில்லுங்கள், நீங்கள் அப்படியே ஆகாயத்திலிருந்துகொண்டு, உங்களுடைய அவ்வாறு செட்டைகளையும் வீசி உங்களாண்டவருடைய களையை ஆற்றுங்கள்; நானும் இந்த ஒரு தூதனும் அவ ருக்குப் பணிவிடை செய்கிறேம்.

ஒரு தூதன் சோல்வது:—என் தேவனே, ஜோதிகளின் சுதனே, நான் உம்மைத் தொடவாவது தூக்கவாவது வரவில்லை. நான் உமது கிட்டவராமல் ஆகாயத்திலே இந்தச் சோலைக்குள் நிற்பேனேயன்றி இந்தப் பரிசுத்த ஸ்தலத்தில் என் காலால் மிதிக்கமாட்டேன். தேவ குமாரனே, உம்முடைய பாடுகள் இத்தோடு முடிந்து போகவில்லை. இது அவைகளின் ஆரம்பமேயன்றி வேறல்ல. உமது பாடுகளின் அலைகள் மாத்திரம் கெத்செமனேக்குள் அடிக்கிறது. நீர் இன்னும் நீந்தி, நீந்திக், கல்வாரியின் ஜலத்திரளைக் கடந்து, பாதாளம் என்னும் அடுத்த கரைவரையும் போகவேண்டுமல்லவா. தேவரீர் உமது அன்பின் தீர்மானங்களை நினைவுகூர்வீராக. இவ்வுலகத்தை மீட்க யாரை அனுப்புவேன் என்று பிதா

கேட்டபோது, இதோ, என்னை அனுப்பும் என்று நீர் சொன்னதை நினைவுகூரும். உமது பிதாவாலும் பூதகணங்களாலும் உமக்குண்டாகிற பாடுகள் ஒருவாறு முடிவடைந்தன என்று சொன்னாலும், மனுப்புத்திரரால் நீர் அடையவேண்டிய பாடுகள் இன்னுமிருக்கின்றன. உமக்காக யூதாசும் சேவகரும் பிரதான ஆசாரியரும் பிலாத்தும் ஏரோதுவும் ஏக ஜனங்களும் காத்திருக்கிறார் கள். தேவபுருஷரே, எழும்பும், உமது தலையை உயர்த் தும். உமது அநாதி நேசம் இந்த ஆயாசத்துக்கு மாற்று மருந்தாகவும், உமது சுத்தக் கிருபை உம்மைத் தூக்கி நிமிர்த்தும் தடியாயுமிருப்பதாக. சாத்தான் ஜெயிக்கப் பட்டான்—உலகம் மீட்கப்பட்டது—பாவம் நிவாரண மாகிறது என்ற எண்ணங்கள் உம்மைப் பலப்படுத்தும் போஜனம்போலிருப்பதாக. நீர் ஒருவாக ஆலையை மிதித்தீர். ஜெயம் முற்றிலும் உம்முடையதாகும்படி எழுந்திரும் மீட்பரே, எழுந்து நடவும் என்கிறான். உடனே என் மீட்பர் நித்திரை தெளிந்தவரைப்போல வும், திராட்ச இரசத்தால் பெலனடைந்த பராக்கிரமனைப் போலவும் எழுந்து நடந்தார்.

ஒரு பாவி சொல்வது:—ஆ, என் மீட்பரே, என்னி மித்தமே இந்த இரத்தத்துளிகள் விழுந்தன, என் பாவம் உம்மிடத்திலிருந்து இரத்தம் பிழிந்தது, என் பாவத்துக் காக மனஸ்தாபப்படுகிறேன். இந்த இரத்தத்தரையில் நான் படுத்துப் புரண்டு உருளும்படி உத்தரவு தாரும். நான் கறுத்த ஒரு பாவி. உம்முடைய இரத்தத்தால் வெண்மையாக ஆசைப்படுகிறேன். நான் இன்று பெற்றுக் கொள்ளுகிற பாவ மன்னிப்பும், பரிசுத்த இருதயமும், தேவரீருடைய ஆத்தும வருத்தத்தின் பலனாயிருப்ப தாக.

கெத்செமனேக் காவிலே
என்னை மீட்க வேண்டியே
இரத்த வேர்வை சிந்தினீர்
இரட்சகா தஞ்சம், தஞ்சம்.

ஜெபம்

என் ஆத்துமாவை மீட்கும் பலியாகக் கெத்செமனேயில் இரத்தவேர்வை வேர்த்த இயேசுவே, உம்மை வணங்கி உமது பரிசுத்த அன்புக்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். நானும் அடிக்கடி என்னுடைய பாவங்களை நினைத்து, பெருமூச்செறிந்து, பச்சாதாபப்படவும், உமது இரத்தவேர்வையால் பாவமன்னிப்பைப் பெறவும் தயவுசெய்யும். நான் உம்முடைய இரத்தச் சொட்டுகளை என் சரீரத்தில், வேஷத்துக்காகத் தரித்துக்கொள்ளாமல், அதினால் என் ஆத்துமாவைச் சுத்திகரித்துக்கொண்டு, உமக்கேற்ற பரிசுத்தமாய் ஜீவிக்கும்படி, உமது பரிசுத்த ஆவியைத் தந்து, என்னை நடத்தியருளவேண்டுமென்று தாழ்மையோடு வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

5. இயேசு தம்மை ஒப்புக்கொடுத்தது

வேதம்

“அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் வந்து: இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள்; இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிற வேளை வந்தது. என்னைக் காட்டிக்கொடுக்கிறவன், இதோ, வந்துவிட்டான், எழுந்திருங்கள், போவோம் என்றார். அவர் இப்படிப் பேசுகையில், பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் வந்தான்; அவனோடேகூடப் பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் அனுப்பின திரளான ஜனங்கள் பட்டயங்களையும் தடிகளையும் பிடித்துக்கொண்டு வந்தார்கள். இயேசு தமக்கு நேரிடப்போகிற எல்லாவற்றையும் அறிந்து, எதிர்கொண்டுபோய், அவர்களை நோக்கி: யாரைத் தேடுகிறீர்கள் என்றார். அவருக்கு அவர்கள் பிரதியுத்தரமாக: நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள். அதற்கு இயேசு: நான்தான் என்றார். அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசும் அவர்களுடனேகூட நின்றான். நான்தான் என்று அவர் அவர்களிடத்தில் சொன்னவுடனே, அவர்கள் பின்னிட்டுத்

தரையிலே விழுந்தார்கள். அவர் மறுபடியும் அவர்களை நோக்கி: யாரைத் தேடுகிறீர்கள் என்று கேட்டார். அவர்கள்: நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள். இயேசு பிரதியுத்தரமாக: நான்தானென்று உங்களுக்குச் சொன்னேனே; என்னைத் தேடுகிறதுண்டானால், இவர்களைப் போகவிடுங்கள் என்றார்" (மத். 26: 45–47; யோவா. 18: 4–8).

போதனை

இயேசு பாடுபடும்போது சீஷர் தூங்கினார்கள். அது தூங்குகிற இரவல்ல. பஸ்கா இரவு: பாட்டோடும், எகிப்திய விடுதலையைப்பற்றி பல கதைகளோடும், பெரும்பாலும் கழிக்கப்படும். சீஷருடைய துக்கத்துக்கு இரண்டு காரணங்களிருந்தன. முதலாவது இயேசு பண்ணும் ஜெபத்தை அவர்கள் கவனித்து, ஐயோ இவ்வளவு கலக்கத்தோடும், பெரும் சத்தத்தோடும் கண்ணீரோடும் இன்று இவர் ஜெபம்செய்கிற காரணம் என்ன என்று தியானித்துத் துக்கப்பட்டார்கள். அதோடு யூதாசின் சதியோசனையையும், பேதுருவின் மறுதலிப்பையும்பற்றி, இரட்சகர் சற்று முன்சொன்ன வார்த்தைகளும், அவர்களுக்குத் துக்கத்தையுண்டாக்கத் தக்கதுதானே (லூக். 22: 45). இந்தத் துக்கத்தில் சாத்தான் பிரவேசித்து, அவர்களைச் சோதனைக்குட் படுத்தும்படி பிரயாசப்பட்டான். ஏனெனில் இயேசு: நீங்கள் சோதனைக்குட்படாதபடி எழுந்திருந்து ஜெபம் பண்ணுங்கள் என்று எச்சரித்தார். இந்த எச்சரிப்பை முதல் மூன்று சுவிசேஷகரும் சொல்லியிருக்கிறார்கள். (மத். 26: 41; மாற். 14: 38; லூக். 22: 46).

இயேசு தாம் ஆவியில் பட்ட பாடுகளை முடித்த பின்பு, சீஷரிடம் போய் அவர்களை எழுப்பிக்கொண்டு, தம்மைப் பிடிக்க வந்தவர்களிடத்தில் தம்மைப் ஒப்புக் கொடுத்து விடும்படி போனார். இயேசு தமது பாடுகளைப் பற்றிச் சொன்னபோதெல்லாம் "ஒப்புக்கொடுக்கப்படு வார்" என்றே சொல்லுகிறார். இந்த வார்த்தை: ஒன்று இயேசு பிதாவானவரால் ஒப்புக்கொடுக்கப்படுவார்

என்பதை அல்லது இயேசு தாமே தம்மை ஒப்புக் கொடுப்பார் என்பதை உணர்த்திக் காட்டுகிறது. இந்த வாசகத்தால் இயேசு மனோற்சாகமாய் நமக்காகப் பட வேண்டிய பாடுகளைச் சகிக்க இணங்கினாரென்று வெளிப் படுகிறது.

இயேசு தம்மைத்தேடிவந்தவர்களுக்கு எதிர்கொண்டு போய், "யாரைத் தேடுகிறீர்கள்" என்று கேட்கிறார். இப்படி அவர் இரண்டுதடவை கேட்கிறார். இதினாலே கெத்செமனேயில் இயேசு பாடுபட்டு, இரத்தவேர்வை வேர்த்தபின்பு, அவருடைய சாயல் சற்று மாறி, இவர் தானோ வேறு ஆளோ என்று சமுசயப்படத்தக்கதாகத் தோன்றியிருக்கிறது. யூதாஸ் அப்போதுகூட விருந்தும் அவனுக்கும் மயக்கந்தான். "நான்தான்" என்று அவர் சொல்லவே, வந்தவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந் தார்கள். இதினால் அவருடைய தெய்வீக மகத்துவம் எப்படியோ விளங்கியிருக்கிறது. முதலாந்தரம் அப் படிச் சொல்லவே, இவர் அந்த ஆளல்லவென்று அவர்கள் தீர்மானித்துச் சீஷரில் சிலரை, இவர்தான், இவர்தா னென்று பலரும் பிடித்திருக்கிறார்கள். ஆகவே இயேசு இரண்டாந்தரமும் தம்மைக் காட்டும்படி, நான்தான் என்று உங்களுக்குச் சொன்னேனே. என்னை நீங்கள் பிடிக்கவந்தது மெய்யானால், நீங்கள் பிடித்திருக்கிற இவர்களை விட்டுவிடுங்கள் என்று சொல்லுகிறார்.

தியானம்

ஆத்துமாவே, அன்றையத்தினம் இயேசு இரத்த வேர்வை வேர்த்து வியாகுலத்தோடு பாடுபடும்போது, சீஷர் தூங்கினார்கள். இன்றையத்தினமும் இயேசுவின் பாடுகளைக் கவனிக்கிற இருதயங்கள் எத்தனை கொஞ்சம். அவர் பலத்த சத்தத்தோடு வழியில் கடந்துபோகிறவர் களே, என் நோவுக்குச் சரியான நோவுண்டோ என்று பாருங்கள் என்கிறார். அதைப் பார்ப்பார் ஒருவரு மில்லை. இதோ, அவர் கெத்செமனேயில் பலத்த சத்தத் தோடும் கண்ணீரோடும் பாடுபட்டு, மனத்தில் காயப் பட்டுக் கிடக்கிறார். அவரை உலகம் நோக்கிப்பாராமல்.

பக்கவழியாக விலகிப்போகிறது; அல்லது நிர்விசாரத்தால் தூங்குகிறது.

இயேசு தமது ஆத்துமப்பாடுகளின் வரலாறு அனைத்தையும் தூரத்தில் விழித்திருந்து பார்த்து, இவ்வுலகத்துக்கு அறிவிக்கும்படி கூட்டிப்போன சீஷர் விழித்திராமல் தூங்கிவிட்டதால், அந்த வரலாற்றில் கொஞ்சமாத்திரம் நமக்குத் தெரியவருகிறது; முழுவதையும் அவர்கள் விழித்திருந்து எழுதினது மெய்யானால், அதுவும் கொல்கதாவின் பாடு வரலாற்றைப்போல சற்று விஸ்தாரமாயிருக்கும். ஏனெனில் அவ்விரண்டு இடத்துப் பாடுகளுக்கும் முறையே மூன்றுமணிநேரம் பிடித்தது. பாவியே, நீ தூங்காமல் அந்தக் கொஞ்ச வரலாற்றையாவது கேட்டுத் தியானிப்பாயாக.

என் மீட்பரே, நீர் கெத்செமனேக்குள்ளிருந்து எருசலேமில் நடந்த யூதாசின் ஏற்பாடுகளையெல்லாம் கண்டீர். அவன் பயணப்பட்டு, அத்தோட்டத்தண்டை வருகிறதையும் கண்டீர். அதுமாத்திரமோ? உம்முடைய வேளைவந்ததையும் நீர் உமது தெய்வீகத்தில் அறிந்தீர். இந்த வேளைக்காக நீர் ஆவலோடு காத்திருந்தீர் அல்லவா? ஒரு இராஜகுமாரன் தன் கிரீடத்துக்காகக் காத்திருந்ததுபோலும், ஒரு சமுசாரி முன்மாரிக்கும் பின்மாரிக்கும் காத்திருக்கிறதுபோலவும் இந்த வேளைக்காகக் காத்திருந்தீர். நீர் விரும்பின வேளை வந்தது. கீழ்த்திசை சாஸ்திரிகள் பிலேயாம் சொன்ன நக்ஷத்திரத்துக்காகக் காத்திருந்தார்கள். தேவரீரோ உம்முடைய பாடுகளின் கிரகணம் எப்பொழுது வருமென்று காத்திருந்தீர். எருசலேமியரின் இருதய ஓட்டங்களை நீர் கணித்துக் கொண்டேயிருக்கையில் உம்முடைய வேளை வந்ததைக் கண்டு, இதோ வேளை வந்தது; என்னைக் காட்டிக்கொடுக்கிறவன் இதோ வந்துவிட்டான் என்று அறிவித்துப் பாடுபடப் புறப்பட்டுவருகிறீர். ஆ இயேசு நேசரே, உம்மை ஸ்துதிக்கிறேன்.

என் நேசரே, உம்மைப் பிடிக்க எத்தனை ஆள் வருகிறார்கள்! எத்தனை ஆயுதங்களோடு வருகிறார்கள்!!

பிரதான ஆசாரியரும் மூப்பரும் திரளான ஜனங்களை அனுப்பினார்கள். அவர்களை முறியடிக்கும்படி, பன்னிரண்டு லேகியோன் தூதரை வரவழைக்கக்கூடும் என்று நீர் சொன்னீர். ஆகவே ஒரு லேகியோன் ஆட்களாவது, அதாவது, ஆயிரம்பேராவது வந்திருக்கவேண்டும். ஏழாயிரம்பேருக்குப் போசனம் கொடுத்த நீர் இந்த ஆறாயிரம் பேரையும் போஷித்து, அவர்கள் கொண்டுவந்த ஆயுதங்களையும் தடிகளையும் உமது பாதத்தில் போட்டுவிட்டு ஓடச்செய்ய வல்லவராயிருக்கிறீர் அல்லவா? இந்தக் கூட்டத்தில் ரோமைப் போர்ச்சேவகரும், பிரதான ஆசாரியர் முதலியவர்களுடைய வேலைக்காரரும், வேலைக்காரிகளும் இருந்தார்கள். இந்தக் கூட்டத்தில் நானுமிருந்ததாக உணர்ந்துகொள்ளுகிறேன். அவர்களால் நடந்த அவமானங்கள் என்னவுண்டோ அவைகளை நானும் இப்போது உமக்குச் செய்துவருகிறேனே!

அந்தப் பெரிய கூட்டத்துக்கு முன்னாக யூதாஸ் வந்தான். ஐயோ, இயேசுவின் சீஷரிலொருவன் சாத்தானுடைய சேனைக்குத் தளகர்த்தனாகிறது எவ்வளவு துக்கமான காரியம். இப்படியும் சம்பவிக்கிறதுண்டு; இப்பொழுது இயேசுவுக்கு விரோதமான நடபடிக்கைகளுக்கு யூதாசல்ல, நான்தான் தலைவனைப்போல நடந்துகொள்ளுகிறேன்! என்று உணர்ந்துகொள்ளுகிறேன்.

என் நேசரே, ஜனக்கூட்டத்தையும் அவர்கள் வரும் நோக்கத்தையும் அறிந்து, எதிர்கொண்டுபோய் உம்மை நீரே ஒப்புக்கொடுக்கிறீர். மனுஷ இயல்பின்படி இவ்வளவும் அறிந்திருந்த நீர் ஒளித்துக்கொள்ளவேண்டியது. அதற்குப் பதிலாக அவர்களை நோக்கி:

“யாரைத் தேடுகிறீர்கள்?”

என்று கேட்கிறீர். அவர்கள் தேடின ஆளைக் குறிப்பிட்டபோது

“நான்தான்”

என்று உம்மை நீரே காட்டிக்கொடுக்கிறீர். அவர்கள் உம்முடைய வார்த்தையை நம்பவில்லை. உமது சாயலும், நீர் இரத்தவேர்வை வேர்த்தபின்பு எப்படியோ வேற்று

முகப்பட்டுப்போனதாக்கும். அவர்கள் உம்மை விட்டுப் போட்டு அவரவர் மனம்போல் உமது சீஷரில் சிலரைப் பிடித்தார்கள். எப்படியும் அப்படிப் பிடித்தவர்களில் வாலிபனுன பரி. யோவான் ஒருவராக இருக்கவேண்டும். சத்துருக்கள் உம்மை விட்டுவிட்டு சீஷரை இனம்தெரியாமல் பிடித்தபோது, தேவரீர் அவர்களை மீட்டுவிடவும் உம்மை நீரே ஒப்புக்கொடுக்கவும் கருதி, மறுபடியும்:

"யாரைத் தேடுகிறீர்கள்?"

என்று கேட்கிறீர். அவர்கள் உம்மைத் தேடுகிறதாகச் சொன்னபோது, என்னைத் தேடுகிறதுண்டானுல் இவர்களைப் போகவிடுங்கள் என்று வழக்குச்சொல்லி, உமது சீஷரை அந்தச் சங்கடத்திலிருந்து விலக்கிவிட்டீர். இரட்சகா, நீர் உம்மைத் தப்புவித்துக்கொள்ள நல்வழியிருந்தும் எனக்காக மரிக்கும்படி மனதாரச் சம்மதித்து, உம்மை நீரே ஒப்புக்கொடுத்தீர்; உலக இயல்பின்படி நீர் ஒளித்துக்கொண்டால் என் பிராயச்சித்தம் நிறைவேருதே! என் பாவம் நீங்கமாட்டாதே.

இந்த வரலாற்றை நான் தியானிக்கையில் யூதாசை அதிகமாகக் குற்றம்சொல்ல ஏவப்படுகிறேன். உம்மை உள்ளபடிக் காட்டிக்கொடுத்ததும், ஒப்புவித்ததும் யார்? யூதாசா? அல்ல—அல்ல. என் மீட்பரே, நீரே முதலாவது உம்மைக் காட்டிக்கொடுத்து, நீரே உம்மை ஒப்புக்கொடுத்தீர். இதினுல் என்மேலுள்ள உமது அன்பு நான் இம்மட்டும் அறிந்ததைவிட ஆழமானது என்று காண்கிறேன். இந்த யூதாஸ் தன்மட்டிலிருந்தாலும், நீர் உம்மை எனக்காக மனதார ஒப்புவித்து இந்தப் பஸ்கா காலத்தில் பலியாவீர் என்பது நிச்சயமாய் வெளியாகிறது. யூதாசின் சதியால் என் இரட்சிப்புக்குச் சற்று உதவியிருந்ததென்று பிசாசாவது வேறு யாராவது சொல்வதற்கு இடமிராதபடிக்கு, என் நேசரே, நீரே உம்மைக் காட்டிக்கொடுத்தீர்—நீரே உம்மை ஒப்புக்கொடுத்தீர்! "என்னில் அன்புகூர்ந்து, எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்" என்று பரி. பவுல் சொல்லும் வாசகம் நிஜமாகவேயிருக்கிறது.

ஜெபம்

இரக்கமுள்ள இயேசுவே, தேவரீர் எனக்காக அக்கிரமக்காரர் கைகளில் உம்மை ஒப்புக்கொடுத்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். முதலாம் ஆதாம் பாவம் செய்தவுடன் சோலைக்குள் ஒளித்த தோஷத்தை நீக்கும்படி நீர் உமது சத்துருக்களுக்கு எதிர்கொண்டுபோய் உம்மை இனங்காட்டி ஒப்புக்கொடுத்தீர். நானும் என்னை முழுவதுமாக உமக்கு ஒப்புக்கொடுத்து உம்முடைய நாமத்தினிமித்தமுண்டாகும் சகல நிந்தைகளையும், அவமானங்களையும் பொறுமையோடும் உற்சாகத்தோடும் சகித்து உமது நாமத்தை மகிமைப்படுத்தும்படி உம்மைத் தாழ்மையோடு வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

6. யூதாஸ் இயேசுவைக் காட்டிக்கொடுத்தது

வேதம்

"அவரைக் காட்டிக்கொடுக்கிறவன்: நான் எவனை முத்தஞ்செய்வேனோ அவன்தான், அவனைப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று அவர்களுக்கு அடையாளம் சொல்லியிருந்தான். உடனே, அவன் இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, வாழ்க என்று சொல்லி, அவரை முத்தஞ் செய்தான். இயேசு அவனை நோக்கி: சிநேகிதனே, என்னத்திற்காக வந்திருக்கிறாய் என்றார். அப்பொழுது, அவர்கள் கிட்டவந்து, இயேசுவின்மேல் கைபோட்டு, அவரைப் பிடித்தார்கள்" (மத். 26: 48–50; மாற். 14: 44–47; லூக். 22: 47, 48).

போதனை

இயேசுவைக் காட்டிக்கொடுக்கும்படி ஒப்பந்தம் பண்ணிக்கொண்ட யூதாஸ், அவர் பிடிபடுமட்டும் கலக்கத்தோடிருந்தான். அவர் அகப்படுவாரோ, தப்பிவிடுவாரோ என்ற கவலை அவனுக்குள்ளிருந்தது. இதற்கு முன் ஒரு கூடாரப்பண்டிகையில் யூதர் இயேசுவைப் பிடிக்க வகைதேடியும், அவரைப் பிடிக்கவில்லை (யோவா. 7: 30). அதேபண்டிகையில் அவரைப் பிடிக்கும்படி

சேவகர் போயும், அவர்கள் அவரைப் பிடிக்கவில்லை (யோவா. 7: 32–44). இப்படியாக இயேசுவைப் பிடிக்க இதற்குமுன் ஐந்தாறுதடவை முயன்றும் காரியம் அனுகூலப்படவில்லை. இந்தத்தடவையில் அது அனுகூலமாய் முடிவதால் தனக்கு யூதருடைய தயவு கிடைக்கவேண்டுமென்று யூதாஸ்கவலையாயிருந்தான். அவன் தன் விரலினாலாவது, சத்தத்தினாலாவது அவரைக் காட்டாமல் தன் முத்தத்தால் காட்டிக்கொடுக்கும்படி ஏற்பாடு செய்தான். "நான் எவனை முத்தம் செய்வேனோ அவன்தான், அவனைப் பிடித்துக்கொள்ளுங்கள்" என்று அடையாளம் சொல்லிவைத்தான். இந்தச் சாமர்த்தியத்தால் இயேசுவின் வார்த்தையை அழித்துவிடவும், தன்னைப்பற்றி சீஷருக்குள் சந்தேகமுண்டாகாமலும் பிரயாசப்பட்டானுக்கும். நரகத்தின் மகனுக்குத் தந்திரம் சொல்லிக்கொடுக்கவும் வேண்டுமோ? யூதாஸ் தான் சொல்லிவைத்திருந்த குறிப்பின்படி இயேசுவினிடத்தில் வந்து:

"ரபீ, ரபீ வாழ்க"

என்று சொல்லி அவரை முத்தஞ்செய்தான். அவன் அப்படி முத்தமிட்டது, சீஷருடைய சாதாரண வழக்கமாயிருந்தது. அந்த மரியாதையான வழக்கத்தைக்கொண்டு அவரை அவமரியாதை செய்யவேண்டுமென்று யூதாஸ் ஏற்பாடு செய்துகொண்டான்.

யூதாஸ் வந்தவுடனே இப்படி முத்தமிட்டுக் காட்டிக்கொடாமல், இயேசு, நான்தான் நீங்கள் தேடுகிற ஆள், என்னைத் தேடினீர்களானால் இவர்களை விட்டுவிடுங்கள் என்று தம்மைத்தாமே காட்டிக்கொடுத்தபின்பு யூதாஸ் அவரை முத்தமிட்டான். உடனே மற்றவர்கள் இயேசுவின்மேல் கைபோட்டு அவரைப் பிடித்தார்கள். இயேசு தம்மை இன்னாரென்று காட்டிக்கொடுக்காதபட்சத்தில் யூதாஸ் முதலாய் அன்றிரவு இனந்தெரியாமல், ஏமாந்து போயிருப்பான் என்று எண்ணவேண்டியதாயிருக்கிறது.

தியானம்

என் நேசமீட்பரே, நீர் எருசலேமின் மேல்மெத்தையில் யூதாசை உணர்த்தினதின் பின்பும், அவன் உணர்

வடையவில்லை. சாத்தான் அவனுக்குள் புகுந்தது முதல், மெய்யுணர்ச்சி என்னும் பாகத்தை அவன் மனதில் அழித்துவிட்டான். அந்த மெதுவான இருதய பாகத்தை அவன் தன் காலால் மிதித்து, கல்லைப்போல கடினமாக்கிவிட்டான். என் இருதயத்திலும் இப்படிப் பட்ட ஸ்திதி காணப்படுகிறதை நான் சிலதரம் அநுப வத்தால் அறிகிறேன். அவன் வரவாக் கடின இருதயமுள்ளவனாயிருந்தாலும், தேவரீர் மறுபடியும் அவனை உணர்த்திக் காட்டச் சித்தம்கொண்டீர். நீர், எருசலேமிலிருந்துவந்த கூட்டத்துக்குமுன் எதிர்கொண்டுபோனதும், யாரைத் தேடுகிறீர்கள் என்று கேட்டதும், நான் தான் என்று சொன்னதுமெல்லாம் கூடி, யூதாசுக்கு மறுபடியும் நீர் கொடுக்கும் உணர்த்துதலாயிருந்தது. யூதாசே, என் சீஷனே—இம்மட்டும் வந்தாய்—இதற்கப்பால் வராதே—நானே என்னைக் காட்டிக்கொடுக்கிறேன் நானே என்னை ஒப்புக்கொடுக்கிறேன்—நீ விலகிக்கொள் என்று சொல்லுகிறதுபோலிருந்தது. யூதாசோ அதைக் கவனிக்கவில்லை.

"யாரைத் தேடுகிறீர்கள்" என்ற கேள்வியின் சத்தம் கடலின் அலைபோல அவர்கள் மனதில் மோதி அவர்களைக் கீழே தள்ளினபோது, இந்த யூதாசும் கீழே விழுந்தான். ஆனால் மறுபடியும் எழுந்திருந்து தான் நினைத்த துரோகத்தைச் செய்தான். கெத்செமனேயின் வாசலில் தேவகுமாரனுக்கும் யூதாசின் பட்சத்துக்கும் கனத்த போர் நடந்தது. எதிரிகள் அபஜெயமாகி இனி என்னசெய்வோம், யாரைப் பிடிப்போம் என்று மயங்கி நின்றவேளையில் யூதாஸ் நடந்து இயேசுவண்டை சேர்ந்து அவரை முத்தஞ்செய்தான்.

ரபீ, ரபீ வாழ்க, அதாவது போதகரே, போதகரே நீர் வாழ்க என்கிறான். சீஷன் வேஷம்போட்டு சத்துரு துரோகம் செய்கிறான். "வாழ்க" என்று சொல்லி வாள் வீசுகிறான்; "போதகரே" என்று சொல்லிப் பாதகம் செய்கிறான். இப்படிப்பட்ட சுபாவமுள்ள இருதயங்களையும் கிறிஸ்துசபையில் காணலாம். வாசிக்கிறவனே,

உன் இருதய ஸ்திதியைச் சற்றே கவனித்துக்கொள். முத்தமிட்டுக் காட்டிக்கொடுத்த யூதாசை இயேசுநோக்கி,

"சிநேகிதனே, என்னத்துக்கு வந்திருக்கிறாய்?"

"யூதாசே முத்தத்தினாலேயா என்னைக் காட்டிக் கொடுக்கிறாய்?" என்று கேட்டார். இது உணர்த்துதலாகவே இருக்கிறது. துரோகசிந்தையுள்ள யூதாஸ் இயேசுவுக்குச் சிநேகிதனும், இதென்ன அதிசயம். இது தேவ அன்பும், இரட்சண்ய நேசமுமாயிருக்கிறது. இயேசு பாவிக்கு சிநேகிதன். நான் போகக்கூடாத இடத்திலும் செய்யக்கூடாத செய்கையிலு மிருக்கும் போது என் மீட்பர் என்னைப் பட்சத்தோடு பார்த்து, சிநேகிதனே, என்னத்துக்கு இங்கே வந்திருக்கிறாய் என்று எச்சரித்து உணர்த்துகிறார்.

"என்னத்துக்கு வந்திருக்கிறாய்"

என்ற கேள்விக்கு யூதாஸ் மறுமொழியாக, என் தேவனே, என் போதகரே, நான் என் துரோகத்துக்கு மன்னிப் படைய வந்திருக்கின்றேன் என்று சொன்னால் எவ்வளவு நன்மையாயிருக்கும். அப்படிச் சொல்ல அவனுக்கு வாய் வரவில்லை. அவன்:

"நீர் வாழ்க"

என்கிறான். இவன் என்ன வாழ்வை விரும்பி இப்படிச் சொன்னான்? இவன் விரும்பின வாழ்வுகளென்ன? கைதியாவதும்—கட்டப்படுவதும்—மரணுக்கினைத் தீர்ப்புப் பெறுவதும்—முள்முடியும் சிவப்பங்கியும் தரிப்பதும்—சிலுவையில் தொங்கிச் சாவதும்தான் யூதாஸ் விரும்பின வாழ்வாக இருந்தது. இவ்வளவு வாழ்வும் நமது இரட்சகருக்குச் சீக்கிரம் கிடைத்தது. அவன் தன் வாழ்வை விரும்பாமல் அவர் வாழ்வை விரும்புகிறவனைப்போலப் பேசினான். ஆகவே அவன் தன் வாழ்வனைத்தையும் இழந்துபோனான்.

"யூதாசே, மனுஷகுமாரனை முத்தத்தினாலேயா காட்டிக் கொடுக்கிறாய்" என்ற வாசகம், அவன் மனத்தைக் குத்தும் ஈட்டிபோலிருக்கிறதல்லவா? இந்த ஈட்டியாலும் அவன் குத்துப்படவில்லை. அவன் மனத்தின் தோல்,

காண்டாமிருகத்தின் தோலைப்போல் குத்துக்கும், குண்டுகளுக்கும் அசையாதிருந்தது. என் மனமும் இப்படிக் கடினப்பட்ட காலமுண்டு. தேவனுடைய நயமான வார்த்தையாவது, பயமான சொல்லாவது என்னில் பலன் செய்கிறதில்லை. ஐயோ, நான் பழைய யூதாசின் புத்திரன் என்று என்னைப்பற்றிச் சொல்லிக்கொள்ள வேண்டியது.

ஜெபம்

தயவுள்ள இயேசுவே, தேவரீர் என் அக்கிரமங்களினிமித்தம் பாடுபடும்படியாக யூதாசால் காட்டிக்கொடுக்கப்பட்டீர். இக்காலத்தில் நான் என் பாவங்களால் அடிக்கடி உம்மைக் காட்டிக்கொடுத்ததுண்டு. யூதாசின் துரோகம் இவ்வுலகத்திலிருந்து அழிந்துபோகாதபடி, நான் என் செய்கைகளால் காபந்து செய்துவருகிறேன். என் பாவங்களை இரக்கமாக மன்னியும். நான் இம்மட்டும் உமக்கு விரோதமாகச் செய்திருக்கிற துரோகங்கள் நன்றி கேடுகள் எல்லாவற்றையும் மன்னியும். இனி நான் உம்மைக் கனப்படுத்துகிறவனாக என் ஜீவகாலத்தைக் கழித்து, உம்மால் ஆசீர்வாதத்தையும் தயவையும் பெற்றுக்கொள்ளும்படி உமது பரிசுத்தஆவியால் என்னை நடத்தியருளும். ஆமென்.

7. காது அறுபட்டுக் குணமானது

வேதம்

"அப்பொழுது சீமோன் பேதுரு, தன்னிடத்திலிருந்த பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலது காதற வெட்டினான்; அந்த வேலைக்காரனுக்கு மல்குஸ் என்று பெயர். அப்பொழுது இயேசு பேதுருவை நோக்கி: உன் பட்டயத்தை உறையிலே போடு; பிதா எனக்குக்கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ? என்று சொல்லி, அவனுடைய காதைத் தொட்டு, அவனைச் சொஸ்தப்படுத்தினார்" .(மத். 26: 51–55; மாற். 14: 47; லூக். 22: 49–51; யோவா. 18: 10, 11).

போதனை

இயேசுவைச் சத்துருக்கள் பிடித்துக் கட்டின விசையையும் மும்முரத்தையும் இங்கே பார்க்கிறோம். இயேசு தம்மை "நான்தான்" என்று இரண்டுதடவை சொன்ன போதிலும் கூடிவந்த சத்துருக்களுக்கு அது சந்தேகமாகவே இருந்தது. யூதாஸ் அவரை நெருங்கிச் சேர்ந்து முத்தமிடவே, சத்துருக்கள் அவர்பேரில் பாய்ந்து அவரைப் பிடித்தார்கள். அவர்கள் "அவர்மேல் கை போட்டுப் பிடித்தார்கள்" என்று பரி. மத்தேயும், மாற்கும் சொல்லும் வாசகம், அவர்களுடைய செய்கையின் மும்முரத்தைக் காட்டுகிறது. அநேக நாய்கள் அல்லது ஓநாய்கள் கூடி ஒரு ஆட்டுக்குட்டியின்மேல் பாய்ந்து, அதைப் பீறிப்போடப் பிடிப்பதுபோல இந்தச் சத்துருகளின் அமளியுமிருந்தது. அவர்களெல்லாரும் வந்து சேர்ந்து இயேசுவைப் பிடிக்கும்வரையும், யூதாஸ் பிடித்த பிடி விடாமல் முத்தம் கொடுத்துக்கொண்டே இடுப்பை இறுகப் பிடித்திருந்தான் என்று சொல்லவேண்டியது.

இரட்சகர்பேரில் சத்துருக்கள் விழுந்த மும்முரத்தால் அவர் நசுங்குகிறதையும், நெருக்கப்படுகிறதையும் சீஷர் பார்க்க மனம் தாளாமல், ஆண்டவரே, இவர்களைப் பட்டயத்தால் வெட்டுவோமா என்று கேட்டார்கள். அவரிடத்திலிருந்து உத்தரவு பிறக்கிறதற்குள்ளாகவே, பேதுரு தன்னிடத்திலிருந்த கத்தியை உருவி பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலது காதற வெட்டினான். அவன் பேர் மல்குஸ். அப்பொழுது இயேசு பட்டயத்தை எடுக்கிறவர்கள் பட்டயத்தால் மடிவார்கள். அதாவது இப்படி நீ செய்தால் அநேகர் சாவார்கள். உன் பட்டயத்தை அதின் உறையிலே போடு என்று தடுத்து, அவன் காதைத் தொட்டு அவனைக் குணமாக்கினார்.

இவ்வளவு அமளியில் சீஷரிடத்தில் விளங்கிய வீரமும் பாசமும் வியந்துகொள்ளத்தக்கதா யிருந்தபோதிலும், அதை அவர்கள் பிரயோகித்த முறையானது பிசகாயிருந்தபடியால் இயேசுவால் கடிந்துகொள்ளப்பட்டார்

கள். இந்த அமளிநோத்திலும் இயேசு தமது சத்துருக் கள்பேரில் எப்போதும் பாராட்டி வந்த தயவையும் இரக்கத்தையும் நிறுத்திவிடவில்லை என்பது நமக்கு ஆறுதலைக் கொடுக்கிறது.

தியானம்

நம்முடைய இரட்சகர், கெத்செமனேக்குப் புறப்படு கிற சமயத்தில், பட்டயமில்லாதவன் தன் வஸ்திரத்தை விற்று ஒன்றைக் கொள்ளக்கடவன் என்று சொன்னார். அப்போது சீஷர் இங்கே இரண்டு பட்டயமிருக்கிறது என்று சொன்னார்கள். அது போதுமென்று சொன்னார். இந்த நோக்கம் இப்போது விளங்குகிறது. கெத்செமனே யில் தமது நேசத்தை விளக்கும் கடைசியான அற்புதம் நடக்கிறதற்கு இந்தப் பட்டயம் வேண்டியதிருந்ததாக் கும்.

அந்தத் துஷ்டர், என் இயேசுவின்மேல் ஒரே கூட்ட மாகப்போய் விழுந்தார்கள். ஐயோ, அநேகம் ஓநாய்கள் கையில் ஒரு ஆட்டுக்குட்டி அகப்பட்டது. அந்த ஆட்டுக் குட்டி தன் சுவாதீனத்திலிருந்தால் ஒரே கும்மாளத்தில் அக்கூட்டத்தைத் தாண்டிவிடும். அதுவோ தேவநீதி என்னும் நுகத்தடியைத் தன் கழுத்திலும், சர்வலோகத் தின் பாவம் என்னும் பாரத்தை தன் முதுகிலும் சுமந் திருந்ததோடு, அதின் கால்கள் என்னுடைய பாவம் என்னும் சங்கிலிகளால் பின்னப்பட்டிருந்தன. ஆகவே அந்த ஆடு கீழாகவும், அநேக ஓநாய்கள் அதின் மேலாகவு மிருந்து இம்சைப்படுத்தப்பட்டது.

இயேசு இப்படி இம்சைப்பட எந்த பக்தனுடைய மனம்தான் சகிக்கும்! சீஷர் மனம் சகிக்கவில்லை. அவர் கள் உடனே ஒரு போருக்கு ஆரம்பித்தார்கள். பரி. பேதுரு அவர்களுடைய தளகர்த்தன்போல நின்று முதலாவது தன்னிடத்திலிருந்த கத்தியை உருவி ஒரு வனை வெட்டினான். பரி. பேதுரு நல்ல வெட்டுக்காரன் தான்; ஆனால் குறிப்பாய் வெட்ட அவ்வளவு கெட்டிக் காரனல்ல. அவன் தலைக்கு நோக்கின கத்தி காதை மாத்திரம் அறுத்தது. இவன் பேர் மல்குஸ். நமது

இரட்சகரைப் பிடித்து இம்சைப்படுத்தினவர்களில் இவன் விசேஷமானவனுக்கும்—இவன் இயேசுவைக் கட்டவும் கண்டிப்பாய் நடத்தவும் மற்றவர்களைவிட அதிகமாய் ஏவினனுக்கும்—அல்லது இங்கேயே இவரைக் கொன்றுபோடுவோமென்று சொன்னனுக்கும்—எப்படியோ பரி. பேதுருவின் கத்திக்கு இவன் காது இரை கொடுத்தது. மல்குஸ் என்றால் "இராஜா" என்று அர்த்தம். அக்கூட்டத்தாருக்கு இவன் இராஜன்போல் நின்றான். அச்சத்துருக்கள் கெத்செமனே வரும்வரையும் யூதாஸ் அவர்களுக்கு இராஜன்போலிருந்தான். இயேசு பிடிபட்டதுமுதல் யூதாஸ் தன் மும்முரத்திலிருந்து ஓய்ந்தான்! இந்த மல்குஸ் அவனுக்குப் பதிலாக அத்துரோகிகளின் இராஜாவானன் என்று எண்ணவேண்டியதாயிருக்கிறது. துன்மார்க்கத்துக்குத் தலைவனாகிறவன் தன் காதை, அல்லது கண்ணை அல்லது காலை அல்லது தலையை இழந்துபோகிறது நியாயம்தான்.

இரட்சகா, உம்முடைய சீஷர் கொண்டுவந்த இரண்டு கத்திகளில், இன்னொன்று யார்வசத்திலிருந்ததோ? அது என்ன முகாந்தரத்தால் பிரயோகிக்கப்படவில்லையோ? என்று அறியும்படி என் மனம் வாஞ்சிக்கிறது. அடுத்த கத்தி இடிமுழக்கத்தின் மக்களிலொருவராகிய பரி. யோவானிடத்தி லிருந்ததாக்கும். இவர் உமக்கு அன்பானவராயிருந்தும் தன் கத்தியைப் பிரயோகியாத காரணம் உம்முடைய பாடுகளில் பங்கு பெறும்படியாக இருக்கலாம். ஏனெனில் நீர் குடிக்கும் பாத்திரத்தில் குடிக்கவும், நீர் பெற்றுக்கொள்ளும் ஸ்நானத்தில் பங்கு பெறவும் இவர் சம்மதித்திருந்தார். இவர் ஒருவேளை உம்முடைய கெத்செமனேயின் ஆத்துமப் போரையும், யூதாசின் சதியோசனைகளால் நடக்கும் பொல்லாப்புகளையும் தமது நேசமுள்ள நெஞ்சத்தில் சிந்தித்தது, துக்கத்தால் பிரமைபிடித்துப்போனாராக்கும். அல்லது சத்துருக்கள் இனந்தெரியாமல் இயேசுவென்று இவரைப் பிடித்து வைத்திருந்ததினிமித்தம் அவர் அடங்கியிருந்தாராக்கும்.

இயேசுவின் பட்சத்தில் ஒரு கத்தி வீசப்பட்டும், ஒரு காது விழுந்தும், சத்துருக்கள் பட்சத்துக் கத்தியும்,

ஈட்டியும் அமைதலாய் அடங்கியிருந்த காரணமென்ன? பரி. பேதுருவைப்போல எதிரிகளும் தங்கள் ஆயுதங்களை உபயோகித்திருந்தால் ரணகளமாகும். தேவன் ஏதோ ஒரு கலக்கத்தை அவர்கள் மனதிலுண்டாக்கி, அவர்களுடைய பட்டயப்பிரயோகங்களை அடக்கிவிட்டார் என்றே சொல்லவேண்டியது. மேலும் நம்முடைய மீட்பரின் இராஜ்யம் இவ்வுலகத்தின் தன்மையுள்ளதல்லவே.

என் இரட்சகா, எப்படியும் மல்குசின் காது வெட்டப்பட்ட விஷயத்தில், உம்முடைய பட்சம் ஜெயமடைந்தது; உம்முடைய பக்கத்து ஒரு வீரன் அத்தனை வீரனையும் அடக்கிவிட்டானல்லவா? இது ஒருவகையில் சந்தோஷந்தான்.

இனி ஏழை மல்குசைப் பார்ப்போம். அவன் உமக்கு விரோதமாகப் பேசின வீம்பான வார்த்தைகள் ஓய்ந்தன—அவன் படபடப்பும் ஆணவமும் ஒழிந்தன—அவன் வெட்டுண்ட தன் காதில் தன் வலதுகையை வைத்துக் கொண்டு, ஐயோ என் காது போயிற்றே என்று அலறுகிறான். ஒருவேளை இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும், என் காதைக் குணமாக்கும், என் வெட்டை ஒட்டுமையா என்று மன்றாடியிருக்கலாம். ஆ என் நேசரின் தயவைச் சற்றே பார். அவன் காதைத் தொட்டு, அவனை சொஸ்தப்படுத்தினார். இது எவ்வளவு தயவு!! ஆ எவ்வளவு கிருபை!! இப்படி என் இயேசு சில பாவிகளுக்குத் தயவுசெய்கிறதுண்டு. அவர் மனந்திரும்புதலுக்காக அவர்களைச் சிட்சித்து, மனந்திரும்பின பின்பு அவர்களுக்கு அந்தச் சிட்சையை மாற்றி அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

என் நேசரே, நான் ஒரு மல்குஸ்—நான் உமது துரோகிகளின் தலைவன்—நான் பாவிகளின் இராஜா—என் செவிகள் சத்தியத்துக்கும், இரட்சிப்பின் உபதேசங்களுக்கும், பரிசுத்த ஆவியின் போதனைகளுக்கும் இணங்காமல் திமிர் பிடித்திருக்கிறது. தேவரீர் யாரைக் கொண்டாவது அதை வெட்டி மறுபடியும் குணமாக்கியருளும். அது வெட்டப்படுமட்டும் அதில் சீருண்டாக

மாட்டாது. தேவரீர் என் இருதயத்தின் நுனித்தோலை வெட்டுமட்டும் நான் என் பாவத்தில் நிலைத்திருப்பேன். அதைத் தயவாக வெட்டியருளும். அப்பால் அதைக் குணமாக்கியருளும்.

ஆ என் மீட்பரே, மல்குஸ் இப்போது குணமானான். அவன் இதுமுதல் உமது பட்சத்தானாகி உம்மைக் கட்டாமலும், பிடியாமலுமிருக்கும்படி மற்றவர்களைக் கெஞ்சியிருக்கலாம். அவன் அமளி அத்தோடு அடங்கிவிட்டது. உலக இயல்பின்படிக் கவனித்தால் இந்த அற்புதத்தோடு, அமளிகள் அடங்கவேண்டும். ஜனக்கூட்டம் கலையவேண்டும். உம்மை விட்டுவிடவேண்டும், அல்லது உம்மைப் பிடிக்கவந்த இவ்வளவு கூட்டமும் உம்மைத் துதிக்கும் கூட்டமாக மாறிவிடவேண்டும். இந்த மல்குஸ் உம்மைச் சுமந்துபோகவேண்டும், மற்றவர்கள் எல்லாரும், ஒலிவக் கிளைகளை ஆட்டி, தாங்கள் கொண்டுவந்த பந்தங்கள், தடிகள், ஆயுதங்களை உயர்த்தி, மங்களங்கள் கூறி, ஓசன்னா பாடவேண்டும். நீர் முந்திய ஞாயிற்றுக்கிழமை பெத்தானியாவிலிருந்து பவனிபோனபோது நடந்த சிறப்பும் பிரஸ்தாபமுமெல்லாம் இங்கே நடக்கவேண்டும். அப்படி யொன்றையும் இங்கே காணோம்—நீர் என் மீட்பராக சாகவேண்டிய திருந்ததினாலே சத்துருக்கள் உம்மைக் கட்டி ஒரு கைதியைப்போல கொண்டுபோனார்கள்—வெட்டப்பட்ட காதைக் குணமாக்கின அற்புத மூர்த்திக்கு, கட்டுகளும், கைதி ஸ்திதியும் இனமாகக் கிடைத்தது. உம்மைப்பற்றிய வேதவாக்கியங்கள் நிறைவேறவும், என் மீட்பு கல்வாரிமலையில் முடிவடையவும் தேவரீர் உலகப் பிரஸ்தாபத்தை ஒழித்து இரட்சண்ய இராஜாவாக கெத்செமனேயிலிருந்து புறப்படுகிறீர்—நானுமது பிறகாலே நடந்துவர உத்தரவு தாருமையா!!

ஜெபம்

தயவுள்ள இயேசுவே, உம்முடைய மீட்பின் மகத்துவம் வரவர என் இருதயத்தில் பிரகாசிக்கிறது—அந்த மீட்பின் ஜோதிகளுக்கிடையில் நீர் என் தேவன் என்ற சத்தியமும் வெளியாகிறது. ஆ, நீர் என் நேசமுள்ள

இரட்சகர்—என்னை இரட்சிக்கத் தேவரீர் சித்தம்கொண்டது முதல், உமது வல்லமையை எங்கள் சரீர சுகத்தின் விஷயமாயும், உமது அன்பை எங்கள் ஆத்துமமீட்பின் விஷயமாகவும் விளங்கப்பண்ணினீர். உம்மைப் பிடிக்கும்படி வந்த சத்துருவின் வெட்டுண்ட காதையும் குணமாக்கினீரே. துரோகியாகிய என் பாவத்தையும் மன்னித்து என் ஆத்துமாவைக் குணமாக்கியருளும்.

தேவரீருடைய இராஜ்யம் பட்டயங்களால் அல்ல பட்சத்தால் பிரபலமாகும்படிச் சித்தம்கொண்டிருக்கிறீர். அடியேனை உமது பட்டயத்தால் வெட்டிப்போடாமல் உமது பாசத்தாலும் பட்சத்தாலும் இந்நாள்மட்டும் ஆதரித்துவருகிறீர். அதற்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். அந்த அன்பை முடிவுபரியந்தம் என்னில் வைத்து என்னை ஆதரித்தருளும். நான் தேவரீருடைய பாடுகளின் தியானத்தில் மூழ்கி என் பாவ அழுக்குகள் எல்லாவற்றினின்றும் சுத்திகரிக்கப்படும்படித் தயவு செய்தருளும். ஆமென்.

8. கட்டப்பட்ட இயேசுவின் பிரசங்கம்

வேதம்

"பின்பு இயேசு தமக்கு விரோதமாய் வந்த பிரதான ஆசாரியர்களையும் தேவாலயத்துச் சேனைத்தலைவர்களையும் மூப்பர்களையும் நோக்கி: ஒரு கள்ளனைப் பிடிக்கப் புறப்பட்டுவருகிறதுபோல, நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துப் புறப்பட்டு வந்தீர்களே. நான் தினந்தோறும் தேவாலயத்தில் உங்களுடனேகூட இருக்கையில் நீங்கள் என்னைப் பிடிக்கக் கைநீட்டவில்லை; ஆகிலும் தீர்க்கதரிசிகள் எழுதியிருக்கிற வசனங்கள் நிறைவேறும்படி இவைகளெல்லாம் சம்பவிக்கிறது. இதுவோ உங்களுடைய வேளையும் அந்தகாரத்தின் அதிகாரமுமாயிருக்கிறது என்றார். அப்பொழுது சீஷர்களெல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள்" (மத். 26: 55, 56; மாற். 14: 48–50; லூக். 22; 52, 53).

போதனை

இயேசுவைப் பிடிக்கும்படி யூதாசோடு வந்தவர்கள், ரோமருடைய போர்ச்சேவகரும், பிரதான ஆசாரியரால் அனுப்பப்பட்ட ஊழியக்காரருமாயிருந்தார்கள் என்று முன் அறிந்துகொண்டோம். இப்போது பரி. லூக்காவின் வரலாற்றால் பிரதான ஆசாரியரும், ஆலயத்து சேனைத்தலைவரும், மூப்பரும் வந்ததாக அறிகிறோம். முதலாவது சேவகரையும் ஊழியக்காரரையும் அனுப்பி, இவர்கள் பிற்பாடு வந்திருக்கிறார்கள். ஒருவேளை, இயேசுவைக் கண்டுபிடித்தோம், கலகம் நடக்கிறது, மல்குஸ் காது அறுபட்டான், இன்னும் என்னென்ன சாவு இதற்குள்ளாக நடந்திருக்கிறதோ என்று யாரோ ஒருவன் போய்ச் சொன்ன செய்தியை அவர்கள் கேள்விப்பட்டு வந்திருக்கலாம்; அல்லது: கலகத்தில் காது அறுப்பட்டது, உடனே அவன் காதைத் தொட்டுக் குணமாக்கினார். இப்படிப்பட்ட சகாயரை எப்படிப் பிடிக்கிறதென்று பலர் ஆலோசனையிலிருக்கிறார்கள் என்று யாரோ ஒருவன் போய்ச் சொல்ல, ஆகா மோசம் போனோமே, நாமனைவரும் உடனே போய் நமது ஆட்களைத் தைரியப்படுத்தாத பட்சத்தில், நாம் நினைத்த காரியம் தப்பிப் போம் என்று ஆத்திரப்பட்டு அப்பால் புறப்பட்டு வந்தார்களாக்கும்.

அவர்கள் என்னவிதமாக வந்தபோதிலும் இயேசு அவர்களுக்கு அன்போடு பிரசங்கம் செய்தார். நீங்கள் என்னைப் பிடிக்கவேண்டுமானால், இந்தக் கலகக்கோலத்தோடு வரவேண்டியதில்லையே. நான் தேவாலயத்திலும், உங்களுடைய தெருக்களிலும் தாராளமாகத் திரிந்த காலத்தில் நீங்கள் சாவதானமாகப் பிடிக்கலாமே. இந்தக் கலகக்கோலமெல்லாம் என்னைப்பற்றி எழுதின தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலுக்கேயன்றி வேறல்ல. அத்தீர்க்கதரிசனங்கள் நிறைவேறவேண்டிய இக்காலம், உங்களுக்கேற்ற வேளையும், பிசாசின் அதிகாரச் சமயமுமாயிருக்கிறது என்று சொன்னார். இப்படிச் சொல்லி அவர்களையும் அந்தகார அதிகாரியையும் ஒரேகூட்டத்தில்

சேர்த்தார். இப்படிச் சொல்லவே, அவர்கள் எரிச்சலடைந்து இயேசுவையும் அவருடைய சீஷரையும் பிடித்துக் கட்ட ஆரம்பித்தார்கள். அப்பொழுது சீஷர் ஓட்டம் பிடித்தார்கள்.

தியானம்

என் நேசரே, நீர் மல்குசின் அறுபட்ட காதைக் குணமாக்கினதற்காக உமக்கு இனும் கொடுக்கும்படி பிரதான ஆசாரியர், மூப்பர், சேனைத்தலைவர் எல்லாரும் வருகிறார்கள். எருசலேமிலுள்ள பெரிய மனுஷாள் எல்லாரும் இவர்கள்தான். இவர்கள் குணமளித்த உமது திருக்கரத்துக்கு இனமாக அதைக் கயிறுகளால் கட்டினார்கள். இந்தக் கட்டை நீர் ஒரு கடுதாசியைப்போல் அறுத்துவிடக்கூடும். ஆனால் இதை நீர் ஒரு தங்கக்காப்பைப்போல மதித்துக் காப்பாற்றிக்கொண்டீர்.

என் மீட்பரே, உமது கைகள் கட்டப்பட்டதால் யாருக்கு நஷ்டம், உமக்கு நஷ்டமில்லை. நஷ்டமெல்லாம் எனக்குத்தான்—நஷ்டமெல்லாம் எங்களுக்குத்தான். என் குஷ்டரோகத்தை நீர் தொட ஏதுவில்லாமலும், என் காய்ச்சலைக் குணமாக்க வழியில்லாமலும் என் பாடையைத் தொட்டு எனக்கு ஜீவனைத் தரவிடாமலும், என் பசியை ஆற்ற நீர் அப்பத்தை ஆசீர்வதிக்க இடமிராமலும் அவர்கள் உமது கைகளைக் கட்டிப் போட்டார்கள். உமது கை கட்டப்பட்டாலும் நீர் உமது வாயாலும், சிந்தையாலும் இதிலும் பலத்த வல்லமைகளைச் செய்யக் கூடியவர் என்பதை அந்தச் சத்துருக்கள் மறந்தே போனார்கள். நானோ உமது நினைவின் பலம், உமது கரத்தின் பலத்திலும் மேலானதென்பதை உணருகிறேன். இப்பொழுதும் என் நேசரே! உமது இருகரங்களும் கட்டப்பட்டிருக்கிறதில் எனக்கு வாழ்விருக்கிறது. இந்தக் கட்டால், விலகிப் பிரிந்திருந்த உமது இருகரங்களும் ஒன்றுகூடியிருக்கிறது. இந்நாள்வரையும் அடியேனுக்கு உம்முடைய ஒற்றைக்கை வாழ்வுகள் கிடைத்தன. இன்று கட்டுண்ட உமது இருகாத்து வாழ்வும் கிடைப்பதாக. கட்டுண்ட உமது காத்தை என் சிரசின்மேல்

தூக்கி வைக்கிறேன்; கட்டுண்ட உமது கரத்தால் வாரந் தாரும் இயேசுவே!!

நேசர்.—என் கட்டால் உன் கட்டை அவிழ்க்கிறேன் பாவியே.

உன் பாவக்கட்டால் என்னைக் கட்டப்பா!
உன் பாசத்தா லென்னைக் கட்டப்பா கட்டு.
என் கரத்து வாழ்வைத் தந்தேன், தந்தேன்.

ஆ, என் மீட்பர் தமது கரத்தின் வாழ்வுகளால் என்னை ஆசிர்வதிக்கிறார். இனி நான் அக்கட்டுகளை நோக்காமல், அக்கரத்துக்குள்ளடங்கியிருக்கும் வாழ்வுகளை நினைத்து மகிழ்வேனாக!

கட்டுண்ட இயேசு வாய்திறந்தார். அவர் வாயைக் கட்ட யாரால் கூடும்! இந்தக் கட்டுகளும், அவஸ்தைகளும் தம்மைப்பற்றிய தீர்க்கதரிசன நிறைவேறுதலாயிருக்கிறது என்கிறார். ஆம் என் நேசரே, உமது பாடுகள் நெருங்க நெருங்க, உமது கவனமும், உமது பிதாவின் கவனமும் தீர்க்கதரிசனத்தின் பேரிலிருந்தது.

என் இரட்சகா, நீர் இந்தக் கைதி நிலைமையிலும் பயப்படாமல் உமது சத்துருக்களை உணர்த்துகிறீர். நீர் அவர்களை அந்தகாரத்தின் பிள்ளைகள் வரிசையிலே சேர்த்துப்பேசி, அப்படியாவது அவர்கள் உணர்வடைவார்களோ என்று பார்க்கிறீர். அந்தகாரத்தின் மக்கள், அந்தகாரத்தின் மக்கள்தான். அவர்களுடைய புத்தியின்கண் குருடானபின்பு அவர்கள் எப்படிக் காண்பார்கள்? எப்படி உணர்வார்கள்? அவர்களுடைய இருதயத்தின் கார் இருள் உம்முடைய உயிர்த்தெழுதலின் ஜோதியால் மாறுமேயன்றி இப்போது மாறாது. இந்தக் கூட்டத்தோடு அடியேனைச் சேராமல் உமது இரட்சண்ய வெளிச்சத்தால் பிரகாசமாக்கும் ஐயனே!

சத்துருக்கள் உம்மைப் பிடித்துக் கட்டவே உமது சீஷரெல்லாரும் ஓடிப்போனார்கள்; எனக்கு ஓட மனமில்லை. ஏனெனில் நான் சீஷரில் ஒருவனாயிராமல் உமது பிள்ளையில் ஒருவன். நானுமது இரட்சிப்பின் புத்திரனல்லவா? என்னுடைய எல்லாப் பாவங்களோடுங்கூட

நீர் என்னை நேசித்தீர். நானும் உம்மை நேசிக்கிறேன். இந்தக் கட்டுகள் என்னிமித்தமே உமக்குண்டானது. இந்தக் கயிறுகள் சணல் நூலுமல்ல, திரித்த மெல்லிய பஞ்சு நூலுமல்ல. இது என் பாவ நூல்களின் கயிறு. என்னைக் கட்டின பாவக்கயிற்றால் நீர் உமது கைகளைக் கட்டிக்கொண்டு, உமது அன்பின் கயிற்றால் என் உள்ளத்தைக் கட்டி இழுக்கிறீர். நான் உமது அன்பால் இழுப்புண்டு, நீர் போகிற இடமெல்லாம் உம்மோடு வர விரும்புகிறேன்; வரும்படி உத்தரவு தருகிறதோடு, வரும்படி வரமும் தாரும். உம்முடைய சீஷர் ஓட்டம் பிடித்தது போல என் மனதும், அக்கம்பக்கம் ஓடிவிடாதபடி உம்மைப் பின்சென்று வர, வரந்தாரும் மீட்பரே, வரம் தாரும்.

ஜெபம்

கெத்செமனே தோட்டத்தின் ஓரமாக என்னிமித்தம் காட்டிக் கொடுக்கப்பட்டு, அக்கிரமக்காரர் கைகளில் அகப்பட்டுக் கட்டுண்ட இயேசுவே, உம்மை வணங்குகிறேன். தேவரீர் என்னிமித்தம் உமது கரங்களைக் கயிறுகளுக்கு ஒப்புக்கொடுத்து கள்ளன்போல நடத்தப்பட்டீர். நானே ஒரு கள்ளன். நான் உமது கிருபைகளையும் தயவுகளையும் திருடின கள்ளன். நான் பிள்ளை வேஷம் காட்டி பேதகம்பண்ணின கள்ளன். நீர் எனக்குத் தந்த ஜீவனை அலைக்கழித்து, உமது நாமத்தை அவமதித்த கள்ளனாயிருக்கிறேன். என்னை மீட்கும்படி வந்தபோது என் கள்ளம் எல்லாம் உமதுபேரில் சாட்டப்பட்டு நீர் கள்ளன்போல கட்டப்பட்டீர். உமது கட்டுகளினிமித்தம் என் பாவங்களை அகற்றி என்னை விடுதலையாக்கும் என் மீட்பரே! ஆ என் நேசரே. ஆமென்.

9. இயேசு அன்னாமுன் பாடுபட்டது

வேதம்

“போர்ச்சேவகரும், ஆயிரம் போர்ச்சேவகருக்குத் தலைவனும், யூதருடைய ஊழியக்காரரும் இயேசுவைப் பிடித்து, அவரைக் கட்டி, முதலாவது அவரை அன்னா

என்பவனிடத்திற்குக் கொண்டுபோனார்கள்; அவன் அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவுக்கு மாமனாயிருந்தான். பிரதான ஆசாரியன் இயேசுவினிடத்தில் அவருடைய சீஷரைக்குறித்தும், போதகத்தைக் குறித்தும் விசாரித்தான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் வெளியரங்கமாய் உலகத்துடனே பேசினேன்; ஜெப ஆலயங்களிலேயும் யூதர்களெல்லாரும் கூடிவருகிற தேவாலயத்திலேயும் எப்பொழுதும் உபதேசித்தேன்; அந்தரங்கத்திலே நான் ஒன்றும் பேசவில்லை. நீர் என்னிடத்தில் விசாரிக்கவேண்டியதென்ன? நான் சொன்னவைகளைக் கேட்டவர்களிடத்தில் விசாரியும்; நான் பேசினவைகளை அவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றார். இப்படி அவர் சொன்னபொழுது, சமீபத்தில் நின்ற சேவகரில் ஒருவன்: பிரதான ஆசாரியனுக்கு இப்படியா உத்தரவு சொல்லுகிறது என்று, இயேசுவை ஒரு அறை அறைந்தான். இயேசு அவனை நோக்கி: நான் தகாதவிதமாய்ப் பேசினதுண்டானால், தகாததை யொப்புவி; நான் தகுதியாய்ப் பேசினேனேயாகில், என்னை ஏன் அடிக்கிறாய் என்றார்" (பரி. யோவா. 18: 12, 13, 19–23).

போதனை

இயேசு முதலாவது அன்னா என்பவனிடத்தில் கொண்டுபோகப்பட்டார். இவன் நூறுவயதுடைய கிழவனாயும், பல தடவை பிரதான ஆசாரிய ஊழியம் பார்த்தவனாயுமிருந்தான்.* இந்தக்காலத்தில், ஒழுங்கின்படி இவன் மருமகனாகிய காய்பா சரியான பிரதான ஆசாரியனாயிருந்தாலும், மரியாதைக்காக இவனிடத்தில் முதலாவது கொண்டுபோயிருக்கலாம். அல்லது இவன் தன்னிடத்தில் முதலாவது கொண்டுவரக் கேட்டிருக்கலாம். சபையின் அதிகாரம் தன் மருமகனிடத்திலிருந்தாலும், இவன் அவனுக்கு மனதார உதவிசெய்து வந்தான்.

* இவன் 15 வருஷம் தெரிந்துகொள்ளப்பட்டு, கி.பி. 23-ல் வல்லேரியு என்னும் ரோமை அதிபதியால் தள்ளப்பட்டான்.

இயேசு பிடிபட்டுக் கொண்டுபோகப்பட்ட சமயம் இரவு ஒரு மணியிருக்கலாம். உடனே சனதிரீம் சங்கத்தார் கூடும்படி விளம்பரம் அனுப்பப்பட்டது. அவர்கள் கூடிவருமுன், இந்த அன்னா இயேசுவைக் குற்றம் பிடிக்கும்படி இரகசியமான ஆரம்ப விசாரணை செய்தான். இந்த விசாரணை அவருடைய சீஷரையும் போதகத்தையும் பற்றினதாகயிருந்தது. சீஷரைப்பற்றிய விஷயத்தில், அவர் பன்னிருவரை எப்பொழுதும் கூட்டிக்கொண்டு திரிவதின் நோக்கமும், அவர்களைத் தனித்த ஒரு கூட்டத்தாராக பிரித்து வைத்திருக்கிற காரணமுமென்னவென்று அறிய ஆசைப்பட்டான். போதகத்தைப் பற்றி, ஏதாவது இரகசியமுண்டோ, அந்தரங்க அடக்கங்களுண்டோ என்று கண்டுபிடிக்க நோக்கமாயிருந்தான். எப்படியும் இந்த இரண்டு விஷயங்களைப்பற்றி வினவுவதில் அவரை ஒரு கூட்டக் கலகத்துக்குத் தலைவரென்றாவது, விபரீத போதனைகளைப் போதிக்கும் பதிதனென்றாவது, குற்றம் பிடித்து, அதற்குத்தக்கதாக அவரைக் கொலைக்குட்படுத்துவதற்கேற்ற ஒழுங்கைக் கிரமப்படுத்தலாமென்று உத்தேசித்தான். இயேசுவோ, அவனுடைய தந்திரங்களை அறிந்து, நான் வெளியரங்கமாகவே எல்லாரோடும் போதித்தேன்; என்னிடத்தில் இரகசியமானதொன்றுமில்லை. என் சீஷரைப்பற்றியாவது, போதனையைப் பற்றியாவது நீர் அறிய விரும்பினால் என்னிடத்தில் கேட்பதைவிட இத்தேசமுழுவதும் கேட்டுப்பாரும் என்று நியாயமும் நேர்மையுமாக உத்தரவு கொடுத்தார். அவர் சொன்ன உத்தரவால் அடுத்த கேள்விகேட்க வழியில்லாமலிருக்கிறதை அன்னா கண்டு மலைவடைந்தான். ஆகா, இந்தப் பெரிய மனுஷன் வாயை, ஒரே மறுமொழியில் அடைத்துப்போட்டாரே என்ற எரிச்சலால், பக்கத்தில் நின்ற ஒரு சேவகன், பிரதான ஆசாரியனுக்கு இப்படியா மறுமொழி கொடுக்கிறது என்று சொல்லி,

இயேசுவை ஒரு அறை அறைந்தான்.

உடனே இயேசு தம்மை அடித்தவனைக் கண்டித்து, தமது சுத்தகுணத்தை ஸ்தாபித்தார்.

தியானம்

என் நேசரைப் பிடிக்க ரோமைப் போர்ச்சேவகரில் ஆயிரம்பேர் போயிருக்கிறார்கள். அவர்கள் தலைவனும் போனான். அவர்களோடு போன யூதருடைய ஊழியக்காரர் தொகை தெரியாது. இந்த ரோமை நாய்களும், யூத ஓநாய்களும், தேவாட்டுக்குட்டியைக் கெத்செமனே காவிலே பிடித்து, தங்கள் மிருக இராஜனாகிய அன்னாவின் வீட்டுக்கு நடத்தினார்கள். நூறு வயசுக்கு அதிகமான அந்தச் சதுசேயக் கிழச்சிங்கம், அவரைப் பீறிப்போடப் பதிவிருந்தான். அந்தப் பதிவில் அவர் அகப்படவில்லை. அந்தக் கிழச்சிங்கம், தன் ஆளுகையை இழந்து, பல் பிடுங்கப்பட்டு இருந்தது. அது தன் நீண்ட தாடியையும், நரைத்த தலையையும் ஆட்டி, இந்த ஆட்டுக்குட்டியைப் பயப்படுத்தி விழுங்கிவிடலாமென்று நினைத்தும் கடைசியில் ஏமாந்துபோனது.

என் இரட்சகா, இந்த அன்னா உம்முடைய சீஷரையும்போதகத்தையும்பற்றி வினவுகிறானே. இது அக்கிரமமல்லவா? தேவனை மனுஷன் கேட்பதும், அவரைத் தன் முன் கைதிபோல நிற்கவைத்து, அவன் சிம்மாசனத்திலிருப்பதும் என்ன அதிசயம்! ஆ, உமது தெய்வீகத்தை அவன் அறியான்! நானும் உமது மகத்துவத்தையும் மேன்மையையும் அறியாமல், அடிக்கடி இப்படி அவமதித்ததுண்டு. இந்த அன்னா உமது உபதேசங்களையும், ஜீவியத்தையும் அவ்வளவு அற்பமாய் எண்ணினதால், விளையாட்டுப்போல அதைப்பற்றிக் கேள்வி கேட்கிறான். தேவ விஷயங்களை அற்பமாக எண்ணின இவனை நீர் அற்பமாக எண்ணிப் பேசினது சரிதான். இந்த அன்னா பட்டமிழந்த ஆசாரியன். என் மீட்பரே, நீர் என்றென்றைக்குமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கிறீர். உம்முடைய ஆசாரியத்துவம் மாறிப்போகிறதில்லை. இப்போதும் நீர் தெய்வீக ஆசாரியனாகவே, உமது திருச்சரீரத்தைப் பாடுகளால், உமது பிதாவின் சமுகத்தில் படைக்கிறீர்.

இந்த அன்னு தன் காலமெல்லாம், நியாயப்பிரமாணங்களைக் கெடுத்து, மாற்றிப் போதித்ததுபோக, உம்முடைய பரிசுத்த உபதேசங்களைக் குறித்து வினவத் துணிந்தானே. இவன் என்ன உபதேசத்தை அறிந்தவன்? ஓய் கிழ அன்னுவே! ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால், தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்ற உபதேசம் உனக்குத் தெரியுமா?[1]—ஆவியில் எளிமையுள்ளவர்களும், இருதயத்தில் சுத்தமுள்ளவர்களும், நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்களும் பாக்கியவான்கள் என்ற உபதேசம் உனக்குத் தெரியுமா?[2]—குமாரனை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவனுண்டு,—குமாரனை விசுவாசியாதவன் ஜீவனைக் காண்பதில்லை என்ற உபதேசம் உனக்குத் தெரியுமா?[3]—சர்ப்பமானது மோசேயினால் உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும் தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனையடையும்படி உயர்த்தப்படவேண்டும் என்ற உபதேசம் உனக்குத் தெரியுமா?[4]—அன்னுவே உனக்குச் சத்திய உபதேசம் ஒன்றும் தெரியாது, நீ படித்த மூடன். சகல ஞானங்களுக்கும் தேவனனவரிடத்தில், உபதேசங்களைப்பற்றி பரீட்சித்தது எவ்வளவு துணிகரம்!

ஆனால் இது இவ்வுலகத்தின் இயல்பாயிருக்கிறது. சத்தியத்தை அநியாயத்தால் புரட்டுகிறது, சத்திய போதனையைப்பற்றி சந்தேகத்தோடு வினவுவதும், ஆதாமின் மக்களுக்குச் சொந்தச் சுபாவமாயிருக்கிறது. நாதனே உமது உபதேசம் சுத்த உபதேசமாயும், திறந்த உபதேசமாயும், இரட்சண்ய ஞானமாயுமிருக்கிறதென்பதை உணர்ந்துகொள்ளுகிறேன்.

என் மீட்பரே, இந்தச் சின்ன விசாரணையிலும் இவ்வளவு கொஞ்சப் பேச்சிலும் உமக்குப் பாடு சம்பவித்தது. ஒரு சேவகன் உம்மை அறைந்தான்! நீர் அடிபடாமல் வளர்ந்த பரிசுத்த பிள்ளையாயிருந்தீர் என்று

---

[1] யோவா. 3: 3. [2] மத். 5: 3, 8, 10. [3] யோவா. 3: 36.
[4] யோவா. 3: 1.

நான் நம்புகிறேன். பிரதான ஆசாரியனுக்கு இப்படியா மறுமொழி சொல்லுகிறதென்று அந்தச் சேவகன் உமது முகத்தில் அறைந்தான். பின்னை எப்படித்தான் மறுமொழி சொல்லுகிறதப்பா? அவர் சரியானபடிதான் மறுமொழி சொன்னார். நீ அடித்தது மறுமொழியினிமித்தமல்ல, வேண்டுமென்று என் இரட்சகரை அவமானப்படுத்தவே. இதின் மூலமாக அன்னாவின் தயவைப் பெற்றுக்கொள்ளப் பார்த்தாய். நீ விரும்பின அன்னாவின் தய்வு உன் மீட்பரின் தயவை இழந்துபோகப் பண்ணிற்று என்பதை நீ உணரவில்லை. இதினால் நீ உன் குணத்தைமாத்திரமல்ல என் குணத்தையும், மனுஷஜாதியின் சுபாவத்தையும் வெளிப்படுத்தினாய். ஆ, நீ கோராகையும், அவன் கூட்டத்தையும்போல் பாதாளத்தில் விழுங்கப்படுவது நியாயம்—அல்லது வானத்து இடி உன் தலைமேல் விழுந்து நீ சாவது நியாயம்-அல்லவென்றால் யெரொபெயாமின் கையைப்போல திமிராவது நியாயம்—அப்படி யொன்றும் உன்னைச் சந்திக்கவில்லை. பாவிகளின் சாவை விரும்பாமல் அவன் மனந்திரும்புதலை விரும்புகிற இரட்சகன் உன்மேல் தயவு காண்பித்தார். அதே தயவை அவர் எனக்கும் காண்பித்தார். ஆ சேவகனே! நீ அன்னாவீட்டில் இயேசுவை அடித்தது அச்சாரஅடியாயிருந்தது. அதுமுதல் அடிமேல் அடிகள் அவருக்கு நேரிட்டன. அவரை அடித்தவர்களில் நானும் ஒருவன்தான். ஆ, நான் என் பாவங்களால் ஒரு தரமல்ல பல தடவைகளிலும், ஒரு அறையல்ல பல அறைகள் அறைந்த பாவியாவுமிருக்கிறேன் என்று உணருகிறேன்.

ஜெபம்

என் அன்புள்ள இயேசுவே, தேவரீர் அன்னாவினிடத்தில் கொண்டுபோகப்பட்டு, சுமார் அர்த்த இராத்திரியில் அடிபட்டீர். இரவின் அந்தகாரங்களை நான் என் பாவங்களுக்கேற்ற சமயமாக வைத்துக்கொள்ளுகிறதினிமித்தம் தேவரீர் இரவில் பிடிபட்டு, கட்டப்பட்டு அடிபட்டீர். இவையனைத்தும் என்னுடைய பாவத்தினால் வந்ததென்று உணருகிறேன். தேவரீர் என் பாவத்தின்

தோஷத்தை உமது கன்னத்து அறைகளினிமித்தம் மன்னித்து, என் முகத்தைப் பாவமன்னிப்பின் தைலத்தால் கழுவவேண்டுமென்று தாழ்மையோடு வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

10. இயேசு காய்பாவால் விசாரிக்கப்பட்டது

வேதம்

"இயேசுவைப் பிடித்தவர்கள் அவரைப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்குக் கொண்டுபோனார்கள்; அங்கே வேதபாரகரும் மூப்பரும் கூடிவந்திருந்தார்கள். பிரதான ஆசாரியரும் மூப்பரும் சங்கத்தார் யாவரும் இயேசுவைக் கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி தேடினார்கள், ஒருவரும் அகப்படவில்லை; அநேகர் வந்து பொய்ச்சாட்சி சொல்லியும் அவர்கள் சாட்சி ஒவ்வவில்லை; கடைசியிலே இரண்டு பொய்ச்சாட்சிகள் வந்து: தேவனுடைய ஆலயத்தை இடித்துப்போடவும், மூன்று நாளைக்குள்ளே அதைக் கட்டவும் என்னாலே ஆகுமென்று இவன் சொன்னான் என்றார்கள். அப்பொழுது, பிரதான ஆசாரியன் எழுந்திருந்து, அவரை நோக்கி: இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சாட்சி சொல்லுகிறதைக் குறித்து நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா என்றான். இயேசுவோ பேசாமலிருந்தார்" (மத். 26: 57, 59–61; மற். 14: 53, 55–61).

போதனை

இந்தக் காய்பா முந்தின அன்னாவின் மருமகனாயிருந்தான்.* இவன் இயேசுவின்மேல் காய்மகாரம் கொண்டிருந்தான். இயேசு லாசருவை உயிரோடெழுப்பினதினால்

---

* யூதரின் வழக்கப்படியே ஒவ்வொரு வருஷத்துக்கு ஒவ்வொரு பிரதான ஆசாரியன் ஏற்படுத்தப்பட்டான். ரோமர் அத்தேசத்தை ஆளத்துவக்கின காலமுதல் அதுவரையும் சென்ற 28 வருஷங்களுக்கும் 27 பிரதான ஆசாரியர் ஏற்படுத்தப்பட்டார்கள். இதில் 15 வருஷம் அன்னா பிரதான ஆசாரியனாயிருக்கும்படி வகைப்பண்ணிக் கொண்டான். யோசேப்பு காய்பாவாகிய இவன் கி.பி. 28-ல் பிரதான ஆசாரியனாகி 9 வருஷம் யூதச்சபையை ஆண்டு, அலுவலிலிருந்து நீக்கப்பட்டான். இவனுடைய பின் சரித்திரம் தெரியாது.

யூதரில் அநேகர் அவர்பேரில் விசுவாசமுள்ளவர்களானார்கள். இந்த வரலாற்றைக் கேட்டவுடனே சங்கத்தார் கூடி, நாம் என்ன செய்கிறது? இந்த இயேசு அநேக அற்புதங்களைச் செய்கிறானே. இப்படி இவனை நாம் விட்டுவிட்டால், எல்லாரும் இவனோடு கூடிக்கொள்ளுவார்களே; இதினால் சங்கடங்கள் வந்தாலும் வருமே. இதற்கென்ன செய்யலாமென்று ஆலோசித்தபோது, சீரான ஆலோசனை ஒன்றும் அவர்கள் மனதுக்குத் தோன்றவில்லை. அப்போது இந்தக் காய்பா சொல்வான்: உங்களுக்கு ஒன்றும் தெரியாது. ஜனங்களெல்லாருக்கும் க்ஷேமமுண்டாக ஓரே மனுஷன் மரிப்பது நமக்கு நலமென்று உங்கள் சிந்தையில் தோன்றவில்லை என்று சொன்னான். கலக்கத்திலிருந்த சங்கத்தாருடைய மனதுக்கு இது கோள் கொடுத்ததுபோலிருந்தது. இதே யோசனையைப் பிடித்துக்கொண்டே அவர்கள் அதுமுதல் இயேசுவைக் கொலைசெய்யும்படி பிரயத்தனப்பட்டார்கள்.

இந்தக் காய்பா முன்புக்கே இயேசு கைதியாக நின்றார். சத்துருக்கள், ரோமை அதிகாரத்தைக்கொண்டு இயேசுவை மரணாக்கினைக்குட்படுத்த மனங்கொண்டிருந்ததால், அதற்கிசைவாக, சகல நடபடிக்கையும், ஒழுங்கின்படியுள்ள பிரதான ஆசாரியன் வழியாக நடத்தப்பட்டன. இப்படி இரவில் சங்கம்கூடி விசாரணை செய்கிற வழக்கம் இதற்குமுன் நடந்ததாக யாதொரு குறிப்புமில்லை.

இயேசுவைக் குற்றப்படுத்தும்படி ஒழுங்கின்படி சாட்சிகள் வேண்டியதிருந்தது. அவர்பேரில் சுமத்துகிற குற்றம், மரணத்துக்கேதுவான குற்றமாயிருக்கவேண்டுமென்று சத்துருக்கள் விரும்பினார்கள். அதற்குச் சாட்சிகள் அகப்படவில்லை. சிலரைக் கள்ளச்சாட்சி சொல்லும்படி ஏவியும் அந்தச் சாட்சிகள் ஒவ்வவில்லை. இப்படிக் கள்ளச்சாட்சிகளாலும் நாம் இவரை மடக்க வகையில்லையே என்றிருக்கும்போது இரண்டுபேர், இயேசு, தேவாலய சம்பந்தமாக சுமார் ஒரு வருஷத்துக்குமுன் சொன்ன ஒரு வாசகத்தைக்கொண்டு அவரைத் தேவ

தூஷண குற்றவாளியாக்கும்படிக் கருதினார்கள். அவர்களிலொருவன், "தேவனுடைய ஆலயத்தை இடித்துப் போடவும், மூன்றுநாளைக்குள்ளே கட்டவும் என்னாலே ஆகும் என்று இவன் சொன்னான்" என்று குற்றம் சாட்டினான். வேறொருவன் வந்து, "கைவேலையாகிய இந்த தேவாலயத்தை நான் இடித்துப்போட்டு, கைவேலையல்லாத வேறொன்றை மூன்றுநாளைக்குள்ளே கட்டுவேன் என்று இவன் சொன்னதைக் கேட்டோம்" என்று சொன்னான். இந்த இரண்டு சாட்சிகளிலும் பொய் கலந்திருந்தது. இயேசுவோ "இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள்; மூன்றுநாளைக்குள்ளே எழுப்புவேன்" என்று மாத்திரம் சொல்லியிருந்தார் (யோவா. 2: 19). இடித்துப் போடுங்கள் என்ற வாசகத்தை "இடித்துப்போட என்னாலாகும்" என்றும், "நான் இடித்துப்போட்டு" என்றும் மாற்றினார்கள். அத்தோடு எழுப்புவேன் என்ற பதத்தை மாற்றி "கட்டுவேன்" என்ற வார்த்தையைப் பிரயோகித்தார்கள். இந்த இரண்டு வாசகப் புரட்டுகளால், இவர் தேவாலயத்தைத் தகர்க்கிறவர் என்றும், அது கட்டப்படாமல் மண்மேடாய்க் கிடப்பதைவிரும்புகிற மார்க்கத் துரோகி என்றும் காட்டினார்கள். இந்த வாசகம் முதலாவது சொல்லப்பட்டபோது, இந்த ஆலயம் என்று அவர் தமது உடலைச் சுட்டிக்காட்டி, "எழுப்புவேன்" என்ற பதத்தால் தமது உயிர்த்தெழுதலை உணர்த்தினபடியால் அந்த வாசகத்தைப்பற்றி இதுவரையும் விபரீதமான கருத்தை ஒருவரும் கொள்ளவில்லை. அது அவருடைய வழக்கமான வைதீக வாசகமாகமாத்திரம் எண்ணப்பட்டது. உள்ளபடி வைதீகமாயிருந்த அந்த வாசகத்தை சத்துருக்கள் இந்த சமயத்துக்கேற்றாற்போல மாற்றி, சாட்சிகளுக்குப் போதித்து இயேசுவைக் குற்றப்படுத்தினார்கள். கட்டுச்சாட்சி கச்சேரிக்கு உதவவில்லை. ஏனெனில் அவ்விருவர் சாட்சியும் ஒவ்வவில்லை. கடைசியாக இனிமேல் இயேசுவின் வாக்குமூலத்தைக் கொண்டே அவரைக் குற்றவாளியாக்கவேண்டுமென்று காய்பா கருதி, இவர்கள் உனக்கு விரோதமாகச் சொல்

லும் காரியங்களுக்கு நீ என்ன சொல்லுகிறாய் என்று கேட்டான். அவரோ பேசாமலிருந்தார்.

தியானம்

இந்தக் காய்பா தன் மாமனுக்கேற்ற மருமகன்தான். இருவர் இருதயமும் இயேசுவின்பேரில் ஒன்றுபோல காய்மகாரம் கொண்டிருந்தன. அந்தக் கிழச்சிங்கமும், இந்த வாலசிங்கமும் கூடி, இயேசு என்னும் செம்மறிப் புருவையின்மேல் பாயும்படி ஒன்றுபோல பதிவிருந்தன. அது மாத்திரமோ? பிரதான ஆசாரியராகிய புலிகளும், ஜனத்தின் மூப்பரான ஓநாய்களும், துஷ்டரான நரிகளும், கூடி அவருடைய இரத்தத்தைக் குடிக்கவும், மாம்சத்தைப் பட்சிக்கவும் அர்த்தராத்திரியிலே கூடியிருக்கிறதையும், இத்துஷ்டமிருகங்களின் மத்தியில் என் மீட்பர் சாவதானமாக நிற்பதையும், ஆத்துமாவே ஏறிட்டுப் பார்! இவர்கள் இருளின் பிள்ளைகளானதால் ஒளியின் புத்திரனைத் தங்கள் அந்தகாரவேளையில் விழுங்கிவிடப் பார்க்கிறார்கள். இந்தத் துஷ்ட மிருகங்கள் இராவில் இரை தேடி, கெத்செமனேக் காவில் ஒரு ஆட்டுக்குட்டியைப் பிடித்து, அதை எருசலேமின் தெருக்களின் வழியாக இழுத்துக்கொண்டு வந்து, சற்றுநேரம் விளையாட்டுப் பார்த்துஅப்பால் அதைப் பட்சிக்கக் கூடியிருக்கிறார்கள். இந்தத் துஷ்ட மிருகங்களின் மத்தியில், தேவாட்டுக் குட்டியாகிய என் இயேசு: சாவதானமாக நிற்கிறது எனக்கே அதிசயத்தைக் கொடுக்கிறது.

இது ஒரு பெரிய நியாயசங்கமாம்—இதில் கைதிகளுக்கு நீதி கிடைக்குமாம்—அப்படியா? இவர்கள் விசாரணையையும் தீர்ப்பையும் சற்றே கவனிப்போம்.—நியாயாதிபதிகள் கூடி சாட்சி தேடுகிறார்கள். இது எந்த இராஜ்யத்திலுண்டு? அதிலும் பொய்ச்சாட்சிகள் வேண்டுமாம்—இதென்ன அநியாயம்?—பொய்ச்சாட்சிகள் வேண்டுமானால் பணம் கொடுக்கவேண்டுமே. அப்படிக் கொடுத்ததுதான் பொய்ச்சாட்சிகளைச் சம்பாதிக்கப் பிரயாசப்பட்டிருக்கவேண்டியது. எவ்வளவு பணம் கூலி பேசினார்களோ தெரியவில்லை. அப்படிப்

பொய்ச்சாட்சி சொல்லவும் "ஒருவரும் அகப்படவில்லை" யாம். பொய்ச்சாட்சி சொல்லமாட்டோமென்று சொல்லிவிட்ட உத்தம புருஷரே, நீங்கள் வாழ்க! பொய்யுதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானது. சிலர் லஞ்சம் வாங்கியோ, ஆசாரியருக்குப் பயந்தோ, பொய்ச்சாட்சி சொல்லுகிறார்கள். அவர்கள் சாட்சி ஒவ்வவில்லை. இம் மட்டும் பார்ப்போம். வாதியில்லை—நியாயாதிபதிகள் கூடி சாட்சி தேடுகிறார்கள்—அதிலும் பொய்ச்சாட்சி வேண்டுமோம்—கிடைத்த பொய்ச்சாட்சிகளும் ஒவ்வவில்லையாம்—இப்படியானால் கைதியை விட்டுவிடவேண்டுமே. இன்னும் சற்றுப் பொறுத்துப் பார்ப்போம்.

இரண்டு பொய்ச்சாட்சிகள் வந்து, இயேசு சுமார் ஒரு வருஷத்துக்குமுன் தமது உயிர்த்தெழுதலை உவமானித்துச் சொன்ன வாசகத்தைக்கொண்டு அவரைக் குற்றம் சாட்டுகிறார்கள். இதுவும் ஒன்றுக்கொன்று ஒவ்வாத சாட்சியாயிருந்தது. என்றாலும் இதில் "ஆலயம்" என்ற வார்த்தை வந்தது. இந்த வார்த்தை ஒன்றை வைத்து, அவரை: தேவாலய விரோதி, ஆகவே யூதமார்க்க விரோதி, ஆகவே தேவ விரோதி என்று தீர்மானிக்கும்படி அவருடைய வாசகத்தைப் புரட்டினார்கள்—அவரைக் குற்றவாளியாக்கினார்கள். இந்தக் கடைசிச் சாட்சியங்களை அதிகமாய் உறுதிப்படுத்தும்படி வேறு சாட்சிகள் கேட்டால் உள்ளதுக்கும் மோசமாகுமென்று அவர்கள் அஞ்சி, வியாச்சியத்தை முடிக்கும்படி இயேசுவின் மறுமொழியைக் கேட்கிறார்கள். அவருடைய மவுனம், முன் சொன்ன மாறுபாடான சாட்சிகளை உண்மையுள்ளதாக்கிவிட்டதென்று அவர்கள் நினைத்து விசாரணையை முடிக்கிறார்கள்.

ஆத்துமாவே, இவ்வளவு நடபடிக்கையும் மாய்மாலம் தான். அக்காலத்தில் ரோமை ஆளுகையிருந்தபடியால் இவ்வளவாவது செய்தார்களேயன்றி வேறல்ல. ரோமை அரசாட்சி இல்லையானால் கெத்செமனேயில் பிடித்தவுடனே கொலை செய்திருப்பார்கள்.

ஓய் பிரதான ஆசாரியரே! நீங்கள் பொய்சாட்சிகளைத் தேடுவானேன்? இயேசு: சடங்குகளைத் தள்ளினார், பாரம் பரைகளைக் குறைகூறினார், உங்கள் கருத்துப்படி ஓய்வு நாளை மீறினார் என்பதற்கு நிசமான சாட்சிகள் அகப் படுமே. இயேசுவும் அதை ஒத்துக்கொள்வாரே—இல்லை. நீங்கள் இயேசுவைக் கொலைக்குட்படுத்த இப்படிப்பட்ட பிரியாதுகள் உதவாது என்று தள்ளிவிட்டீர்கள். பரிசுத் தரும், பிழையில்லாதவருமான என் இயேசுவைப் பொய் யினாலன்றி உத்தமத்தால் கவிழ்த்த உங்களாலும், உங்கள் பிதாவாகிய சாத்தானாலும் கூடாது.

ஆ என் நேசரே, வானத்துத் தூதர் அனைவரும், முகம் மூடி உம்மைப் பணிந்தகாலம் போக, தேவரீர் இந்தக் காய்பா முன்னும் சங்கத்தார் முன்னும் கைதி போல் கட்டப்பட்டு நிற்கிறதை என் கண் கண்டு அதிசயப்படுகிறது. நீர் யூத சங்கத்தின் முன் அல்ல, தேவ சங்கத்தின்முன் நிற்கிறீர். உமது பிதாவாகிய தேவன் உமக்கு வாதியாக ஏற்பட்டு: நீர் எனக்காகவும், சர்வலோகத்துக்காகவும் பிணைப்பட்டதினிமித்தம், உம் மைக் குற்றவாளியாக நிறுத்தியிருக்கிறாரேயன்றி, வேறல்ல. நீர் என் தகாத வழிகளைக் கண்டித்து, என் மாம்ச இச்சைகளையும், மற்றும் குறைவுகளையும் வெளிப் படுத்தி எச்சரிக்கிறதையிட்டு, உம்மை நான் பகைத்து, இப்படிப்பட்ட அவமானத்துக் குட்படுத்துகிறேனே யன்றி வேறல்ல. என்னிமித்தம் நீர் கைதியாகி, பொய்ச் சாட்சிகளால் சூழப்பட்டு குற்றவாளிபோல எண்ணப் படுகிறீரேயன்றி, உம்மிடத்தில் ஒரு குற்றமுமில்லை. நீர் தேவனுடைய பரிசுத்தராயிருக்கிறீர்.

காய்பாமுன் நீர் மௌனமாய் நின்றீர். இந்த மௌனம் நியாயமான மௌனமாயிருந்தது. இந்த மௌனம்: இவ்வளவு நடபடிக்கையும் பிசகானது; இது கட்டுப்பாட்டால் நடக்கிற விஷயம். இந்தப் பொய்யர் நடுவில் பேசுகிறதைவிடப் பேசாமலிருப்பதே ஞானம் என்பதை உணர்த்துகிறது. இதை ஆட்சேபித்து, இந்தக் கைதி நிலைமையிலிருந்து விடுதலையாகிக்கொள்வது இலே

சான காரியமாயிருந்தாலும், உமது பிதாவின் தீர்மானப்படி என் இரட்சண்யம் நிறைவேற இடமுண்டாகத்தக்கதாக என் நேசரே நீர் மௌனமாயிருந்தீர்!

ஜெபம்

இரக்கமும் மன உருக்கமுமுள்ள பிதாவே, தேவரீர் உமது திருக்குமாரனை என்னிமித்தம் மனுஷனாகப் பண்ணினதுமாத்திரமல்ல, கனவீனமான பாடுகளையும் அவமானங்களையும் அடையும்படி தாழ்த்தினீரே. என்னில் அன்புகூர்ந்து உமது குமாரனைக் கைவிட்டீரே. இந்த அன்புக்கு நான் பாத்திரனல்ல. இந்த அன்பை நினைத்து உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். உமது திருக்குமாரன் என்னிமித்தம் கட்டப்பட்டு, கைதியாகி, அன்னா காய்பாமுன் விசாரிக்கப்பட்டதினிமித்தம், தேவரீர் என் பாவக்கட்டிலிருந்து என்னை விடுதலையாக்கி, இரட்சிப்பின் சுயாதீனத்தை எனக்குத் தந்து, என்னை ஆதரிக்கவேண்டுமென்று, இயேசுகிறிஸ்துவினிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

11. காய்பாவின் மறுவிசாரணை

வேதம்

"மறுபடியும் பிரதான ஆசாரியன் அவரை நோக்கி: நீ ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான். அதற்கு இயேசு: நான் அவர்தான்; மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும், நீங்கள் காண்பீர்கள் என்றார். பிரதான ஆசாரியன் இதைக் கேட்டவுடனே, தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? தேவதூஷணத்தைக் கேட்டீர்களே, உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது என்றான். அதற்கு அவர்களெல்லாரும்: இவன் மரணத்துக்குப் பாத்திரனாயிருக்

கிறான் என்று தீர்மானம்பண்ணினார்கள்" (மத். 26: 63–66; மாற். 14: 61–64; லூக். 22: 36–71).

போதனை

இயேசுவின் மௌனம் சத்துருக்களுக்கு மிகுந்த கலக்கத்தைக் கொடுத்தது. அவர்களில் சிலர், "மௌனம் சம்மதம்" என்ற பிசகான கருத்தையுடையவர்களாயிருப்பது இயல்பாயிருந்தாலும், இந்த விஷயத்தில் அப்படியிருக்கவில்லை. அவர்களனைவரும் இந்த மௌனம், குற்றவாளியின் மௌனமல்ல, இது குற்றமற்றவனின் மௌனம் என்று அவருடைய பார்வையாலும், மற்றும் குறிப்புகளாலும் அறிந்துகொண்டார்கள். இனிமேல் என்ன செய்வார்கள்? பேசாமலிருக்கிற இயேசுவைப் பேசவைக்கிறதே வழி என்று காய்பா நினைத்தான். இதற்காகப் பழைய போங்கை முற்றிலும் மாற்றிவிட்டாலன்றி காரியம் வாய்க்காதென்று கண்டு, தேவதாபக்தன் போல தன் முகத்தையும் சாயலையும் மாற்றிக்கொண்டு, "நீ ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் ஆணையிட்டுக் கேட்கிறேன்" என்றான். இந்த வாசகமும், இதை அவன் சொன்ன சாடையும், மகா பக்திவிநயமாயிருந்தது. இது பரீட்சைக் கேள்விபோலிராமல் விசுவாசிக்க வினவுகிறதுபோலிருக்கிறது. இது பிரியாதுப் போங்காயிராமல், அறிய விரும்பும் போங்காக இருந்தது. இதைக் காய்பா கேட்ட போது அவன் மனதில் வஞ்சகமும், கள்ளமுமிருக்கிறதென்று இயேசு அறிந்தார். இந்தக் கேள்வி கேட்டவுடனே, சங்கத்தாரும் மற்ற ஜனங்களும் இது நல்ல கேள்விதான். இதற்கென்ன உத்தரவு சொல்லுவாரோ வென்று பிரியத்தோடு காத்திருந்தார்கள். மௌனமாயிருந்த இயேசு தமது உதடுகளைத் திறந்து, இதற்கு உத்தரவு சொன்னார். ஒரு சங்கதி சாட்சிகளால் ரூபிக்கப் படாதபட்சத்தில் இவ்வண்ணம் தேவ ஆணையின்பேரில் குற்றவாளியைக் கேட்பது வழக்கமாயிருந்தது. ஆனால் இந்தக் காய்பா, பொய்ச்சாட்சிகள் முன் சொன்ன

தேவாலய விஷயத்தையே மறுபடியும் தேவ ஆணையால் கேட்கவேண்டிய நியாயமொன்றிருக்கிறது. அதை முற்றிலும் விட்டுப்போட்டு, வேறொரு புதிய சத்தியத்தைக் கேட்டபடியால் அதற்குப் பதில் சொல்லும்படி இயேசு வாய்திறந்தார்.

இந்தக் காய்பா கேட்ட கேள்வியில், நீ கிறிஸ்துவா? நீ தேவனுடைய குமாரனா? என்ற இரட்டைக் கேள்வி யடங்கியிருந்தது. அவ்விரு கேள்விகளுக்கும் மறுமொழியாக, "நான் அவர்தான்" அல்லது பரி. மத்தேயு சொல்லுகிறபடி "நீர் சொன்னபடிதான்" என்று சொன்னார். இதற்குள்ளாக சிலர், நீ கிறிஸ்துவா என்று திரும்பக் கேட்டார்கள் (பரி. லூக். 22: 67). அதற்கு அவர், நான் அதைச் சொன்னாலும் நம்பமாட்டீர்கள், என்னை விடுதலை செய்யவும்மாட்டீர்கள். அதை ருசுப்படுத்த உங்களிடத்தில் நான் வினவினாலும், உத்தரவு சொல்லமாட்டீர்கள். இனி நான் பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும், மேகங்களின் வழியாகத் திரும்ப வருவதையும் நீங்கள் காண்பீர்கள். அக்காலத்தில் நான் கிறிஸ்துவோ அல்லவோ என்பது உங்களுக்குத் தெரியவரும் என்றார். இதைக் கேட்கவே, இப்படிப் பிதாவின் வலதுபாரிசத்திலிருப்பவரும், மேகங்களின் வழியாக வருபவரும், தேவனுக்குச் சமமான தேவகுமாரனாச்சுதே என்று உணர்ந்துகொண்டு, அப்படியானால்,

நீர் தேவனுடைய குமாரனா?

என்று கேட்டார்கள். அப்போது அவர், "நீங்கள் சொல்லுகிறபடியே நான் அவர்தான்" என்று மறுமொழி கொடுத்தார். இந்த அறிக்கை பக்தருக்கும் பகைஞருக்கும் அடுத்த பொது அறிக்கையாயும், யூதருக்கும் புறச்சாதியாருக்கும் தமது தெய்வீகத்தைக் கூறும் விளம்பரமாயுமிருந்தது. இந்த நல்ல அறிக்கையால், நான் உலகத்துக்கு வாக்கருளப்பட்ட தெய்வீக இராஜனாகவும், ஆசாரியனாகவும், தீர்க்கதரிசியாகவுமிருக்கிறேன் என்று இயேசு அறிவிக்கிறார்.

இந்த அறிக்கையைக் கேட்டவுடனே பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, இனி சாட்சிகள் நமக்கு வேண்டியதில்லை—தேவதூஷணத்தைக் கேட்டீர்களே; உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது? என்றான். உடனே சங்கத்தார் அனைவரும் "இவன் மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான்" என்று தீர்ப்புக் கூறினார்கள். மோசேயின் பிரமாணத்தில் கள்ளத் தீர்க்கதரிசிக்கு விதிக்கப்பட்ட தண்டனையை இந்தத் தெய்வீகத் தீர்க்கதரிசிக்குத் தீர்மானித்தார்கள்.

தியானம்

என் நேசரே, தேவரீருடைய மௌனம், வெறும் மௌனமாயிராமல், காய்பாவை வெட்கத்துக்குட்படுத்தி உமது குற்றமில்லாமையை ருசுப்படுத்துகிறதாயிருந்தது. "காய்பா" என்றால் ஆராய்கிறவன் என்பது பொருள். உமது மௌனமானது ஆ காய்பாவே, ஆராய்ந்து நிதானி என்று எச்சரிக்கிறதாயிருந்தது. இந்தச் சாட்சிகள் கள்ளமென்றும், அவை ஒன்றுக்கொன்று ஒவ்வாதிருக்கிறதென்றும் நீயே அறிந்தும், என்னிடத்தில் கேள்வி கேட்கிறது சரியா? என்று வினவுகிறதுபோலிருந்தது. என் மீட்பரே! இது காய்பாவுக்கு மாத்திரமல்ல, அங்கே கூடிவந்திருக்கிற சங்கத்தார் எல்லாருடைய மனதிற்கும் ஒரு சவுக்கடி கொடுத்தாற்போலிருக்கிறது. நீர் பதில் சொல்லாமல் மௌனமாயிருக்கிறீர். இந்தப் பரிசுத்த மௌனத்தின் அந்தரங்கமென்னவென்று ஒருவரோடொருவர் தங்கள் பார்வையால் பேசிக் கலங்குகிறார்கள். அவர்கள் கண்விழி உருளுகிறது. அவர்கள் நெற்றித்தோல் மடிகிறது—அவர்கள் எரிச்சலால் தங்கள் தலைகளை அசைத்து, பற்களைக் கடித்துக்கொண்டாலும், அவர்கள் மனதில் அவமானமும் வெட்கமும் நிறைந்திருக்கிறது. நீர் மூடருக்கேற்ற மிலாற்றைப் பிரயோகித்தது சரிதான். இப்பொழுது நான் அந்த இரண்டு சாட்சிக்காரர் முகத்தையும் பார்ப்பேனாக! உம்முடைய மௌனம் அவர்கள் பொய்க்கு ஒரு மூடிபோலிருக்கிறதென்று அவர்கள் தெம்பாக அக்கம் பக்கம் திரும்பிப் பார்த்துக்

கொண்டபோதிலும், இந்தப் பரிசுத்தருக்கு விரோதமாக நான் என் பொய்களைக் கொட்டினேனே என்ற உணர்ச்சி, அவர்கள் மனதின் வழியாய் ஒரு காற்றைப்போல கடந்துபோகிறது.

ஆ மௌனத்துரையே, நீர் வாழ்க! உமது மௌனத்தில் ஒரு ஞானத்தைப் படிக்கிறேன். எனக்கு விரோதமாகப் பொய்கள் பிணைக்கப்படும்போது, பேசுவதைவிடப் பேசாமலிருப்பது உத்தமம் என்று அறிந்து கொள்ளுகிறேன்.

இந்த மௌனத்தின் சரியான காரணமென்ன? நீர் காய்பாவின் முன்னல்ல உமது பிதாவின்முன் மௌனமாயிருக்கிறீர். நீர் காய்பாவிலும் இந்தச் சங்கத்திலும் அவர்களையல்ல, அவர்கள் ஏந்திக்கொண்டிருந்த நியாயப் பிரமாணத்தைக் காண்கிறீர். அந்தப் பிரமாணத்தை நான் மீறினதால் தண்டனைக்குள்ளாகவேண்டியவன். எனக்குப் பதிலாக தேவரீர் பிணைப்பட்டு நிற்கிறீர். நியாயப்பிரமாணத்தின் காவலாளராகிய இவர்கள் எந்த வழியாகவாவது உமக்கு வரவேண்டிய என் தண்டனையைச் செய்யட்டுமேன்; அவர்களோடு தர்க்கித்து ஆவதென்ன? எல்லாம் இப்போது கண்ணுக்கு மறைவாகவிருந்து கச்சேரிபண்ணும் கர்த்தாவின் தீர்மானப்படி நடக்கட்டும் என்று நீர் மௌனமாயிருந்தீர். நீர் மௌனமாயிராமல் உமது நியாயத்தைப் பேசினதுண்டானல், குற்றவாளியல்லவென்று தீர்க்கப்படுவீர். காய்பா உம்மைக் குற்றப்படுத்த வேறு கேள்வி கேட்கவும் இடமிராது. அப்போது உம்முடைய காரியம் க்ஷேமம்தான்; ஆனல், ஐயோ என் மீட்பு தவறிப்போம். நீரோ என் மீட்புக்குரிய உமது சாவு இடையூறுகாதபடி என்னிமித்தம் மௌனமாயிருந்தீர். உம்முடைய மௌனம் உமது தெய்வீகத்தை இக்கூட்டத்தில் திறந்துகாட்டும் திறவுகோலாயிருந்தது.

உமது மௌனத்தால் மனம் தடுமாறின காய்பாவுக்கு ஒரு தெளிவு பிறந்தது. அவன் ஒரு புதிய கேள்வியைக் கண்டுபிடித்தான். இந்தக் கேள்வியை மற்றொருவர்

அவன் காதில் ஓதவில்லை. இதைக் கேட்டவுடனே, ஆகா, நமது பிரதான ஆசாரியர் வெகு சமார்த்தர் என்று எல்லாரும் மெச்சிக்கொள்வார்கள் என்ற எண்ணம் அவன் மனதில் வருகிறது.

"நீ ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய
குமாரனாகிய கிறிஸ்துதானா?

என்று, தான் முன் நின்றபடியே நின்றுகொண்டு, பய பக்தியுள்ள குரலோடும், பக்திவிநயமான நிலையோடும் வினவிக் கேட்கிறான். இந்தக் கேள்வி முந்தின குற்றத் தோடும், விசாரணையோடும் சேர்ந்ததல்ல; இது புதிய விஷயம். இம்மட்டும் இயேசு இந்தச் சத்தியத்தைத் தமது போதனைக்குள் மறைத்து வைத்துக் காட்டினார். இதைக் காய்பா திறந்து காட்டக் கேட்கிறான். இதில் இவன் நோக்கம் கள்ளமாயிருந்தபோதிலும், எனக்குச் சந்தோஷமான கேள்வியாகிறது. இந்தக் கேள்வியினால் எனக்கும் உலகத்துக்குமுண்டாகிற வாழ்வுகளைக் காய்பா கவனித்திருப்பானானால், இக்கேள்வியைக் கேட்டிருக்கமாட்டான் என்று நினைக்கிறேன். இது சாத்தானுடைய ஏவலால் கேட்ட கேள்வியல்ல. இப்படிப் பட்ட கேள்வியை அவன் கேட்கவிடான். இது பிதாவின் உத்தரவுப்படி அவன் மனதிலுண்டான கேள்வியே யன்றி வேறல்ல. பிதாவானவர் இந்த மகாசபை நடுவில், தமது குமாரனுடைய தெய்வீகத்தைப் பிரசித்தப்படுத்தச் சித்தங்கொண்டு, இந்தக் கேள்வியைக் கேட்கும்படி, தமது ஆவியால் காய்பாவை ஏவினார் என்று உணருகிறேன். இந்தக் கேள்வியால், உம்மை விசாரிக்கிறதும், உமக்குத் தண்டனை விதிப்பதும், தண்டனைக்குட்படுத்துவதும் சங்கத்தாராயிராமல், சர்வவல்லவரான தேவன் தான் என்று காய்பா அறிவிக்கிறதுபோலிருக்கிறது. காரியமும் அப்படியே இருக்கிறது. இதைக் கேள்வி கேட்கப்பண்ணினவரும், இதினாலுண்டாகும் லாபநஷ்டத்துக்குப் பாத்தியப்பட்டவரும் காய்பாவல்ல, தமது பிதாவாகிய தேவன் என்று இரட்சகர் அறிந்திருந்தார்

"நீ ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய
குமாரனாகிய கிறிஸ்துதானா?"

இந்தக் கேள்வி எனக்கும் இன்பமானதுதான். அச் சங்கத்தார், கூட்டத்தார் எல்லாருக்கும் இன்பமானது தான். இயேசுவுக்கும் இன்பமானதுதான். இது பிதா வாகிய தேவனுக்கும் இன்பமானதுதான். ஆனால் சாத்தா னுக்குமாத்திரம் இந்தக் கேள்வியில் இன்பமேயில்லை. அவன் முகத்தைப் பார். குருவிப்போனான்; இந்தக் கேள்வியும், இதின் மறுமொழியும் இவ்வுலகத்தை அசை யப்பண்ணும் சூட்சயந்திரம் என்பதை அவன் அறிவான்.

ஆத்துமாவே, இந்தக் கேள்வியைக் கவனித்துப்பார். இதற்குள் என் மீட்பர் தீர்க்கதரிசிகளால் அறிவிக்கப் பட்ட மேசியாவாயிருந்து, வான சத்தியங்களை வெளிப் படுத்தும் தீர்க்கதரிசியாயும், லோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படி தமது ஜீவனைப் பலியாகப் படைக் கும் ஆசாரியனாயும், கிருபையும் சத்தியமும் விளங்கும் ஒரு நித்திய இராஜ்யத்தை ஸ்தாபிக்கும் அரசனாகவும் விளங்குகிறவர் என்பதும், அவர் சாதாரண மனுஷ ரூபமாயிருந்தாலும் தெய்வத்தில் தெய்வமும், ஜோதியில் ஜோதியும், மெய்தேவனில் மெய்தேவனும், உண்டாக்கப் படாமல் அனாதியாய் ஜெனிப்பிக்கப்பட்டவராயுமிருப் பார் என்பதும் அடங்கியிருக்கிறது. இவ்வளவு கருத்து களையும் தன் மனதில் உணர்ந்துகொண்டவனாகவே, காய்பா இந்தக் கேள்வியைக் கேட்டான்.

காய்பாவே, உன் சகல காய்மகாரங்களோடும் இந்தக் கேள்வியைக் கேட்டதற்காக, உனக்கு ஒரு சிறு வந்தனம் செய்கிறேன். ஆ தூதரே, அதி தூதரே, மனுமக்களே, மரித்தோரே, வாருங்கள்—வாருங்கள். இவ்வுலகத் தாருக்குப் பிரயோசனமான ஒரு கேள்வி எருசலேமில், காய்பாவின் வீட்டில் கேட்கப்படுகிறது. சகல கல்வி மான்களும், நீதி சாஸ்திரிகளும், வேத சாஸ்திரிகளும், பதிதரும், பாஷண்டருமே வாருங்கள்! வாருங்கள்! இந்தக் கேள்விக்கு என்ன பதில்மொழி வருகிறதென்று

கேட்போமாக. மௌனம் — மௌனம் — மௌனம் — கேளுங்கள்.

"நீ ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய
குமாரனாகிய கிறிஸ்துதானா?
உத்தரவு "நான் அவர்தான்."

இனி ஒருவரும், இயேசு தன்னைத் தேவன் என்றாவது, தேவனுடைய குமாரன் என்றாவது சொல்லவில்லை என்று பேசக்கூடாது.

ஆ, என் மீட்பரே, இவ்வண்ணமாக உமது தெய்வீக மகத்துவத்தை இந்த இருண்ட இராத்திரியில் வெளிப்படுத்தினதற்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரன் என்னை இரட்சிக்க வந்தது எவ்வளவு அன்பு! ஆ, இது எவ்வளவு தாழ்மை! ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனே! என் ஸ்தோத்திரத்தையும் அங்கீகரித்தருளும்.

என் நேசரே, "நான் அவர்தான்" என்ற சிறிய வாசகத்தோடு நீர் உமது உத்தரவை முடிக்கவில்லை. நீர் பின்னும் உமது மகிமையைப் பிரசித்தப்படுத்தக் கிருபைகூர்ந்து, நீர் உமது பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும், மறுபடியும் மேகங்களின்மேல் வருவதையும் கூட்டிச் சொன்னீர். இந்த அதன் வாசகத்தைக் கேட்டு என் ஆத்துமா துள்ளுகிறது. இது உமது தெய்வீகத்தை அதிகமாக உறுதிப்படுத்துகிறது. இந்த வாசகத்தால், காய்பாவின் கச்சேரியையும் யூத சங்கத்தையும், பூமிக்குள் தாழ்த்தி, உம்முடைய சிங்காசனத்தையும், உம்முடைய ஆளுகையையும் உயர்த்துகிறீர்.—அது மாத்திரமோ, ஆ காய்பாவே, யூத சங்கமே, யூதஜாதியே, இப்படி கைதி நிலைமையில் நிற்கிறகாலம் மாறி, நான் நியாயாதிபதியாய் வீற்றிருக்க நீங்கள் அனைவரும் என் முன் கைதி நிலைமையில் நிற்கும் காலம் ஒன்றிருக்கிறது என்று உணர்த்துகிறார்.

இவ்வளவும் கேட்டவுடனே காய்பா தன் வஸ்திரத்தைக் கிழித்தான். இந்த மறுமொழி தேவனைக் க்ன

னம்பண்ணிவிட்டதாம்; இது தேவதூஷணமாம். இவன் அதைச் சகிக்கமாட்டானும். தேவகுமாரனைக் கொலைசெய்யப் போகிறவனுக்கு தேவதா பக்தியும், தேவாபிமானமும் வந்துவிட்டதாம். இந்தக் காய்பா, நமது இரட்சகரின் வாசகத்தைக் கேட்டவுடனே, இயேசுவே உட்காரும். உம்முடைய மறுமொழி: கலக்கத்தையும், நூதன சத்தியத்தையும் வெளிப்படுத்துகிறது. ஓய் வேதபாரகரே, ஆகமங்களைக் கொண்டு வாருங்கள்; ஆராய்ந்துபார்த்து அப்பால் பேசுவோம் என்று சொல்வானுனல், அவனிடத்தில் இரட்சிப்புக்கேற்ற ஞானமிருந்ததென்று சொல்லலாம். அல்லவென்று இந்த மறுமொழியிலடங்கிய வீற்றிருக்கையையும், மேகங்களின்மேல் வருவதையும்பற்றித் தியானித்துத் தன் இருதயத்தைக் கிழித்தானுனல், இவனைப் புகழலாம். இவனே தன் இருதயத்தை உயர்த்திக் கிழியாமல், தன் மேல்வஸ்திரத்தைக் கிழிக்கிற பைத்தியக்காரனுயிருக்கிறுனே. இவனேது இரட்சிப்பின் வழியைக் கண்டுபிடிப்பதேது? நானே என் வஸ்திரத்தையல்ல என் இருதயத்தைக் கிழித்து, என் இரட்சகரின் தெய்வீகத்தையும், அவருடைய வீற்றிருப்பையும், அவருடைய வருகையையும் தியானித்து அவரை வணங்குவேனுக.

கடைசியாக எல்லாரும் ஏகமாகக் கூடி அவர் தேவதூஷணம் சொன்னதாக ஸ்தாபித்து, அவரை மரணத்துக்குப் பாத்திரனென்று தீர்த்தார்கள். அவர்கள் கொண்ட தப்பான கருத்தின்படி அந்தத் தீர்ப்பு சரிதான்; ஆனுல் இயேசுவின் உள்ள தத்துவத்தின்படி, அது பிசகான தீர்ப்பு.

என் மீட்பர் காய்பாமுன் நல்ல அறிக்கைசெய்தார். தேவ மனுஷனுகிய அவர் தமக்கு உள்ளபடியிருக்கிற இரண்டு தன்மைகளில் ஒன்றை அழித்து, ஒன்றைப் பேணிக்கொள்வது கூடாதவிஷயம். அதை ஸ்தாபிப்பதால் அறிவீனரால் பாடுகளுக்குட்படுவதற்கு என் மீட்பர் பின்வாங்கவில்லை.

ஜெபம்

தயவுள்ள பிதாவே, தேவரீர் காய்பாவின் அரண்மனை யில் உமது திருக்குமாரனுடைய தேவமகத்துவத்தை வெளிப்படுத்தினதற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். நானும் உலகத்தாரும், அவருக்குள் அடங்கியிருக்கும் தெய்வீகத்தை உமது பரிசுத்த ஆவி யினால் கண்டுபிடித்து, ஆவியினாலும், உண்மையினாலும் உம்மையும் அவரையும் வணங்கும்படி கிருபைசெய்தரு ளும். இந்தச் சத்தியத்தைக் காய்பாவும் மற்றப் பெரி யோரும் அன்றையதினம் கண்டுபிடியாததுபோல இக்காலத்திலும் அநேக கல்விமான்களும், பிரபுக்களும் கண்டுபிடியாமலிருக்கிறார்கள். அவர்கள் காய்பாவைப் போல தங்கள் வஸ்திரங்களையும், கடுதாசிகளையும் கிழித்து, இது தேவதூஷணம் என்று அசட்டைபண்ணா மல், தங்கள் இருதயங்களைக் கிழித்து, இந்த அறிவின் ஒளியால் பிரகாசமடைந்து, உம்மையும் உமது குமாரனை யும் வணங்கும்படி, இயேசுகிறிஸ்துவின் மூலமாக வேண் டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

12. இயேசு காய்பா வீட்டில் பட்ட பாடுகள்

வேதம்

"அப்பொழுது, அவருடைய முகத்தில் துப்பி, அவ ரைக் குட்டினார்கள்; சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து: கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால் எங்களுக்குச் சொல்லும் என் றார்கள்."

"அப்பொழுது சிலர் அவர்மேல் துப்பவும், அவரு டைய முகத்தை மூடவும், அவரைக் குட்டவும், ஞான திருஷ்டியினாலே பார்த்துச் சொல் என்று சொல்லவும் தொடங்கினார்கள்; வேலைக்காரரும் அவரைக் கன்னத்தில் அறைந்தார்கள்."

"அவரைப் பரியாசம் பண்ணி, அடித்து, அவருடைய கண்களைக்கட்டி, அவருடைய முகத்தில் அறைந்து: உன்னை அடித்தவன் யார், அதை ஞானதிருஷ்டியினால்

சொல்லென்று அவரைக் கேட்டதுமன்றி, மற்றும் அநேக தூஷணவார்த்தைகளையும் அவருக்கு விரோதமாகச் சொன்னார்கள்" (மத். 26: 67, 68; மாற். 14: 65; லூக். 22: 63–65).

போதனை

நமது இரட்சகர், காய்பாவின் அரண்மனையிலே பட்ட பாடுகள் எல்லாவற்றையும், நாம் அறிந்துகொள்ள மேலே காட்டிய மூன்று சுவிசேஷகரின் வாசகங்களும் உதவிசெய்கின்றன. இவ்வாசகங்களின் மூலமாய், வெவ்வேறான ஒன்பது பாடுகளும் அவமானங்களும் நமது இரட்சகருக்கு, காய்பாவின் வீட்டில் கிடைத்தது என்று அறிகிறோம். அவையாவன:—

1. முகத்தில் துப்பினார்கள்.
2. மேலே துப்பினார்கள்.
3. முகத்தை மூடினார்கள்.
4. கண்களைக் கட்டினார்கள்.
5. தலையில் குட்டினார்கள்.
6. மேலே அடித்தார்கள்.
7. கன்னத்தில் அறைந்தார்கள்.
8. தூஷணம் சொன்னார்கள்.
9. பரியாசம் செய்தார்கள்.

இவ்வண்ணமான அவமானம் ஒரு மனுஷனுக்குச் சம்பவித்ததாக இதற்கு முன்னும் இதற்குப் பின்னும் யாதொரு குறிப்புமில்லை. இயேசு தமது கன்னத்திலும், முகத்திலும், தலையிலும், உடலிலும், கண்ணிலும், மனதிலும் சொல்லமுடியாத அவமானங்களைச் சகித்திருக்கிறார். இவையனைத்தும் தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலாயிருந்தது. "இஸ்ரவேலின் மீட்பரும் பரிசுத்தருமாகிய கர்த்தர்: மனுஷரால் அசட்டைபண்ணப்பட்டவரும் ஜாதியாரால் அருவருக்கப்பட்டவருமாயிருப்பார்" என்றும்; "அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை" என்றும்; அவர் அசட்டை

பண்ணப்பட்டவரும் மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவருமாயிருந்தார்......அவரைவிட்டு நமது முகங்களை மறைத்துக்கொண்டோம்'' என்றும் இவைகள் சம்பவிக்கிறதற்குச் சுமார் 800 வருஷங்களுக்கு முன்னே தீர்க்கதரிசனம் கூறப்பட்டிருந்தன.

இயேசுவின் சத்துருக்கள், தங்கள் மனத்திலிருந்த எரிச்சலைப் பூரணமாகத் திருப்திசெய்ய நல்ல இடமும், சமயமும் இப்போது கிடைத்ததென்று எண்ணி, மேலே காட்டிய அவமானங்களையும் துன்பங்களையும் செய்தார்கள். அவர் சேவகராலும் மற்றவர்களாலும் துன்பப்படுத்தப்பட்டதோடு, வேலைக்காரராலும் அடிக்கப்பட்டார். சங்கத்தார் தாங்கள் அடிக்கவேண்டிய அடியைத் தங்கள் வேலைக்காரரைக்கொண்டு அடித்திருக்கிறார்கள்.

தியானம்

என் நேசரே, காய்பாவின் காய்மகாரத்தை அவனுடைய அரண்மனையிலே காண்கிறேன். அரண்மனை முழுவதும் உமக்கு விரோதமாக ஆரவாரமாகிறது. அவர்கள் சொல்லமுடியாத அவமானங்களை உமக்குச் செய்கிறார்கள்.

அவர்கள் உமது முகத்தில் துப்பினார்கள். இதைவிட அவமானச்செய்கை இந்தக் கீழ்த்தேசங்களில் இல்லை. நீர் உமது உமிழ்நீரால் குருடருடைய கண்களுக்குக் கலிக்கமிட்டுத் திறந்தீரே. அந்தச் சகாய வைத்தியத்துக்குச் சம்பளமாக, சத்துருக்கள் தங்களுடைய அருவருப்பான உமிழ்நீரை உமது முகத்தில் துப்பி, உமது கண்ணை மூடப்பார்க்கிறார்கள்! அதோடு நான் என் கண்களால் இச்சித்த எல்லாப் பாவங்களுக்கும் துப்பப்படவேண்டியவனாயிருக்கிறேன். என் பிணையாளியாகிய நீர் எனக்குப் பதிலாக அந்த அவமானத்தை அடைந்தீர்!

என் நேசரே, உமது கண்கள் கட்டப்பட்டு, முகமும் மூடப்பட்டது. உம்மை அடிக்க விரும்பினவர்கள் தங்கள் இஷ்டம்போல உம்மை இம்சை செய்யும்படி இப்படிச் செய்தார்கள். உமது கண்ணும் முகமும் மறைந்தது எனக்கு ஆறாத் துயரத்தைக் கொடுக்கிறது! நீர் என்னை

உமது கண்ணின் கருவிழியைப்போல் காத்தீரே—உமது முகத்தின் வெளிச்சத்தால் பிரகாசமானேனே. இவை இரண்டும் மறைந்தது என் வாழ்வை நஷ்டப்படுத்து கின்றன. இப்படி உமது முகம் மறைந்ததால் உமக்கு நஷ்டமில்லை, எனக்கே நஷ்டம். இப்படிச் செய்தது நான்தான். நான், என் பாவக் கிரியைகளும் யோசனை களுமாகிய என் வஸ்திரத்தை அநேக மடிப்பாக மடித்து, அத்தால் உமது முகத்தை மூடி, என் அக்கிரமத்தின் கயிறுகளால் உமது கண்களை இறுகக் கட்டிவிட்டேன். உம்முடைய கண்கள் திறந்திருந்தால், நான் என் இஷ்டப் படி பாவம் செய்யக் கூடாதென்று நினைத்து, இப்படிக் கட்டினேன். ஆனால் இக்கட்டுகளை ஊடுருவி, உமது காட்சியின் கதிர்கள் வருகின்றன. இந்தக் கட்டோடும் நீர் என் பாவங்களைக் கண்டு எனக்கு உணர்த்துகிறீர். அதற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன்.

ஆ என் மீட்பரே, மறுரூபமலையில் நான் உமது முகத் தைப் பார்த்தேன். அது சூரியனைப்போல பிரகாசித் ததே. அந்தப் பிரகாசம் எங்கே? அதை நீர் சுருக்கிக் கொண்டீர். என் பாவத்தினிமித்தம் உமது முகம் வெட் கம்பூண்ட துக்கத்தோடு, இவ்வேளையில் விளங்கும்படி, உமது மகிமையின் ரூபத்தை மறைத்துக்கொண்டீர். தேவரீர் சகிக்கவேண்டிய நிந்தைகளின் கார்மேகம், உமது முகத்தின் அழகைக் குறைத்துவிட்டது. நீர் ஒப்புக்கொண்ட நியாயப்பிரமாணத்தின் சாபமனைத்தும், ஒரு அண்டம்போல் உமக்கும் உமது பிதாவுக்கும் மத்தி யில் நின்று, துக்கக்கிரகணத்தைப் பிறப்பிக்கின்றன! ஆ, கட்டுண்ட கண்களின் வழியாக அடியேனை நோக்கிப் பாரும்; எனக்கருளும் பாவமன்னிப்பின் காட்சி, இக் கட்டுகளை ஊடுருவி வரட்டும்!

இவற்றோடு உமது பாடுகள் முடிந்ததோ! அல்ல—அல்ல. என் மீட்பரே, நீர் எனக்காக அடிபட்டீர், பரி யாசம் பண்ணப்பட்டீர். உமக்கு தலையில் குட்டு, கன்னத் தில் அறை, தேகத்தில் அடி!! இவ்வண்ணம் எந்தப் பஞ்சமாபாதகனும் நடத்தப்பட்டதேயில்லை. நீர் ஒரு

வரே இப்படி அனுபவித்தீர். உமது சரீரம் வேதனைப் படுத்தப்படுகிறது போதாதென்று, உமது மனத்தை வேதனைப்படுத்தும்படி, உம்மைப் பரியாசம்பண்ணித் தூஷித்தார்கள். இந்தக் காய்பாவின் வீட்டுப் பாடுகளை விவரிக்க என் மனம் ஓடாமல் முட்டுகிறது. அதின் பேரை வாசித்து முடிக்குமுன், என் கண்ணை மூடுகிறேன். அதை வாசிக்கக் கேட்கையில், என் காதை அடைத்துக் கொள்ளுகிறேன். இவ்வளவும் நடப்பித்தது நானுயிருந் தும், அதின் பேர் விவரம் என் மனதுக்கு அருவருப்பை யும் துக்கத்தையும் கொடுக்கிறது. நான் ஒருவன் இவ் வுலகத்தில் இல்லையானால், மற்றெல்லாப் பாடுகளும் ஒரு வேளை என் இரட்சகருக்கு நேரிட்டாலும், இந்தத் துப்புதலும் தூஷணமும் அவருக்கு நேரிட்டிருக்கமாட் டாது. என்நிமித்தமே, என்னாலேயே இவை இரண்டும் சம்பவித்தன என்று உணர்ந்துகொள்ளுகிறேன்.

ஆ, என் நேசரே, வேலைக்காரரும் உம்மைக் கன்னத் தில் அறைந்தார்கள். பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் உம்மை அடிக்க ஆசைப்பட்டார்கள். அவர் களுக்கு உம்மைக் கொலைசெய்யும்படியான மூளைபலமே தவிர, கைப்பலமிருக்கவில்லை. ஆதலால் அதற்கேற்ற கைப்பலமுள்ள தங்கள் வேலைக்காரரை அந்த வேலைக்குத் திட்டம்செய்கிறார்கள்! தாங்கள் அடித்தால் தங்களுக்கு கைநோகுமாம், இயேசுவுக்கு நோகாதாம். அதற்காக முரட்டுவேலை செய்து உள்ளங்கை மரத்துப்போயிருக்கும் வேலைக்காரரைக்கொண்டு அடித்தார்கள். அதுவும் கன் னத்தில் அடிக்க இவர்களைத் திட்டம் செய்தார்கள். ஆ, என் பரிசுத்த ரோஜாப்புஷ்பமே, நீ அடிபட்டு வதங்கிப் போகிறாயே! ஆ, சுத்த சமுத்திரத் தாமரையே, நீ வாடிப் போகிறாயே! ஆ, பெத்லகேமின் லீலியே, நீ கசங்கிப் போகிறாயே!! ஆ, என் தோழரே, எல்லாப் புஷ்பங்களும் வதங்குமுன் வாசனை தரும்—கசங்குமுன் கந்தம்வீசும்— வாடுமுன் வாடைவிடும்—இந்தப் புஷ்பமோ அடிபட்டுக் கசங்கின பின்புதான் அதிக வாசனை—அதிக மணம்— வாருங்கள் — வாருங்கள் — இந்தத் திருக்கன்னங்களி லிருந்து வீசும், அன்பு வாசனை—சாந்த வாசனை—

பொறுமை வாசனை—இரட்சண்ய வாசனை ஆகிய சகல வாசனைகளும் எவ்வளவு இன்பமாயிருக்கிறது. இந்த ஜீவவிருட்சத்தில் இரட்சண்ய பிசின்தைலம் சீக்கிரத்தில் சுரக்கும்படி, இப்படி அதைக் கன்னப்படுத்தி, காயப் படுத்துகிறார்கள். இன்னும் நேரம் செல்லச் செல்ல அதிக வாசனை வருமேயன்றிக் குறையமாட்டாது.

என் இரட்சகா, எலிசா தன்னைத் தூஷித்த 42 பிள்ளைகளையும் சபித்தான் என்று காண்கிறேன். தேவரீரோ எல்லாத் தூஷணங்களையும் பொறுமையாகச் சகித்து, என்னிமித்தம் வரவேண்டிய நிந்தையைச் சுமந்தீர். அதற்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்.

என் நேசரே, சத்துருக்கள் உமது கண்களைக் கட்டிப் பரியாசம் பண்ணுகிறபோதே, ஞானதிருஷ்டியினால் பேசக் கேட்டார்கள். அப்போது நீர் மௌனமாயிருந்தீர். இன்று உமது அடியானாகிய எனக்கு ஒரு ஞானதிருஷ்டி வாசகம் சொல்வீராக!!

வாசகம்.—"உன் பாவங்களினால் என்னைச் சங்கடப் படுத்தி, உன் அக்கிரமங்களினால் என்னை வருத்தப் படுத்தினாய். நான், நானே உன் மீறுதல்களை என் நிமித்தமாகவே குலைத்துப்போடுகிறேன்; உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன்" (ஏசா. 43: 24, 25).

கண்கள் கட்டப்பட்டு, முகமூடி கபோதிபோலதோன் றும் என் மீட்பரே, இந்த இரக்கமான ஞானதிருஷ்டி வாசகத்துக்காக உமக்கு நன்றியறிதலோடு ஸ்தோத்திரிக் கிறேன். ஆனால் இன்னும் ஒரு காரியத்தின் இரகசியத்தை உம்மிடத்தில் கேட்டறிந்துகொள்ளும்படி எனக்குள்ளி ருக்கும் சித்தமென்பவன் என்னை ஏவுகிறான்; இரட்சகா, கேட்க உத்தரவுதாரும்!!

கேள், பாவியே—கேள்.

கேள்வி.—இவ்வளவு பரிசுத்தராகிய உமக்கு, இவ்வண்ண மான பாடுகளை, இத்தனை பெரிய மனுஷர் செய்வா னேன்? என்ற கேள்விதான்.

உத்தரவு.—இதற்கு இரண்டு உத்தரவு உண்டு, பாவியே கேள்;

1. இப்பாடுகளிலும், இதின் மாதிரியிலும் சில குறைந்தால் உன்னைத் தவிர மற்றெல்லாப் பாவிகளுக்கும் அது சரியாயிருக்கும்; உன்னையும் கைவிடாமல் மீட்டுக்கொள்ளும்படி இவ்வளவு பாடுகளையும், இவ்வண்ணமாகச் சகிக்கிறேன் அப்பா. நீ என்பேரில் காட்டும் நேசத்தால் இதை மாற்றுவாயாக.

2. பாதாள சாத்தான் நான் இவ்வண்ணமாக அவமானப்படுத்தப்பட்டால், என் பரிசுத்த மனதில் அதைச் சகியாமல் விலகிக்கொள்வேன். அத்தோடு உலகத்தின் மீட்பு இடறலடையும் என்று நினைத்து இப்படி யூதரை ஏவி நடத்துகிறான்; அதை நான் அறிவேன். இப்படிப் பதினாயிரம் பங்கு வந்தாலும், அதைச் சகித்து முடிப்பேனேயன்றி விலகேன்,—விலகேன், இதையவன் சிலுவையிலே மாத்திரம் காண்பான், உனக்கோ முந்தி சொல்லிவிட்டேன். என்னை நேசிப்பாயாக.

பாவி. நேசிக்கிறேன், நேசரே!
நேசிப்பேன், நேசரே!
நேசியும், நேசரே!!

ஜெபம்

பரமபிதாவே, உமது நேசம் என்மேலும் இவ்வுலகத்தின்மேலும் இவ்வளவு அதிகமாகப் பொங்குகிறதை நானறிந்து உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். என்னிமித்தம் உமது குமாரன் காய்பாவின் அரண்மனையில் அடைந்த எல்லாப் பாடுகளினிமித்தமும், தேவரீர் எனக்குப் பாவமன்னிப்பைத் தந்து, நான் இனி உமது நேசத்திலும், உமது குமாரனுடைய நேசத்திலும் நிலைத்திருக்கும்படி உமது பரிசுத்த ஆவியால் என்னைக் காத்து நடத்தியருளவேண்டுமென்று என் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

13. பேதுரு மறுதலித்தது

வேதம்

"சீமோன் பேதுருவும் வேறொரு சீஷனும் இயேசுவுக்குப் பின்சென்றார்கள். அந்தச் சீஷன் பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமானவனாயிருந்ததினால், இயேசுவுடனே கூடப்பிரதான ஆசாரியனுடைய அரண்மனைக்குள் பிரவேசித்தான். பேதுரு வாசலருகே வெளியே நின்றான். பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமானவனாயிருந்த மற்றச் சீஷன் வெளியே வந்து, வாசல் காக்கிறவர்களுடனே பேசி, பேதுருவை உள்ளே அழைத்துக்கொண்டு போனான். அப்பொழுது வாசல் காக்கிற வேலைக்காரி பேதுருவை நோக்கி: நீயும் அந்த மனுஷனுடைய சீஷரில் ஒருவனல்லவா என்றாள். அவன்: நான் அல்ல என்றான். அப்பொழுது சேவல் கூவிற்று. குளிர்காலமானபடியினாலே ஊழியக்காரரும் சேவகரும் கரிநெருப்புண்டாக்கி, நின்று குளிர்காய்ந்துகொண்டிருந்தார்கள்; அவர்களுடனேகூடப் பேதுருவும் நின்று குளிர்காய்ந்துகொண்டிருந்தான். வேலைக்காரி அவனை மறுபடியும் கண்டு: இவன் அவர்களில் ஒருவன் என்று அருகே நின்றவர்களுக்குச் சொன்னாள். அவன் அந்த மனுஷனை நான் அறியேன் என்று ஆணையிட்டு மறுபடியும் மறுதலித்தான். மறுபடியும் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரரில் பேதுரு காதறவெட்டினவனுக்கு இனத்தானாகிய ஒருவன் அவனை நோக்கி, நான் உன்னை அவனுடனே கூடத் தோட்டத்திலே காணவில்லையா என்றான். அப்பொழுது அவன் அந்த மனுஷனை அறியேன் என்று சபிக்கவும் சத்தியம்பண்ணவும் தொடங்கினான். உடனே சேவல் இரண்டாம்தரம் கூவிற்று (மத். 26: 69–75; மாற். 14: 66–71; லூக். 22: 55, 60; யோவா. 18: 15–18 & 25–27).

போதனை

பேதுரு இயேசுவை மறுதலித்த விஷயமானது நான்கு சுவிசேஷகராலும் சொல்லப்பட்டிருக்கிறது. இயேசுவின் பாடுகளின் சரித்திரத்தில் இதைப்போல

நாலு சுவிசேஷகராலும் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிற விஷயம் வேறொன்றுமில்லை என்று சொல்லவேண்டியது. இந்த நாலு விவரங்களில் வித்தியாசங்கள் காணப்படுகிறதுபோல தோன்றினாலும், அவை வித்தியாசங்களாக இராமல், நாலும் கூடி, சங்கதியின் விவரத்தைப் பூரணமாக வெளிப்படுத்துகின்றன. அதின் குறிப்புகளாவன:—

இயேசு காய்பாவின் அரண்மனைக்குள் கட்டுண்டவராகக் கொண்டுபோகப்பட்டபோது, பேதுருவும் வேறொரு சீஷனும் கூடப் போனார்கள். இதில் பேதுரு சற்று தூரத்தில் பின்சென்றான்; இயேசுவைப் பிடித்தவர்கள் தங்கள் கைதியோடு அரண்மனை வாசலுக்குள் போகவே, வாசலில் காவல் வைக்கப்பட்டது. பேதுரு சற்று பிந்திப்போனதால் மற்றச் சீஷனுடைய சிபாரிசின்பேரில் உள்ளுக்குப் போக இடம் கிடைத்தது. அவன் உள்ளே போனவுடனே தன்னை வேற்று மனுஷன் என்று ஒருவரும் நினையாதபடி, அங்கே குளிர்காய்ந்தவர்களோடு உட்கார்ந்து குளிர் காய்ந்தான். காவல் காத்து நின்ற ஸ்திரீ இவன் சாயலைக் கவனித்து, அவனண்டை வந்து, "நீயும் கலிலேயனாகிய இயேசுவோடிருந்தாய்" என்றாள்; வேறொருத்தி அவனைப் பார்த்து, "நீயும் நசரேயனாகிய இயேசுவோடிருந்தாய்" என்றாள்; இன்னொருத்தி, "இவனும் அவனோடிருந்தான்" என்றாள். அப்பாலொரு ஸ்திரீ, "நீயும் அந்த மனுஷனுடைய சீஷரிலொருவனல்லவா" என்று கேட்டாள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி முறையே,

"நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது,"
"நான் அறியேன்,"
"ஸ்திரீயே, அவனை அறியேன்,"
"நானல்ல"

என்பதாகச் சொல்லி மறுதலித்துப்போட்டு, இனிமேல் இவ்விடத்திலிருக்கக்கூடாதென்று, வாசல் மண்டபத்துக்குப் போனான். உடனே சேவல் முதலாம்தரம் கூவிற்று.

சற்று நேரத்துக்குப்பின்பு வேறொருத்தி வந்து, பேதுருவை மற்றவர்களுக்குச் சுட்டிக்காட்டி, "இவனும் நசரேயனாகிய இயேசுவோடிருந்தான்" என்றாள். அப்பால் முன் கண்ட ஸ்திரீயிலொருத்தி வந்து "இவன் அவர்களிலொருவன்" என்றாள்; வேறொரு ஆண்பிள்ளை, "நீயும் அவர்களிலொருவன்" என்றான்; வேறு சிலர் "நீயும் அவருடைய சீஷரிலொருவனல்லவா" என்று கேட்டார்கள். அவனோ ஆணையிட்டு முறையே,

"அந்த மனுஷனை நான் அறியேன்,"

"மனுஷனே நானல்ல, நானல்ல"

என்று இரண்டாம்தரம் மறுதலித்தான்.

சுமார் ஒருமணி நேரத்துக்குப் பின்பு மறுபடியும் சிலர் பேதுருவினிடம் வந்து, "மெய்யாகவே நீயும் அவர்களிலொருவன், உன் பேச்சு அதை வெளிப்படுத்துகிறது" என்றார்கள்; வேறொருவன் அதே நேரத்தில் வந்து, "மெய்யாகவே இவனும் அவனோடிருந்தான்" என்று சாதித்தான்; அதே சமயத்தில், பேதுரு காதற வெட்டினவனுக்கு இனத்தானாகிய ஒருவன் அவனை நோக்கி, "நான் உன்னை தோட்டத்திலே அவனுடனே கூடக் காணவில்லையா?" என்றான். அதைக் கேட்டவுடனே பேதுரு,

"அந்த மனுஷனை அறியேன்,"

"நீங்கள் சொல்லுகிற மனுஷனை அறியேன்"

என்று சொல்லிக்கொண்டே சபிக்கவும் சத்தியம்பண்ணவும் தொடங்கினான். அப்போது சேவல் இரண்டாம் தரம் கூவிற்று. இதுதான் நான்கு சுவிசேஷகரும் அறிவிக்கும் குறிப்புகளாயிருக்கின்றன. இந்த மறுதலிப்பைப்பற்றியே, இயேசு சுமார் நாலைந்து மணிநேரங்களுக்கு முன்னே சொன்னார். அவர் சொன்ன சமயத்தில், இவ்வளவு சீக்கிரத்தில் இவ்வளவு திட்டமாய் அது நிறைவேறுமென்று ஒருவரும் நினைக்கவில்லை. "சிநேகிதனையும் தோழனையும் எனக்குத் தூரமாக விலக்கினீர்; எனக்கு அறிமுகமானவர்கள் மறைந்துபோனார்கள்"

என்ற வாசகம் பேதுருவின் மறுதலிப்பினால் நிறைவேறு கிறது (சங். 88: 18).

தியானம்

ஆ, என் மீட்பரே, காய்பாவின் வீடு உமது பாடு களின் மூன்றும் ஸ்தானமாயிருந்தது. கெத்செமனேயில் உமது பிதாவால் பாடுபட்டீர்; அதைவிட்டு வெளியேறின வுடனே யூதாசால் பாடுபட்டீர். இங்கே பேதுருவால் பாடுபட்டீர். சத்துருக்களாலும் சாத்தானாலும் உமக் குண்டான பாடுகள் போதாதென்று, சிநேகிதராலும் தோழராலும் பாடுபடுகிறீர். காய்பாவின் வீட்டில் உமக் குண்டான ஒன்பது வகையான பாடுகளைவிட இதுதான் உமக்கு விசேஷமாகிறது. ஏனெனில் இது பேதுருவால் உண்டானது. சத்துருக்களின் துரோகத்தைவிட, நேச ரின் துரோகம் ஆத்துமாவை அதிகமாய் வருத்தப்படுத்து வது இயல்பு. இந்தப் பேதுருவுக்கு நீர் செய்த நன்மைகள் எத்தனை திரள்! இவருக்குக் கேபா என்ற சிறந்த பேரைக் கொடுத்தீர்—மறுரூப மகிமையைக் காட்டினீர்—கடல் மேல் நடக்க வரம் கொடுத்தீர்—சாத்தான் இவனைச் சுளகினால் புடைத்தபோது இவன் விசுவாசம் ஒழிந்து போகாதபடி காத்தீர். இவன், இவனே உம்மை இப் போது மறுதலித்தான்.

நான் பேதுருவிலும் நல்லவனல்ல; என் தவறுதல் கள் அநேகம்; என் மறுதலிப்புகளோ அனந்தம்; இவர் பயந்தல்லோ அன்று மறுதலித்தார். நானோ பயந்தல்ல துணிந்து மறுதலிக்கிற பாவி. பேதுரு உமது சீஷன், நான் உமது மகன். பேதுரு ஒரு சிக்கில் அகப்பட்டு மறுதலித்தார், நான் சாங்கோபாங்கமாய் மறுதலிக் கிறேன். பேதுருவுக்கு உம்மோடு மூன்று வருஷப் பழக்கமாத்திரம். எனக்கோ...வருஷப் பழக்கமுண்டு; அப்படியிருந்தும் மறுதலிக்கிறேன்.

என் இரட்சகா, இந்த மறுதலிப்பில் சில ஸ்திரீகளை யும் வேலைக்காரிகளையும் பார்க்கிறேன். இவர்களில் சிலர் உம்மைப் பிடிக்கவந்த கூட்டத்தோடு கெத்செமனேக்கு வந்திருக்கிறார்கள். இந்த ஸ்திரீகள் பந்தம் பிடித்து,

அல்லது உம்மைக் கட்டும் கயிறுகளைச் சுமந்துவந்திருக்க லாம்; ஆண்கள் மாத்திரமல்ல பெண்களும் உம்மைப் பாடுபடுத்துகிறதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். ஆண் களால் வரும் அவமானம் போதாதென்று பெண்களைக் கொண்டும் தங்கள் கோரிக்கையை நடத்தியிருக்கிறார்கள். நீர் ஆண்களுக்கு மாத்திரமல்ல பெண்களுக்கும் இரட்சக ரென்று விளங்கும்படி அவர்களால் வந்த பாடுகளின் பாகத்தையும் சகிக்கிறீர்.

பேதுரு குளிர்காய்கிறவர்களோடு உட்கார்ந்து, தன்னை இன்னானென்று வெளிப்படுத்தக்கூடாதென்று பிரயத்தனப்பட்ட விஷயத்தில், தன் மனத்தால் உம்மை மறுதலித்தார். இந்த அந்தரங்க மறுதலிப்பைப் பிற் பாடு ஆணையோடும் சாபத்தோடும் மூன்றுதடவை உறுதிப்படுத்தினார்.

ஆ! பேதுருவே, சில மணிநேரங்களுக்குமுன்னே, நானும்மோடு மரணமடைய வேண்டியதிருந்தாலும் மறுதலிக்கமாட்டேன் என்று சொன்ன உமது வீரியம் எங்கே போயிற்று? உமது இரட்சகரைத் தற்காக்க, கத்தியை வீசின அபிமானம் எங்கேபோயிற்று. உம்மு டைய வைராக்கியமும், தைரியமும் ஒரு வேலைக்காரிக்கு முன் அழிந்துபோயிற்றே! நீர் உம்முடைய சொந்த பலத் தில் சார்ந்திருந்தீர். உமக்குச் சொந்த பெலனில்லை யென்று உணர்த்தும்படி இயேசு முயன்று, சாத்தான் உம்மைப் புடைத்ததையும், தாம் உம்மைத் தற்காத்த தையும் முன் ஒருதரம் சொன்னார். அப்படியிருந்தும் நீர் அதை ஒத்துக்கொள்ளவில்லை. உம்மை அறியாமல் உமக்குக் கிடைத்த சகாயத்தை நீர் மதிக்கவில்லை. ஆகவே நீர் உம்முடைய பலத்தில் நிற்கிறீரென்று, நீரே அறிந்துகொள்ளவும், வெட்கத்தினால் மாத்திரம் நீர் புத்தியடைந்து, உமது பிசகையும் பலவீனத்தையும் கண்டுபிடிப்பீரென்றும் அறிந்து, மறுபடியும் சாத்தான் ஒருதரம் சுமார் இரண்டுமணிநேரம் உம்மைப் புடைக்கும் படி விட்டார். அவனோ முன்போல உம்மை இரகசியத் தில் அல்ல, வெளியரங்கமாக ஒரு கச்சேரியில் வைத்துப்

புடைத்தான். நீரோ பதராக விளங்கினீர். ஆகவே இந்த விழுதலில், இரட்சண்ய தயவின் ஒரு போங்கைக் கவனிக்கிறேன்.

பரி. பேதுருவே, நீர் இந்தக் கூட்டத்துக்குள் போனது இயேசுவின்மேலிருந்த அன்பினால்தான். மற்றப்படி போகமாட்டீர். மல்கூசின் காதை நீர் வெட்டினதால், சீஷரில் முதலாவது ஒளித்துக்கொள்ள வேண்டியவர் நீர்தான். ஐயோ, நமது இரட்சகருக்கு நடக்கும் முடிவை நான் பார்க்கவேண்டுமே என்ற ஆவலினால்தான் போனீர். அந்த நல்ல ஆவலில் சாத்தான் நஞ்சைக் கலந்து, நீர் மறைந்து திரியவும், மறுதலிக்கவும் ஏவிவிட்டான். நீரும் அகப்பட்டுக்கொண்டீர். இப்படி நான் உம்மைப்போல ஒருதரமல்ல பலதரம் விழுந்த பாவி. என் விழுதலில் அநேகம் உம்முடையதுபோலவே இருக்கின்றன.

பரி. பேதுரு இப்படி மறுதலியாமல் காரியத்தை ஒத்துக்கொண்டால் என்ன சம்பவிக்கும்? ஒருவேளை கண்டிப்பான முடிவாக இவரையும் பிடித்து இயேசுவோடு கொலைசெய்ய வேண்டியது வரும் என்று வைத்துக்கொள்ளுவோம். அப்படி முடிந்தாலும், அது இவர் வெளிப்படுத்தின விருப்பம்தானே. "உம்மோடுகூட மரிக்கவேண்டியதிருந்தாலும் மறுதலிக்கமாட்டேன்" என்று இவர் சொன்னாரல்லவா? இப்படிச் சொன்னவர் மறுதலித்தது குற்றந்தான். பேதுரு தாம் சொன்னபடி மறுதலியாமல் அறிக்கையிட்டு, அதினால் மரணத்தை அடைந்தாலும், அதுவும் கிறிஸ்துமார்க்கத்தாருக்கு நல்ல படிப்பினையாயிருக்கும். ஆதலால் அநேகர் கிறிஸ்துவினிமித்தம் இதைவிட இரத்தச்சாட்சிகளாக மரிக்க ஏவப்படுவார்கள் என்று நினைக்கவேண்டியது.

ஜெபம்

இரக்கமுள்ள இயேசுவே, நான் தடுமாறி விழ ஏதுவானவன். நான் இதற்குமுன் எத்தனை தடவை உம்மை மறுதலித்தேன் என்பதை நீர் எனக்கு உணர்த்தியருளும். நான் ஒரு நெரிந்த நாணலும், மங்கி எரிகிற

திரியுமாயிருக்கிறேன். என் பலவீனங்களுக்குத் தக்க தாக உமது பலனைத் தந்து ஆதரித்தருளும். நீரே என்னை வழுவாதபடி காக்கவும், உமது மகிமையுள்ள சந்நிதானத்திலேயே மாசற்றவனாய் நிறுத்தவும் வல்லவராயிருக்கிறீர். என் வல்லமையை நான் நம்பேன். பாவத்தில் விழ நான் வல்லவன்தான். ஆனால் பரிசுத்தம் என்னும் பர்வதமேறவோ என்னில் வல்லமையில்லை. பாதாளத்தில் இறங்க எனக்குப் பெலனுண்டே தவிர பரலோகமேற எனக்குப் பெலனில்லை. என் பலம் போகும் திசையை மாற்றி, உமது வல்லமையால் என்னை இடைகட்டி நான் தடுமாறாமலும், வழுவாமலும் உமது பிரமாணங்களில் நடக்கும்படி உமது பரிசுத்த ஆவியால் என்னை ஆதரித்தருளும். ஆமென்.

14. பேதுரு மனந்திரும்பினது

வேதம்

"கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப் பார்த்தார்: சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை உடனே பேதுரு நினைவுகூர்ந்து, வெளியே போய், மனம்கசந்து அழுதான்" (லூக். 22: 61, 62).

"சேவல் இரண்டுதரம் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று இயேசு தனக்குச் சொன்ன வார்த்தையைப் பேதுரு நினைவு கூர்ந்து மிகவும் அழுதான்" (மாற். 14: 72; மத். 26: 27).

போதனை

பல விஷயங்களுக்காக அழுத குறிப்புகள் வேதத்தில் இருந்தாலும், தன் பாவத்துக்காக அழுத ஒரே ஒரு குறிப்பு மாத்திரம் வேதத்திலுண்டு. அது பேதுருவின் அழுகைதான். தாவீதுராஜன் தேவாலயத்தின்பேரி லுள்ள பக்திவைராக்கியத்தால், தன் ஆத்துமா வாடும்படி உபவாசித்து அழுததிலும் இது மேலானது (சங். 69: 10).

மனுமக்களில் ஒருவரிடத்திலும் விளங்காத இந்த அரிய குணம், பேதுருவினிடத்தில் விளங்கினதற்குக் காரணமென்ன? மறுதலிக்கமாட்டேன் என்று சொல்லியும், மறுதலித்தவரிடத்தில் இந்தக் குணமேது? ஒரு தடவையல்ல மூன்று தடவை சாபத்தோடும் ஆணையோடும் சாதித்தவரிடத்தில் இந்த நல்ல குணமேது? இவருக்கு விழவும் அமிழவும் தெரியுமே தவிர, அழத் தெரியாதே—இந்தக் குணம் அவரிடத்தில் இல்லாவிட்டாலும், அது புதிதாகக் கிடைத்தது.

"கர்த்தர் திரும்பிப் பேதுருவை நோக்கிப் பார்த்தார்"

அந்தப் பார்வையில் மனம் திரும்புகிறதற்கேற்ற அருளும், கிருபையும் சென்றது. அந்த அருள்: பேதுருவின் மறுதலிப்பைப்பற்றி, சில மணிநேரத்துக்குமுன், இயேசு சொன்ன வாசகத்தை நினைப்பூட்டினது; அவர் மனம் கசந்து அழுதார்.

தியானம்

ஆ, என் மீட்பரே, உமக்கென்ன சம்பவித்தாலும், நீர் பாவியை இரட்சிக்கிற வேலையிலிருக்கிறீர். உமக்குத் துரோகம் நினைத்த யூதாசை இரட்சிக்கப் பார்த்தீர்; அவனோ அதை எண்ணவில்லை. அதன்பின் உம்மைப் பிடிக்க வந்தவர்களை இரட்சிக்கப்பார்த்தீர். அவர்கள் உமது இரட்சிப்பைத் தங்கள் காலால் மிதித்தார்கள். இந்தப் பேதுருவோ அதை மதித்தார். நீர் அவரை இரட்சித்தீர். இரட்சிப்பின் விஷயத்தில் உம்மைக் கனம் பண்ணுகிறவர்களை நீரும் கனம் பண்ணுகிறீர்.

என் கர்த்தரே, பேதுருவை இரட்சிக்கும்படி நீர் திரும்பினீர். உமது சமுகம், சங்கத்திராரின் முகத்தை மறந்து, பேதுருவின் முகத்தைத் தேடினது. இதோ ஒரு பேதுரு நிற்கிறேன்; என் முகமாகத் தயவோடு திருப்புகிறீர். ஆ, உமது முகத்தின் நிந்தைகள் அனைத்தையும் என் கண்கள் காண்கின்றன. முகத்தில் உமிழ் நீர்—கன்னத்தில் அறைகள்—தலையில் குட்டுகள்—முதுகில் அடிகள்—காதில் அவதூறு—மனதில் வியாகுலம்—எல்லாம் காண்கிறேன். இந்தச் சாயலை உமது மறுரூப

சாயலோடு ஒத்துப்பார்த்து மனம் தடுமாறுகிறது—மனம் கலங்குகிறது—மனம் சோர்படைகிறது—என் நேச மீட்பரே! நீர் என் முகமாய்த் திரும்புகிறது மாத்திரமோ,

என்னைப் பார்க்கிறீர்!

பாவத்தைப் பாராத சுத்தக்கண்ணனே, பாவியாகிய என்னைப் பார்க்கிறீர். தேவனே நீர் இப்படிப் பார்க்கிற பாவி பிழைக்கவே பிழைப்பேன். உமது பார்வை என் தாயின் பார்வை போலிருக்கிறது—உமது பார்வை குஷ்டரோகியையும், பெரும்பாடுள்ள ஸ்திரீயையும் பார்த்த பார்வைபோலிருக்கிறது. ஆ, உமது பார்வை கடலில் ஆழ்ந்த பேதுருவைப் பார்த்த பார்வை மாதிரியிருக்கிறது. இதே பார்வையாக இன்னும் சற்றுநேரம் பாருமையா!!—ஆ! உமது பார்வையில் கூர்மை இருக்கிறது—பலமிருக்கிறது—உயிர் இருக்கிறது—அருள் இருக்கிறது.

என்னை நோக்கிப் பார்க்கிறீர்!

உமிழ் நீரால் மூடப்பட்ட உமது இமைகளை நிமிர்த்திப் பார்க்கிறீர்! கட்டுகளால் காயப்பட்டு வீங்கிப்போனதும், கலங்கிப்போனதுமான உமது கண்ணால் என்னை நன்றாகப் பார்க்கும்படி, நோக்கிப் பார்க்கிறீர். அடிபட்ட உமது கன்னங்கள் வீங்கி உமது காட்சியை மறைப்பதால் நீர் என்னைத் தெளிவாய்ப் பார்க்க, நோக்கிப் பார்க்கிறீர். நீர் என்னை நோக்கிப் பார்க்க பார்க்க என் இருள் மாறுகிறது—என் சாதனை குறைகிறது—என் நன்றிகேடு விளங்குகிறது—என் மறுதலிப்பும் என் பாவங்களும் என்னைக் குத்துகிறது—என் இருதயம் மெழுகுபோல் உருகுகிறது—என் கண்ணீர்த்துருத்தி வெடிக்கிறது!!

நான் அழுகிறேன்—இன்னும் அழுவேனாக!
நான் அழுகிறேன்—இன்னும் அழுவேனாக!
நான் அழுகிறேன்—இன்னும் அழுவேனாக!

ஆ, இம்மட்டும் அநேகநாள் நான் அழுததுண்டு; அந்த அழுகைகள் துக்கத்தைக் கொடுத்தது; இதுவோ சந்தோஷத்தைக் கொடுக்கிறது—அது உவர்ப்பாயிருந்

தது—இதுவோ தேனுயிருக்கிறது. பாவத்துக்காக நான் சிந்தும் கண்ணீராகிய உப்புத் தண்ணீர் என் உதட்டில் விழுகிறதற்குள், என் மீட்பர் பாவமன்னிப்பாகிய தேனையும் அதோடு கலந்துவிடுகிறதால், அது என் வாய்க்கு அமிர்தம்போலும், மனதுக்கு மன்னுப்போலுமிருக்கிறது. இதை வாசிக்கிற சிநேகிதனே, இந்த அமிர்தபானத்தை நீ உன் ஜீவகாலத்தில் ஒரு தடவையாவது ருசித்த துண்டா!! இல்லையானுல் இன்றே ருசித்துப்பார் அப்பா, ருசித்துப்பார்!

ஆ! என் உடன்பாவியே, உன் பாவத்துக்காக அழுகிறதில் லாபமுண்டென்பதை நினைத்துக்கொள்வாயாக. பரலோகத்தில் அதிக ஆறுதலை அனுபவிக்கிறவர்கள் யார் என்று நான் ஒரு தூதனைக் கேட்டால், இவ்வுலகத்தில் பாவத்துக்காக அழுதவர்கள் என்பான். ஏனெனில் பாக்கியவான்கள் வரிசையில், துயரப்படுகிறவர்கள் இரண்டாவது வருகிறுர்கள். "துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்" என்று இயேசு சொன்னுர் (மத். 5: 4). அழுகிறதில் லாபமுண்டு என்று மறுபடியும் சொல்லுகிறேன். ஆகாரின் அழுகை நீரூற்றைக் காட்டிற்று; மோசேயின் அழுகை அவன் மீட்புக்கு வழியாயிற்று. நானும் என் பாவத்துக்காக அழுது, ஜீவதண்ணீரின் ஊற்றையும், என் இரட்சிப்பின் வாழ்வையும் கண்டடைவேனுக.

பிலேயாமை உணர்த்தும்படி அவன் கழுதையைத் திட்டம் செய்தவர், பேதுருவை உணர்த்தும்படி ஒரு சேவலைத் திட்டம் செய்தார். என் இயேசுவே, எனக்குப் போதிக்கும்படி நீர் திட்டம் செய்கிற போதகன் யார்? என் வீட்டு மாடா? அல்லது ஆடா? அல்லது கோழியா? தேவனுடைய ஆவியை அசட்டை பண்ணுகிறவர்களை வெட்கப்படுத்தும்படி, தாழ்ந்தஜெந்துக்களை அவர்களுக்கு மேலாக உயர்த்துகிறீர். இரட்சகா! எதை அல்லது யாரை எனக்கு உணர்த்தும் உபாத்தியாக வைத்தாலும் சரி, நான் பேதுருவைப்போல கண்ணீரோடு மனந்திரும்பி, உமது இரட்சண்ய வழியில் நடக்கும்படி, என்னை

நோக்கிப் பார்ப்பீராக. வேலைக்காரி பேதுருவை உற்றுப் பார்த்தாள். அவன் மனம் கடினப்பட்டது. தேவரீர் உற்று நோக்கிப் பார்த்தீர், அவன் மனம் இளகினது. மனுஷரின் போதனைகளால் என் இருதயம் மாறாது. தேவரீர் உமது கண்ணால் நோக்கிப்பார்த்தால் மாத்திரம் என் சாவு நீங்கும், என் ஜீவன் தொடங்கும்.

நோக்கிப்பார்த்தேன் பாவியே!
நோக்கிப்பார்க்கிறேன் பாவியே!
நோக்கிப்பார்ப்பேன் பாவியே!
நோக்கிப்பார் நீயும் பாவியே!

ஜெபம்

பாவியின் மரணத்தை விரும்பாமல் அவன் மனம் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிற இரக்கமுள்ள பிதாவே, தேவரீர் ஒவ்வொரு பாவியையும் உமது குமாரனைக்கொண்டு மீட்டுக்கொள்ளுகிறீர். பேதுருவின் நன்றிகேட்டையும் துரோகத்தையும் மறந்து, அவனுக்கு உமது இரட்சண்யத்தின் கடாட்சத்தைக் காட்டி, அவனை மனந்திரும்பச் செய்தீர். அடியான்மேலும் கிருபையாயிருந்து என்மேல் உமது தயவைக் காண்பித்தருளும். நான் உம்மையும் உமது குமாரனையும் விசுவாசத்தால் கண்ணோக்கி, உமது தயவைச் சம்பாதித்துக்கொள்ளும் படி, தேவரீர் என்னை நோக்கிப் பார்த்தருளும். நான் மாத்திரமல்ல, உம்மை விட்டு விலகின எல்லா ஆத்துமாக்களும், இப்படி உம்மால் பாவமன்னிப்பையும், மனம் திரும்புதலையும் கண்டுபிடிக்கும்படி, உமது குமாரன் நிமித்தம் அனுக்கிரகித்தருளும். ஆமென்.

15. பிலாத்துவின் முதலாம் விசாரணை

வேதம்

“அவர்கள் காய்பாவினிடத்திலிருந்து இயேசுவைத் தேசாதிபதியின் அரண்மனைக்குக் கொண்டுபோனார்கள்; அப்பொழுது விடியற்காலமாயிருந்தது. தீட்டுப்படாமல் பஸ்காவைப் புசிக்கத்தக்கதாக, அவர்கள் தேசாதிபதியின் அரண்மனைக்குள் பிரவேசியாதிருந்தார்கள். ஆதலால்

பிலாத்து அவர்களிடத்தில் வெளியே வந்து: இந்த மனுஷன்மேல் என்ன குற்றம் சாட்டுகிறீர்கள் என்றான். அவர்கள் அவனுக்குப் பிரதியுத்தாரமாக: இவன் குற்றவாளியாக இராவிட்டால் இவனை உம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கமாட்டோம் என்றார்கள். அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி: இவனை நீங்களே கொண்டுபோய், உங்கள் நியாயப்பிரமாணத்தின்படி நியாயம் தீருங்கள் என்றான். அதற்கு யூதர்கள்: ஒருவனையும் மரணாக்கினை செய்ய எங்களுக்கு அதிகாரமில்லை என்றார்கள்.''

மேலும் அவர்கள் அவனை நோக்கி, "இவன் தன்னைக் கிறிஸ்து என்னப்பட்ட ராஜாவென்றும், இராயருக்கு வரி கொடுக்கவேண்டுவதில்லை என்றும் சொல்லி, ஜனங்களைக் கலகப்படுத்தக் கண்டோம் என்று அவர்மேல் குற்றம்சாட்டத் தொடங்கினார்கள். அப்பொழுது பிலாத்து மறுபடியும் அரண்மனைக்குள் பிரவேசித்து, இயேசுவை அழைத்து: நீ யூதருடைய ராஜாவா என்று கேட்டான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நீராய் இப்படிச் சொல்லுகிறீரோ? அல்லது மற்றவர்கள் உம்மைக் குறித்து இப்படிச் சொன்னார்களோ என்றார். பிலாத்து பிரதியுத்தரமாக: நான் யூதனா? உன் ஜனங்களும் பிரதான ஆசாரியரும் உன்னை என்னிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள், நீ என்னசெய்தாய் என்றான். இயேசு பிரதியுத்தரமாக: என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல; என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால், நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார். அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி: அப்படியானால் நீ ராஜாவோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான். சத்தியத்தைக்குறித்துச் சாட்சி கொடுக்க நான் பிறந்தேன்; இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார். அதற்குப் பிலாத்து: சத்தியமாவது என்ன என்றான். மறுபடியும் அவன் யூதர்களிடத்தில் வெளியேவந்து: "நான் அவனிடத்தில் ஒரு குற்றமும்

காணேன்" என்ருன் (மத். 27: 11–14; மாற். 15: 2–5; லூக். 23: 2–5; யோவா. 18: 28–38).

போதனை

யூதேயாவில் ரோம அரசாட்சி ஏற்பட்டதுமுதல், செசரியா ரோம அதிபதியின் அதிகார ஸ்தானமாயிருந்தது. இந்த அதிபதி, பஸ்கா காலத்தில் அமளியுண்டானல் அடக்கும்படி எருசலேமுக்கு வருகிறதுண்டு. இக்காலத்தில், யூதசங்கத்தார் சில அற்பமான வியாச்சியங்களை முடிவுசெய்யும்படி அதிகாரமுள்ளவர்களாயிருந்தாலும், மரணாக்கினை செய்யும் அதிகாரமுடையவர்களாயிருக்கவில்லை. இயேசுவுக்கு, ரோமமுறைமைக்குரிய சிலுவை மரணத்தை அவர்கள் குறித்திருந்ததால், அதற்கிசைவாகசகல நடபடிக்கைகளையும் நடத்தினர்கள்.

அன்று பஸ்கா கொண்டாடும் நாளாயிருந்தது; இயேசுவின் விஷயம் அன்று முடியாதபட்சத்தில், ஒருவேளை இவர்கள் அனைவரும், தங்கள் கைதியோடு செசரியாவுக்குப் போக நேரிடும். அல்லது அடுத்த பஸ்காவரையும் காத்திருக்கவேண்டியது. ஏனெனில், பிலாத்து பஸ்கா முடிந்தவுடனே தன் இராஜதானிக்குப் போய்விடுவான். ஆகவே, அன்று மத்தியானத்துக்குள் இயேசுவை கழுமரத்திலேற்றி, அவருக்குமுடிவுண்டாக்கி, சந்தோஷத்தோடு தங்கள் பஸ்காவைக் கொண்டாட நோக்கமாய், பொழுதுவிடிகிற சமயத்தில், ஆசாரியர் சங்கத்தார் அனைவரும் தங்கள் கைதியோடு பிலாத்துவின் அரண்மனை சேர்ந்தார்கள். இந்த மகாநாளில் ஒரு அஞ்ஞானியின் அரண்மனைக்குள் போனல் தீட்டாகும் என்று அவர்கள் எண்ணி வெளியே நின்ருர்கள்.

பிலாத்து வெளியேவந்து, இவன்பேரில் நீங்கள் என்ன குற்றஞ் சாட்டுகிறீர்கள் என்று கேட்டான். இப்படிக் கேட்டது தங்களுக்கு அவமானம்போல எண்ணி, இவன் குற்றவாளியாக இராவிட்டால் இவனைக் கொண்டுவரமாட்டோம் என்ருர்கள். என்ருலும் குற்றஞ்சாட்டி அது ருசுப்படாத பட்சத்தில், தான் ஒன்றும் செய்யக் கூடாதென்று பிலாத்து தீர்மானமாகச் சொன்னதால்,

இயேசுவின்பேரில் மூன்று குற்றங்களைச் சொன்னார்கள். அக்குற்றங்களாவன:—

1. தன்னைக் கிறிஸ்து என்னப்பட்ட ராஜா என்கிறான்.
2. இராயருக்கு வரிகொடுக்க வேண்டாமென்கிறான்.
3. ஜனங்களைக் கலகப்படுத்துகிறான்

என்பவைகளே. இந்த மூன்றும் ராஜதுரோகம் என்னும் ஒரே குற்றந்தான். காய்பாமுன் இயேசுவைத்தேவதுரோகி என்று குற்றம் சாட்டின இவர்கள், பிலாத்துவினிடம் ராஜதுரோகி என்று குற்றஞ்சாட்டுகிறார்கள்.

இதில், முதலாம் குற்றத்தைப்பற்றி பிலாத்து இயேசுவைக் கேட்டான். அது ருசுப்பட்டால் மற்ற இரண்டும் ருசுப்பட்டதுபோல்தான் என்று பிலாத்து நினைத்தானுக்கும். இயேசுவோ, தாம் யூதர் எதிர்பார்த்த கிறிஸ்து என்னப்பட்ட ராஜாதான் 'என்று ஒத்துக்கொண்டு, தம்முடைய ராஜ்யத்தின் போக்கை விளக்கிக்காட்டினார்; தாம் சண்டைசெய்கிற ராஜாவாயிராமல் சத்தியத்தைச் சாட்சியிடும் ராஜா என்று சொன்னார். அந்தச் சத்தியத்தை அறியும்படி அவன் கவலைப்படாமல் சத்தியமாவதென்ன? என்று மாத்திரம் ஒரு ஜாடையாகக் கேட்டு அதை அம்மட்டில் விட்டுவிட்டான். எப்படியும் இயேசுவின் வாக்குமூலத்தால் அவர் குற்றவாளியல்ல என்று பிலாத்து திட்டமாக அறிந்துகொண்டு யூதர்களிடத்தில் வெளியேவந்து,

நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்

என்று அறிக்கையிட்டான். இது பிலாத்துவின் முதலாம் அறிக்கையாயிருக்கிறது.

தியானம்

பிலாத்து சுமார் ஆறுவருஷமாக யூதேயாவை ஆண்டு, அநேக துஷ்டரை விசாரணை செய்திருக்கிறான். தனக்கு முன்வந்த ஒரு கைதியைக் கண்டவுடனே, இவன் கள்ளன் அல்லது வெள்ளன் என்பதை ஒருவாறு கிரகித்துக் கொள்ளக்கூடும். இன்றையத்தினம் அதிகாலையில் அவன் கச்சேரி முன் கொண்டுவரப்பட்ட கைதியின் முகரூபமும், மற்றும் ஜாடையும், அவர் ஒரு பொல்லாப்புக்கும்

போகத்தக்கவரல்லவென்ற எண்ணத்தை முதலாவது இவன் மனத்தில் உண்டாக்கியிருக்கலாம்.

பிலாத்து இயேசுவின் வாதிகளைப் பார்த்து: "இந்த மனுஷன் மேல் என்ன குற்றம் சாட்டுகிறீர்கள்" என்று கேட்டான். அவன் கேட்ட ஜாடையிலேயும், அவன் முகச்சாயலிலேயும், இவ்வளவு சாந்தமுள்ள மனுஷன் மேலே இவ்வளவு—பொறுமையும் பேதமையுமுள்ள மனுஷன்மேலே என்ன குற்றம் சாட்டுகிறீர்கள்?—இந்த மனுஷன் களவுகன்னத்துக்குப் போகத்தக்கவனா? கோபம் கொலை செய்யத்தக்கவனா? வம்பு, வாது பண்ணக்கூடியவனா? புண்ணிய புருஷாத்துமாவாக விளங்குகிறதே. இவனுடைய சாத்மீக மென்ன? குளிர்ந்த பார்வை என்ன? ஆ, முக அழகென்ன? இராஜகுலத்தைச் சேர்ந்த ஒரு வாலிபன்போலத் தோன்றுகிறதே! இப்படிப்பட்ட

இந்த மனுஷன்மேல் என்ன குற்றம் சாட்டுகிறீர்கள்?

என்று கேட்கிறதாக இருந்தது. ஆம், என் மீட்பரை பார்க்கிற எவனுக்கும் இப்படி உயர்ந்த எண்ணம் உண்டாகவேண்டியது நியாயந்தான். அவர் அப்படிப்பட்டவர்தான். அவருடைய பரிசுத்தமும் குற்றமில்லாமையும் அவருடைய முகத்திலே காணப்படுகின்றன!

இயேசுவின் சத்துருக்கள் பிலாத்துவின் கேள்வியைக் கேட்டவுடனே மலைகிறார்கள்! அவர்கள் ஒருவரையொருவர் பார்த்து, இந்தக் கேள்வி வருமென்று நான் எண்ணவில்லை. நம்முடைய மாணைக்கினைச் சீட்டை வாங்கிக் கையெழுத்துப்போட்டு, உங்களிஷ்டம் என்று சொல்வாரென்று நாம் எண்ணியிருக்க, இந்தக் கேள்வி வந்ததே என்று மலைகிறார்கள். ஓய் மூப்பரே, பிரதான ஆசாரியரே மலையாதேயுங்கள். உங்கள் காரியம் வாய்க்குமுன் என் இயேசுவின் குற்றமில்லாமையும், உங்களுடைய பொறாமையும் இவ்வுலகத்துக்கு திருஷ்டாந்தப்பட வேண்டியதிருக்கிறது. ஆதலால் பிலாத்துவின் கேள்விக்கு உத்தரவு சொல்லுங்கள்!

என்ன குற்றம் சொல்ல என்கிறீர்களோ? காய்பாவின் வீட்டில் சாட்டின குற்றங்களைப் பிலாத்துவிடம்

சொல்லுங்களேன்? தன்னைத் தேவனுடைய குமாரன் என்றான்; எங்கள் ஆலயத்தை இடித்து மூன்று நாளைக்குள் கட்டுவேன் என்றான். ஆகையால் மரணாக்கினை விதித்தோம் என்று சொல்லுங்களேன்? ஏன் ஆந்தைபோல் விழிக்கிறீர்கள்? அதை இங்கே சொன்னால், மூடப்பயல்களே, ஓடிப்போங்கள்; நீங்களோ, உங்கள் தீர்ப்போ, இதற்கெல்லாம் மரணாக்கினையா? ஓடிப்போங்கள் கைதிக்கு விடுதலை என்பானே: கண்ணியில் அகப்பட்டது கத்திக்குத் தப்பினது என்றாகுமே. பின்னைத் திறந்து சொல்லுங்களேன்? உங்கள் பொறாமை விளங்கட்டுமேன்?

பொறாமைமாத்திரம் தெரியுமானால் காரியம் போச்சுது; அதை மறைத்து எங்கள் அந்தஸ்தை வைத்துக் கேட்போமாக. இவன் குற்றவாளியாக இராவிட்டால், இதோ ஆசாரியர், வேதபாரகர், சங்கத்தார் ஆகிய இத்தனை பெரிய மனுஷாட்கள், இவனை—இந்த அற்பனை உம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கமாட்டோம். எங்களுடைய அந்தஸ்தையும், கவுரதையையும் கவனித்து, கைதியை மரணாக்கினை செய்யத் தீர்மானித்த எங்கள் தீர்ப்பை உறுதிப்படுத்தவேண்டியது என்கிறார்கள்.

இப்படி அநேக மிரட்டுகளையும் உருட்டுகளையும் பிலாத்து அறிந்தவனாயிருந்தான். யூதமிரட்டு ரோமைக்குச் செல்லாது. அந்தக் காலம் மாறிப்போயிற்று. இந்த நியாயம் செல்லாது என்று காட்டும்படி பிலாத்து சொல்வான்:—"இவனை நீங்களே கொண்டுபோய், உங்கள் நியாயப்பிரமாணத்தின்படி நியாயம் தீருங்கள்;" நான் இதில் சம்பந்தப்படுகிறது நிஜமானால், குற்றஞ் சாட்டப்படவேண்டும், குற்றம் விசாரிக்கப்படவேண்டும், அதன் பின்புதான் தீர்ப்புப் பிறக்கும். உங்கள் முகத்தையும் கூட்டத்தையும், ஆரவாரத்தையும், தீர்ப்பையும் மாத்திரம் பார்த்து நான் மரணாக்கினைத் தீர்ப்புக்கூறக்கூடாது; உங்களைவிட நான் இதோ இந்த ஏழைக் கைதியை நோக்கவேண்டியவனாயிருக்கிறேன்.

இந்த மனுஷன்மேல் என்ன குற்றம் சாட்டுகிறீர்கள்?

பிலாத்துவே, நல்ல பிடிதான். நீ கேட்கவேண்டிய கேள்விதான். இதே நியாயத்தைக் கடைசிமட்டும் செலுத்துவாயா? பார்ப்போம். உன்னதமானவருடைய தீர்மானம் நிறைவேறவும், பாவியாகிய என் இரட்சண்யம் நிறைவேறவுமாக நீ கடைசியில் உன் நீதியிலிருந்து விலகுவாய்; அதைப் பின்னாலே பார்ப்பேன்.

இனிக் குற்றம் சொல்லாமல் தீராதென்று சத்துருக்கள் எண்ணி இயேசுவின் பேரில் மூன்று குற்றங்களைச் சாட்டுகிறார்கள். இம்மூன்றும் கூடி இயேசு இராஜ துரோகி என்பதை உணர்த்தினது.

1. தன்னைக் கிறிஸ்து என்னப்பட்ட இராஜா என்கிறான்.

2. இராயருக்கு வரிகொடுக்க வேண்டுவதில்லை என்கிறான்.

3. குடிகளைக் கலகப்படுத்துகிறான்

என்பதே அந்த மூன்று குற்றங்கள். பிந்தின இரண்டு குற்றங்களும் முதலாம் குற்றத்தில் தொங்கி நிற்கின்றன.

முதலாம் குற்றத்தைச் சற்றே கவனிப்போம்: இது யூதர் மனதுக்குப் பெரிய குற்றம்போலத் தோன்றினாலும் ரோமன் மனதுக்கு அற்பமான குற்றமாகத் தோன்றினது. இந்த வித்தியாசத்துக்குக் காரணர் யூதர்தான். இவர்கள் இந்தக் குற்றத்தில் "கிறிஸ்து" என்ற ஒரு வார்த்தையை ஒழித்து, "இவன் தன்னை இராஜா என்கிறான்" என்று குற்றஞ் சாட்டியிருந்தால், பிலாத்து அதை ஒரு பொருட்டாக எண்ண இடமிருக்கிறது. "கிறிஸ்து" என்ற முன்பதம் "இராஜா" என்ற பின்பதத்தின் கூரை மழுக்கிப்போட்டது. இயேசுவே, உமது சத்துருக்களின் பிரயத்தனம் பழைய பிலேயாமின் போங்காயிருக்கிறது. எப்படியெனில் பணத்துக்காக இஸ்ரவேலரைச் சபிக்க அவனுக்கு ஆசைதான். ஆனால் தேவ அருளைத் தடுத்துச் சாபமான தீர்க்கதரிசனம் சொல்ல வாய்வரவுமில்லை. ஆகவே சபிக்க வாய்திறந்தபோது ஆசீர்வாதங்கள் புறப்

பட்டன. இந்தப் பகைஞரும் உம்மைக் குற்றஞ்சாட்ட வாய்திறந்தபோது, நீர் அவர்கள் பாஷைகளைத் தாறுமாறாக்கி, "கிறிஸ்து" என்ற பதத்தைச் சேர்த்துவிட்டீர்!! "கிறிஸ்து என்னப்பட்ட இராஜா என்கிறான்" என்று சொன்னவுடனே, பிலாத்து கலங்கவில்லை. ஏனெனில் இப்படித் தங்களைக் கிறிஸ்து அல்லது மேசியா என்று சொல்லிவந்தவர்களுடைய பிரயத்தனங்களும், அவர்கள் முடிவும் அவனுக்குத் தெரியும்; அவர்கள் அடங்கி விட்டார்கள். மேலும் இப்படிப்பட்ட பிரியாது, ரோமைச் சேவகரால் வருமானால் அது உண்மையாயிருக்கும். இதுவோ யூதரிடத்திலிருந்து வருகிறது. இப்படி யூதர் கூடி, தன்னை மேசியா என்று சொல்லிக்கொண்ட எந்த யூதனையாவது கைதியாகக் கொண்டுவந்திருப்பதில்லை. அப்படிப்பட்டவர்களோடு யூதர் சேர்ந்துகொண்டு கலகம் செய்ததுண்டு. இதுவன்றி, இராயருடைய வரிகளுக்கு அக்காலத்தில் தடையுண்டானதாயும், குடிகளுக்குள் கலகம் உண்டாகத்தக்க முயற்சிகள் நடந்தேறுவதாயும் தன் ஆட்களால் யாதொரு ஆவலாதியும் வந்ததில்லை. இவையனைத்தையும் பிலாத்து தன் மனதில் நிதானித்து, எப்படியும் இதின் வரலாற்றை அறிவதில் தோஷமில்லை என்றெண்ணி, இயேசுவை நோக்கி;

"நீ யூதருடைய இராஜாவா?"

என்று கேட்டான். அதாவது யூதர்கள் எதிர்பார்க்கிற மேசியா நீதானா? என்பதுதான். இயேசு, நீ சொல்லுகிறபடி நான் யூதருடைய இராஜாதான் என்று ஒத்துக் கொண்டதோடு, தமது இராஜரீகத்தின் போக்கையும் சொன்னார்.

ஓ பிரதான ஆசாரியரே, மூப்பரே, சங்கத்தாரே, யூதஜாதியே, நீங்கள் இந்தப் பரமபுருஷனை உங்கள் கிறிஸ்துவாகிய இராஜா என்று ஏற்றுக்கொண்டால்தானென்ன? இந்த அற்புத நாதனைவிடப் பிரயோசனமான கிறிஸ்து உண்டோ?—இவரை நீங்கள் ஏற்றுக்கொண்டால் உங்கள் தேசத்தில் குஷ்டரோகி இரான்—குருடன் இரான்—செவிடன் இரான்—கூனன் இரான் அல்லவா?

இவர் இருக்கும் தேசத்தில் பேய்கள் நடுநடுங்கி, சாத்
தான்கள் சமுத்திரத்தில் சாய்ந்து மாளுமல்லோ.—இவர்
இருக்கும் நாட்டில் பசி இராதே.—இவர் உங்களெல்லாரை
யும் உட்காரவைத்து நல்ல விருந்தளிக்கக்கூடுமே.—இவர்
இருந்தால் உங்கள் நாட்டில் கலியாண மகிழ்ச்சியேயன்றி
சாவுப்புலம்பல் கேட்கப்படமாட்டாதே.—இவர் செத்த
வர்களையும் எழுப்பினாரே.—இவரை அங்கீகரியாமல் ஏன்
குற்றம் சாட்டுகிறீர்கள்? நீங்கள் எல்லோரும் கூடி, இவர்
தம்மைக் கிறிஸ்துவாகிய இராஜாவென்று சொன்னதற்
காகப் பிரியாதுசெய்து குற்றப்படுத்துங்கள்; நானோ
இவரே என் இராஜாவென்று பிலாத்துவின் முன் பிரசித்
தப்படுத்துகிறேன்.

ஆ என் நேச இயேசுவே, நீர் எனக்கு இராஜாவாய்
இரும்! எனக்கு உமது சத்தியத்தைப் போதித்து,
அந்தச் சத்தியத்தால் என்னைப் பரிசுத்தப்படுத்தும்.
யூதருடைய இராஜாவாகிய உம்மை யூதர் குற்றம் சாட்டு
கிறார்கள். இயேசுவே நீர் புறஜாதியாரின் ராஜாவாக
இரும். ஆ, என் இராஜாவாய் இரும். என் இரட்சண்ய
இராஜாவாயிருந்து............நான் உன்னை மீட்டுக்கொண்
டேன் என்று சொல்லும்.

இயேசு தம்மை இராஜாவென்று அறிக்கையிட்டு
தமது இராஜ்யபாரத்தின் போங்கைச் சொல்லவே,
பிலாத்து அசந்துபோனான். அந்த இராஜ்யம் தன்
இராஜ்யத்தின் சுற்று மதில்போலிருக்கிறதென்று உணர்ந்
தான். தன் குடிகள் அனைவரும் சத்தியத்தை அறிந்து
சத்தியத்தின்படியே நடக்கிறதுண்டானால், கட்சிகள்,
கலகங்கள், களவுகள், கொலைகள் ஒன்றுமிராது. இராஜ்யம்
சமாதானமாயிருக்கும் என்று உணர்ந்துகொண்டான்.
ஆகவே, சத்தியமாவதென்ன? என்று கேட்டான்; இதற்
குள்ளாக, ஏதோ ஒரு எண்ணம் அவன் மனதில் வந்தது.
நாம் இயேசுவோடு சகஜமாய்ப் பேசிக்கொண்டிருந்தால்
ஜனங்கள் சமுசயம் நினைப்பார்கள் என்று பயந்தோ,
அல்லது ஒரு கைதியினிடத்தில் நமக்கென்ன பேச்சு
என்று இகழ்ந்தோ, அல்லது நம்முடைய தீர்ப்பைச்

சொல்லிவிட்டால் கைதிக்கு ஒரு ஆறுதலும், வாதிக ளுக்கு ஒரு முடிவுமாகிவிடும்; அப்பால் சாதாரணமாகப் பேசிக்கொண்டிருக்கலாம் என்றெண்ணியோ, அல்லது இப்படி வைதீகத்திற்கு நாமேன் போகிறோம் என்றெண் ணியோ, திடீரென்று எழுந்து வெளியே வந்து,

"நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்"

என்று அறிக்கையிட்டான். இது இயேசுவின் குற்ற மில்லாமையைப்பற்றிய இரண்டாம் அறிக்கையாயிருக் கிறது.

என் நேச இயேசுவே, நீர் குற்றமற்றவர் என்பது ஒரு விசாரணையால் விளங்கவேண்டுமா? நீர் உமது குற்ற மில்லாமையை ருசுப்படுத்துகிறவராக விசாரணையில் நில்லாமல், என் குற்றத்தைச் சுமந்தவராக நிற்கிறீர். பிலாத்து உம்மிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்று சொன்ன நேரத்தில், உமது பிதாவாகிய தேவன் சர்வ லோகத்தின் குற்றத்தையும், விசேஷமாக என் குற்றங் களையும் உமதுமேல் கண்டார். பிலாத்து "ஒரு குற்ற மும் காணேன்" என்று சொன்ன நேரத்தில், நீர் என்னைக் கைகாட்டி .... இந்தப் பிலாத்து இன்னும் என்னைச் சரியாகப் பார்க்கவில்லை. யூதர் சொல்லும் குற்றம் குற்ற மல்லவென்பது நிஜமானாலும், உன் குற்றங்களும், உலகத் தின் குற்றங்களும் என்மேலிருக்கிறதைப் பிலாத்து காணாமல் இப்படிச் சொல்லுகிறான் என்று மெதுவாகச் சொல்லுகிறீர்.

பிலாத்து' சத்தியமென்ன என்று கேட்டு, அம்மட் டில் நிறுத்திவிட்டான். இப்படி நான் அடிக்கடிச் செய்த துண்டு. பிலாத்து எந்த முகாந்தரத்தால் அந்தப் பேச்சை நிறுத்திவிட்டானோ தெரியவில்லை. ஆனால் நானோ சத்தியத்துக்குச் செவிகொடுக்கக்கூடாதென்று நினைத்து இப்படி அசட்டை செய்கிறேன். இனி நான் சத்தியத்துக்குச் சாய்ந்து அதின் வழிகளில் நடக்கும் படி உமது சத்தியத்தால் என்னைப் பரிசுத்தம் பண்ணி யருளும்.

ஜெபம்

இரக்கமுள்ள பிதாவே, தேவரீர் உமது திருக் குமாரனைப் பிலாத்துவின்முன் கைதியாக நிறுத்தினீர். அவன் அவருடைய குற்றமில்லாமையை லோகநீதியின் படி அறிக்கையிட்டாலும், உமது அநாதி தீர்மானத் துக்கு அது பொருந்தாதபடியால், அந்த வழக்கைப் பின்னும் நடத்தினீர். என் பாவங்களுக்கு மீட்புண் டாகும்படி நான் என்னென்ன மாதிரியான விசாரணை களைக் கடக்கவேண்டுமோ அவைகளையெல்லாம் உமது குமாரனும் கடந்துபோகவேண்டும் என்று சித்தம் கொண்டீர். இவ்வளவாக என்னை நேசித்த உமது அன்புக் குப் புகழ்ச்சியுண்டாக, தேவரீர் என் பாவங்களை மன் னித்து, பரம பாக்கியத்திலும் ஒருபங்கு தரும்படி உமது குமாரன் நிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

16. இயேசு ஏரோதுவிடம் அனுப்பப்பட்டது

வேதம்

"அதற்கு அவர்கள்: இவன் கலிலேயா நாடுதொடங்கி இவ்விடம்வரைக்கும் யூதேயாதேசமெங்கும் உபதேசம் பண்ணி, ஜனங்களைக் கலகப்படுத்துகிறான் என்று வைராக் கியத்தோடே சொன்னார்கள். கலிலேயா என்பதைப் பிலாத்து கேட்டபொழுது, இந்த மனுஷன் கலிலேயனா என்று விசாரித்து, அவர் ஏரோதின் அதிகாரத்துக்குள் ளானவர் என்றறிந்து, அந்நாட்களில் எருசலேமிலே வந்திருந்த ஏரோதுவினிடத்திற்கு அவரை அனுப் பினான். ஏரோது இயேசுவைக்குறித்து அநேக காரியங் களைக் கேள்விப்பட்டிருந்தபடியினாலும், அவரால் செய்யப் படும் அடையாளத்தைப் பார்க்கவேண்டுமென்று விரும்பி யிருந்தபடியினாலும், அவரைக் காணும்படி வெகுநாளாய் ஆசைகொண்டிருந்தான். அந்தப்படி அவரைக் கண்ட போது, மிகவும் சந்தோஷப்பட்டு, அநேக காரியங்களைக் குறித்து அவரிடத்தில் வினாவினான். அவர் மறுமொழி யாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை (லூக். 23: 5–9).

போதனை

இயேசுவின்பேரில் குற்றமில்லை என்று பிலாத்து கூறினவுடனே சங்கத்தாரும் யூதரும் கலக்கமடைந்தார்கள். என்றாலும் அவர்கள் தங்கள் தைரியத்தை விடாமல் பிலாத்துவின் தீர்ப்பை விரோதித்து, இவன் கலிலேயா நாடு துடங்கி இதுவரையும், இத்தேசமெங்கும் உபதேசம்பண்ணி ஜனங்களைக் கலகத்துக்கு மூட்டிவிடுகிறதாயிருக்க, நீர் குற்றமில்லை என்று எப்படிச் சொல்லுவீர் என்று வைராக்கியத்தோடே பிலாத்துவின் தீர்ப்பை மறுத்தார்கள். பிலாத்து, இந்தச் சங்கதியை நம்மை விட்டு எப்படிக் கழித்துவிடலாமென்றிருக்கையில் "கலிலேயா நாடுதொடங்கி" என்ற வாசகத்தைப் பிடித்துக்கொண்டு, இவர் கலிலேயனாவென்று விசாரித்தான். ஆம், இவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்தூரான் என்று பலர் சொன்னார்களாக்கும். உடனே அவன், இவர் என்னுடைய ஆளுகைக்குள் அல்ல, ஏரோதுவின் விசாரணைக்குட்பட்டவர்; அவரிடத்தில் இவரைக் கூட்டிக்கொண்டு போங்கள் என்று அனுப்பிவிட்டான்.

இந்த ஏரோது இயேசுவைப் பார்க்கவும், அவரால் செய்யப்படும் அடையாளங்களைப் பார்க்கவும் தீராத ஆசைகொண்டிருந்தான். அவன் ஆசை நிறைவேறவில்லை. அவன் அவர் முகத்தைக் கண்டானேதவிர அவருடைய அற்புதங்களொன்றையும் காணவில்லை. இதற்குச் சில காலத்துக்குமுன், இந்த ஏரோது, இயேசுவைப் பயமுறுத்தி, தன் நாட்டில் அவர் பிரசங்கம் செய்யக்கூடாதென்று தடுத்தான். இயேசு அதைச் சட்டைப்பண்ணாமல், தமது ஊழியத்தை நடத்திவந்தார். இப்போது இவர், தான் எதிர்பாராத வண்ணமாக பிலாத்துவால் கைதியாக்கப்பட்டு, தன் தயவை நாடவேண்டிய ஸ்திதிக்கு வந்தது ஏரோதுவுக்குச் சொல்லமுடியாத சந்தோஷத்தைக்கொடுத்தது. அவன் அநேக காரியங்களைக்குறித்து இயேசுவைக் கேட்டான். அவரோ மறுமொழி கொடுக்கவில்லை.

தியானம்

பிலாத்து இயேசுவின் குற்றமில்லாமையை இரண்டு தரம் கூறியும் யூதர் அதை ஒப்புக்கொள்ளவில்லை. பிலாத்துவைப்பற்றியாவது, நியாயத்தைப்பற்றியாவது அவர்களுக்குக் கவையில்லை. தங்கள் பிடிவாதம் நிறைவேறவேண்டுமென்ற ஆணவம்மாத்திரம் பூரணமாயிருந்தது. இவர்கள் துணிவைப்பாருங்கள்:—கலிலேயா நாடுதொடங்கி யூதேயாவரையும் கலகம்பண்ணுகிற இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்று நீ எப்படிச் சொல்வாய்? என்று கேட்கிறார்கள்.

என் மீட்பரே, நீர் செய்த கலகமென்ன? நீர் ஆள் சேர்க்கவில்லை. ஆரவாரம் செய்யவில்லை. உம்மிடத்தில் ஆயுதங்களாவது, அம்பறாத்தூணியாவது இருந்ததில்லை. ஆகவே இது பொய்ப் பிரியாது. ஆனால் உம்மால் ஆசாரியரும் வேதபாரகரும் கலங்கினார்கள் என்பது நிச்சயம், ஏனெனில் உம்மிடத்தில் விளங்கின தாழ்மை, பொறுமை, அன்பு, பரிசுத்தம், அற்புதம், சத்தியம், உபதேசம் ஆகிய இவைகளும் உமது பரிசுத்த நடக்கையும் அவர்களுடைய கிரியைகளையும், குணங்களையும் கண்டித்து வந்தபடியால் அவர்கள் கலங்கினார்கள். அப்படி அவர்கள் கலங்கவேண்டியது நியாயம்தான்.

என் மீட்பரே, உம்மைக் கலகக்காரன் என்று குற்றம் சாட்டும்போது அவர்கள் கோபத்தையும், வைராக்கியத்தையும், கை அசைப்பையும், கண் விழிகளையும் பாரும். இந்தவிதமாக வற்புறுத்திச் சொன்னால் பிலாத்து கலங்குவானும். பிலாத்து தன் தீர்ப்பை மாற்றி தங்கள் இஷ்டப்படித் தீர்ப்பானும். “கலிலேயா நாடுமுதல்” என்று சொன்னால் பிலாத்து நம்புவானும். தூரமான இடத்தைச் சொன்னால் சாட்சிகளைப்பற்றிக் கவலைப்படமாட்டானும். தங்கள் நோக்கம் நிறைவேறுமாம். ஐயோ, சாத்தானால் ஏவப்பட்டவர்களுக்குத் தந்திரம் தெரியாதா? ஆ யூதரே, உங்கள் தந்திரங்கள் அனைத்தையும் பிலாத்து அறிந்தான். இப்போது அவன் மூலமாக இயேசுவின் குற்றமில்லாமை என்றென்றைக்கும் உலகத்

திற்குத் தெரியும்படி சற்றுநேரம், நீதியின் தராசைச் சரியாய்ப் பிடிக்கும்படி தேவன் அவன் உள்ளத்தில் உணர்த்தியிருக்கிறார்.

"கலிலேயா நாடுமுதல்" என்ற வாசகத்தால் பிலாத்துவை மேற்கொள்ளலாமென்று நினைத்தார்களே; அந்த வாசகத்தைக்கொண்டு பிலாத்து அவர்களை மேற்கொண்டான்; பிலாத்துவும் சற்றுக் கெட்டிக்காரன்தான். அவன் கேட்பான்:—ஆகா, இவன் கலிலேயனா?—கலிலேயாவில் எந்த ஊரான்? உத்: நாசரேத்தூரான். நாசரேத்தூரானா? நாசரேத்திலிருந்து நன்மையுண்டாகுமா? இவன் தொழிலென்ன? உத்: தச்சன்—தச்சன்—தச்சன். அப்படியா? அப்படியானால், இவன் ஏரோது இராஜாவின் அதிகாரத்துக்குட்பட்டவன். இவன் விஷயத்தில் நான் தலையிடுவது சரியல்ல. அவருக்கு இவனுடைய கலக முயற்சிகள் அநேகம் தெரியலாம். ஆகவே, நீங்கள் இவனை அவரிடத்திற்குக் கொண்டுபோங்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டான். அனுப்பினபின் பிலாத்து, நம்முடைய சங்கடம் தீர நல்ல பிடி வந்தது; நாம் தப்பினோம்; இந்தப் புண்ணிய புருஷனுக்கு நம்மால் ஆபத்து வந்தது என்றிராதபடி, இப்படி முடிந்தது நமக்குச் சந்தோஷம் என்று எண்ணினான்.

இயேசு ஏரோதுவினிடம் கொண்டுபோகப்பட்டபோது, யூதருக்குச் சந்தோஷம் அதிகப்பட்டது. அவர் நமது ஆள். இந்தப் பிலாத்துவைப்போல பிடிவாதக்காரனுமல்ல என்றெண்ணினார்கள். ஏரோதுவும், இது நல்ல சமயம், குற்றவிசாரணை ஒருபக்கத்திலிருக்கட்டும், இவரிடத்தில் பல அற்புதங்கள் செய்யும்படிச் சொல்லி வேடிக்கை பார்க்கலாமென்று நினைத்தான்.

என் நேசர், ஏரோதினிடம் கட்டப்பட்டவராக நிற்கிறார். ஏரோது பட்டுவஸ்திரம் தரித்து, கிரீடமணிந்து, செங்கோல் ஏந்தி சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறான். என் மீட்பரோ,

கைதியாக நிற்கிறார்!

வேசிக் கள்ளனுக்கு முன்னும், கொலைபாதகனுக்கு முன்னும் குற்றமற்ற இயேசு கட்டப்பட்டு கைதியாக நிற்கிறார். ஆ, ஏரோதுவே, உன் பட்டுவஸ்திரங்களும், படுதாக்களும், உன் வேசித்தனங்களையும் கொலைகளையும் மூடிவிட்டதென்று நினைக்கிறாயோ? இல்லை—இல்லை.

ஏரோது அநேக காரியங்களைக்குறித்து, அவரிடத்தில் வினவினான். அந்த அநேக காரியங்கள் இன்னவையென்று விவரம் சொல்லப்படவில்லை. அவரோ மறுமொழி ஒன்றும் சொல்லவில்லை. இயேசுவின் மவுனம் எதிரிகளை உற்சாகப்படுத்தினது. ஏனெனில் ஏரோது கேட்கக் கேட்க அவர் பேசாமலிருந்தது, அவனுக்கு எரிச்சலாகவேயிருக்கும். அந்த எரிச்சல் தணியவிடாதபடி நாம் பல பிரியாதுகளைச் சொல்லிக்கொண்டேயிருப்போம் என்று நினைத்து, அநேக குற்றங்களைச் சாட்டிக்கொண்டே நிற்கிறார்கள். நானுங்களைக் குற்றம் சாட்டுவானேன். இவ்வளவும் நடப்பித்தது நான்தான்; இவ்வளவும் பேசினது என் வாய்தான் என்று உணருகிறேன். என்னிமித்தம் என் இயேசுவின் வாய் அடைப்பட்டது.

ஆனால் ஆ, ஏரோதுவே, இந்த மவுனம் உனக்கு யோகமென்று எண்ணிக்கொள். இப்போது அவர், உன்னைப் பார்த்து:

உன் சகோதரன் மனைவியை அனுப்பிவிட்டாயா?
என் முன் தூதனுடைய சிரசை நீ ஏன் வாங்கினாய்?
உன் பாவங்களை உணர்ந்து மனஸ்தாபப்பட்டாயா?

என்று எதிர்த்துக்கேட்டது மெய்யானால், உன் பட்டுவஸ்திரத்தின் பிரகாசமும், உன் கொலுமண்டபத்துச் சிறப்பும் அன்று அழிந்துபோகுமே. உன் கிரீடத்தை நீ இறக்கி, உன் செங்கோலைக் கீழே போடும்படியான அவமானம் நேரிட்டிருக்குமே! ஆ, என் மீட்பர் தமது மவுனத்தால் உன் பாவங்களையும், அழுக்குகளையும் எல்லாம் மூடினார் என்று எண்ணிக்கொள். இப்படியே என் மீட்பர் என் பாவங்களையும் மூடுகிறார். அதை அவர் நினையாமலிருக்கிறார்! உமது மவுனத்தால் என் பாவங்களை

மூடும் இயேசுவே உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன்.

ஜெபம்

இரக்கமுள்ள இயேசுவே, தேவரீர் பிலாத்துவினால் விசாரணை செய்யப்பட்டதுபோல ஏரோதுவாலும் விசாரிக்கப்பட்டீர். இவன் உம்மிடத்தில் ஞானோபதேசங்களைக் கேட்பதைவிட்டு, சிலவேடிக்கைகளை விரும்பினான். ஆகவே உமது இரட்சிப்பின் கதிர்களை இவனுக்குள் வீச விடாமல் அடக்கிக்கொண்டீர். என்னுடைய பெருமைகளினிமித்தம் தேவரீருடைய இரட்சண்ய ஜோதியையும், உமது திவ்விய உபதேசங்களையும் நான் இழந்துபோகாதபடி, அவைகளை எனக்கு மன்னித்து, என் ஆத்துமாவோடே பேசி, நான் உன் இரட்சகர் என்று சொல்லும். உம்முடைய மவுனத்தால் நான் மனம்சோர்ந்து மாண்டு போகாதபடி திருவாய்மலர்ந்து, உமது அன்பின் வரலாறு அனைத்தையும் எனக்கு அறிவித்தருளும். உமது மௌனத்தினிமித்தம் என்னைக் கேட்டருளும் இயேசுவே. ஆமென்.

17. இயேசுவுக்கு ஏரோதுவால் வந்த பாடுகள்

வேதம்

"ஏரோது தன் போர்ச் சேவகரோடுகூட அவரை நிந்தித்துப் பரியாசம்பண்ணி, மினுக்கான வஸ்திரத்தை அவருக்குஉடுத்தி, அவரைத் திரும்பப் பிலாத்துவினிடத்திற்கு அனுப்பினான். முன்னே ஒருவருக்கொருவர் பகைவராயிருந்த பிலாத்துவும் ஏரோதும் அன்றைய தினம் சிநேகிதரானார்கள்" (லூக். 23: 11, 12).

போதனை

இவன் மகா ஏரோதுவின் மகனாகிய அந்திப்பா ஏரோதுதான். இவனும் பிலாத்துவும் பகைஞராயிருந்தார்கள். ஒரு ரோமை அதிபதி தங்கள் மத்தியிலிருந்துகொண்டு தங்கள் நடவடிக்கைகளைக் கவனிப்பதும், அதிகாரம் செலுத்துவதும் இவனுக்குப் பிடியாமலிருந்திருக்கலாம். பக்கத்து அரசர் ஒருவருக்கொருவர் வைராக்கியம்

சாதிப்பது இயல்புதான். இவற்றேடு, சிலகாலத்துக்கு முன்பு ஏரோதுவின் விசாரணைக்குட்பட்டிருந்த கலிலேயரில் சிலர், எருசலேமில் பலியிடவந்தோம் என்று கள்ளத்தனமாகப் பேசிக் கலகம் செய்தார்கள். இதினிமித்தம் பிலாத்து அவர்களைப் பலிபீடத்தில் வைத்தே கொலைசெய்துவிட்டான். இப்படி நம்முடைய குடிகளை நம்முடைய தகவல் இல்லாமல் இந்தப் பிலாத்து கொன்றுபோட்டானே என்று ஏரோதுவுக்கு வருத்தமிருந்தது. இந்த விரோதத்தைத் தீர்த்துக்கொள்ளும்படி பிலாத்து இயேசுவை அனுப்பாமல், இந்த வழக்கு இராஜாங்கவிஷயமாயிராமல்மார்க்கவிஷயமாயிருக்கிறது; இதை நம்மைவிட ஏரோது சரியாகக் கண்டுபிடித்துக் கொள்ளக்கூடும்; அதோடு இதில் ஏதாவது லாபநஷ்டம் வந்தால் நம்மேல் ஒருவரும் பழிசொல்ல இடமிராது என்று நினைத்து அனுப்பினுன். ஏரோதுவோ, இயேசுவின் மவுனத்தால், இப்படி அல்லது அப்படி என்று கண்டுபிடிக்கும்படிக் கூடாதேபோனுலும், ஜனங்களைப் பிரியப்படுத்தும்படி இயேசுவை நிந்தித்து; பரியாசம் செய்து, மினுக்கான வஸ்திரத்தை உடுத்தினுன். அந்தரங்கத்திலோ மரணத்துக்கேதுவான குற்றம் இவரிடத்தில் இல்லை என்று எழுதியனுப்பினுன் (லூக். 23: 15).

தியானம்

ஏரோதுவின் ஆசை நிறைவேருமற்போனது அவனுக்கு மிகுந்த துக்கத்தைக் கொடுத்தது. இயேசுவை விரும்பிக்கேட்டும் ஒரு நன்மையும் பெற்றுக்கொள்ளாமல் போன பாவிகளில் இவன்தான் முதலாவதும் கடைசியானவனுமாயிருந்தான் என்று சொல்லவேண்டியது.

ஏரோது திரும்பத் திரும்பக் கேட்பதையும், இயேசு மவுனத்தால் தமது வாயை மூடிக்கொள்வதையும் அவனுடைய போர்ச்சேவகர் கவனித்து உக்கிரகோபமானுர்கள். ஆனுல் அவர்களில் ஒருவனுவது அவரை அடிக்கத் துணியவில்லை. இது சற்று கவனிக்கத்தக்கது. இது அவர்கள் காட்டின ஒரு தயவுதான். இவர்கள் அடிக்க ஆரம்பித்தது மெய்யானுல் என் இயேசு மரித்துப்போ

யிருக்கலாம். இயேசு பிடிபட்டதுமுதல் அவருக்கு அலைச்சல் அதிகம். அன்னாவின் வீடு, அப்பால் காய்பாவின் வீடு. அப்பால் பிலாத்துவின் அரண்மனை. அப்பால் ஏரோதுவின் அரண்மனை. இதெல்லாம் கஷ்டமல்லவா? ஒவ்வொரு இடத்திலும் இயேசு கைதி நிலைமையிலிருந்ததால் நிலையில் நின்றிருக்கவேண்டியது. இது அவருக்குச் சரீரப் பிரகாரமாக மிகுந்த அலுப்பையும், வருத்தத்தையும் கொடுத்திருக்கவேண்டியது.

இயேசுவின் மவுனத்தால் ஏரோது அவரைப் பைத்தியக்கார வரிசையில் சேர்த்தான். யூதருக்குள் பைத்தியக்காரருக்கு வெள்ளையங்கி உடுத்துகிறதுண்டு. ஏரோதுவும் அதேவித உடையை இயேசுவுக்கு உடுத்தி நிந்தித்துப் பரியாசம்பண்ணினான்.

ஆத்துமாவே, இந்த நிந்தைகளோடும், உடையோடும் உன் மீட்பரை நோக்கு. ஆ, என் மீட்பர் பைத்தியக்காரனும்!! சாலொமோனிலும் உயர்ந்த ஞானி ஏரோதுவுக்குப் பைத்தியக்காரனும். இந்த ஞானம் இவனுக்கு எப்படி வந்தது என்று பேசிக்கொள்ளப்பட்ட காலம் போக, இந்தப் பைத்தியக்காரனை எங்கே கண்டோம் என்று பேசிக்கொள்ள காலம் வந்ததாக்கும். ஆ, என் மீட்பர் பைத்தியக்காரரையும் இரட்சிக்கும்படிப் பைத்தியக்காரன் என்று பேரெடுத்தாரோ? ஆ, என்ன புத்தி சொன்னாலும், எப்படி எச்சரிக்கப்பட்டாலும், பைத்தியக்காரனைப்போல பின்னும் பாவம்செய்கிற என்னை மீட்கும்படி அவர் பைத்தியக்காரன் என்று பேரெடுத்தார்.

என் மீட்பரே, பிலாத்து உம்மைப் பைத்தியக்காரன் என்று தீர்த்தது ஒருமாதிரியாயிருந்தாலும் வேறொரு மாதிரியில், அதாவது, எனக்கு மீட்பராக வந்ததில் நீர் பைத்தியம் பிடித்தவரானீர். பைத்தியத்தில் பலவகையுண்டல்லவா? பவுல் என்ற ஒருவர் அதிகக் கல்வியால் பைத்தியக்காரன் என்ற பேர் பெற்றார் (அப். 26; 24). நீரோ அதிக அன்பினால் பைத்தியம் பிடித்தவரானீர். பிதாவின்மேலுள்ள அன்பும், பாவியின்மேலுள்ள அன்பும்

கூடி உமது சிரசிலேறி உம்மைப் பைத்தியக்காரனாக்கிற்று. என்னை நேசித்ததுதான் உம்மில் விளங்கின பைத்தியமாயிருக்கிறது. ஆதாமின் மகனையும் ஏவாளின் மகளையும் இரட்சிக்கும்படி தேவன் வந்தாராம்—அவர் மனுஷனானாராம்—அவர் மவுனமானாராம்—அவர் பல நிந்தைகளைச் சகித்தாராம்-பாடுபட்டு மரித்தாராம் என்ற செய்தியைக் கேட்கிற எந்த மனுஷன் ஆச்சரியப்படாதிருப்பான். அதிலும் என்னை மீட்டாராம் என்று கேள்விப்பட்டவுடனே, ஆ, தேவனுக்குப் பைத்தியம் பிடித்தது நிஜம்; அப்படிக்கில்லையானால் இன்னானுடைய மகனாகிய......யும் இரட்சிப்பாரா? இது தேவ பைத்தியமேயன்றி வேறல்லவென்பான். ஆம், என் மீட்பரே, நீர் உமது அன்பின் வெறியால் மேற்கொள்ளப்பட்டதால் மாத்திரம் நான் இரட்சிக்கப்பட்டேன். மற்றபடி சாகவேண்டியவர்களில் நான்தான் முதல் ஆளாயிருக்கிறேன் என்றுணருகிறேன்.

என் மீட்பர், என்னிமித்தம் பாடுபடவேண்டியதிருந்ததால் தான் ஏரோதுவின் போர்ச்சேவகருடைய நிந்தைகளையும் பரியாசங்களையும் பொறுமையோடு சகித்தார். இந்தப் போர்ச்சேவகர் இயேசுவை நிந்திக்கையில், வானத்தில் இயேசு விட்டுவந்த அவருடைய சேவகராகிய தூதரும், அதிதூதரும் தங்களுடைய ஆறு சிறகுகளிலும் தேவகோபம் என்னும் அக்கினிகளை வாரிக்கொண்டு, ஏரோதுவின்மேலும் எருசலேமின்மேலும் கொட்டி அதமாக்கப் புறப்பட்டாலும் அது அநியாயமாயிருக்குமோ? அது நியாயமாயிருக்கும். ஆனால் தேவன் மாம்சமான நிமிஷமுதல் அதின் இரகசியம் தெரியாமல் அவர்கள் கலங்கி, தங்கள் அரசர் திருப்பிவருமட்டும், தங்கள் ஆரவாரங்களையும் அபிமானங்களையுமெல்லாம் நிறுத்தி வைத்தார்கள். பிதாவாகிய தேவனோ தமது குமாரன் என்னை மீட்கவேண்டுமானால் இந்த எல்லாப் பாடுகளையும் கடந்து தீரவேண்டுமென்று அறிந்திருந்ததால் ஒன்றுமறியாதவர்போலத் தமது கண்களை மூடிக்கொண்டார் என்று சொல்லவேண்டியது.

என் மீட்பருக்கு ஏரோது ஒரு வெள்ளை அங்கி இனும் கொடுத்தான். இவ்வுலகத்தில் இயேசு அவதாரமானது

முதல் அவருக்குக் கிடைத்த இனம்களில் இது முதலாவ தாயிருக்கிறது. இது அவர் தாயார் போர்த்தின கந்தைத் துணியிலும் சிறந்தது தான். அந்த நாட்களில் இயேசு உடுத்தியிருந்த தையலில்லா அங்கியைவிட இதை மேலானதாக எண்ணினார். ஏனெனில் இது அவர் நேச பித்தன் என்று பட்டம்பெற்ற அறிகுறி அங்கியல்லவா? நான் இப்படி இயேசுவின்மேல் நேசபித்தம் கொண்ட வன் என்பதற்கு இதுவரையும் ஒரு இனமும் கிடைக்க வில்லை. ஏனெனில் நான் இனம் பெறத்தக்கதான அவ் வளவு நேசம் இன்னும் அவர்பேரில் வைக்கவில்லை!!

இந்த வெள்ளை அங்கி பிரகாசமாயிருக்கிறது. தேவ நீதியின் ஜோதி இதில் வீசவீச இது பளபளப்பாயிருக்கி றது. இதென்ன பளபளப்பு, இதென்ன பிரகாசம்; இது அன்பின் பிரகாசமப்பா! இந்தப் பிரகாசமானது: ஆ பாவியே, நான் பைத்தியக்காரன் என்று பேர்பெற்று அதற்குரிய விருதை அணிகிற அளவாய் உன்னை நேசிக்கி றேன்; இப்படியே நீயும் என்னை நேசிக்கிறாயா என்று கேட்கிறதுபோலிருக்கிறது.

இந்தநாளில் ஏரோதுவும் பிலாத்துவும் சிநேகிதரானார் களாம். எப்படியும் இயேசு தம்மை மரணாக்கினைக் குட் படுத்தவேண்டிய இரண்டு அதிபதிகளையும் இராசியாக்கும் கருவியாயிருந்தார். ஏரோதுவும் பொந்தியுப் பிலாத்தும் உறவானது, இயேசுவின் மரணம் அன்றையத்தினம் நிறை வேற ஏதுவாயிருந்ததென்கலாம். அவர்களுடைய பழைய விரோதம் தீராதபட்சத்தில் பிலாத்து கடைசிவரையும் இவரில் குற்றமில்லை, குற்றமில்லை என்று சாதித்துக் காலம் கடத்த ஏதுவாகலாமே. இவர்கள் உறவானது, ஜனங்களின் மும்முரத்தை இருபேரும் கலந்து யோசனை பண்ணவும், தேவ தீர்மானத்தின்படியும், இயேசுவின் ஆசைப்படியும், யூதரின் கோரிக்கைப்படியும் அன்றை யத்தினம் இயேசுவின் மரணமும், சர்வலோக மீட்பும், என்னுடைய பாவநிவாரணமும் நிறைவேறவும் உதவியா யிற்று என்று சொல்லவேண்டியது.

ஜெபம்

என் பாவங்களினிமித்தம் ஏரோதுவால் பரியாசம் செய்யப்பட்டு வெள்ளையங்கி தரிப்பிக்கப்பட்ட இயேசுவே; இந்த வெள்ளையங்கியானது நீர் என்மேல் மித மிஞ்சி அன்புகூர்ந்ததற்கு அத்தாட்சியாகிறதென்று உணருகிறேன். நான் பாவம் முதலிய சத்துருக்களை ஜெயங்கொண்டால் நீரும் எனக்கு ஒரு வெள்ளையங்கி தரும்படி ஆயத்தமாயிருக்கிறீர். ஆ, இரட்சகா, நான் அந்த வெள்ளை அங்கியைத் தரித்துக்கொள்ளும்படி இக் காலத்தில் உமதுமேலுள்ள நேசத்தை எனக்கு அங்கி யாகத் தாரும். உமதுமேலுள்ள அன்பால் நான் சோகமா கிறது மாத்திரமல்ல, பித்தனாகும்படிக்கும் தயவுசெய் யும். ஆ, என் இரட்சகரே, நீர்பெற்ற பிரகாசமான அங்கியினிமித்தம் உமது அன்பினால் என்னைப் பிரகாச மாக்கியருளும். ஆமென்.

18. பஸ்கா விடுதலை

வேதம்

"பிலாத்து பிரதான ஆசாரியர்களையும் அதிகாரிகளை யும் ஜனங்களையும் கூடிவரச்செய்து, அவர்களை நோக்கி: ஜனங்களைக் கலகத்துக்குத் தூண்டிவிடுகிறவனாக இந்த மனுஷனை என்னிடத்தில் கொண்டுவந்தீர்கள்; நான் உங்களுக்கு முன்பாக விசாரித்தபோது, இவன்மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவ னிடத்தில் காணவில்லை. உங்களை ஏரோதினிடத்திற்கும் அனுப்பினேன்; அவரும் இவனிடத்தில் குற்றம் காண வில்லை; மரணத்துக்கேதுவாக இவன் ஒன்றும் செய்ய வில்லையே. ஆனபடியால் இவனைத் தண்டித்து விடுதலை யாக்குவேன் என்றான். பண்டிகைதோறும் அவர்களுக்கு ஒருவனை அவன் விடுதலையாக்குவது அவசியமாயிருந்த படியால் அப்படிச் சொன்னான். ஜனங்களெல்லாரும் அதைக் கேட்டு: இவனை அகற்றும், பரபாசை எங்களுக்கு விடுதலையாக்கும் என்று சத்தமிட்டுக் கேட்டார்கள். அந்தப் பரபாசென்பவன் கள்ளனாயிருந்தான்" (லூக்.

23: 13–19; மத். 27: 15–23; மாற். 15: 6–14; யோவா. 18: 39, 40).

போதனை

அன்புள்ள இரட்சகர் ஏரோதுவின் பாடுகளையும் அவமானங்களையும் சுமந்தவராக மறுபடியும் பிலாத்துவினிடம் வந்து சேர்ந்தார். பிலாத்து மறுபடியும், ஜனங்களை வரவழைத்து இயேசுவின் குற்றமில்லாமையைத் தெரிவித்ததோடு பிரதான ஆசாரியரும் மூப்பரும் திருப்திப்பட, இவரைத் தண்டித்து விடுதலை செய்வேன் என்றான். இது அவர்களுக்குத் திருப்தியைக் கொடுக்காததால் பஸ்காபண்டிகைதோறும் ஒரு கைதியை விடுதலை செய்கிற வழக்கத்தை அனுசரித்து, இவனை விடுதலைசெய்கிறேன் என்று கேட்டான். இந்த வாசகம் அவர்களுக்குக் கலக்கத்தைக் கொடுத்தது. இஸ்ரவேலர் எகிப்திலிருந்து விடுதலையானதை நினைவுகூரும்படி பஸ்காதோறும் ஜனங்கள் கேட்டுக்கொள்ளும் ஒரு பிரதான கைதியை விடுதலையாக்குவது வழக்கமாயிருந்தது. இந்த வழக்கம் எது முதல் ஆரம்பமானதென்று சொல்ல ஏதுவில்லை. இந்த வழக்கத்தை வைத்துக்கொண்டு,

பரபாஸ் இயேசுவையா?*
கிறிஸ்து இயேசுவையா?

இவ்விருவரில் யாரை விடுதலை செய்யலாமென்று கேட்டான். இப்படிக் கேட்டால், கிறிஸ்து இயேசுவை அவர்கள் விடுதலை செய்யக் கேட்பார்களென்று பிலாத்து தப்பாக நினைத்தான். அவர்களோ இவனையல்ல பரபாசை விடுதலையாக்கும் என்று கேட்டார்கள். இந்தப் பரபாசென்பவன், கள்ளனும் கொலை பாதகனுமாயிருந்தான் என்று வாசிக்கிறோம். யூதர் பொறாமையினாலே ஏவப்பட்டு இயேசுவைவிட பரபாசைத் தெரிந்துகொள்ளுகிறார்களென்று பிலாத்து அறிந்து, இனி யென்ன செய்யலாமென்று ஆலோசித்துக்கொண்டிருந்தான்.

---

* இதுதான் அவனுடைய பூரண பேரம்.

தியானம்

ஏரோதுவினிடத்திலிருந்து இயேசு திரும்பி வந்தவுடனே, பிலாத்து வாதிகளைப் பார்த்து, அதிகமொன்றும் பேசாமல்,

இவனிடத்தில் யாதொரு குற்றமுமில்லை
ஆகையால் விடுதலை செய்கிறேன்

என்று சொல்லிவிட்டு தன் வீட்டுக்குப் போய்விட்டானானல் அது நியாயமாயிருக்கும்; அவன் அப்படிச் சொல்லாமல் தண்டித்து விடுதலைசெய்கிறேன் என்று சொன்னான். இதில் எல்லாம் பிலாத்துவல்ல, வேறொரு நியாயாதிபதி மறைவாக இருந்து நடபடிக்கை நடத்துகிறார். அவர் பிதாவாகிய தேவன் தான். நான் அவரை முகாந்தரமின்றிப் பகைத்து, அவருக்கு விரோதமான பாவத்தைச் செய்தபடியால், பாவநிவாரணத் தீர்ப்பும் முகாந்தரமின்றி நடக்கவேண்டியதாயிருந்ததென்று நினைக்கலாம்.

ஆ, பிலாத்துவே, தண்டித்து விடுதலையாக்குவேன் என்று நீ சொன்ன காரணமென்ன? யூதரைத் திருப்தி செய்யத்தானே. அப்படியானால், தண்டிக்கிறதோடு கொலைசெய் என்றும் கேட்கிறார்கள். நீ தண்டியாமல் விடுதலைசெய்தால் லோக நியாயத்திற்குத் திருப்தி—தண்டித்து விடுதலைசெய்தால் உனக்குத் திருப்தி—தண்டித்து அதோடு கொலைசெய்தால் யூதருக்கும் திருப்தி—தேவ நீதிக்கும் திருப்தி—இயேசுவுக்கும் திருப்தி—இதை நீயும் அறியவில்லை, யூதரும் அறியவில்லை. ஏனெனில் இந்தக் கைதியை தேவன் பாவநிவாரண பலியாடாக இவ்வுலகத்தில் அனுப்பினார். இவரும், நானே உலகத்தின் பாவங்களைச் சுமந்துதீர்க்கிறதேவாட்டுக்குட்டி என்று நிற்கிறார். இவர் யாதொரு நியாயமும் பேசாமல் மௌனமாய் நிற்பதற்கு இதுதான் காரணம். பிலாத்துவே, இந்த இரகசியத்தை நீ இப்போது அறியாய். ஆ, என் மீட்பர் குற்றமற்றவர் என்று பலதடவை தீர்ப்புக் கூறப்பட்டாலும் இன்னும் குற்றவாளிபோல கைகள் கட்டப்பட்டு, மவுன இராஜாவாக விளங்குவதேன்!!—

என் பாவத்துக்காகத்தான்!
என் தீர்ப்பைச் சகிக்கத்தான்!
என்னை மீட்கத்தான்!!

பிலாத்துவே, என் மீட்பரை விடுதலைபண்ண விரும்பின நீ அவரை பரபாசோடு சேர்த்துப் பேசினது பிசகு. அன்றையத்தினம், யூதர் உன் அபிப்பிராயத்துக்கு இணங்கி பரபாசையல்ல இயேசுவை விடுதலை செய்யும்படிக் கேட்டு அப்படியே அவர் விடுதலையானாலும், இவரும் பரபாசும் ஒன்று என்று தானே உலகம் சொல்லும்? அப்படி தேவன் தமது குமாரனைக் கனவீனப்படுத்த விட்டுவிடார். அதுவின்றி இயேசு விட்டுவிடப்பட்டு பரபாஸ் கொல்லப்பட்டால், அவன் சரீரமாத்திரம் இரட்சிக்கப்படும். இயேசு கொல்லப்பட்டால், அவருடைய சரீரமும் உயிர்த்தெழும்பும்; சர்வலோகத்தாருடைய சரீர ஆத்துமாவும் இரட்சண்யம் பெறும். இந்தப் பரம இரகசிய மகத்துவங்களை அஞ்ஞானப் பிலாத்து அறியமாட்டான்.

என் இயேசுவே, பரபாஸ் விட்டுவிடப்படவும், நீர் கொலைசெய்யப்படவும் யூதர் கேட்டுக்கொண்ட விஷயமானது என் மீட்பின் விஷயத்துக்கு எவ்வளவோ அநுகூலமாயிருந்தபோதிலும் அந்த வரலாற்றைக் கேட்க என் மனம் சகிக்கவில்லை. அந்த வரலாற்றால், சத்துருக்களின் எரிச்சல், உமதுமேலுள்ள வெறுப்பு, சாத்தானின் மும்முரம் இவ்வளவையும் காண்கிறேன். ஜனங்கள் இரைந்து, உரத்த சத்தத்தோடே,

"பரபாசை விடுதலைசெய்யும்" என்றும்,
"இவனைச் சிலுவையிலறையும்" என்றும்,
"இவனைச்சிலுவையில் அறையும் சிலுவையிலறையும்"

என்றும் ஏகமாகக் கூவுகிறார்கள். ஆ, பாதாளம் தன் வாயை ஆவென்று மட்டில்லாமல் திறந்து இயேசுவை விழுங்கப்பார்க்கிறது. பாதாளத்திலும், ஆகாயத்திலும், பூலோகத்திலுமிருந்த பிசாசுக்கள் அனைத்தும் பிலாத்துவின் அரண்மனைக்குள் வந்து நின்று, ஒவ்வொருவன் வாயிலும் பொறாமையின் ஆவியாக விளங்குகின்றன. ஆ, சாத்

தான்களே, இந்தப் பரிசுத்த புருஷனுடைய இரத்தத்தை இன்று குடிக்கலாமென்று கூடிவந்தீர்களோ? ஆ, பாதாளக் கழுகுகளே, இந்தப் பரிசுத்த மாம்சத்தையும் கொழுப்பையும் உண்ணலாமென்று பார்க்கிறீர்களோ? இது கிடையாது, இது உங்களுக்குக் கிடையாது. இவருடைய இரத்தம் இன்று சிந்தப்படும். இவருடைய மாம்சம் இன்று பிறப்படும். ஆனால் பிசாசுகளுக்கும் அவிசுவாசிகளுக்கும் இதில் பங்கில்லை—பங்கில்லை—பங்கில்லை. இந்தப் பரிசுத்த ஆடு, பிதாவின் நீதியைத் திருப்திப்படுத்தி, எனக்கும், என்னைப்போல மனந்திரும்புகிற சகல பாவிகளுக்கும் இரட்சண்ய விருந்தாகப் போகிறார்!

"இவனையல்ல, பரபாசை விடுதலைசெய்யும்"

என்று யூதர் கேட்கிறார்கள். இதில் என் மீட்பர் புறக்கணிக்கப்பட்டது ருசுவாகிறது; அதோடு பரபாசும், அவனைப்போலொத்த பாவிகளும் இரட்சிப்பைப்பெற இடமுண்டாகிறது. ஆ, என் மீட்பரே, நான் ஒரு பரபாஸ். பரபாஸ் என்றால் குழப்பத்தின் மகன் என்பதொரு அருத்தமாயிற்று. நான்தான் அந்தக் குழப்பத்தின் மகன். என்னால் உமது நாமத்துக்கும், பிரஸ்தாபத்துக்கும், மகத்துவத்துக்கும் அதிகக்கெடுதலும் குழப்பமுமுண்டாகிறது. என்னால் என் குடும்பத்திலும், சபையிலும் கெடுதலும் குழப்பமுமுண்டாகிறது. நான் பரபாஸ் இயேசு. நான் இயேசுவைச்சேர்ந்த ஒரு பரபாஸ். இயேசுவைச்சேர்ந்த குழப்பக்காரன். நான் யூதாசோடு சேர்ந்தவன். நான் கள்ளனாகிய பரபாஸ். உமது திருச்சபையின் வாழ்வுகள், மார்க்கத்தின் சலாக்கியங்கள் அனைத்தையும் கொள்ளையிட்டு அநுபவித்து, சபையில் கலக்கத்தையும் குழப்பத்தையும் உண்டுபண்ணுகிற பரபாஸ். நான் கொலைபாதகனாகிய பரபாஸ். என் ஆத்துமாவை நான் கொன்றதோடு, என் பாவத்தால் அநேக ஆத்துமாக்களைக் கொன்ற பாதகனாயிருக்கிறேன்.

எனக்கு உம்மால் விடுதலை
உமக்கு என்னால் வன்கொலை.

இது எப்படியிருக்கிறது? உலகநீதி இதை அநியாயம்

என்கிறது. தேவ அன்போ, இது தவிர பாவி இரட்சிக்கப்பட வேறுவழியில்லை என்று தீர்மானிக்கிறது. அத்தீர்மானத்தின்படி என் மீட்பரே, நீர் பிலாத்துவின் அரண்மனையில் அசட்டை பண்ணப்பட்டவரும், கள்ளரிலும் கொலைபாதகரிலும் ஈனமானவருமாக எண்ணப்பட்டீர்.

ஜெபம்

இரக்கமும், மன உருக்கமுமுள்ள பிதாவே, உம்முடைய இரட்சண்ய நேசம் பிலாத்துவின் வீட்டில் பரிஷ்காரமாக விளங்குகிறது. தேவரீர் கள்ளனும் கொலைபாதகனுமான என்னையும் என்னைப்போலொத்த சகல பாவிகளையும் உமது திருவுளத்தில் நினைத்து உமது குமாரனை மறந்தீர். தயவுள்ள பிதாவே, உமது அன்புக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். எனக்காக பாடுகளைச் சுமந்துநிற்கும் நேச இயேசுவை விசுவாசிக்கவும் அவரில் அதிகமதிகமாய் அன்புகூரவும் உமது பரிசுத்த ஆவியைக்கொண்டு என் இருதயத்தை நடத்தியருளவேண்டுமென்று இயேசுகிறிஸ்துவின் மூலமாக வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

19. பிலாத்துவின் மனைவியின் சிபாரிசு

வேதம்

"அவன் நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில், அவனுடைய மனைவி அவனிடத்தில் ஆளனுப்பி: நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம்; அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகு பாடுபட்டேன் என்று சொல்லச்சொன்னாள்" (மத். 27: 19).

போதனை

பிலாத்துவின் மனைவியின் சிபாரிசு நமது கவனத்துக்கு வருகிறது. நமது இரட்சகருடைய மரண சரித்திரத்தில் இது ஒரு விசேஷித்த குறிப்பு. இதை பரி. மத்தேயுமாத்திரம் அறிவித்திருக்கிறார். இயேசுவை விடுதலை செய்யும்படி பிலாத்து திரும்பத் திரும்ப ஜனங்களோடே வாதாடினதும், ஜனங்கள் அவரையல்ல பரபாசை விடுதலை செய்ய ஓலமிட்டதுமான வரலாறுகள்

அந்த அரண்மனையைக் குலுங்கப்பண்ணின. பிலாத்துவின் மனைவி இரவில் நடந்த பல வேடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருந்ததால் வெகுநேரம் விழித்திருந்து அப்பால் தூங்கிப் பிந்தி எழுந்திருந்தாளாக்கும். தன் வீட்டின் முன் நடக்கும் அமளிகுமளிகள் என்னவென்று விசாரித்த போது, தாதிமார் அவைகளைச் சொன்னார்களாக்கும். இவை யனைத்தையும் அவள் கேட்கவே, அச்செய்திகள் தான் அன்றிரவு சொப்பனம் கண்டதற்கு இசைவாக இருந்தது. தன் புருஷன் இந்த நீதிமானைக் கொலை செய்யச் சம்மதித்து, தன் வீட்டின்மேல் இரத்தப் பழியைச் சுமத்தவேண்டாம் என்று அவள் பயபக்தி யோடு நினைத்ததுமன்றி, முன்னே நமது புருஷன் கலிலேயா நாட்டுக் கலகக்காரரைக் கொன்றதினிமித்தம் எவ்வளவு சங்கடங்கள் நமக்குண்டாயிற்று!! நாம் கேள் விப்பட்டவரும், சொப்பனத்தில் அறிவிக்கப்பட்டவரு மான இந்த நீதிமானுக்கு நமது புருஷனால் ஒரு நஷ்டம் நேரிட்டால் என்னவருமோ என்று அஞ்சினாள்.

பிலாத்துவால் இரட்சண்யத்துக்கு இடையூறுண்டா கும்படி, சாத்தான் அன்றிரவு இந்தச் சொப்பனத்தின் மூலமாய் அவன் மனைவியைக்கொண்டு தடுக்கப்பார்த் தான் என்றெண்ணுவதற்கு இடமில்லை. இது தேவ ஏவுதலாலுண்டான சொப்பனம் என்றே நினைக்கவேண்டி யது. இதின்மூலமாய் இயேசு குற்றமற்றவரென்பது அதிகப் பலமாக ரூபிக்கப்பட்டது. இது பிலாத்துவுக்கு எச்சரிப்பாகவும் இருந்தது. இந்தச் சொப்பனம் இயேசு அன்னா காய்பாவின் அரண்மனையில் பாடுகள்படும்போது காணப்பட்டிருக்கலாம். ஒருவேளை இயேசுவுக்குநேரிட்ட சகல பாடுகளும் இவளுக்குக் காட்சியாயிருக்கலாம். அக்காட்சிகளால் இயேசு நீதிமானாயிருந்து இந்தப் பாடு களைச் சகிக்கிறார் என்ற உணர்ச்சி அந்தச் சொப்பனத் தால் அவளுடைய மனதில் பட்டது. ஆதலால் என் கணவனே, உம்மால் அந்த நீதிமானுக்கு யாதொரு சங்கடமுமிராதபடி சங்கதியை நடத்தி முடியும். ஏனெ னில், இன்று சொப்பனத்தில் அவர் நிமித்தம் வெகு பாடு பட்டேன் என்று சொல்லியனுப்பினாள்.

தியானம்

பிலாத்துவின் மனைவியுடைய பேர் புரோக்கில்லாள் என்று சரித்திரத்தின் மூலமாய் அறிகிறோம். ஆ, புரோக்கில்லாளே, நீ தைரியசாலி. நீ அந்தக் கூட்டத்தையும் கூக்குரலையும் எண்ணாமல் இந்தச் செய்தியைச் சொல்லியனுப்பினாயே. உன் புருஷன் நீதி வழுவாமல் செங்கோல் செலுத்தும்படிக் கரிசனைகொள்ளுகிறது சரிதான். ஆனால் இப்போது நடக்கிற காரியங்கள் ஒவ்வொன்றையும் நீ கவனித்தால், அவை யூத நீதிக்கும், ரோமை நீதிக்கும் விரோதமாகவே இருக்கும். ஆனால் தேவநீதிக்கோ எல்லாம் சரியாயிருக்கிறது! இந்த நீதியை அஞ்ஞான ஸ்திரீயாகிய நீயாவது, உன் புருஷனாவது கண்டுபிடித்துக்கொள்ளமாட்டீர்கள்.

புரோக்கில்லாளே, நீ கண்ட சொப்பனத்தை விபரமாகச் சொல்லியனுப்பினாயில்லையே; அதைப் பிற்பாடு உன் புருஷனுக்குச் சொல்லியிருப்பாய். எப்படியும் அது, அவர் "நிமித்தம்" கண்ட சொப்பனம் என்று சொல்லுகிறாய். ஆகவே என் இயேசுவைச் சத்துருக்கள் அநியாயமாகக் குற்றம் சாட்டினதும், அடித்ததும், நிந்தித்ததும் எல்லாம் உனக்குச் சொப்பனத்தில் காணப்பட்டதாக்கும். இந்த வாலாறுகளைத் தமது குமாரனுக்குக் காட்டின பிதாவானவர் உனக்கும் காட்டினது உனக்குக் கிடைத்த தயவுதான். நீ என் மீட்பரை விடுதலை செய்யு நோக்கமாய் இந்தச் சொப்பனம் உனக்குக் காணப்படாமல், உன் புருஷனும், நீயும் இவருடைய வரலாறுகளை பக்திவிநயத்தோடு விசாரிக்கவும் அவரை விசுவாசிக்கவும் நோக்கமாகக் காணப்பட்டதென்று சொல்லுகிறேன். நீயாவது உன் புருஷனாவது இதை உங்கள் இரட்சிப்புக்கேற்ற விசுவாசத்துக்கு அஸ்திபாரமாக வைத்துக்கொள்ளவில்லை.

இது பிலாத்துவுக்குக் காணப்படாமல் உனக்குக் காணப்பட்டதால் தமது குமாரனைத் தண்டனையிலிருந்து நீக்கிவிட தேவன் சித்தம்கொள்ளாமல் பிலாத்து இந்த இரத்தப்பழியிலிருந்து நீங்கிக்கொள்ள தேவன் நினைத்தா

ராக்கும். அன்றையத்தினம் பிலாத்து கடைசிவரையும், அவரை மரணக்கினை செய்யச் சம்மதம் கொடாத பட்சத்திலும் இயேசு கொல்லப்படுவது நிச்சயம். ஏனெனில் ஜனங்களின் அமளி அவ்வளவு அகோரமாய் இருந்தது. தேவ தீர்மானத்தின்படி அன்று நடக்கவேண்டிய மரணம் நடக்குமே. அதற்கு இந்தப் பிலாத்து விலகிக் கொள்ளட்டுமேன் என்று தேவன் தயவு காட்டினார். அந்தத் தேவஞானத்தைப் பிலாத்தாவது, அவன் மனைவியாவது கண்டுபிடிக்கவில்லை. இந்தச் சொப்பன உணர்த்தலும், யூதாசுக்குக் கிடைத்த நேரான உணர்த்தலும் ஒன்றுபோல் அவரவர் தம்தம் பிரயத்தனங்களில் ஓய்ந்துவிட அருளப்பட்டது என்னலாம். ஏனெனில், மனுஷகுமாரன் தன்னைக்குறித்து எழுதியிருக்கிறபிரகாரம் போகிறார். ஆனால் எந்த மனுஷனால் அவர் காட்டிக் கொடுக்கப்படுகிறாரோ அந்த மனுஷனுக்கு ஐயோ என்று இயேசு யூதாசைப்பற்றிச் சொன்னதுபோல, இந்தச் சொப்பனத்தின் மூலமாய் பிலாத்துவுக்கும் அறிவிக்கிறார்.

புரோக்கில்லாள் இயேசுவினிமித்தம் "வெகு பாடுபட்டேன்" என்று சொல்லியனுப்புகிறாள். இது என்ன பாடுகளோ? எவ்வித பாடுகளோ நாம் அறியோம். ஒருவேளை பிலாத்துவின் குடும்பத்துக்குப்பின் நேரிட்டதாக நாம் சரித்திரத்தில் அறிகிற உத்தியோகத்தை இழத்தல், அலைந்து திரிந்து அவஸ்தைப்படல், அவமானப்படல், தற்கொலைபுரிதல் ஆகிய இவைகளனைத்தையும் சொப்பனத்தில் கண்டு வெகு பாடுபட்டிருக்கலாம்.

என் நேசரே, உமக்கு அநுகூலமாக ஒரு சிபாரிஸ் வருகிறது! இது சந்தோஷம்தான். இதினால் நீர் நீதிமான் என்று ஒரு பெண்பிள்ளை முதலாய் அறிந்துகொண்டாள். இவ்வளவு அறிவு யூத மூப்பருக்கும் பிரதான ஆசாரியருக்கும் வராமல் போயிற்று. ஒரு அஞ்ஞானப் பெண் சொப்பனத்தின்மூலமாக அறிந்த சத்தியத்தை யூத ரபிகளும், பிரதான ரபிகளும் தங்கள் வேத ஆராய்ச்சியால் அறியவில்லை. அவர்கள் உமது வேதத்தின் அறிவை

இழந்து நரகத்தின் நெருப்பைத் தங்கள் நெஞ்சில் வளர்த்து, அதின் சுவாலையைக் கக்குகிறார்கள் என்று பார்க்கிறேன்.

இந்த எல்லா வரலாற்றையும் கண்ணால் கண்டு காதால் கேட்ட நான் என் தலையை வானத்துக்கு நேராக ஏறெடுத்து, பிதாவே, இந்த அமளியின் இரகசியமென்னவென்று கேட்கிறேன். அப்பொழுது அவர் ஒரு தூதனை யனுப்பி, ரோமை நீதியின்படி பிலாத்துவும் அவன் மனைவியும் சொல்வது சரிதான், வான நீதியின்படி தேவகுமாரன் உனக்காக இப்பாடுகளைச் சகித்து சிலுவையில் மரணமடையவேண்டியதாயிருக்கிறது. இந்த வான நீதி நிறைவேறவருகிற பாதையில், மனுமக்கள் குறுக்கிட்டு தங்கள் பாவங்களின் கோஷ்டங்களை எல்லாம் வெளிப்படுத்துகிறார்கள். இப்படி எல்லாப் பாவங்களும் வெளிப்பட்டு தங்கள் வல்லமைகளைக் காட்டுகிற மத்தியில் என் குமாரன் அவைகளைச் சகித்து, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறப்பார். நீ மாத்திரம் பக்தியினயத்தோடு இந்த வரலாறுகளைத் தியானித்து வருவாயாக என்று அறிவிக்கிறீர்.

பிலாத்து நியாயாசனத்திலிருக்கையில் அவன் மனைவி தன் சொப்பனத்தைச் சொல்லியனுப்பி தன் புருஷனை எச்சரித்தாள். நான் என் பாவசிம்மாசனத்திலிருக்கிறேன். நான் இயேசுவை என் முதல்தரமான பாவங்களால் கனவீனப்படுத்துகிற இந்தக்காலத்தில், உமது ஆவியானவர் என் இருதயத்தின் காதில் வந்து என் மீட்பரின் நீதியைப்பற்றி எனக்கு உணர்த்துவாராக.

ஜெபம்

கிருபையுள்ள இயேசுவே, தேவரீர் பிலாத்துவின் மூலமாய் மாத்திரமல்ல, அவன் மனைவியின் மூலமாயும் நீதிமான் என்று விளம்பரப்படுத்தப்பட்டீர். உமது அவமானங்களின் மத்தியில் உமது பரிசுத்தம் விளங்குவது கார்மேகங்களின் மின்னல் பிரகாசித்ததுபோலிருக்கின்றன. நீதியுள்ள இயேசுவே, உம்மைப்பற்றி எனக்குச் சொப்பனத்தின் மூலமாயும் உணர்த்தியருளும். நான்

உமது பரிசுத்தத்தையும் இரட்சிப்பையும் கண்டு உம்மை விசுவாசிக்கவும் உம்மில் அன்புகூரவும் என்னென்ன பிரயத்தனங்களுண்டோ அதையெல்லாம் எனக்குச் செய்யும். நான் தேவரீருடைய நீதியைக் கண்டு அதை எங்கும் பிரசித்தம் செய்யும்படி உமது ஆவியால் என்னைப் பகலிலும், இரவிலும், நித்திரையிலும், விழிப்பிலும் ஏவியருளும். ஆமென்.

20. பிலாத்துவின் பயமுறுத்தல்

வேதம்

"பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபொழுது அதிகமாய்ப் பயந்து, மறுபடியும் அரண்மனைக்குள்ளே போய், இயேசுவை நோக்கி: நீ எங்கேயிருந்து வந்தவன் என்றான். அதற்கு இயேசு மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. அப்பொழுது பிலாத்து: நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா என்றான். இயேசு பிரத்தியுத்தரமாக: பாத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது; ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு என்றார். அதுமுதல் பிலாத்து அவரை விடுதலைபண்ண வகைதேடினான். யூதர்கள் அவனை நோக்கி: இவனை விடுதலைபண்ணினால் நீர் இராயனுக்குச் சிநேகிதனல்ல; தன்னை ராஜாவென்கிறவனெவனோ அவன் இராயனுக்கு விரோதி என்று சத்தமிட்டார்கள்" (யோவா. 19: 8–12).

போதனை

இயேசுவின் பரிசுத்த குணமும், அவருடைய குளிர்ந்த பார்வையில் விளங்கின பொறுமையும், தன் மனைவியின் சமாசாரமுமெல்லாம் கூடிப் பிலாத்துவுக்குள் ஒரு பரிசுத்த பயத்தையுண்டாக்கிற்று. அவன் இயேசுவினிடத்தில் "நீ எங்கேயிருந்து வந்தவன்" என்று கேட்டான். இந்தக் கேள்வியானது, தன் மனோவாஞ்சை

யைத் திருப்திப்படுத்தும்படி ஏரோது கேட்ட கேள்வி போலிருந்ததால் இதற்கு அவர் பதில் சொல்லவில்லை; இயேசுவின் மௌனம் பிலாத்துவின் எரிச்சலைக் கிளப்பிற்று, அவன் தன் அதிகாரத்தை ஸ்தாபித்துக்கொண்டு, "நீ என்னோடே பேசுகிறதில்லையா" என்று பயமுறுத்தினான். அப்போதவர், உன் அதிகாரம் உன்மட்டிலிருக்கட்டும்; உன் அதிகாரத்துக்கும் எனக்குமுள்ள சம்பந்தம் உனக்குப் பரலோகத்திலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்று உணர்த்தினார். இந்த உணர்த்தலில் அடங்கிய கருத்தை பிலாத்து உணர்ந்துகொண்டவனாய் அவரை விடுதலைசெய்ய முயன்றான். இதை ஜனங்கள் கண்டு அவனைப் பயமுறுத்தி இவனை விடுதலைபண்ணினால் நீ இராயனுக்குச் சிநேகிதனாயிராமல், விரோதியாகிறாய் என்று சத்தமிட்டார்கள். முன் அவரைக் கிறிஸ்து என்னப்பட்ட இராஜா என்கிறான் என்று சொன்ன குற்றத்தில் கிறிஸ்து, அல்லது மேசியா என்ற பதத்தை ஒழித்து, இவர் தன்னை வைதீக இராஜாவென்றல்ல, லௌகீக இராஜாவென்று சொன்னதாக வற்புறுத்தினார்கள். இதினால் இவருடைய குற்றமானது மார்க்கக் கட்சியல்ல இராஜ துரோகம் என்று காட்டமுயன்றார்கள்.

தியானம்

பயந்த பிலாத்துவுக்குப் பயமுறுத்தவும் தெரிகிறது. இயேசுவைப் பார்த்து பக்தியுடன் பயந்தவன், அவருடைய மௌனத்தைப் பார்த்து பயமுறுத்துகிறான். இயேசுவின் மௌனத்தைச் சத்துருக்கள் சுட்டிக்காட்டி, உம்மை அசட்டைப்பண்ணுகிற இவனை நீர் சட்டைபண்ணுகிறீரே என்று கேட்டிருக்கலாம். அதினாலே பிலாத்துவுக்குச் சுரணையுண்டாகி இயேசுவைப் பயமுறுத்தி, நீ என்னோடே பேசுகிறதில்லையா, உன்னைச் சிலுவையில் அறையவும், உன்னை விடுதலைசெய்யவும் எனக்கு அதிகாரமுண்டென்று உனக்குத் தெரியாதா? என்று பயமுறுத்துகிறான். பிலாத்துவே, உனக்கு அதிகாரம்கொடுத்தவர் இவர்தான். உன் அதிகாரத்தைஉயர்த்துகிறவரும் தாழ்த்துகிறவரும் இவர்தான். உன் அதிகாரத்

தைக் காட்டி நீ மற்ற யூதரைப் பயமுறுத்தலாமே தவிர இவரைப் பயமுறுத்தக்கூடாது.

"நீ எங்கேயிருந்து வந்தவன்" என்று பிலாத்து கேட்கிறான். இயேசு பதில் சொல்லவில்லை. அதேன்? இந்தக் கேள்வியும், சத்தியமாவதென்ன? என்று பிலாத்து கேட்ட மறு கேள்வியும் இரட்சண்யத்துக்கடுத்தவை. இப்படிப்பட்ட காரியத்தைப்பற்றிப் பேசும் காலம் போய்விட்டது. அந்தக் காலத்தை இழந்துவிட்ட பிலாத்துவுக்கு இப்போது பாடுபடுகிற காலத்தில் உத்தரவு சொல்வது சரியல்ல. மேலும் இவன் சத்தியமாவதென்ன என்று கேட்டு அப்படியே விட்டவன்; இவன் நல்ல கேள்விக்காரன்தான். ஆனால் இவன் கேள்விகளால் ஆத்துமலாபத்தைச் சம்பாதித்துக்கொள்ளுகிறவனல்ல. இதையறிந்து இயேசு பேசாமலிருக்கிறார். பிலாத்துவே, நீ கேட்கிற கேள்விக்கு நான் உத்தரவு சொல்லுகிறேன்.

"நீ எங்கேயிருந்து வந்தவன்?" இவர் வானத்திலிருந்து வந்தவர்—இவர் பிதாவிலிருந்து வந்தவர். நீ ரோமையிலிருந்து வந்தவன், இயேசு பரலோகத்திலிருந்து வந்தவர். நீ இராயனுடைய அதிகாரத்தால் வந்தவன், இவரோ பிதாவின் அன்பினால் வந்தவர். இதை விசுவாசிக்கிறாயா? இன்று நீ விசுவாசிக்கமாட்டாய்; ஆனால் நான் இதை விசுவாசிக்கிறேன்.

இயேசுவின் சத்துருக்கள், நான் இராஜாதான் என்று இயேசு ஒத்துக்கொண்ட விஷயத்தை வைத்துக்கொண்டு, அவரைக் கொலைக்குட்படுத்த நமக்கு வழியுண்டேயன்றி வேறு வழியில்லை என்று உத்தேசித்து, தன்னை இராஜா என்கிறவன் இராயனுக்கு விரோதியல்லவா? இவன் தன்னை அப்படிப்பட்டவனென்று சொல்லுகிறான். ஆதலால் நீர் இவனை விட்டுவிட்டால் இராஜதுரோகியை உற்சாகம் செய்கிறதாகும் என்று அவனை ஆட்சேபித்து தாங்கள் கொண்ட கோரிக்கையின்படி இயேசுவை மரணைக்கினைக்கு ஒப்புக்கொடுக்கும்படி அவனை நெருக்கினார்கள். இப்படியாக என் மீட்பர் நியாயத்தினால் அல்ல, நியாய விரோதத்தினால் நெருக்கப்பட்டார்; அதாவது பொறாமை

யின் மூலமாய்ப் பாடுகளை அநுபவித்தார். இயேசுவைப் பிலாத்து பயமுறுத்தினான், பிலாத்துவை யூதர் பயமுறுத்தினார்கள். ஆனால் பிலாத்துவையும் யூதரையும் இயேசு பயமுறுத்தினார். அவர் மகா கனிவோடு "என்னை ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு" என்றார். இந்த வாசகம் இன்று என்னையும் பயமுறுத்தி என் குணப்படுதலை நாட ஏவுகிறது. இயேசுவை ஒப்புக் கொடுத்தவர்களில் நானும் ஒருவன்தான்; அப்போது நான் இல்லாவிட்டாலும், இப்போது அவருக்கு விரோத மாக நான் செய்துவரும் பாவம் அப்போது இருந்த இந்த பாவம்தான். ஆதாமின் பாவம் எப்படித் தொடர்ந்து வந்ததோ அதுபோல இதுவும் தொடர்ந்துவருகிறது.

நான் இயேசுவை அவமானத்துக்கு ஒப்புக்கொடுத்த பாவி!

நான் அவரை நிந்தைக்கு ஒப்புக்கொடுத்த பாவி!

எனக்கு அதிக பாவமுண்டு! ஆ, நான் பாவிகளில் பிரதான மானவன்தான். ஏனெனில் நான் சாதாரண பாவியா யிராமல் இயேசுவை ஒப்புக்கொடுத்த பாவியாக இருக் கிறேன்.

ஜெபம்

என்னால் ஒப்புக்கொடுக்கப்பட்டு, என் பாவங்களால் பயமுறுத்தல்களையும் பழிப்பையும் அடைந்த அன்புள்ள சுவாமியே, உம்மை வணங்குகிறேன். தேவரீர் என் னிமித்தம் அநுபவிக்கிற பாடுகளின் அவஸ்தை என்னைக் கலங்கடிக்கின்றது. இவைகளை நான் அன்று கூடவிருந்து கண்டாற்போல இன்று காணும்படிச் செய்கிறீர். இது உமது தயவுதான். நான் உமது பாடுகளைத் தியானிக்கத் தியானிக்க என் உள்ளம் உமதுபேரிலுள்ள நேசத்தால் பொங்கும்படி உமது அன்பின் அக்கினியால் என் உள்ளத் தைக் கொளுத்தியருளும். யூதருடைய விரோதங்களை நான் எவ்வளவாகக் காண்கிறேனோ அவ்வளவாக என்னுடைய நேசத்தை வளர்த்து உம்மைக் கனம் பண்ணும்படித் தயவுபுரிந்தருளும். நான் இன்னும் சமீப காலத்தில் உமது பாடுகளின் மகா பரிசுத்த ஸ்தலத்துக்

குள் பிரவேசிப்பேன். உமது பரிசுத்தஆவி அதற்குரிய பரிசுத்த சிந்தையால் என்னை நிரப்பும்படி வேண்டிக் கொள்ளுகிறேன். ஆமென்.

21. பிலாத்து கைகளைக் கழுவினது

வேதம்

"கலகம் அதிகமாகிறதேயல்லாமல் தன் பிரயத்தனத்தினாலே பிரயோஜனமில்லையென்று பிலாத்து கண்டு, தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி: இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்றான். அதற்கு ஜனங்களெல்லாரும்: இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக என்று சொன்னார்கள்" (மத். 27: 24, 25).

போதனை

பிலாத்து இயேசுவை விடுதலைசெய்ய அடிக்கடிப் பிரயாசப்பட்டான். நியாயம் அவர் பட்சத்திலிருந்தாலும், யூதரை மேவி அந்த நியாயத்தை நிறைவேற்ற முயற்சிபட்டானேயன்றி, நியாயத்தை அஸ்திபாரமாக வைத்து நடக்கவில்லை. இயேசுவை விடுதலைசெய்யும்படி அவன் அடிக்கடி முயன்று, அவர்பேரில் குற்றமில்லை என்று அறிக்கையிட்டதும், பஸ்கா விடுதலை முறைப்படியாவது அவருக்கு விடுதலை கொடுக்கலாமே என்று முயற்சிசெய்ததும் எல்லாம் கூடி சத்துருக்களின் விரோதத்தை அதிகப்படுத்திற்று. இயேசுவின்பேரிலிருந்த கட்சி மாறிப் பிலாத்துவின் பேரில் சாடினதுபோலிருந்தது. பிலாத்து நியாயத்தை உணர்ந்தவனாயிருந்தும், அதை நிறைவேற்ற வல்லமையற்றவனாய்த் தண்ணீரும் பாத்திரமும் கொண்டுவரச்சொல்லி, தன் கைகளைக் கழுவி, "இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்" என்றான். தீராத கட்சியில் இப்படிச் செய்து வழக்கை முடிப்பது வழக்கமாயிருந்தது. இப்படிக் கைகழுவும் வழக்கம், மோசேயின் பிரமாணத்திலிருந்து உண்டானதாகத்

தோன்றுகிறது (உபா. 21: 6). தாவீதின் காலத்திலும் இந்த வழக்க மிருந்ததென்று தோன்றுகிறது (சங். 26; 7).

இப்படிக் கை கழுவும் சடங்கைக் கண்டவுடனே, இயேசுவின் சத்துருக்கள் மலைவடைந்து, தங்கள் மும்முரத்திலிருந்து அடங்குவார்கள் என்று பிலாத்து நினைத்தான். அவர்களோ அடங்காமல் இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும், எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக என்று அபயமிட்டுப் பிலாத்துவை மடக்கினார்கள்.

தியானம்

ஆத்துமாவே, இயேசுவின்மேலுள்ள வெறுப்பை இங்கே பார்க்கிறாயே. நமது மீட்பரிடத்தில் குற்றமில்லை என்பது அதிகத் தெளிவாக விளங்குகிற வேளையில், அவர் வேண்டாமென்கிற வெறுப்பும் விளங்குகிறதல்லவா!

பிலாத்து கைகளைக் கழுவினது, கிறிஸ்துவின் குற்றமில்லாமையை விளம்பரப்படுத்தவல்ல, தன்னை இந்தப் படுதோஷத்திலிருந்து நீக்கிக்கொள்ளத்தான். பிலாத்துவே, இந்தச் சடங்கால் நீ உன்னை நீக்கிக்கொள்ளப் பார்த்தாயே, அப்படி நீங்கிக்கொண்டாயா? இல்லை. நீ தண்ணீரை யள்ளி "இந்த நீதிமானுக்கு நான் மரணாக்கினைத்தீர்ப்புச் செய்யமாட்டேன்; இவர் குற்றமற்றவர்; என் கைகள் இந்தத் தண்ணீரால் கழுவப்பட்ட பின்பு எவ்வளவு சுத்தமாயிருக்கிறதோ அதுபோல இவரும் என் விசாரணையிலும் ஏரோதுவின் விசாரணையிலும் குற்றமற்ற பரிசுத்தராக விளங்கிவிட்டார்" என்று மாத்திரம் சொல்லி முடித்திருந்தால் அது வேறுமாதிரியாயிருக்கும்: நீயோ உன் பழியைமாத்திரம் இந்தச் சடங்கால் நீக்கிக் கொள்ளப் பார்த்தாய். இதற்காகவா நீ நியாயாதிபதியானாய்? இதற்காகவா இப்போது நீ சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறாய்? உன்னைப்பற்றி நீ ஒன்றும் பேசாமல், உன் கைதியைப்பற்றிமாத்திரம்பேசவேண்டியதிருந்தது! அந்த அறிவை மறந்தாய்!

அது போகட்டும்:—"நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்" என்ற வாசகத்தையும் கூட்டின காரணமென்ன? இந்த வாசகந்தான் யூதருக்கு வேண்டியதாயிருந்தது. நீர் நீதியின்படியும், உமது மனதின்படியுமல்ல, எங்கள் மனதின்படிச் செய்ய இடங்கொடும் என்று வாதாடுகிறார்கள். நீயும் அதற்கு இணங்கி "நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லுகிறாய்! இப்படி நீ புத்தியீனமாய்ப் பேசின வாசகத்தால் வந்த பலனைப் பார்!

"அதற்கு ஜனங்களெல்லாரும், இவனுடைய இரத்தப் பழி எங்கள்பேரிலும் எங்கள் பிள்ளைகள்பேரிலும் இருப்பதாக" என்று அபயமிட்டார்கள். இந்த ஜனங்களில் ரோமரும் இருந்தார்கள். இவர்களில், ஆ, பிலாத்துவே உன் சேவகரும், சேனாதிபதிகளு மிருந்தார்கள். ஆகவே நீயும், உன் மனைவியும், உன் பிள்ளைகுட்டிகளு மிருந்தார்கள் என்றெண்ணிக்கொள்வாயாக. நீ உன்னைப் பிரித்துக் கொள்ளப் பார்த்தாய். அவர்கள் உன்னையும் இழுத்துக் கொண்டார்கள்!

இந்தப் பழியை உன்னைவிட்டு விலக்கிக்கொள்ளப் பார்த்த பிலாத்துவே, நீ விலகிக்கொண்டாயா? உன் உத்தியோகத்தை நீ இழந்ததும், நீ திரிந்தலைந்து மறுபடியும் உத்தியோகம்பெற நீ பட்ட கஷ்டமும், கடைசியாக உத்தியோகம் கிடையாமல் தற்கொலை புரிந்ததும் இந்த இரத்தப்பழி உன்னையும் உன் வீட்டையும் தொடர்ந்து பிடித்ததினாலேயல்லவா?

"இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலிருப்பதாக"

ஐயோ, எவ்வளவு பயங்கரமான வாசகம்? இப்படிச் சொல்ல அவர்கள் வாயெடுத்தது எவ்வளவு ஆச்சரியம். இங்கே என் இரட்சகர்பேரிலுள்ள அவர்கள் எரிச்சலின் அகோரம் தெரிகிறது. இப்படிப்பட்ட பயங்கரமான வாசகத்தை முதலாவது, கடையாகவும் சொன்னவர்கள் இவர்கள்தான். இதுமாத்திரமோ?—"இந்த இரத்தப்பழி எங்கள் பிள்ளைகள்மேலு மிருப்பதாக!!" என்றும் கூட்டிச் சொல்லுகிறார்கள்! வானதூதர் இந்த இரத்தப்பழியின் வாசகத்தைக் கேட்டு, தங்கள் பாடல்களை நிறுத்தி

வாயிலடித்துக்கொள்ளுகிறார்கள்; பிதாவாகிய தேவன், ஐயோ, இந்த ஜனங்கள் தங்களையும் தங்கள் பிள்ளைகளையும் எனக்குத் தூரமாக்குகிறார்கள் என்று துக்கிக்கிறார்; சாத்தானோ, தேவனுடைய ஜனங்கள் என்றென்றைக்கும் பகைக்கப்பட்டுப்போக வழிபண்ணிவிட்டோம் என்று சந்தோஷப்படுகிறான். ஆ, இந்த ஜனங்களின் மதியீனத்தை உணர்ந்து துக்கப்படுவேனாக. எல்லாப் பெற்றோரும் தங்களுடைய பின் சந்ததிக்கு நிலங்களை அல்லது ஆஸ்திகளை அல்லது பட்டப்பேர்களைச் சம்பாதித்துவைப்பார்கள். இவர்களோ இரத்தப்பழியை ஆஸ்தியாக வைக்கிறார்கள். ஐயோ ஏழைப் பிள்ளைகளுக்கு நித்திய பழியைச் சுமத்திவைத்த இந்தப் பெற்றோர் எவ்வளவு பொல்லாதவர்களாயிருந்தார்கள் என்று விளங்குகிறது.

பிலாத்துவின் அரண்மனைக்குள் பித்தம் பிடித்தவர்கள் போல் பழியேற்கும் ஓய் ஜனங்களே! இந்தப் பழியை ஏற்க உங்களாலும் உங்கள் பிள்ளைகளாலும் கூடுமோ? நீங்களும் உங்கள் பிள்ளைகளும் இந்தப் பழிக்குப் போதுமானவர்களா? தேவனுடைய பழியை ஏற்க மனுஷரெல்லாரும் கூடினாலும் அது போதுமானதல்லவே! ஆ, சகல சிருஷ்டிகளும் கூடி அவருடைய பழிக்கு உத்தரவாதம் செய்யக்கூடாதே! நீங்கள் இத்தனைபேரும் அதற்கு எம்மாத்திரம்! எம்மாத்திரம்!

இந்தப் பழியேற்கும் வாசகம், பிலாத்துவின் அரண்மனையில் தொனித்தவுடனே, ஒரு தேவதூதனால் பிதாவின் நியாயாசனத்தில் வரையப்பட்டதென்று தியானிக்கிறேன். ஆனால் இந்த வாசகம், இது கூறப்பட்டுச் சுமார் ஒருமணி நேரத்துக்குள் மாற்றப்பட்டது என்று சொல்லலாம். ஏனெனில் இயேசு சிலுவையில் தொங்கித் தமது வாயை முதலாவது திறந்து, இந்தப் பழிவாசகத்தை மாற்றுகிறவராக,

"பிதாவே, இவர்களுக்கு மன்னியும்
தாங்கள் செய்கிறதின்னதென்று
அறியாதிருக்கிறார்கள்" என்றார். (பரி.

லூக். 23: 34). இந்த மன்றாட்டால் இந்தப் பழி அவர்கள் தலையிலிருந்தும், அவர்கள் பிள்ளைகள் தலையிலிருந்தும் இறக்கப்பட்டது. எப்படியும் இந்த வாசகத்திலுள்ள "பழி" என்னும் பதம் கிறுக்கப்பட்டு, அழிக்கப்பட்டதினாலேதான் இன்றைக்கும் நாம் யூதஜாதியைக் கண்ணால் காண்கிறோம்.

அன்று யூதர் இயேசுவுக்கு விரோதமாக பழியேற்றுச் சொன்ன வாசகத்தில் "பழி" என்று பதம் நீங்கலாக மற்ற வார்த்தைகளை நான் ஒரு ஜெபமாக தினம்தோறும் பிரயோகிப்பது நல்லது என்று நினைக்கிறேன்; அந்த ஜெபமாவது:—

"பிதாவே, இயேசுவின் இரக்கம் என்மேலும் என் பிள்ளைகள்மேலு மிருப்பதாக. ஆமென்" என்பதே.

இந்த இரத்தமே என்னையும், என் பிள்ளைகளையும் மீட்டுக்கொண்டது. இதுவே என்னைப் பாவப்பழியிலிருந்து விடுதலையாக்கினது. இது என்மேலும், என் ஆத்துமாவின்மேலு மிருந்தால் என் பாவமன்னிப்பை நான் பெற்றுக்கொண்டேன் என்பதற்கு அது அத்தாட்சியாகும்.

ஜெபம்

இரக்கமுள்ள இயேசுவே, நீர் குற்றமற்றவர் என்பது பிலாத்துவின் அரண்மனையில் தெளிவாக விளங்கிற்று. ஆனால் என்னுடைய பாவங்களினிமித்தம் நீர் மரணமடைய வேண்டியதிருந்தபடியால், பிலாத்து உம்மை விடுதலையாக்கும்படிச் செய்த பிரயத்தனங்கள் பலிக்கவில்லை. நான் என் பாவங்களால் உமது பழியை என்மேல் சுமத்திக்கொள்ளுகிறேன். தேவரீர் என் மதியீனத்தை அறிந்திருக்கிறீர். இரக்கமாய் என் பாவங்களை மன்னித்து, நான் சுமத்திக்கொண்ட இரத்தப்பழியை என்னை விட்டு நீக்கி, அந்த இரத்தத்தால் என்னைக் கழுவி மீட்டுக்கொண்டருளும். ஆமென்.

22. பிலாத்து இயேசுவை வாரினுல் அடித்தது

வேதம்

"அவன் பரபாசை விடுதலையாக்கி, இயேசுவைப் பிடித்து வாரினுல் அடித்தான்" (மத். 27: 26; மாற். 15: 15; யோவா. 19: 1).

போதனை

பரபாஸ் விடுதலைபெற்முன்; இயேசுவோ வாரினுல் அடியுண்டார். என்னை அடிக்கிறவர்களுக்கு என் முதுகை ஒப்புக்கொடுத்தேனென்று உலக இரட்சகரைப்பற்றி ஒரு தீர்க்கதரிசனமுண்டு (ஏசா. 50: 6). உழுகிறவர்கள் என் முதுகின்மேல் உழுது, தங்கள் படைச்சால்களை நீளமாக்கிஞர்கள் என்று வேறொரு வாசகமும் உண்டு (சங். 129: 3). இந்த வாசகங்கள் கிறிஸ்துவில் நிறைவேறத்தக்கதாக இந்த வாரடி இயேசுவுக்குச் சம்பவித்தது. யூதர்கள் ஒருவனையும் நாற்பது அடிக்குமேல் அடிக்கக்கூடாது. இயேசுவின் சத்துருக்கள் அவருக்கு அநேக அடிகள் கிடைக்கும்படி அவரை ரோமரிடத்தில் ஒப்புவித்தார்கள். ரோமருடைய மிலாறு, கயிற்றிலாவது, தோல்வாரிலாவது, இடைக்கிடையே சிறுமணிகள்போல் பின்னப்பட்டதாயும், நுனியில் கூர்மையான இரும்புக்கம்பிகளும் கொடுக்குகளும் கட்டப்பட்டதாயுமிருக்கும். ஐந்து ஆறு வார்கள், ஒன்றுக ஒரு கைப்பிடிக் கம்பில் சேர்த்துக் கட்டப்பட்டு, ஒரு கொத்துச்சரம்போலிருக்கும். அடிக்கப்படும் குற்றவாளியின் வஸ்திரத்தைக் களைந்து, ஒரு துண்டுத்துணியை அவன் இடுப்பில் உடுத்தி, ஒரு தூணை அணைத்துக் கட்டிவைத்து முதுகைத் திறந்திருக்கப் பண்ணி, அப்பால் மிலாற்றுல் அடிப்பார்கள். சிலுவை மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கிறவர்களைமாத்திரம் இப்படி மிலாற்றினுல் அடிப்பார்களாம். இப்படி வாரால் அடிக்கப்படும்போது, அந்த வாரிலுள்ள இரும்புக்கம்பிகள் சதையைப் பிய்த்து இரத்தத்தைப் பீறிடப்பண்ணும். ஆகவே இப்படி அடிபட்ட முதுகு உழுத நிலம் போல சிதைந்து காணப்படும். இதைத் தியானித்த ஒரு கிறிஸ்தவப் புலவன்,

"துய்யதிரு மேனியெல்லாம்"
"நொய்ய உழுத நிலம்போலாகி—கன"
"சோரி சிந்த வாரதினால்"
"நீர் அடிக்கப்பட்டதென்ன? கோவே!"
"சேர்வையெல்லாம் சேர்ந்துபற்றி"
"சினந்து வஸ்திரங்களைக் களைந்தே—சதை"
"தெரிந்திடக் கற்றாணில் சேர்த்து"
"அடித்திட நீர் பொறுத்ததென்ன? கோவே!"

என்று புலம்பியிருக்கிறான்.

தியானம்

பரபாஸ் விடுதலையாக்கப்பட்டான்! இயேசுவினிமித்தம் பரபாஸ் விடுதலைபெற்றான். இயேசுவினிமித்தம் பாவியும் சண்டாளனுமாகிய நான் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்படுகிறேன். பரபாஸ் விடுதலையாக்கப்பட்டான் என்ற செய்தி எருசலேமைக் குலுங்கப்பண்ணிற்று. பல இடங்களிலிருந்து பண்டிகைக்கு வந்தவர்கள் இவன் பிடிபட்டுக் கைதியாயிருக்கிற செய்தியைக் கேட்டுச் சந்தோஷப்பட்டிருந்தார்கள். அவர்கள் சந்தோஷம் துக்கமாக மாறிற்று. யூதரே இனி நீங்கள் வேனிற்காலத்தில் வெளியே படுத்திருக்கக் கூடாது; இருட்டுக்காலங்களில் பயணம் செய்யக்கூடாது. ஏனெனில் உங்கள் சத்துருவாகிய பரபாசை நீங்களே விடுதலையாக்குகிறீர்கள். அவனால் இனிமேல் களவாவது கொலையாவது நடந்தால் துரைத்தனத்தார் உத்தரவாதாளாக மாட்டார்கள். பரபாசைத் தெரிந்துகொண்ட யூதர் இயேசுவை மரணாக்கினை செய்யும்படி விரும்பி,

இவனை அகற்றும், அகற்றும்
இவனைச் சிலுவையில் அறையும்

என்று கூவினார்கள். இப்படி இயேசுவை நானும் புறக்கணித்ததுண்டு; அவர் வேண்டாம்—அவருடைய போதனை வேண்டாம்—அவருடைய இரட்சிப்பு வேண்டாம்—அவருடைய ஆவி வேண்டாம் என்று புறக்கணித்துப் பேசினகால முண்டு. இப்போதோ நான் என் பாஷையை மாற்றி;

இயேசு வேண்டும், வேண்டும்

என்று கெஞ்சுகிறேன். இந்த மாறுதல் எனக்குண்டான தற்குக் காரணமென்ன? இயேசு வேண்டாம், வேண்டாம் என்று அவரை என்னைவிட்டு அகற்றின காலத்தில் அவர் என்னைப் பின்தொடர்ந்து,

என்னை அகற்றாதே, உன்னை மீட்டேன்;
என்னை விலக்காதே, உன்னை ரட்சித்தேன்

என்று கெஞ்சினார். அது முதல் என் ஓட்டம் நின்றது; அவர் எனக்கு வேண்டியவர் என்று என் ஆத்துமா அறிந்தது!

இவனை அகற்றும் அகற்றும்
இவனைச் சிலுவையில் அறையும்!

இந்த சத்தத்தைத் தூதர் சேனை கேட்டு; எங்கள் தேவனே வாரும், நீர் மனிதருக்குக் காட்டின தயவுக்குக் கிடைக்கிற மரியாதை போதும்! என்கிறார்கள். மரித்துப்போன ஆவிகள் அனைவரும் அவரைக் கூப்பிட்டு; எங்கள் மீட்பரே நீர் உடனே வந்துவிடும், உமக்கு இன்று இராஜகிரீடம் தரிப்பிக்கிறோம் என்கிறார்கள். அதற்கவர் பரலோக ஜீவன்களே, பரிசுத்த ஆத்துமாக்களே, சற்றே பொறுத்திருங்கள், நான் இந்த அரண்மனையிலே முடிசூட்டப்பட்டு, கொல்கதாவிலே கொலுவிருந்து என் இராஜ்யத்தை ஸ்தாபகம்பண்ணி உங்களண்டை வருகிறேன் என்கிறார்.

பரபாஸ் விடுதலையானபின்பு இயேசுவைப் பிலாத்து வாரினால் அடிப்பிக்கிறான். வாராலடிப்பது அடிமைகளுக்கும், சிலுவை மரணத்துக்குக் குட்படுகிறவர்களுக்கும் குறிப்பிட்ட தண்டனையாயிருந்தது. என் நேசரே, என் மீட்பரே—என் மணவாளரே—இந்தக் காட்சியை நான் என்னமாகச் சொல்லக்கூடும்! என் இருதயம் பதைக்கிறது. உமது நிலையங்கியும், மற்றும் வஸ்திரங்களும் களையப்படுகிறது. உமது உடலை இன்றுதான் உலகத்துக்குக் காட்டுகிறீர். ஆ, வானத்து அப்சலோமே! உமது தேகத்தில் மறு ஒன்றுமில்லை. ஆ அந்தப்பொன் மேனியை எவரும் பார்த்து பிரமிக்கிறார்கள். இது

பொன்னைத்தின்று பொன்போல விளங்காமல் பரிசுத்தம்
நிறைந்த பொன்மேனியாயிருக்கிறது. அந்தப் பகைவர்
உம்மை ஒருதூணோடு கட்டிவைக்கிறார்கள். நீர் அவர்கள்
அடியைக் கையால் தட்டக்கூடாதாம். உமது முகத்தைப்
பார்த்து அவர்களுக்கு இரக்கம் வரக்கூடாதாம். உமது
கண்ணீரை அவர்கள் கண் காணக்கூடாதாம். உமது
இரத்தத்தை மாத்திரம் அவர்கள் பார்க்க வேண்டுமாம்.
தங்களுடையவாரை வீசி அடிக்க உமது திருமுதுகுதான்
சரியான ஸ்தானமாம். தலையிலும், முகத்திலும், கன்னத்
திலும் இதற்குமுன் அடித்த அடிகளால் அவை வீங்கி, நன்
றாகப் பழுத்த பழம்போலிருக்கிறதாம். இன்னும் மீதி
யான வர்மத்துக்கு உமது முதுகுதான் ஏற்றதாம்!!

நீர் கட்டப்பட்டாயிற்று; சேவகன் வீசி அடிக்கிறான்!
ஐயோ சேவகன் அடிக்கிறான்; யூதர் நகைக்கிறார்கள்.
அவர்களில் சிலர், கடந்த நாலைந்து நாளுக்குமுன், எங்
களைத் தேவாலயத்தில் வியாபாரம் செய்யவொட்டாமல்
சவுக்கால் அடித்ததற்கு இதுதான் பதிலடி என்கிறார்கள்.
வேறு சிலர், இவனைச் சாக அடி என்கிறார்கள்!! என்
மீட்பரே, என் நேசரே, சிறு மழைத்தூரலில் உயர்ந்த
மலைகளிலிருந்து வெள்ளிக்கம்பிகள்போல் நீரோடைகள்
சாடுகிறதை நான் கண்டிருக்கிறேன்; இந்தப் பிலாத்துவின்
அரண்மனைக்குள் என் இரட்சிப்பின் கன்மலையிலிருந்து
செந்நீர் ஓடைகள் சாடுகின்றன! பிலாத்து இத்தனை அடி
என்று குறிக்கவில்லை. சேவகர் தங்கள் மனம் கொண்ட
படி அடிக்கிறார்கள். அடிக்க அடிக்க இரத்தம்மாத்திர
மோ, ஆ உமது முதுகிலிருந்து உமது மாம்சத்தின் சிறிய
துண்டுகளும் தெறித்து விழுகின்றன; நீர் இரத்த சோரை
யாய்ச் சோர்ந்து விழுகிறீர். ஆ, பரலோகமே! பரலோ
கமே! இந்த அடிகளை அடித்தவன் நான்தான். இந்த
மிலாறு என்பாவம்தான்!!

என் மீட்பரே, உம்மை அடித்துக் காயப்படுத்தின
பாவியாகிய நான் இப்போது உம்மோடுகூட உமது இரத்
தக்குளத்தில் புரளுகிறேன். நீர் எனக்கான மாப்பிள்ளை.
காயப்பட்ட புருஷனும் களைத்துப்போன கணவனும்

என்னுடைய அன்புக்கு வேண்டியது. நான் என் கண்ணீரால் உமது காயங்களைக் கழுவி, என் பெருமூச்சால் உமது எரிவைத் தணித்து என் நெஞ்சில் உம்மைச் சுமந்து என்னை களையாற்றுவேனாக.

என் நேச இயேசுவே, எல்லாப்பாடுகளோடும், இந்த அவஸ்தையானதும், கொடிய நோவுள்ளதுமான பாடுகள் உமக்கெதினால் சம்பவித்தது என்று தேவரீர் அடியேனுக்குத் திருவுளம் பற்றுவீராக!

உத்தரவு. உன் மாம்ச இச்சையினிமித்தம் அப்பா!
உன் மாம்ச இச்சையினிமித்தம் அப்பா!!

உன் முதுகின் கொழுப்பினாலும், உன் முதுகெலும்பின் பலத்தாலும், உன் இரத்த புஷ்டியாலும் நீ உன் முழுச் சரீரத்தையும் மாம்ச இச்சையால் தீட்டுப்படுத்தினாயே; நீ உபவாசத்தால் உன்னை வாட வைக்காமலும், ஜெபத்தால் உன்னை வேகவைக்காமலும், காட்டுக்கழுதைபோல் கனைத்துத் திரிந்தாயே. கொழுத்த எருதுபோல் முக்காரம்போட்டாயே; இதற்காகவே இந்தப்படி வாரால் அடிபட்டேன், பாவியே! வாரால் அடிபட்டேன், சிற்றின்ப தேகியே!! என்று சற்று விஸ்தரித்துச் சொல்லுகிறார்; ஆ, என்னை வெட்கத்துக்குட்படபண்ணினதும், நிந்தையும் அவலட்சணமுமுண்டாக்கினதும், மற்ற அநேக பாவங்களைப் பிறப்பித்ததும் இந்தப் பாவம்தான். இதற்காக நான் படவேண்டிய மிலாற்றடியை என் இரட்சகர் பட்டார்.

ஜெபம்

வாரால் அடிபட்டு இரத்தத்தை வஸ்திரம்போல் அணிந்துகொண்டிருக்கிற என் நேச இயேசுவே, என் மாம்ச இச்சைகளையும், மற்றெல்லாப் பாவங்களையும் நீக்கும்படி தேவரீர் இப்படி அடிபடச் சம்மதித்து உமது முதுகைத் திறந்து கொடுத்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். என் பாவங்களால் உம்மை அடித்தவனும் நானே. இந்த அடிகள் மூன்று நாளைக்குள் ஆறிப்போயின. ஏனெனில் நீர் வெற்றி வேந்தராக மூன்றாம் நாளில் எழுந்திருந்தீர். ஆனால் நான் நடப்

பித்த பாவங்கள் இன்னும் உமது மனதில் ஆறாத நோயை உண்டுபண்ணுகின்றன. கிருபையுள்ள கர்த்தாவே, என் பாவங்கள் அனைத்தையும் உமது முதுகில் ஓடும் இரத்தத்தால் கழுவி, என்னிலுள்ள மாம்ச இச்சைகளை என்னை விட்டு நீக்கி உமது சித்தத்துக்கு ஏற்ற சுத்த இருதயத்தை எனக்குத் தரவேண்டுமென்று, தேவரீருடைய பிலாற்றடியினிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

23. பிலாத்து இயேசுவுக்கு முள்முடி தரிப்பித்தது

வேதம்

"போர்ச்சேவகர் முள்ளுகளினால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து, சிவப்பான ஒரு அங்கியை அவருக்கு உடுத்தி: யூதருடைய இராஜாவே, வாழ்க என்று சொல்லி, அவரைக் கையினால் அடித்தார்கள்" (யோவா. 19: 2, 3).

போதனை

பிலாத்து இரட்சகரை வாரினால் அடித்தவுடனே யூதருக்குச் சந்தோஷமுண்டாயிற்று. இரத்தப்பிரியரான அந்த யூதர், இயேசுவின் முதுகில் காணப்பட்ட காயங்களைக் கண்டு, அகமகிழ்ந்து இவருடைய சாவைக் கண்டால் அல்லோ எங்கள் மனம் ஆறும் என்று சொல்லிக் கொண்டார்கள். பிலாத்துவோ, இந்த பிலாற்றடி போதும், இனி இவர் இந்த நோவால் தானே செத்துப் போனாலும் போவார் என்று யூதர் உத்தேசித்து தங்கள் மட்டில் போய்விடுவார்கள் என்று நினைத்தான். அவர்கள் இயேசுவின் சிலுவை மரணத்துக்கு எதிர் பார்த்தபடியால் இந்த அடிகளையும் காயங்களையும்; இரத்தப் பிரளயத்தையும், கண்டாலும் மனம்மாறவில்லை.

அப்புறம் பிலாத்து இவருக்கு இராஜவேஷம் போட்டு, பரியாசம் பண்ணினால், அதைப் பார்த்துச் சிரித்துச் சிரித்து மாணுக்கினை நினைவை மறப்பார்கள் என்று

பினைத்து முள்கொடியால் ஒரு பாகைபோல் சுற்றி அவர் சிரசில் வைத்து, சிவப்பான ஒரு அங்கியை அவருக்கு உடுத்தி, அவரைப் பரியாசம்பண்ணி அடித்தார்கள். சிவப்பங்கியால் அவருடைய இரத்தமெல்லாம் மறைக்கப் பட்டதால், பின்னும் அடிக்க விரும்பினவர்கள் மனம் கொண்டபடி அடிக்க இடமாயிற்று!

தியானம்

என் மீட்பரே, இம்மட்டும் நீர் அனுபவித்த பாடுகள் போதாதா? போதும், போதுமென்று என் ஆத்துமா சொல்லுகிறது. என் மீட்பரோ, ஆ பாவியே, உன் பாவ நிவாரணத்துக்கு இவ்வளவு பாடுகளை நான் சகித்தாலும் போதாது! போதாது! என்கிறார். என்னை மீட்கும்படி வரவேண்டிய தண்டனைகள் இன்னும் போதாதா? ஐயோ என் பாவங்கள் எவ்வளவு திரளாயிருக்கின்றன! ஆ, சாத்தானே, நீ என்னை எவ்வளவாய்க் கெடுத்துப்போட் டாய்? ஆ நான் எவ்வளவாகக் கெட்டுப்போனேன்!!

என் மீட்பர் முள்முடி சூட்டப்பட்டார்

என் மீட்பர் கற்றூணில் கட்டப்பட்டு, காயங்களுண் டாக அடிக்கப்பட்டபின்பு, முள்முடி சூட்டப்பட்டும், சிவப்பங்கி தரிப்பிக்கப்பட்டும் பரியாசம் செய்யப்பட் டார். இவ்வித பரியாசத்தை முதலாவது ஏரோது செய்தான். பிலாத்து அதைப் பின்பற்றுகிறான். இயேசு தம்மை யூதருடைய இராஜாவென்று ஒத்துக்கொண் டதை அந்தப் பகைவர் பிடித்துக்கொண்டு, பரியாசத் துக்காக அவருக்கு இராஜவேஷம் தரிப்பித்தார்கள். எந்த இராஜாவுக்கும் கிரீடமிருக்குமே; இயேசுவுக்கு அவர்கள் முள்முடியால் கிரீடம் சூட்டினார்கள்.

ஆத்துமாவே, உன் கண்ணைச் சற்றே ஏறெடுத்து இந்தக் கூட்டத்தைப் பார்! உன்னுடைய எல்லாத் துக்கத் தோடும், கண்ணீரோடும் சற்றுநேரம் எட்டிப்பார்! இங்கே அநேக கிரீடங்களைப் பார்க்கிறாயே? ஏரோது தன் கிரீடத்தோடும், சகல பிரதான ஆசாரியர் தம்தம் கிரீடங்களோடும் நிற்கிறார்கள். உன் மீட்பரும் தமது கிரீடத்தோடு தோன்றுகிறார். ராஜாக்களுக்கு பொற்

கிரீடங்களுண்டே, உமக்கு இந்த முள்கிரீடமே இனும் என்று சூட்டுகிறார்கள்! இதென்ன நிந்தை! இப்படி நிந்திக்கப்பட்டவர்கள் இவ்வுலகத்தில் ஒருவருமிருந்த தில்லை.

இந்த முள்கிரீடத்தால் இயேசு கிரீடமணிந்தவர்களாய் அங்கே நின்ற ஒவ்வொருவரையும் பார்த்து, ஓய் அதிபதிகளே, ஆசாரியர்களே, உங்களுக்கு மீட்புண்டாகும்படி இப்படி முள்முடி தரித்து நிற்கிறேன் என்று பிரசங்கிக்கிறார் என்று சொல்லவேண்டியது. அவர்களோ அதை உணரக்கூடாத இருதயமுள்ளவர்களாயிருந்தார்கள்.

என் மீட்பரே, இந்த முள்முடி என் யோசனையாலும், என் மூளையின் பலத்தாலும் நான் கிரகித்துச்செய்த எல்லாப் பாவங்களுக்காகவும் வந்த பாடு என்று உணருகிறேன்; ஆ இந்த முள்ளுகள், உமது தலையில் குத்தி மூளைமட்டும் வேதனை யுண்டாக்குகிறதே. இந்த அவஸ்தைகளைப்பற்றிய எண்ணமும் தியானமும் என் உள்ளத்தில் குத்தி என் அந்தக்காரணங்களைக் காயப்படுத்தி நான் அழுகையோடும் கண்ணீரோடும் மனந்திரும்பும்படி ஏவுவதாக!

இந்த முள்முடியைக் கண்டவுடனே, பரலோக தூதர் ஓடி உமக்கு ஆதினமான மகத்துவ கிரீடத்தை எடுத்து வந்து, எங்கள் தேவனே, முள்கிரீடத்தை உதறி, இதை அணிந்துகொள்ளும் என்று வேந்துகிறார்கள். தேவரீரோ, உமது தலையை அசைத்து, தூதரே பொறுங்கள், என்னை விசுவாசிக்கிற பிள்ளைகளுக்கு ஜீவகிரீடம் உண்டுபண்ணுவதற்கு நான் இப்போது தலை அளவு எடுக்கிறேன்; இந்தக் கிரீடத்தை நான் உதறினது மெய்யானால்; நானே இரட்சண்ய இராஜாவென்பது இவ்வுலகத்துக்குத் தெரியாமற்போகுமே! என்கிறார். எனக்கு ஜீவமுடி செய்வதற்கு முள்முடி தாங்கின இயேசுவே, உம்மை வணங்குகிறேன். நீர் என்மேல் பாராட்டும் தயவு அதிகமாயிருக்கிறது.

என் மீட்பர் சிவப்பங்கி தரிக்கப்பட்டார்

இம்மட்டும் என் நேசர் வெள்ளை முகத்தோடும், வெள்ளை உடுப்போடும், வெள்ளை இருதயத்தோடும் விளங்கினார். இப்போது வெள்ளை மாறி வேறு நிறமாய் விளங்குகிறார். அவர் தமது முகத்தில் உடையிலும் உடலிலும் செந்நிறமாக விளங்குகிறார். அவருடைய முகமும், உடலும் காயங்களால் சிவந்து விளங்குகிறது. அவருடைய இருதயம் துக்கத்தால் கனிந்து சிவந்திருக்கிறது; அதற்கிசைவாக அவருடைய உடையும் சிவப்பாயிருக்கிறது.

அந்த சத்துருக்கள், அவருக்கு இராஜவஸ்திரம் ஒன்று வேண்டுமென்று சிந்தித்து இந்தச் சிவப்பங்கியைத் தரிப்பித்தார்கள். அத்தோடு இந்தச் சிவப்பங்கியால் இரத்தம் வடிந்த அவருடைய காயங்களை மறைக்கவும் பார்த்தார்கள். என் இயேசுவே, என் பாவங்கள் சிவேரென்றும், இரத்தாம்பரச் சிவப்புப்போலும் என் இருதயத்தைப் பிடித்திருந்ததால், அதை நான் அறிந்துகொள்ளும்படி இப்படிச் சிவப்பங்கிச் சாயலால் எனக்குப் படம் காட்டுகிறார். இப்போது அவர் விளங்கும் சாயலுக்கும் என் பாவ இருதயத்தின் சாயலுக்கும் வித்தியாசமில்லை. என் இருதயம் இரட்டைச்சாயம் தீர்ந்த வஸ்திரம்போலிருக்கிறது. ஆ, நான் இரட்டைச்சாயம் தீர்ந்த பாவியாயிருக்கிறேன். நான் ஜென்மத்தாலும் பாவி! செய்கையாலும் பாவியப்பா!! என் மீட்பராக வந்த இயேசுவும் அதற்கிசைவாக இரட்டைச்சாயம் தீர்ந்த இரட்சகராக விளங்கினார் என்று தியானிக்கிறேன்.

அவர் இரத்த மேனியோடு விளங்குகிறார்!
அவர் இரத்த உடையோடு விளங்குகிறார்!

ஆ, இரத்தமயமான என் கணவனே! என் இரத்தாம்பர பாவ ஸ்திதியை நீர் காட்ட இரத்தாம்பரம்போலாகுமட்டும் எனக்காக பாடுபட்டீரே! இதை நான் மறக்கலாமோ?—இதை நான் மறப்பேனு?—மறக்கவே மாட்டேன். என் இரத்தாம்பர பாவத்தையும், பாவச் செய்கைகளையும் உமது இரத்தத்துக்குள்ளும் சிவப்பங்கிக்

குள்ளும் புதைக்கிறேன். ஏனெனில் அதினால் நீர் என்னையும், என் சிந்தைகளையும், கிரியைகளையும் பஞ்சைப்போல வெண்மையாக்குகிறீர்.

பூலோகமே, பூலோகப் பாவியே, கேள்! இரத்தத்தில் ஒருவன் புரண்டால் வெண்மையாவானோ, அழுக்காவானே. ஆனால் இயேசுவின் இரத்தத்தில் நீ புரண்டாலோ அப்படி அழுக்காகாமல், பாவ அழுக்கு நீங்கி, வெண்மையாவாய் — வெண்மையாவாய் — வெண்மையாவாய்.

பூலோகமே, பூலோகப் பாவியே, கேள்! ஒருவன் சிவப்பங்கி தரித்திருந்தால் வெள்ளையாய்த் தோன்றுவானோ? சிவப்பாகத் தோன்றுவானே. ஆனால் இயேசுவின் சிவப்பங்கியை நீ விசுவாவாசத்தோடு தரித்துக் கொண்டதுண்டானால், நீ சிவப்பாயல்ல, வெண்மையாய்—வெண்மையாய்—வெண்மையாய் விளங்குவாய்.

ஜெபம்

முள்முடியோடும் சிவப்பங்கியோடும் காணப்படும் இயேசுவே, உமக்குமுன் பணிந்து உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்; தேவரீர் இந்த முள்முடியால் எனக்கு ஜீவமுடியையும், இந்தச் சிவப்பங்கியால் எனக்கு நீதியின் அங்கியையும் சம்பாதித்திருக்கிறீர். இந்த இரண்டு உடுப்பும் எனக்கில்லாதபட்சத்தில் நான் உமது பிதாவின் சமுகத்தைத் தரிசிக்கக்கூடாதென்றும் உம்மோடு நித்திய ஜீவனைச் சுதந்தரிக்கமாட்டேன் என்றும் நீர் அறிந்தீர். உம்முடைய குரூரமான பாடுகளால் தேவரீர் எனக்குச் சம்பாதிக்கிற இந்த இரண்டு வெகுமதிகளையும் நான் இழந்துபோகாதபடி உம்மை உறுதியாய் விசுவாசிக்கவும், ஊக்கமாய் நேசிக்கவும் உமது பரிசுத்த ஆவியைக் கொண்டு என்னை நடத்தியருள வேண்டுமென்ற தேவரீருடைய பாடுகளினிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

24. பரியாச இராஜகோலம்

வேதம்

இயேசுவைத் தேசாதிபதியின் அரண்மனையிலே கொண்டுபோய்ப் போர்ச்சேவகரின் கூட்டம் முழுவதையும் அவரிடத்தில் கூடிவரச்செய்து, அவர் வஸ்திரங்களைக் கழற்றி, சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து, அவர் வலது கையில் ஓர் கோலைக் கொடுத்து, அவர் முன்பாக முழங்காற்படியிட்டு: யூதருடைய இராஜாவே, வாழ்க என்று அவரைப் பரியாசம்பண்ணி, அவர்மேல் துப்பி, அந்தக் கோலை எடுத்து அவரைச் சிரசில் அடித்தார்கள்.

பிலாத்து மறுபடியும் வெளியேவந்து: நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்று நீங்கள் அறியும்படிக்கு, இதோ, உங்களிடத்தில் இவனை வெளியே கொண்டுவருகிறேன் என்றான். இயேசு, முள்முடியும் சிவப்பங்கியும் தரித்தவராய் வெளியே வந்தார். அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி: இதோ, இந்த மனுஷன் என்றான். பிரதான ஆசாரியரும் சேவகரும் அவரைக் கண்டபோது: சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்று சத்தமிட்டார்கள். அப்பொழுது அவரைச் சிலுவையில் அறையும்படிக்கு அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்தான்'' (மத். 27: 27–30; மாற். 15: 16–19; யோவா. 19: 4–6; 16).

போதனை

இயேசுவுக்குக் கடைசியாக நேரிட்ட பாடுகளும், அவமானங்களும் பரி. மத்தேயுவால் நமக்கு விவரமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த எல்லாப் பாடுகளாலும், இயேசு சர்வலோகத்துக்கும் இரட்சண்ய இராஜாவாயிருக்கிறாரென்று வெளியாகிறது. மேலேகாட்டிய வசனங்களால் நாம் பின்வரும் குறிப்புகளை அறிகிறோம்.

இயேசுவை மத்தியில் வைத்து, ரோமைச் சேவகர் அவரைச் சுற்றி நிற்க நிறுத்தப்பட்டார்கள்.

2. இயேசுவின் வஸ்திரம் உரிந்துபோடப்பட்டது.

3. இயேசுவுக்கு ஒரு சிவப்பங்கி தரிப்பிக்கப்பட்டது.
4. இயேசுவுக்கு முள்முடி சூட்டப்பட்டது.
5. அவர் வலதுகையில் ஒருகோல்கொடுக்கப்பட்டது.
6. அவரைப் பரியாசத்துக்காக வணங்கினார்கள்.
7. அவர்மேல் துப்பினார்கள்.
8. அவருடைய முள்முடிமேல் கோலால் அடித்தார்கள்.
9. அவர் ஒரு வேடிக்கையாகக் காட்டப்பட்டார்.
10. ஆசாரியர் அவரைச் சிலுவையில் அறையவேண்டுமென்று சத்தமிட்டார்கள்.
11. பிலாத்து இயேசுவைச் சிலுவையில் அறைய ஒப்புக்கொடுத்தான்.

தியானம்

ஆ, என் தியானத்தில் உட்காருமுன் மேலே காட்டிய பதினொரு குறிப்புகளையும் மறுபடியும் ஒருதரம் வாசித்துப் பார்ப்பேனாக! [மறுபடியும் வாசித்துக்கொள் அப்பா!—மறுபடியும் வாசித்துக்கொள் அம்மா!]

ஆ, இக்குறிப்புகளை வாசிக்க வாசிக்க, என் மூச்சு அடைக்கிறது!—என் உதடு துடிக்கிறது!—என் நாவு வறளுகிறது!—என் மனம் கொதிக்கிறது!—என் கண் நீராய்ச் சொரிகிறது!—என் பெருமூச்சால் இளைக்கிறேன்!—நான் சோர்ந்து விழுகிறேன்! ஆ, நான் சோர்ந்து போனேன்!! இந்தச் சோர்பால் நான் மாண்டுபோவேனானால் எனக்கு மோசம்!! நான் இந்தப் பாடுகளைக் கேட்டுச் சாகிறது என் இரட்சகருக்குப் பிரியமில்லை; அதை விசுவாசித்து இரட்சண்யத்தைப் பெற்றுக்கொள்வதையே அவர் விரும்புகிறார்.

சோர்பை நீக்கும் ஆவியே
சோர்ந்துபோன பாவியை
சோர்பு நீக்கித் தேற்றுமேன்
சோர்ந்துபோன பாவியை. ஆமென்.

தேவன் தமது தூதரிலொருவனை அனுப்பி என்னைத் தேற்றாமல் தமது ஆவியை அனுப்பி என்னைத் தேற்றினார்.

அல்லேலூயா! ஏனெனில் ஒரு தூதனல் என் சோர்பை மாற்றக்கூடாதென்பது அவருக்குத் தெரியும்.

1. என் இயேசுவைச்சுற்றிப் போர்ச்சேவகரின் கூட்டம் முழுவதும் நிற்கிறதைக் காண்கிறேன். அவர்கள் கையில் மீட்பர் அகப்பட்டுக்கொண்டாராம். அடிக்கடி மறைந்துபோன இரட்சகரை இவர்கள் பிடித்துக்கொண்டார்களாம். இவரை இராஜாவைப்போல் ஒரு ஆசனத்தில் வைத்து, அவருக்குப் பரியாசமான மரியாதைக்காகச் சுற்றி நிற்கிறார்கள். இந்தக் காட்சியானது "நாய்கள் என்னைச் சூழ்ந்து பொல்லாதவர்களின் கூட்டம் என்னைச் சுற்றிக்கொண்டது" என்கிற வேதவாக்கியத்தின்படியே இருக்கிறது. இந்தக் கூட்டத்தில் நானுமிருக்கிறேன். நானும் உம்மை முன்காலங்களில் அவமதித்துப் பரியாசம் செய்த பாவிதான். இப்போதோ நீர் என் இரட்சண்ய இராஜாவாக கொலுவிருக்கிறீர் என்று உணருகிறேன். இந்தப் பீடத்திலும் உயர்ந்த சிம்மாசனத்தில் பிதாவானவர் உம்மை உட்காரப்பண்ணப்போகிறார்! நீர் சிலுவையிலே சிம்மாசனபதியாக வீற்றிருப்பீர்.

என் மீட்பரே, காபிரியேலும், கேருபீன் சேராபீன்களும் உம்மைச் சூழ்ந்திருந்ததுண்டே? ஆ, வானசேனை உம்மைச்சுற்றி நின்றதுண்டே? இப்போது, இதோ சாத்தான் தன் சேனையை உமக்குக் காட்டி, உம்மைப் பயப்படுத்துகிறனுக்கும்; ஆ, சேவகரே, ஓய் சேனுதிபதியே, ஆ, பிலாத்துவே, இப்படி என் மீட்பரைப் பரியாசம் செய்யாதேயுங்கள். ஏனெனில் இவர் முன் நானும் நீயும் கைகட்டி, வாய்மூடி நிற்கவேண்டியதுண்டு; இவர் பரிசுத்தமுள்ள தேவனும் என் இரட்கருமானவர்.

2. இயேசுவின் வஸ்திரம் உரியப்படுகிறது. இத்தோடு என் பாவம், என் வெட்கம், என் அவமானம் எல்லாவற்றையும் அவர் உரிந்து தாம் அணிந்துகொள்ளப் போகும் சிவப்புங்கியால் குறிக்கப்பட்ட நீதியின் வெண் வஸ்திரத்தால் என்னை மூடப்போகிறார்.

3. என் மீட்பர் முள்முடியோடும், சிவப்பங்கியோடும் கொலுவிலிருந்து, மகனே வா, மகளே வா. இதோ

ஜீவகிரீடம், இதோ வெள்ளை அங்கி என்கிறார்; அவருடைய முள்முடிக்குள் அநேக ஜீவமுடிகளும், சிவப்பங்கிக்குள் அநேக வெள்ளை அங்கிகளுமிருக்கின்றன. கூப்பிட்ட வுடன் போகிறவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கிரீடமும், அங்கியும் கிடைக்கிறது. ரோமைச் சேவகர் கண்களின் அந்தகாரமும் யூதர் கண்களில் திரையுமிருப்ப தால் அவர்கள் இதை அறியாமல் நகைக்கிறார்கள். நானோ தேவாவியால் கண் தெளிவிக்கப்பட்டு இவைகளைக் காண்கிறேன். நான் அந்தக் கூட்டத்தைத் தாண்டி அவைகளை வாங்கிக்கொள்ளுகிறேன். வாசிக்கிறவனே, நீயும் உன் பாவத்தடைகளைத் தாண்டி வாங்கிக்கொள்ள வா அப்பா! வாங்கிக்கொள்ள வா அம்மா!!

4. வலது கையில் ஒரு கோல். இது ராஜசெங்கோலின் பரியாசமாம். இது மூங்கிலாம். ஆ, சேவகரே, இந்தத் தடியை ஏன் கொடுத்தீர்கள்? உங்களை அடிக்கவா? துரத்தவா? அவரை மடக்க உங்களுடைய பட்டயங் களும் ஈட்டிகளும் போதாது. உங்களை மடக்கவோ, இந்த மூங்கில்தடி போதும். உங்கள் பார்வைக்கும் மதிப்புக்கும் இது மூங்கில்தடி; இதை அவர் உங்களுக்கு விரோதமாகப் பிரயோகிக்கும் இருப்புக் கோலாக்க வல்லவர். அவருடைய வல்லமை இதின்வழியாக வந்தால் நீங்கள் நாசமாவீர்கள்—நாசமாவீர்கள்.

மூங்கிலைச் செங்கோலாகப் பிடித்திருக்கும் இரட் சண்ய இராயரே, அந்தக் கோலால் என்னைத் தொட்டு, அதின் வழியாக உமது இரட்சண்யம் என் உள்ளத்தில் செல்லும்படிப் பண்ணும். அதை இவர்களும், இவர் களைப்போலொத்த பாவிகளும் கண்டு உம்மைப் பணிந்து கொள்ளப்பண்ணும்.

ஜெபம்

இரட்சண்ய இராஜாவாகிய இயேசுகிறிஸ்துவே, தேவரீர் என் பாவங்களுக்காகச் சொல்லமுடியாத நிந்தைகளையும் அவமானங்களையும் சகித்தீரே! இவைகளை நான் பக்திவிநயத்தோடு ஞாபகப்படுத்தி, இவையனைத் துக்கும் என் பாவங்களே காரணமாயிருந்ததென்று

நினைவுகூருகிறேன். ஏழைப் பாவியாகிய என்மேல் கிருபையாயிரும். தேவரீர் என் பாவங்களை மன்னித்து, எனக்கு ஜீவகிரீடம் சூட்டி, வெண்வஸ்திரம் தரிப்பித்து, உமது பிதாவின் சமூகத்தில் என்னை நிறுத்தும். அப்போது உமது பிதாவும், தேவதூதரும், மகாத்துமாக்களும் இப்படிப்பட்ட பாவியும் மீட்கப்பட்டதைக் கண்டு உமது பிதாவை மகிமைப்படுத்தி உம்மை என்னோடு ஸ்தோத்திரிப்பார்கள். உமக்கும் உமது பிதாவுக்கும் ஸ்தோத்திரமுண்டாக அடியேனை ரட்சித்தருளும், சுவாமி. ஆமென்.

25. பரியாச இராஜவணக்கம்

வேதம்

☞ முந்தின தியானத்து வேதவசனங்களை இங்கே வாசித்துக்கொள்ளவும்.

தியானம்

1. என் இரட்சண்ய இராயரே, உமக்குமுன் முழங்கால் படியிட்டு உம்மை வணங்குகிறேன். நான் இந்தக் கும்புகளைப்போல இம்மட்டும் உம்மைச் சரியாய் வணங்கவில்லை. என் வணக்கத்தால் உம்மைப் பரியாசம் பண்ணினதுண்டு. இப்பொழுது ஒரு பாவி உம்மை வணங்கவேண்டிய பிரகாரமாக வணங்குகிறேன். கீழ்த்திசை சாஸ்திரிகளைப்போல் சாஷ்டாங்கமாக விழுந்து உம்மைப் பணிகிறேன். என்னுடைய . . . . வருஷத்துப் பாவங்களையும் உமது பாதத்தில் காணிக்கையாகப் படைத்து, உம்மை வணங்குகிறேன். [இவ்விடத்தில் உன்னுடைய ஞாபகத்தில் வரும் பாவங்களையெல்லாம் அறிக்கையிடுவாயாக] . . . . என் மீட்பரே இவைகளைச் சுமந்துதீரும்; உம்மால் பாவியாகிய நான் பிழைப்பேனாக.

உம்முடைய சத்துருக்கள் அனைவரும் பரியாசத்துக்காக முழங்காலில் நிற்கிறார்கள். இந்தப் பரியாச வணக்கமானது, உமக்கு இவர்களால் வரவேண்டிய வணக்கத்தை மாற்றிக் காட்டுகிறதேயன்றி வேறல்ல;

இவர்கள் தங்கள் முழங்காலில் நின்று, "யூதருடைய இராஜாவே வாழ்க" என்று சொல்லுகிறார்கள்; நானோ இந்த இரைச்சலின் மத்தியில்;

பரலோக இராஜாவே, வாழ்க!
தூதர்களின் இராஜாவே, வாழ்க!
பரிசுத்தவான்களின் இராஜாவே, வாழ்க!
சர்வலோகத்தின் இராஜாவே, வாழ்க!
இரக்ஷண்ய இராஜாவே, வாழ்க!
என் சொந்த இராஜாவே, வாழ்க!

என்று ஓலமிட்டு, ஓலமிட்டு உம்மை வணங்குகிறேன். என் வணக்கத்தின் ஓலத்தை யூதர் கேட்டு மௌனமாகிறார்கள். தூதர் கேட்டு, ஆமென்—ஆமென்—ஆமென் என்பார்களாக.

2. இந்தப் பரியாச வணக்கத்தோடு, உம்மைத் துப்புகிறார்கள். ஆ, யூதரே, சேவகரே, அந்தப் பரிசுத்தவானையல்ல, என்னைத் துப்புங்கள்! அந்த தேவனையல்ல என்னைத் துப்புங்கள். பாவத்துக்காகத் துப்பப்படவேண்டியவனும் அடிபடவேண்டியவனும் நான்தான், அவரல்ல;—நான்தான், அவர் அல்ல. ஆ யூதரே, சேவகரே! இனம் தெரியாமல் துப்புகிறீர்களோ!

ஆ, பாவியே, இச்சமயத்தில் சர்வலோகத்தின் பாவமும் என்மேலிருக்கிறது. ஆதலால் நீயல்ல, நான்தான் துப்பப்பட்டு அடிபடவேண்டியவன். உன் பாவத்துக்காகவே மறுபடியும் துப்பப்படுகிறேன். முன் யூதருடைய உமிழ்நீரால் அபிஷேகம் பெற்ற நான் இப்பொழுது ரோமருடைய உமிழ்நீரால் அபிஷேகம் பெறுகிறேன். நான் உன் இரக்ஷண்ய இராஜாவாக அபிஷேகம் பெறும்படி பிதாவானவர் குறித்த அபிஷேக தைலம் இதுதான். உனக்கு மீட்பாக வேண்டியதினிமித்தம் இதை நான் மரியாளின் நளது தைலத்திலும் உயர்ந்த தைலமாக ஏற்றுக்கொள்ளுகிறேன்.

ஆ, அன்பே! உன்னத அன்பே! உன்முன் பணிகிறேன்!

ஆ, நேசமே, அநாதி நேசமே! உன்முன் குனிகிறேன்!

ஆ, தாழ்மையே, ஆழ்ந்த தாழ்மையே, நமஸ்காரம்!

ஆ, பொறுமையே, நீண்ட பொறுமையே, சாஷ்டாங் கம்!

3. என் மீட்பரைப் பிலாத்து வேடிக்கையாகக் காட்டி

''இதோ இந்த மனுஷன்''

என்று சொன்னான். ஆ, இயேசுவே, பிலாத்துவுக்கு உம் மைப்பற்றி இவ்வளவுதான் தெரியும், இதற்குமிஞ்சித் தெரியாது. அவனுக்குப் படித்துக் கொடுத்தாலும் இதற்குமிஞ்சித் தெரியாது; எனக்கோ நீர் மனுஷனல்ல, தேவன். ஆகவே நான் பிலாத்துவின் சத்தம் அடங்கிப் போகத்தக்கதாகச் சத்தமிட்டு, விசுவாசத்தால் உம் மைச் சுமந்து,

இதோ, இந்த தேவனைப் பாருங்கள்

என்று கூவுகிறேன். என் சிருஷ்டிகரே, என் மீட்பரே, உம்மை வணங்குகிறேன். என் மனமே, சிந்தையே! அந்தக்கரணமே, ஆவியின் தத்துவங்களே, சத்துவங் களே நீங்கள் அனைவரும் வந்து,

''இதோ, இந்த தேவனைப் பாருங்கள்''

என் சரீரமே, சரீர உறுப்புகளே, ஆ, என் கண்களே, இந்தத் தேவனைப் பாருங்கள். என் தேவன் என்னை நேசித்ததினிமித்தம் இக்கோலமானார்!!

பிலாத்து இயேசுவைக் காட்டி, இதோ பாருங்கள் என்று கூப்பிட்டும், அவர்கள் பார்க்க மனமில்லாமல், தங்கள் கண்களை மூடிக்கொண்டும், வேறுபக்கம் பார்த்துக் கொண்டும்,

''சிலுவையில் அறையும்''

''சிலுவையில் அறையும்''

என்று சத்தமிட்டார்கள். பார்க்க விரும்புகிறவர்கள் பார்க்காதபடி அது அவ்வளவு அந்தக்கேடாயிருந்ததால், அவர்கள் தங்கள் முகங்களை மறைத்துக்கொண்டார்க ளாக்கும். எனக்கு இந்த முகந்தான் வேண்டும்; இந்த முகம் என் இரட்சண்ய முகம். ஆ, என் தேவனுடைய

சரியான முகத்தைக் காண என் மாம்சம் தாங்காது. பரிசுத்தமுள்ள மோசே அதைக் காண அச்சம்கொண்டு தன் முகத்தை மூடிக்கொண்டானே. சீஷர் அதை மறுரூப மலையில் காணப் பயப்பட்டுக் குப்புறக் கிடந்தார்கள். சம்மனசோர் அந்த ஜோதிமுகம் பார்க்க இயலாதவர்களாக தங்கள் முகங்களை மூடிக்கொண்டு பாடுகிறார்களே. அந்தத் திருமுகத்தை நான் பார்க்க நடுங்குகிறேன். இந்தப் பாடுகளின் முகந்தான் எனக்கேற்ற முகம் இந்த முகத்திலே என் பாவங்களையும், அதின் தண்டனைகளையும் நான் காண்கிறேன். இதோ பிலாத்து காட்டும் இந்தச் சாயலில்தான் என் பாவசாயலைக் கண்ணாடியில் காண்கிறதுபோல காண்கிறேன். ஆதலால் நான் மனந்திரும்பி, பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும்வரையும், என் மீட்பின் அதிபதியை நோக்கிக்கொண்டிருப்பேனாக!

4. என் இயேசுவைச் சிலுவையில் அறையும் என்று கூவும் சத்துருக்களே! உங்கள் ஆசை இன்னும் தீரவில்லையா? உங்கள் கோஷ்டம் இன்னும் அடங்கவில்லையா? ஆ, இன்று பஸ்கா நாளாயிற்றே. ஆட்டின் இரத்தத்தை உங்கள் வாசல் நிலைகளில் பூசுமுன்னே, இந்த தேவாட்டின் இரத்தத்தை நான் என் இருதயத்திலே பூசிக்கொள்ளட்டும். பஸ்கா இறைச்சியை இன்று தின்னும் பற்களே, நான் இவரை என் விசுவாசத்தியானத்தால் புசிக்கட்டும், புளிப்பில்லா அப்பம் தின்னப்போகும் பாதகரே, துற்குணமும் பொல்லாப்புமில்லாத இந்தப் பரம அப்பத்தை என் தியானத்தால் புசிக்கட்டும், சற்றே பொறுங்கள். நீங்கள் அவரைச் சிலுவையில் அறையுமுன், நான் அவரை என் நெஞ்சத்தில் அன்பினால் ஆணியடித்துக்கொள்ளுகிறேன்.

என் நேசரின் அன்பைவிட்டு என்னைப் பிரிப்பது எது? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ, மரணமோ, உயர்வோ, தாழ்வோ, வேறெதுவோ, இவை

ஒன்றுவது, இவையனைத்தும் கூடியாவது, என் மீட்பர் மேலுள்ள அன்பைவிட்டு என்னைப் பிரிக்கவேமாட்டாது.

ஜெபம்

எனக்காக மரணுக்கினைக்குட்பட்ட தேவ ஆட்டுக் குட்டியாகிய இயேசுவே, தேவரீர் அநியாயம் ஒன்றும் செய்யாதிருக்க, என்னுடைய பாவங்கள் உம்மேல் சுமத் தப்பட்டதினால் முள்முடி சூடப்படவும் சிவப்பங்கி தரிப் பிக்கப்படவும், பரியாசம் நிந்தைகளை அநுபவிக்கவும் நேரிட்டது. அந்த எல்லாப் பாடுகளையும் இப்பொழுது நினைவுகூர்ந்து என் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு உம்மிடத்தில் அறிக்கையிடுகிறேன். தேவரீர் என் பாவ அறிக்கையை அங்கீரித்து, இனி நான் பாவம் செய்யாத படி வரம் தாரும்.

மகிமையின் இராஜாவே, இம்மட்டும் நான் உண்மை யற்றவனும் நம்பிக்கைத் துரோகியுமாயிருந்தேன். என் நன்றிகேடுகளுக்கோ ஒரு கணக்கில்லை. நான் உமது பிள்ளை என்று பேர்சொல்லியும் உமக்குப் பகைஞு யிருந்தேன்: இப்போதும் என் மீட்பரே, என் பாவங்க ளனைத்தையும் தயவாக மன்னித்து, என் இருதயத்துக்கு உமது பரிசுத்தஆவியின் கிருபைகள் அனைத்தையும் அநுக்கிரகம் செய்யவேண்டுமென்று உமது பாடுகளினி மித்தம் வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

மகா பரிசுத்த ஸ்தலம்

ஜெபம்

பரமபிதாவே! உமது திருக்குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய பாடுகளின் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் அடியேன் பிரவேசிக்கப்போகிறேன். நான் பிரவேசிக்க உத்தரவு தாரும். பூர்வகாலத்திலிருந்த யூதர், மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கவும், அங்கே நடந்த பாவநிவாரணபலியின் முறைமையைப் பார்க்கவும் கூடாதபடி ஒரு தடித்த திரை அதை ஜனங்களுக்கு மறைத்தது; அந்தத் திரை உமது குமாரனாகிய இயேசுவின் மரணத்தால் கிழிக்கப்பட்டுப்போயிற்றே. எனக்கும் இந்த மகா பரிசுத்த ஸ்தலத்துக்கும் மத்தியிலிருக்கும் அறிவீனம், அவிசுவாசம், பாவம் என்னும் திரைகளைக் கிழித்து, அந்தப் பாடுகளனைத்தும், அதின் எல்லா இரகசியங்களோடும் என் மனதில் பதியவும், அதில் விளங்கிய உமது அன்பை நான் அறியவும், உமது குமாரனை நேசிக்கவும் என்னை ஏவியருளவேண்டுமென்று, இயேசுகிறிஸ்துவினிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

எச்சரிப்பு வாசகம்

யாத்திராகமம் 3: 5.

"உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி"

ஜெபம்

இரக்கமுள்ள பிதாவே, உமது திருக்குமாரனுடைய பாடுகளின் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கப் போகிறேன். பிரதான ஆசாரியர் மாத்திரம் பார்க்கிற மகிமைகளைச் சகல பாவிகளும் பார்க்க இடமுண்டாகும்படி திரை கிழிந்துவிட்டது. இந்த மகா பரிசுத்த ஸ்தலத்தில் தேவ குமாரனாகிய என் இரட்சகர், என்மே

லுள்ள அன்பின் அக்கினியால் ஜுவாலித்து எரிந்தும் வெந்துபோகாதிருக்கிறூர். இந்த மகிமையை நான் கண்டு, என் சுயநீதிகள், பாவங்கள், மாம்ச இச்சைகளாகிய சகல பாதரட்சைகளையும் கழற்றிவிட்டு, விசுவாசம், நம்பிக்கை, அன்பு என்னும் குணங்களோடு இந்த மகிமையைக் கண்ணோக்கும்படி இயேசுவினிமித்தம் கெஞ்சிக் கேட்கிறேன். ஆமென்.

1. இயேசு சிலுவை சுமந்தது

வேதம்

"அவரைப் பரியாசம் பண்ணினபின்பு, அவருக்கு உடுத்தின மேலங்கியைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, அவரைச் சிலுவையில் அறையும்படி கொண்டுபோனூர்கள்."

"அப்பொழுது அவரைச் சிலுவையில் அறையும்படிக்கு அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்தான். அவர்கள் இயேசுவைப் பிடித்துக்கொண்டு போனூர்கள்" (மத். 27: 31; மாற். 15: 20; யோவா. 19: 16).

போதனை

சிலுவையில் அறையப்படவேண்டிய கைதிகள், தங்கள் சிலுவையைத் தாங்களே சுமந்துபோகிறது ரோமருடைய வழக்கமாயிருந்தது. அந்தச் சிலுவை ஒரு நெடுஞ்சட்டமும், ஒரு குறுஞ்சட்டமும் சேர்ந்த மரக்கட்டையாயிருந்தது. இக்காலத்தில் தூக்குமரம் எப்படி ஆயத்தம் செய்யப்பட்டிருக்கிறதோ, அப்படியே அக்காலத்தில், சிலுவை எப்போதும் ஆயத்தம்பண்ணப்பட்டு தயாராகவிருந்தது.

பிலாத்து பலதடவை இயேசுவை விடுதலைசெய்ய முயன்றும், ஜனங்களைப் பிரியப்படுத்த நோக்கமாக, கடைசியாய் அவரைச் சிலுவையிலறையும்படி ஒப்புக்கொடுத்தான். பரலோக நியாயாதிபதியாகிய தேவன், நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும் பலியாக இயேசுவை முதலாவது ஒப்புக்கொடுத்தார். அதன்

பின்பு இயேசு தம்மைத்தாமே நம்மை மீட்கும் பலியாக, ஒப்புக்கொடுத்தார்; கடைசியாகப் பிலாத்து அவரை பகிரங்கமாய் ஒப்புக்கொடுத்தான்.

இயேசு சிலுவை சுமந்தவராக கொல்கதாமலேக்குப் போனார். இந்த மலேமேடு எருசலேமுக்குச் சமீபமாக, நகரத்துக்குப் புறம்பேயிருந்தது. இது தூரத்துப் பார்வைக்கு ஒரு மனுஷனுடைய தலேபோலிருந்ததாலும், சிலுவையிலறையப்படும் குற்றவாளிகளின் தலேயோடுகள் அங்கே குவிந்து கிடந்ததாலும் அது தலேயோட்டு இடம் என்று அர்த்தம்கொள்ளும் கொல்கதா என்று அழைக்கப் பட்டது.

தியானம்

என் மீட்பர் கடைசியாக பிலாத்துவின் அரண்மனேயில் நிந்திக்கப்பட்டு, மாணுக்கினேக்குட்பட்டு, தாம் அறையப் பட வேண்டிய சிலுவையைச் சுமக்கிறார். இந்தப் பார மான சிலுவை என் பாவபாரச் சுமையோடு அதிகரிக்கப் பட்டது. என் மீட்பர் என்னுடைய பாவத்தையும், அதின் தண்டனேயையும் சுமந்துபோகிறார். நான் அவர் பிறகே போவேனுக!!

ஆ, சத்துருக்கள் அவருக்குச் சற்றுமுன் உடுத்தின சிவப்பான அங்கியை மறுபடியும் கழற்றுகிறார்கள். பச்சையாயும்,இரத்தமயமாயுமிருந்த அவருடைய காயங் களே மூடும்படித் தரிப்பிக்கப்பட்ட இந்த அங்கி கழற்றப் பட்டபோது, மறுபடியும் அந்தக் காயங்கள் புதிதாக விளங்கின. ஏனெனில் அது காயங்களோடும், இரத்தத் தோடும் ஒட்டிக் காய்ந்துபோயிருந்ததால், அதைக் கழற்றும்போது ஒரு தோலே உரிக்கிறதுபோலிருந்தது என்று சொல்லலாம்.

ஆத்துமாவே, சிவப்பங்கி களேந்து நிற்கும் உம் மீட்பரைச் சற்றே கண்ணேக்கு! மாம்சக்கண் இந்தப் பரிதாபக் காட்சியைப் பார்க்கத் துணிகிறதில்லே. உன் மாமிசக்கண்ணே மூடி ஆவியின் கண்ணுல் பார்ப்பாயாக! ஆ, நான் என் மீட்பரின் காயங்களேக் கண்ணேக்கி எண்ணுவேனுக!! ஐயோ எண்ணத்தொலேயாத காயங்கள்.

அவருடைய தலையெல்லாம் காயம்—உடம்பெல்லாம் காயம்—முதுகெல்லாம் காயம்—இந்தக் காயங்களின் தொகையை எண்ண என்றால் கூடாது! ஆனால் இந்தக் காயங்கள் என் ஆத்துமாவுக்கு வாசனைவீசும் இரட்சண்ய ரோசாப் புஷ்பங்கள்போலிருக்கின்றன. ஆ, அவைகள் என் மனதை இழுக்கும் இரத்தின கற்கள்போலிருக்கின்றன!

சிவப்பங்கி களையப்பட்ட இயேசு தமது சொந்த அங்கியை அணிகிறார்! இது சந்தோஷம்தான். ஆள் மாறாட்ட மிராதபடி, என் மீட்பர் தமது சுய உடலோடும், சுய உடையோடும் சிலுவையைச் சுமக்கிறது என் விசுவாசத்துக்கு உதவியாகவே இருக்கிறது.

என் மீட்பர் சிலுவை சுமக்கிறார்! என் தேவ கோனார் தமது மேய்ப்பன் கோலை தோளில் வைத்து, தமது ஆடுகளை வழிநடத்தி, ஜீவவிருட்சக் கிளைகளையும், கனிகளையும் பறித்துப் பசியாற்றப்போகிறார். கொல்கதா மலைமேட்டில் இந்த ஆடுகள் ஜீவகிளைகளையும் கனிகளையும் மேயலாம். நானும் போய் அதில் பங்கு பெறுவேனாக.

என் மீட்பர் சிலுவை சுமந்துபோகிறார்.—என் தேவ சேனாபதி பாவ அரண்களையும், கோட்டைகளையும் நொறுக்கும் சம்மட்டியோடு போகிறார்.—என் ஜீவ அதிபதி மோட்சவாசலைத் திறக்கும் திறவுகோலைச் சுமந்துபோகிறார்—என் இராஜா தமது இராஜ்யபாரத்தின் கொடி மரத்தைச் சுமந்துபோகிறார். இதின்மேல் அவரே விருதாக விளங்குவார்—இம்மட்டும் சாபமாக எண்ணப்பட்டும் எழுதப்பட்டுமிருந்த சிலுவையும், சிலுவை மரணமும், இன்றுமுதல் மகிமையடைகிறது. அது எனக்கு சிலுவை மரமா யிராமல் ஜீவவிருட்சமாகிறது.

பழைய ஏற்பாட்டில், பேர் காட்டாமலும், ரூபம் காட்டாமலுமிருந்த சாயலை இன்று காண்கிறேன். முற்பிதாவாகிய யாக்கோபு தன் பேரன்மாரை ஆசீர்வதித்த போது தன் கைகளைக் குறுக்காக வைத்து, எனக்கு இரட்சண்ய வாழ்வுகளைத் தரும் சிலுவை இவ்வண்ணமிருக்குமென்று சொல்லாமல் சொன்னான். தேவாலயத்தில் ஏறெடுத்து அசைவாட்டப்பட்ட காணிக்கையின்

முறைமையும் இந்தச் சிலுவைச்சாயலே எனக்கு உணர்த்தினது. மோசேயின் வெண்கல சர்ப்பம் தொங்கின கோலும் இதை எனக்குக் காட்டினது. கடைசியாக என் கைகளையும் கால்களையும் உருவக் குத்தினார்கள் என்ற வாசகமானது இருகைகளையும் விரித்து ஆணியடிப்பதை அறிவித்தது. இவைகளின் நிஜமான போதனையை நான் இம்மட்டும் அறியாமலிருந்து, இன்றுதான் அறிந்து கொண்டேன். என் இயேசுவால் ரோமைச் சிலுவை கனமடைகிறது. ஆ, என் சரீர அமைப்பே, நான் சிலுவையின் மூலமாய் இரட்சிக்கப்படவேண்டிய சிருஷ்டி என்பதை உணர்த்துகிறது. ஏனெனில் நான் ஓரிடத்தில் நின்றுக்கொண்டு என் இரண்டு கரங்களையும் வலது இடதுபுறம் நீட்டும்போது, நான் ஒரு சிலுவையல்லோ! இந்த என் சொந்தச் சிலுவையில் நான் என் மீட்பரை அன்பினால் அறைவேனாக!

ஜெபம்

சிலுவையைத்தோளில் சுமந்துபோகும் என் மீட்பரே, உமது பிறகாலே வருகிறேன். நான் வரத் தாமதித்தாலும் அந்தச் சிலுவைக்கொறட்டால் என்னை இழுத்து உம்மோடுகொண்டுபோம். இந்த நீசக்குருசில் எனக்காக அறையப்படும்படி நீர் தாழ்ந்துகொண்டது எவ்வளவு தாழ்மை. நீர் எனது இரட்சிப்பை இவ்விதமாக நிறைவேற்ற சம்மதியாதபட்சத்தில் நான் இரட்சிக்கப்பட்டிருக்கமாட்டேன். இந்தவிதமாக என்னை நேசித்த உமது அன்பையும், உமது பிதாவின் அன்பையும் பிரஸ்தாபிக்கும் கடைமையை, என்மேல் சிலுவை போல சுமத்தி, உமது சிலுவைப்பாரத்தால்என் பாவபாரத்தைச் சுமந்துதீர்த்தருளும் சுவாமி. ஆமென்.

2. சிரேனே சீமோனைப் பலவந்தம் செய்தது

வேதம்

"போகையில், சிரேனே ஊரானாகிய சீமோன் என்னப்பட்ட ஒரு மனுஷனை அவர்கள் கண்டு, அவருடைய

சிலுவையைச் சுமக்கும்படி அவனைப் பலவந்தம் பண்ணினார்கள்" (மத். 27: 32; மாற். 15: 21; லூக். 23: 26).

போதனை

சிரேனே ஊர் ஆப்பிரிக்கவிலுள்ள லீபியா நாட்டில் ஒரு விசேஷித்த நகரமாயிருந்தது. இந்த நகரத்தில் வியாபார விஷயமாய் அநேக யூதர் போய்க் குடியேறியிருந்தார்கள். அவர்களில் இந்தச் சீமோனுடைய குடும்பம், திரும்பவும் எருசலேமுக்கு வந்து, நிலங்களை வாங்கிப் பயிர்செய்து வாழ்ந்திருக்கலாம். இராட்சகர் சிலுவை சுமந்துபோகையில் இவன் தன் வயலிலிருந்து வந்தான். இயேசு சிலுவையின் பளுவாலும், தேகபல வீனத்தாலும் அடிக்கடி நிற்கவும் இடறவும் விழவும் நேரிட்டதால், காலதாமதத்துக்கு இடமிராதபடி அவருடைய சிலுவையைச் சுமந்துபோக சத்துருக்கள் இவனைப் பிடித்தார்கள். இவனோ, நான் மாட்டேனென்று சாதித்ததால், கட்டாயம் பண்ணி அவனைச் சுமக்க வைத்தார்கள்.

தியானம்

ஆ, என் மீட்பர் எருசலேமின் தெருக்கள் வழியாகச் சிலுவைச் சுமையோடு போகிறார். இல்லை அவர் என் பாவங்களைச் சுமந்து போகிறார். இம்மட்டும் வெளிக்குத் தெரியாமலிருந்த என் பாவபாரமனைத்தும் இப்போது சிலுவைரூபமாகவிளங்குகிறது; சுமந்துபோம் இயேசுவே! என் பாவங்களைச் சுமந்துபோம் மீட்பரே! நானும் உமது பிறகாலே வருகிறேன்.

என் மீட்பின் பவனியைக் காண்கிறேன். முதலாவது குதிரைவீரர் தம்தம் குதிரைமேலேறி நடக்கிறார்கள்;—அவர்களுக்குப்பின் காலாள் சேவகரின் சேனை போகிறது. அப்பால் மூன்றுபேர் தங்கள் தங்கள் சிலுவையைச் சுமந்துபோகிறார்கள்; அந்தந்த ஆட்களைச் சிலுவையில் அறைந்து கொல்லும்படிக் குறிக்கப்பட்ட சேவகர் தங்கள் தங்கள் கைதிகளுக்குப் பின்னாலே செல்லுகிறார்கள். இவர்களுக்குப்பின் ரோம அதிகாரிகளும், யூத அதிகாரிகளும் நடக்கிறார்கள். கடைசியாக இதைப் பார்க்கப்

போகும் ஜனங்களின் கூட்டம் வருகிறது. நானும் இந்தக் கூட்டத்திலிருக்கிறதாக தியானிக்கிறேன்.

என் மீட்பரே, நீர் பிறந்த அன்று, உமது பரமசேனை யனைத்தையும் பெத்லகேமில் கண்டேன், களிகூர்ந்தேன். நீர் சாகும் நாளிலோ, பாதாளசேனை யனைத்தையும் இங்கே காண்கிறேன், கலங்குகிறேன். இதற்கு முந்தின ஞாயிறில் நீர் இந்த நகரத்துக்குள் பிரவேசித்த கோலத்துக்கும், இப்போது அதிலிருந்து புறப்படுகிற கோலத்துக்கும் எவ்வளவு வித்தியாசத்தைக் காண்கிறேன்! எவ்வளவு வித்தியாசமான சப்தங்களைக் கேட்கிறேன்!!

ஓசன்னா, ஓசன்னா என்ற சத்தம் ஒழிந்தது!
தாவீதின் குமாரன் என்ற பேர் ஒழிந்தது!

ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் என்பதைக் காணோம். குருத்தோலையையல்ல கூர்மையுள்ள ஈட்டிகளையும், பச்சை இலைகளையல்ல பளிச்சென்று வீசும் பட்டயங்களையும், மரத்தின் கிளைகளையல்ல மனுமக்களின் அவதூறுகளையும், மாற்று வஸ்திரங்களையல்ல மருட்டும் காட்சிகளையும் நான் காண்கிறேன். மீட்பின் ராஜாவின் மரணம் இவ்வண்ணம் நடக்கவேண்டுமென்று வான தேவன் கற்பித்தார்; என் வான மீட்பரே நீர் இதற்கும், ஆமென் என்று சொன்னீர்.

என் நேசரே, எப்படியும் இது விசேஷ பவனிதான்! உம்முடைய முந்தின பவனியில் வராத அன்னாவும், காய்பாவும், ஆசாரியரும், சங்கத்தாரும், ஏரோதுவும், பொந்தியுபிலாத்தும் தம்தம் ஆடம்பர உடைகளோடும், அதிகார சின்னங்களோடும் புறப்படுகிறார்கள். அவர்களுடைய பட்டு உடுப்புகளும், பளபளப்பான சால்வைகளும், கிரீடங்களும், குல்லாக்களும், பட்டய ஒளியோடு சேர்ந்து பிரகாசிக்கின்றன. இதையெல்லாம் நான் கவனித்து, இவர்கள் ஏன் வரவேண்டும் என்று என் மனதில் எண்ணுகிறேன். அப்போது ஒரு தூதன் தோன்றி, இவர்கள் அனைவரும் தங்கள் ஊழியங்களையும், கிரீடங்களையும் இன்றுமுதல் உன் மீட்பரிடத்தில் ஒப்புக் கொடுத்துவிடும்படி தங்களை அறியாமலே போகிறார்கள்.

உன் மீட்பர் சிலுவையிலேறித் தாழ நிற்கும் இவர்கள் கிரீடங்களைத் தட்டிப்போட்டு ஏகசக்கராவர்த்தியாவார் என்று சொல்லுகிறதாகக் கேட்கிறேன்.

என் மீட்பர் சிலுவைப் பளுவால் பிந்துகிறார்! அவர் அடிக்கடி கால்தடுமாறி இடறிவிழுந்து மறுபடியும் எழுந்து நடக்கிறார். மற்ற இரண்டு கைதிகளும் விரைவாக நடக்கிறார்கள். என் இயேசு துரத்தப்படுகிறார். அந்தப் பாதை கரடுமுரடானதாயிருப்பதால் சிலுவை தட்டித்தட்டி என் நேசரின் தோள் காயமாகி விட்டது!!

ஆ, அவர் சோர்ந்து விழுந்துவிட்டார்!
ஆ, அவர் அசந்து விழுந்துவிட்டார்!

சிலுவையிலறையப்படுமுன் செத்துப்போவார் என்று பலர் பேசிக்கொள்ளுகிறார்கள். அவருடைய கண்களில் குழி விழுந்துபோயிற்று! கன்னம் கறுத்துக்காணுது! சாவுதோற்றம் உதட்டில் தெரிகிறது.

இதையெல்லாம் சத்துருக்கள் பார்த்து, வேறொரு ஆளுதவி இல்லையானால், நாம் நினைத்தபடி இவரைச் சிலுவையிலறைந்து அவமானப்படுத்த வழியில்லை என்று நிதானித்து, ஆளைத் தேடுகிறார்கள். யார் தூக்குகிறது? அச்சமயத்தில் சிரேனே சீமோன் தன் வயலிலிருந்து வந்தான்; அவனைச் சேவகர் பிடித்து நீதான், இந்தச் சிலுவையைத் தாங்கிக்கொண்டு போகவேண்டுமென்று கட்டாயம் செய்தார்கள்; அவன் கட்டாயத்தோடு அதைத் தொட்டான், பின்போ மனப்பூர்வமாக அதைச் சுமந்தான். அந்த உதவியின் பலனை அவனும் அவன் குடும்பமும் பெற்றுக்கொண்டார்கள் (ரோம. 16: 13). ஓய் அன்னாவே, காய்பாவே, பிலாத்துவே, இந்த உதவியை நீங்கள் செய்யாமல் போனதென்ன? பெருமையல்லவா! உங்கள் ஆணவமல்லவா? நீங்கள் அதைச் சுமக்காததால் அதினால் வரும் வாழ்வையும் இழந்தீர்கள். அதைச் சுமந்த சீமோன் அதை யடைந்தான்.

இந்த வரலாற்றால், ஒவ்வொரு மனுஷனும் இயேசுவின் சிலுவையைச் சுமக்கக் கடமைப்பட்டிருக்கிறான் என்பதை நான் அறிந்துகொள்ளுகிறேன்.

என் நேசரே, என் மீட்பரே, உமது சிலுவையை நான் சுமக்க விரும்புகிறேன். உம்முடைய பிரமாணங்களையும், உமது அன்பையும், உமது ஊழியங்களையும் என்மேல் சுமத்தியருளும். உமது பாடுகளின் இரகசியங்களையும் மகத்துவங்களையும் என்மேல் சுமத்தும். இவைகளே நான் சுமக்கவேண்டிய சிலுவை. இத்தோடு உமது நிமித்தம் வரும் துன்பங்கள், அவமானங்கள், பசிகள், அவதூறுகளையும் சுமக்க ஆயத்தமாயிருக்கிறேன்.

ஜெபம்

என் பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படி எருசலேமின் தெருக்களின் வழியாகச் சிலுவை சுமந்த இயேசுவே, இந்தக் காட்சியாக உம்மை என் ஆத்துமா தியானித்து உம்மை வணங்குகிறது. இந்தச் சிலுவையிலேதான் என் பாவம் அடங்கியிருக்கிறது. தேவரீர் அதைச் சுமந்து தீர்க்கிறீர். ஆ, இதெவ்வளவு நேசம்! இதெவ்வளவு தயவு! உமது அன்பை நான் எப்பொழுதும் உணர்ந்தவனாய், இவ்வுலகத்தில் எனக்கு வரும் எல்லா துன்பங்களையும் பொறுமையோடு சுமக்கவும், உம்முடைய சிலுவையின் அன்பை எப்பொழுதும் பிரஸ்தாபிக்கவும் கிருபை செய்ய வேண்டுமென்று உம்மைத் தாழ்மையாய் வேண்டிக் கொள்ளுகிறேன். ஆமென்.

3. எருசலேம் குமாரத்திகளின் புலம்பல்

வேதம்

"திரள்கூட்டமான ஜனங்களும் அவருக்காகப் புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவருக்குப் பின்சென்றார்கள். இயேசு அவர்கள் முகமாய்த் திரும்பி: எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். இதோ, மலடிகள் பாக்கியவதிகள் என்றும், பிள்ளைபெறாத கர்ப்பங்களும், பால்கொடாத முலைகளும் பாக்கியமுள்ளவைகளென்றும் சொல்லப்படும் நாட்கள் வரும். அப்பொழுது மலைகளை நோக்கி: எங்கள்மேல் விழுங்களென்றும், குன்றுகளை நோக்கி: எங்களை மறைத்துக் கொள்ளுங்களென்றும்

சொல்லத் தொடங்குவார்கள். பச்சை மரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்டமரத்துக்கு என்ன செய்யமாட்டார்கள்" (லூக். 23: 27–31).

போதனை

இரட்சகர் சிலுவை சுமந்துபோனபோது மூன்று வகையான ஜனங்கள் அவரைப் பின்சென்றார்கள் என்று சொல்லலாம். அவர்களில் ஒரு வகையார் அவருடைய விரோதிகளும், இன்னொரு வகையார், அவருடைய சிநேகிதரும், மூன்றும் வகையார் வெறும் வேடிக்கை பார்க்கப் போனவர்களுமாயிருந்தார்கள் என்னலாம்.

இயேசுவின் சிநேகிதரில், ஸ்திரீகள் தங்கள் துக்கத்தை வெளியரங்கமாகக் காட்டினார்கள். இவர்களில் ஒருவராவது இயேசுவின் தெய்வீகத்தன்மையையாவது, மீட்பின் போங்கையாவது உணர்ந்தவர்களாயிருக்கவில்லை. இயேசுவைப்பற்றி முன்னிருந்த உயர்ந்த மதிப்பும், இச்சமயத்தில் அவர்கள் உள்ளத்திலிருக்கவில்லை. அவர்கள் அவருடைய பாடுகளையும், அவமானங்களையும் பார்த்து உலகப்பிரகாரமான பரிதாபமும், மனக்கனிவும் கொண்டு, அழுகையோடு அவருக்குப் பின்சென்றார்கள். இயேசு அப்படிப்பட்ட வீண் அழுகையைக் கண்டிக்கவும், அவர்கள் மனம்திரும்பாதபட்சத்தில் வரப்போகிற பெரிய அழுகையையும், புலம்பலையும் அவர்களுக்குத் தீர்க்கதரிசனமாகக் கூறவும் சித்தங்கொண்டு, "எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல் உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்." பச்சை மரம்போன்ற எனக்கு இவ்வளவு சம்பவித்தால், பட்டமரமாகிய உங்களுக்கு எவ்வளவு சம்பவிக்கவேண்டியதென்று கவனித்துக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார். இது அழுத ஸ்திரீகளுக்கு மாத்திரமல்ல அழாத மற்ற ஜனங்களுக்கும் பொதுவான எச்சரிப்பாயிருக்கிறது.

தியானம்

என் நேசர் தமது நேசத்தை இந்த அவதிவேளையிலும் வெளிப்படுத்துகிறார். இயேசு பிந்தப் பிந்த, அவர்

இடறி விழவிழ, முன் சென்று ஓடின ஜனமெல்லாம், அவரோடு பின்னுக்குத் தாமதித்தார்கள். அந்த இரண்டு கள்ளர் அதிக இலேசாய்த் தங்கள் சிலுவையைச் சுமந்து கொண்டு எட்டி நடக்கிறார்கள். என் மீட்பரோ சிலுவைப் பாரம் தாங்காமல் விழுகிறார்! அவ்விருவருக்கும் வெறும் கட்டைதான், இயேசுவின் கட்டையிலோ சர்வலோகத் தின் பாவமும் ஏற்றப்பட்டிருந்ததே. ஆதலால் அவருக்கு அதிக பாரமிருக்குமே! அவ்விருவரும் ஆடுகளைத் திருடி யும், ஆட்களைக் கொன்றும், சுமந்து பழகினவர்கள்; என் இயேசுவோ இப்படிப்பட்ட சுமையை எடுத்துப் பழகின வரல்லவே. ஆ, பூலோகம் முழுவதும் இவருடைய தோளின்மேலிருக்கிறதே!!

என் மீட்பரே, நான் பாவம் செய்தேன், நீர் தண்டிக் கப்பட்டீர்—நான் என்னை உயர்த்தினேன், நீர் தாழ்த்தப் பட்டீர்—நான் வெட்கத்தால் மூடப்பட்டேன், நீர்வஸ் திரம் களையப்பட்டீர்—நான் நிர்வாணியாயிருந்தேன், நீர் கனவீனமான அங்கிதரித்தீர்—என் தலை சகல கேடு களையும் யோசித்தது, நீர் தலையில் முண்முடி சூட்டப் பட்டீர்—நான் உம்மை அடித்தேன், நீர் எனக்காக அடி பட்டீர்—நான் பாவங்களைச் செய்தேன், நீர் அதைச் சுமந்து தீர்த்தீர்.

நீர் என்னை நேசித்து, என் முகமாய் உமது சிலுவை யோடு திரும்புகிறீர். நீர் திரும்புகிற காரணத்தை உலகம் அறியாமல் எறிட்டுப் பார்க்கிறது. அந்த அமளியையும், துஷ்டரின் ஆரவாரங்களையும் நீர் கவனியாமல் சில ஏழை ஸ்திரீகளின் கண்ணீரைக் கவனித்தீர். சத்துருக்களுக்கு அந்த ஜனசந்தடி பெரிய காரியமாயிருந்தது. உமக்கோ இந்த ஸ்திரீகளின் கண்ணீர் பெரிய காரியமாயிருந்தது. இவர்கள் தங்கள் கண்ணீரால் உமது காயங்களையும் தங்கள் புலம்பலால் உமது மனதையும் ஆற்றப்பார்த் தார்கள்; அவைகளோ உமது மனதை அதிக வருத்தப் படுத்தினது. அவர்கள் கண்ணீர் மாம்ச சம்பந்தமான பரிதாபக் கண்ணீர் என்பதைக் கண்டீர். அவர்கள் உமக் காக அழுதார்கள்; நீர் அவர்களை நோக்கி,

"நீங்கள் எனக்காக அழாமல்
உங்களுக்காக அழுங்கள்"

என்று கற்பிக்கிறீர். ஆ, என் மீட்பரே, உமது சொந்த வேதனையும், துக்கமும், சிலுவைப்பாரமும் போதாதா?—இவர்கள் அழுகையை நீர் கவனிப்பானேன்?—உம்முடைய நேசம் அப்படிக் கவனிக்கப்பண்ணி—உமது தயவு எங்கள் முகமாய்த் திரும்புகிறது. நீர் எங்களை உணர்த்தும்படி ஆசைப்பட்டுத் திருப்புகிறீர். இந்த ஸ்திரீகள் நம்பிக்கையற்றவர்களைப்போல துக்கப்பட்டார்கள்! நீர் இத்தனை பாடுகளைப் பட்டு சிலுவையில் மரித்து மூன்றும்நாளில் உயிரோடெழுந்திருப்பீர் என்று அடிக்கடிச் சொல்லியும் அவர்கள் மறந்து இப்படிப் புலம்பினது உமக்குப் பிரியமாயிருக்கவில்லை; இவர் என்னுடைய பாவத்தினிமித்தம் இப்படிப் பாடுபடுகிறார் என்று நினைத்து அழுதவர்கள் அவர்களில், ஒருவருமிருக்கவில்லை. இந்த ஸ்திரீகள் கூட்டத்தில் இயேசுவின் தாயாருமிருந்திருக்கவேண்டியது. அந்த அம்மாள் இவரைக் கர்ப்பத்தில் வைத்துக் கொண்டிருந்தபோது, என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது என்று பாடினதை அறிவோமே. அந்த இரட்சிப்பு நிறைவேறுகிற இந்தச் சமயத்தில் அதை நினைப்பாருமில்லை. அதைப் பற்றிப் பேசுவாருமில்லை. ஆகவே இயேசு, எனக்காக அழாமல் உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்கிறார். இந்த ஸ்திரீகள் இச்சமயத்தில் தங்கள் பாவங்களை உணர்ந்து, புலம்பலோடும் கண்ணீரோடும் சத்தமிட்டு;

நாங்கள் பாவம் செய்தோம்;
இவர் எங்கள் பாவங்களைச் சுமக்கிறார்.
இவரே எங்கள் மீட்பரான கர்த்தர்.
இவருக்காகக் காத்திருந்தோம்.

இவரை இன்னும் மூன்றும்நாளில் காண்போம் என்று பிரஸ்தாபித்திருப்பார்களானால்; இரட்சகர் இவர்களுக்குச் சொன்ன வாசகம் இதுவாயிராமல்,

"துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்
அவர்கள் ஆறுதலடைவார்கள்."
"நீங்கள் துக்கப்படுகிறீர்கள்
உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்"

என்று ஆறுதலான வாசகமாயிருக்கும். ஆ, நான் இந்த ஸ்திரீகளைப்போல் இயேசுவின் பாடுகளின் வரலாற்றை வாசிக்கும்போதும் கேட்கும்போதும், மாம்ச சம்பந்தமான அநுதாபத்தையும், உருக்கத்தையும் காட்டி அழுகிறவனாய், அல்லது துக்கப்படுகிறவனாயிராமல், அந்தப் பாடுகளுக்குக் காரணமாயிருந்த என் பாவங்கள் ஒவ்வொன்றையும் நினைவுகூர்ந்து, எனக்காக அழுவேனாக! மற்றவர்களுக்காக அழுகிறது லேசு, தன் பாவத்துக்காக அழுகிறது வருத்தம். ஆனால் இயேசு இந்த வருத்தமான பாகத்தையே நம்மிடத்தில் விரும்புகிறார்.

என் இயேசுவே, உமது பாடுகளில் என் பாவத்தைக் காண்கிறேன். ஆதலால் நான் எனக்காக அழுகிறேன்; எனக்காகப் பாடுபட்ட என் மீட்பரே என் கண்ணீரை மாற்றியருளும்.

ஆ, என் மீட்பர் கொல்கொதாவின் பாதையிலும் தீர்க்கதரிசனம் கூறுகிறார். எருசலேமே, இதைக் கவனிப்பாயாக. சீயோனே, செவிகொடுப்பாயாக. மலடிகள் பாக்கியவதிகள் என்றும் பால்கொடாத தாய்கள் யோக சாலிகள் என்றும் சொல்லும் காலம் வருமாம்! சாலேமே, இந்த எச்சரிப்பைக் கேட்டு மனம் திரும்புவாயாக! கானானே, இது உனக்கென்று கூறப்படுகிறது. குணப்படாத பாவிகளுக்கு ஐயோ!! அவர்கள் புலம்பும் காலம் ஒன்றுண்டு. ஆ, நான் இம்மட்டும் குணப்படாதே போனாலும்; இன்று குணப்படுவேனாக; சிலுவை சுமந்து போகும் என் மீட்பரை இன்று நோக்குவேனாக; நான் குணப்படாதபட்சத்தில் அழிவும் நாசமும் என்னைப் பின்தொடருகிறதென்று, என் இரட்சிப்பின் அதிபதி தீர்க்கதரிசனம் கூறுகிறார். ஆ, சிலுவை விருதைப் பிடித்து தீர்க்கதரிசனம் கூறும் என் மீட்பரே! நீர் கூறும் ஆபத்துகள் ஒன்றும் என்னைத் தொடாதபடி, நான்

எனக்காக அழுது; என் பாவங்களை அறிக்கையிட்டு, வரும் கோபாக்கினைக்குத்தப்பிக் கொள்ளத் தயவு செய்யும்.

கடைசியாக, என் மீட்பர் தம்மைப் பச்சைமரம் என்றும், எருசலேமியரை பட்டமரமென்றும் உபமானித்து, "பச்சை மரத்துக்கு இவைகளைச் செய்தால் பட்டமரத்துக்கு என்ன செய்யமாட்டார்கள்" என்று சொல்லுகிறார். சாகும் மீட்பர் தீர்க்கதரிசனம் கூறினதோடு, உபமானமும் பொழிகிறார்.

என் மீட்பர் பச்சைமரம். அவர் தமது அற்புதக் கிரியைகளாகிய இலைகளால் அநேகரை ஆரோக்கியமாக்கினார். அவர் தமது அமிர்தபோதனைகளாகிய பச்சைப் புஷ்பங்களால் அநேக இருதயங்களை மணமாக்கினார். அவர் தமது இரட்சண்ய பசுமையால் அநேக பாவிகளை உணர்த்தினார்; ஆ, என் மீட்பர் பச்சைமரம். அவரில் பழுத்த தாழ்மை, பொறுமை, அன்பு, பரிசுத்தம் முதலிய பழங்கள் எவ்வளவு இன்பமானவைகளாயிருந்தன. அந்தப் பச்சைமரத்திலிருந்து அடித்த குளிர்ச்சியான காற்று எவ்வளவு இன்பமாயிருந்தது. இந்தப் பச்சை மரத்தடியில் ஐயாயிரமும், ஏழாயிரமுமான ஜனங்கள் பசித்துக் கிடந்தார்கள். இந்த மரம் போஷித்தது. இந்தப் பச்சைமரத்தண்டைவந்த நொண்டிகள், குருடர், குஷ்டரோகிகள், சப்பாணிகள் எல்லாரும் இதிலிருந்து புறப்பட்ட ஆரோக்கியம் என்னும் காற்றால் சுகமானார்கள். செத்த பிணங்களுக்கும் இந்தப் பச்சைமரத்திலிருந்து ஜீவன் வந்தது. இப்படிப்பட்ட மரம் தேவகோபத்தாலும், மனுஷ எரிச்சலாலும் கொளுத்தப்பட்டு இக்கோலமாயிற்று; இவ்வளவு பாடுகளை அவர் அடைந்தாலும் இன்னும் பச்சை பச்சைதான். இவர் மூன்றும்நாளில் முன்னிலும் அதிகச் செழிப்பாக விளங்கின பச்சைமரமாக்கும். நான் இந்தப் பச்சைமரத்தண்டை போய்க் குடியிருப்பேனாக. பாவியாகிய எனக்கு—நோயாளியாகிய எனக்கு—செத்துப்போன எனக்கு ஆ, பட்டுப் போன எனக்கு இங்கேதான் சுகமும், ஜீவனுமிருக்கி

றதைக் காண்கிறேன். பட்டமாம்போன்ற என் உடன் பாவிகளே, நீங்களும் இந்தப் பச்சைமரத்தண்டை வாருங்கள்! வாருங்கள்!!

ஆ, பச்சைமரமே! இதோ பட்டமரமாகிய நான் ஒரு விண்ணப்பம் செய்கிறேன்: நான் நரகத்தின் ஓரத்தில் குடியிருந்தேன்; அந்த அக்கினி என்மேல் வீசி நான் பட்டுப்போனேன். நான் பாவச்சேற்றில் முளைத்து வெகு நாளாய் அங்கே நின்றேன். அத்தால் என் ஆணிவேர்களும், சல்லிவேர்களும் மக்கிப்போனதால் பட்டுப் போனேன். சிற்றின்பம் என்னும் விஷக்காற்று என்னைச் சுற்றி அடித்ததால் என் கிளைகள் பட்டுப்போயிற்று. இப்படிப் பட்டுப்போன என்னை நரகத்தின் அக்கினியைப் பெருக்கும் விறகாக்கும்படி இதோ கோடரி என் வேர் அருகே வைக்கப்பட்டிருக்கிறது. நானோ தேவனுடைய ஆலயத்தில் பச்சையான ஒலிவமரத்தைப்போலிருக்க விரும்புகிறேன். பச்சைமரமே, என்னைப் பச்சையாக்குவீராக. ஜீவவிருட்சமே, ஜீவன் தருவீராக. உமது ஜீவனால் என் சாவுமாறிப்போகப்பண்ணும்!

ஜெபம்

என் அன்புள்ள இயேசுவே, தேவரீர் உமது சிலுவைப் பளுவோடும் பாவிகளை உணர்த்திப் பிரசங்கிக்கிறீர். இது உமது தயவு. நான் எப்போதும் உமது போதனையைக் கேட்டு அதின்படி நடக்கும்படி உமது பரிசுத்த ஆவியைக் கொண்டு போதித்தருளும். நான் உமது பாடுகளைப் பற்றிய பரிதாபத்தால் புலம்புகிறவனாயிராமல், அவைகளுக்குக் காரணமாயிருந்த என் பாவங்களை யுணர்ந்து, அதற்காக மனஸ்தாபப்பட்டு, தேவ எத்தனமாக துக்கமடையும்படி என்னை ஏவியருளும். இந்த எல்லாப் பாடுகளையும் சகித்த என் மீட்பரே, நானும் உமது நாமத்தினிமித்தம் உண்டாகும் எல்லா அவமானங்களையும் பொறுமையோடு சகித்து ஜீவகிரீடத்துக்குப் பங்குள்ளவனாகும்படி உமது சிலுவைப் பாரத்தினிமித்தம் வேண்டிக் கொள்ளுகிறேன். ஆமென்.

4. இயேசு சிலுவையிலறையப்பட்டது

வேதம்

"கபாலஸ்தலம் என்று அர்த்தங்கொள்ளும் கொல்கொதா என்னும் இடத்துக்கு அவரைக் கொண்டு போய், வெள்ளைப்போளம் கலந்த திராட்சரசத்தை அவருக்குக் குடிக்கக்கொடுத்தார்கள்; அவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அப்பொழுது அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். அவரைச் சிலுவையிலறைந்தபோது மூன்றும் மணி வேளையாயிருந்தது" (மத். 27: 33, 34; மாற். 15: 24, 25; யோவா. 19: 18).

போதனை

நமது இரட்சகர் சிலுவையில் அறையப்பட்ட வரலாறு இப்போது நமது தியானத்துக்கு வருகிறது. சத்துருக்கள் நமது இரட்சகரை கொல்கொதா மலைக்கு நடத்தி அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். சிலுவை என்பது நெடுஞ்சட்டமும், ஒரு குறுஞ்சட்டமும் சேர்ந்த ஒரு கழுமரம். குறுஞ்சட்டங்களில் வலது இடதுகைகளும், நெடுஞ்சட்டத்தில் ஒன்றின்மேல் ஒன்றாக வைக்கப்பட்ட இரு கால்களும் ஆணியடிக்கப்படும். இந்தச் சட்டங்களில் அந்தத்தில், குற்றவாளிகளை ஆணி அறைவதற்காக, இடைக்கிடையே அநேக துவாரங்கள் செய்யப்பட்டிருக்கும். ஏதாவதொரு துவாரத்துக்குச் சரியாக ஒருவனுடைய உள்ளங்கைகளும், கணுக்காலும் வராவிட்டால், அடுத்த துவாரத்துக்குச் சரியாக வரும்படி அந்தந்த அவயவங்களை இழுத்து ஆணியடிப்பார்கள். இதினால் அப்படி அறையப்படுகிறவர்களுக்கு நரம்புகள் தெறித்தும், கணுக்கால் பூட்டுவிட்டும் போகிறதுண்டு.

இயேசு உயிர்த்தெழுந்த பின்பு, "தோமாவைப் பார்த்து, நீ உன் விரலை இங்கே நீட்டி என் கைகளைப் பார்"[1] என்று சொன்னதைப் பார்க்கும்போது, அவருக்கு அடிக்கப்பட்ட ஆணிகள் ஒருவிரல் பருமனாயிருந்தது

---

[1] யோவா. 20: 27.

என்னலாம். அது உள்ளங்கையையும் சிலுவையையும் ஊடுருவி, கைகள் கழன்றுவிடாதபடி, போதுமான நீள மாக, அதாவது, ஒரு அடிக்குக் குறையாத நீளமாக இருந்தனவென்று சொல்லவேண்டியது.

இயேசு சிலுவையிலறையப்பட்டது; நாம் நமது ஆசை இச்சைகளை அவரோடுகூட அறையவேண்டுமென்றும்,[1] தேவனுக்கும் மனுஷருக்குமிருந்த பகை முடிவடைந்ததென்றும்,[2] நமதுமேலுள்ள அன்பினால் இயேசு இவ்வளவாகத் தாழ்ந்தார் என்றும்,[3] பிசாசை ஜெயித்து வெற்றிசிறந்த யுத்தகளம் சிலுவை என்றும்,[4] நமது பாவங்களைச் சிலுவை மரணத்தால் நிவாரணமாக்கினார் என்றும்[5] நமக்கு உணர்த்துகிறது.

தியானம்

என் மீட்பர் தமது சிலுவைப் பாரத்தோடு, பூர்வ இஸ்ரவேலின் இராஜாக்கள் அடக்கம்பண்ணப்பட்டிருந்த மயான பூமியைக் கடந்துவருகிறார்! அக்கிரமங்களாலும் பாவங்களாலும் செத்து, அவிசுவாசம் என்னும் கற்பாறையில் அடக்கம்பண்ணப்பட்டுத் துணிகரம் என்னும் பெரிய கல்லால் மூடப்பட்டிருக்கும் என் இருதய மயானத்தின் வழியாக இந்தச் சிலுவைநாதர் கடந்து போவாராக! இந்தச் சிலுவையின் நுனி என் மயான மேட்டை இடித்து, எனக்குள் ஜீவனுண்டாகும்படி என் எலும்புகளையும் நரம்புகளையும் தொடுவதாக! இஸ்ரவேலின் ராஜபிணங்களே, நித்தியஜீவனின் அதிபதி உங்களைக் கடந்துபோனது உங்களுக்கு ஒரு கனம்தான்.

அப்பால் என் மீட்பர் இன்னோம் பள்ளத்தாக்கைக் கடந்தார். இன்னோம் என்றால் நரகம் என்று அர்த்தம். இங்கேயிருந்த அழுக்கையும், குப்பைகளையும், புழுக்களையும் தொட்டு இதற்கு இந்தப் பேர் வழங்கப்பட்டது. இந்தப் பள்ளத்தாக்கிலேதான் மோளோகுக்கு இஸ்ரவேலர் தங்கள் பிள்ளைகளைப் பலியிட்டார்கள். ஆகவே,

---

[1] கலா. 5: 14. [2] எபே. 2: 16.
[3] பிலி. 2: 8. [4] கொலோ. 2: 15. [5] 1 பேது. 2: 24.

என் மீட்பர் தமது சிலுவையோடு நரக பள்ளத்தையும், சகல பாவ அழுக்குகளையும் கடந்தார் என்று உபமானித்துத் தியானிக்கலாம். எனக்குள்ளும் ஒரு இன்னேமிருக்கிறது. என் இருதயம் நரக பள்ளத்தாக்குதான். ஐயோ நரகத்திலுள்ள கேடுகள் எவையோ அவை ஒவ்வொன்றும் என் உள்ளத்திலுண்டென்று காண்கிறேன். நான் அடிக்கடி என் ஆவிக்குரிய மக்களாகிய அன்பு, பரிசுத்தம், ஜெபகுணம், சாந்தம், தாழ்மை முதலிய அநேகம் பிள்ளைகளை, மோளோகு என்னும் நரக இராஜாவுக்கு பலியிட்ட பாதகனுயிருக்கிறேன். இந்த நரகபள்ளத்தின் வழியாக, மோட்சாதிபதி தமது பரிசுத்த சிலுவையோடு கடந்துபோவாராக!! அவர் என்னை இந்த இன்னேமிலிருந்து தூக்கி, தமது சிலுவையோடு சேர்த்துக் கட்டிக்கொண்டு போவாராக.

என் மீட்பர் தமது கனத்த சிலுவையோடு கொல்கோதா மேடேறிவிட்டார். சிரேனே சீமோன் தன் வேலை முடிந்ததென்று அறிந்தாலும், தன்னையும் ஒரு வேளை சிலுவையிலறைந்துவிடுவார்களோவென்று பயந்து பின்வாங்குகிறுன். நானே அப்படிப் பின்வாங்காமல் சமீபத்தில் நிற்பேனுக. சிலுவையைத் தரையில்போட்டுச் சரிபடுத்துகிறுர்கள். இதினிடையில் எருசலேமிலுள்ள பிரபுக்களின் மனைவிகள், சிலுவையில்றையப்படுகிறவர்களுக்கு, வேதனையை மாற்றும்படி வழக்கமாகச் செய்தனுப்பும் நஞ்சுக்காடி என் மீட்பருக்கும் கொடுக்கப்படுகிறது; அவரோ அதை வேண்டாமென்று தள்ளிவிட்டார். ஆ, நேசரே! ஆ, மீட்பரே! வாங்குமேன், வாங்கிக் குடியுமேன்! உமது நாவின் வறட்சி மாறுமே, நோவு தெரியாதே; இந்தக் காடியாலுண்டாகிற மயக்கம் உமது வேதனையை மாற்றுமே! வாங்கும் நேசரே, வாங்கிப் பானம் பண்ணும்.

இயேசு. ஆதாமின் மகனே, ஏவாளின் மகளே, ஆத்திரப்படாதே. நீ என் வேதனையையும், என் நோயையும் என் ஸ்திதியையும் கவனிக்கிறதைவிட்டு உன் வாழ்வைக் கவனிப்பாயாக. உன்மேலுள்ள அன்பு இந்தக்

காடியாலுண்டாகும் வெறியைவிட எனக்கு அதிக வெறியை உண்டாக்குகிறது. உன்மேலுள்ள அன்பு என் வேதனையை மாற்றிவிட்டது. அந்த நேச மது, பரலோக பானம். அதை அனுதிமுதல் பானம்பண்ணி, நேச வெறி கொண்டிருக்கிற எனக்கு இந்தக் காடி என்னத்துக்கு? இப்போது உன் அங்கலாய்ப்பைப் பார்த்து, உன் வேண்டு கோளினிமித்தம் நான் ஒரு மிடறு காடி குடித்தது மெய் யானல், சாத்தானும், அவன் மக்களும், நான் உன் மேலுள்ள அன்பினல் இவைகளைச் சகியாமல் காடி மயக்கத்தால் சகித்தேன் என்று உள் காதில் ஓதுவான். உன் பலவீன இருதய ஸ்திதியால், நீ அதையும் நம்பி, அப்படியுமிருக்கலாமென்று நினைத்து, உன் அன்பில் தளர்ச்சியடையலாம். நான் எல்லாப் பாடுகளையும் அன் பினல் சகிப்பேன். நீ என்னை அன்பினல் அண்டிக்கொள்.

என் மீட்பர் தமது வஸ்திரங்கள் அற்றவராக ஒரு துண்டுத் துணியைக் கட்டிக்கொண்டு சிலுவையில் அறையப்படும்படி அதின்மேல் படுக்கிருர். வானமே கண்ணேக்கு, பூமியே வந்து பார்! கிரகலோகங்களே, உங்கள் ஓட்டத்தை நிறுத்துங்கள். என் மீட்பர் சிலுவை யில் பள்ளிகொண்டிருக்கிருர். என் மீட்பரே! நான் பஞ்சு மெத்தையில் படுத்துப் பாவம் செய்ததுமுண்டு; பாவம் நினைத்ததுமுண்டு. தேவரீர் அதை நிவிர்த்திசெய்ய இந்தச் சிலுவைச் சட்டத்தில் படுத்திருக்கிறீர். ஆ, உமது நேசபிதா, உமக்கு ஆதிமுதல் ஆயத்தப்படுத்திவைத்த சாவுகட்டில் இதுதாஞ? வானுதி வானங்களும் கொள்ளாத உம்மை, நீர் இந்த அளவுக்குள் அடக்கிக்கொண்டீ ராக்கும்! உமது மாதாவாகிய மரியம்மாள் உம்மைப் பெற்று முன்னணையில் கிடத்தினுள். உமது பிதாவானவர் உம்மைச் சிலுவையில் கிடத்தினுர். ஆகவே எனக்காக நீர் அவதாரமானதில் உமக்குக் கேவலமான படுக்கையே கிடைத்தது.

ஆ, என் நேசர் சிலுவையோடு ஆணியடிக்கப்படுகிருர். சேவகர் சுத்தியலை வீசி அணியின்மேல் அடிக்கிற சத்தம் சர்வலோகத்தையும், இந்த இரட்சண்ய ஆண்டவரின்

மரணத்துக்குவர அழைக்கும் சாவுமணியாக இருக்கிறது. தூதரே—அதி தூதரே—மகாத்துமாக்களே—வாருங்கள், வாருங்கள். மனுப்புத்திரரே—பாவிகளே—வாருங்கள், வாருங்கள். புருஷரே—ஸ்திரீகளே—பிள்ளைகளே—வாருங்கள், வாருங்கள். உங்கள் மீட்பரின் மரணம் நெருங்குகிறதென்ற சாவுமணி நாதம் இதோ கேட்கிறது!!

இதோ என் மீட்பரின் சாவுமணி கேட்டு வந்துவிட்டேன்! ஐயோ இதென்ன காட்சி? இவ்வண்ணம் தேவனாலும், மனிதராலும் கைவிடப்பட்ட ஒரு புண்ணியவானை நான் கண்டதில்லை; இனி நான் உயிரோடிருப்பதில் லாபமென்ன? இனி நான் என் இஷ்டப்படிக் காலம் கழிப்பது சரியோ, நான் அந்தச் சிலுவையின்கீழ் படுத்துக்கொள்வேனாக? அந்த ஆணிகள் என் மனதின் கைகளையும் கால்களையும் ஊடுருவுவதாக. நான் அவரோடு சிலுவையில் அறையப்படுவேனாக!!

ஆ, பிதாவே, முன்னொரு காலத்தில் ஈசாக்கு ஒரு பீடத்திலே கட்டப்பட்டு, பலியாக வெட்டப்பட கத்தி ஓங்கப்பட்ட சமயத்தில், நீர் ஒரு தூதனை அனுப்பி ஒரு சத்தத்தால் தடுத்தீரே, அதே தயவை இப்போது உமது குமாரனுக்குச் செய்யக்கூடாதா? அந்தத் தயவு செய்தால் எனக்கு மீட்பில்லை. உலகத்துக்கு இரட்சிப்பில்லை!!

ஆணியடிக்கும் சத்தம் கேட்கக் கேட்கப் பேச்சுகள் அடங்கினது; பரிதாபம் பெருகுகிறது. ஊடேயூடே சில பெருமூச்சுகள் கேட்கப்படுகிறது. என் மனம் இன்னும் அசையவில்லை—என் கண் இன்னும் கசியவில்லை—என் சுவாசப்பையில் இன்னும் மூச்சடைக்கவில்லை—என் இருதயம் கல்லாயிருக்கிறது—என் மனம் கடினப்பட்டிருக்கிறது. இப்படி தன் தகப்பன் துன்பத்தை உணராத பிள்ளை நான்தான்—இப்படி தன் சகோதரன் சங்கடத்தைக் கவனியாத பாதகன் நான் தான்—இப்படி தன் மீட்பரைக் கவனியாத பாவி நான் தான். ஐயோ என் பாவத்தின் அகோரம் என் கண்ணை மறைத்து என் மீட்பரின் பாடுகளை நான் கவனியாத

படிச் செய்கிறதே—ஐயோ என் அக்கிரமத்தின் அகோரம் என் காதை அடைத்து என் மீட்பர் ஆணிகடாவப்படும் சத்தத்தைத் தடுத்துவிட்டதே—ஆ, என்னைப் போல நிர்ப்பாக்கியமான பாவியுண்டோ?—இல்லை, இல்லை, இல்லை. இந்தச் சுத்தி அடியின் ஓசையைக் கேட்டு சூரியன் தன் கிரணங்களைச் சுருக்குகிறது—பூமி தன் அயனத்தில் ஓடத் தாமதித்து நடுங்கத் துவக்குகிறது—ஆனால் என் பெருமை இன்னும் அடங்கவில்லை. என் மனம் இன்னும் அசையவில்லை. ஐயோ நான் நிர்ப்பாக்கியமான பாவியாயிருக்கிறேன். எனக்காக என் மீட்பர் இப்படிப் பாடுபட்டார் என்ற உணர்ச்சி என் இருதயத்தை இன்னும் பூரணமாக ஆளவில்லையே. ஆ, இது என் பாவ ஸ்திதியை எனக்குக் காட்டுகிறது.

அந்தச் சேவகன் அடித்த ஆணி என் மீட்பரின் கரத்தையும், சிலுவை மரத்தையும் ஊடுருவி, கொல்கொதா மலையையும் சற்று துளைத்துவிட்டது. ஆனால், அது என் இருதயத்தை இன்னும் ஊடுருவவில்லையே! என் இருதயம் கொல்கொதா மலைக்கல்லிலும் கடினமானது என்று உணர்ந்துகொள்ளுகிறேன்!! நான் இன்னும் சற்று நேரம் இதே சிலுவையின் கீழ் என்னையும் என் மனதையும் கிடத்திவைத்திருப்பேனாக!!

ஆணியடிக்கப்பட்ட என் மீட்பரின் காயங்களிலிருந்து ஒரு சொட்டு ரத்தம் என்மேல் பட்டது; உடனே பெரிய மாறுதலைக் காண்கிறேன். கல்லான என் மனம் இளகிற்று—என் கண் தெளிவிக்கப்பட்டது—என் காதின் அடைப்பும் திறந்துவிட்டது—இப்போதுதான் அந்த ஆணி என் கைகளையும், கால்களையும் ஊடுருவிப் பாய்கிறது. எனக்கு மீட்புண்டாகவே என் மீட்பர் சிலுவையிலறையப்பட்டார்; என் பாவங்கள் இன்றைய தினம் இரும்பாணியாக மாறி, என் பாவவல்லமைகள் சுத்தியலாக ரூபமெடுத்து, என் இயேசுவைச் சிலுவையிலறைகிறதென்று காண்கிறேன்; என் மீட்பரே, நான் என் ஆவியில் உம்மோடுகூட சிலுவையில் அறையப்பட்டு, என் பாவங்களிலிருந்து ஓய்வேனாக! இந்தச் சுத்தியலின்

சத்தம் பாவக்கல்லறையிலிருந்த என்னை விடுதலையாக்கி விட்டது. பாவ நித்திரையிலிருந்த நான் இந்தச் சத்தத்தால் விழித்துக்கொண்டேன். அல்லேலூயா! அல்லேலூயா! ஆமேன்!!

என் மீட்பர் சிலுவையில் கடாவப்பட்டுக் கிடக்கிறார்—அவரோடு, நானும் இவ்வுலகமும் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறோம்; அவர் என்னையும் இவ்வுலகத்தையும் தமது தோளின்மேலேற்றிக் கொண்டு, சிலுவையின்மேல் வெற்றி சிறப்பதை நான் பார்ப்பேன். என் மீட்பரின் மரணத்தால் கொல்கொதாவுக்குப் பெரிய வாழ்வு கிடைத்தது. இம்மட்டும் எல்லாராலும் பகைக்கப்பட்ட கொல்கொதா இன்றுமுதல் பக்தியுடன் நாடப்படுகிறது; ஆ, லீபனோனின் மகிமையும், கர்மேல் சாரோன் என்பவைகளின் அலங்காரமும் அதற்கு இணையானதல்ல. இன்றுமுதல் கொல்கொதா தலையோட்டிடமாயிராமல் கர்த்தருடைய மகா பரிசுத்த ஸ்தலமாகிறது. அது மலைகளுக்கு மேலாக உயர்த்தப்பட்டிருக்கிறதால் எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருகிறார்கள். பூலோகத்திலுள்ள எல்லா ஆத்துமாக்களும் தங்கள் இருதயங்களை இந்த கொல்கொதாவில் படுக்கவைத்து சமாதானமாக நித்திரை செய்கிறார்கள். நானும் என் ஆத்துமாவை இங்கே இளைப்பாறப்பண்ணி இந்த மலையிலுண்டான இரட்சண்ய நினைவோடு மரிப்பேனாக. ஏனெனில் இந்த மலைமேல் பரம பிதாவாகிய தேவன் மனுமக்கள் அனைவருக்கும் ஒரு விருந்தை ஆயத்தப்படுத்தியிருக்கிறார். சகல ஜனங்கள்மேலுள்ள பாவமும், சகல ஜாதிகளையும் மூடியிருக்கிற சாபமும் இந்த மலையிலே அகற்றிவிடப்பட்டது. கர்த்தராகிய தேவன் எல்லாருடைய பாவக் கண்ணீரையும் இங்கே ஓயப்பண்ணி, இரட்சண்ய மகிழ்ச்சியால் அவர்களை இடைகட்டிவிடுகிறார். அல்லேலூயா!

ஜெபம்

அன்புள்ள இயேசுவே, தேவரீர் என் பாவங்களை நீக்கும் பலியாக கொல்கொதா மலையில் சிலுவையிலறையப்

பட்டீர். இவ்வளவு அவமானத்துக்கும், கனவீனத்துக்கும் உம்மை உட்படபண்ணினவன் நான்தான். ஏனெனில் நான் ஒருவன் இவ்வுலகத்தில் இந்தக் காலத்தில் ஜீவித்து, இன்னின்ன பாவங்களைச் செய்வேனென்பதை தேவரீர் அறிந்து அவைகளினிமித்தம் தண்டிக்கப்படவும், என்னை இரட்சிக்கவுமாக இவ்வளவும் சம்பவித்ததேயன்றி மற்றப்படி இப்படிப்பட்ட பாடுகள் இந்தவிதமாக உமக்குச் சம்பவித்திருக்கமாட்டாது. உமது அன்பை நினைத்து உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். எனக்காக இந்தப் பாடுகளைச் சகித்த உம்மை என் இரட்சிப்பின் தேவன் என்று வணங்குகிறேன். தேவரீர் என்னை இரட்சித்து உமது சிலுவைப் பாடுகளால் சம்பாதித்த புண்ணியங்கள் அனைத்தையும் தயவாக எனக்குத் தத்தம் செய்ய வேண்டுமென்று உமது சிலுவை மரணத்தை முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

5. இயேசுவின் வஸ்திரம் பகிரப்பட்டது

வேதம்

"போர்ச்சேவகர் இயேசுவைச் சிலுவையில் அறைந்த பின்பு, அவருடைய வஸ்திரங்களை எடுத்து, ஒவ்வொரு சேவகனுக்கு ஒவ்வொரு பங்காக நாலு பங்காக்கினார்கள்; அங்கியையும் எடுத்தார்கள், அந்த அங்கி தையலில்லாமல் மேலே தொடங்கி முழுவதும் நெய்யப்பட்டதாயிருந்தது. அவர்கள்: இதை நாம் கிழியாமல், யாருக்கு வருமோ என்று இதைக் குறித்துச் சீட்டுபோடுவோம் என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்மேல் சீட்டுப்போட்டார்கள் என்கிற வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாகப் போர்ச்சேவகர் இப்படிச் செய்தார்கள்" (மத். 27: 35; மாற். 15: 24; லூக். 23: 34; யோவா. 19: 23, 24).

போதனை

சிலுவையிலறையப்பட்டவர்களுடைய வஸ்திரம், அவர்களை அறைகிறவர்களுடைய பாகம்போல் வழக்க

மாய் எடுத்துக்கொள்ளப்படுகிறதுண்டு. அந்த வழக்கத்தின்படி இயேசுவின் வஸ்திரங்களும் பங்கிடப்பட்டு எடுத்துக்கொள்ளப்பட்டன. அவைகளை நாலு பங்காக்கினார்கள் என்ற வாசகத்தால், இயேசுவைச் சிலுவையிலறைந்தவர்கள் நாலுபேர் என்று தெரியவருகிறது. இதில் ஒருவன் வலது கையையும், மற்றவன் இடது கையையும், அடுத்தவன் கால்கள் இரண்டையும் பிடித்திழுத்துக்கொள்ள நாலாம் ஆள் ஆணிகடாவியிருக்கலாம்.

இயேசுவின் உடையில் பங்கிடக்கூடாத ஒரு விநோதமான அங்கியிருந்தது. அதைச் சீட்டுப்போட்டுத் தீர்மானித்துக் கொண்டார்கள். இப்படி இரட்சகரின் வஸ்திரம் பகிரப்படும் என்று தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டது. இதினால் இயேசுவுக்குச் சம்பவித்தவைகளெல்லாம் தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படியே சம்பவித்தன என்றும், அவர் தேவனாயிருந்து நம்முடைய பாவ நிவாரணத்தினிமித்தம் இவைகளை அநுபவித்தாரென்றும் நாம் அறியவேண்டியது. இயேசுவின் வஸ்திரம் பங்கிடப்பட்ட வரலாறு நாலு சுவிசேஷகராலும் அறிவிக்கப்பட்டிருக்கிறதால், அதில் ஒரு விசேஷ சத்தியம் அடங்கியிருக்கிறதாக நாம் எண்ணிக்கொள்ளவேண்டியது.

தியானம்

என் நேச இயேசுவின் வஸ்திரமும் பங்கிடப்படுகிறதை நான் பார்க்கிறேன். ஆ, கொலைபாதகரே, இந்த உடுப்புகளையாவது நீங்கள் அவருடைய தாயாருக்குக் கொடுத்துவிடலாகாதா? ஆ, பிலாத்துவே, பிரதான ஆசாரியரே, மூப்பரே, இதை நீங்கள் யாராவது எடுத்துக் கொள்ளலாகாதா? இதை நீங்கள் உங்களுக்குச் சொந்தமாக்கிக்கொண்டால், இயேசுவின் பழி உங்கள்மேல் சுமரும் என்று பயந்தீர்களாக்கும்.

எப்படியும் அது நாலுபோர்ச்சேவகருக்குக் கிடைத்தது. இதில் பாகையை ஒருவனும், கீழ் உடையை ஒருவனும் உள்சட்டையை ஒருவனும், மேல்சட்டையை ஒரு

வனுமாக எடுத்துக்கொண்டிருக்கலாம். இவைகளில், எனக்கு அது வேண்டும், இது வேண்டாம் என்கிற கட்சி யுண்டாகவில்லை. ஆனால் இதோ பார், வேறொரு உடை யிருக்கிறது; அந்த அங்கி தையலில்லாமல் மேலே தொடங்கி நெய்யப்பட்டிருந்ததாம். இதைப்பற்றி பெரிய பேச்சு நடக்கிறது. ஒவ்வொருவரும் இது எனக்கு வேண்டுமென்று வாதாடிக் கடைசியாகச் சீட்டுப்போடப் போகிறார்கள். நீயும் பக்கத்தில் நின்று உன் பேரையும் ஒரு சீட்டில் எழுதி அதையும் சேர்த்துப்போடும்படிக் கேட்பாயாக.

முந்தின உடுப்புகள் இயேசுகிறிஸ்துவால் உலகத்துக் குண்டாகிற பொதுவான வாழ்வுகளையும், இந்தத் தைய லில்லாத அங்கி அவரை விசுவாசித்து, அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்குமாத்திரம் கிடைக்கிற விசே ஷித்த வாழ்வையும் குறிப்பிக்கிறது என்று சொல்லலாம். கிறிஸ்துவால் உலகத்துக்கு, கல்வி, நாகரிகம், சன்மார்க் கம், ஒழுக்கம் முதலிய பல வாழ்வுகளிருக்கின்றன. ஆனால் சீட்டுப்போட்டு எடுத்தாற்போல் ஒரு விசேஷித்த வாழ்வுமிருக்கிறது. அது இயேசுவின் நீதியின் உடுப்புத் தான். இயேசுவை விசுவாசித்து அவரில் அன்புகூருகிற வர்களுக்குமாத்திரம் இது கொடுக்கப்படும். மற்றவர் கள் அதின் சிறப்பையும், மேன்மையையும் கவனித்து; அது எனக்கும் வேண்டும் என்று விரும்பி ஆசிப்பார்கள்; இது ஆசிக்கிறவர்கள் எல்லாருக்கும் அல்ல, அவரை விசுவாசிக்கிறவர்களுக்குமாத்திரம் கிடைக்கும்.

சேவகர் சீட்டுப்போட்டபோது இந்த அங்கி யாருக்கு விழுந்ததோ? ஒருவேளை ஈட்டியலை ஓங்கி ஆணியடித்த போர்ச்சேவகனுக்கு விழுந்திருக்கலாம். அந்தச் சேவகன் நான்தான். பிரதான பாவியாகிய எனக்கு இந்த அங்கி கிடைக்கிறது. என் பேருக்கு அந்தச் சீட்டைத்தட்டு கிறார். எனக்கு யோகம் வந்தது; நான் சந்தோஷத்தோடு அதைப் போர்த்துக்கொண்டு தெருக்களில் நடக்கிறேன். எல்லாரும் இவன் யார் என்று நோக்குகிறார்கள். ஏனெனில் இந்த உடை எனக்குப் பரிசுத்த அலங்கா

ரத்தை உண்டுபண்ணி, என்னைப் புது மனுஷனைப்போல் விளங்கப்பண்ணுகிறது. இந்த அங்கியை நான் போட்டுக் கொண்டவுடனே என் நிறமும், நினைவும், பேச்சும் செய்கையும் எல்லாம் மாறுகிறது. என்னைக் கண்டவர்கள் நீ எந்தத் தேசத்தான் என்று கேட்கிறார்கள். நான் கானான் தேசத்தான் என்கிறேன். அவர்கள் பின்னும் என் பூர்வோத்தரத்தை அறியும்படி நீ கானானிலுள்ள எந்த மலைநாட்டான் என்கிறார்கள். ஏனெனில் அந்த நூதன உடை தங்கமயமான ஆட்டுமயிர் உடைபோலி ருக்கிறதால், இவன் ஏதாவதொரு மலைவாசி என்று அவர்கள் எண்ணுகிறது இயல்புதான். நான் அவர்களை நோக்கி: அப்பா, நான் கொல்கொதா மலைவாசி; தேவாட்டுக்குட்டியின் தோலுடையைத் தரித்திருக்கிறேன் என்று சொல்லுகிறேன்.

இந்தத் தோல் அங்கியை நான் என் ஜீவகாலமுழுவதும் போர்த்துக்கொண்டு, இந்த உடையோடு மரிப்பேன். நான் இந்த உடையோடு பரலோகம் போவேன்; தூதரோடு கூடித்திரிவேன்; பிதாவாகிய தேவனையும் தரிசிப்பேன். இந்தப் பிரதான சத்தியம் விளங்கவேண்டுமென்றே என் இரட்சகருடைய உடையைப்பற்றியும் தாவீது தீர்க்கதரிசனம் உரைத்தார் (சங். 22: 18).

ஜெபம்

எனக்காகப் பாடுபட்டு மரித்த தேவாட்டுக்குட்டியாகிய இயேசுவே! தேவரீர் என்னை மீட்கும்படியாக உமது ஜீவனையும், என்னைக் கழுவும்படியாக உமது இரத்தத்தையும், என்னைப் போஷிக்கும்படியாக உமது சரீரத்தையும் தந்தது மாத்திரமல்ல, என்னை உடுத்தும்படி ஒரு அங்கியையும் விட்டுப்போனீர். அது, உமது தையலில்லாத அங்கியால் குறிக்கப்படுகிற நீதி என்னும் வஸ்திரம் தான். என் நிர்வாணம் உமக்குத் தெரியுமே. அதை மூடும்படி நான் அணிந்துகொள்ளும் சுயநீதியாகிய அத்தியிலை வஸ்திரமும் உமக்குத் தெரியுமே; இதோ அதைக் கிழித்துத் தூரத்தில் எறிந்துவிடுகிறேன். ஆ, தேவாட்டுக்குட்டியே, உமது தோல் அங்கியை எனக்குத்

தாரும். ஏதேனுக்குள் நிர்வாணம் காணப்படாதபடி, என் ஆதித்தாய் தந்தையரை தோல் அங்கியால் மூடினீர். பரமஏதேனுக்குள் குடியிருக்கவேண்டியவனும், சீயோன் மலைவாசியுமாகிய எனக்கும், உமது நீதியாகிய தோல் அங்கியைத் தாரும். ஆ, தேவாட்டுக்குட்டியே, என் பாவநிருவாணம் நீங்கும்படி நீர் கொல்கொதா மலையில் செய்துவைத்திருக்கிற அந்த அங்கியால் என்னை மூடியருளும், சுவாமி! ஆமென்.

6. சிலுவைப் பலகை வாசகம்

வேதம்

''பிலாத்து ஒரு மேல்விலாசத்தை எழுதி, சிலுவையின்மேல் போடுவித்தான். அதில் நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா என்று எழுதியிருந்தது. இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடம் நகரத்துக்குச் சமீபமாயிருந்தபடியினால், யூதரில் அநேகர் அந்த மேல்விலாசத்தை வாசித்தார்கள்; அது எபிரெயு கிரேக்கு லத்தீன் பாஷைகளில் எழுதியிருந்தது. அப்பொழுது யூதருடைய பிரதான ஆசாரியர் பிலாத்துவை நோக்கி: யூதருடைய ராஜா என்று நீர் எழுதாமல், தான் யூதருடைய ராஜா என்று அவன் சொன்னதாக எழுதும் என்றார்கள். பிலாத்து பிரதியுத்தரமாக: நான் எழுதினது எழுதினதே என்றான்'' (மத். 27: 37; மாற். 15: 26; லூக். 23: 38; யோவா. 19: 19–22).

போதனை

இயேசுவின் சிலுவையின்மேல் எழுதிவைக்கப்பட்ட வாசகத்தைப்பற்றி நாலு சுவிசேஷகரும் எழுதியிருக்கிறார்கள். ஒரு கைதி சிலுவையிலறையப்படும் காரணத்தை எல்லாருக்கும் காண்பிக்கும்பொருட்டு, அதை ஒரு பலகையில் எழுதி, அவனுக்குமுன்னே சுமந்துபோகிறதும், அல்லது அவன் சிலுவையின்மேல் கட்டிவைக்கிறதும் ரோமருக்குள் வழக்கமாயிருந்தது. அந்த வழக்கத்தின்படி இயேசுவுக்கும் செய்யப்பட்டது. நாலு சுவிசேஷகரும் எழுதிவைத்திருக்கும் இந்த வாசகம்

வார்த்தைகளில் வித்தியாசப்பட்டாலும் கருத்தில் ஒத்திருக்கிறது. அதில் ஒருவாறு பூரணமான வாசகத்தை பரி. யோவான் எழுதிக் காட்டுகிறார். அதாவது:—

"நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா"

என்பதுதான். நாலு சுவிசேஷகரும் காட்டிய வாசகத்திலுள்ள வார்த்தைகளில் ஒன்றையும் விடாமல் ஒரு வாசகமெழுதினால், அந்த வாசகம் பின்வருகிறபடி இருக்க வேண்டியது:—

நசரேயனாகிய இவன்
யூதருடைய ராஜாவாகிய இயேசு

இதில் நசரேயன், யூதருடைய ராஜா, இயேசு, என்னும் பதங்கள் முக்கியமானவைகள். "நசரேயன்" என்ற பதத்தை ஒரு சுவிசேஷகனும், "இயேசு" என்னும் பதத்தை இரண்டு சுவிசேஷகரும் எழுதியிருந்தாலும் "யூதருடைய ராஜா" என்னும் பதத்தை நாலு சுவிசேஷகரும் எழுதியிருக்கிறார்கள். "நசரேயன்" என்பது இயேசுவின் தீர்க்கதரிசனத் தொழிலையும், "இயேசு" என்பது அவருடைய ஆசாரியத்துவத்தையும், "ராஜா" என்பது அவரது ராஜத்துவத்தையும் அறிவிக்கிறதென்று சொல்லலாம். ஆகவே நமது இரட்சகரின் மூன்று தொழில்களும் சிலுவையின்மேல் தொங்கவைக்கப்பட்ட வாசகப் பலகையால் இவ்வுலகத்துப் பிரசித்தம் செய்யப்படுகிறது. இந்த வாசகத்தை மாற்றி எழுதும்படி யூத ஆசாரியர் பிரயாசப்பட்டும் அது வாய்க்கவில்லை.

தியானம்

நான் இயேசுவின் சிலுவைக்குமேல் வைக்கப்பட்ட மேல்விலாசப் பலகையைச் சற்றே நோக்குவேனாக. இம்மாதிரிப் பலகை மற்ற இரண்டு சிலுவைகளிலிருக்கிறது; அதின் வாசகங்களை, கள்ளன் திஸ்மாஸ் என்றும் கள்ளன் கிஸ்தாஸ் என்றும் வாசிக்கிறேன். என் இயேசுவின் சிலுவை வாசகமோ முற்றிலும் வித்தியாசமாயிருக்கிறது.

நசரேயனுகிய இயேசு யூதருடைய ராஜா

பொதுவாகப் பார்த்தால் இது நன்ருகத்தானிருக்கிறது. இதை இப்படியே என் மனதின்முன் வைத்துத் தியானிப்பேனுக.

"நசரேயனுகிய இயேசு" என்ற பதம் என் மீட்பர் தாழ்மைப்பட்டதை எனக்கு நினைப்பூட்டுகிறது. இதில் "இயேசு" என்ற பதமும் சேர்ந்திருக்கிறதால், "நசரேயன்" என்ற இழிவான பதம் சிறப்படைந்துவிட்டது; இயேசு என்ருல் இரட்சிக்கிறவர் அல்லவா? நாசரேத்தூர் இரட்சகன் என்பதும் நசரேயனுகிய இயேசு என்பதும் ஓரே கருத்தைக் கொடுக்கிறது. என் இரட்சகன் எந்த இழிவான ஊரில் தோன்றினுலும் எனக்கென்ன? அவர் கொடுக்கும் இரட்சிப்பு அந்த இழிவான ஊரையும் கனம் பொருந்தியதாக்கிவிட்டது. நாசரேத்திலிருந்து யாதொரு நன்மையுண்டாகக் கூடுமோ? என்று கேட்ட நாத்தான் வேலே, அவன் சகோதரரே, இதோ சிலுவையண்டை வாருங்கள்! நசரேயனுகிய இயேசுவைப் பாருங்கள். நாசரேத்து, பூலோக மீட்பரை வளர்த்து ஆதரித்து விட்டதினிமித்தம் கனம்பெறுகிறது நானும் பாவத்தால் இழிவடைந்திருக்கும் என் மனதில் இயேசு மதித்து விசுவாசித்தால், அவர் எனக்கு பாவமன்னிப்பைத் தந்து என்னைக் கனப்படுத்துவார்.

"யூதருடைய ராஜா" யூதர் இதினிமித்தமே இயேசுவைக்கொலைசெய்தார்கள். எங்களுக்கு ரோம இராயனே வேண்டும், இவர் வேண்டாம் என்று ஓலமிட்டார்கள். கடைசியாக ரோம அதிபதியே அவரை "யூதருடைய ராஜா" என்று இந்த வாசகத்தால் பட்டம் சூட்டுகிருன். என் மீட்பரே, நீர் யூதர் வெகுகாலமாக எதிர்பார்த்த ராஜாதான். நீர் தொட்டில் பாலனுனபோது சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து, "யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே?" என்று விசாரித்தார்கள். இப்போது பிலாத்து அந்த ராஜா இன்னுரென்று இந்த மேல்விலாசத்தால் காட்டுகிருன். நீர் யூதருடைய ராஜா.

நான் இந்த விலாசத்தை தியானித்துக்கொண்டு, என் மனதில் கொஞ்சம் சந்தோஷம் கொள்ளுகிற சமயத்தில் அந்த விலாசத்தையிட்டு பிரதான ஆசாரியருக்குள் பேச்சு நடக்கிறது. இந்த விலாசம் சரியல்ல—இதை மாற்றவேண்டும்—இது அதிகக் கனமான வாசகம்—எபிரெயு லத்தின் கிரேக்குப் படித்த யாவரும் இதை வாசித்து, இவர் யூதருடைய ராஜாவாம்—அவர்கள் மீட்பராம்—தங்களை மீட்ட ராஜாவை இப்படி அவமானம்பண்ணுகிற ஜாதியார் பொல்லாதவர்கள் என்று சொல்ல இடமாகும்—இதை மாற்றவேண்டும் என்று பிரயத்தனப்பட்டார்கள். அதைப்பற்றிப் பிலாத்துவினிடம் கேட்டபோது,

"நான் எழுதினது எழுதினதே"

என்று சொல்லிவிட்டான். பிலாத்து தேவனால் தைரியமடைந்து இப்படிச் சொன்னான். எழுத்துக்காரன் விரலை, தேவன் இப்படியே எழுதிமுடிக்க நடத்தினார். ஆ, பொல்லாத ஆசாரியரே, இதை ஏன் மாற்றவேண்டும்? மாற்றக்கூடாது. இது தேவசித்தத்தால் தீர்மானிக்கப்பட்ட வாசகமாயிருக்கிறது. இந்த வாசகம் உங்களை வெட்கப்படுத்துகிறது. உங்களால் என் மீட்பருக்குண்டான அவமானங்களை மாற்றுகிறது; தேவகுமாரனை மகிமைப்படுத்துகிறது. மாற்றவேண்டுமானால் இந்த வாசகத்தையல்ல, ஓய் ஆசாரியரே உங்கள் தலைப்பாகையில் வரையப்பட்டிருக்கிற வாசகத்தை மாற்றிப்போடுங்கள். அங்கே "கர்த்தருக்குப் பரிசுத்தம்" என்ற எழுத்துகளிருக்கின்றனவே. அதை மாற்றி "கர்த்தருக்கு அருவருப்பு" என்ற வாசகத்தை எழுதவேண்டுமானால் எழுதிக்கொள்ளுங்கள். இனிமேல் இந்த வாசகத்தை மாற்றி உங்கள் இஷ்டம்போல எழுத முடியாது. உங்களை அறியாமல் உங்களுக்குச் சம்பவித்த அவமானத்தை உணர்ந்து முகத்தை மூடிக்கொள்ளுங்கள்.

பிரதான ஆசாரியர் போய்விடுகிறார்கள்; இங்கே வேறொரு கூட்டம் வந்திருக்கிறதை என் ஆவியிலே காண்கிறேன். அவர்கள் ஒவ்வொருவரும் இந்த வாச

கத்தை வாசித்து, இதை மாற்றும்படி ஒரு ஏணியிலேறி, அந்த வாசகத்தின் அடியில் "ஸ்திரீயின் வித்து" என்று எழுதுகிறார். இவர் ஆதிமனுஷனாகிய ஆதாமாம்; அடுத்தவர் ஏறி, அதின் கீழே "சமாதானப்பிரபு" என்றெழுதுகிறார். இவர் மோசே முனிவராம்; வேறொருவர் அதின் கீழே "இம்மானுவேல்" என்றெழுதுகிறார். இவர் ஏசாயாவாம்; வேறொருவர் அதின் கீழே "இவர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்றெழுதுகிறார். இவர் பேதுருவாம். வேறொருவர் அதின் கீழே "யூதக் கோத்திரச் சிங்கம்" என்றெழுதுகிறார். கடைசியாக ஒட்டக மயிருடை தரித்து வார்க்கச்சை கட்டிய ஒருவர் ஏறி, அதின் கீழ் "உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்று எழுதுகிறார். அந்த வாசகத்தைக்கண்ட எல்லாரும், சிலுவையண்டை சாஷ்டாங்கமாய் விழுந்து தங்கள் விண்ணப்பங்களைப் படைக்கிறார்கள். நானும் சாஷ்டாங்கம் செய்து,

"மாசற்ற ஆட்டுக்குட்டி!
நீர் சிலுவையில் தொங்கி,
எல்லார் கடன் செலுத்தி
இரக்கத்தாலே பொங்கி
பிசாசை ஜெயம் கொண்டீர்
அடியான்மேல் இரங்கும்!"

என்று விண்ணப்பம் செய்கிறேன்.

பிலாத்துவின் வாசகத்தோடே பூர்வ மகாத்துமாக்கள் தங்கள் மனம்போல அவரவர் ஒரு வாசகத்தை என் மனதின்முன் எழுதிவைக்கிறார்களே, என் அபிப்பிராயத்தையும் என் வாசகத்தையும் கேளுங்கள். பிலாத்து எழுதின வாசகம் அவன் வாசகமல்ல. தேவன் எழுதச் சொன்ன வாசகமாயிருக்கிறது; என்றாலும் என் தியானத்துக்கு அது பொது வாசகம்போலிருக்கிறது. அதின் கீழே காணும் மற்ற வாசகங்களும் அப்படியே பொதுக் கருத்துகளையே உணர்த்துகின்றன. அவைகளின் அடியில் நான் எழுதிவைக்கும் வாசகத்தைப் பாருங்கள்:—

என்னை மீட்கும் இயேசு,
என்னை ஆளும் இராஜா

என்று எழுதிவைக்கிறேன். ஏனெனில் இதை வாசிக்கும் ஒவ்வொருவனும் இயேசுவைத் தன் இரட்சகராகவும், தன் ராஜாவாகவும் ஏற்றுக்கொள்ளவேண்டியது அவசியமல்லவா?

ஜெபம்

சிலுவையில் தொங்கின மேல்விலாசப் பலகையால் எனக்கு மீட்பரும், ராஜாவும், போதகருமாகப் பிரஸ்தாபிக்கப்பட்ட இயேசுவே, தேவரீருடைய சிலுவையண்டை வந்து சாஷ்டாங்கம்பண்ணி நிற்கிற அடியேனை கண்ணோக்கிப் பாரும். நான் ஒரு பாவி. தேவரீர் என்னை இரட்சிக்கும்படி இப்படிச் சிலுவையிலே தொங்குகிறீர். உமது அன்பின் ஆழத்தை இங்கே காண்கிறேன். பஞ்சமாபாதகனாகிய என்மேல் இரங்கி என் பாவங்களை மன்னித்து, எனக்கு ராஜாவாயிரும். தேவரீருடைய இராஜ்யபாரத்தில் பாவமன்னிப்பு, நீதி, சமாதானம் முதலிய ஆவிக்குரிய எல்லா வாழ்வுகளும் கிடைக்கிறது. அந்த வாழ்வுகளுக்கு அடியானைப் பங்குள்ளவனாக்கிக் கடைசியாக உமது இராஜ்யத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று, உமது பாடுகளினிமித்தம் வேண்டிக் கொள்ளுகிறேன். ஆமென்.

7. இயேசு சிலுவையில் தொங்கினது

வேதம்

"சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும். நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்."

"அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினை

யாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து . . . . இப்படிச் சமாதானம்பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார்." "நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து; துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்." "அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்." "நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" (பரி. யோவா. 3: 14, 15; 12: 32; எபே. 2: 14–16; கொலோ. 2: 14, 15; பிலி. 2: 8; 1 பேது. 2: 24).

போதனை

சிலுவையின்மேல் கிடத்தப்பட்டு ஆணியடிக்கப்பட்ட குற்றவாளிகளை அப்படியே சிலுவையோடு இழுத்துக்கொண்டுவந்து, அதற்காக மலைமேல் தோண்டி வைக்கப்பட்டிருக்கும் குழியண்டைச் சேர்த்து, மேல் நுனியில் ஒரு வடத்தைக் கட்டி அப்படியே உயர்த்தி இழுத்து, அந்தந்தக் குழிக்குள் நிறுத்துவார்கள். கற்பாறையான அந்தக் குழிகளில் சிலுவை திடீர் என்று விழும். இப்படி விழும்போது, நரம்புகள் அறுந்துபோகிறதும், கணுக்கள் பூட்டுவிட்டுப் போகிறதுமுண்டு. அதினால் சொல்லமுடியாத வேதனையுண்டாகும். நம்முடைய இரட்சகருக்கும் இப்படியே நடந்ததென்பதற்குச் சந்தேகமில்லை.

இயேசு சிலுவையில் தொங்கின விஷயமானது அநேக சத்தியங்களை ஸ்தாபிக்கிறதாயிருக்கிறதென்று புதிய ஏற்பாட்டினால் விளங்குகிறது. அவைகளோவ்வொன்றை

யும் இவ்விடத்தில் விவரிக்கத் துணியாமல் அதின் குறிப்புகளை மாத்திரம் காண்பிக்கிறோம்.

1. இயேசு தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு நித்திய ஜீவன் கிடைக்கும்படித் தொங்கினார் (யோவா. 3: 15).
2. மனுமக்களை மேலே இழுத்துக்கொள்ளும்படித் தொங்கினார் (யோவா. 12: 32).
3. நம்மை தேவனோடு சமாதானம் செய்யும்படித் தொங்கினார்.
4. பகையாகிய பிரிவினைச் சுவரை இடிக்கும்படித் தொங்கினார்.
5. நியாயப்பிரமாணத்துக்கு முடிவுசெய்யும்படித் தொங்கினார்.
6. யூதரையும் புறஜாதியாரையும் ஏகஜாதியாக்கும்படித் தொங்கினார்.
7. நமது ஆக்கினைத்தீர்ப்பை அழிக்கும்படித் தொங்கினார்.
8. சகல துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் பிடுங்கிக்கொள்ளும்படித் தொங்கினார்.
9. சிலுவையிலே வெற்றியடையும்படித் தொங்கினார்.
10. நாம் பாவத்துக்குச் சாகவும், நீதிக்குப் பிழைக்கவும் தொங்கினார்.
11. நமது பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படித் தொங்கினார்.
12. நமது பாவநோய் அனைத்தும் தீரும்படித் தொங்கினார்.

இவை ஒவ்வொன்றும் எவ்வளவு சிறந்த சத்தியங்களை நமக்கு உணர்த்துகிறவைகளாயிருக்கின்றன. இவைகளின்பேரில் சற்று தியானம் செய்வோமாக.

தியானம்

என் மீட்பர் சிலுவையிலே தொங்குகிறார். இப்பொழுது நான் அவரைத் தெளிவாகக் காண்கிறேன். இதற்கு முந்தின இரவு நான் அவரை இராப்போஜனப் பந்தியிலே பார்த்ததுக்கும் இதற்கும் எவ்வளவு வித்தி

பாசத்தைக் காண்கிறேன். முந்தின ஞாயிறு எருசலேமின் தெருக்களில் இவர் வாகன மேறிப்போன காட்சிக்கும் இதற்கும் ஐயோ எவ்வளவு மாறுதலைக் காண்கிறேன். இம்மட்டும் என் மீட்பர் கூட்டத்தின் மத்தியில் நின்றபடியால் அவரை நான் நன்றாகப் பார்க்க ஏதுவிருக்கவில்லை. இப்போதோ அவர் மனுப்புத்திரர் நடுவிலிருந்து பிரிக்கப்பட்டு சகலரும் தெளிவாய்ப் பார்க்கும்படி சிலுவையிலே தொங்குகிறார். முடவரும், குழந்தைகளும், குட்டையரும் பார்த்துக்கொள்ளத்தக்கதாக என் மீட்பர் ஆகாயத்தில் தோன்றுகிறார், நான் அவரை நன்றாகப் பார்ப்பேனாக!

தலையிலே முள்முடி—நெற்றியில் இரத்த ஓடை—முகத்தில் உமிழ்நீர்—முதுகில் சிலுவை—கண்களில் கண்ணீர்—கைகளிலும் கால்களிலும் இரும்பாணிகள்—மனதில் வியாகுலம்—நாவில் வறட்சி—எலும்புகள் கட்டுவிட்டிருக்கின்றன—நாவு மேலவாயோடே ஒட்டியிருக்கிறது—எலும்புகளை எண்ணிவிடலாம்—நரம்புகள் அறுந்துபோயின—ஆ, என் மீட்பர் இந்த வண்ணமாகத் தொங்குகிறார்.

தலையில் முண்முடியோ!
முகத்தில் உமிழ்நீரோ!
ஆ, இது என் பாவமே!
கண்களில் கண்ணீர்களோ!
கைகாலில் ஆணிகளோ!
ஆ, இது என் பாவமே!!
வாயினில் பெருமூச்சோ!
நாவினில் வறட்சியோ!
ஆ, இது என் பாவமே!!
எலும்பை எண்ணலாமே!
நரம்பும் தளர்ந்ததே!
ஆ, இது என் பாவமே!!

என் மீட்பர் சிலுவையில் தொங்குகிறார். இரும்பாணியின் பலத்தாலோ? அல்ல—அல்ல. அன்பாணியின் பலத்தால் தொங்குகிறார். நான் அவரில் அன்புகூருவே

ஞக. அவர் எனக்கு நித்தியஜீவன் கிடைக்கும்படித் தொங்குகிறுர். நான் இன்று நித்தியஜீவனைப் பெற்றுக் கொள்வேஞக. இம்மட்டும் நான் பாதாள பள்ளத்தின் பாவச்சேற்றுக்குள் இருக்கிறேன், கிடக்கிறேன். என் மேலிருக்கும் சேற்றின் பசையும், பிடிப்பும் அவ்வளவு பலமாயிருப்பதால் அதிலிருந்து என்னை பலத்தோடு இழுத்து இரட்சிக்கும்படி, என் மீட்பர் ஆகாயமேறி சிலுவையிலே தம்மை அறைந்துகொண்டு நிற்கிறுர்! இவ்வளவு பலத்தோடு என் மீட்பர் ஒரு மலைமேல் நின்று இழுக்காதபட்சத்தில் நான் மீட்கப்பட்டுப் பரலோகஞ் சேரமுடியாது (யோவா. 12: 32).

இதுமாத்திரமோ, என் மீட்பர் ஆகாயத்தில் சிலுவையிலே தம்மை அறைந்துகொண்டு பகைவராயிருந்த என்னையும், என் சிருஷ்டி கர்த்தாவையும் சமாதானமாக்குகிறுர். அவர் பரலோக பிதாவுக்கும் பூலோக பாவிக்கும் மத்தியஸ்தராக அவ்விரு லோகங்களுக்கும் மத்தியலோகமாகிய அந்தரலோகத்திலிருந்துகொண்டு, வானத்தையும், பூமியையும், தேவனையும், மனுஷனையும் சமாதானமாக்குகிறுர். அதோடு பூலோகத்தில் கட்சிப் பட்டு ஒருவரையொருவர் பகைத்துவந்த யூதர் புறஜாதியார் என்ற இருவகைக்காரரையும் சமாதானப்படுத்தும்படி அந்தரமேறி, ஆகாயத்தில் தொங்கி இருவருக்கும் இடையிலுள்ள பகை என்னும் தடுப்புச் சுவரையும், சடங்கு என்னும் நடுச்சுவரையும் தமது காலால் உதைத்து இடிக்கும்படி சிலுவையில் தொங்குகிறுர்.

அதுமாத்திரமோ, என்மேலும் மனுமக்கள் ஒவ்வொருவர் பேரிலும் எழுதப்பட்டிருந்த ஆக்கினைத்தீர்ப்பை அழிக்கும்படி சிலுவையிலே தொங்கினுர். என்மேலிருந்த ஆக்கினைத்தீர்ப்பனைத்தையும், அவர் அநுபவித்து, என்னை அதிலிருந்து விடுதலை செய்யும்படி சிலுவையில் தொங்க வேண்டுமென்பது பிதாவின் தீர்மானமாயிருந்தது. அந்தப்படி என் மீட்பர் என் பாவங்களைத் தம்மேல் ஏற்றிக் கொண்டு என் தண்டனையைச் சகிக்கையில் உண்டான

இரத்தச் சொட்டுகள், என் ஆக்கினைப் பாத்திரத்தின் எழுத்துக்களை அழித்துவிட்டன.

இவ்வளவுதானோ? அல்ல, அல்ல. பூலோக துரைத் தனங்கள் அதிகாரங்கள் அனைத்தையும், இந்தச் சிலுவையி லிருந்து பறித்துக்கொள்ளுகிறார். சகல ராஜாக்களும், பிரபுக்களும் அவரைச் சேவிக்கத்தக்கதாக எல்லா சிங்கா சனங்களுக்கும் உயரமான சிலுவைச் சிங்காசனமேறி, சர்வாயுதங்களின் ஒன்றையும் தரித்துக்கொள்ளாமல், தமது அன்பையே ஆயுதமாக அணிந்து, ஆணிகளால் தமது கைகால்களைக் கட்டிக்கொண்டு யுத்தம் செய்தார்; யுத்தத்தில் சிலுவையிலே வெற்றி சிறந்தார். பூலோக அரசாட்சியைப் பெற்றுக்கொள்ளும்படி இப்படிப்பட்ட யுத்தத்தைச் சிலுவையிலிருந்து செய்யவேண்டுமென்று பிதாவானவர் தீர்மானித்திருந்தார்!

இதுமாத்திரமோ, சகல பாவ நோயாளிகளும் என் மீட்பரின் பாடுகளையும் காயங்களையும் நன்றாகக் கண் ணோக்கி பாவநோயிலிருந்து குணமடையும்படி அவர் தொங்குகிறார். அவர் இன்றைக்கும் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் வண்ணமாக ஒவ்வொரு பாவிக்கு முன்னும் தொங்கிக்கொண்டிருக்கிறார். ஆ, எனக்கு நற்காலம் பிறந்தது. இனி நான் என் பாவந்தீரும்படி என்ன செய்வேன், எங்கே ஓடுவேன் என்று கலங்குவா னேன்? அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

என் மீட்பரே, உம்மை நோக்குகிறேன்; நான் உம்மை நன்றாக நோக்கும்படி என் மனக்கண்களைத் தெளிவாக்கும். அந்தகாரத்தின் தலைவன் அதைக் குருடாக்கி விட்டான். ஆதலால் முதலாவது, கொல்கொதாவில் நீர் செய்திருக்கிற சிலுவைக் கலிக்கத்தை அதிலே போடும். நான் அப்போது கண் தெளிந்த புருஷனாவேன்.

ஆ, என் மீட்பரின் சிரசை நோக்குகிறேன்! என் சிரசிலுள்ள பாவங்களாகிய தீய யோசனைகள்—தலை துலுக்குதல்—கண் சிமிட்டல்—பரியாசம்—பல்லைக் கடித் தல்—நாவைக் கடித்தல்—சிற்றின்பம் பேசுதல், பாடு தல்—என் அழகை மெச்சுதல்—என் மயிரைப் பின்னி

அலங்கரித்தல்—பொய்பேசுதல்—புறங்கூறுதல்—நிந்தித்தல் முதலிய எல்லா நோய்களும் என் மீட்பருடைய சிரசிலுள்ள காயங்களால் குணமாவதாக.

என் மீட்பரின் கைகளை நோக்குகிறேன். என் கைகளால் நான் நடப்பித்த ஒவ்வொரு பாவமும் நீங்குவதாக. இப்படியே நான் சற்றுநேரம், என் மீட்பரின் முதுகு, வயிறு, மார்பு, கால், இருதயம் எல்லாவற்றையும் ஒன்றின்பின் ஒன்றாக நோக்குவேனாக. முன்காலத்தில் கொள்ளிவாய்ச் சர்ப்பத்தால் கடிக்கப்பட்டவர்கள் குணமடையும்படி வெண்கல சர்ப்பம் உயர்த்தப்பட்டதே. இக்காலத்தில் பாதாள வல்ல சர்ப்பத்தால் தீண்டப்பட்டு பாவவிஷமேறின மாந்தர் யாவரும் குணமடைந்து பிழைக்கும்படி தேவன் தமது குமாரனாகிய இயேசுவை சிலுவையில் உயர்த்திவைத்தார். விசுவாசத்தால் அவருடைய காயங்களைக் கண்ணோக்கி, அவரில் அன்புகூருகிற எல்லாருடைய பாவநோயும் தீருகிறது. இது எவ்வளவு சந்தோஷம்! நான் அவரைப் பார்க்கப்பார்க்க, குணமடைகிறேன். என்னிலுள்ள எல்லாப் பாவநோயும் தொலைந்து நான் பூரணமாகக் குணமடையும்வரையும், அவரை நோக்குவேன்—நோக்குவேன்—நோக்குவேன்.

ஜெபம்

என் ஆத்துமாவை மீட்கவும், என்னை வானத்திற்கு உயர்த்தவும், என் ஆக்கினையைக் குலைக்கவும், என் நோய் தீர்ந்துபோகவும், நான் பிசாசை ஜெயம்கொள்ளவுமாக சிலுவையிலே தொங்கின இயேசுவே, இதோ உமது சிலுவையினடியில் என் பாவங்களை உணர்ந்து அழுது நிற்கிற என்னைக் கண்ணோக்கிப்பாரும் ஐயா! நான் ஒரு நிர்ப்பந்தமான பாவியாயிருக்கிறேன். இதோ சிலுவை முன் குனிகிறேன். இதோ உமக்குமுன் சாஷ்டாங்கமாக விழுகிறேன். எனக்குப் பாவ மன்னிப்பைக் கூறும் ஐயா! என் நோயைத் தீரும் ஐயா! என் சாவை மாற்றும் ஐயா! எனக்குச் சிலுவையிலிருந்து சகாயமும், பாவ மன்னிப்பும் கிடைக்கும்வரையும், சிலுவையண்டையிலே கிடக்கிறேன். ஒரு சொட்டு இரத்தம் என்மேல் விழும்படி

உத்தரவு செய்யும் இரட்சகா! உத்தரவு செய்யும். ஆமென்.

8. இயேசு சிலுவையில் தூஷிக்கப்பட்டது

(முதலாம் சிலுவை வாசகம்)

வேதம்

"அந்த வழியாய் நடந்துபோகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி: தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே இரட்சித்துக்கொள்; நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கிவா என்று அவரைத் தூஷித்தார்கள். அப்படியே பிரதான ஆசாரியரும்வேதபாரகரும் மூப்பரும் பரியாசம் பண்ணி: மற்றவர்களை இரட்சித்தான்; தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை; இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம். தன்னை தேவனுடைய குமாரன் என்று சொல்லி, தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள்."

"அப்பொழுது இயேசு: பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்" (மத். 27: 39–43; மாற். 15: 29–31; லூக். 23: 34–37).

போதனை

இயேசு சிலுவையில் அறையப்பட்டுத் தொங்கின போதிலும் அவருடைய பாடுகளும், அவமானங்களும் முடிவடையவில்லை. சிலுவை வாசகத்தை மாற்றும்படி, பிரதான ஆசாரியர் முதலியவர்கள் செய்த பிரயத்தனம் வாய்க்காதபடியால் அவர்கள் எரிச்சலடைந்து, மறுபடியும் இயேசுவைத் தூஷிக்கவும் பரியாசம் பண்ணவும் ஆரம்பித்தார்கள். பிலாத்துவின்பேரில் அவர்களுக்குண்டான எரிச்சலை இயேசுவின்பேரில் காட்டுகிறார்கள். அதைப் பிலாத்துவினிடத்தில் நேரே காட்டினால் தங்க

ளுக்குச் சங்கடமுண்டாகும் என்று பயந்தார்களாக்கும். இந்தத் தூஷணமும் பரியாசமுமான பாடுகள் வழிப் போக்கர், பிரதான ஆசாரியர், வேதபாரகர், மூப்பர், போர்ச்சேவகர் ஆகிய ஐந்துவகைக்காரரால் இயேசுவுக்கு நேரிட்டது. இயேசு ஆலயத்தை இடித்து மூன்றுநாளைக் குள்ளே கட்டுவதையும், தம்மை தேவனுடைய குமாரன் என்றும் யூதருடைய ராஜன் என்று சொன்னதையும், அவர் மற்றவர்களுக்கு அற்புதங்களால் சகாயங்கள் செய்ததையும் எடுத்துச் சொல்லி தூஷித்துப் பரியாசம் செய்தார்கள். அவர்கள் தூஷணமும் பரியாசமும், வெறும் வார்த்தையாகமாத்திரமிராமல் தலை துலுக்குதலாகிய செய்கையோடும் கலந்திருந்ததென்று பார்க்கிறோம்.

தியானம்

ஆ, என் மீட்பரின் நிந்தை இன்னும் ஓயவில்லை. தூஷணமும், பரியாசமும் கொல்கொதா மலைமேலும் கேட்கிறதே. இப்படி அவமானப்பட்ட மனுஷ ஜன்மம் இவரைத் தவிர வேறொருவர் இல்லை. மற்றவர்களுக்கு இப்படியல்ல, இதில் ஆயிரத்திலொருபாகம் சம்பவித்தாலும் மானநஷ்டிக்குக் கோருவார்கள். இவர் ஒருவர் மாத்திரம் மானநஷ்டிக்குக் கோரமாட்டாத தயாளர். ஆகவே இவரை எப்படித் தூஷித்தாலும் சங்கடம் வராதென்று சத்துருக்கள் நினைத்துத் தூஷித்தார்கள். இவ்வித தூஷணமும் பரியாசமும் இன்னும் ஓயவில்லை. என் மீட்பர் இவ்வுலகத்தில் ஜீவித்து சுமார் 1896 வருஷங்களாகிறதே. இத்தனை வருஷங்களாகியும், அவர் பேரில் சொல்லும் தூஷணங்களுக்கு முடிவில்லை. சகல பதிதரும், விரோதிகளும், அவிசுவாசிகளும் அவரைத் தூஷிப்பதிலும், அவருடைய காரியங்களைப் பழுது கூறுகிறதிலும் இன்னும் ஓயவில்லை. காயீன், லோத்து, தீனாள், ஆகாப், யேசபேல், ஸ்காரியோத்தான் முதலிய எல்லாருடைய பழிப்பான விஷயமெல்லாம் உலகத்தில் அடங்கிப்போயிற்று. இயேசுவைப்பற்றிய பழிப்போ இன்னும் ஓயவில்லை. இன்றுதான் அவர் கொல்கொதாவில் சிலுவையில் தொங்குகிறதுபோலும், உலகமெல்லாம் கூடி

இன்று அவரைப் பரியாசம் செய்கிறதுபோலுமே இருக்கிறது. என் மீட்பரே, இதின் காரணமென்ன? என் நேசரே, இதின் அந்தரங்கமென்ன?

இதற்கு என் மீட்பர் சொல்லுகிற மறுமொழியாவது:—நான் என்றென்றைக்கும் மெல்கிசேதேக்கின்வண்ணமான பிரதான ஆசாரியர். நான் என்றும்பிழைத்திருக்கிறவர். நான் நேற்றும், இன்றும், என்றென்றைக்கும் ஒரேவிதமாயிருக்கிறவர். நான் உலகத்தோற்றத்துக்கு முன் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாயிருக்கிறேன். இதோ, நான் அடிக்கப்பட்டவண்ணமாயிருக்கிற ஆட்டுக்குட்டியாயிருக்கிறேன். ஆதலால் என் நிந்தையும், தூஷணமும், பாடுகளும், இவைகளால் சம்பாதித்த புண்ணியங்களும்; தலைமுறை தலைமுறைதோறும் நடக்கும் தினசம்பவமாகவே இருக்கும். மனுப்புத்திரனே, உன் மேலுள்ள அன்பு தினம்தோறும் புதிதாக விளங்கும்படி என் பாடுகளும் புதிதாக விளங்கவேண்டியதுதான் என்கிறார்.

இந்தப் பரியாசத்தையும் தூஷணங்களையும் செய்தவன் நான்தான் என்று சொல்லக்கூடாதோ? நான் இயேசுவின் அன்பை உணராமலும், அவருடைய இரட்சிப்பை அங்கிகரியாமலுமிருந்தால், அவரைத் தலை துலுக்கிப் பரியாசம் செய்கிறதுபோலதானே. ஆ, இப்படித் தலைதுலுக்கித் தூஷிப்பது மகா அவமானம். என் மீட்பர் என்னிமித்தம் இந்த அவமானத்தையும் சகிக்கவேண்டியதாயிற்று.

இந்த எல்லாத் துலுக்குதலையும் என் மீட்பர் சிலுவையிலிருந்து பார்த்தார். எல்லாத் தூஷணங்களையும் அவர் கேட்டார். அச்சமயத்தில் அவருடைய எரிச்சல் சுவாலித்து அவருடைய கோபம் பொங்குகிறதற்குப் பதிலாக, அவரது கிருபை பெருகிற்று. பாவம் பெருகின இந்த கொல்கொதா மலை மேட்டில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று. பகைவரின் தூஷணங்களும், பரியாசங்களும் பரலோகத்துக்கு எழும்பி தேவ சாபம் என்னும் கோபாக்கினைக் குளத்தின் மதகைத் திறந்தன. அந்த

வெள்ளம் கொல்கொதாவில் சேருமுன் இயேசு தமது திரு வாயைத்திறந்தது :—

"பிதாவே, இவர்களுக்கு மன்னியும்;
தாங்கள் செய்கிற தின்னதென்று
அறியாதிருக்கிறார்கள்"

என்று மன்றாடினார். மன்னிப்பை முந்திக் கேட்டு, அதின் காரணத்தை பிந்திச் சொல்லுகிறார். காரணத்தை முந்திச் சொன்னால், அதற்குள்ளாக ஆக்கினை வந்துவிட லாகாதே என்று, என் மீட்பர் அன்பினால் ஆத்திரப்பட்டு, பிதாவே, இவர்களுக்கு மன்னியும் என்று மன்றாடுகிறார். இப்படி தயாளமுடையவருண்டோ? இவ்வளவு அன் புடையவர்களுண்டோ? என் மீட்பரே, உமது அன்பை இங்கே காண்கிறேன். உமது உன்னத அன்புக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.

ஆ, என் நேசர் இந்த விண்ணப்பத்தில் என்னையும் சேர்த்துக்கொண்டார். "இவர்களுக்கு" என்பதில் நானும் சேர்ந்தவன். ஏனெனில் அன்று சிலுவை முன் நின்ற சத்துருக்களிடத்தில் என்னென்ன சுபாவங் கள் வெளியானதோ அந்தச் சுபாவங்களெல்லாம் என்னி டத்திலுமுண்டு. அந்தப் பாவச் சுபாவங்களை யுடைய வர்கள் யார் யாரோ அவர்கள் ஒவ்வொருவருக்கும் இந்த விண்ணப்பத்தில் பங்குண்டு. எனக்கும் இதில் பங் குண்டு. இதை வாசிக்கிறவனே உனக்கும், உன் வீட் டாருக்கும் இதில் பங்குண்டு—பங்குண்டு.

ஜெபம்

என் அன்புள்ள இயேசுவே, பாவிகள்மேலுள்ள அள வில்லாத அன்பை நீர் சிலுவையிலேயும் காட்டுகிறீர். நீர் பாவிகளை நேசிக்கிறவர் என்று ஆகாயத்தில் நின்று கூறு கிறீர். நான் ஒரு பாவி—நான் பஞ்சமா பாதகன்— அடியான்மேல் உமது கிருபாகடாட்சம் விளங்கும்படிப் பிரார்த்திக்கிறேன். இதோ, உமது சிலுவையண்டை சாஷ் டாங்கமாக விழுந்து, என் பாவங்களை நினைத்து அழு கிறேன். பாவ மன்னிப்புக்காகக் காத்துக்கிடக்கிறேன்.

"பிதாவே...........க்கு மன்னியும்"

என்ற சத்தம், என் இருதயத்தின் காதில் தொனிப்ப தாக. நான், அறியாமல் மாத்திரமல்ல, அறிந்தும் பாவம் செய்திருக்கிறேன். எனக்குப் பாவமன்னிப்பின் வாசகம் கூறப்படும் வரையும் நான் சிலுவையை விடேன், சிலுவையைவிடேன்! சிலுவையை விடேன்!! ஆமென்.

9. குணப்பட்ட கள்ளன்

(இரண்டாம் சிலுவை வாசகம்)

வேதம்

"குற்றவாளிகளாகிய வேறே இரண்டுபேரும் அவரோடேகூடக் கொலைசெய்யப்படுவதற்குக் கொண்டு போகப்பட்டார்கள். கபாலஸ்தலம் என்று சொல்லப்பட்ட இடத்தில் அவர்கள் சேர்ந்தபொழுது, அங்கே அவரையும், அவருடைய வலதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும், அவருடைய இடது பக்கத்தில் ஒரு குற்றவாளியையும் சிலுவைகளில் அறைந்தார்கள்.

அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன் நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான். மற்றவன் அவனை நோக்கி: நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம், நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு, இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாயென்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது ஏறக்குறைய ஆறும்மணி நேரமாயிருந்தது" (மத். 27: 38, 44; மாற். 15: 27, 28, 32; லூக். 23: 32, 33, 39–44; யோவா. 19: 18).

போதனை

இயேசுவோடு வேறு இரண்டு குற்றவாளிகளும் அறையப்பட்டார்கள். அவ்விருவரும் விடுதலையாக்கப்பட்ட பரபாசின் கூட்டாளிகளாயிருக்கலாம். இயேசுவைமாத்திரம் தனித்துக் கொண்டுபோய்ச் சிலுவையில் அறைகிறதுண்டானல் அவ்வளவு விசேஷமாயிருக்கமாட்டாதென்றும், மற்ற இரண்டுபேரோடுகூட சிலுவையிலறைந்தால், அவ்விருவர்பேரையும் சொல்லி இயேசுவின் மரணத்தை ஜனங்களுக்கு மறைக்கலாமென்றும், அப்படிக்கில்லாத பட்சத்தில் இயேசுவின் பட்சத்தாரால் தொந்தரவு நேரிட்டாலும் நேரிடலாமென்றும் பகைவர் நினைத்தார்களாக்கும். எப்படியும், இப்படி இயேசு இரண்டு கள்ளரோடு சிலுவையில் அறையப்பட்டது, அவர், "அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்படுவார்" என்ற தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக இருந்தது (ஏசா. 53: 12).

இந்த இரண்டு கள்ளரும் முறையே "திஸ்மாஸ்," "கிஸ்தாஸ்" என்று அழைக்கப்பட்டார்களென்றும் "இவர்களில் திஸ்மாஸ் இயேசுவின் வலதுபக்கத்திலும், கிஸ்தாஸ் இடதுபக்கத்திலும் அறையப்பட்டார்க"ளென்றும் ஒரு ஆகமக்காரன் எழுதுகிறுன் (நிக்கொதேமுவின் சுவிசேஷம், 10-ம் அதி.)

இவ்விரு கள்ளரும், இயேசுவைப் பரியாசம் செய்து நிந்தித்த மற்றவர்களோடு சேர்ந்துகொண்டு, அவரை முதலாவது நிந்தித்தார்கள். இப்படி நிந்தித்ததின் காரணமென்ன? இயேசுவினிமித்தம்தான், இவ்விருவரும் இன்று சிலுவையிலறையப்பட நேரிட்டது; இல்லாவிட்டால் இந்த பஸ்காநாளில் அவர்கள் கொலைசெய்யப்படாமல் காலம் சென்று மாணுக்கினைக்குட்படலாம். அதற்குள்ளாக, அவர்கள் ஒருவேளை விசேஷபிரயத்தனம் செய்து மாணுக்கினைக்கு விலகிக்கொள்ள ஏதுவிருக்கும். அல்லது விடுதலையாகிவிட்ட தங்கள் தலைவனுகிய பரபாஸ், தன் தோழராகிய இவ்விருவரும் விடுதலையாகும்படி வக்கீல்களை ஏற்படுத்தி சிபாரிசு பேசக்கூடும். அப்படிக்கு இடமில்லாதபடி, இயேசுவினிமித்தம் தங்களுக்கும்,

எதிர்பாராதவண்ணமாக மரணம் கிட்டிவிட்டதே என்று அவ்விருவரும் எரிச்சலடைந்து அவரை நிந்தித்தார்கள் என்று நினைக்கவேண்டியதிருக்கிறது.

இப்படி இரண்டுபேரும் நிந்திக்கவே சற்றுநேரத்துக்குள்ளாக, இவர்களில் ஒருவன் தன் நிந்தனையை ஒழித்து இயேசுவைப் புகழ்ந்து, மற்றவனைக் கண்டிக்கும்படி, "நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா" என்று சொல்லி, தன்னைக் குற்றவாளியென்றும், தன் தண்டனை நியாயமானதென்று ஒத்துக்கொண்டு, இயேசு குற்றமற்றவர் என்று அறிக்கையிடும்படி "இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லை" என்று அறிவித்துக் கடைசியாக, அவரை நோக்கி "ஆண்டவரே நீர் உமது ராஜ்யத்தில் வரும்போது, அடியேனை நினைத்தருளும்" என்று விண்ணப்பம் செய்தான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீசிலிருப்பாய் என்று ஆணையோடு ஆசீர்வாதம் கூறினார்.

தியானம்

ஆ, என் நேசர் சிலுவையில் இன்னும் தொங்குகிறார். அவருக்குண்டாகும் வேதனைகளும், தூஷணங்களும், நிந்தைகளும் இன்னும் ஓயவில்லை. சிலுவையைச் சுற்றி நிற்கும் ஜனங்களும், பிரதான ஆசாரியரும், மூப்பரும், வேதபாரகரும், சேவகரும், தங்கள் தலைகளைத் துலுக்கிப் பரியாசம் பண்ணி அவரைத் தூஷிக்கிறார்கள். இது போதாதா! அவரோடுகூட ஆகாயத்தில் தொங்கும் கள்ளரும் அவரை நிந்திக்கிறார்கள்! இதென்ன காட்சி! என் மீட்பரைப் புகழும் ஒரு சத்தத்தையும் இங்கே நான் கேட்கவில்லை. மகதலா மரியாளே, லாசருவே, இரத்த ஊறல் நின்ற ஸ்திரீயே, நாயீனூர் விதவையே, அந்த விதவையின் மகனே நீங்கள் எங்கே போனீர்கள்? பர்த்திமேயுவே, முப்பத்தெட்டுவருஷ நோயாளியே, மலையடிவாரக் குஷ்டரோகியே, கதரேனூர் கல்லறை காத்தோனே, நீங்கள் எங்கே போனீர்கள்? அன்புள்ள யோவானே, இடிமுழக்கத்தின் மக்களே, கபடமில்லா

நாத்தான்வேலே, நீங்கள் எங்கே போனீர்கள்? என் மீட்பரும் உங்கள் மீட்பருமானவரை இந்தக் கள்ளரும் தூஷிக்கிறார்களே! இச்சமயத்தில் இவருடைய புகழைப் பிரஸ்தாபிக்க ஒரு பக்தனில்லையே, ஒரு அன்பனைக் காணோமே! ஆ, இயேசுவே நீர் தடுப்பாரின்றி தூஷிக்கப்பட தனிமையாய் விடப்பட்டீர். பரமபிதாவானவர், உமது தூதரையாவது, உமது தாசரையாவது பேச விடாதபடி அவர்கள் நாவைக்கட்டிப்போட்டும் பொல்லாவதர்களின் நாவையும் திருடரின் நாவையும் கட்டவிழ்த்து விட்டார். என்மேலுள்ள அன்பினால் சிலுவையின் மேலிருந்தும் அவமானத்தைச் சகித்த இயேசுவே, உம்மை வணங்குகிறேன்.

அப்படித் தூஷித்த கள்ளரில் நானும் ஒருவன் என்று உணருகிறேன். அவர்களிலொருவன், "நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள்" என்கிறானே; இவனுடைய ஆணவத்தை நான் காண்கிறேன். இப்படி சாகிறவேளையில் சொல்லுகிற ஆத்துமாக்கள் இக்காலத்திலுமுண்டு. அவர்கள் மரணப்படுக்கையில் குணப்பட ஏவப்படும்போது, மனம் கசந்து, உங்கள் தேவனைப்பற்றியாவது, உங்கள் இயேசுவைப்பற்றியாவது, ஒன்றையும் என் காதில் சொல்லவேண்டாம்; அவர் மெய்யாகவே தேவனும் இரட்சகருமானால் இந்த அவதியை நீக்கிப்போடட்டும், அப்பொழுது அவரை விசுவாசிப்பேன் என்கிறார்கள். இவர்கள் சிலுவையின் இடதுபக்கத்துக் கள்ளனின் தம்பிமார்தானே.

வலதுபக்கத்துக் கள்ளன் மனம் மாறிவிட்டான்; அவன் கண் தன் தோழன் கண்ணைப் பார்க்கிறது. அவன் பேரைச் சொல்லிக் கூப்பிடுகிறான். ஓய் கிஸ்தாசே "நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்கும் பயப்படுகிறதில்லையா?" என்று அதட்டுகிறான். இந்த இரண்டு கள்ளருக்குள்ளும் கட்சி வந்துவிட்டது. இவர்கள் கட்சியால் தாழ நிற்கும் துஷ்டரின் தூஷணங்கள் நிறுத்தப்பட்டது. எல்லாரும் இந்தச் சண்டையைக் கவனமாய்க் கேட்கிறார்கள். நானும் கேட்

பேனுக. சிலுவையில் அறையப்பட்டும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? என்கிற சத்தம், கொல்கொதாக் கூட்டத்தைக்கலங்கப்பண்ணுகிறது. தேவனுக்குப் பயப் படுகிறதில்லையா? என்ற வார்த்தை பாரலோக தேவனைக் கொல்கொதாவில் சிம்மாசனமேற்றுகிறதுபோலிருக்கிறது.

"நாமோ நியாயப்படித் தண்டிக்கப்படுகிறோம்" என்று தன்னைத் தாழ்த்தி தன் ஆக்கினையை ஒப்புக் கொள்ளுகிறான். எத்தனையோபேரைக் கொன்றோம், எவ்வளவு பொருளை இருவரும் கொள்ளையிட்டோம் அப்பா, ஆதலால் நமக்கு வந்த தண்டனை நியாயமானதுதான் என்று ஒத்துக்கொள்ளுகிறான்.

அப்பால் என் இயேசுவின் குற்றமில்லாமையைப் பிரஸ்தாபிக்கிறான். "இவரோ தகாததொன்றையும்செய்ய வில்லையே" என்கிறான். இயேசுவின் சரித்திரம் முழுவதும் இந்த இரண்டு கள்ளருக்கும் தெரிந்திருக்கிறது. மரணநேரத்தில் ஒரு கள்ளன் மறுகள்ளனுக்கு அதை உணர்த்துகிறான். அவனுக்குமாத்திரமோ, யூதஜாதி முழுவதுக்கும் அவன் சிலுவையின்மேலிருந்து, என் மீட்பரின் குற்றமில்லாமையை அறிவிக்கிறான். ஆ, ஏரோதுவே, இது நீ செய்த அறிக்கையிலும் மேலானது. ஆ, பிலாத்துவே! இந்தக் கள்ளனுடைய அறிக்கை நீ அடிக்கடி மாறிமாறிச் சொன்னதும், கையைக் கழுவினதுமான நடபடிக்கையிலும் மேலானது. இந்தக் கள்ளன் உங்கள் வழக்கையும் உங்கள் நியாயத்தீர்ப்பையும் தப்பென்று கூறுகிறான். அப்படியானால் பரிசுத்தமுள்ள தேவன் உங்கள் தீர்ப்பை நியாயமென்று ஒத்துக்கொள்ளுவாரா? ஆ, என் மீட்பர், நீங்கள் சாட்டின குற்றத்தினிமித்தமல்ல, என்னுடைய குற்றத்தை ஏற்றுக்கொண்டதினிமித்தம் சிலுவையில் தொங்குகிறார் என்று அறியுங்கள்.

இவையனைத்தும் என் மனதுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. தரையில் கள்ளனயிருந்தவன் சிலுவையில் சுவிசேஷ பிரசங்கியாகிறான். பூமியிலிருக்கையில்

தன் பாவத்தில் வளர்ந்த இவன் சிலுவையில் தன் குற்றத்தை உணரவும், ஒத்துக்கொள்ளவும், அறிக்கையிடவும் தக்க புதிய மனுஷனாகிறான். துன்பம் நமக்கு அவசியம். துன்பத்தாலும் சிலுவையாலும் அநேகர் புது மனுஷராகிறார்கள்.

இப்பொழுது இந்த நல்ல கள்ளனுடைய தலை திரும்புகிறது. தன் தோழனுடைய வாயை அடைத்துப்போட்டான். இப்போது என் நேசரை நோக்குகிறான். என் நேசரும் அவனை நோக்குகிறார். அவன் சிலுவையிலிருந்து விண்ணப்பம் செய்கிறான். அவன் முழங்கால் ஊன்றவும் கண்ணை மூடவும், மார்பிலடித்துக்கொள்ளவும் ஏதுவில்லாதபடி சிலுவையிலறையப்பட்டிருந்தாலும், அவன் இருதயம் பணிந்து குனிந்து முழங்கால் படியிட்டது. இம்மட்டும் அரண்மனைகளும் அதிபதிகளும் பேசினார்கள். இப்போதோ சிலுவைக் கைதிகள் ஒருவரோடொருவர் பேசுகிறார்கள். அந்தக் கள்ளன்,

> "ஆண்டவரே நீர் உம்முடைய இராஜ்யத்தில்
> சேரும்போது அடியேனை நினைத்தருளும்"

என்று வேண்டிக்கொண்டான். இந்த விண்ணப்பத்தால் அவன் மனம்திரும்புதல் நிலைவரப்பட்டது. இனி அவனைக் கள்ளன் என்று சொல்லலாமா? கள்ளன், வெள்ளனாகி விட்டான். இயேசுவின் சிலுவை கள்ளனை வெள்ளனாக்கி விட்டது: இவனுடைய விண்ணப்ப வார்த்தைகளொவ்வொன்றும் ஓரோர் இரத்தினப் பதக்கம்போலிருக்கின்றன. ஆண்டவரே என்கிறான். ரபி, அல்லது போதகரே என்று சொல்லவில்லை. இயேசுவின் தெய்வீகம் இவனுக்கு, இந்த ஸ்திதியில் எவ்விதமாக வெளிப்பட்டதோ தெரியவில்லை. ஒருவேளை அசரீரியாய் அப்போது சிலுவையைச் சூழ சம்மனசோர் நிற்க இவன் கண்ணுக்குத் தோன்றினதோ? அல்லது, தேவன்தான் இவனைப் போதித்தாரோ? எப்படியும் பரிசுத்த ஆவியானவர் இந்த சிலுவைக் கள்ளனுடைய கண்களில் இயேசுவின் உதிர கலிக்கத்தைப் பூசினதால் அவர் இன்னாரென்பதை அவன் கண்டான். மேலும், சற்றுநேரத்துக்குமுன் தம்மை

நிந்தித்த கூட்டத்தார் எல்லாருக்காகவும் இயேசு பிதாவி ினிடம் மன்னிப்புக் கேட்டதையும் இவன் கேட்டான். இவ்வளவு அன்பு தேவனிடத்தில்மாத்திர மிருக்கும்; ஆகவே இவர் தேவன் என்று தன் மனதில் நிச்சயித்தான்.

"உம்முடைய இராஜ்யத்தில் சேரும்போது" என்கிறான். தன்னைப்போல் சிலுவையில் தொங்குகிறவருக்கு ஒரு ராஜ்யமுண்டென்பதையும் இவன் கண்டான். இது பரிசுத்த ஆவியால் மாத்திரம் இவனுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவேண்டும். இயேசுவின் முள்முடிக்குள் நித்திய ஜீவ முடியும், மூங்கிலுக்குள் அரசாட்சியும், சிலுவைக்குள் ஜெயமும், ஆணிகளுக்குள் அதிகாரங்களும், இரத்தத்துக்குள் இரட்சண்யமு மிருக்கிறதென்பது பரிசுத்த ஆவியாலன்றி இவனுக்குத் தெரியாது.

"என்னை நினைத்தருளும்." இது எவ்வளவு சாமர்த்தியமான விண்ணப்பம். இயேசு தன்னை நினைத்தால் போதும் என்று இவன் சொல்வது, அவர் நினைத்தால் எல்லா வாழ்வும் தனக்குக் கிடைக்கும் என்று நிச்சயித்துச் சொல்லுகிறதாயிருக்கிறது. இந்த மனுஷன் எனக்கு ஒரு நல்ல சிறிய ஜெபத்தைக் கற்றுக்கொடுக்கிறான். இது ஆயக்காரன் செய்த ஜெபத்திலும் தாழ்மையும், விசுவாசமுமுள்ளது. இந்த ஜெபத்தை நான் இப்போது, தாழ்ச்சியுள்ள மனதோடே மூன்றுதரம் செய்வேனாக:—

ஆண்டவரே! என்னை நினைத்தருளும். ஆமென்.
ஆண்டவரே! என்னை நினைத்தருளும். ஆமென்.
ஆண்டவரே! என்னை நினைத்தருளும். ஆமென்.

நம்முடைய சிநேகிதனுடைய விண்ணப்பம் முடிந்தது. இவனுடைய விண்ணப்ப வார்த்தைகளைக் கேட்டு ஜனங்களின் இருதயம் அசைகிறது. இயேசு அற்புதங்கள் செய்தபோது விளங்காத மகிமை இப்போது சிலுவையில் விளங்குகிறது. ஒரு பாவி பாவமன்னிப்பும், மோட்ச வாழ்வும் வேண்டுமென்று கேட்கிறான். இவன் கேட்பது, பூலோக பாவிகளே, நீங்களும் வந்து, இவரிடத்தில் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று விளம்பரமடிக்கிறதுபோலிருக்கிறது.

இந்த விண்ணப்பம் என் மீட்பரை மகிழச்செய்கிறது. அவர் சிலுவையிலிருந்து புன்னகை கொள்ளுகிறார். அவர் பலவீனத்தில் பலம் கொள்ளுகிறார். அவர் அந்தப் பாவியை நோக்கி:—

"இன்றைக்கு நீ என்னுடனேகூட
பரதீசி லிருப்பாயென்று
மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்"

என்று கூறினர். என் இயேசுவின் தெய்வீகத்தை மறுக்கிற பதிதரே, உங்கள் தலைகளைத் தாழ்த்துங்கள். சிலுவையை இகழுகிறவர்களே சிலுவையின் வாழ்வைப் பாருங்கள். இயேசுவைப் புறக்கணிக்கிறவர்களே அவருடைய அன்பையும் இரட்சண்ய வல்லமையையும் பாருங்கள்—பாருங்கள். இந்தப் பாவி தன் உடன்பாவியைக் கண்டித்தான்—தன் குற்றத்தை ஒத்துக்கொண்டான்—தன் தண்டனையை ஏற்றுக்கொண்டான்—என் மீட்பரின் குற்றமில்லாமையை அறிக்கையிட்டான்—பாவ மன்னிப்புக்காக மன்றாடினன்—பாவ மன்னிப்பையும், பரதீசின் வாழ்வையும் பெற்றுக்கொண்டான். நானும் மற்றெல்லாப் பாவிகளும் பாவமன்னிப்பைச் சம்பாதிக்கும் வழியை இவன் தெளிவாகக் காட்டிவிட்டான். இவனுக்கு நான் நன்றியறிதலைச் செலுத்துகிறேன். இவனை நான் பின்பற்றுவேனாக. இவன் தன்னை நினைக்கமாத்திரம் சொன்னான். இவன் இன்றையத்தினமல்ல, இயேசு தமது ராஜ்யத்தில் எப்போது வருவாரோ அப்போது நினைத்தால் போதுமென்று கேட்டான். இயேசுவோ, மகனே உன் விசுவாசம் பெரியது. நீ இன்றைக்கு என்னோடுகூட பரதீசிலிருப்பாய், நான் இனி ஒருகாலத்தில் உன்னை நினைவுகூர்ந்து, சகாயம் செய்யவேண்டியதில்லை. இன்றைக்கே அந்தச் சகாயத்தைச் செய்து முடிக்கிறேன். "நீ இன்றைக்கு என்னுடனேகூட பரதீசிலிருப்பாய்" என்று ஆணையிட்டார்.

ஆ பிலாத்துவே, ஏரோதுவே, ஆசாரியரே, சிலுவையை நோக்குங்கள். இன்றுமுதல் இது நீசச்சிலுவையாயிராமல் ஜீவவிருட்சமாய்விட்டது. கொல்கொதா கற்

பாறையில், உச்சிவேளையில், உங்களுடைய சிலுவை தேவ குமாரனுடைய இரத்தத்தால் பச்சையாகி, படுதோஷி யான ஒரு ஆத்துமா, அதின் கனியால் பாவமன்னிப் படையச் செழித்தது. நானும் ஒரு படுதோஷியா யிருக்கிறேன். என் பாவம்தீர இந்த ஜீவ விருட்சத் தண்டை வந்து படுத்து, ஜீவிப்பேனாக. என் பாவம் மன்னிக்கப்படும்வரையும் நான் இந்த ஜீவவிருட்சத்தை விட்டுப் பிரியமாட்டேன்.

ஜெபம்

இரக்கமும் மன உருக்கமுமுள்ள இயேசுவே, தேவரீர் சிலுவையில் தொங்கினபோது, உமது வேதனைகளையா வது, அவமானத்தையாவது எண்ணாமல் பாவியை மீட் கிறதில் கவனமாயிருந்தீர். கள்ளனும் கொலைபாதகனு மாகிய ஒருவன் உம்மிடத்தில் விண்ணப்பம் பண்ணின போது, அவன் விசுவாசத்தைக்கண்டு அவனுக்குப் பாதீசை வாக்களித்தீர். இதோ, உம்மண்டை விண்ணப் பம் செய்கிற நான் அவனிலும் பெரிய கள்ளனும் கொடிய கொலைபாதகனுமாயிருக்கிறேன். இப்பொழுதோ உமது சிலுவைப்பாடுகளனைத்தையும் தியானித்து, என் பாவங் களே இந்தப் பாடுகளை உமக்கு உண்டாக்கினதென்று உணர்ந்து மனஸ்தாபத்தோடும், அவைகளை விட்டுவிடும், தீர்மானத்தோடும் மன்னிப்புக் கேட்கிறேன். கள்ளனை மீட்ட காருண்ய இரட்சகா என்னையும் இரட்சித்தரு ளும். எனக்கும் பாதீசின் வாழ்வுகள் கிடைக்கும்படி உமது திருச் சிலுவையால் அதின் பூட்டைத் திறந்தீரே, என்னை அதற்குள் சேர்த்து உமது இரட்சிப்பை என்னில் பூரணப்படுத்தியருளும். ஆமென்.

10. தாயாருக்கு ஆதரவு செய்தது

(மூன்றும் சிலுவை வாசகம்)

வேதம்

இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியா

ளும் மகதலேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும், அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி: அதோ உன் தாய் என்றார். அந்நேரமுதல் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான்'' (யோவா. 19: 25–27).

போதனை

இயேசு கள்ளனுக்குப் பரதீசை வாக்களித்தபின்பு தமது நேசமுள்ள தாயாரைக் கவனித்தார். சிலுவையிலிருந்து முதலாவது சத்துருக்களையும், இரண்டாவது சிநேகிதனையும், மூன்றாவது பந்துவையும் கவனித்து முறையே பேசினார். அவர் முதலாவது தமது தாயாரைக் கவனியாதது குற்றமல்ல. ஏனெனில் அவர் மரியம்மாளுக்கு மகனாகும்படிப் பிறவாமல் பாவிகளுக்கு இரட்சகராக அவதாரமானார் அல்லவா?

மரியம்மாளும், மற்ற ஸ்திரீகளும், சிலுவையின் பிறகே வந்திருக்கிறார்கள். இயேசு தமது பகைவருக்காக சிலுவையிலிருந்து பண்ணின விண்ணப்பம் அநேகருடைய பாவங்களை உணர்த்தினதால் மிச்சமானவர்கள் வெட்கப்பட்டுப் போய்விட்டார்கள். அப்பால் இரண்டாம்தரம் கள்ளன் குணப்பட்டதும், அறிக்கையிட்டதும், அவனுக்கு இயேசு பரதீசை வாக்களித்ததும் மீதியான மற்றவர்களைப் பிரமிக்கவும் கலங்கவும் பண்ணினதால் அவர்களும் நகரத்துக்கு வெட்கத்தோடு திரும்பிவிட்டார்கள். கடைசியாக, இயேசுவின் தாயாரும், கிலெயோப்பா மரியாளும், மகதலாவூர் மரியாளும், பரி. யோவானும் மாத்திரம் சிலுவையினருகே நின்றுகொண்டிருந்தார்கள். அப்போது இயேசு தமது தாயாரை யோவான் அப்போஸ்தலனுடைய ஆதரவில் ஒப்புக்கொடுக்கும்படியாகச் சித்தம்கொண்டு, தமது தாயாரை நோக்கி: "ஸ்திரீயே அதோ, உன் மகன் என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார்."

இந்தச் சமயத்தில், அந்தகாரமுண்டாகத் துவக்கினதால் பரி. யோவான் இயேசுவின் தாயாரைக் கூட்டிக்கொண்டு நகரத்துக்குத் திரும்பிவிட்டார்.

தியானம்

என் மீட்பர் என் தியானத்துக்காக இன்னும் தொங்குகிறார். ஆ, என் மீட்பருடைய சிலுவையின் அடிவாரத்தைவிட இன்பமான இடம் எனக்கில்லை. தினந்தோறும் நான் என் பாவங்களால் குத்தப்பட்டுக் காயமுண்டாகும்போது இந்த ஜீவவிருட்சத்தண்டைவந்து அதின் பிசின் தைலத்தால் என் காயங்களை ஆற்றிக்கொள்ளுகிறேன். சாத்தான் என்னைப் பின்தொடர்ந்து துரத்தும்போது இந்தக் கல்வாரி குகைக்குள் ஓடி ஒதுங்கிக்கொள்ளுகிறேன். உபத்திரவமாகிய புசலும், துன்பமாகிய அலைகளும் அடிக்கும்போது என் ஆத்துமாவாகிய கப்பல் இந்த அரரரத்தில் வந்து சுகமாகத் தங்குகிறது. தேவகோபாக்கினை என் சோதோமேல் இறங்கும்போது நான் ஒதுங்கும் சோவார் இதுவே. இந்தக் கல்வாரிச் சிலுவையின் அடிவாரத்தில் நின்று பரம கானானின் வாழ்வுகளனைத்தையும் தெளிவாகப் பார்க்கிறேன். இந்தக் கல்வாரியில் நான் நிற்க நிற்க மறுரூபமடைகிறேன்—மனமாறுகிறேன்—நான் இங்கே இருக்கிறது நல்லதென்று எண்ணுகிறேன்—ஆ நான் இங்கே எனக்கொரு தாபரஸ்தலத்தைக் கட்டிக்கொள்வேனாக.

அரண்மனைகளில் பேசாதிருந்த என் மீட்பர் சிலுவையின்மேல் ஓயாமல் பேசுகிறார். அவர் பேசும்போதெல்லாம் பாவமன்னிப்புப் பிறக்கிறது. அதில் எனக்கும் பங்கு கிடைப்பதாக, இம்மட்டும் என் மீட்பர் இரண்டு தடவை பேசினார். அவ்விரண்டு தடவையிலும் பாவிகள்மேல் இரக்கம் விளங்கிற்று. அந்த இரக்கம் நீசப்பாவியாகிய எனக்கும் கிடைப்பதாக.

என் மீட்பர் சிலுவையில் பேச வாயெடுத்தபோது, அவருடைய தாயாருக்கு ஆற்றாமை அதிகமாயிருந்தது. நமது மகன் நம்மைப் பார்த்து ஒரு வார்த்தையும் சொல்லாமல் போகிறாரே. ஆ, இந்தப் பகைவரை நினைத்த

அவர், பெற்ற தாயாகிய என்னை மறந்தாரோ? இந்தக் கள்ளனுடன் பேசுகிருரே; என்னோடு என் மகன் பேசக் காணோமே! இந்த அவதிவேளையில் என் மகன் வாயி லிருந்து எனக்கொரு வாசகம் கிடைத்தால் நல்ல தாச்சுதே என்று அங்கலாய்த்தாள். பேலியாளின் மக்க ளால் தன் மகனுக்கு நேரிட்ட நிந்தைகளும், அவமானங் களும் மனதை வதைத்ததோடு இந்த ஆற்ருமையும் நமது ஆண்டவரின் தாயாருக்கிருந்தது.

அம்மாளே, அங்கலாய்ப்பு வேண்டாம்! அழுதலும் வேண்டாம். இவர் தமது தாய்க்காக கவலையற்றவரல்ல. இவர் உமது மகனுகமாத்திரமிராமல் உலகத்துக்கு இரட்சகர் என்பதை நினைப்பாயாக. ஆபேலின் சமாதி யண்டை நின்று அழுத ஏவாளின் துக்கத்திலும் உன் துக்கம் அதிகம்தான். பக்தியுள்ள சிமியோன் என் மீட்பரைக் கையிலேந்தி உம்மைப் பார்த்து, "உன் ஆத்து மாவையே ஒரு கத்தி உருவிப்போம்" என்று சொன்ன வாக்கு இன்று நிறைவேறுதல் பெறுகிறதாக்கும்.

என் ஆண்டவரின் தாய் துக்கசாகரத்திலிருப்பது நியாயம்தான். ஆ, சாகிற மகன் சாதாரண மகனு? எல்லா மனுப்புத்திரரிலும் மகா அழகான மகனல்லவா? குஷ்டரோகிகளைக் குணமாக்கிக் குருடர் கண்களைத் திறந்த மகனல்லவா? சப்பாணிகளை நடக்கப்பண்ணிச் செத்தவர்களை எழுப்பிவிட்ட மகனல்லவா? அற்புத மகனும், அரும் போதகருமல்லவா? இப்படிப்பட்ட மகனை இந்த ஸ்திதியில் பார்க்கிற அன்புள்ள தாயார் அழுகிறதும் புலம்புகிறதும் நியாயம்தானே.

இந்த மகத்துவ மகன் சாகிறதும், சஞ்சலப்படு கிறதும் தேவ தீர்மானப்படி என்பது அவருடைய தாயாருக்குத் தெரிந்திருந்தது. ஆகவே அவள் நம்பிக்கை யற்றவளைப்போல துக்கப்படவில்லை. அவர் தமது உயிர்த் தெழுதலைப்பற்றிச் சொன்ன வாசகம் இடைக்கிடையே மனதில் வந்து துக்கத்தை மாற்றினது. மற்றப்படி இவ் வளவு மனத்தைரியத்தோடு, நடந்து கல்வாரிமலைக்கு வரவும், சிலுவையண்டை நிற்கவும் கூடாமல், வியாகுலத்

தால் எருசலேமின் தெருக்களில் விழுந்து மரணமடைந் திருக்க வேண்டுமல்லவா? இப்போது அந்த அம்மா ளுடைய கவலையெல்லாம், என் மகன் என்னோடு ஒரு வார்த்தையாவது பேசமாட்டாரா என்பதுதான். ஆ, அவர் தம்து தாய்க்குமுன் பாவியையும், கள்ளனாகிய என்னையும் நினைவுகூர்ந்ததால், சிலுவையிலிருந்து பேச வேண்டிய ஆட்களில் பரமபிதா முதலும், கள்ளன் இரண்டாவதும், தமது தாயார் மூன்றாவதும் என்று குறித்துக்கொண்டு பேசினார்.

என் மீட்பர் தமது தாயை நோக்குகிறார். தாயார் மகனை நோக்கினார். இச்சமயத்தில் மரியம்மாளின் வியா குலத்தை ஒருவன் அளவிடக் கூடுமா, எழுதக்கூடுமா? பரமபிதாவுக்கே அவள் துக்கம் தெரியும்! என் ஆண்ட வரின் தாயார் தன் துக்கத்தின் அகோரத்தால் பேச்சற்று நின்றாள். அவள் தன் மகனை நோக்கிப் பார்ப்பாள், அழு வாள், தலை கவிழுவாள். அவள் தன் சஞ்சல முழுவதை யும் வார்த்தைகளால் வெளியிடாமல் தன் மனதில், பிதாவே உமது சித்தத்தின்படி ஆகக்கடவது என்று எண்ணி மவுனமாயிருந்தாள். இயேசு அவளுக்கு ஆறுதலை யளிக்கும்படி; "ஸ்திரீயே, அதோ உன் மகன்" என்றார். பின்பு, யோவானை நோக்கி: சீஷனே, அதோ உன் தாய் என்றும் சொன்னார். பினேகாசின் மனைவியடைந்த கலக்கம் அவ்வளவு மரியம்மாளுக்கு இருக்கவில்லை.

இயேசு தாயாருக்குச் சொன்ன வாசகம் மகா சுருக்க மாயும் பொதுவாயுமிருந்தாலும், அவள் அத்தால் ஆறுதலையடைந்தாள். இயேசு தமது தாயாரைப் பார்த்து "ஸ்திரீயே" என்று சொன்னது கனவீனமல்ல. ஆனால் இந்த வார்த்தையால் ஒரு புதிய இனமுறையைச் சிலுவையிலிருந்து ஸ்தாபித்தார் என்னலாம். மாம்சத் தின்படியுள்ள தாய், மகன், சகோதரன், சகோதரி என்ற பாந்தத்தைவிட, விசுவாசத்தினாலும் அன்பினாலும் ஒரு வருக்கொருவர் ஐக்கியப்படுகிறது மேலானதென்று உணர்த்துகிறார். என் பிதாவின் சித்தத்தின்படிச் செய் கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும், சகோ

தரியும் தாயுமாயிருக்கிறுன் என்று அவர் ஒருதடவை சொன்னுர். அதற்கு இசைவாக, மாம்சபாந்தத்தைச் சிலுவையில் வெளியிடாமல் ஆவிக்குரிய அந்நியோந்நியத்தைஸ்தாபிக்கும்படி இப்படிப்பொதுவான வார்த்தையால் தமது தாயாரைக் கூப்பிட்டார் என்று சொல்லவேண்டியது.

என் இயேசுவே நீர் உமது நேச தாயாரை, ஒரு சிஷன்வசம் ஒப்புவித்தீர். உமது பலத்த அற்புதங்களால் நீர் ஒரு ஆஸ்தியும் சம்பாதித்து வைக்கவில்லை. உமக்கு வீடும் இருக்கவில்லை. உமது தாயாருக்கு வேறு ஆதரவுமில்லை; ஆதலால் நீர் இப்படித் திட்டம் செய்தீர். இதின் மூலமாய் ஒவ்வொரு வாலிபனும், ஒவ்வொரு மனுஷனும் தன் பெற்றுரைப்பற்றிக் கவலைப்படவேண்டுமென்றும் உணர்த்துகிறீர்.

மகன் இவ்வளவு சொன்னது தாயாருக்குப் போதுமான ஆஸ்தியாக இருந்தது; அவள் அழுதுகொண்டு அந்தச் சீஷனுடன் நடந்து நகரத்துக்குப் போனுள்; ஆனுல் அவள் உள்ளத்திலோ, தன் குமாரனுடைய சாவு ஜீவனுக மாறும் என்ற ஒரு எண்ணமும் கடந்து போயிற்று என்று சொல்லவேண்டியது.

ஜெபம்

என் அன்புள்ள மீட்பரே, தேவரீர் சிலுவையில் தொங்கினபோது உமது தாயாருடைய ஆதரவுக்கேற்ற ஒரு வழியைச் செய்தீரே, வேலைசெய்ய இயலாத பெற்றுேரையுடைய எல்லாரும் தங்கள் தாய் தந்தைகளுக்கு வேண்டிய உதவியைச்செய்து அவர்களை ஆதரிக்கத்தக்க மனதைக் கொடுத்தருளும். விசேஷமாய் விசுவாசிகள் ஒவ்வொருவருக்கும் தாயைப்போலிருக்கும் திருச்சபையின் வாழ்வுக்கும் விருத்திக்கும் உதவியாக எல்லாக் கிறிஸ்தவர்களும் உமது அன்பினுல் ஏவப்பட்டு தங்கள் காணிக்கைகளாலும், ஜெபங்களாலும் உதவிசெய்யும்படி அவர்கள் மனதை ஏவியருளவேண்டுமென்று உம்மைத் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறேம். ஆமென்.

11. மூன்றுமணி அந்தகாரம்

(நாலாம் சிலுவை வாசகம்)

வேதம்

"ஆறும்மணி நேரமுதல் ஒன்பதாம்மணி நேரம்வரைக்கும் பூமி எங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. ஒன்பதாம் மணி நேரத்திலே, இயேசு: எலோயீ! எலோயீ! லாமா சபக்தானி என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு: என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம். அங்கே நின்றவர்களில் சிலர் அதைக்கேட்டபொழுது: இதோ, எலியாவைக் கூப்பிடுகிறான் என்றார்கள்" (மத். 27: 45–49; மாற். 15: 33–35; லூக். 23: 44).

போதனை

இயேசு தமது தாயாரோடு பேசி முடியவே பட்டப் பகல் மாறிற்று. சூரியன் உச்சியில் நின்றாலும், அது தன் கிரணங்களைச் சுருக்கிக்கொண்டதால் அந்தகாரமுண்டாயிற்று. இந்த அந்தகாரம் மூன்றுமணிநேரமிருந்தது. "ஆபிரகாம் ஒருதரம் பலிசெலுத்தினபோது திகிலும் கார் இருளும் அவனை மூடிக்கொண்டது." இயேசு தம்மை சர்வலோகத்துக்கும் பாவ நிவாரணபலியாகச் செலுத்தினபோது இந்த மூன்றுமணி அந்தகாரம் நேரிட்டது.

முதல் மூன்று சுவிசேஷகரும், இந்த அந்தகாரம் பூமி எங்கும் உண்டானதாக அறிவிக்கிறார்கள். இந்த மூன்றுமணி அந்தகாரத்தைப்பற்றி வெலிஜன் என்னும் ஒரு அஞ்ஞானி, தன் தேசத்தில் அதேநாளில் இந்த அந்தகாரம் உண்டானதென்று எழுதிவைத்திருக்கிறான். இதே காரிருள் எகிப்து தேசத்திலும் அன்றையத்தினம் உண்டானதென்று, டையோக்கிறுஸ் என்னும் ஒரு ஆகமக்காரன் எழுதியிருக்கிறான். தேவன் தமது குமாரனுடைய மரணத்தை அதன் விசேஷமாக்கும்படி இந்த அந்தகாரத்தைக் கட்டளையிட்டார். எகிப்தின் கார் இருள் இஸ்ரவேலரின் அடிமைத்தனத்தின் நிர்ப்பந்த

ஸ்திதிக்கு அடையாளம் காட்டினது. இந்த அந்தகாரம் பாவ இருளையும், அதிலிருந்து இயேசுகிறிஸ்துவால் உண்டாகிற இரட்சண்யவெளிச்சத்தையும் திருஷ்டாந்தப் படுத்துகிறது. இயேசு சிலுவையிலறையப்பட்ட நாள் பூரண சந்திரநாளாக இருந்ததால் இது அற்புத அந்த காரமேயன்றி கிரகண அந்தகாரமல்ல.

தியானம்

சிலுவையில் தொங்கும் என் நேச இயேசுவே, இந்த நடுப்பகல் பன்னிரண்டுமணி வேளையில், சூரியஒளி அடங்கி அந்தகாரம் மேலிடுகிறதே இதேன்? இந்தக் கரடுமுரடான மலையில், இந்த இருட்டில் நான் நடந்து நகரத்துக்குப் போனால் காலிடறிக் காயமடைவேன்; நான் போகமாட்டேன். இதோ உமது சிலுவையின் அடியில் நிற்கிற கிலெயோப்பா மரியாளோடும், மகதலா மரியாளோடும் நானும் நின்றுகொள்ளுகிறேன். அந்த காரம் அதிகப்படுகிறது—பட்சிஜாதிகள் தங்கள் கூடுகளுக் குப் பறக்கிறது—காட்டு மிருகங்கள் தங்கள் இரைக் காகத் திரிந்தலைகிறது. ஆ, இதென்ன அதிசயம். இந்த அந்தகாரத்தைப்பற்றி ஒரு தீர்க்கதரிசியும், தரிசனம் சொல்லவில்லையே! இது அற்புத அந்தகாரம். இது ஆதியிலே, ஆழத்தின்மேலிருந்ததாக வாசிக்கிற இருளுக் குச் சமமான இருளாக்கும். இவ்வுலகத்தின் இரட்சண்ய மாகிய பகல் உண்டாகுமுன் இந்த அந்தகாரம் தோன்ற வேண்டுமோ? ஆ பிதாவே, இந்த அந்தகாரத்தின் இரகசி யத்தை நீர்தான் வெளிப்படுத்தவேண்டியது.

ஆ, என் மீட்பர் தமது பாடுகளின் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்து, இருள் என்கிற திரையால் தம்மை மறைத்துக்கொள்ளுகிறாராக்கும். ஆ என் பிதாவானவர் தமது குமாரனோடு பேசும்படி இந்தக் காரிருள்வாகனத்தில் ஏறி வந்தாராக்கும். பிதாவும் குமாரனும்பேசுவதையும் சந்திப்பதையும் மனுப்புத்திரர் பார்க்கக்கூடாதென்று திரைவிரித்து மறைத்துக்கொள்ளு கிறாராக்கும். ஆ, இந்த இருட்டில் ஒரு மகத்துவமிருக் கிறது. இதைப் பரிசுத்த இருட்டென்று சொன்னாலும்.

குற்றமில்லை. ஒருவேளை இது தேவகோபத்தை விளக்கும் கார் இருளோ? அல்ல—அல்ல. இந்த இருட்டுக்குள் தேவ அன்பு பூரணப்படுகிறதாக்கும். ஆ, இந்த அந்தகாரத்தின் காரணத்தை யார்தான் உத்தேசிக்கக்கூடும். நான் பரலோகம் போனபின் கேட்டறிந்துகொள்ள வேண்டிய பரம இரகசியங்களில் இது ஒன்றாக எழுதி வைத்துக்கொள்ளுகிறேன்.

ஆ, கனத்த அந்தகாரமாயிருக்கிறது. உலகமே முடிவடைகிறதுபோலிருக்கிறது. நான் சிலுவையைக் கட்டிக்கொள்வேனாக; ஆ, சூரியனே! இன்று கிரகங்கள் உன்னைக் குறுக்கிவிடவில்லையே; அப்படியிருக்க இந்தப் பட்டப்பகலில் உன் ஒளி அடங்குவானேன். உன் மகத்துவம் குன்றிப்போவானேன்? வெண் மேகமாவது கார்மேகமாவது உன்னை மறைக்கவில்லையே. பின்னை உன் பிரகாசம் ஒழிந்துபோவானேன்?

உத்தரவு. என்னை ஒளியினால் இடைகட்டின ஜோதியில் ஜோதியானவர் உன் நிமித்தம் 'அதோ கல்வாரியில் மரணமடையப் போகிறார். அந்தத் துக்கநாளில் என் ஒளி அடங்கவேண்டாமா? என் மகிமை குன்றவேண்டாமா? உனக்கு' வேண்டிய விளக்கினிமித்தம் நான் துக்கம் கொண்டாடாமலிருக்கவேண்டுமா?

ஆ சந்திரனே, நட்சத்திராதிகளே, சூரியன் இருண்டதே—கார் இருள் மூடுதே—மேகமில்லாத இந்த இருட்டில் உங்கள் பிரகாசம் ஒன்றையும் ஆகாயத்தில் காணோமே! நீங்கள் எங்கே போனீர்கள்? நான் இருட்டில் அவதிப்படுகிறேனே?

உத்தரவு. 'எங்கள் சிருஷ்டிகர் மனுமக்களின் பாவ நிவிர்த்திக்காக இன்று மரிக்கிறார். நாங்கள் அவரவர் எங்கள் ஜோதிகளைச் சுருக்கித் துக்கம் கொண்டாடுகிறோம்.

ஆத்துமாவே, இந்தக் கார் இருள் வேளையில் சிருஷ்டி யாவும் வேதனைப்படுகின்றன. சிருஷ்டி யாவும் துக்கப்படுகின்றன. இம்மட்டும் அசரீரியாய் பறந்து திரிந்த

சம்மனசோரின் கூட்டமனைத்தையும் தேவன் பரலோகத்துக்குள் அடைத்துவிட்டார். வெளிச்சம் கொடுக்கக்கூடிய வஸ்துகளனைத்தையும் ஆண்டவர் திரைபோட்டுவிட்டார். இப்பொழுது சிலுவையண்டை படுத்து, என் பாவங்களால் உலகமனைத்துக்கும், சிருஷ்டிகள் எல்லாவற்றுக்கு முண்டான நஷ்டத்தை நினைத்துத் துக்கப்படுவேனாக. என் பாவங்களே இந்த அந்தகாரத்துக்குக் காரணம். என் பாவத்தின் தன்மையை நான் சரியாகக் காணும்படி இப்படி என் மீட்பர் படம் பிடித்துக் காட்டுகிறார்.

ஆபிரகாமின் பலிவேளையிலுண்டான கார்மேகத்தைக் கடந்த தேவன் இந்த சர்வலோக பலியின் கார் இருள் வேளையிலும் கடந்துபோகிறார். அவர் என் மீட்பரின் பலியை அங்கிகரித்துக்கொண்டார். அல்லேலூயா! முதலாம் உடன்படிக்கையின் காலத்தில் சீனாமலைமேல், மோசே தேவனிருந்த கார்மேகத்துக்குச் சமீபமாகச் சேர்ந்தான். என் மீட்பர் புதிய உடன்படிக்கையை ஸ்தாபிக்கும்படி இந்தக் கார் இருளுக்குள் தமது பிதாவின்முன் பிரவேசித்து, தமது இரத்தத்தால் அந்த உடன்படிக்கையை எழுதி முடிக்கிறார்.

ஆ, இந்தக் கார் இருளுக்குள் ஒரு பெரிய யுத்தம் நடக்கிறது — பலத்த கிரியைகள் நடக்கிறது — பகை என்னும் சுவர் இடிக்கப்படுகிறது—சட்ட திட்டங்கள் எல்லாம் கிழிக்கப்படுகின்றன—ஆக்கினைத் தீர்ப்புகள் சிலுவையோடு ஆணியடிக்கப்படுகின்றன—இவை யனைத்தையும் பூதகணங்கள் கண்டு தங்கள் சேனையனைத்தோடும் பாதாளத்திலிருந்து புறப்பட்டு திருச் சிலுவையைச் சூழ்ந்து போர்புரிகின்றன. அவர் ஒருவராய் சிலுவையில் கடாவப்பட்டு அவ்வளவு லேகியோன் பேய்களோடு போர் செய்து, துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு சிலுவையின்மேல் வெற்றிசிறந்தார். அச்சமயத்தில் கெத்செமனேயில் கிடைத்த ஒரு தூத சகாயமாவது அவருக்குக் கிடைக்கவில்லை. அப்படியிருந்தும் அவர் ஜெயமடைந்தார். போரும் முடிந்தது. ஜெயமும் கிடைத்

தது. அந்தகாரமும் விலகத் துவக்கினது. அப்போது ஒன்பதாம்மணி வேளை. அதாவது சாயந்தரம் மூன்று மணி; ஒன்பதாம்மணி வேளையில் என் மீட்பர்,

எலோயீ! எலோயீ! லாமா சபக்தானி

என்று மகா சத்தமாகக் கூப்பிட்டார். அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்பது பொருள்.

இதனால் என் மீட்பர் கைவிடப்பட்டாரோ? அல்லது எனக்காக அவர் பாடுபட மனம் தளர்ந்தாரோ? அல்லது மீட்க இயலாமல் போயிற்றோ? அல்ல—அல்ல. எனக்காக அவர் பட்ட பாடுகளின் அகோரத்தையும், குரூரங்களையும் நான் பக்தியோடு ஆராய்ந்து தியானிக்கும்படி இப்படி ஓலமிட்டாரேயன்றி வேறல்ல.

நான் கைதூக்கி இரட்சிக்கப்படும்படி தேவனால் கைவிடப்பட்ட என் நேச இயேசுவே உம்மை வணங்குகிறேன்—உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்.

ஜெபம்

எனக்காகச் சிலுவையில் தொங்கி, கார் இருளுக்குள்ளும், பிசாசின் அதிகாரங்களுக்குள்ளும் துன்பங்களை அனுபவித்த இயேசுவே, உம்மைச் சூழ்ந்த கார் இருளானது என் இருதயத்தின் கார் இருளை எனக்கு உணர்த்துகிறது. தேவரீருடைய இரட்சண்ய ஜோதியை என் உள்ளத்தில் வீசும்படி தயவுசெய்யும். கொல்கொதாவை நாடிவந்த நான் குணப்படக் கிருபைசெய்யும். கல்வாரி கண்ட நான் நல்வாழ்வு காணச் செய்யும் ஐயா. தேவரீருடைய சிலுவையைச்சுற்றிக் காலம் கழிக்கிற என்னை சாத்தான் கொள்ளைகொண்டு போகாதபடி அந்தச் சிலுவையோடு என்னைச் சேர்த்து ஆணியடித்தருளும். என் தேவனே, என் மீட்பரே, என்னைக் கைவிடாமல் இரட்சித்து, நானும் சிலுவையில் பழுத்த ஒரு இரட்சண்யப் பழம் என்று பேர் விளங்கும்படிக் கிருபைசெய்யும். ஆமென்.

12. இயேசு தாகமடைந்தது

(ஐந்தாம் சிலுவை வாசகம்)

வேதம்

"வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக: தாகமாயிருக்கிறேன் என்றார். காடி நிறைந்த பாத்திரம் அங்கே வைக்கப்பட்டிருந்தது; அவர்கள் கடற்காளானைக் காடியிலே தோய்த்து, ஈசோப்புத் தண்டில் மாட்டி, அவர் வாயினிடத்தில் நீட்டிக்கொடுத்தார்கள். அங்கே நின்றவர்களில் சிலர் அதைக் கேட்டபொழுது: இதோ, எலியாவைக் கூப்பிடுகிறான்; பொறுங்கள் எலியா இவனை இறக்க வருவானோ பார்ப்போம் என்றார்கள்" (மாற். 15: 35, 36; யோவா. 19: 28, 29).

போதனை

இயேசு மூன்றுமணி அந்தகாரத்தின் முடிவில் ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி என்று சொன்ன அபயக்குரலை போர்ச்சேவகர் கருத்தறியாமல், இவன் எலியாவைக் கூப்பிடுகிறான் என்று தாற்பரியப்படுத்தினார்கள். இது எபிரேயு வார்த்தைகளானதால் லத்தீன் பேசின ரோமைச் சேவகர் இதின் கருத்தை அறியாமல் இப்படி அர்த்தப் படுத்தினார்களாக்கும்.

நமது மீட்பர் பஸ்காபந்தியில் பானம்பண்ணினது முதல் சிலுவையில் தொங்கின இதுவரையும் ஜலபானம் செய்யவில்லை. அவருடைய அலைச்சல், அங்கலாய்ப்பு, இவைகளோடு வாரடியாலும் மற்றும் இம்சைகளாலும் அவருடைய இரத்தமும் குறைந்தது. அன்று பகலில் அடித்த சூரிய உஷ்ணமும் அவருக்கு மிகுந்த வறட்சியையும், சோர்பையும் உண்டாக்கினது. இவையெல்லாம் சேர்ந்து, இரட்சகருடைய நாவையும், சுவாசப்பையையும் வறட்சியுண்டாக்கினதால் அவர் தாகமுடையவரானார். இப்படி அவர் தாகமடையவேண்டியதைப் பற்றியும் தாவீது தீர்க்கதரிசன முறைத்தார். "என் பெலன் ஓட்டைப்போல் காய்ந்தது; என் நாவு என்மேல் வாயோடே ஒட்டிக்கொண்டது" என்றும், "நான்

கூப்பிடுகிறதினால் இளைத்தேன்; என் தொண்டை வறண்டு போயிற்று; என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள்; என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள்" என்றும் தாவீது சொல்லிய வாசகங்கள் நமது இரட்சகர் சிலுவையில் தாகமடைவதையே குறிப்பித்தன.

தாகமாயிருக்கிறேன் என்று இயேசு சொன்னவுடனே கடற்காளானைக் காடியிலே தோய்த்து, ஈசோப்புத் தண்டிலே மாட்டி அவர் வாயில் நீட்டினார்கள். இந்தக் காடி அவரைச் சிலுவையில் அறையுமுன் கொடுத்த காடிமாதிரியாயிராமல், தாகம் தீரும்படி ரோமைச் சேவகர் எப்போதும் வழங்கும் ஒருவித புளித்த தண்ணீராக இருந்தது. அந்தப் புளிப்பு வாசனையை, ஈசோப்பு வாசனையால் மாற்றும்படி சேவகர், அதை ஈசோப்புத் தண்டில் மாட்டிக் கொடுத்தார்கள். அதிகத் தாகத்தால் நாவுவறண்ட இயேசு அதைச் சற்று சப்பிப் பானம் பண்ணினார். இந்தக் காடி முன் கொடுத்த காடிபோல விஷமடங்கியிருந்தால் இரட்சகர் அதைப் பானம்பண்ணியிருக்கமாட்டார்.

இந்தச் சரீரதாகத்தோடு ஆவிக்குரிய தாகமும் அவருக்கிருந்தது என்று சொல்லத் தடையில்லை.

தியானம்

என் நேச இயேசுவே, உம்மை நான் நோக்குகிறேன். உமது நாவு மேல்வாயோடே ஒட்டுகிறது. நீர் சிலுவையிலிருந்து, இன்னும் அநேக காரியங்களைப்பேச விரும்புகிறீர். ஆனால் உம்மைப் பேசவிடாதபடி உமது தாகம் மிஞ்சுகிறது. இதோ சேவகர் தரும் காடியைப் பானம் பண்ணும்—அதோடுவரும் ஈசோப்புக் கிளையையும் முகர்ந்து களையாறும்.

உமது தாகம் என்ன ஐயா? சரீரப்பிரகாரமான நாவு வறட்சிதானா—இல்லை. அத்தோடு உமது இரட்சணியம் முடிவடையவேண்டுமென்று தாகமாயிருக்கிறீர். நீர் என் மீட்பராகவும், மத்தியஸ்தராகவும் ஏற்பட்டீரே. இப்போது நீர் மத்தியலோகத்திலிருந்து என் மத்தியஸ்த ஊழி

யத்தை நடத்துகிறீரே. அது சீக்கிரம் முடிவடைய வேண்டுமென்கிற தாபந்தத்தால் தாகமடைகிறீர்.

என் நேசரே, உம்முடைய இரட்சண்யம் முடிவடையப் போகிறபடியால், உமது சிலுவையைச் சூழ நின்று அல்லேலூயா பாடவேண்டுமென்று தாகமாயிருக்கிறீர். என் நேசரே, நீர் வான கீதத்தின்மேல் தாகமாயிருக்கிறீரோ! அவர்கள் தங்கள் கின்னரங்களின் நரம்புகளைக் கழற்றிப்போட்டு, துக்கசாகரத்தில் மூழ்கியிருக்கிறார்கள். உமக்குப் பாட்டின்மேல் தாகமானால், இதோ நீர் நேசித்த யோவானின் பாட்டைக் கேளும்:—

"அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர்
வல்லமையையும் ஐசுவரியத்தையும்
ஞானத்தையும் பெலத்தையும்
கனத்தையும் மகிமையையும்
ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ள
பாத்திரர்—பாத்திரர்—பாத்திரர்"

அத்தோடு உமது முன்னூதன் மரித்தோர் ஸ்தலத்திலிருந்து கூறும் விளம்பர வாசகத்தைக் கேளும்:—

"இவரே உலகத்தின் பாவங்களை
சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி."

என் மீட்பரே, நீர் ஓசன்னாமேல் பிரியப்பட்டவராச்சுதே. சாலேமின் பாலகர் ஓசன்னா பாடினபோது உமது முகம் மலர்ந்ததே. நான் சில ஓசன்னாக்கள் பாடுகிறேன். கேளும் நேசரே, கேட்டுக் களைதீரும்.

என்னை மீட்டீர்; ஓசன்னா!
உம்மைத் தந்தீர்; ஓசன்னா!
என்னை ஆளும்; ஓசன்னா!
உம்மை விடேன் ஓசன்னா!

ஆ என் மீட்பர், பாவிகள் இந்தச் சிலுவையண்டைவரத் தாகமாயிருக்கிறார். வருத்தப்பட்டு பாரஞ்சுமந்த பாவிகளே, நீங்கள் தூரமாய் விலகிப்போகிறதால் அவருடைய தாகம் அதிகரிக்கிறது. பாவியாகிய நான் இதோ போகிறேன். நீங்களும் வாருங்கள். ஆ, என் நேசர்

தமது தாகம் தீர என் கண்ணீர்தான் வேண்டுமென்று விரும்புகிறார். அதுதான் அவருடைய சிலுவை தாகத்துக்கு சரியான மாற்றும். ஆ, நான் இந்தச் சகாயத்தை அவருக்குச் செய்வேனாக. என் கண்ணீரை எத்தனையோ அற்பமான விஷயங்களுக்குச் செலவிட்டேனே. இப்போது சிலுவையண்டைவந்து என் பாவங்களை நினைத்து மனஸ்தாபப்பட்டு, கண்ணீரோடு விண்ணப்பம் செய்வேனாக. என் கண்ணீர்மேல் தாகமாயிருக்கும் இயேசுவுக்கு ஒரு சொட்டுமாத்திரமோ; நான் பாவத்துக்காக மாலை மாலையாகக் கண்ணீர் சொரிந்து அவருடைய தாகத்தை ஆற்றிவிடுவேனாக.

"தாகமாயிருக்கிறேன்" என்று என் மீட்பர் சொன்னதால் சத்துருக்களே, நீங்கள் என்னைப் பகைத்தாலும், நான் உங்களைப் பகைக்கவில்லை; நான் உங்கள்மேலுள்ள எரிச்சலோடுசாகாமல், இருபட்சத்தாரும்சமாதானமாகிப் போவோம்; சமாதானத்துக்கு அத்தாட்சியாக என் தாகத்தைத் தீருங்கள் என்று கேட்கிறதுபோலிருக்கிறது. ஆ, இதெவ்வளவு தாழ்மை—இதெவ்வளவு தயாளம்—இதை நான் பின்பற்றி என் சத்துருவையும், எனக்குப் பெரிய தீமை செய்தவனையும் நேசித்து அவனோடு உறவாயிருந்து மரிப்பேனாக.

ஜெபம்

என் அன்புள்ள இயேசுவே, தேவரீர் சிலுவையில் தாகமடைந்தீர். என் பாவங்களினிமித்தம் உமது மனதிலுண்டான எக்கமும், என் தண்டனைகளை நீர் சகித்த அலுப்பும், இம்மட்டும் நீர் அடிகளாலும் ஆணிகளாலும் சிந்தின இரத்தமும் உமக்கு மட்டில்லாத தாகத்தையுண்டாக்கினது. நீர் உமது சிலுவைத் தாகத்தால் நரகத்தின் தாகத்தை உணர்த்துகிறீர். அந்த ஐசுவரியவான் நரகத்தில் தாகத்தால் வருந்தினானே. நானும் அந்தத் தாகமுள்ள நரகத்தீயில் விழாதபடி தேவரீர் என்னை விடுதலையாக்கும்படித் தாகமானீர் என்று உணர்ந்து ஒருக்காலும் தாகமுண்டாகாத ஜீவதண்ணீரை உம்மிடத்தில் வாங்கிப் பானம்பண்ணும்படி என் இருதயத்தை ஏவியருளும்.

இப்போதும் என் மீட்பரே, என் பாவத்துக்காக நான் விடும் கண்ணீரால் உமது ஆத்தும வருத்தத்தையும், தாகத்தையும் நிவிர்த்தியாக்கி, என் விண்ணப்பங்களாகிய ஈசோப்பால் அதை வாசனையாக்கி தேவரீர் மகிழ்ச்சியடைந்தருளும். ஆமென்.

13. இரட்சண்யத்தின் முடிவு

(ஆறும் சிலுவை வாசகம்)

வேதம்

"அதன்பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, முடிந்தது என்று சொல்லித் தலையைச் சாய்த்தார்" (யோவா. 19: 28-30).

போதனை

நமது மீட்பர் இப்பூலோகத்திலிருக்கையில், நம்முடைய இரட்சிப்பின் விஷயமாக என்ன வேலைகள் முடிய வேண்டியதோ அவை எல்லாவற்றையும் தொகையாயும், முறையாயும் அறிந்திருந்தார். ஒரு பாடு முடிந்தபின்பு அடுத்த பாடு இன்னதென்றும், அதின் விவரம் இன்னதென்றும் திட்டமாக அறிந்திருந்தார். அவர் அறியாமல் ஒரு பாடும் அவருக்குச் சம்பவிக்கவில்லை. இந்த அறிவு அவருடைய ஜீவகாலமெல்லாம் அவரிலிருந்தது. "தீர்க்கதரிசிகள் எழுதியிருக்கிற வசனங்கள் நிறைவேறும்படி இவைகளெல்லாம் சம்பவிக்கிறது" என்றும், மனுஷகுமாரனைக் குறித்துத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டவைகளெல்லாம் நிறைவேறும் என்றும் முன்னாகவே சொல்லிவந்தார். பஸ்காபண்டிகைக்கு முன்னே, இயேசு பாடுபடவேண்டிய தமது வேளை வந்தது என்று அறிந்து, சீஷரை அதிகமாய் நேசித்து அவர்களுடைய கால்களைக் கழுவினாரே. இப்போதும் அப்படியே தாம் ஏற்றுக்கொண்ட நம்முடைய இரட்சண்ய வேலையை அடுத்த காரியங்களெல்லாம் நிறைவேறி முடிந்ததென்று நமது இரட்சகர் அறிந்து, முடிந்தது என்று சொல்லித் தலையைச் சாய்த்தார். இந்த வாசகத்தால் பூலோகத்தாரே உங்கள்

நிமித்தம் நான் ஒப்புக்கொண்ட எல்லாவற்றையும் நிறை வேற்றி இதோ இளைப்பாற தலைசாய்க்கிறேன் என்று அறிவிக்கிறார்.

தியானம்

என் மீட்பர் முடிந்தது என்று சொல்வது எனக்கு மகிழ்ச்சியை உண்டுபண்ணுகிறது. இனி என் தேவன் ஜெபம்செய்ய முழங்கால்படியிட வேண்டியதில்லை. போதகம் செய்யக் காலால் நடந்து திரியவேண்டியதில்லை. அவை எல்லாம் "முடிந்தது." இனி அவர் ஜெபத்தைக் கேட்கிறவரும் முன்போல கெருபீன்களின்மேலேறி வேக மாய் செல்லுகிறதுமான கனத்தை மறுபடியும் அடைய லாம். இனி அவர் அற்புதத்தால் நோயாளிகளைக் குண மாக்காமல், விசுவாசத்தால், அவர்கள் தங்கள் சுகத்தை அவரிடம் பெற்றுக்கொள்ளலாம். ஏனெனில் அவர் அற் புதம் செய்யும் காலம் "முடிந்தது."

ஆ, என் மீட்பரைப்பற்றிக் கூறின தீர்க்கதரிசனங் களும், காட்டின முன்குறிப்புகளும் இத்தோடு முடிந் தது. அவர் பெத்லகேமில் மனிதவதார மெடுக்கவேண்டி யதும், நாசரேத்தில் வளரவேண்டியதும், கல்வாரியில் சாகவேண்டியதும் நிறைவேறி "முடிந்தது." அவர் பசியாயிருப்பது தாகமடைவதும், தூங்குவதும் எல்லாம் "முடிந்தது." இஸ்ரவேலைக் காக்கிறவர் இனித் தூங்கவும், புசிக்கவும், பானம்பண்ணவும் வேண்டியதில்லை. எல்லாம் "முடிந்தது."

நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுதலும், அதில் தண்டனைகளைச் சகித்து முடிப்பதும் எல்லாம் "முடிந் தது." இனி நியாயப்பிரமாணத்தின் ஒரு எழுத்தாவது, அதின் தீர்ப்பின் ஒரு எழுத்தின் உறுப்பாவது என் மீட்பர்மேல் அதிகாரம் செலுத்தக்கூடாது. ஏனெனில் எல்லாம் "முடிந்தது." இனிமேல் ஈசாக்கு என்முன் குறிப்பில் பாக்கியுண்டென்று சொல்லக்கூடாது; வெண் கல சர்ப்பம் என் குறிப்பில் ஒன்று விட்டுவிடப்பட்ட தென்று தன் படத்தை உயர்த்தக்கூடாது. பஸ்கா ஆடு

என்னால் குறிக்கப்பட்டதில் இன்னது மிசுகிப்போயிற் றென்று கதறக்கூடாது. எல்லாம் "முடிந்தது."

இனி பெயெல்செபூல் தன் அக்கினிச் செட்டைகளை விரித்து என் மீட்பரிடம் வந்து அவரைச் சோதிக்க வாவது, துன்பப்படுத்தவாவது கூடாது. ஏனெனில் அவையனைத்தும் "முடிந்தது."

பிதாவானவர் இனி தமது குமாரனைப் பார்த்து, என் நேசகுமாரனே, நீர் ஒப்புக்கொண்ட வேலையில் இந்த ஒன்றை அல்லது இதின் பாகத்தை பாக்கிவைத்துவிட் டீரே என்று சொல்லவும் கூடாது, எல்லாம் "முடிந்தது."

இனி நானாவது, எந்த ஆதாமின் மகனாவது, ஏவாளின் எந்த மகளாவது சர்வலோக இரட்சகராக வந்தவர் இன்ன காரியத்தை முடிக்காமல் மரித்துப்போனதால் எனக்கு இந்த அந்த நஷ்டம் நேரிட்டது என்று சொல்லக் கூடாது. ஏனெனில் எல்லாம் "முடிந்தது."

ஆ, என் வானதச்சன் எனக்கு நித்தியமான வாசஸ் தலத்தைக் கட்டி, அது முடிந்தது என்கிறார். அல்லே லூயா! என் பரலோக சிற்பாசாரி என் நம்பிக்கை என் னும் கோபுரத்தைக் கட்டினாரே, அதை அவர் பூரணப் படுத்தி, சிலுவை ஏணியிலே அதின் கோடிக்கல்லை வைத்து, உன் இரட்சிப்பின் கோபுரம் "முடிந்தது" என்று கூறுகிறார். அல்லேலூயா! ஆ, என் சேனாபதி எனக்காக யுத்தம் செய்து, என் சத்துருவாகிய சாத்தானை ஆகா யத்திலே மடக்கிப் போர்புரிந்ததில், ஜெயம் கிடைத்தது, யுத்தம் "முடிந்தது" என்று எக்காளம் ஊதுகிறார். அல்லே லூயா! ஆ, என் நேசர் பாவ பாதாளத்தின் வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, என்னையும், வாசிக்கிறவனே, உன்னையும், கேட்கிறவனே, உன்னையும் விடுதலையாக்கி, உன் சிறை யிருப்பு "முடிந்தது" என்று கூறுகிறார். அல்லேலூயா!

ஆ, என் நேசர்—பாவத்தால் தலை கவிழ்ந்தவர்களே, உங்கள் சந்தோஷ கிரீடம் செய்து முடிந்தது;—சாகிறவர் களே, உங்கள் ஜீவமுடி பண்ணி முடிந்தது;—நிர்வாணி களே, உங்கள் வஸ்திரம் நெய்து முடிந்தது;—பசியுள்ள

வர்களே, உங்கள் போசனம் சமைத்து முடிந்தது;—தாகமுள்ளோரே, ஜீவ கிணறு வெட்டி முடிந்தது;—அழுக்குள்ளோரே, உங்கள் ஸ்நான ஊற்று திறந்து முடிந்தது;—வாருங்கள்—சந்தோஷப்படுங்கள்—கிரீடமணியுங்கள்—வஸ்திரம் தரியுங்கள்—புசியுங்கள்—பானம்பண்ணுங்கள் ஸ்நானம்பண்ணுங்கள் என்று அறிவிக்கிறார். அல்லேலூயா!

ஆ, என் நேசர் மிகுந்த பலத்தோடும், பெருவெள்ள இரைச்சலைப்போலும் இரைந்து, ஏதேனின் காவலை அகற்றி முடித்தேன்; பரதீசின் கதவை என் சிலுவைத் திறவுகோலால் திறந்து முடித்தேன்; உள்ளே பிரவேசியுங்கள்; ஜீவகனிகளைப் புசியுங்கள் என்று சொல்லுகிறது போல என் ஆத்துமா தியானிக்கிறது. அல்லேலூயா!

ஆ, என் நேசரே, இந்த வாழ்வுகளை எல்லாம் எனக்குச் சொல்லும்படி உம்மைப் பலப்படுத்திக்கொள்ளத் தான் நீர் சற்றுநேரத்துக்குமுன் உம்மைத் தாகம் தீர்த்துக்கொண்டீராக்கும்!

"முடிந்தது என்றாரே
அப்போதே முடிந்ததே
சர்வலோக மீட்புமே."

ஜெபம்

இரக்கமுள்ள மீட்பரே, எனக்காக நீர் நிறைவேற்ற வேண்டிய இரட்சிப்பின் கிரியைகளையெல்லாம் பாக்கியில்லாமல் முடித்ததற்காகவும், எல்லாம் முடிந்ததென்று சகலருக்கும் பிரசித்தப்படுத்தினதற்காகவும் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். தயவுள்ள இயேசுவே, நீர் முடித்துவைத்திருக்கிற எல்லா ஆத்தும வாழ்வுகளையும் நான் விசுவாசத்தோடு பெற்றுக்கொண்டு உமது சித்தத்தின்படிச் செய்யவேண்டிய வேலைகள் என்னவுண்டோ அவைகளை உமது நாமத்துக்கு மகிமையுண்டாக நான் ஜாக்கிரதையோடு செய்து என் ஜீவகாலத்தை நன்றாய் முடிக்கும்படி உமது பரிசுத்த ஆவியால் என்னை இந்த ஜீவகாலத்தில் நடத்தியருளும். ஆமென்.

14. இயேசுவின் மரணம்

(ஏழாம் சிலுவை வாசகம்)

வேதம்

"இயேசு: மறுபடியும், மகா சத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார்" (மத். 27: 50).

"இயேசு மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஜீவனை விட்டார்" (மாற். 15: 37).

"இயேசு, பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார்" (லூக். 23: 46).

"இயேசு தலையைச் சாய்த்து ஆவியை ஒப்புக்கொடுத்தார்" (யோவா. 19: 30).

போதனை

நமது அன்புள்ள இரட்சகரின் ஜீவியம் முடிவடைந்தது. எல்லாருடைய சாவும், வரவர சத்தம் குறைந்து அடங்கும். இயேசு மகா சத்தமாய்ப் பேசி மரித்தார். சத்துருக்கள் இயேசுவைச் சிலுவையிலிருந்து சாகவைத்தார்கள். சிலுவை அவருடைய கடைசிக் கட்டிலாயிருந்தது. அவர் தமது ஜீவனை பிதாவினிடம் ஒப்புவிக்கக் கருத்துடையவராயிருந்து, தமது பிதாவைக் கூப்பிட்டு, பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டு மரித்தார். அவர் சிலேட்டும் நாடி அடித்து, ஜன்னி வந்து, தேகம் குளிர்ந்து சாகாமல், பூரண பலத்தோடு ஜீவனுள்ளோரின் தேசத்திலிருந்து அறுப்புண்டார். அவர் தமது ஜீவனை ஒப்புவித்தார். இந்த மாம்ச ஜீவன் பாவநிவாரணத்தை யுண்டுபண்ணும்படி பிதாவானவரால் அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. பாவநிவாரணம் நிறைவேறினவுடனே அந்த ஜீவனை மறுபடியும் பிதாவின் வசம் ஒப்புவித்தார். "பாவத்தின் சம்பளம் மரணம்" நமது மீட்பர் நம்முடைய பாவங்களுக்கு வரவேண்டிய லாபமாகிய தண்டனைகள், ஆக்

னைகளையெல்லாம்கடந்துபோனபின்பு, பாவநிவாரணத்தின் கடைசிச் சம்பளமாக மாணத்தையும் பெற்றுக் கொண்டார். பலியிடப்பட்ட மிருகமானது, தன் இரத்தத்தைச் சிந்துகிறதோடு, பலிபீடத்தண்டை சாகவும் வேண்டியது. நம்முடைய பஸ்காவாகிய இயேசுவும் நம்முடைய மீட்புக்காக தமது இரத்தத்தைச் சிந்தின பின்பு, சிலுவைப் பலிபீடத்தில் தமது ஜீவனையும் ஒப்புவித்தார். அந்நியரும் சத்துருக்களுமாயிருந்த நம்மை, பரிசுத்தராகவும்; குற்றமற்றவர்களாகவும், கண்டிக்கப்படாதவர்களாகவும், தமக்குமுன் நிறுத்தும்படி, அவருடைய மாம்சத்தில் அடைந்த மாணத்தினாலே நம்மை ஒப்புரவாக்கினார் (கொலோ. 1: 21). ஒவ்வொருவருக்காகவும் மாணத்தை ருசிபார்க்கும்படி இயேசு மாணத்தை உத்தரித்தார்; மாணத்துக்கு அதிகாரியாகிய பிசாசைத் தமது மாணத்தினாலே அழிக்கும்படிக்கு இயேசு மாணமடைந்தார் (எபி. 2: 9, 14). அவர் மாணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தரானார் (எபி. 9: 15).

தியானம்

என் தோழனே, இதோ நாலு சாவுமணிகளின் சத்தம் கேட்கிறதே; நீ உன் வீட்டைவிட்டுப் புறப்பட்டு என்னோடு கொல்கொதா மலைக்கு வாவேன்! நாலு சுவிசேஷகரும் இந்த இழவுமணியைப் பலமாக அடிக்கிறார்கள். அந்த மணிநாதங்களைக் காதுகொடுத்துக் கேள்—காதுள்ளவர்கள் கேட்கக்கடவர்கள்:—

"இயேசு ஆவியை விட்டார்!"
"இயேசு ஜீவனை விட்டார்!"
"இயேசு ஜீவனை விட்டார்!"
"இயேசு ஆவியை ஒப்புக்கொடுத்தார்!"

குஷ்டரோகிகளே, குருடரே, கூனரே புலம்புங்கள். சப்பாணிகளே, ஊனரே, முடவரே அழுங்கள். உங்களைக் குணமாக்கின வைத்தியன் மரித்தார்!! பிசாசு பிடித்த

வர்களே, பெரும்பாடுள்ளவர்களே புலம்புங்கள். சாகக் கொடுத்தவர்களே, சஞ்சலம் பூண்டவர்களே அலறுங்கள்; உங்கள் சகாயரானவர் மரித்தார்!! திமிர்வாதக்காரரே, தெத்துவாயரே அழுங்கள். ஊமையரே, உணர்வில்லாதவர்களே புலம்புங்கள். உங்கள் சகாயராகிய இயேசு மரித்தார்!! பாவிகளே, படுதோஷிகளே, இந்த இழவுக்கு வாருங்கள்! வெறியரே, வேசிக்கள்ளரே இந்தச் சாவுக்கு வாருங்கள்! கள்ளரே, கொலேகாரரே இந்தத் துக்கத்துக்கு வாருங்கள். விக்கிரக பக்தரே, பலதேவத் தொழும்பரே விரைந்து நடந்து இந்த இழவைக் கேளுங்கள்! மாமிசத்தின் வெளிப்பட்ட தேவன் சிலுவைமரத்தில் மரிக்கிறூர், தேவகுமாரன் பிரேதமானூர். ''நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமானவர்'' என்று சில நாளுக்குமுன் சொன்னவர், ஜீவனற்ற பிணம் ஆனூர். மரித்தோரை எழுப்பின மன்னர், மரித்துக் கிடக்கிறூர்! இவரோடுகூட சிலுவையிலறையப்பட்டவர்கள் இன்னும் சாகவில்லே. என் இயேசு மரித்துப் போனூர்!! என் நேச மீட்பரே, அரிய போதனேகளேப் பொழிந்த உமது வாய் அடங்கிப்போயிற்றே; உவமை மொழி பொழிந்த உமது உதடுகள் மூடப்பட்டிருக்கிறதே. பலத்த கிரியைகளேச் செய்த உமது கரங்கள் கடாவப்பட்டிருக்கிறதே. நன்மை செய்யும்படித் திரிந்தலேந்த உமது திருக்கால்கள் அறையப்பட்டிருக்கிறதே. அனலுள்ள உமது உள்ளம் குளிர்ந்துவிட்டதே. ஆ! உமது கன்னங்கள் கறுத்து, கண்களும் மூடிவிட்டதே!!

ஆ, தேவனே, உமக்கும் சாவுண்டா?
ஆ, மீட்பரே, உமக்கும் மரணமா?
ஆ, நேசரே, நேசரே, நேசரே!!

நான் இந்தப் பரிசுத்த பிணத்தின்முன் விழுந்து, பிரலாபிப்பேனுக. நான் இந்தத் திவ்ய பிரேதத்தண்டை உட்கார்ந்து புலம்புவேனுக! புலம்புவேனுக!!

தூதர் காட்சி

இச்சமயத்தில் தூதர் சேனேயை என் ஆத்துமா காண்கிறது. அவர்களில் ஒருவன் தரையை நோக்கித்

தலைகவிழ்ந்திருக்கும் என் முதுகில் தட்டி, ஆதாமின் மகனே, ஏவாளின் மகளே, உன் துக்கம் மாமிச சம்பந்த மான பரிதாபமாக இருக்குமானால் அதில் பிரயோசன மில்லை. உன் துக்கம் தேவத்தனமான துக்கமா யிருக்க வேண்டியது. அப்படித் துக்கம் கொண்டாடிப் புலம்ப வேண்டுமானால் உன் மனம்கொண்டமட்டும் புலம்பு— பிரலாபி. இந்தச் சாவு சாதாரண சாவல்ல. இது பிராயச் சித்த சாவு, சர்வலோக யாகபசு தமது யாகத்தை முடித்து அசோதையானார். இவர் சிலுவை சுமந்துவந்த வழியில், தமக்காக அழுது புலம்பின ஸ்திரீகளைப் பார்த்து, "நீங்கள் எனக்காக அழாமல் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என்று சொன்ன வாசகத்தை நினைத்துக்கொள்வாயாக! இந்தப் பரிசுத்த பிணத்துக்கு நாங்கள் காவலாளராக வந்திருக்கிறோம். மாம்ச சம்பந்தமாக நீயாவது, வேறு யாராவது இந்த இடத்தில் துக்கம்கொண்டாடினால் அவர்களை இந்த துக்க வீட்டிலிருந்து வெளியே அனுப்பிவிடுவோம். நான் தேவனுடைய யுத்தசேனையின் அதிபதியாகிய மிகாவேல் என்று அறிவாயாக என்று சொல்லுகிறான்!

அப்போது நான்: பிரதான தூதனாகிய மிகாவேலே, என் துக்கம் மாமிசப் பிரகாரமான தற்கால துக்கமல்ல! நான் இரத்த சோரையையும் கண் மூடலையும் பார்த்துக் கலங்கித் தவிக்கிறவன் அல்ல, நான் ஒரு பாவி. இல்லை நான் பிரதான பாவி. இல்லை இல்லை. பிரதான பாவிகளில் நான்பிரதான பாவி ஐயா! இந்தப் பரிசுத்த தேவன் என்னி மித்தம் இந்த எல்லா நிந்தைகளையும் பட்டு, இப்படி நீச மரணமடைந்தார் என்பதை நான் திட்டமாய் அறிந்து என் அன்பை என் துக்கத்தால் வெளிப்படுத்தி, என் விசுவாசத்தால் அவரை முத்தமிட வாஞ்சித்து உட்கார்ந் திருக்கிறேன். என்னைத் துரத்தவேண்டாம் ஐயா! என் புலம்பலைக் கேட்டு அப்பால், உமக்கு மனமானால் என்னைத் துரத்திவிடும் தூதனே!

புலம்பல்

இயேசுவே, தெய்வீக ரட்சகரே, புண்ணியரே,
என் பாவம் தீர்க்கவென்று இக்குருசிலேறினீரே!
என் பாவ பாரமதை ஏற்கனவே நீர் சுமந்தீர்,
என் மீட்பை இக்குருசில் ஏறி நிறைவேற்றினீர்!
என் பாவம் தந்த இந்தத் தாழ்வான சாவதையே
அன்பாலே நீர் சகித்து அந்தரத்தில் மாண்டீரே!
பூலோகத்தார்போல நீர் மாண்டு போனீரோ?
அல்ல, அல்ல, பூலோக மீட்பராய் மாண்டீரே!
சாகவில்லை—சாகவில்லை—ஜீவனை நீர் ஒப்புவித்தீர்;
சாவடைந்த எனக்காக உம் ஜீவன் ஒப்புவித்தீர்!
தணிகிறேன் உம் பாதம், பணிகிறேன் பக்தியுடன்,
குனிகிறேன் உம் பாதம், பணிகிறேன் தாழ்ச்சி
யுடன்!
லோகமக்கள் மாலையிட்டால் செத்தபிணம் தேடு
வரோ?
பாவமகன் மாலையிட பரமபிணம் தேடுவனே!
அன்பால் நான் இன்றுமுதல் என் கணவனாக உம்மை,
தாவியணைத்து நித்தம் சேவிப்பேனே யும்மை!!

ஆதாமின் மகனே, உன் புலம்பலை நிறுத்து! நீ சரியாய்ப் புலம்பி அழுதாய். இதோ, தூதர் குழாங்களாகிய நாங்கள் சில ஸ்துதிகளைப் பாடுகிறோம். அதை நீயும், சர்வலோகமும் கேட்பீர்களாக.

தூதர் கீதங்கள்

1. "சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்:

பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது." ஆமென்.

2. "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும்
பூமியிலே சமாதானமும்
மனிதர்மேல் பிரியமும்
உண்டாவதாக!!" ஆமென்.

3. "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும் மகிமையையும், ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்." ஆமென்.

ஆ, தூதரே, உங்கள் பாட்டு, என் புலம்பலிலும் இன்பமாகத்தானிருக்கிறது; நீங்கள் பாடிக்கொண்டேயிருங்கள்; நான் இன்னும் சற்றுநேரம் தியானம்பண்ணுகிறேன்.

தியானம்

ஆ, என் மீட்பர் சாகுமுன் தமது தலையைச் சாய்க்கிறார். எல்லாருடைய தலையும் செத்தபின் சாயும், இவரோ முந்தியே தலைசாய்த்து இதோ சாகிறேன் பாருங்கள் என்கிறார். பெத்லகேம் மலைக்குகையில் பிறந்தவர் கல்வாரி மலைமேட்டில் தலைசாய்கிறார். ஆ, அவர் பிறந்ததும் காடு, மரித்ததும் காடு. நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளுமுண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்கச் சிலுவை கிடைத்தது.

என் மீட்பர் கெத்செமனேயில் பாடுபட ஆரம்பித்த போது பிதாவே என்று துவக்கினார்; அதைக் கல்வாரியில் முடிக்கும்போது "பிதாவே" என்று சொல்லி முடிக்கிறார்.

என் நேசர், "பிதாவே, உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்கிறார். இதில் மகா விசேஷமடங்கியிருக்கிறது. சகல மனுமக்களின் ஜீவன்களும் தேவனால் வாங்கிக்கொள்ளப்படுகின்றன. நமது மீட்பரோ அதைத் தானாக ஒப்புக்கொடுத்தார். அதை எடுத்துக்கொள்ளவும் ஒப்புக்கொடுக்கவும் அவர் அதிகாரமுடையவராயிருந்தார் (யோவா. 10: 18).

ஆ, என் மீட்பர் தமது மரணத்தால் உன்னைத் தமது பிதாவோடு ஒப்புரவாக்கி, எனக்காக மரணத்தை ருசி பார்த்து, அதின் கசப்பை ஜீவனாக மாற்றி—அதின் கூரைப் புஷ்பமாலை யாக்கினார். இனி மரணம் எனக்கு அவரால் நித்திரையும் நித்திய இளைப்பாறுதலின் நிழலுமாயிருக்கிறது. இது மாத்திரமோ என் மீட்பர்

மரணத்துக் கதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழித்து, மரண பயத்தால் என் ஜீவ காலத்தைக் கழித்துவந்த என்னை பயமற்று ஜீவிக்கப் பண்ணிவிட்டார். இனி நான்

மரணமே, உன் கூர் எங்கே?
பாதாளமே, உன் ஜெயமெங்கே?

என் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவால் எனக்கு ஜெயம் கிடைக்கப்பண்ணின தேவனுக்கு ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் என்று சொல்லிக்கொண்டேயிருப்பேன்.

என் நேசர் இன்னும் தலைசாய்ந்தவராகவே சிலுவையில் தொங்குகிறார். அவர் காதண்டை போய் ஒரு சங்கீதம் பாடுவேனாக:—நான் ஒரு விண்ணப்பமும் செய்வேனாக.

"குருசில் தலை சாய்ந்தே
மாண்ட தேவமைந்தரே,
சாய்ந்த தோளில் சாய்கிறேன்
இரட்சகா தஞ்சம், தஞ்சம்."

விண்ணப்பம்

உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்த்த தேவாட்டுக் குட்டியாகிய என் மீட்பரே, தேவரீர் எனக்காகச் சிலுவையிலே யாகமானீர். பாவியாகிய அடியான்மேல் இரக்கமாகும்! என் பாவத்தின் கசப்பை நான் உம்முடைய காயங்களிலும் சாவிலும் தெளிவாக்க் காண்கிறேன். என்னுடைய அக்கிரமங்களினிமித்தம் உமக்கு இந்தப் பாடுகளும் மரணமும் சம்பவித்தன. நீர் எனக்காக மனுஷாவதாரமெடுக்காவிட்டால் இந்தத் தண்டனைகளின் நிழல் முதலாய் உம்மண்டை நெருங்கமாட்டாது. என்னிமித்தம் பாடுகளைச் சகித்து, எனக்காக உமது ஜீவனைப் பலியாக ஒப்புக்கொடுத்தவரே, நானும்மை என் ஜீவகால முழுவதிலும் நேசித்து, உமக்காக எல்லாத் துன்பங்களையும் சகித்து, உமக்காக மரித்து, மகிமையுள்ள உயிர்த்தெழுதலைக் கண்டடையும்படி உமது பரிசுத்த ஆவியால் என்னை நிரப்பவேண்டுமென்று மிகவும் மனத்தாழ்மையோடு வேண்டிக்கொள்கிறேன். ஆமென்.

15. இயேசுவின் மரண அதிசயங்கள்

வேதம்

அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது, பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது. கல்லறைகளும் திறந்தது, நித்திரை யடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது. நூற்றுக்கு அதிபதியும், அவனோடேகூட இயேசுவைக் காவல் காத்திருந்தவர்களும் பூமி அதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து: மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள்'' (மத். 27: 51, 52, 54; மாற். 15: 38, 39; லூக். 23: 45, 47).

போதனை

''அதிசயமானவர்'' என்பது இயேசுவுக்கு ஒரு பேர். அவருடைய பிறப்பும் அதிசயம், பேச்சும் அதிசயம், போதனையும் அதிசயம், கிரியைகளும் அதிசயம், குணமும் அதிசயம், மரணமும் அதிசயம்தான்; அவருடைய தாழ்மையும் அதிசயம், பொறுமையும் அதிசயம், வல்லமையும் அதிசயம், கிருபையும் அதிசயம், இரக்கமும் அதிசயம், அன்பும் அதிசயம்தான். அவர் பிறந்தநாளில் வானத்திலிருந்து தூதர் பூமியில் தோன்றி மங்களகீதம் பாடினார்கள்; அவர் தீட்சைபெற்ற சமயத்தில் வானம் திறக்கப்பட்டது, தேவாவி புறா வடிவமாக இறங்கினார், பிதாவாகிய தேவன் வானத்திலிருந்து சாட்சி பகர்ந்தார்; அவர் ஒரு மலையின்மேல் மறுரூபமடைந்தபோது, அவருடைய முகமும் வஸ்திரமும் பிரகாசித்தன. மரித்துப் போன இரண்டு பரிசுத்தவான்கள் தோன்றினார்கள்; ஒளியுள்ள மேகம் நிழலிட்டது, வானத்திலிருந்து சத்தமுமுண்டாயிற்று. இந்த அதிசயமானவர் மரணமடைந்த போதும் அதிசயங்கள் நடந்தன. தேவாலயத்தின் திரைச்சீலை கிழிந்தது—பூமி அதிர்ந்தது—கல்மலை பிளந்தது—கல்லறைகள் திறந்தன—பரிசுத்தவான்களில் அநேகர் எழுந்திருந்தார்கள். இந்த அதிசயங்கள் ஒவ்

வொன்றும் நமக்கு நல்ல உபதேசங்களைப் போதிக்கின்றன.

1. திரைச்சீலை கிழிந்தது. இந்தத் திரைச்சீலை, இரத்தாம்பர நூலாலும், இளநீல நூலாலும் மெல்லிய பஞ்சு நூலாலும் செய்யப்பட்ட விசித்திர விநோதமான ஒரு படுதாவாயிருந்தது. இந்தத் திரையானது, அநேக வரங்களும் கிருபைகளுமடங்கி அதிசயமாய் விளங்கின இயேசுகிறிஸ்துவின் சரீரத்துக்கு உவமையாயிருந்தது. இந்தத் திரை கிழிந்ததில், இயேசுவின் மரணத்தால் பாவிகள் தேவனிடத்தில் சேரும் சலாக்கியத்தைப் பெற்றார்கள் என்பது பிரசித்தப்படுத்தப்பட்டது. நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு, இயேசுவானவர் தமது மாமிசமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை உண்டுபண்ணினார் என்ற பிரதான சத்தியம் இதில் அடங்கியிருக்கிறது (எபி. 10: 19-22).

2. பூமி அதிர்ந்தது, கல்மலை பிளந்தது. தேவகுமாரன் மரித்தார் என்று சிருஷ்டிகள் துக்கம் கொண்டாடுகிறது என்பதை இது காட்டுகிறது.

3. மரித்த பரிசுத்தவான்கள் எழுந்தார்கள். இயேசு தமது மரணத்தால் ஜீவனையும், அழியாமையையும் இவ்வுலகத்துக்கு உண்டுபண்ணி, பாவத்தில் மரித்த யாவருக்கும் ஞான ஜீவனையும், நித்திய ஜீவனையும் ஸ்தாபித்தாரென்பதையும், சரீர உயிர்த்தெழுதலையும் இது உணர்த்துகிறது.

தியானம்

ஆ, என் நேசரே, நீர் உமது மரணத்திலும் மகிமையுள்ளவராகவே விளங்குகிறீர்! நான் உமது காயங்களையும் இரத்தத்தையும் நோக்கிப் பார்க்கப் பார்க்கத் துக்கப்படுகிறேன்—புலம்புகிறேன்—போஜனத்தை ஒழிக்கிறேன்—புத்துப்போல் நிற்கிறேன். நீர் என் துக்கத்தை மாற்றும்படி பல அதிசயங்களைக் காட்டுகிறீர்—அழுகிற பிள்ளைகளுக்குப் பல விநோதங்களைக் காட்டி அந்த அழுகையை மாற்றுகிறதுண்டு. என் நேசரே, நீர் என் புலம்பலை மாற்றும்படி, பூமி அதிரவும், கல்மலைகள் கிழியவும்,

பிணங்கள் உயிரடையவும் செய்கிறீர். அது மாத்திரமோ தேவாலயத்தின் தடித்த திரையும் கிழிந்துபோயிற்று. இதை நான் ஓடிப்போய் பார்ப்பேனாக:—

திரை கிழிந்தது நிசம்தான்—எவ்வளவு தடித்த திரை கிழிந்து கிடக்கிறது—எவ்வளவு உயரமான திரை கிழிந்துபோயிற்று—இதைக்கிழித்தது யார்? ஆசாரியரா யிருக்குமோ? அவர்கள் கிழிக்கமாட்டார்கள். அவர்கள் அந்தஸ்தும், ஊழியமும், மேன்மையும் இந்தத் திரைக் குள்ளிருந்ததே. இதைப் பிதாவாகிய தேவன் தமது குமாரனுடைய திரு அவதார மேனிக்கு ஒப்புமையாக வைத்திருந்தார். அந்த மேனி தன் பாடுகளாலும் மரணத்தாலும் தேவனுக்கும் மனுஷருக்குமிருந்த பிரிவினையை நீக்கிப்போட்டது. இந்த நிச்சயமான சத்தியம் உலகத்தில் ஸ்தாபிக்கப்பட வேண்டுமானால் இந்தத் திரை இனித் தொங்கலாகாதென்று தேவன் கண்டு, அதைக் கிழித்துவிட்டார்.

இந்தத் திரை கிழிந்த வரலாறு எருசலேமில் பிரசித்த மாகிறது. சகல ஜனங்களையும் பிரதான ஆசாரியரையும் அங்கே காண்கிறேன். எல்லாருடைய முகத்திலும் துக்கம் நிறைந்திருக்கிறது. இந்தக் கூட்டத்தில் அன்னாவும், காய் பாவும் நிற்கிறார்கள். எல்லாரும் வாயில் கையும், மனத் தில் கலக்கமுமுற்றிருக்கிறார்கள். ஆ, இங்கே பிலாத்து வும், ரோமைச்சேவகரும்கூட நிற்கிறார்கள். இப்பொழுது சுமார் சாயரட்சை மூன்றுமணியாகிறது. ஜனசந்தடி அதிகம். அதோடு பஸ்கா ஆடுகளின் சத்தமும் கூடி ஏக இரைச்சலாகிறது. விண்ணப்பம் பண்ணும் ஜனங்கள் எழுந்துநின்று, மகா பரிசுத்த ஸ்தலத்தின் மாட்சிமை யனைத்தையும் பார்க்கிறார்கள். இதென்ன அதிசயம். பஸ்கா ஆடுகளைப் பலியிடுவாரில்லை. பஸ்கா ஆசரிப்பு நின்றுபோயிற்று. இப்படிப்பட்ட அதிசயம் இம்மட்டும் தேவாலயத்துக்குள் நடந்ததேயில்லை.

இந்தத் திரைச்சீலை கிழிந்துபோன விஷயமானது, ஆசாரியரே உங்கள் உத்தியோகம் இன்றோடு முடிந்தது. உங்கள் அங்கிகள், தொங்கல்கள், கிரீடங்கள், கச்சைகள்

எல்லாவற்றையும் கழற்றி வைத்துவிட்டு அவரவர் ஊருக்குப் போங்கள் என்று அறிவிக்கிறதாயிருக்கிறது; அது வேதபாரகரைப் பார்த்து உங்கள் வியாக்கியானங்கள், போதகங்கள் எல்லாவற்றையும் நிறுத்துங்கள் என்று அறிவிக்கிறதாயிருக்கிறது. அது மோசேயைக் கூப்பிட்டு, உன் நியாயப்பிரமாணச் சுருளைக் கிழித்துவிடு என்று கட்டளையிடுகிறதாயும், ஆரோனைக் கூப்பிட்டு, உன் சடங்குகளையெல்லாம் மாற்றிப்போடு என்று உத்தரவு செய்கிறதாயு மிருக்கிறது. அது ஜனங்களைப் பார்த்து, ஓய் ஜனங்களே, இன்றுமுதல் நீங்களனைவரும் இராஜரீக மான ஆசாரியக் கூட்டமானீர்கள்; ஆதலால் ஆரோனின் முறையின்படியுள்ள ஆசாரியர் மூலமாயல்ல; நேர்நேராக உங்கள் ஸ்தோத்திரபலிகளைச் செலுத்தலாம் என்று விளம்புகிறது. அது ரோமரைப் பார்த்து, இனி யூதன், கிரேக்கன், விருத்தசேதனக்காரன், விருத்தசேதனம் பெறாதவன் என்ற பிரிவில்லை. எல்லாரும் ஏகமாக, எந்த இடத்திலும் பிதாவைத் தொழுதுகொள்ளலாமென்று அறிவிக்கிறது. இந்தச் சிறந்த கருத்துகள் ஒன்றும் ஆசாரியருக்கு இணக்கமாகக் காணப்படாமையால், ஆலயத்துக்குள் அமளி அதிகப்படுகிறது; அப்பொழுது ஒரு தூதன் தோன்றி, ஓய் ஜனங்களே! இந்த ஆலயத்தின் மகிமைகள் இன்றோடு முடிந்தது, நீங்கள் அனைவரும் கொல்கொதா மலைமேல் சிலுவையில் தொங்கும் மெய்யான பஸ்காவண்டை போய், அவரை நோக்கிப் பாருங்கள் என்கிறான். அச்செய்தி கேட்டு நான் கொல்கொதா நாதரண்டை வருகிறேன்.

ஐயோ, இதென்ன அதிசயம்! கொல்கொதா குலுங்குகிறதே! கல்வாரி பிளக்கிறதே! ஆ, முன்காலத்தில் கோராகின் கூட்டத்தை பூமி பிளந்து விழுங்கினதுபோல இன்று பாவியாகிய என்னை விழுங்கும்படி பிளக்கிறதோ! அப்படி விழுங்கினாலும் அது நியாயந்தானே! ஆ, நான் சிலுவையில் அறையுண்ட என் மீட்பரைத் தழுவிக் கொள்வேனாக! இந்த அதிர்ச்சி என் மனதைத் தொடுவதாக. இந்த மலைகள் இப்படிப் பிளந்தாலும், என் இருதயம் இன்னும் பிளக்கவில்லையே. இந்தப் பூமி

இப்படி அதிர்ந்தாலும் என் மனம் அசையவில்லையே. இதேன்? இதேன்!! ஆ, நான் அவ்வளவு கடின இருதய முள்ளவனாயிருக்கிறேன்.

இந்த மலையும், இதையடுத்த பூமியும் தங்களுடைய சிருஷ்டி கர்த்தாவின் சாவுக்காகத் துக்கம் கொண்டாடும் படி இப்படி அசைந்து குலுங்குகிறதாகத் தோன்று கிறது. இதைக் கவனிக்கிற நான் என் இருதயச் சாவை நினைத்து அதிர்ச்சியடைந்து என் இருதயத்தைக் கிழிப் பேனாக!

இதுமாத்திரமோ கற்பாறையில் அடக்கம் பண்ணப் பட்டிருந்த பரிசுத்தவான்களின் கல்லறைகள் திறந்திருக் கின்றன. அவைகளை நான் உற்றுப் பார்த்து அதிசயப் படுகிறேன். அவைகளில் ஒரு பிணம் என்னை நோக்கி, ஓய் அக்கிரமத்தால் செத்து, பாவக்கல்லறைக்குள்......... வருஷமாக இருக்கும் பாவியே, அதோ தொங்குகிற ஜீவாதிபதியை நோக்கிப்பார்த்து ஜீவிப்பாயாக; அப் போது உன் ஆவிக்குரிய சாவுமாறி ஜீவனை அடைவாய் என்று அறிவிக்கிறது. அந்தப் பிணத்தின் போதனையின் படி நான் இரட்சகரையே நோக்கிப்பார்த்து ஜீவிப் பேனாக.

ஜெபம்

இரக்கமுள்ள இயேசுவே, நான் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு தேவரீர் உமது மாமிசமாகிய திரை யின் வழியாகப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை உண்டு பண்ணினதற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்து கிறேன். தேவரீர் உமது பரிசுத்த ஆவியை என்மேல் அனுப்பி நான் உமது பாடுகளையும் மரணத்தையும் பற்றிய உணர்ச்சியால் என் பாவங்களைவிட்டோயவும் பரிசுத்த ஜீவியமாகிய புதுவழியிலே நடக்கவும் கிருபைசெய் தருளும். நீர் உமது பாடுகளால் என் மனதை அசைத்து, என் இருதயத்தைப் பிளந்து, உம்முடைய இரட்சிப்பை நான் சரியாய் உணர்ந்துகொள்ளும்படி எனக்கும் உமக் கும் மத்தியிலிருக்கும் பாவம் என்னும் திரையைக் கிழித்து உமது பரமவாசஸ்தலத்தின் மாட்சிமைகளைத்

தையும் என் கண் காணவும், என் மனம் கிரகிக்கவும் அநுக்கிரகம் செய்தருளும். ஆமென்.

16. இயேசுவின் விலா குத்தப்பட்டது

வேதம்

"அந்த நாள் பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்தநாளா யிருந்தபடியினால், உடல்கள் அந்த ஓய்வுநாளிலே சிலுவை களில் இராதபடிக்கு, யூதர்கள் பிலாத்துவினிடத்தில் போய், அவர்களுடைய கால் எலும்புகளை முறிக்கும் படிக்கும், உடல்களை எடுத்துப்போடும்படிக்கும் உத்தரவு கேட்டுக்கொண்டார்கள். அந்தப்படி போர்ச்சேவகர் வந்து, அவருடனேகூடச் சிலுவையில் அறையப்பட்ட முந்தினவனுடைய காலெலும்புகளையும் மற்றவனுடைய காலெலும்புகளையும் முறித்தார்கள். அவர்கள் இயேசுவி னிடத்தில் வந்து, அவர் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை. ஆகிலும் போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது. அதைக் கண்டவன் சாட்சி கொடுக்கிறான், அவனுடைய சாட்சி மெய்யாயிருக்கிறது; நீங்கள் விசுவாசிக்கும்படி, தான் சொல்லுகிறது மெய்யென்று அவன் அறிந்திருக்கிறான். அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேதவாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்தது. அல்லாமலும் தாங் கள் குத்தினவரை நோக்கிப்பார்ப்பார்கள் என்று வேறொரு வேதவாக்கியம் சொல்லுகிறது" (யோவா. 19: 31-37).

போதனை

இயேசுவைக் கொலைசெய்தவர்கள் அவருடைய அடக் கத்தைக்குறித்து இப்போது யோசிக்கிறார்கள். அவ ருடைய தேகம் இன்னும் பூமியிலே இருக்கிறதினாலே இப்படிப்பட்ட அதிசயங்களெல்லாம் நடக்கிறது, அவரைப் புதைத்துப்போட்டால்தான் இனி நமக்கு நற்காலம் என்றெண்ணினார்கள்.

மரத்திலே தூக்கிப்போடப்பட்டவர்கள் சபிக்கப்பட்டவர்களென்றும், அவர்களால் தேசம் தீட்டுப்பட்டதாகும் என்றும், அப்படிப்பட்ட பிரேதங்கள் இராவிலே தொங்கலாகாதென்றும் மோசேயின் பிரமாணத்தில் கட்டளை யிடப்பட்டிருந்தது (உபா. 21: 23). இந்தக் கட்டளையை யூதர் கண்டிப்பாகக் கைக்கொண்டுவந்தார்கள். இக்கட்டளையானது கிறிஸ்து சிலுவையில் ரோமருடைய முறைப்படி அநேகநாள் தொங்காமல் அன்றையத்தினமே அடக்கம் பண்ணப்படவேண்டுமென்பதைக் குறிப்பித்தது.

பஸ்காவுக்கு அடுத்த ஓய்வுநாள் பெரிய ஓய்வு நாளென்று அழைக்கப்பட்டது. அந்த மகாநாளில் சிலுவையில் உடல்கள் தொங்கினுல் தங்கள் பண்டிகையும், தேசமும், ஜாதியும் தேவசாபத்துக்குள்ளாகும் என்று யூதர்கள் எண்ணி, பிலாத்துவினிடம் போய், அவர்கள் கால் எலும்புகளை முறித்துக்கொள்ளவும், அவர்களை அடக்கம் பண்ணவும் உத்தரவு கேட்டார்கள். இயேசுவின் பிணம் எவ்வளவு சீக்கிரம் புதைக்கப்படுமோ அவ்வளவுக்கு நலமென்று எண்ணின பிலாத்து உடனே உத்தரவு கொடுத்தான்.

சிலுவையில் அறையப்பட்டவர்களுக்குச் சீக்கிரம் மரணமுண்டாகும்படி, ஒரு பெரிய இருப்புத்தடியால் முதலாவது கால்களில் அடித்து ஒடித்து, அப்பால் மார்பில் ஒரு பலத்த அடி கொடுப்பார்கள். இப்படிச் செய்வது ஒரு பெரிய தர்மமாக எண்ணப்பட்டுவந்தது.

பிலாத்துவால் அனுப்பப்பட்ட சேவகர் அந்த இரண்டு கள்ளருடைய கால்களையும் முறித்து அவர்கள் ஜீவனுக்கு முடிவுண்டாக்கினுர்கள். அவர்கள் இயேசுவினிடத்தில் வந்தபோது அவர் மரித்துப்போயிருந்ததால், மற்றவர்களுக்குச் செய்ததுபோல அவருக்குச் செய்யவேண்டியதிருந்ததில்லை. இது அவர் மெய்யான பஸ்கா ஆடாயிருந்தாரென்பதை உறுதிப்படுத்திற்று. ஏனெனில் பஸ்கா ஆட்டைப்பற்றிய கட்டளையில், அதின் எலும்புக

ளொன்றும் முறிக்கப்படக் கூடாதென்பது தேவ கட்டளையாயிருந்தது (யாத். 12: 46; எண். 9: 12).

இயேசு தம்மைப் பாவநிவாரண பலியாக ஒப்புக் கொடுத்தபடியால், அதற்குப் பின்னமுண்டாகாதபடி தமது ஜீவனை ஒப்புவித்தாரே. இந்தப் பரம இரகசியம் சத்துருக்களுக்குத் தெரியாது. அவருடைய மரணத்தின் நிச்சயத்தை அறியும்படி ஒரு சேவகன் ஈட்டியினாலே அவருடைய விலாவைக் குத்தினான். உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது. யாதொரு நோக்கமில்லாமல் நடந்த இந்த விஷயமானது, பரிசுத்த ஆவி அருளப் படும் காலத்தில் பாவிகளுக் குண்டாகிற ஆவிக்குரிய உணர்ச்சியையும், இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் இருதயம் சுத்திகரிக்கப்படுவதையும் திருஷ்டாந்தப் படுத்தினது. இதைப்பற்றிய தீர்க்கதரிசனமாவது: "நான் தாவீதின் குடும்பத்தார்மேலும், எருசலேமின் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங் களின் ஆவியையும் ஊற்றுவேன். அப்பொழுது தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புவதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைகளுக்காகத் துக்கிப்பதுபோல எனக்காக மனம் கசந்து துக்கிப்பார் கள்" என்பது ஆவிக்குரிய உணர்ச்சியுண்டாவதைத் திருஷ்டாந்தப்படுத்துகிறது (சகரி. 12: 9, 10). இந்த வாசகத்தில் குத்தின என்னை என்னும் பதங்கள் யூதருக் குக் கலக்கத்தைக் கொடுக்கும் ஒரு விடுகதைபோலிருந்த தால், செப்ற்றியு ஜென்ற் என்னும் திருப்புதலில் "அவமதிக்கப்பட்ட என்னை" என்று மாற்றி வைத்துக் கொண்டார்கள்.

இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் இருதயம் சுத்தி கரிக்கப்படுவதைப்பற்றியும், இந்தத் தீர்க்கதரிசியே பேசுகிறார். அதாவது: "அந்நாளிலே பாவத்தையும் அழுக்கையும் நீக்க தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஊற்றுண்டா யிருக்கும்" என்பதே.

இயேசு நமது பாவத்துக்காக அடைந்த மனவேதனை யால், இரத்தாசயம் வெடித்து மரித்தார். இரத்தாசயம் வெடித்த பின்பு அதிலிருந்த இரத்தம் அதின் அடியி லிருக்கும் பெரிக்கார்டியம் என்னும் பையில் தங்கியிருக் கும். அதைப் பரிசோதனை செய்கிற நேரத்துக்குத் தக்க தாக, இரத்தக் கட்டியும் நீரும், அல்லது இரத்தமும் தண்ணீருமாகக் கலந்திருக்கும். இயேசு மரித்த கொஞ்ச நேரத்துக்குள்ளாக விலாவில் குத்தப்பட்டபடியால் இரத்தமும் தண்ணீரும் அந்தக் குத்திலிருந்து புறப் பட்டது.

யோவான் அப்போஸ்தலன் காலத்தில் சில பதிதர் தோன்றி இயேசுவுக்கு மெய்யான மாம்ச சரீரமிராமல், மாயமான ஒரு உடலிருந்தது என்று சொல்லிவந்தார் கள். அந்த எண்ணத்தைக் கண்டித்து இயேசுவுக்கு மெய்யான மாம்ச சரீரமே இருந்ததென்று திருஷ்டாந்தப் படுத்தும்படி இந்த வரலாற்றைச் சொல்லி, "இதைக் கண்டவன் சாட்சி கொடுக்கிறான். அவன் சாட்சி மெய்யா யிருக்கிறது" என்று வற்புறுத்துகிறார்.

தியானம்

என் மீட்பர் மெய்யாகவே மரித்தார். அவருடைய மரணத்தையும், அதனோடு சம்பந்தப்பட்ட அதிசயங் களையும் கவனித்த ஒரு அஞ்ஞான போர்வீரன், "மெய்யாகவே இந்த மனுஷன் நீதிமானாயிருந்தான் என்று தேவனை மகிமைப்படுத்தினான்." சமீபத்தில் நின்ற நூற்றுக்கதிபதி "மெய்யாகவே இந்த மனுஷன் தேவனுடைய குமாரன்" என்றான்; காவல் காத்திருந்த வர்கள் "மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்" என்றார்கள். எல்லாச் சாட்சியும் நன்றாயிருக்கிறது. என் மீட்பரின் மரணத்தையும் பாடுகளையும் ஆதியோ டந்தமாகத் தியானித்த என்னுடைய சாட்சியையும் கேளுங்கள்:—

மெய்யாகவே இவர் தேவ இரட்சகர்.
மெய்யாகவே இவர் லோக இரட்சகர்.
மெய்யாகவே இவர் என் இரட்சகர்.

இந்த இரட்சகரை நான் நம்புவேன்—நேசிப்பேன்—இவரை வணங்குவேன்—வேண்டிக்கொள்வேன்—இவருக்குக் கீழ்ப்படிவேன்—ஊழியம் செய்வேன்—இவரைப் போற்றுவேன்—பிரஸ்தாபிப்பேன்!!

என் மீட்பரின் கால் முறிக்கப்படாமலும், மார்பில் அடி படாமலும், அவர் அதற்குமுன் மரணமடைந்தது எனக்குச் சந்தோஷம். என் நேசரின் கால் முறிக்கப்பட்டது நிச்சயமானால், உன் மீட்பர் முடவன் என்றும், உன் ஞான மணவாளன் நொண்டி என்றும், பிசாசு வசை சொல்லலாமே. ஆ, என் மீட்பர் பூரண புருஷர். அவர் ஊனமான ஒரு சரீரத்தை எனக்காகப் பலி செலுத்தாமல் தமது பூரணமும், மாசில்லாததுமான சரீரத்தை எனக்காகப் பலியிட்டார்.

ஆ, என் மீட்பர் எவ்வளவு நீளமும் அகலமுமான ஈட்டியால் குத்தப்பட்டார். நான் அந்தக்கரணங்களால் நினைத்துச்செய்த பாவங்களுக்குப் பரிகார முண்டாகும்படி அந்த ஈட்டி அவருடைய இருதயத்தையும், இரத்தாசயத்தையும் ஊடுருவினது. அங்கிருந்து எனக்கு ஞான ஜீவன் உண்டாகும்படி இரத்தமும், என் ஆத்துமதாகம் தீரும்படி ஜீவதண்ணீரும் புறப்பட்டது. என் பிதா தமது பிள்ளையாகிய நான், தினந்தோறும் ஸ்நானம் செய்யவும், என் ஆத்துமாவாகிய அங்கியை வெளுத்துக் கொள்ளவும் தமது திருக்குமாரன் விலாவிலே ஒரு நீரூற்றை வெட்டித் தந்தார். அல்லேலூயா! என் ஆத்துமாவே, நீ அழுக்கானால் இந்த ஊற்றிலே குளித்துக் கொள்; தாகமானால் இதிலே மொண்டு குடித்துக்கொள். நரக உஷ்ணம் உன்னை வருத்தப்படுத்தினால் பிளவுண்ட இந்த மலையில் தங்கிக்கொள். இங்கிருந்து வீசும் காற்று இன்பமானது. உன் வியாதிக்கு இங்கே அமிழ்தமிருக்கிறது. இது இரட்சண்ய ஊற்று. இந்த ஊற்றின் மகத்துவத்தைப்பற்றி பரிசுத்த ஆகமக்காரர் எழுதும் வாசகங்களைச் சற்றே கவனிப்பாயாக:—

1. இந்த இரத்தத்தால் ஒரு சபை சம்பாதிக்கப்பட்டது (அப். 20: 28).

2. இது பாவமன்னிப்புண்டாகும்படி சிந்தப்பட்டது (மத். 26: 28).
3. இதினால் நீதிமான்களாக்கப்பட்டோம் (ரோம. 5: 9).
4. இதால் ஒரு புது உடன்படிக்கை ஸ்தாபிக்கப்பட்டது (1 கொரி. 11: 25; எபி. 13: 20).
5. இதால் மீட்புண்டாயிற்று (கொலோ. 1: 14; எபே. 1: 7).
6. இதால் தேவனுக்குச் சமீபமாகிறோம் (கொலோ. 1: 20; எபே. 2: 23).
7. இதால் தைரியமடைகிறோம் (எபி. 10: 20).
8. இது நம்மைப் பரிசுத்தம் செய்கிறது (எபி. 10: 29; 13: 12).
9. இது பாவங்கள் அற நம்மைக் கழுவுகிறது (1 யோவா. 1: 7; வெளி. 1: 6).
10. இது நமது அங்கிகளை வெளுக்கும் தெப்பம் (வெளி. 7: 14).
11. இந்த இரத்தத்தைப் பூசிப் போராடுகிறவர்களுக்கு எப்போதும் ஆவிக்குரிய ஜெயம் கிடைக்கிறது (வெளி. 12: 11).
12. ஆபேலின் இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசி, மத்தியஸ்தம் செய்கிறது (எபி. 12: 24).

ஆ, இந்த இரத்தத்தின் மாட்சிமையை என்ன சொல்ல! இதில் ஸ்நானம் செய்யவும், இதில் பானம் பண்ணவும் எனக்குப் பாக்கியம் கிடைத்ததே. இதில் நான் ஸ்நானம் பண்ணும்போதே என் நிறம் மாறுகிறது; என் சிந்தை இப்பொழுதுதான் பிறந்த பிள்ளையின் சுபாவத்தைப்போலாகிறது. இதை நான் விசுவாசத்தால் பானம் பண்ணவே என் ஆத்துமதாகம் தீருகிறது; நான் புதிய பெலனடைகிறேன்.

இந்த இரத்தத்தால் கொல்கொதா வாழ்வடைந்தது. எருசலேமின் மயானம் இயேசுவின் இரத்தத்தால்

தேவாலயம்போல சகல கிறிஸ்தவர்களாலும் மதிக்கப் படுகிறது. ஆ, கொல்கொதா மாத்திரமோ, அல்ல—அல்ல. இந்த இரத்தம் எந்த இருதயத்தில் தெளிக்கப் படுமோ அந்த இருதயமும் இப்படியே வாழ்வையும் புகழ்ச்சியையும் அடைந்து நித்திய ஜீவனைச் சுதந்தரிக்கும். என் மீட்பரே, ஏழை அடியானுக்கும் இந்த வாழ்வு கிடைப்பதாக!

பரவசம்

ஆ, கொல்கொதா மலையிலிருக்கும் இந்தப் பெருங் கூட்டமென்ன? ஓ ஆவிக்குரிய முடவரே, குஷ்டரோகிகளே, ஊனரே, குருடரே நீங்கள் இங்கே கூடி, நான் தங்கும் சிலுவையினடியில் தங்கியிருப்பதேன்? என்னுடைய இடத்தை எனக்கு விட்டுவிடுங்கள். ஐயா! நாங்கள் ஆத்தும நோயாளிகள், அநேக ஆண்டுகளாக ஆறுதலற்றுத் தவிக்கிறோம். கொல்கொதாவில் ஒரு ஜீவ விருட்சம் முளைத்து, அதின் தைலத்தாலும் இலையாலும் எங்களைப்போலொத்த நோயாளிகளைச் சுகமாக்குகிறதென்று கேள்விப்பட்டு வந்திருக்கிறோம்; நாங்கள் சுகமடையும்வரையும் இந்த இடத்தை விடோம்—விடோம்—என்கிறார்கள்.

ஓய் மரித்தோரே, ஆவிக்குரிய பிணங்களே, உங்களுக்கு இங்கே கவையுண்டோ? உங்கள் நாற்றம் சகிக்கவொண்ணாதிருக்கிறதே, விலங்குகள்—விலங்குகள். எங்கள் சாவை நீக்கும் நாயகனண்டை வந்தோம். எங்கள் ஜீவனின் அதிபதியைக் கண்டோம். இந்த மலையில் நாங்கள் வந்ததுமுதல் எங்கள் சாவு மாறுகிறது; எங்கள் துர்க்கந்தம் நீங்கி, சந்தனம், லவங்கம், காசியாவு முதலிய நற்கந்தம் எங்களில் வீசுகிறது, கிட்டவந்து எங்கள் வாசனையை முகர்ந்து பாரும். நாங்கள் சாகும் வரையும் இந்த மலையை விடோம்; எங்களுயிர் போகும் வரையும் இந்த ஜீவவிருட்சத்தை விட்டு விலகோம்—விலகோம்—விலகோம்.

ஓய், ஓய், ஆட்களே, உங்கள் அழுக்குவஸ்திரங்களையும், அங்கிகளையும் வெளுக்கிற இடம் இதுதானோ? அழுக்கு

கள் எல்லாம் இன்னும் பள்ளத்தாக்கைச் சேர்ந்த தல்லவோ? அங்கே போங்கள்—போங்கள்! ஐயா எங்களைத் துரத்தவேண்டாம், நாங்கள் இதுவரையும் இன்னும் பள்ளத்தாக்கில் குடியிருந்தவர்கள்தான். அங்குள்ள தண்ணீர் எங்கள் வஸ்திரங்களை அதிக அழுக் காக்குகிறது; இன்னும் அழுக்கால் எங்களுக்கு நோயே யன்றி ஆரோக்கியமில்லை. ஐயா, நாங்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து இந்தக் கல்வாரி ஊற்றண்டை வந்து எங்கள் அங்கிகளைத் தோய்த்து வெளுத்து எப் போதும் வெள்ளை அங்கி தரித்தவர்களாக இருக்கிறோம். இந்தச் சலாக்கியத்தையும் வாழ்வையும் விட்டு நாங்கள் போகோம்—போகோம்—போகோம்.

அப்பா, உங்கள் வாழ்வுகள் என்னால் குன்றிப்போக வேண்டாம். உங்கள் ஆரோக்கியம் என்னால் கெட்டுப் போகவேண்டாம். எப்படியும் எனக்கு ஒரு நல்ல இடம் சிலுவையண்டை வேண்டியது. ஏனெனில் நான் ஒரு நோய், அல்லது பல நோய் கொண்டவனாயிராமல், சர்வ நோயும் சாவும், தீட்டுமுள்ள படுபாவியாயிருக்கிறேன். நீங்கள் எல்லாரும் சிலுவையின் அடிவாரத்திலிருக்கிறீர் கள். அப்படியே இருங்கள் என்று சொல்லி: நான் என் அன்பின் கரங்களால் சிலுவையிலேறி இந்த ஜீவ ஊற்றுப் புறப்படுகிற சுனையாகிய என் நேசரின் திருவிலாவுக்குள் புகுந்துகொண்டேன். அதைக்கண்ட மற்ற நோயாளிகள்,

அது நல்ல இடம்
அது நல்ல இடம்

என்று சொல்லி எனக்குப் பின்னாலே ஏறி எனக்கும் இட முண்டா? எனக்கும் இடமுண்டா? என்று கேட்டார்கள். நான் ஒரு மாடத்துக்குள்ளிருக்கும் புறாவைப்போல, வெளியே எட்டிப்பார்த்து,

இன்னும் இடமுண்டு வாருங்கள்!
இன்னும் இடமுண்டு வாருங்கள்!!

என்று சொல்லிக்கொண்டேயிருக்கிறேன். வாசிக்கிற வனே, உனக்கும் ஒரு இடமிருக்கிறது, வா அப்பா, வா அம்மா, சீக்கிரம் வா.

ஜெபம்

பிளவுண்ட மலையே, திறப்புண்ட ஊற்றே, தேவரீர் உமது திருமேனி முழுவதிலும் எனக்காகப் பாடுபட்டீர். என்னிமித்தம் நீர் உமது சரீரத்தின் வெளி உறுப்புகளை மாத்திரமல்ல உள் உறுப்புகளையும் பாடுகளுக்கு ஒப்புக் கொடுத்தீரே. ஆ, என் வானபஸ்கா ஆடே, நீர் சிலுவையில் அறையப்பட்டதோடு, விலாவிலும் குத்தப்பட்டீர், உமது பிதாவானவர் உயிர்நிலையில் உம்மை வாதித்து, உயிர்நிலையிலிருந்து பாவநிவாரண இரத்தத்தைப் பெற்றுக்கொண்டார். இந்த இரத்தத்தால் நீர் என்னைக் கிரயத்துக்கு வாங்கியிருக்கிறீர். இன்றுமுதல் நானுமது அடிமையாயிருக்கிறேன். தேவரீருக்கு நான் சரியாய் ஊழியம் செய்யும்படி முதலாவது என்னைக் கழுவி, என் பாவங்களை மன்னித்து, என்னைப் பலப்படுத்தி, என் நோவையும் சாவையும் மாற்றியருளும். நான் தேவரீருடைய திருக்காயங்களுக்குள்ளே என் குடியிருப்பை வைத்துக்கொள்ளும்படி விரும்புகிறேன். நான் ஒரு கொழுத்த பாவியாயிருக்கிறேன். என்னைச் சாத்தான் மறுபடியும் கொள்ளைகொண்டு போகாதபடி அந்தத் திருப்பிளப்பு எனக்கேற்ற கெபியாயிருக்கிறது. நான் என் மூச்சொடுங்கும் அந்தக் கடைசி நிமிஷம்வரையும் இந்தக் கெபியைவிட்டுப் புறப்படாதபடிக்கு, உமது மூன்று ஆணிகளாலும் ஒரு பூட்டை அல்லது தடுப்பை உண்டாக்கியருளும். ஆ, செந்நீர் நிறைந்த என் கணவனே; உமது விலாவே என் வீடு—உமது சரீரமே என் போஜனம்—உமது இரத்தமே என் பானம்—உம்மைச் சேவிப்பதே என் சுயாதீனம். ஆமென்.

17. இயேசுவை அடக்கம் செய்தது

வேதம்

"இவைகளுக்குப் பின்பு அரிமத்தியா ஊரானும், யூதருக்குப் பயந்ததினால் இயேசுவுக்கு அந்தரங்க சீஷனுமாகிய யோசேப்பு இயேசுவின் சரீரத்தை எடுத்துக் கொண்டு போகும்படி பிலாத்துவினிடத்தில் உத்தரவு

கேட்டான்; பிலாத்து உத்தரவு கொடுத்தான். ஆகையால் அவன் வந்து, இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டு போனான். ஆரம்பத்திலே ஒரு இராத்திரியில் இயேசுவினிடத்தில் வந்திருந்த நிக்கொதேமு என்பவன் வெள்ளைப் போளமும் கரியபோளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டுவந்தான்.

யோசேப்பு அந்தச் சரீரத்தை எடுத்து, துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டி வைத்துப்போனான். அங்கே மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறைக்கு எதிராக உட்கார்ந்திருந்தார்கள்" (மத். 27: 57–61; மாற். 15: 42–47; லூக். 23: 50–56; யோவா. 19: 38–41).

போதனை

இயேசு அடக்கம்பண்ணப்பட்ட வரலாறு நான்கு சுவிசேஷகராலும் எழுதப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்புகளைக்கொண்டு,

1. யோசேப்பு என்ற ஒரு புண்ணியவான் இயேசுவின் உடலை மரியாதையாய் அடக்கம்பண்ணும்படி, பிலாத்துவினிடத்தில் உத்தரவு கேட்டான் என்று அறிகிறோம். இவன் இயேசுவுக்குச் சீஷனும், ஐசுவரியவானும், அரிமத்தியா ஊரானுமாயிருந்தான்.

2. பிலாத்து இயேசுவின் மரணம் இவ்வளவு சீக்கிரத்தில் நடந்ததையிட்டுச் சந்தேகப்பட்டான். அவன் தன் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளும்படி, சேவகரின் தலைவனை வரவழைத்து, மரணவரலாற்றைக் கேட்டான். அந்தத் தலைவன் இயேசுசிலுவையில் பேசின வார்த்தைகளையும், அப்பால் நடந்த அதிசயங்களையும், விலா குத்தப்பட்டு இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டதுமான எல்லா விவரங்களையும் அறிவித்தான் என்று சொல்லவேண்டியது. இந்த எல்லா வரலாற்றாலும், இயேசு மரித்தது நிச்சயமென்று பிலாத்து அறிந்து, யோசேப்பு என்பவர்

நினைத்தபிரகாரம், இயேசுவை மரியாதையாக அடக்கம் செய்யும்படி உத்தரவு கொடுத்தான்.

3. இந்தச் செய்தியை நிக்கொதேமு என்ற பக்தன் கேள்விப்பட்டு, யோசேப்போடு கூடிக்கொண்டான். யோசேப்பு மெல்லிதான துப்பட்டியையும், நிக்கொதேமு வெள்ளைப்போளமும், கரியபோளமும் கலந்த நூறு இராத்தல் கந்தவர்க்கமும் கொண்டுவந்தான்.

4. அரிமத்தியாவூர் யோசேப்பும், நிக்கொதேமும், மகதலேனா மரியாளும், வேறொரு மரியாளுமாகக் கூடி இயேசுவின் உடலைச் சிலுவையிலிருந்து இறக்கி, கந்தவர்க்கம்பரப்பப்பட்ட துப்பட்டியிலே சுற்றி, யோசேப்பு என்பார் தமக்கென்று கன்மலையில் வெட்டிவைத்திருந்த புதிய கல்லறையில் வைத்து, ஒரு பெரிய கல்லால் அந்தக் கல்லறையை மூடிவைத்தார்கள். இந்த அடக்கத்தில் போர்ச்சேவகரின் அதிபதியும் சேவகரும் உதவிசெய்திருக்கவேண்டியது.

5. இயேசுவின் உடல் அடக்கம்பண்ணப்பட்டபின்பு மற்றவர்கள் போய்விட்டாலும், மகதலேனா மரியாளும், யோசேப்பின் தாயாகிய வேறொரு மரியாளும் கல்லறைக்கு எதிராக உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தார்கள்.

இயேசு ஐசுவரியவானாயிருந்த யோசேப்பின் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டது ஒரு தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக இருந்தது. ஏசாயா தீர்க்கதரிசி, "துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக் குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடிருந்தார்" என்று உரைத்திருந்தான் (ஏசா. 53: 9). சிலுவையிலறையப்பட்ட குற்றவாளிகளை பெரும்பாலும் கொல்கொதா மேட்டில் நாய்களைப்போல புதைப்பது யூதருடைய வழக்கமாயிருந்தது. இயேசுவின் பிரேதம் அப்படிக் கனவீனமடையவில்லை.

தியானம்

கொல்கொதாவின் அமளி எல்லாம் அடங்கிவிட்டது—ஜனசந்தடியும் ஓய்ந்தது—புசல் அடித்து ஓய்ந்ததுபோல

அமரிக்கையாயிருக்கிறது—இந்த அமைதல் கல்வாரி மேட்டில் மாத்திரமோ? பரம சீயோன் சிகரங்களிலும் இப்படியே மட்டில்லாத அமைதலிருக்கிறதை என் ஆத்துமா கவனிக்கிறது; தேவன் இரட்சண்ய வேலையை முடித்து இளைப்பாறுகிறார். உலகத்தோற்றத்துக்கு முன் ஆரம்பித்த வேலை இன்று கல்வாரியில் முடிவடைந்தது—வானத்தில் துவக்கின வேலை பூமியில் முடிவடைந்தது—பிதா வானத்திலும், குமாரன் பூமியிலுமாக இருந்து நடத்தின இரட்சிப்பின் கிரியை இன்று முடிவடைந்தது. ஆகவே, பிதா வானத்திலும், குமாரன் பூமியிலும் இளைப்பாறுகிறார்கள். இந்த இளைப்பாறுதல் என் ஆத்துமாவுக்கு என் மீட்பருடைய பாடுகளால் கிடைக்கவேண்டிய இருதய அமைதலையும், மனச்சமாதானத்தையும் எனக்கு நன்றாக உணர்த்துகிறது.

தேவன் விஷயத்தில் இது ஓய்வுநாளாயிருந்தாலும், சிருஷ்டிகள் விஷயத்தில் இது துக்கநாள் அல்லவா? ஆ, சர்வ சிருஷ்டிகளே வாருங்கள், நமது சிருஷ்டிகர் பிரேதமானார்! வான சேனைகளே நீங்களும் இந்தத் துக்கத்துக்கு வாருங்கள். எல்லாரையும்விட பாவிகளே, இந்தத் துக்கத்தைக் கொண்டாட வாருங்கள், வாருங்கள்!! ஆ, என் மீட்பர், ஆ, என் நேசர், ஆ, என் மணவாளர், என்னை மீட்க வந்ததில் பிணமானார்! பிரேதமானார்!

அரிமத்தியாவூர் யோசேப்பே, நீர் தைரியசாலிதான். என் மீட்பரை நீர் நேசித்தீர், என் நேசரை நீர் மதித்தீர். இயேசுவின் பிரேதத்துக்கு மரியாதையான அடக்கம் செய்வதில் என்ன சங்கடம் நேரிட்டாலும், நேரிடட்டும் என்று துணிந்தது சரிதான். இது இரட்சண்யத் துணிவேயன்றி வேறல்ல. இதே தைரியம் எனக்கும் கிடைப்பதாக. நான் என் மீட்பரின் இரத்தத்தில் விசுவாசம் வைக்கும்போது இந்தத் தைரியம் எனக்குத் தானாக வருகிறது. உமக்கு உதவியாக நிக்கொதேமுவும் வருகிறார். ஆ, நல்ல விருத்தரே, இம்மட்டும் தலைமறைவாகத் திரிந்த உமக்கு இந்தத் தைரியம் எப்படி வந்தது! வேறு இரண்டு ஸ்திரீகளும் வந்திருக்கிறார்கள். இதோ,

நானும் வருகிறேன். என்னையும் உங்களோடு சேர்த்துக் கொள்ளுங்கள்.

இதோ ஒரு ஏணி, நான் அதின்மேலேறி என் மீட்பரின் ஆணிகளைக் கழற்றி, அவருடைய உடலை என் தோளின்மேல் சுமந்துவருகிறேன். இதோ, சில படிகள் ஏறி என் நேசரின் பாதமடைந்தேன். அதை விசுவாசத்தால் முத்தமிடுகிறேன் என் தோழரே, நீங்களும் முத்தமிடுங்கள். இவ்வுலகத்தில் நன்மை செய்யும்படி சுற்றித் திரிந்த பாதம் இதுவல்லவோ? சகல நோயாளிகளும் தேடிவந்த பாதம் இதுவல்லவோ? இந்த நீண்ட ஆணி, இரண்டு கால்களையும், சிலுவையையும் ஊடுருவிச் சென்றதே. இந்தப் பெரிய ஆணியைக் கழற்றிவிடுவேன்; இதோ, அவருடைய திருக்கரங்களை முத்தமிட்டு அந்த ஆணிகளையும் கழற்றுகிறேன். ஆ, வல்ல கரமே, சகல நோயாளிகளையும் தொட்டுக் குணமாக்கின மகத்துவ கரமே, என்னையும் தொடுவாயாக. என் குஷ்டரோகம் இன்று தீர்ந்துபோகட்டும், என் கூன் இன்று நிமிர்ந்து போகட்டும், என் சாவு இன்று ஒழிந்து போகட்டும்!

ஆ, இந்தப் பரிசுத்த பிணத்தை அல்ல—அல்ல, என் நேசகணவரை இன்றுதான் நான் தூக்கிச் சுமக்கிறேன். கன்னிமரியம்மாள் பிறந்த அன்று இவரைச் சுமந்தாள், நானோ என் நேசரின் ஞான மணவாட்டியானதால் அவர் செத்த இன்று, அவரைச் சுமக்கிறேன். செத்த பிணங்கள் பெரும்பாலும், அதிகக் கனமாயிருக்குமே. என் நேசர் பேரிலுள்ள வாஞ்சையால், அவருடைய சரீரமாகிய சுமை எனக்கு இறகுபோல இலேசாக இருக்கிறது.

யோசேப்பே, நீர் கொண்டுவந்த மெல்லிய வஸ்திரத்தை விரியும், இது நன்றாய்த்தானிருக்கிறது; ஆனால் இது போதாது; நான் கொண்டுவந்திருக்கிற என் சிறையிருப்பின் வஸ்திரத்தை இதின்மேல் விரிக்கிறேன்; இனிப் பாவம் என்னை ஆளவேண்டியதில்லை. நிக்கொதேமுவே, உம்முடைய நூறு ராத்தல் கந்தவர்க்கத்தை இந்த வஸ்திரங்கள்மேல் தூவும்; இது போதாது. மரியாள் சில நாளுக்குமுன் பூசின நளது தைலம், இன்னும் மணக்

கிறது. அதோடு இந்தக் கந்தவர்க்கமும் சேர்ந்தாலும் என் மீட்பருக்கு இது போதாது; என் கணவருக்கு இது பற்றுது. உங்களுடைய சரக்குகள் அவருடைய உடலுக்கு மாத்திரம் ஏற்றது. நானோ அழிவைக் காணமாட்டாத அவருடைய ஆத்துமாவை வாசனைப்படுத்த என் பட்சா தாபம், பாவ அறிக்கை, மனங்கசந்த பெருமூச்சு ஆகிய இவைகளையும் கொட்டுகிறேன். இனிமேல் எல்லாரும் சேர்ந்து நமது அன்புள்ள கண்ணீராலும், நமது பாவங்களுக்காகச் சிந்தும் கண்ணீராலும் இவருடைய திருமேனியைக் கழுவி முழுக்காட்டிக் கட்டுவோமாக.

இந்தப் பரிசுத்த மேனியை எங்கே அடக்கம் செய்யலாம். யோசேப்பின் புதிய கல்லறை அதற்கு ஏற்றது தான். அங்கே சுமந்துபோவோம். அதற்குமுன் நான் வெட்டியிருக்கிற கன்மலையில் சற்றுநேரம் வைத்துவைப்பேனாக. இது என் கடின இருதயத்தின் மத்தியில், தேவனுடைய வசனமாகிய சம்மட்டியாலும், சிலுவைத் தியானம் என்னும் கோடரியாலும் தோண்டப்பட்டிருக்கிற புதிய கல்லறையாயிருக்கிறது. இதில் நான் ஆவியின் பிரகாரமாய் அவரை அடக்கம்பண்ணிக்கொள்ளுகிறேன். என் கணவர் மரித்தாலும் அவர் இன்னும் என்னுடையவர், நான் அவருடையவள் அல்லவா?

ஆ, என் மீட்பர் யோசேப்பின் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டு முடிந்தது. அவருடைய கல்லறைமேல் ஒரு பெரிய கல் வைக்கப்பட்டது. என் இருதயத்தில் ஆவியின்படி அடக்கம் பண்ணப்படும்; என் மீட்பரின் சமாதிமேல் நானும் ஒரு பெரிய கல்லைத் தூக்கி வைக்கிறேன். அதின்பேர் நம்பிக்கை என்பதுதான். இந்தக் கல்லால் என் இயேசுவின் உயிர்த்தெழுதலும், என்னுடைய ஆவிக்குரிய உயிர்த்தெழுதலும் உபமானிக்கப்பட்டிருக்கிறது. இந்த நம்பிக்கையோடு நான் ஜீவித்து, சமாதியண்டை காத்திருந்த ஸ்திரீகளைப்போல, என் மீட்பர், என் உள்ளத்தை விட்டு எடுபடாதபடி விழிப்பாய்க் காத்துக்கொண்டிருப்பேன். இப்பொழுதும் நான் என் நேசர்பேரில் பாடின புலம்பலோடு இந்தப் பாகத்தை

முடிப்பேனாக. வாசிக்கிறவனே, நாமிருவரும் கூடிப் புலம்புவோமாக:—

புலம்பல்

"இயேசுவே என் பிரிய நேசரே ரட்சகரே!
இக்குழியோ உந்தனுக்கு இன்பசுக வீடாச்சு!
தேன் பொழியும் வாயடங்கி, திறந்தகண்ணுமே மூடி,
பொன்மேனி புண்ணாகி புழுதியுமக் கமுதாச்சோ?
கன்னத் தழகா கருவிழியின் நல்லழகா!
பின்னப்பட்டுப் போனீரே, பாவி எனக்காக!
உன்பாதம் நோய்த்தவரின் வீடாயிருந்ததல்லோ;
நோய்தீர்ந்தோர்க் கப்பாதம் முகரும் புஷ்பக்
கொத்தல்லோ!
தண்ணீரில் தாழாமல் தாண்டிவந்த காலதற்கு
தண்டாணி யூடுருவச் சம்பவித்த தோஷமென்ன?
தன்போல் பிறரையெல்லாம் எண்ணி நடந்தவிலா,
சண்டாளச் சேவகனால் குத்துண்ட தேதுக்காய்?
திருமேனி புண்ணாகி தேகம் சிவந்தபின்னும்
சிறுமையுள்ள சிலுவையையே சீராய்ச் சுமந்தீரே!
குருடு கூன் குட்டம் குணமளித்த தும்கரமே
கூடி அதில் துட்டர் கூராணி தைத்தாரே.
பொற்கிரீடம் தாங்கும் உம் தலைமேல் சத்துருக்கள்
முட்கிரீடம் சூட்டி மோதி யடித்தாரே.
நிந்தை அவமானமெல்லாம் நின்றதையா இன்றோடு
நீண்டு படுத்துறங்கும், நீசன் எனை மீட்டருளும்."
மாண்டீரே என் கணவா; மாண்டீர் எனைமீட்க
மீண்டு முயிரடைவீர் மேதினியோர் கண்காண.
ஓர் மண்டலம் பசித்து உதைத்து வென்றீர் சாத்தானை
நேர் மூன்றும் நாளதிலே நீர் வெல்வீர் சாவதனை."

ஜெபம்

பரமபிதாவாகிய தேவனே, நீர் உமது ஒரேபேறான குமாரனை எங்களுக்காகத் தந்து, அவருடைய பாடுகளாலும், மரணத்தாலும் எங்களை மீட்டுக்கொண்டீரே.

எங்கள் நிமித்தம் நீர் உமது குமாரனை மறந்தீர்—கைவிட்டீர்—பாடுகளுக் குட்படுத்தினீர்—சாகவும் பண்ணினீர். இவ்வளவாக எங்களை நேசித்து எங்களில் அன்பு கூர்ந்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். நாங்கள் அந்த அன்பை எப்பொழுதும் நினைவுகூர்ந்து, உமக்குக் கீழ்ப்படிதலோடு அடங்கி, விசுவாசத்தோடு ஜீவிக்கவும், அவர் சம்பாதித்த புண்ணிய பலன்களுக்குப் பங்குள்ளவர்களாகவும், உம்முடைய பரிசுத்த ஆவியால் எங்களை ஆண்டுகொள்ளவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

18. இயேசுவின் கல்லறை காவல் பண்ணப் பட்டது

வேதம்

“ஆயத்தநாளுக்குப் பின்னான மறுநாளிலே பிரதான ஆசாரியரும் பரிசேயரும் பிலாத்துவினிடத்தில் கூடி வந்து: ஆண்டவனே, அந்த எத்தன் உயிரோடிருக்கும் போது, மூன்று நாளைக்குப்பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது. ஆகையால், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டுபோய், மரித்தோரிலிருந்து எழுந்தானென்று ஜனங்களுக்குச் சொல்லாதபடிக்கும், முந்தின எத்தைப்பார்க்கிலும் பிந்தின எத்து கொடிதாகாதபடிக்கும், நீர் மூன்றுநாள்வரைக்கும் கல்லறையைப் பத்திரப்படுத்தும்படி கட்டளையிடவேண்டும் என்றார்கள். அதற்குப் பிலாத்து: உங்களுக்குக் காவல் சேவகர் உண்டே; போய், உங்களால் கூடியமட்டும் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள் என்றான். அவர்கள் போய்க் கல்லுக்கு முத்திரை போட்டு, காவல் வைத்து, கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள்” (மத். 27: 62–66).

போதனை

இயேசுவின் கல்லறை முத்திரையிடப்பட்ட வரலாற்றை பரி. மத்தேயு மாத்திரம் எழுதுகிறார். யோசேப்பு

நிக்கொதேமு ஆகிய இருவரும் இயேசுவின் பிரேதத்தைக் கேட்டு வாங்கி அதை மரியாதையோடு அடக்கம் செய்தார்கள் என்ற வரலாறு நகரத்திலே பேசிக்கொள்ளப்பட்டது. இவ்விருவர் செய்த பிரயத்தனமும் அன்னா காய்பா முதலியவர்களுக்குப் பிடிக்கவில்லை. இத்தோடு பூமி அதிர்ந்தது, மலைகள் பிளந்தது, தேவாலயத் திரைச்சீலை கிழிந்தது ஆகிய நிச்சயமான வரலாறுகளும் அவர்களுக்கு மிகுந்த கலக்கத்தை உண்டாக்கினது. இந்த எல்லா அதிசயங்களையும் கண்ட ஜனங்கள், இந்த நீதிமான் தாம் முன்சொன்னபடி மூன்றும் நாளில் உயிரோடு எழுந்திருக்கலாம் என்று பேசிக்கொண்டிருக்கலாம். இந்தப் பேச்செல்லாம் அவர்களுக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தது. இயேசுவின் கல்லறையண்டை வேறொருவரும் போகாதபடி தடுத்தால் நல்லதென்றும் அவர்கள் எண்ணிக்கொண்டார்கள். சங்கத்தாரில் சதுசேயராயிருந்தவர்கள் உயிர்த்தெழுதலை மறுத்துவந்தபடியால், இயேசுவின் பட்சத்தாரால் யாதொரு மாறுபாடும் நடவாதபடிக் கல்லறையைக் காபந்து பண்ணுவது நலமென்று தீர்மானித்தார்கள். இவ்வளவு மாறுபாடும், கட்டுப்பாடும் யோசேப்பாலும், நிக்கொதேமுவாலும் நடக்கலாமென்று அவர்கள் உத்தேசித்தார்களாக்கும்.

அப்போகிரிப்பா ஆகமக்காரன், இநிமித்தம் யூதர் யோசேப்பு என்பவரைப் பிடித்து, மூன்றும் நாள்வரையும் காவலில் வைத்து அப்பால் அவருடைய சிரசை வாங்கிப் போட ஆலோசனை பண்ணியிருந்தார்களென்று, அவர் தேவ எத்தனமாகத் தப்பி தமது சொந்த ஊரில் சேர்ந்தார் என்றும் சொல்லுகிறான்.

சத்துருக்கள் இயேசுவின்பேரில் வைத்த பகையை இன்னும் மறக்காமல் பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சீஷர் அவருடைய பிரேதத்தைத் திருட்டளவாகக் கொண்டுபோய், அவர் உயிரோடெழுந்துவிட்டாரென்று சொல்லாதபடிக்குக் கல்லறையை முத்திரையிடவும், மூன்றுநாள் காவல் வைக்கவும் உத்தரவு கேட்டார்கள். பிலாத்து அப்படியே உத்தரவு கொடுத்தான்.

அவர்கள் போய்க் கல்லறையை முத்திரையிட்டுக் காவல் காத்தார்கள்.

இயேசு கல்லறைக்குள் வைக்கப்பட்டது; நாம் பாவத்துக்கும், அதின் இச்சைகளுக்கும் மரிக்கவேண்டுமென்ற பிரதான சத்தியத்தை நமக்கு உணர்த்துகிறதாக பரி. பவுல் அறிவிக்கிறார் (ரோம. 6. அதி).

இயேசுவின் மாம்ச உடல், முத்திரையிடப்பட்ட கல்லறைக் குள்ளிருந்தது. அவருடைய ஆவிக்குரிய தேகமோ மரித்தோர் ஸ்தலத்தில் சென்றது. அதைக் குறித்து பரி. பேதுரு சொல்வதாவது:—"அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்; அந்த ஆவியிலே அவர் போய் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார்" என்பதே (1 பேது. 3: 18, 19). இதினாலே இயேசு மரித்தபின்பும் தமது ஆவியிலே சுவிசேஷ ஊழியத்தை நடத்திவந்தார் என்று தெரியவருகிறது.

தியானம்

ஆ, என் நேசர் பாவிகளால் இன்னும் பகைக்கப்படுகிறார்!! இதின்காரணமென்ன? பாவம்தான். பாவத்தின் முதல் பிரயத்தனம் தேவபகை: ஆ பகைவரே, உங்கள் இஷ்டம்போல என் மீட்பரைக் குற்றம் சாட்டினீர்கள்—சிலுவையை ஏற்றினீர்கள்—சிலுவையில் அறைந்தீர்கள்—அவர் மரித்தும்போனார்—அவரை அடக்கம்பண்ணியுமாச்சுதே—இவ்வளவு போதாதா? இனிப் பகையேன்? பகையை விடுங்களேன்! விடுங்களேன்!

அவர் உயிரோடெழுந்திருப்பேன் என்று சொன்னார்; அப்படி அவரை எழுந்திருக்க விடக்கூடாதாம். எழுந்திருக்கவிடமாட்டார்களாம். ஆ, இந்தப் படித்தமூடர் கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம் செய்தவருக்கு விரோதமாகவும் ஆலோசனைபண்ணுகிறது பிசகு. "நீர் என் ஆத்துமாவைப் பாதாளத்திலே விடீர்; உமது பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்" என்ற தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேற வேண்டியதிருக்கிறது.

என் மீட்பருடைய உயிர்த்தெழுதலைத் தடுக்கும்படி பகைவர் பிலாத்துவிடம் போய் உத்தரவுகேட்டு, கல்லறையை முத்திரைப்போட்டு, காவல்வைத்து, பத்திரப்

படுத்தினார்கள். ரோமை முத்திரை தேவமுத்திரையை அழிக்குமா? முன் ஒருகாலத்தில் தானியேல் என்ற பக்தனை ஒரு சிங்கக்குகையில் போட்டு பாபிலோன் முத்திரையிட்டுப் பத்திரப்படுத்தினார்களே, தானியேல் அந்த முத்திரைக்குள் முடிவடைந்துபோனாரா? இல்லையே. அந்த வரலாறு இந்த ஆசாரியருக்குத் தெரியாமல் போனதென்ன? இப்போது முத்திரையிடப்பட்ட கல்லறைக்குள் இருக்கிறவர் யார்? தேவனல்லவா. சர்வல்லமையுள்ள ஆண்டவர் பிலாத்துவின் முத்திரைக்குள் அடங்க மாட்டார். அவர் தாழ்மைப்பட்டு அடங்கி யிருக்க வேண்டிய காலம் முடிந்தது. இனி மரணக்கட்டுகளாவது, இராஜமுத்திரைகளாவது என் தேவனைக் கட்டுப்படுத்த மாட்டாது.

ஆ, பதிதரே, துரோகிகளே, நீங்கள் முத்திரையிடுங்கள்—காவல்வையுங்கள் — பத்திரப்படுத்துங்கள்— இவைகளொன்றும் என் மீட்பரின் வல்லமையைத் தடுக்காது. என் நேசரின் வல்லமை அதிகப் பிரசித்தமாக இவ்வுலகத்தில் விளங்கும்படி இந்தப் பிரயத்தனங்கள் நடக்கிறதென்று நான் அறிந்துகொள்ளுகிறேன்.

சத்துருக்கள் இயேசுவின் கல்லறையைப் பத்திரப்படுத்தும்படி பிலாத்துவினிடம் பேசினபோது என் நேசரை, ஆ என் கணவரை "எத்தன்" என்றும், "முந்தின எத்து" "பிந்தின எத்து" என்றும் சொல்லுகிறார்கள். இது என் மீட்பர் பேரில் வரும் மானநஷ்டியாயிருக்கிறது. இந்த மானநஷ்டிக்கு நான் பிதாவாகிய தேவனுடைய கச்சேரியில் பிரியாது வைக்கிறேன். இந்த மானநஷ்டித் தொகைப்பணமல்ல, ஆத்துமாக்கள்தான். இப்படி என் மீட்பரை மானபங்கமாய்ப் பேசின யூதர்களனைவரும், மனம்திரும்பி, இயேசு எத்தர் அல்ல நிஜஸ்தர் என்று அறிக்கையிட்டு, அவரை விசுவாசிக்கவேண்டும். அதுவரையும் இந்தத் தோஷம் அவர்கள் தலைமேல் நிற்க வேண்டுமென்பதே நான் வைக்கும் மானநஷ்டித் தொகை என்று அறிக்கையிடுகிறேன்.

என் மீட்பரே, நீர் "எத்தன்" என்னப்படுகிறீர். "எத்தன்" என்னப்பட்டாலும் நீர் நிஜஸ்தரல்லவோ?

உம்மை "எத்தன்" என்று சொல்லவேண்டுமானால், "தெய்வத்தில் தெய்வமும், ஜோதியில் ஜோதியும், மெய்தேவனில் மெய்தேவனுமான நீர் என்னை மீட்க மறுரூபம்பூண்டிருந்தீர்—நீர் மிகுந்த ஐசுவரிய முடையவராயிருந்தும் என் நிமித்தம் தரித்திரரானீர்—உயிர்த்தெழுதலும் ஜீவனுமான நீர் பிரேதமானீர்—காற்றின் செட்டைகளில் பறந்து திரிந்த நீர் காலால் நடந்து திரிந்தீர்—தேவனான நீர் மாமிசத்தில் வெளிப்பட்டீர்—இது என் சத்துருக்கள் சொல்லுகிற எத்தல்ல—இது பரம இரகசிய "சித்து" என்று சொல்லவேண்டியது. எப்படியும் "எத்தன்" என்ற வசைச் சொல்லையும் நீர் எனக்காகப் பெற்றுக்கொண்டீர். என்னுடைய எத்துவாளித்தனங்கள் அனைத்தும் நிவாரணமாகும்படி இந்தப் பேர் உமக்குக் கிடைத்ததேயன்றி வேறல்ல.

"முந்தின எத்து" என்கிறீர்களே, அது எது? யூதரே, மூப்பரே, ஆசாரியரே சொல்லுங்கள். அப்படி ஒரு எத்தையும் நான் அறியேன். அவர் தமது பாடுகளைப் பற்றி என்னென்ன பிரகாரம் சொன்னாரோ, அதின்படி ஒரு எழுத்தாவது, எழுத்தின் உறுப்பாவது கெடாமல் நடந்தது. அந்த நிச்சய சம்பவங்கள் உங்கள் தப்பான எதிர்பார்த்தலை எத்திப்போட்டது. நீங்கள், வேதபாரகர் தங்கள் கள்ள எழுத்தாணியால் எழுதிவைத்த எத்துகளை நம்பி எத்தப்பட்டுப்போனீர்களானால் அதற்கு என் நேசர் என்ன செய்வார்? அதற்காக அவரை "எத்தன்" என்று பழிப்பானேன்?

"பிந்தின எத்து" என்கிறீர்களே, அது அவருடைய உயிர்த்தெழுதலைப்பற்றியாக்கும். அதுவும் எத்தல்ல, நிஜம்தான் என்பதை நாலையத்தினம் அறிவீர்கள். அது எத்தல்ல, நிஜம் என்பதை நீங்களும் உலகமும் நன்றாக அறிந்துகொள்ளும்படித்தான், தேவன் உங்கள் இருதயங்களை ஏவி இப்படிப் பிலாத்துவினிடம் உத்தரவு வாங்கவும், முத்திரை வைக்கவும், காவல் செய்யவும் பிரயத்தனப்படுகிறீர்கள். அப்படியே செய்யுங்கள்; ஆனால் அவர் உள்ளபடி உயிர்த்தெழுந்தாலும் உங்கள் மனதின் மேலிருக்கும் அவிசுவாசம் என்னும் கல் எடுபடாவிட்

டால் நீங்கள் நம்பமாட்டீர்கள். ஆ, நீங்கள் என் மீட்பரின் கல்லறையை அல்ல, உங்கள் இருதயத்தை அவிசுவாசம், விரோதம் என்னும் படலை கற்களால் மூடி தேவனுடைய மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அதனுள் பிரவேசிக்க இடமிராதபடி பாதாளத்தின் முத்திரையை வைக்கிறதாக எனக்குத் தோன்றுகிறது.

என் மீட்பர் தமது இரட்சிப்பின் வேலையை முடித்து முத்திரையிடப்பட்ட கல்லறைக்குள் நித்திரை செய்வது, நான் பாவத்துக்கும் அதின் இச்சைகளுக்கும் முற்றிலும் மரித்து, பரிசுத்த இளைப்பாறுதலையும், பூரண சமாதானத்தையும் அடையவேண்டிய ஸ்திதியை எனக்கு உணர்த்துகிறது. இந்த ஸ்திதி, மோட்ச இன்பத்தின் முன் ருசியும், அச்சாரமுமாயிருக்கிறது. நான் என் பாவங்களையும் அதின் இச்சைகளையும் என் மீட்பரின் சமாதிக்குள் புதைப்பேனாக. இனி நான் பாவத்தை விரும்பாமலிருப்பேனாக. கல்லறைக்குள்ளிருக்கும் பிணம் இனி பொய்பேச, வஞ்சனைசெய்ய, அடிக்க, வேசித்தனம் செய்ய, பொறாமைகொள்ள, மற்றெந்த ஆகாமியங்களையும் நடப்பிக்க எப்படிக் கூடாத ஸ்திதியிலிருக்குமோ, அதே ஸ்திதி என் ஆவிக்கு உண்டாகும்படி என் மீட்பரின் சமாதிக்குள் நான் என்னையும், என் பாவங்களையும் புதைத்துவிடுவேனாக.

என் மீட்பர் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டும் தமது ஆவியில் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார். மரித்தோர் ஸ்தலத்திலுள்ளவர்கள் தேவனுடைய குமாரனுடைய சத்தத்தைக் கேட்டார்கள். நான் ஆவியின்படி மரித்தவனும், உருவழிந்தவனுமாயிருக்கிறேன். என்னிடத்தில் எலும்புகள் உண்டேயன்றி ஆவிக்குரிய மாம்சம், நரம்பு, தோல், இரத்தம் இவை ஒன்றுமில்லை. ஆ என் மீட்பரே, என் இருதயம் ஒரு மரித்தோர் ஸ்தலமாயிருக்கிறது. நான் இன்னும் காவலிலிருக்கும் கைதியல்லோ! என் மனதில் உமது பாடுகளின் சுவிசேஷமும் உமது மீட்பின் மகத்துவங்களும் தொனிப்பதாக; உமது சத்தத்தால் என் அடிமைத்தனம் மாறி விடுதலை கிடைப்பதாக.

என் மீட்பரின் கல்லறை முத்திரையிடப்பட்டபின்பு அது ரோமைச் சேவகனுல் காவல் காக்கப்பட்டது. நானும் அவர்களுக்குப் பின்னாலே காத்திருப்பேனாக. அவர்கள் காத்திருந்தது, ஒருவரும் அவருடைய பிணத்தைத் திருடாதபடியல்லவா? நானோ மீட்பருடைய உயிர்த்தெழுதலை நம்பிக் காத்திருக்கிறேன். ஏனெனில் அவருடைய உயிர்த்தெழுதலில் என்னுடைய சரீர உயிர்த்தெழுதலும் ஆவியின் உயிர்த்தெழுதலும் அடங்கியிருக்கிறது. நான் அவருடைய மரண தியானத்தால் என் மீட்பரின் மரணத்தின் சாயலில் இணைக்கப்பட்டு, இந்த ஜீவனில் என் ஆவிக்குரிய உயிர்த்தெழுதலையும், மறுமையில் முதலாம் உயிர்த்தெழுதலின் பலனையும் பெற்றுக்கொள்ளுவேன். இதற்கு,

தேவனே துணை செய்வாராக!
தேவ ஆவியே துணைசெய்வாராக!
என் நேசரே, துணைசெய்வாராக. ஆமென்.

ஜெபம்

இரக்கமுள்ள பிதாவே, நீர் தயவாக உமது ஆவியைத் தந்து உமது திருக்குமாரனுடைய பரிசுத்த பாடுகளைத் தியானிக்கும்படி கிருபை செய்தீரே. இந்தத் தியானங்களில் நான் தேவரீருடைய மட்டில்லாத அன்பையும், உமது குமாரன் என்மேல் வைத்த நேசத்தையும் தெளிவாகக் கண்டு களிகூர்ந்தேன். ஆ, பிதாவே இந்த அன்பில் என்னைப் பூரணப்படுத்தியருளும். இந்த நேசம் என்னை நெருக்கி ஏவுவதால் நான் என் ஜீவகால முழுவதிலும் உமக்கு ஊழியம் செய்வேனாக. ஆமென்.

எனக்காக பாடுகளையும் நிந்தைகளையும் சகித்து, மரித்த என் மீட்பரே, உமக்காக நான் எல்லாப் பாடுகளையும் நிந்தைகளையும் சகித்து உமது மடியிலே சாய்ந்து மரணமடையும்படிக் கிருபை செய்யும். ஆமென்.

குருசில் தலை சாய்ந்தே,
மாண்ட தேவ சுதனே!
சாய்ந்த தோளில் சாய்கிறேன்;
இரட்சகா தஞ்சம், தஞ்சம்!! ஆமென்.

எங்களின் அண்மைக்காலத் தியான நூல்கள்

ஏழு வார்த்தைகள்
கிறிஸ்தவ ஜீவியம்
கிறிஸ்தற்ற கிறிஸ்துமார்க்கம்
என் சுய சரிதை
நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர்
— எஸ். பரமானந்தம்

நிமிடச் செய்திகள்
— தி. தயானந்தன் பிரான்சிஸ்

கண்ணீரைப் போக்கும் காலைப்பொழுது
— ஜான் எச்.பீட், தமிழாக்கம் : தி. தயானந்தன் பிரான்சிஸ்

தூய ஆவியே வாரும் முழுப் படைப்பையும் புதிதாக்கும்
— தமிழில்: வி. தேவசகாயம்

உயர, உயர.....
— கே. ஜி. எபநேசர்

ஆண்டவரே சொல்லும் அடியேன் கேட்கிறேன்
— கே. ஜி. எபநேசர்

எல்லாம் இயேசுவே
— எபநேசர் டிக்கிகஸ்

சிறுவர்களே உங்களுக்கு
— ராஜம்மாள் டிக்கிகஸ்

யாமறிந்த நூல்களிலே
— தி. தயானந்தன் பிரான்சிஸ்

மோட்சப் பிரயாணம்
— ஜான் பனியன், தமிழாக்கம் : சாமுவேல் பவுல்

தியானச் சோலை
கர்த்தருடைய ஜெபம்
உங்களோடு ஒரு நிமிடம்
ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்
— சாமுவேல் பவுல்

CLS BOOK SHOP
CL00000026
CL0000002665
MRP : ₹ 65.00

CLS

விலை ரூ. 65.00 (இந்தியாவில் மட்டும்)